4



# கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள்



## கி.வா.ஜ.

# கந்தரலங்காரச் சொற்பொழிவுகள்

பாகம் – 4

கி.வா. ஜகந்நாதன்

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

உரிமை பதிவு
அல்லயன்ஸ்
முதற் பதிப்பு : 2003

மொத்த பக்கங்கள் (10+354) = 364

**விலை: ரூ. 115.00**

**அல்லயன்ஸ் கம்பெனி**
244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி எண்: 617,
மயிலாப்பூர், சென்னை – 600 004.
தொலைபேசி: 2494 1314

Laser Typeset by – **Print Point Graphics,** Chennai – 20.
Printed at – **Kay Em Packaging Industries,** Chennai – 14.

# பதிப்புரை

'வாகீச கலாநிதி' கி.வா. ஜகந்நாதன் அவர்கள் எங்கள் குடும்பத்துடன் நெருங்கிப் பழகிய எழுத்தாளர்களுள் ஒருவர். எங்கள் நிறுவனர் வி. குப்புஸ்வாமி ஐயருக்கு, மூத்த குமாரர் போல் பழகி வந்தவர். அவருடைய நூல்கள் நமது நிறுவனத்தின் மூலம் மூன்று தலைமுறையினரால் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. இவர் தமிழ் இலக்கியத்தில் கரை கடந்தவர்; ஆன்மிகத்தில் பரம்பொருளைக் கண்ட ஞானி. எனவே இவரை 'ஞானப் புலவர்' என்று கூறினால், அது மிகையாகாது. இப்புவியில் அவ்வப்போது இப்படிப் பல 'ஞானப்புலவர்'கள் தோன்றிக் கொண்டே இருப்பதால்தான், நமது மொழிச் செல்வமும், ஞானச் செல்வமும், இறைவனது கட்டளைப்படி காப்பாற்றப்பட்டு வருகின்றது எனலாம். இப்போதும் நம்மிடையே திரு. சுகி சிவம், திரு. பி.என். பரசுராமன் போன்ற பல 'ஞானப்புலவர்கள்' இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் எல்லாம் சாதாரண மனித சக்தியை மீறி, இறைவன் திருவருளால், ஏராளமான சொற்பொழிவுகளையும்; நூல் களையும் இயற்றிக் கொண்டிருக்கிறார்கள். பிறவிப் பெருங்கடலை நீந்த நமக்கு வழிகாட்டியாக விளங்குகிறார்கள். இவர்களுடைய பேச்சுக் களையும், எழுத்துக்களையும் நாம் பின்பற்றி வந்தாலே போதும். அதுதான் அவர்கள் எல்லாம் பாமரராகிய நமக்குக் காட்டும் வழி.

சற்றேறக்குறைய 600 ஆண்டுகளுக்கு முன்பு இப்படி ஒரு 'ஞானப் புலவர்' இருந்தார். அவர்தான் அருணகிரிநாதர். இறைவனை நேரில் தரிசித்து அருளைப் பெற்றவர். இவர் அருளிய நூல்கள் எல்லாம் நமக்கு, பரப்பிரம்மத்தை உணரவைக்கும் வழிகாட்டிகள். இப்படி இவர் அருளிய நூல்களுள் 'கந்தர் அலங்கார'த்திற்கு விரிவான, அழகான, தெளிவான – தொடர் சொற்பொழிவை, ஒரு சமயம் கி.வா.ஜ. அவர்கள் நிகழ்த்தி னார்கள். அந்தச் சொற்பொழிவின் தொகுப்புதான் இந்நூல். இதைப் பற்றி அவரே, தனது முன்னுரையில் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

1986 வாக்கில் ஒரு நாள், அடியேன், கி.வா.ஜ. அவர்களுடன் 'புரூஃப்' பார்த்துக் கொண்டிருக்கும்போது, அவர் என்னிடம், ''நீ

என்னுடைய அலங்காரப் புத்தகங்களைப் போடுகிறாயா?'' என்று கேட்டார். ஒரு தெய்வப் புலவர் எழுதியதை மற்றொரு தெய்வப் புலவர் விளக்கமாகக் கூறிய நூலை 'வெளியிடுகிறாயா?' என்று கேட்கப்பட்ட வுடன் அதிர்ச்சி அடைந்தேன்; இவ்வளவு பெரிய பாக்கியம் நமக்கு உள்ளதா? என்று எண்ணி வியந்தேன். அன்று அவர் போட்ட பிள்ளையார் சுழி இன்றும் தொடர்ந்துகொண்டே போகிறது. எல்லாம் அவன் அருள்! 2005–ம் வருடம் கி.வா.ஜ. அவர்களின் நூற்றாண்டு வருகிறது. இந்தச் சமயத்தில் அவருடைய அனைத்து நூல்களையும், ஒன்றன்பின் ஒன்றாக வெளியிட, இறைவனைப் பிரார்த்திக்கிறோம். நல்லதையே எண்ணி னால், நல்லவைகளே நடைபெறும் என்பது ஞான வாக்கு. அதேபோல, இப்படிப்பட்ட நல்ல நூல்களை வெளியிட எண்ணி, அதன்படி நாங்கள் நடந்து வருவதால், இதைப் படிக்கும் வாசகர்களுக்கும் நல்லவைகளே சித்தி பெறும்.

இந்நூல் இப்போது நமது நிறுவனத்தின் மூலம் ஒரே தொகுப்பாக (6 பாகங்களாக) முதல் பதிப்பாக வெளிவந்தாலும், 1956 வாக்கிலிருந்து சிறுசிறு நூல்களாக, அவ்வப்போது வெளியிடப்பட்டதுதான்.

வாசகர்களே! கி.வா.ஜ. அவர்களின் ஞானப் பெருக்கையும், அவர் கையாண்ட தமிழ் அழகையும் நீங்களே படித்து ரஸியுங்கள்; சுவையுங்கள்; போற்றிப் பாதுகாத்து பயன்பெறுங்கள்.

– 'அல்லயன்ஸ்' **ஸ்ரீநிவாஸன்**

## உள்ளுறை

# 1. படிக்கும் திருப்புகழ்

### படிக்கும் திருப்புகழ் (13 – 36)

நாடோடிப் பாடல்கள் (13), இன்பமும் துன்பமும் (15), மரண நினைவு (16), பாதுகாப்பு (16), அருணகிரியார் கூறும் உபாயம் (17), இறைவன் புகழ் (18), எசமானனும் கார் ஓட்டியும் (19), இறைவன் ஆணை (20), வாளா இருப்பவன் (21), கைம்மாறு ஏது? (22), புகழ்வதற்கு உரியவன் (23), புகழைப் போற்றுதல் (23), காலம் போதல் (25), தாய்மார்களின் பழக்கம் (25), பாடலால் விளையும் பயன் (26), ஆர்வமும் அநுபவமும் (27), பயன் (28), இடைவிடாத பயிற்சி (29), பாடலும் யம பயமும் (30), காளிங்க நர்த்தனன் (31), பாம்பும் படமும் (32), மயிலின் இயல்பு (33), சூரனது நடுக்கம் (33), மென்மையும் வன்மையும் (35), மனம் ஒருமுகப்படுதல் (36)

### பொதிசோறும் துணையும் (37 – 61)

அறத்தின் தலைமை (37), அறத்தின் வகை (37), ஔவையின் சுருக்கப் பேச்சு (38), 'வரப்புயர' (38), மற்றொரு பொருள் (40), அணுவும் அலையும் (40), உறுதிப் பொருள்கள் (41), உயிரோடு ஒட்டிய காதல் (41), பிறவிதோறும் வரும் காதல் (42), அறத்தின் இலக்கணம் (44), சிறந்த தானம் (44), நெடுஞ்செழியன் வரலாறு (45), பசித்துன்பம் (46), மணிமேகலை (47), அன்னதானம் (48), தவத்தினும் சிறந்தது (48), வீடும் வயலும் (49), செல்வரும் அன்னதானமும் (50), சடையப்ப வள்ளல் (51), கம்பரின் நன்றியறிவு (52), அநுபவ பூர்வமான முறை (53), மனத்தோடு செய்தல் (55), பொதுவுடைமைக் கொள்கை (56), மாதவம் (56), தொலையா வழி (57), அன்போடு அறம் செய்தல் (57), இறைவனை நினைத்துச் செய்தல். (58), கிரௌஞ்ச மலை பிளந்தது (59), வழித்துணை (60)

### பாடும் ஆர்வம் (62 – 82)

அருணகிரியாரின் சமரச இயல்பு (62), ஒரே பண்பாடு (63), வடமொழியும் தமிழும் (65), வடமொழியின் பொதுத்தன்மை (67),

வடமொழி அறிந்த தமிழர் (67), தமிழ்நாட்டில் வேதம் (69), வடசொல் (70), அருணகிரியார் ஆர்வம் (71), வேலும் சேவலும் (72), வடசொல் இணைப்பு (73), மயிலின் பெருமை (73), அரசன் (74), குமரன் (74), குகன் (75), அசுரர்க்குப் பகைவன் (75), கலக்கமில்லாத் தீரன் (76), வேல் சேவல் மயில் (77), வேலின் தத்துவம் (78), சேவலின் தத்துவம் (79), மயிலின் தத்துவம் (80), வேண்டுகோள் (81)

### ஈயாதவர் படும்பாடு (83 – 100)

சமுதாயமும் தனிமனிதனும் (83), ஈகையின் வகை (83), ஈயாமைக்குக் காரணம் (84), பற்றும் ஈகையும் (84), பற்றும் நெகிழ்ச்சியும் (85), குழந்தையின் இயல்பு (85), உள்ளக் கசிவு (86), அருணிகிரியார் கூறும் வழி (86), அருள் நினைவு (87), மாம்பழம் (87), அன்பினால் நெகிழ்ச்சி (88), பக்தியும் உயிர்க்கருணையும் (88), நெகிழ்தலும் உருகுதலும் (89), உலகியல் அநுபவம் (89), கசிவு உண்டாக வழி (90), முருகனிடம் உள்ள செல்வம் (91), ஈதலின் வகை (91), வள்ளியின் நிலை (92), அருளை வழங்கல் (93), அன்பினால் பாடுதல் (94), உள்ளபோதே (94), ஈயாதவர் அடையும் துன்பம் (96), திருட்டில் கொடுத்தல் (97), ஈயாரும் ஈக்களும் (98)

### அருளும் ஈகையும் (101 – 114)

இரண்டு எல்லைகள் (101), பொருளும் அருளும் (101), ஒற்றுமையும் வேற்றுமையும் (102), ஏறுபவனும் சுமப்பவனும் (103), ஈய வைத்தார் (104), தளர்ந்தவர்களுக்குக் கொடுத்தல் (105), ஈகையின் வகை (107), கரப்பவர் பெறும் துன்பம் (107), ராமபிரான் வரலாறு (109), ராமபிரான் சினம் (112), நமக்காக (113)

## 2. ஓங்கார ஒளி

### ஓங்கார ஒளி (121 – 143)

அநுபவ வேட்கை (121), அருணகிரியார் சொல்லும் முறை (122), தந்தையின் இயல்பு (122), மூன்று பகுதிகள் (124), தலையளவும் கடையளவும் (125), ஆங்காரம் அடங்கல் (125), அகங்கார மமகாரங்கள் (127), ஒடுக்கம் (129), பரமானந்தத்தே தேங்குதல் (131), நினைப்பும் மறப்பும் அறுதல் (133), ஓங்காரத்து ஒளி (135), தன்னை மறத்தல் (139), தூங்குதல் (140), திணைப் போதளவு (140), தொழும்பு செய்தல் (141), கால ஐயம் (141)

## இருவகைக் கவிகள் (144 – 165)

ஒலி உலகம் (144), வாயும் காதும் (144), உயர்ந்தவருக்கு உபதேசம் (146), மற்றவர்களுக்கு உபதேசம் (146), செய்யத் தக்கதும் செய்யத் தகாததும் (147), மனோலயமும் மனோநாசமும் (148), பொந்தும் பறவையும் (150), கவிகேட்டு உருகுதல் (150), கவிஞர் உள்ளம் (151), வாழ்க்கையும் கலையும் (152), சீவகன் துறவு (153), சித்தார்த்தர் துறவு (153), மாஷ வைராக்கியம் (154), பொன்னின் உருக்கம் (154), உருக்கம் உண்டாகும் வழி (155), கவிஞன் உருக்கம் (155), கலைஞன் மனோ பாவம் (156), குன்று எறிந்த குமரன் (157), கருத்து இணைதல் (158), வேலி (159), மருந்தும் பத்தியமும் (160), இழியும் கவி (161), குழியும் வழியும் (162), பகரீர் பகரீர்! (163), முரண்பாடு இல்லை (164), செவி படைத்த பயன் (165)

## இருபிடி சோறு (166 – 187)

வயிறுடையவர்களுக்கு (166), உணவின் இன்றியமையாமை (166), துறவியர் நிலை (167), உண்ணும் நேரம் (168), உயிர்போன உடம்பு (169), பிடி சாம்பலும் இல்லை (170), பட்டினத்தார் உபதேசம் (171), ஈட்டுதலும் இடுதலும் (172), இறைவன் நினைவினால் வரும் நலம் (173), தனக்கு மிஞ்சித் தான தர்மம் (175), உண்ணும்போது இறைவன் நினைவு (176), ‘பூசை பண்ணுகிறார்’ (177), கொடுக்கும்போது இறைவன் நினைவு (178), மாலையைக் கழற்றி வைத்தல் (180), புகழும் செருக்கும் (180), மூன்றும் நான்கும் (181), காட்டு நிகழ்ச்சி (182), பொருபிடியும் விளையாடும் களிறும் (182), தோற்றவர் வெல்லுதல் (184), போராட்டத்தில் இன்பம் காணுதல் (185), சண்முகன் (185), உபதேசம் (186)

## இனிய பிரான் (188 – 208)

இரண்டு நிகழ்ச்சிகள் (188), முன்னுக்குப் பின் முரணா? (189), தட்சிணாமூர்த்தி (190), சின்முத்திரை (190), தென்முகம் ஏன்? (192), தெற்கும் வடக்கும் (193), தேவர்களின் கவலை (194), காமன் செயல் (195), காம சங்காரம் (196), முருகன் அவதாரம் (197), வேளைச் செற்றார்க்கு இனியவன் (198), மலரம்புகள் (198), வள்ளி நாயகியின் நிலை (201), கவிஞரின் புதிய படைப்பு (202), வள்ளியின் பக்குவம் (203), முருகன் செய்த சோதனை (204), இணைத்துப் பார்க்க வேண்டும் (205), அமரர் தலைவன் (206)

**எங்காயினும் வரும் (209 - 232)**

நீண்ட பயன் (209), ஔவையின் பாடல் (210), அறமும் அருளும் (211 அவர் விரதம் (211), பிள்ளைகளின் இயல்பு (212), காசியில் நிகழ்ந்த (213), இட்டது வரும் (215), எங்காயினும் (216), திருவரு எங்காயினும் வரும் (216), எதிர்பாராத நிகழ்ச்சி (217), எல்லா திருவருட்செயல் (217), அருள் வரும் வழி (220), கடல் சுவற வே விட்டவன் (221), தனி வழி (223), பொன்னும் வீடும் மடந்தையரு (223), திருமூலர் சொல்வது (224), எதுவரை வரும்? (225 இருவினை (226), உயிர் போகும் வழி (227), இளையான்குடி மா நாயனார் (228), இறைவன் நினைவும் இடுதலும் (230)

# 3. தண்டைச் சிற்றடி

**தண்டைச் சிற்றடி (237 - 264)**

இருவகைத் துன்பங்கள் (237), இறைவன் திருவுருவம் (239), மனமு நாமரூபங்களும் (240), சம்பந்தம் செய்துகொள்ளுதல் (241), பெரி உறவு (242), செல்வர்களும் இறைவனும் (242), செல்வர் யார்? (243) தொடர்புள்ள செல்வன் (244), ஏழையின் கதை (246), பெரியவ உபதேசம் (246), சேவித்தல் (247), அந்தக் குழந்தை (249), வந்தித்த (250), வேகம் (251), உபதேசப் பயன் (251), வாழ்த்துதல் (253) சந்தித்தல் (254), உற்சவ மூர்த்தி (255), அநுபவ உதயம் (257) பொய்யும் மெய்யும் (258)

**வேலவன் போதித்த ஞானம் (265 - 289)**

பொய் கூறுபவர் (265), அதுவும் இதுவும் (266), வேற்றுமை (266) முரணா? (267), அருணகிரியார் கருணை (268), குருவின் பெருமை (269), முருகனே குரு (270), வியப்பு (271), அற்றது லாபமா? (272) உலகியலும் அருளியலும் (274), பைத்தியத்தின் இயல்பு (276) உலகமும் உடம்பும் (277), பூதங்கள் அற்றன (278), உரை அறுதல் (278), உணர்வு அறுதல் (280), உடலும் உயிரும் அறுதல் (281) உபாயம் அறுதல் (282), சாதனமும் சாத்தியமும் (283), கரையற்ற அநுபவம் (284), இருள் அறுதல் (285), எனது அறுதல் (286) புரையற்ற வேலவன் (287)

## அணிகலங்கள் (290 - 305)

சிவபிரானுக்கு அணிகலம் (290), ஆலடிக் கடவுள் (291), அவர் தியானிப்பது யாரை? (291), பெரியவர் இயல்பு (292), உலகம் வாழ (293), வெண்டலை மாலை அணிகலமா? (294), அக அழகு (294), நித்தியப் பொருள் (295), மண்டை யோட்டின் குறிப்பு (296), அது அவனுக்கு அழகு (297), அகிலம் உண்ட மால் (298), துழாயின் பெருமை (300), முருகன் காலுக்கு அணிகலம் (300), வேலுக்கு அணிகலம் (302), சூரன்முதலியோர் அழிவு (304)

## சோதனையும் சாதனையும் (306 - 324)

செருக்கும் அதிசயப் பெருக்கும் (306), மெய்யும் போலியும் (307), மூன்று வகை அன்பு (308), சோதனை செய்தல் (309), அடிக்கச் சொன்ன பெரியவர் (310), பஜனையும் பாம்பும் (311), கூண்டோடு கைலாசம் (311), சுந்தரர் இயல்பு (313), சோதித்த மெய்யன்பு (315), முருகன் போதனை (316), உபதேசம் செய்த வரலாறு (318), அடையாளம் (320), அழுது தொழுது உருகுதல் (321), சாதித்த புத்தி (322)

## காலனை வெல்லுதல் (325 - 340)

காமனும் காலனும் (325), காலனை அறைகூவுதல் (327), மரணம் இல்லா வாழ்வு (328), ஆஞ்சநேயர் (328), சிரஞ்சீவித் தத்துவம் (328), வேடன் கதை (329), உடம்பும் உயிரும் (333), சொந்த அநுபவம் (333), பயத்தை மாற்ற வழி (335), அந்தகன் (336), எருமைக்கடா (336), சூரசங்காரன் (337), முருகன் திருமுன்பு (338), சத்தி வாள் (338), பயம் போக்கும் மந்திரம் (339)

## வேண்டுகோள் (341 - 352)

வீரர் செயல் (341), உறுதி (341), பொறுப்பு (342), வேண்டியது வழங்குதல் (343), நரசிங்க மூர்த்தி (343), இறைவன் மேற்கொள்ளும் பொறுப்பு (345), யமனென்னும் உருவகம் (346), கடாவும் மயிலும் (346), மயிலின் இயல்பு (348), சூரபன்மனாகிய மயில் (348), மயிலின் ஆற்றல் (349), மயிலின் தத்துவம் (350), அலங்கரச் சொல் (351)

## சொல்லின் செல்வன் பி.என். பரசுராமன் எழுதிய நூல்கள்

1. வாரியார் சொற்பொழிவில் கேட்டவை I
2. வாரியர் சொற்பொழிவில் கேட்டவை II
3. அஷ்டாவக்ரர் உபதேசங்கள்
4. விதுர நீதி
5. பர்த்ருஹரியின் நீதி சதகம்
6. சனத்குமாரரின் உபதேசங்கள்
7. பீஷ்மர் சொன்ன தத்துவக் கதைகள்
8. விபூதி, ருத்ராட்சம் மகிமை
9. மன உறுதியுடன் வாழ வைராக்கிய சதகம்
10. சித்தர்கள் சரித்திரம்
11. யட்சப் பிரச்னம் & பிரச்னோத்ர ரத்னமாலிகா
12. துணுக் துணுக்குகள்
13. சித்ரகுப்தன் கதைகள்
14. அருணகிரிநாதரின் ராமாயணம்
15. ஊருக்கு நல்லது சொல்வேன்
16. மஹா ஸ்வாமிகள் அருளிய ஆதிசங்கரர் வரலாறு
17. மனோபோதை
18. அர்த்தமுள்ள கண்ணதாசன் பாடல்கள் I
19. ஸ்ருங்கார சதகம்
20. நீதிக் கதைகள் பாகம் 1
21. நீதிக் கதைகள் பாகம் 2
22. அம்மன் சந்நதி அற்புதங்கள்

(மேலும் ஆசிகள் நம்மைத் தேடி வரும்)

# முகவுரை

இறைவன்பால் அன்புடையவர்கள், உலக வாழ்வை வெறுத்து மனைவி மக்களைப் புறக்கணித்துவிட்டு, தமக்கு என்று எந்த வகையான வரையறையும் இல்லாமல் இருப்பவர்கள் என்ற தவறான எண்ணம் பலருடைய உள்ளத்தில் முளைத்திருக்கிறது. பைத்தியம் பிடித்தவர்கள் எப்படிப் பிறருடைய நலந்தீங்குகளை நினையாமல் தாம் போன போக்கிலே போவார்களோ அப்படித்தான் இருப்பார்கள் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

உலகம் முழுவதும் உள்ள மக்கள் யாவரும் இறைவனுக்கு அன்பர்கள் ஆகிவிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் எண்ணத்தின்படி, அப்போது உலகம் முழுவதும் பைத்தியக்காரர்கள் நிறைந்த உலகமாகிவிடும். வாழும் வகை தெரியாமல், ஒருவரோடு ஒருவர் இயல்பாகப் பழகாமல் யாவரும் கடவுள் வெறி பிடித்துப் போய், உண்ணாமல் உறங்காமல் இருப்பார்கள். அப்படி இருந்தால் மிகவும் குறுகிய காலத்துக்குள் யாவருமே இறந்துபோகும்படி நேரும். பிறகு உலகம் உலகமாக இராது. வெறும் சுடுகாடாகி விடும். ஆகையால் இறைவனிடம் பக்தி பண்ணுகிறவர்கள் ஒரு பகுதியினரே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் உலகத்துக்கு ஆபத்து.

இதுதான் உண்மையா? இல்லை, இல்லை. அன்பர்களும் உலகில் வாழ்கிறவர்களே, மனைவி மக்களோடு வாழ்கிறவர்களே. இறைவனுடைய தலம் உலகம் என்றும், அதில் உலவும் ஒவ்வொருவரும் அவனுடைய திருக்கோயிலென்றும் எண்ணி அன்பு செய்கிறவர்கள். பக்தன் தன்னை உயர்த்திக் கொள்வதோடு தன்னுடைய இயல்பினாலும் செயல்களாலும் பிறரையும் உயரச் செய்கிறான். அவன் நல்ல குணங்களுக்கு உறைவிடமாக இருக்கிறான். அறிவாளியாகவும் ஆற்றல் உள்ளவனாகவும் இருக்கிறான். தன் நலத்தைவிடப் பிறர் நலத்தையே கருதி வாழ்கிறான். அறம் செய்கிறான்; பொருள் ஈட்டுகிறான்; இன்பம் நுகர்கிறான். மற்றவர்

களுக்கும் அவனுக்கும் இடையே உள்ள வேறுபாடு: அவன் எதைச் செய்தாலும் எதை நுகர்ந்தாலும் இறைவனுடைய நினைவை மறவாமல் இருக்கிறான். ஏதேனும் ஒன்று செய்தால், தான் இறைவனுடைய கருவியாக நின்று, அவன் அருளாணையின் வழியே அதைச் செய்கிறதாக உணர்கிறான். எதை அநுபவித்தாலும் இறைவன் திருவருளால் வந்த அநுபவம் என்று அதை நுகர்கிறான். இன்பம் துன்பம் என்ற இரண்டையுமே அவன் இறைவன் அருளால் விளைந்தவை என்று உவப்புடன் ஏற்கிறான். அறுசுவை உண்டியில் கைப்பும் ஒரு சுவைதான். இனிப்புப் பண்டத்தையும் நுகர்ந்து கைப்புள்ள உணவையும் உண்டு மகிழும் இயல்புள்ளவர்களைப் போல, அவன் இன்பத்தையும் துன்பத்தையும் நுகர்கிறான். கைப்பும் ஒரு சுவை; அது ஏற்கத் தகாதது அன்று. அப்படியே துன்பமும் ஏற்பதற்குரிய அநுபவமே. இன்பம் துன்பம் என்பவை அநுபவத்திற்குரிய வகைகள். ஒன்று கொள்ளுவதற்குரியது, மற்றொன்று தள்ளுவதற்குரியது என்று அன்பன் எண்ணுவதில்லை.

மற்றவர்களுக்கு இன்பம் என்பது வேண்டும் நுகர்ச்சி; துன்பமோ வேண்டா நுகர்ச்சி. சோற்றில் கல் இருக்கிறது; சோறு உண்ணத் தகுந்தது; கல் ஒதுக்கத் தகுந்தது. இன்ப துன்பங்களும் இத்தகையன என்று அவர்கள் எண்ணுகிறார்கள். இன்பம் நுகரத் தக்கது, துன்பம் வெறுக்கத் தக்கது என்கிறார்கள். பக்தர்களோ இன்பமும் துன்பமும் கலந்ததே வாழ்வு என்ற உண்மையை அறிந்து கொள்கிறார்கள். துன்பத்தைச் சோற்றினிடையே கல்லாக அவர்கள் எண்ணுவதில்லை; சோற்றோடு கலந்த குழம்பாகவே எண்ணுகிறார்கள். சமையற்காரன் சோற்றைச் சமைப்பானேயன்றிக் கல்லைச் சமைப்பதில்லை. இறைவன் நம்முடைய முன்னை வினைகளுக்கு ஏற்ப இன்ப துன்பங்களை நமக்கு அருளுகிறான். அவை இரண்டும் நுகர்வதற்குரியன. அவற்றை நமக்கு அளிப்பவன் இறைவன் என்ற உணர்வு வரும்போது துன்பமும் இன்பமும் ஒரே நிலையை உடையனவாகத் தெரியும். குழந்தை ஓங்கி அடித்தாலும் இன்பமாகக் கொள்கிறாள் தாய். காதலன் மூச்சுத் திணற அணைத்தாலும் இன்பமாக உணர்கிறாள் காதலி. விளையாட்டிலே கைகால்களில் வலியும் வேர்வையும் உண்டானா

லும் சிரமமாகக் கொள்ளாமல் இன்பமாகக் கொள்ளுகிறார்கள் மக்கள். இறைவன் திருவருளால் யாவும் நிகழ்கின்றன என்ற உணர்வு வந்த பக்தர்களுக்கு இன்பம் துன்பம் என்ற இரண்டும் வெவ்வேறு வகை நுகர்ச்சிகளாக இருக்குமேயன்றி, விரும்புவன, வெறுப்பன என்ற மாறுபட்டுணர்ச்சியைக் கொடுப்பதில்லை. அதனால்தான் திருநாவுக்கரசர்,

**"இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை"**

என்று பாடினார்.

இறைவன் எப்போதும் தன்னுடைய அருள் விளையாடலை நிகழ்த்தும் இடம் உலகம் என்று கொண்ட பக்தர்களுக்கு வாழ்க்கை யும் அவன் விளையாட்டில் ஒரு பகுதியாகத் தோன்றும். எல்லாரோடும் இணைந்து அன்பு வைத்துப் பழகுவார்கள். எல்லாரையுமே பக்தர் கூட்டமாகச் செய்துவிட வேண்டும் என்ற ஆசை உண்டாகும். நன்றாக வாழவேண்டும் என்ற விருப்பம் இருக்கும். தாமும் வாழவேண்டும், பிறரையும் வாழ வைக்க வேண்டும் என்ற உயர்வான எண்ணம் அவர்கள்பால் சிறந்து நிற்கும்.

ஆதலின் அன்பர்கள் பொருள் ஈட்டுவார்கள்; அதனைப் பிறருக்கு அளிப்பார்கள். அவர்கள் தாம் ஈட்டும் பொருளில் இறைவன் திருவருளைக் காண்பார்கள். அவர்கள் செய்யும் அறம் இறைவனுடைய அன்பிலே கசிந்து செய்வதாக அமையும். இதனால் அவர்களிடம் பொருள் பெறுகிறவர்களும் இறைவன் திருவருளுக்கு இலக்காகிறார்கள்.

ஏழைகளும் இறைவன் பெயரைச் சொன்னால் பிச்சை கிடைக்கும் என்ற உண்மையை இன்றும் மறப்பதில்லை. பிச்சைக்காரர்கள் இறைவன் பெயரைச் கூறி யாசிக்கிறார்கள். இந்த வழக்கத்தை இந்த நாட்டிலேதான் பார்க்கலாம். பழங்காலத்தில் அறம் செய்தவர்கள் இறைவன் நினைவோடு செய்தார்கள். இரவலர்களும் இறைவன் திருவருளை நினைப்பூட்டினார்கள். அந்த வழக்கம் இன்றளவும் இருந்து வருகிறது.

தாம் பெற்றதைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுப்பதனால் மக்கள் இருவகை நலங்களைப் பெறுகிறார்கள். ஒன்று பொருளின்

மேல் அவர்களுக்குள்ள பற்று நீங்குதல். மற்றொன்று ஏழைகள் அவர்களால் பயன் அடைதல். சமுதாயத்தில் பொருள் ஓரிடத்தில் குவிவதும் மற்றோரிடத்தில் வறுமைப் பள்ளம் இருப்பதும் இயற்கை. இதை மாற்றத் தம் பொருளைப் பகுத்து உண்டு வாழ்வதைச் செல்வர்கள் மேற்கொள்ள வேண்டும். செல்வத்தைப் பகிர்ந்தளிக்கும் (Distribution of Wealth) செயலையே தர்மம், தானம் என்று சொன்னார்கள் நம் பெரியோர்கள். அறம் செய்யவேண்டும் என்பதை வற்புறுத்தினார்கள்.

வேறு நியாயங்களைச் சொல்லி அறம் செய்யச் சொன்னால் மக்களுக்கு எளிதில் உள்ளம் இரங்காது. இறைவன்பால் அன்பு ஏறச் செய்தால் எளிதில் ஈயும் பண்பு உண்டாகும். ஈயும் தகைமை உடையவர்களுக்கும் இறைவன்பால் அன்பு இல்லையானால் செருக்கு உண்டாகும். ஆதலின் ஈவதற்கு முன்பும் அன்பு வேண்டும்; ஈயும்பொழுதும் இறைவன்பால் அன்போடு இருக்க வேண்டும்.

★

அருணகிரிநாதர் இறைவன்பால் அன்புடையவர்கள் உலகத்தில் நன்றாக வாழவேண்டும் என்று விரும்புகிறவர். அன்பர்கள் நல்லபடி வாழ்ந்தால் உலகம் முழுவதும் அவர்களால் இன்பத்தை அடையும் என்ற உண்மையை உணர்ந்தவர். ஆதலின் அறம், பொருள், இன்பம் என்ற துறைகளிலும் அறிவுரை கூறுகிறார். இந்த மூன்று திறத்திலும் இன்னது செய்யவேண்டும், இன்னது செய்யக் கூடாது என்று நல்லுபதேசம் செய்கிறார்.

கந்தர் அலங்காரத்தில் அறம் செய்யவேண்டும் என்பதை வற்புறுத்தும் பாடல்கள் பல; பொருளை நல்ல முறையில் சேமித்து வாழ வேண்டும் என்பதைச் சொல்வன சில; நன்முறையில் இன்பம் துய்க்கும் முறையைக் குறிப்பாகப் பெற வைக்கும் இடங்கள் சில. எல்லாவிடத்திலும் இறைவனுடைய திருவருளை எண்ணும் பேரன்பு சுருதி போட வேண்டும் என்று சொல்கிறார்.

இந்தப் புத்தகத்தில் கந்தர் அலங்காரத்திலுள்ள ஐந்து பாடல்களுக்குரிய (50–54) விளக்கங்கள் இருக்கின்றன. இவற்றில் மூன்று பாடல்கள் ஈகையை உடம்பாட்டுமுகத்தாலும் எதிர்மறை

முகத்தாலும் வற்புறுத்துகின்றன. "ஏற்றவர்க்கு இலையாயினும் வெந்தது ஏதாயினும் பகிர்ந்து அளித்து மாதவம் செய்குமினோ" என்று அறிவுரை கூறுகிறார். இது விதிமுகத்தால் அறத்தை வற்புறுத்தியது. அவ்வாறு பகிர்ந்து அளிப்பது மட்டும் போதாது; அதனை இறைவனுடைய நினைவோடு செய்யவேண்டும் என்று கூறுகிறார். அற நூலாசிரியர்களிடம் காணாத இயல்பு இது. அருணகிரிநாதர் இறைவனிடம் அன்பு பூண்டவர். அந்த அன்பினால் அறம் பன்மடங்கு பலிப்பதை அவர் கண்டார். அறநூலார் ஏற்றவர்க்கு ஈயுங்கள் என்றனர். அருணகிரிநாதர்,

**மலைஆறு கூறெழ வேல்வாங்கி னானை**
**வணங்கி அன்பின்**
**நிலையான மாதவம் செய்குமினோ.....**
**இலைஆயினும் வெந்தது ஏதா யினும்பகிர்ந்து**
**ஏற்றவர்க்கே**

என்கிறார். அவர்கள் பால் கொடுக்கிறார்கள். இவர் அதில் கொஞ்சம் சர்க்கரையும் சேர்த்திருக்கிறார். வெறும் பாலைக் குடிக்கத் தயங்கும் குழந்தைக்குச் சர்க்கரை போட்ட பால் அந்தத் தயக்கத்தைத் தீர்க்கும் அல்லவா?

வேறு இரண்டு பாடல்களில் ஈகையை எதிர்மறைமுகத்தால் குறிப்பிக்கிறார்; அதாவது ஈயாமையால் வரும் தீங்குகளைச் சொல்கிறார்.

'தம்மிடம் பொருள் உள்ள போதே அதனை வறியவர் களுக்குக் கொடுக்காதவர்கள் தாம் தேடிய பொருளை இழந்து வாடுவார்கள்' என்று ஒரு பாட்டில் பாடுகிறார்.

**உள்ள போதே கொடாதவர் பாதகத்தால்**
**தேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத்**
**திகைத்திளைத்து**
**வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு**
**மாய்ப்பவரே.**

இந்தப் பாட்டில் ஈயாமையின் தீய விளைவைச் சொன்னாலும் இதனூடே எப்படி ஈயவேண்டும் என்பதும் மறைந்து நிற்கிறது. தேடிப் புதைக்காமல் உள்ள போதே கொடுக்க வேண்டும் என்ற

நீதி இதில் புலனாகிறது. அப்படிக் கொடுக்கும்போது எவ்வாறு கொடுக்க வேண்டும் என்பதைச் சொல்கிறார். அருள்நூற் பாவலர் அறத்தைக் கூறும் முறை அது.

**வேடிச்சி கொங்கை விரும்பும் குமரனை**
**மெய்யன்பினால்**
**பாடிக் கசிந்து உள்ளபோதே கொடாதவர்**

என்பதில், 'இறைவனைப் பாடி மெய்யன்பினால் கசிந்து கொடுக்க வேண்டும்' என்ற சர்க்கரைப் பகுதி இருக்கிறது.

தளர்ந்தவர்களுக்கு ஈவதுதான் ஈகை என்பதும், அப்படி ஈவதற்கு இறைவன் திருவருள் தூண்டுதல் வேண்டும் என்றும் மற்றொரு பாட்டில் சொல்கிறார்.

**தளர்ந்தவர்க்கு ஒன்று**
**ஈகைக்கு எனைவிதித் தாய்இலையே!**

★

"நான் உன்னுடைய புகழை உள்ளத்தில் நினைந்து போற்று வேன். யமன் வரும்போது என்னை நீ அஞ்சல் என்று வந்து காப்பாற்ற வேண்டும்" என்று ஒரு பாட்டில் முருகனிடம் விண்ணப்பித்துக் கொள்கிறார். இதுவே இந்தப் புத்தகத்தில் முதல் பாட்டாக இருக்கிறது. இறைவன் புகழைப் படித்து உள்ளத்தே வைத்துப் போற்றுவதனால் உள்ளம் இறைவனுடைய நினைவிலே மிதக்கும்; அதனால் கோழைத்தன்மை நீங்கி இறைவன் திருவருள் துணை செய்யும் என்ற உறுதி உண்டாகும். அந்த நெஞ்சத் திண்மையினால் கூற்று வெகுண்டு வரினும் மாற்றும் ஆற்றல் உண்டாகிவிடும்.

வேறு ஒரு பாட்டில் வேல், சேவல் என்பவற்றைச் செந் தமிழால் பாடும் ஆர்வத்தை அருளவேண்டும் என்று வேண்டு கோள் விடுக்கிறார். அப்படிச் சொன்ன பாட்டில் மிகுதியாக வட சொற்களை அடுக்கி வைத்திருக்கிறார். தமிழ், வடமொழி இரண்டினிடமும் அவருக்குள்ள ஆற்றலையும் அன்பையும் இப்பாடல் வெளியாக்குகிறது. திருப்புகழில் பல பாடல்களில் வடமொழிச் சொற்களும் தொடர்களும் விரவி வருகின்றன.

**பத்த கணப்ரிய ந்ருத்த நடித்திடு**
**பக்ஷி நடத்திடு குகபூர்வ**
**பச்சிம தக்ஷிண உத்தர திக்குள**
**பக்தர்கள் அற்புதம் எனஓத**
**சித்ர கவித்துவ சத்தமி குத்ததி**
**ருப்புகழை**

என்பதில் எத்தனை வட சொற்கள் உருக்குலையாமல் அப்படியே வந்திருக்கின்றன!

சில ஆராய்ச்சிக்காரர்கள் அருணகிரிநாதர் வடமொழிக் கவிஞர்களின் வழியில் வந்தவரென்றும், தாமே சில நூல்களை வடமொழியில் இயற்றியிருக்கிறார் என்றும் எழுதியிருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சியின் முடிவைப் பற்றி நமக்குக் கவலையில்லை, திருப்புகழிலும் பிறவற்றிலும் உள்ள பாடல்களைப் பார்க்கும் பொழுது அவர் வடமொழியில் நிரம்பிய அறிவுடையவர் என்றே எண்ணத் தோன்றுகிறது.

★

முருகனைப் பற்றிய வீரப் புகழையும் பிற சிறப்புகளையும் ஒவ்வொரு பாடலிலும் விரிக்கிறார். கொடிய சூரன் நடுங்கும்படி வெற்பை இடிக்கும் மயில் மீது ஏறி நடாத்தும் இராவுத்தன் என்கிறார். பாம்புகளோடு சண்டையிட்டு அடக்குவது என்று மயிலைப் பின்னும் சிறப்பிக்கிறார். கிரௌஞ்சமலை ஆறு துண்டுகளாக விழ வேலைவிட்டவனென்று ஓரிடத்திலும், கொடுமுடிகளையுடைய மலையைக் கூறிட்ட வேலை உடையவனென்று வேறோரிடத்திலும் பாடுகிறார். முருகன் செஞ்சேவற் கொடியை உடையவன்; அரசன்; குமரன்; குகன்; அசுரர்களுக்குப் பகைஞன்; கலக்கமற்றவன்; தீரன்; குணங்களால் உயர்ந்தவன்; வள்ளிநாயகியை விரும்பியவன்; மயில்வாகனன்; திருமால் மருகன் என்று துதிக்கிறார்.

திருமாலின் பெருமையை இரண்டிடங்களில் சொல்லுகிறார். கிருஷ்ணாவதார வரலாறுகளில் காளிங்க நர்த்தனத்தையும், இராமாவதாரக் கதையில் அப்பெருமான் வருணன்மேல் அம்பு எய்ததையும் நினைப்பூட்டுகிறார். பெரும் பாம்பில் நின்று

நடிக்கும் பிரான் என்று கண்ணனையும், இலங்காபுரிக்குப் போகைக்கு நீ வழி காட்டென்று போய்க் கடல் தீக்கொளுந்த வாகைச் சிலை வளைத்தோன் என்று இராமனையும சொல்வது காண்க.

★

கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகளைப் புத்தக உருவாக்கு வதனால் என்ன பயன் என்று தொடக்கத்தில் நான் நினைத்த துண்டு. ஆனால் இவற்றைப் படித்த பல அன்பர்கள் தாம் பல கருத்துக்களைத் தெளிவு பெற அறிந்து கொண்டதாக எழுதினார்கள்; நேரிலும் சொன்னார்கள். இலக்கியத் துறையில் இப்பாடல்களின் நயங்களை அன்பர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது என் தலைமையான நோக்கம் அன்று. பெருங்கருணையாளராகிய அருணகிரிப் பெருமான் வாக்கினால் வாழ்க்கைக்குப் பயன் உண்டாக வேண்டும்; அநுபவத்தில் ஏதாவது வளர்ச்சி அமைய வேண்டும்; அவன் அருளைப் பெறு வதற்கு இப்போதே ஏதேனும் முயற்சி செய்யத் தொடங்குவோம் என்ற ஆசை எழ வேண்டும்; 'முருகன் திருவருள் என்பது வெறும் கற்பனையன்று; உண்மையில் ஆன்ம லாபம் அடைவிக்க செய்யும் செல்வம் அது' என்ற நம்பிக்கை நெஞ்சறிய ஏற்பட வேண்டும். இந்த நோக்கத்தோடுதான் இந்தச் சொற்பொழிவுகளை ஆற்றுகிறேன்; இவற்றைப் புத்தக உருவில் வெளியிடுகிறேன்.

என்னைக் காட்டிலும் பேரறிவும் இறைவன் திருவருள் நலமும் பெற்றவர்கள் இதைச் செய்தால் இன்னும் எத்தனையோ மடங்கு சிறப்புடையதாகவும் பயனுடையதாகவும் இத்தொண்டு இருக்கும் என்பதில் ஐயமே இல்லை. ஆயினும் அருணகிரி நாதருடைய அருள்வாக்கின் எல்லையற்ற சிறப்பினால் இந்த எளியேனுடைய முயற்சிக்கும் ஒரு சிறிய மதிப்பு, ஒளி கிடைக் கிறது போலத் தோன்றுகிறது. அலங்காரப் பாடல்களைப் படிக்கும் போதும், அவற்றைப் பற்றிச் சிந்திக்கும்போதும், சொற்பொழிவு ஆற்றும்போதும், புத்தக வடிவில் அமைக்கும் போதும் எனக் குள்ளே ஒரு தனி இன்பத்தைக் காண்கிறேன். 'இவற்றோடு பழகு வதனாலேயே இந்தச் சிறிதளவு இன்பம் உண்டாகிறதே. இவர் கூறும் வழியே சென்றால் எத்தனை இன்பம் உண்டாகும்!


இவற்றை அருளிய இவருக்கு எத்தகைய இன்பம் கிடைத்திருக்கும்!' என்ற எண்ணம் உண்டாகிறது. அப்போது விளையும் உணர்ச்சியை எந்தச் சொல்லால் சுட்டுவது? பொறாமை என்று சொல்லலாமா? நம்பிக்கை என்னலாமா? ஆர்வம், ஆசை, காதல், பசி, ஏக்கம் – இவற்றில் ஏதாவது ஒன்றைச் சொல்லலாமா? ஏக்கம் என்று ஒருவாறு சொல்லலாம்; ஆனால் அந்த ஏக்கத்திலே ஓர் ஆறுதலும் இருக்கிறது. பசி என்று சொல்லலாம்; ஆனால் அந்தப் பசியிலே ஒரு சிறு நிறைவும் இருக்கிறது. அருணகிரியார் கூறும் அநுபவம் சத்தியமாகத்தான் இருக்க வேண்டுமென்று உள்ளத்தே ஓர் ஒளிக் கீறல் தோன்றுகிறது.

இந்தச் சொற்பொழிவுகள் கந்தர் அலங்காரப் பாடல்களைப் பூதக் கண்ணாடியில் வைத்துப் பெரியவையாகக் காட்டுகின்ற முயற்சி. அப்பாடல்களில் உள்ள அழகுகள், அநுபவ உண்மைகள் பின்னும் நன்றாகப் புலனாக வேண்டும் என்பது என் ஆசை. இவற்றைப் படித்தவர்கள் கூறுபவற்றிலிருந்து இந்த ஆசை வீணாசையன்று என்று எண்ணத் தோன்றுகிறது. எல்லாம் முருகன் திருவருள்.

அன்பர் திரு. அனந்தன் கருத்தாலும் கரத்தாலும் அலங்காரத்தில் ஒன்றிப்போய் எனக்கு உதவி செய்கிறார். முருகன் திருவருளால் அவருக்கு எல்லா நன்மைகளும் உண்டாக வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

**கி.வா. ஜகந்நாதன்**

14.08.1958



'தமிழ்க்கவி பூஷணம்'
'திருமுருகாற்றுப்படை அரசு'
'வாகீச கலாநிதி'

# கி.வா. ஜகந்நாதன்

எழுதிய

அனைத்து நூல்களும் -

அவரது பேச்சுக்களின்

ஒலி நாடா

மற்றும்

குருந்தகடுகள் (பல)

வெளிவர

உள்ளது

என்பதை

மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக்

கொள்கிறோம்

- பதிப்பகத்தார்



# படிக்கும் திருப்புகழ்

## 1

மனிதன் தன் வாழ்நாளில் பல விதமான ஆசை கொள்கிறான். வறுமையினாலும் நோயினாலும் அவனுக்குத் துன்பம் வருகிறது. அவனுக்கு அச்சத்தைத் தரும் எல்லாவற்றையும்விட மிகப் பெரியது மரணம். மரணத்தை வெல்லும் வன்மை யாருக்கு உண்டாகிறதோ அவர்கள் வேறு எதற்கும் அஞ்சுவது இல்லை. நோய்க்கு மருந்தும், வறுமைக்குச் செல்வமும், பசிக்கு உணவும் பரிகாரமாக இருப்பது போல, மரணத்திற்கு இறைவன் திருவருள் ஒன்றுதான் பாதுகாப்பு. அவன் திருவருள் இன்பத்தில் ஊறி நின்ற அருணகிரிநாதப் பெருமான் உலகிலுள்ள ஆருயிர்கள் மரணத்தினின்றும் நீங்கி உய்யும் பொருட்டுப் பலவகையில் உபதேசம் செய்துவருகிறார். காலனால் உண்டாகும் பயத்தைப் போக்கிக் கொள்ள அவர் காட்டுகிற உபாயங்கள் பலவற்றை அவ்வப்போது பார்த்து வருகிறோம். இப்போது ஒரு வகையான பரிகாரத்தை நமக்குச் சொல்கிறார். அதை இனிக் கவனிப்போம்.

### *நாடோடிப் பாடல்கள்*

நம் நாட்டிலுள்ள மக்கள் யாவரும் உழைத்து வேலை செய்கிறார்கள். ஒரு சாரார் மூளையினால் உழைக்கிறார்கள். பெரும்பாலோர் உடம்பினால் உழைக்கிறார்கள். மூளையினால் வேலை செய்பவர்கள் ஐந்து மணி வேலை செய்தால் உடம்பினால் வேலை செய்கிற தொழிலாளர்கள் எட்டு மணி வேலை செய்கிறார்கள். கிராமங்களில் சொந்த நிலங்கள் வைத்துக் கொண்டோ, பிறர் நிலங்களிலோ பாடுபடுகின்ற பாட்டாளி மக்கள் காலை முதல் மாலை வரையில் நிலத்தில் பாடுபடுகிறார்கள். உடம்பை வளைத்து நிமிர்த்திக் கடுமையான தொழில்களைச் செய்கிற தொழிலாளர்களுக்கு வேலையில் அலுப்புத் தட்டுவது இல்லையா? உடம்பு

நோவு எடுப்பது இல்லையா? அவர்களும் மனிதர்களாகையால் இளைப்பு உண்டாவது இயற்கை. ஆனால் அந்த இளைப்பை மாற்றிக் கொள்வதற்கு அவர்களுக்குச் சில உபாயங்கள் தெரியும்.

ஏற்றம் இறைப்பவர்களும், நாற்று நடுபவர்களும், அரிசி குத்துபவர்களும், சுண்ணம் இடிப்பவர்களும் வேலை செய்யும் போது நேரம் போவது தெரியாமல் இருக்க ஒரு காரியம் செய்கிறார்கள். அவர்களுக்குத் தாங்கள் செய்கிற வேலையினால் தமக்குப் பயன் உண்டென்று நன்றாகத் தெரியும். ஆனால் அந்த வேலையினால் உடம்பு களைத்துப் போகாமல் இருக்க வேண்டுமே; அதற்காகப் பாட்டும் பாடுகிறார்கள். உள்ளம் களைத்து உடல் களைத்துப் போகாமல் இருக்க அந்தப் பாடல்களை மகிழ்ச்சி யுடன் பாடிக் கொண்டே வேலை செய்கிறார்கள். பாட்டிலே மனம் சென்றதானால் வேலையினால் உண்டாகின்ற இளைப்புக் குறைந்து விடுகிறது. காலம் போவது தெரியாமல் வேலையில் ஈடுபடுகிறார்கள்.

கிராமங்களில் இத்தகைய காட்சிகளைக் காணலாம். இரண்டு பேர் ஏற்றம் இறைப்பார்கள். ஒருவன் ஏற்றத்தின் மேல் இருந்து அதை மிதிப்பான். மற்றவன் கிணற்றில் இருந்து தண்ணீர் வாங்கிவிடுவான். கீழே இருப்பவன் பாட மேலே இருப்பவன் அதை வாங்கிப் பாடுவான். பாட்டுத் தடைபடாமல் எத்தனை நேரம் போய்க் கொண்டே இருக்கிறதோ அத்தனை நேரம் ஏற்றம் ஓடும். பாட்டுப் பாடியே அவர்கள் உடம்புக்கு வருகிற அலுப்பைப் போக்கிக் கொள்கிறார்கள். அவர்கள் பாட்டில் இனிமை இருக் கிறது; பொருளும் உண்டு. ஆனால் இந்த இரண்டுக்கும் மேலே அவர்களைக் களைப்புறாமல் இருக்கச் செய்கிறது அந்தப் பாட்டின் இசை. "ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை" என்று ஒரு பழமொழி உண்டு.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் தொழிலாளர் பாடு வதாகப் பல பாடல்களைப் பாடி இருக்கிறார். அந்தப் பாடல் களை, 'வரிப்பாட்டு' என்று சொல்வார்கள். இளங்கோவடிகள் பழைய பாடல்களைக் கண்டு அந்த மெட்டில் தாமே பாடி அமைந்த பாடல்கள் அவை. இந்த நாட்டில் அங்கங்கே பல வகைத் தொழிலாளர்கள் பாடுகின்ற பாட்டுக்கள் வேறு வேறாக உள்ளன. அந்தப் பாடல்களை **நாடோடிப் பாடல்கள்** என்று சொல்

வார்கள். அந்த அந்தத் தொழிலில் ஈடுபடுபவர்கள் தங்களுக்கு ஏற்ற பாடல்களைப் பாடிக் கொண்டு வருகிறார்கள். அவற்றை யார் முதலில் பாடினார்கள் என்று சொல்ல முடியாது. காலம் கடந்து, இடம் கடந்து அவை பிரயாணம் செய்து கொண்டே இருக்கும். அந்தப் பயணத்தில் புதிய புதிய அடிகள் வரும்; பழைய அடிகள் மறைந்து போகும். வீடுகளிலும் முதிர்ந்த பெண் மணிகள் இத்தகைய பாடல்களைப் பாடுவது உண்டு. தாயிட மிருந்து மகள் தெரிந்து கொள்ள, அவள் மீட்டும் தன் மகளுக்குச் சொல்ல, பரம்பரை பரம்பரையாக இந்தப் பாடல்கள் வருகின்றன. ஆங்கிலத்தில் "Folk Songs" என்று இவற்றைச் சொல்வார்கள்.

## இன்பமும் துன்பமும்

நம்முடைய பெரியவர்கள் வேலை செய்கிறபோது உடம்புக்கு வருகிற துன்பத்தைப் போக்கிக் கொள்ள இத்தகைய பாடல்களைப் பாடிக் கொண்டிருப்பார்கள். பாட்டின் பொருள் தெரியாவிட்டா லும் இதன் இசை அமைப்பு உள்ளத்திற்கு ஊக்கத்தை உண் டாக்கும். அதனோடு பாட்டின் பொருளும் தெரிந்து விட்டால் அவற்றில் ஒரு தனிச் சுவை உண்டாகும்.

உடம்பைப் பெற்றவர்கள் வாழ்நாள் முழுவதும் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். உழைப்பாவது மூன்று கரணங்களினால் செய்கிற செயல்கள். மனத்தினாலே சிந்தித்தாலும் உழைப்புத் தான்; வாக்கினால் பேசினாலும் உழைப்புத்தான்; உடம்பினால் வேலை செய்தாலும் உழைப்புத்தான். ஆகவே ஏதாவது ஒரு வகையில் மனிதன் உடம்பு எடுத்த காலம் தொடங்கி இறுதி வரைக்கும் வேலை செய்கிறான். அதனால் விளைகிற இன்ப துன்பங்களை நுகர்கிறான். ஆயினும் அவன் இன்பத்தை நினைந்து அமைதி பெறுவது இல்லை. எப்பொழுதும் இன்பத்தையே அனுபவிக்கிறவர்களோ, துன்பத்தையே அனுபவிக்கிறவர்களோ உலகில் யாரும் இல்லை. இன்பமும் துன்பமும் கலந்தே நமது வாழ்க்கையில் வருகின்றன. ஆனால் மனித இயல்பு துன்பத்தை நினைந்து ஏங்குவதுதான். இன்பம் வந்ததே என்று அதை நினைந்து, துன்பம் வந்த காலத்தில் மகிழ்ச்சி அடைவது இல்லை. இன்பம் வந்த காலத்தில்கூட முன்பு வந்த துன்பத்தை நினைத்து மறுபடி யும் அது வந்துவிடுமோ என்று ஏங்குகிறான். இன்பத்தினால் உண்டான உணர்ச்சி நெடுநேரம் நிற்பதில்லை.

துன்பத்தினால் மூன்று வகையான விளைவுகள் உண்டாகின்றன. துன்பம் வருவதற்கு முன், அது வந்துவிடுமே என்று அஞ்சுகிறான். துன்பம் வந்தவுடனே துடித்துப் போகிறான். துன்ப நிகழ்ச்சி நேர்ந்துவிட்ட பிறகு, "ஐயோ! நமக்கு இப்படி வந்ததே!" என்று போனதை நினைந்து ஏங்குகிறான். இப்படி ஓரளவு துன்பத்தை மூன்றளவாக்கித் துயர் அடைகிற இயல்பு மனித சாதிக்கு இருக்கிறது.

## மரண நினைவு

ஆனால் இத்தகைய நிலை மரணத்தைப் பொறுத்த வரையில் அவனுக்கு இருப்பது இல்லை. மற்ற மற்றத் துன்பங்களை எதிர்பார்த்துத் துயர் உறுவதும், வரும் போதும் வந்த போதும் துயர் உறுவதும் ஆகிய இயல்பு மனிதனுக்கு இருந்தாலும், மரணம் என்னும் பெரிய துன்பத்தைப் பற்றி அவன் அவ்வாறு இருப்பது இல்லை. 'நமக்கு மரணம் வருமே!' என்று அவன் நினைக்கிறது இல்லை. கண்ணுக்கு முன்னால் நாள் தோறும் பலர் மரித்துக் கொண்டிருந்தாலும் மரணம் என்பது தனக்கும் உண்டென்பதை அவன் மறந்துவிடுகிறான். அப்படி அவன் மறவாமல் இருப்பானானால் ஆராய முற்படுவான். அப்படிச் செய்யாமல் இருப்பதனால் மரணத்தின் துன்பம் அவனுக்கு உடனுக்குடன் மறந்து போகிறதென்று கொள்ள வேண்டும். கண்ணுக்கு முன்னால் உண்டாகிற துன்பத்தை, அறிவினால் நமக்கு நிச்சயம் உண்டென்று முடிவு கட்டும் துன்பத்தை, மறந்துவிட்டு வேறு விளையாடல்களிலும், செயல்களிலும் மனிதன் ஈடுபடுகிறான். இதுதான் மாயை.

## பாதுகாப்பு

நல்ல வெயில் அடிக்கிறது. புழுக்கமும் சூடும் தாங்கவில்லை. அப்போது வீதியில் ஒருவன் கம்பளி விற்றுக் கொண்டு போகிறான். "சித்திரை மாதத்தில் கம்பளி எதற்கு? இப்போது விற்றுக் கொண்டு போகிறானே!" என்று யாராவது கேட்கலாம். ஆனால் அவனை அழைத்துக் கம்பளி வாங்குவாரும் இருக்கிறார்கள். சித்திரை மாதத்திற்குக் கம்பளி தேவையில்லை என்பது உண்மைதான். ஆண்டு முழுவதும் சித்திரை மாதமாகவே இருக்குமா? வரப்போகிற மார்கழி மாதத்தில் மிகவும் குளிரும் என்று தெரிந்து

முன்கூட்டியே கம்பளி வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். இதில் மற்றொரு லாபமும் உண்டு. குளிருகிற காலத்தில் வருகிற கம்பளிக்கு விலை அதிகமாக இருக்கும். முன்கூட்டியே வாங்கினால் கொஞ்சம் மலிவாக வாங்கலாம். ஆகையால் பலர் குளிர் வருவதற்குப் பல மாதங்களுக்கு முன்னால் கம்பளியைத் தேடி வாங்கிக் கொள் கிறார்கள்; மலிவாக வாங்குகிறார்கள். அவர்கள் புத்திசாலிகள் என்ற பெயரையும் எடுக்கிறார்கள்.

வெயிலுக்குக் குடை வேண்டும். மழைக்கும் குடை வேண்டும். வெயிலும் மழையும் இருக்கும்போது குடையை விரிக்க வேண்டு மென்று தோன்றுகிறது. ஆனால் குடையை நாம் வாங்கி வைத் திருந்தால்தான் வெயிலும் மழையும் வரும்போது விரிக்க முடியும்.

இவ்வண்ணமே நமக்கு வருகிற துன்பங்களுக்கு முன்பாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்ள வேண்டும். நாம் புதிதாகச் சாஸ்திரம் கற்க வேண்டாம். யமன் நம்மைத் தேடிக் கொண்டு வருவான் என்பது யாவரும் அறிந்த செயல். நாம் ஒரு சமயத்தில் இறந்து விடுவோம் என்கிற உண்மையை யாவரும் அறிவார்கள். அதற்குப் பாதுகாப்புத் தேடிக் கொள்கிறவர்கள்தாம் பெரியவர்களாக விளங்குகிறார்கள். அருணகிரிநாத சுவாமிகள் இனிமேல் வருகிற துன்பத்திற்கு இப்போதே ஒரு மருந்து சொல்கிறார்.

## அருணகிரியார் கூறும் உபாயம்

கடுமையான வேலை உடம்புக்குத் துன்பத்தைத் தருகிறது. மரணம் உயிருக்குத் துன்பத்தைத் தருகிறது. எழுத்து அறிவு இல்லாதவர்கள் என்று நாம் சொல்லும் ஏழைகள் இசைப்பாட்டுப் படியே தங்கள் உடலுக்கு வரும் இளைப்பைப் போக்கிக் கொள்கிறார்கள். அதுபோல் நாமும் பாட்டுப் பாடி உயிருக்கு வருகிற துன்பமாகிய மரணத்தைப் போக்கிக் கொள்ளலாம் என்ற உபாயத்தைச் சொல்கிறார். நம்மைப் பார்த்து அவர் அந்த உபதேசத்தைச் சொல்லவில்லை. இறைவனைப் பார்த்துத் தாம் வேண்டிக் கொள்ளும் முறையில் சொல்கிறார். ''ஆண்டவனே, நாளைக்கு யமன் வருவானே! அவன் வரும்போது அஞ்சேல் என்று நீ என்முன்னே வந்து காப்பாற்ற வேண்டும். அதற்காகப் படிக்கும் திருப்புகழ் போற்றுவன்'' என்று சொல்கிறார்.

அவர் சொல்வது எப்படி இருக்கிறது தெரியுமா? ஒரு கடைக் காரனிடம் சென்று, ''இன்றே இண்டு ரூபாய் கொடுத்து வைக் கிறேன். பொங்கல் வரும்போது வெல்லத்திற்குத் தட்டு ஏற்பட்டால் என்ன செய்வது? அப்போது இரண்டு வீசை எனக்கு அனுப்பி வைக்கவேண்டும்'' என்று சொல்வது போல இருக்கிறது. ''வைகாசி மாதம் 6–ஆம் தேதி என் பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்து விட்டேன். அன்று நீ எங்கும் போகக் கூடாது. என் வீட்டில் மேளம் வாசிக்க வேண்டும்'' என்று நாகசுரக்காரருக்கு ஒரு மாதத்திற்கு முன்பே முன்பணம் கொடுப்பதுபோல இருக் கிறது. ''ஆண்டவனே, இப்போது யமன் வரவில்லை. அவன் இன்று வருவானோ? நாளை வருவானோ? என்று வருவானோ? எனக்குத் தெரியாது. அந்தக் காலனையும் ஆட்டி வைக்கிற மகா காலனாகிய உனக்கு அவன் என்று வருவான் எனத் தெரிந் திருக்குமே! அவன் என்னிடம் வரும்போது, என்னை அவன் தன் பாசத்தினால் பிடிக்கும்போது, நீ வந்து அஞ்சேல் என்று என்னைக் காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டிக் கொள்கிறார்.

''நான் வந்து அஞ்சேல் என்று சொல்லவேண்டுமானால் அதற்காக நீ என்ன செய்திருக்கிறாய்?'' என்று ஆண்டவன் அவரைப் பார்த்துக் கேட்கலாம். அருணை முனிவர் சொல்கிறார்.

''எம்பெருமானே, நான் உன் திருப்புகழைப் படிக்கிறேன். படித்ததை மனனம் செய்கிறேன். ஆகையால் யமன் பாசத்தினால் பிடிக்கும்போது வந்து அஞ்சேல் என்பாய்'' என்கிறார்.

படிக்கும் திருப்புகழ் போற்றுவன்; கூற்றுவன் பாசத்தினால்
பிடிக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய்.

## இறைவன் புகழ்

திருப்புகழ் என்றாலே இறைவன் புகழ் என்று பொருள். மனிதனுக்கு உண்டாகும் புகழ் புகழாகாது. அது மறைந்துவிடும். உண்மையைப் பார்க்கப் போனால் மனிதன் புகழுக்கு உரியவன் அல்லன். எவன் உண்மையாக ஒரு காரியத்தைச் செய்கிறானோ அவனே புகழுக்கு உரியவன். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பது பழமொழி. உலகில் நிகழும் எல்லாக் காரியங்களுக்கும் இறைவனே பொறுப்பாளி. ஆகவே அந்தக் காரியங்களால் உண்டாகும் புகழும் அவனையே சாரவேண்டும்.

## எசமானனும் கார் ஓட்டியும்

ஒரு பெரியவர்; காந்தியின் அடியார். அவரை நாம் பார்த்தது இல்லை. அவர் நம் வீட்டுக்கு வருவதாக இருந்தார். நாம் வெளியில் போயிருக்கும்போது வந்து விட்டார். நமக்காக காத்துக் கொண்டு அவர் வீட்டுக்குள் இருக்கிறார். நாம் வெளியில் போய்ப் பின்பு வருகிறோம். நம் வீட்டு வாசலில் ஒரு கார் நிற்கிறது. அவசரமாக உள்ளே நுழைந்த நாம் இடைக்கட்டில் நின்ற ஒருவரைப் பார்த்து மிகவும் உபசாரம் செய்கிறோம். நல்ல அங்கி கால் சட்டை எல்லாம் அணிந்திருக்கிறார் அவர். நாம் செய்கிற உபசாரத்தைப் பார்த்து மிகவும் கஷ்டப்படுபவரைப் போலத் தெரிகிறது. உள்ளே இருந்து வரும் சிரிப்புச் சத்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறோம். 'நாம் எசமானரை வரவேற்காமல் அவரிடம் சம்பளம் வாங்கும் கார் ஓட்டியைப் புகழ்ந்தோம்' என்று அறிந்து வெட்கித் தலை குனிகிறோம்.

இப்படித்தான் உலகத்தில் உள்ளவர்களிடம் யார் எசமானரோ அவரைப் புகழாமல் எசமானரின் கருவியாக இருந்து உதவி செய்கிறவர்களையே புகழுக்கு உரியவராக எண்ணிப் புகழும் வழக்கம் இருக்கிறது. அவர்கள் நமக்கு நன்மை செய்கிறார்கள். என்பது ஓரளவுதான் உண்மை; அவர்கள் எல்லோருக்கும் மேலான தலைவனாக இருக்கிற ஆண்டவனுக்குக் கருவியாக இருந்து நலம் செய்கிறார்கள். எசமானருக்கு உரிய மரியாதையைச் செய்துவிட்டு அவருடன் வந்த வேலைக்காரர்களுக்கும் மரியாதை செய்வது நல்லவர்களுக்கு இயற்கை. ஆனால் எசமானரை மறந்து வேலைக்காரனுக்கு மரியாதை செய்தால் நம் காரியம் வெற்றி அடையாது. நல்ல எசமானராக இருந்தால் நம் அறியாமையைப் புரிந்து கொள்வார். பொல்லாதவராக இருந்தால், 'வேண்டுமென்றே அவமானம் செய்கிறானே!' என்று கோபித்துக் கொள்ளக்கூடும். ஆண்டவன் நல்ல எசமானனாக இருப்பதால் நம்பால் கோபம் கொள்ளாமல் அலட்சியமாகச் சிரித்துக் கொண்டிருக்கிறான்.

உண்மையிலேயே புகழுக்கு உரியவன் ஒருவன்தான் இருக்கிறான். அந்த ஒருவனைக் குறித்தே.

**''பூமிமேல் புகழ்தக்க பொருளே''**

என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார்.

## இறைவன் ஆணை

"என் கண்முன்னால் நின்று எனக்கு உதவி செய்கிறவன் இவன்தானே? ஆண்டவன் உதவி செய்கிறான் என்றால், அவனை எனக்குத் தெரியாதே" என்ற கேள்வி உண்டாகும். நம்முடைய கிராமத்தில் மணியக்காரர் வேலை செய்கிறார். அவரைக் குடியரசுத் தலைவரின் பிரதிநிதி என்று சொல்கிறோம். "நான் ராஷ்டிர பதியைப் பார்த்தது இல்லையே நான் எப்படி அவருக்குக் குடியா வேன்?" என்று யாராவது சொல்ல முடியுமா?

**"உறங்கு மாயினும் மன்னவன் தன்னொளி**
**கறங்கு தெண்டிரை வையகம் காக்குமால்"**

என்று சீவகசிந்தாமணி ஆசிரியர் சொல்கிறார். அரசன் தூங்கிக் கொண்டிருந்தாலும் அவன் ஆணை நாடு முழுவதும் காத்து நிற்கும். எந்த இடத்திலும் அந்த ஆணை நிலவும். அவன் விழித்துக் கொண்டிருந்தாலும், தூங்கினாலும் ஆணை தூங்குவதில்லை. அவன் ஆணை செவ்வையாக இருந்தால் அவன் வேலைக்காரர்கள் தூங்காமல நாட்டைப் பாதுகாப்பார்கள். அப்படிய அவர்கள் காப்பதற்கு மூலகாரணம் அவனுடைய ஆணை.

இது அரசியல் உலகில் நன்றாக விளங்கும் செய்தி. இது போலத்தான் உலகம் முழுவதும் இறைவன் ஆணையினால் இயங்குகிறது. அவனுக்கு அடங்கிய அதிகாரிகளாகவும், தொண்டர் களாகவும் பல தேவர்கள் இருக்கிறார்கள். உலகத்திலுள்ள மக்கள் யாவருமே அவன் கருவியாக இயங்குகிறார்கள். இறைவன் ஆடா மல் அசங்காமல் இருக்கிறான். ஆனால், அவன் அருள் ஆணை யினால் உலகம் எல்லாமே ஆடுகிறது; ஓடுகிறது; இயங்கி வரு கிறது. பம்பு தண்ணீரை இறைக்கிறது. ஹீட்டா வெம்மையைக் கக்குகிறது. விசிறி சுற்றுகிறது. இவற்றுக்கு எல்லாம் காரணமான மின்சார மூலக்கருவி அசையாமல் ஆடாமல் இருக்கிறது. அசையாமல் ஆடாமல் இருக்கிற அந்தப் பகுதியே ஆடி வேலை செய்கிற பகுதிகளின் இயக்கத்திற்கு எல்லாம் மூலகாரணமாக இருக்கிறது. இது விஞ்ஞானத்தில் எப்படி உண்மையோ, அது போல் ஆண்டவன் ஆடாமல் அசையாமல் இருந்தாலும் மற்ற வற்றையெல்லாம் ஆட்டி வைக்கிறான் என்பதும் உண்மை. பரஞ்சோதி முனிவர் இதைச் சொல்கிறார்.

## வாளா இருப்பவன்

**"பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப்போத இன்பம்
ஆவண்ணம் மெய்கொண்ட வன்தன் வலிஆணை தாங்கி
மூவண்ணல் தன்சந்நிதி முத்தொழில் இயற்ற வாளா
மேவண்ணல் அன்னான் விளையாட்டின் வினையை வெல்வாம்."**

பிரம்மா படைப்புச் செயலைச் செய்கிறார். திருமால் ரட்சிக்கும் தொழிலை ஏற்றுக் கொண்டிருக்கிறார். ருத்திரர் சங்காரத் தொழிலை நடத்துகிறார். இந்த மூன்று பேரும் எப்போதும் வேலை செய்து கொண்டே இருக்கிறார்கள். ஆனால் இந்த மூவர் வேலைக்கும் மூலகாரணமான ஆணையை வைத்திருக்கிறான் பரமேசுவரன். பூவுக்கு ஒரு வடிவம் உண்டு; நிறம் உண்டு; மணம் உண்டு. அந்த மூன்றும் தனித்தனியாகப் பிரிக்க இயலாதவை. மூன்றும் ஒட்டியிருப்பது போலச் சத் சித் ஆனந்தம் என்ற மூன்று இயல்பும் ஒன்றாக இணைந்து அமைந்த பரமேசுவரன் சும்மா இருக்கிறான். மூன்று மூர்த்திகளும் தன்னுடைய ஆணையைத் தாங்கித் தன் சந்நிதானத்தில் தொழிற்படும்படி இயக்கிக் கொண்டிருக்கிறான். அவன் இயக்கி வைப்பதனால்தான் மற்றவர்கள் இயங்குகிறார்கள்.

ஒரு கல்யாண வீட்டில் அங்கும் இங்கும் ஓடிச் செயற்படுகிறவர்கள் எல்லோரும் வீட்டுக்குத் தலைவர்களாக இருப்பது இல்லை. தலைவன் சும்மா கையைக் கட்டிக் கொண்டு நின்றாலும், அவன் நிற்பதனாலேயே அவனைப் பார்த்துப் பலர் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஓடியாடி வேலை செய்கிறவர்கள் யாவருமே கடைநிலை ஊழியர்கள்தாம். அது போல் இறைவன் வாளா இருந்தாலும் அவன் வலியாணை தாங்கி மும்மூர்த்திகளும் செயற்படுகிறார்கள்; முப்பத்து முக்கோடி தேவர்களும் தொழிற்படுகிறார்கள். உலகம் இயங்குகிறது. அண்ட பகிரண்ட சராசரங்கள் இயங்குகின்றன. தாய் குழந்தைக்கு உணவு தருகிறாள். பணக்காரன் ஏழைக்கு உணவு போடுகிறான். வலியவன் பல பல உதவிகளை மெலிந்தவனுக்குச் செய்கிறான். இப்படி எல்லாவற்றுக்கும் எல்லா இயக்கத்திற்கும் மூலமாக இருப்பது சும்மா இருக்கிற பரமேசுவரன் ஆணை.

கால் நடக்கிறது, கை கொடுக்கிறதென்றால் கையும் க தாமாகவே செயற்படுகின்றனவா? உயிர் என்ற ஒன்று இ

ஆட்டி வைக்காவிட்டால் அவற்றால் ஒரு வேலையும் செய்ய இயலாது. உடம்பிலுள்ள ஒவ்வோர் அங்கத்தையும் இயங்கச் செய்கிறது உயிர் என்பதை நன்கு உணர்கிறோம். உயிர் போய் விட்டால் உடம்புக்கு ஜடம் என்ற நிலை வந்துவிடுகிறது. உடம்பை இயக்குகிறது உயிர் என்பது நாம் தெரிந்துகொண்ட உண்மை. உடம்பில் உயிர் இருக்கிறது என்பது அநுமானப் பிரமாணம். உயிரை யாரும் கண்ணால் பார்த்தது இல்லை. அது பிறக்கும் போது கண்ணுக்குத் தெரியாது. இறக்கும்போதும் தெரிவது இல்லை. ஆனால் உடம்பு இயங்குவதைக் கொண்டு உயிர் இருக்கிறதென்று தெரிந்து கொள்கிறோம். புகையைக் கண்டு அங்கே நெருப்பு இருக்கிறதென்று ஊகிப்பது போல, உடம்பு செயற்படுவதைக் கொண்டு உயிர் இருக்கிறதென்று தெரிந்து கொள்கிறோம். இது அநுமானப் பிரமாணத்தினால் தெரிந்து கொள்கிற உண்மை.

## கைம்மாறு எது?

உடம்பை இயக்குவது உயிர் என்று தெரிந்து கொள்ளும் ஆற்றல் படைத்த நமக்கு உயிர்களை எல்லாம் இயக்குபவன் ஆண்டவன் என்ற அறிவும் வரவேண்டும். அதுவும் அநுமானந் தான். அப்படி அநுமானித்து எல்லாச் செயல்களுக்கும் காரண மானவன் இறைவன் என்று தெரிந்து கொண்டால் அவனுக்கு நம் நன்றி அறிவைக் காட்ட வேண்டும் அல்லவா? அவனுக்கு நாம் கைம்மாறு செய்ய இயலாது. நமக்கு என்று சொந்தமாக ஏதாவது இருந்தால் கொடுக்கலாம். அப்படி இருந்தாலும் அவன் நமக்குக் கொடுத்த அளவு நாம் திருப்பிக் கொடுக்க முடியுமா? 'அவன் நமக்குக் கொடுத்தானே!' என்று மனமார எண்ணி நன்றி அறிவைக் காட்டவேண்டும்.

ஆயிர ரூபாய் திருமணத்துக்குக் கொண்டு வந்து பெண்ணைப் பெற்றவர்கள் கொடுக்கிறார்கள். பிள்ளையைப் பெற்றவர்கள் எதிர் மரியாதைக்காக அந்த ஆயிர ரூபாயிலேயே ஐந்து ரூபாயை எடுத்து அவர்களிடத்தில் கொடுக்கிறார்கள். அது போலத்தான் ஆண்டவன் நமக்குத் தனுகரண புவன போகங்களை எல்லாம் தந்திருக்கிறான். நம்முடைய நன்றி அறிவைக் காட்டப் புதியதாக ஒரு பொருளை நாமே படைத்து அவனுக்குக் கொடுக்க முடி யாது. அவன் கொடுத்திருக்கிற நாவினால் அவன் புகழைப் பாடி நன்றி அறிவைக் காட்டலாம்.

ஒருவர் எனக்கு ஆயிரம் ரூபாய்க்கு செக் கொடுக்கிறார். அதைப் பாங்கில் கொண்டுபோய்க் கொடுக்கிறேன். நான் கேட்ட வண்ணம் அங்கேயுள்ள 'காஷியர்' ஐந்து ரூபாய் ஆகவும், பத்து ரூபாய் ஆகவும், சில்லறையாகவும் கொடுக்கிறார். நான் கேட்ட படி கொடுக்கிறவர் அவர் தாமே? ''ஐயா நீங்கள் ஆயிரம் ரூபாய் கொடுத்தீர்கள்; நன்றாக வாழவேண்டும்'' என்று சொல்லிக் புகழலாமா? தாமதம் பண்ணாமல் கொடுத்ததற்கு ஓரளவு அவரை வாழ்த்தலாம். ஆனால் நமக்கு யார் 'செக்' கொடுத்தாரோ அவரே பெரிய புகழுக்குக் காரணமானவர். அவர் ஐந்நூறு ரூபாய் என்று எழுதியிருந்தால் 'காஷியர்' நமக்குத் தேவை ஆயிரம் என்று சொன்னால் கொடுத்து விடுவாரா? இந்த ஆயிரம் ரூபாய் கொடுப் பதற்குக் காரணமாக இருந்தவர் செக்கில் கையெழுத்துப் போட்ட முதலாளி. அவரைப் புகழவேண்டும் என்பதே பகுத்தறிவுக்கு ஒத்த செயல்.

## புகழ்வதற்கு உரியவன்

ஆகவே, உலகில் நடக்கின்ற எல்லாவற்றுக்கும் மூல காரணமாக இருக்கிற ஆண்டவனை நன்றாகப் புகழ்ந்து வாழ வேண்டும். அவன் ஆணைக்குக் கருவியாக அருகில் இருந்து உதவி செய்கிறவர்களை ஓரளவு புகழ்வதில் தவறு இல்லை. துன்பம் வரும்போது, ''இந்த ஆண்டவனுக்குக் கண் இருக்கிறதா?'' என்று திட்ட நமக்கு வாய் இருக்கிறது. ஆனால் இன்பம் வரும் போது அதற்குக் காரணம் இறைவன் என்பதை மறந்துவிடு கிறோம். நம்முடைய வசைக்கு ஆளாகும் ஆண்டவன் நம் புகழுக்கும் ஆளாக வேண்டாமா? உண்மையில் எம் பெருமான் தான் எல்லாவற்றையும் நமக்குக் கொடுக்கிறான் என்று தெரிந்து கொள்ளவேண்டும். அவன் நமக்குப் பல வகையில் உதவி செய்கிறவன். ஆகையால் நாம் அவனைப் புகழவேண்டும், சிறப்பாகப் புகழவேண்டும் என்று தெரிந்து கொள்ள வேண்டும். அவன் புகழ்தான் உண்மையான புகழ்.

## புகழைப் போற்றுதல்

இறைவனோடு சார்ந்த பொருள்களை எல்லாம் மரியாதை யாகச் சொல்வது நம் தமிழ்நாட்டு மரபு. அவன் மேனியைத் திருமேனி என்பார்கள். அவன் அடியைத் திருவடி என்பார்கள்.

அப்படியே அவன் புகழைத் திருப்புகழ் என்று சொல்வது முறை. அருணகிரியார் முருகப் பெருமானின் புகழைத் திருப்புகழ் என்று பாடியிருக்கிறார். "இறைவா, உன் திருப்புகழை நான் படிப்பேன். பலமுறை படித்து மனனம் பண்ணிக் கொள்வேன்" என்று சொல்கிறார். திருப்புகழ் என்றது இங்கே பொதுவகையில் முருகன் புகழ் என்று கொள்வதற்கு உரியது.

படிக்கும் திருப்புகழ் போற்றுவன்.

போற்றுதல் – பாதுகாத்துக் கொள்ளுதல். 'படிக்கிற உன் புகழைப் பாதுகாத்து வைத்துக் கொள்வேன்' என்பது பொருள். கையில் உள்ள அணி ஆடை முதலிய பொருள்களைப் பாதுகாப்பாக வைக்கும் இடம் பெட்டி. எம்பெருமானின் திருப்புகழைப் போற்றி வைக்கும் இடம் மனம். "செவி வாயாக நெஞ்சுகளனாக" என்று இலக்கண நூலார் சொல்வார்கள். வாய் வழியாகச் சோற்றை உண்டு வயிற்றில் சேமித்துக் கொள்வது போலக் காது வழியாகக் கல்வியை உண்டு உள்ளத்தில் தேக்கிக் கொள்ள வேண்டுமென் பார்கள். உணவு சிறிது நேரம் ஆனவுடன் செரித்து விடுகிறது. மறுபடியும் உணவைத் தேடிக் கொள்ள வேண்டும். ஆனால் நாம் காதல் கேட்டு வாங்கிக் கொள்வதை உள்ளம் பல காலம் வைத்துக் கொள்ள முடியும். அதை மறந்துவிடுகிற மக்களும் இருக்கிறார்கள். பணத்தைப் போற்றுவதைவிடக் கல்வியைப் போற்றுவது சிறப்பு. பாடம் கேட்டால் போதாது. அதை மனனம் செய்து மீட்டும் சொல்லிச் சொல்லிப் பழகினால் உள்ளத்தடத்தில் பதிந்துவிடும். "அப்படி உன் புகழைப் படித்து அதைப் போற்றுவேன்" என்கிறார் அருணகிரியார்.

முதலில் திருப்புகழைப் படிக்கவேண்டும். படித்துப் பழக்கம் செய்து கொள்ளவேண்டும். பலகாலம் படித்துப் பழகுவதோடு அதை மனத்தில் வாங்கிக் கொள்ள வேண்டும். பொருளைப் பற்றிக் கொள்வது போலப் பற்றிக் கொள்ள வேண்டும். அதனால், "போற்றுவன்" என்று சொன்னார். நமக்கு வேண்டாதன பல வற்றை மனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறோம். நாம் பட்ட துன்பங்களை எல்லாம் நினைத்துக் கொண்டே இருக்கிறோம். அழகான ஆடை அணிகளை வைக்க வேண்டிய பெட்டியில் கூழாங்கல், கண்ணாடித் துண்டு முதலியவற்றைப் பொறுக்கிப் போட்டுக் கொண்டிருப்பவன் பைத்தியம். இறைவன் புகழை

வைத்துப் போற்ற வேண்டிய உள்ளத்தில் பைத்தியத்தைப் போல வெறுக்கத் தக்க பல பொருள்களைப் போட்டு நிரப்பிக் கொண் டிருக்கிறோம். அத்தகைய உள்ளம் சிறந்த பெட்டியாகாது. நம் முடைய உள்ளத்தில் இறைவன் சம்பந்தமான பொருள்களே இருந்தால் அந்த உள்ளந்தான் சிறந்த பெட்டியாக இருக்கும். நன்றாகத் திருப்புகழைப் படித்துப் பொருள் தெரிந்து அதில் ஈடுபட்டு நம்முடைய நெஞ்சத்திலே வைத்து அதைப் பாதுகாக்க வேண்டும்.

படிக்கும் திருப்புகழ் போற்றுவன்

என்ற அடியிலே இதனைத்தான் நமக்கு அருணகிரிநாதர் உப தேசம் செய்கிறார்.

## காலம் போதல்

மனத்தில் ஏதேனும் ஒன்று இருக்குமானால் அடிக்கடி நாம் சொல்வதற்கு அது உதவியாக இருக்கும். எத்தனையோ செய்கை களைச் செய்கிற நமக்குக் காலம் மலையாக நின்று துன்புறுத்து கிறது. காலம் போகவில்லையே என்று நினைக்கும்போது நம் உடம்பு சிரமப்படுகிறது; உள்ளம் துன்புறுகிறது. உள்ளம் துன் புறாமல் இருந்தால் காலம் போவதே தெரியாது. வேலையினால் வருகிற சிரமத்தைப் போக்கிக் கொள்வதற்குத் தொழிலாளர்கள் பாடுவதைப் போல, நம்முடைய உலக வாழ்வில் வருகிற சிரமங்களைப் போக்கிக் கொள்வற்குத் திருப்புகழ் ஆகிய பாட்டு நமக்குப் பயன்படும். படிக்கும் திருப்புகழைப் போற்றிக் கொண் டிருந்தால் காலம் போவது தெரியாது. காரியங்கள் பல செய்து கொண்டிருக்கலாம். இந்த இரகசியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் நம் வீட்டுத் தாய்மார்களைப் பார்த்தால் போதும்.

## தாய்மார்களின் பழக்கம்

அவர்கள் நாம் எழுவதற்கு முன்னே எழுந்திருந்து, சாணம் தெளித்து, வீதி பெருக்கிக் கோலம் போடுகிறார்கள். அதுமுதல் இடைவிடாமல் வீட்டு வேலைகளை எல்லாம் செய்கிறார்கள். நாம் எல்லோரும் படுத்துக் கொண்டு தூங்கும் வரையில் வேலை செய்கிறார்கள். எல்லோரும் தூங்கிய பிற்பாடு தூங்கச் செல் கிறார்கள்.

"பின்தூங்கி முன்எழும் பேதையே"

என்று திருவள்ளுவர் பாடியதாக ஒரு பாட்டு உண்டு. இந்த நாட்டு மகளிர்களுடைய உழைப்பு அத்தகையது.

பராசக்தியின் திருவிளையாடலும் அத்தகையதுதான். பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்னால் எத்தனையோ தத்துவங்கள் தோன்றும். அந்தத் தத்துவங்களிலும் மூலதத்துவம் நாதம். அதற்கும் முன்பு பராசக்தி தோன்றுகிறாள். பரசிவம் தொழிற்படத் தொடங்கியவுடன் பராசக்தி தோன்றுகிறாள். எல்லாத் தத்துவத்திற்கும் தாயாகிய அந்தப் பெருமாட்டி தோன்றிய பிற்பாடு பிரபஞ்சத் தோற்றம் தொடங்குகிறது. எல்லாத் தத்துவங்களும் ஒடுங்கும் போது தாயாகிய பராசக்தி எல்லாவற்றையும் தனக்குள் அடக்கிக் கொண்டு தான் பரம சிவத்திடம் ஒன்றுவாள். எல்லாத் தத்துவங்களுக்கும் முன்னாலே தோன்றி, எல்லாத் தத்துவங்களுக்கும் பின்னாலே அடங்குவது, நம்முடைய வீட்டுத் தாய்மார்கள் முன் எழுந்து பின் தூங்குவது போன்றது என்று சொன்னால் அதில் தவறு ஒன்றும் இல்லை.

அலுப்புச் சலிப்பு இல்லாமல் தாய்மார்கள் அத்தனை காரியங்களையும் எப்படிச் செய்கிறார்கள்? காலையில் எழுந்தால் உதய ராகத்தில் இறைவன் புகழைப் பாடுவார்கள். மற்ற நேரங்களிலும் லலிதா சோபனம், திருவிளக்குத் தோத்திரம், துளசி தோத்திரம், கந்தர் அலங்காரம் என்று இறைவன் துதிப் பாடல்களைப் பாடிக் கொண்டே வேலை செய்வார்கள். அதனால் வேலையில் உண்டாகிற சிரமம் அவர்களுக்கு இராது.

## பாடலால் விளையும் பயன்

இரண்டு மைல் தூரம் நடந்து போகவேண்டுமென்றால் கந்தர் அலங்காரத்தைச் சொல்லிக் கொண்டு நடந்து பார்த்தால் தெரியும். இரண்டு மைல் நடந்திருப்போம்; ஆனால் நேரம் போனது தெரியாமல், வழி கடந்தது தெரியாமல், எளிதில் அந்தக் காரியம் ஆகிவிடும். என்னுடைய ஆசிரியர் அவர்கள் ஒன்று சொல்வார்கள். இறைவனுடைய பூசைக்கு மலர் பறிக்கும்போது துதிப் பாடல்களைச் சொல்லிக் கொண்டு பறிப்பார்களாம். பாடலும் நன்றாக மனனம் ஆகும்; செய்கிற வேலையும் எளிதில் நிறைவேறிவிடும். இதை அநுபவத்தில் காணலாம். மனத்துக்கோ உடம்புக்கோ இளைப்புத் தருகின்ற செயலில் ஈடுபடும் போது

இப்படி ஒரு பழக்கத்தைச் செய்து கொண்டால் எளிதில் காலத்தைக் கழித்து வேலையை நிறைவேற்றிவிடலாம்.

உடம்பைச் சுமப்பதாகிய வேலையை எப்பொழுதும் செய்து கொண்டிருக்கும் நாம் உயிருக்கு வரும் துன்பத்தைப் போக்கிக் கொள்ள ஆண்டவனுடைய திருப்புகழைப் படித்து மனனம் செய்து சொல்லிக் கொண்டே இருத்தல் நல்லது.

மனிதன் வாயினால் பேசுகிறான். அந்தப் பேச்சு வெறும் ஒலி அல்ல. அதில் பொருள் இருக்கிறது. வெறும் ஒலியாக இருக்கிற அழுகை முதலியவற்றுக்குக்கூட, பாவம் இருக்கிறது. மனிதன் வளர வளர நுட்பமான கருத்துக்களைத் தன்னுடைய பேச்சினால் தெரிவிக்கிறான். இலக்கியப் பெரும் புலவர்கள் தாம் உணர்த்த வேண்டிய கருத்துக்களை இலக்கியமாகப் படைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இலக்கியப் புலமையோடு ஆண்டவன் திருவருள் இன்ப அநுபவம் பெற்றவர்கள் மற்றவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய கருத்துக்களை அழகான பாடல்களில் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பாடல்கள் எடுத்தவுடன் விளக்க மாகத் தோன்றுவது இல்லை. படிக்கப் படிக்க நம் மனப் பெட்டிக் குள் செல்கிறது. நாம் எவ்வளவு அதிகமாகப் பழகுகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு அவற்றைப் பற்றிய செய்திகளை மேலும் மேலும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை நமக்கு எழுகிறது. ஒரு பாட்டை மனனம் செய்து கொண்டு விடுவோ மானால் அது சம்பந்தமாக செய்திகளை, அதன் பொருளை, அதன் கருத்து நுட்பங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் எழுகிறது. படிக்கும் திருப்புகழைப் போற்றி வைப்ப தனால் அடிக்கடி அதைச் சொல்கிற வழக்கம் உண்டாகிறது. சொற்களால் அமைந்த பாடல்களுக்குப் பொருளும் உண்டு. ஆகையால் பொருளைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறோம். ஒருமுறை தெரிந்து கொள்வதோடு மட்டுமன்றி மேலும் மேலும் அறிந்து அதனூடே கிடக்கிற கருத்து நுட்பங்களையும் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறோம்.

## ஆர்வமும் அநுபவமும்

அருணகிரிநாதப் பெருமானைப் போன்ற அருளாளர்கள் பாடிய பாடல்களில் மேலெழுந்தவாரியாகத் தோன்றுகிற பொருள் ஒன்று உண்டு. அதனூடே அநுபவ நுட்பம் சேர்ந்த கருத்தும்

இருக்கும். எத்தனைக்கு எத்தனை அத்தகைய பாடல்களினூடே பழகுகிறோமோ அத்தனைக்கு அத்தனை அவற்றின் உள்ளே அமைந்திருக்கிற அநுபவக் கருத்துக்கள் நன்கு புலனாகும். அப்படி அநுபவக் கருத்துப் புலனாகும்போது அதனை அறிந்து கொள்ளும் அளவில் நாம் நின்றுவிட மாட்டோம்.

நாம் நடந்துகொண்டிருக்கும்போது வழியில் ஒரு காகிதம் கிடைக்கிறது. அதை எடுத்துப் பார்க்கிறோம். அதில் பல வகை யான உருவங்கள் இருக்கின்றன. நாம் படிப்புடை யவராதலால் அதிலுள்ள எழுத்துக்களைப் படிக்கிறோம். அது நூறு ரூபாய் நோட்டு என்று தெரிகிறது. முதலில் எடுத்தபோது நோட்டு என்று தெரியவில்லை. எடுத்துப் பார்த்தபோது நோட்டு என்று தெரிகிறது. எடுத்தது ஒரு செயல். ரூபாய் நோட்டு என்று தெரிந்து கொண்டது அறிவு. இந்த இரண்டோடு நாம் நிற்பது இல்லை. படத்தைப் பார்த்துக் கொண்டே நிற்கிற செயல் வேறு வகையான காகிதங்களாக இருந்தால் அமையும். நம் கையில் கிடைத்தது ரூபாய் நோட்டு என்ற அறிவை நாம் பெற்றவுடனேயே அந்த நோட்டைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நினைவு எழுகிறது. ரூபாய் நோட்டு என்ற அறிவு அதனைச் செலாவணி யாக்கும் செயலில் கொண்டு வந்து நிறுத்துகிறது.

அதுபோல் இறைவனுடைய திருவருள் இன்ப அநுபவங்களைக் குறிக்கும் பாடல்களை மனனம் பண்ணி, அவற்றின் கருத்தை நாம் உணரும்போது, நமக்கும் அத்தகைய இன்பம் வேண்டு மென்ற ஆசை எழுகிறது. அதற்கு என்ன வழி என்று ஆராய்ச்சி செய்ய முனைகிறோம். அந்த இன்ப அநுபவத்தைப் பற்றிய அறிவு நமக்குத் தோன்றும் போது அதைப் பெறுவதற்குரிய முயற்சியும் உண்டாகிறது. அப்போது மனனம் செய்த டாட்டு நமக்குத் துணையாக நின்று வழிகாட்டுகிறது; நம்மைத் தூண்டி விட்டுச் சாதனத்தில் செலுத்துகிறது.

# 2

## பயன்

அருணகிரி நாதர், ''படிக்கும் திருப்புகழை நான் போற்று கிறேன். அதற்கு ஒரு பயன் எனக்கு அருளவேண்டும்'' என்று சொல்ல வருகிறார்.

கூற்றுவன் பாசத்தினால்
பிடிக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய்

என்கிறார். மார்க்கண்டன் கதை நமக்குத் தெரியும். அவன் உடம்பில் இருந்து உயிரைக் கூறுபோடக் கூற்றுவன் தன் எருமைக்கடா வாகனத்தில் வந்தான்; பாசக் கயிற்றோடு வந்தான். அந்தக் கயிற்றை வீசி மார்க்கண்டனை இழுக்கும்போது சிவ பெருமான் அஞ்சேல் என்று தோன்றினான். யமனுடைய வாகனம் ஒருபுறம் விழ, சூலம் ஒருபுறம் விழ, பாசக் கயிற்றை அறுத்து எறிந்து, அவனை உதைத்துக் கொண்டே எழுந்தான் பெருமான். மார்க்கண்டேயன் உயிரைப் போக்க வந்தவனுடைய உயிரே போய்விட்டது. இறைவனுடைய புகழைப் போற்றி, அவனை இரு கரங்களாலும் அணைத்துக் கொண்ட மார்க்கண்டேயனைப் போல, நாமும் திருப்புகழைப் படித்து அதனைப் போற்றி அதன் கருத்துக்குள்ளே நனைந்து அதன் பயனாக எம்பெருமானை இருதயத்திற்குள் அணைத்துக் கொண்டுவிட்டால் நாமும் காலனை வென்றுவிடலாம்.

## இடைவிடாத பயிற்சி

ஆனால் அதற்குத் தொடர்ந்து சாதகம் செய்ய வேண்டும். ஒருநாளில் நிகழ்கிற காரியம் அன்று இது. இறைவன் திருப் புகழைப் படித்துப் படித்து மனனம் செய்து, பாராயணம் பண்ணி, தியானம் செய்து பழகினால் நிச்சயம் அதன் பயன் கிடைக்கும். இப்பொழுது தினந்தோறும் செய்கிற காரியங்களோடு, அதையும் விடாமல் செய்ய வேண்டும். காலன் வரும்போது திருப்புகழ் கற்கலாமே என்று எண்ணிப் பயன் இல்லை. பரீட்சை வரும் போது படித்து அப்படியே கக்கிவிடலாம் என்று சொல்லும் மாணவர்களின் எண்ணம் போன்றது அந்த எண்ணம். சொல்லை ஒலியாகத் தெரிந்து கொண்டு, பின்பு அதன் பொருளையும் தெரிந்து கொண்டு, அப்பால் அதிலுள்ள உணர்ச்சியையும் உணர்ந்து அந்த வழியில் நிற்பதற்குப் பலகாலப் பழக்கம் வேண்டும்.

உலகத்தில் ஏதேனும் ஒரு சாலை அமையவேண்டுமானால் அதற்குப் பலகாலம் முயற்சி செய்கிறார்கள். நம் மனத்தில் திருப் புகழ்ச் சாலை போடுவதற்குப் பலகாலப் பழக்கம் வேண்டும். முதலில் சொல்லாலே போட்டு, பின்பு பொருளாலே போட்டு,

அப்புறம் உணர்வாலே போட்டால் அநுபவம் என்ற வண்டி அதன் மேலே செல்லும்; அநுபவம் என்ற வண்டியில் உயிர் ஏறிச் செல்வதற்கு அந்தச் சாலை உதவியாக இருக்கும்.

## பாடலும் யம பயமும்

இறைவனுடைய திருப்புகழைப் படித்துப் போற்ற வேண்டுமென்று இந்தப் பாட்டில் சொன்னார். முன்பும் ஒரு பாட்டுப் பார்த்தோம். ''இறைவனுடைய புகழைக் கற்றுக் கொள்ளாமல் இருக்கிறீர்களே! நாளைக்கு யமன் வந்து கொடிய பாசக்கயிற்றை வீசினால் என்ன செய்வீர்கள்?'' என்று சொன்னார். எப்படியோ திருப்புகழுக்கும் கூற்றுவனுடைய பாசக் கயிற்றுக்கும் ஒரு தொடர்பு இருப்பது தெரிகிறது. பாசக் கயிற்றை அறுக்கப் பாட்டு உதவும் என்று புலனாகிறது.

**''அழித்துப் பிறக்கவொட் டாஅயில் வேலன் கவியைஅன்பால்**
**எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீர்எரி மூண்டதென்ன**
**விழித்துப் புகைஎழப் பொங்குவெங் கூற்றன் விடும்கயிற்றால்**
**கழுத்தில் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே?''**

என்ற பாட்டில் எதிர்மறை முகத்தால், 'அயில்வேலன் கவியை இப்பொழுதே படிக்க வேண்டும். பிழை இல்லாமல் படிக்க வேண்டும்' என்று வற்புறுத்தினார். ''உங்களுக்கு வரும் பெரிய துன்பமாகிய மரணத்தை மறந்துவிட்டுச் சும்மா இருக்கிறீர்களே; அதை மாற்றவேண்டுமானால், அயில் வேலன் கவியைப் பிழை யறக் கற்கவேண்டும்; அப்படிச் செய்யாமல் இருக்கிறீர்களே!'' என்றார்.

பின்னே ஒரு பாட்டிலும் இறைவனுடைய புகழுக்கும், கூற்றுவனால் உண்டாகும் துயருக்கும் தொடர்பைக் காட்டுகிறார். முன்பு கற்கவேண்டுமென்பதைச் சொன்னார். இப்போது பார்க்கும் பாட்டில், கற்று மனனம் செய்யவேண்டுமென்று சொல்கிறார். இனி வரும் ஒரு பாட்டில் எதைக் கற்கக் கூடாது, எதைக் கற்கவேண்டுமென்று விதி, விலக்கு இரண்டையும் சொல்கிறார்.

**''கிழியும் படியடற் குன்றுஎறிந் தோன்கவி கேட்டுஉருகி**
**இழியும் கவிகற் றிடாதுஇருப் பீர்எரி வாய்நரகக்**
**குழியும் துயரும் விடாய்ப்படக் கூற்றுவன் ஊர்க்குச்செல்லும்**
**வழியும் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே.''**

''நான் திருப்புகழைப் படித்து, அப்படிப் படிக்கும் திருப் புகழை மனத்திலே வைத்துப் போற்றுவேன். அதனுடைய பயனாக யமன் வரும்போது நீ என்னைக் காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டிக் கொள்ளும் பாட்டை இப்போது கேட்கிறோம்.

படிக்கும் திருப்புகழ் போற்றுவன்; கூற்றுவன் பாசத்தினால்
பிடிக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய்.

# 3

இனி அவர் சில கதைகளைச் சொல்கிறார். சொல்கிற கதையில் கருத்து இல்லாமல் சொல்வது அவருக்கு வழக்கம் அன்று. புராணக் கதைகளே கருத்துடையவை. புராணம் என்று சொல்லுக்குப் பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமை யாகவும் இருப்பவை என்று பொருள். கதை நிகழ்ந்த காலம் பழையது. அதனால் பயன் உண்டாகும் காலம் புதியது. அப்படி யுள்ள சில புராணக் கதைகளை இங்கே நினைப் பூட்டுகிறார்.

அருணகிரிநாதர் முருகப் பெருமானுடைய துதியாக அலங் காரத்தைச் செய்தாலும் ராமனும், கண்ணனும், சிவ பெருமானும், உமையும் இடையே வந்து சேருவார்கள். அவருடைய திருவாக்கில் வராத தெய்வங்கள் இல்லை. முன்பு திருவிக்கிரமாவதாரம் எடுத்த திருமாலைப் பார்த்தோம். பிறகு கடல் அடைத்த ராமபிரானைப் பார்த்தோம். இப்போது கண்ணபிரானை நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறார். காளிங்க நர்த்தனம் செய்தவருடைய மருகன் முருகன் என்று சொல்கிறார்.

## காளிங்க நர்த்தனன்

பெரும் பாம்பில் நின்று
நடிக்கும் பிரான் மருகா!

கண்ணபிரான் ஆகிய மாமனுக்கு மருமகனே என்று சொல் கிறார். மகாகவிகள் தாம் சொல்கிற சொல்லைப் பொருள் உடைய தாகச் சொல்வார்கள். ''நான் திருப்புகழ் படிப்பேன். படித்து மனனம் பண்ணுவேன். யமன் தன் பாசத்தினால் என்னைப் பிடிக்க வரும்போது நீ வந்து அஞ்சல் என்பாய்'' என்று முதல் பகுதியில் சொன்னவர், அடுத்துக் காளிங்க நர்த்தனக் கண்ணபிரானைச் சொல்லக் காரணம் என்ன? அதைச் சற்றே இங்கே பார்க்கலாம்.

## பாம்பும் படமும்

திருப்புகழ் பாடுவதற்குக் காரணம் மனம் ஒருமுகப்பட வேண்டுமென்பதுதான். மனத்தின் சலனம் ஒழிந்தால் அது ஒரு முகப்படும். நாம் படிக்கிற பாட்டு மனத்தில் பதிய வேண்டுமானால் மற்றொன்றை நினைக்காமல் அதில் ஒன்று பட வேண்டும். எப் பொழுதும் சுழன்று கொண்டே இருக்கும் மனத்தை ஓரிடத்தில் நிலையாக நிறுத்த வேண்டுமானால் அதை வேறு ஒன்று அமுக்கிக் கொண்டிருக்க வேண்டும். பறக்கிற காகிதத்தின் மேலே கனமான பொருளை வைக்கிறோம் அல்லவா? அப்படி, எப்போதும் பறந்து கொண்டிருக்கிற மனத்திலே இறைவன் திருவடி படிந்தால் அது ஒருமுகப்படும்.

இப்படியெல்லாம் நினைந்து அருணகிரியார் கண்ணபிரா னுடைய திருவிளையாடலை நினைக்கிறார். அவன் காளிங்க நர்த்தனம் செய்தான். ஐந்து தலை நாகத்தின் மீது ஒரு காலால் நின்று கொண்டு நடனம் செய்தான். அப்போது பாம்பின் வாலை யும் ஒரு கையில் பிடித்துக் கொண்டிருந்தான். அந்தப் பாம்பு தலையாடாமல், வால் ஆடாமல் திணறிற்று. தலையாட்டத்தை விட வாலாட்டம் மிகப் பெரிது. அதனால் அதையும் கையால் பிடித்துக் கொண்டான். தலையை ஆட்டாமல் இருக்கக் காலால் அமிழ்த்திக் கொண்டிருந்தான்.

சாரைப் பாம்புக்கு வாலில் விஷம், நாகப் பாம்புக்குத் தலையில் விஷம் என்பார்கள். தலையிலும் வாலிலும் விஷம் உடைய பெரும் பாம்பு காளிங்கன். அதனுடைய நஞ்சு அந்தப் பொய் கையையே நச்சுப் பொய்கையாக்கிவிட்டது. அந்தப் பொய்கையில் உள்ள நீர் மாத்திரம் அல்ல, கரையிலுள்ள மரங்கள் எல்லாமே அந்த நஞ்சினாலே பொசுங்கிப் போய்விட்டன. காளிங்கனின் மூச்சுப்பட்ட இடங்கள் நாசமாகிக் கொண்டிருந்தன. அந்தப் பாம் போடு யாராவது விஷப்பரீட்சை செய்வார்களா? முருகனுடைய மாமன் அதன்மேல் நின்று ஆனந்தக் கூத்தாடினான்!

நம்முடைய மனம் காளிங்கன். ஐந்து பொறிகளாகிய படங் களின் வாயிலாக அது நஞ்சைக் கொப்புளிக்கிறது. மனம் என்னும் காளிங்கன் நஞ்சு கொப்புளிக்காமல் இருக்க வேண்டு மென்றால் இறைவன் அதன்மேலே நின்று கூத்தாட வேண்டும். வாலையும், தலையையும் ஆட்டிக் கண்ட கண்ட இடங்களில்

எல்லாம் நஞ்சைப் பரப்புகிற பாம்பின் மேலே இறைவன் திருவடி பட்டால் போதும்; அவற்றை ஆட்ட முடியாமல் அது நிற்கும்; ஒருமுகப்படும். இந்தத் தத்துவத்தை உள்ளடக்கியது காளிங்க நர்த்தனம். ''பெரும் பாம்பின் மீது நின்று ஆனந்தத் தாண்டவம் ஆடிய கண்ணபிரானின் மருகன் அல்லவா நீ?'' என்று எடுத்துச் சொல்கிறார் அருணகிரியார்.

பெரும் பாம்பில் நின்று
நடிக்கும் பிரான் மருகா!

## மயிலின் இயல்பு

**க**ண்ணபிரானுடைய மருமகனே என்று முருகனைப் பார்த்துச் சொன்னவுடன் முருகப் பெருமானின் வாகனம் அவருக்கு நினைவு வருகிறது. பாம்பின்மீது நின்று கண்ணபிரான் மாத்திரமா நர்த்தனம் செய்தார்? மயில்கூட இந்தக் காரியத்தைச் செய்கிறது. அதுவும் பெரும்பாம்பில் நின்று நடிப்பதுதான். பாம்புக்கு ஜன்மப் பகை யாகிய மயில் முருகப் பெருமானின் வாகனம். அது தன் காலடி யில் அசைய முடியாமல் பாம்பை அமிழ்த்திக் கொண்டிருக்கிறது. இதை நீங்கள் படத்தில் பார்த்திருப்பீர்கள். எம் பெருமானின் வாகனமே பாம்பின் மீது நடிக்கிறது என்ற நினைவு வந்தது. உடனே அந்த மயில் எத்தகையது என்று சொல்கிறார் அருணகிரியார்.

## சூரனது நடுக்கம்

கொடும் சூரன் நடுங்க வெற்பை
இடிக்கும் கலாபத் தனிமயில் ஏறும் இராவுத்தனே!

சரவணப் பொய்கையில் முருகன் அவதாரம் செய்திருக்கிறான் என்று கேட்டுச் சூரன் நடுங்கினான். அந்தக் குழந்தை எப்போதும் மயில் மீதே திரிகிறான் என்ற செய்தி அவன் காதுக்கு எட்டியது. மயில் சாமானியப் பறவைதானே என்று முதலில் எண்ணினான். ஆனால் அவனிடம் வந்தவர்கள், ''அவன் மயிலை வெறும் பறவை என்று சொல்லலாமா? அதற்கு வன்மையான காரியங்களைச் செய்ய முடியாது என்று நினைக்க கூடாது. அது பறந்து போகும் போது அதன் அருகில் ஒரு மலை இருந்தது. அந்த மலை இடிந்து விட்டது. அந்த மயில் இறக்கைகள் அடித்துக் கொண்டாலே மலைகள் தூள் தூளாகப் போகின்றன'' என்று சொன்னார்கள்.

அப்போது சூரன் மனமும் இடிந்து விட்டது. ''நமக்கு யமனாக அவதாரம் செய்திருப்பவன் இந்த மயிலின் மீது ஏறி வருகிறானாம்'' என்று எண்ணியவுடன் தன் பலத்தை இழந்து நடுங்கினான்.

பொல்லாத காரியங்களைச் செய்பவர்கள் எத்தனை பலம் உடையவர்களாக இருந்தாலும் நடுங்கிக் கொண்டிருப்பார்கள். திருடனைப் பாருங்கள்; எப்போது போலீஸ்காரன் பிடித்து விடுவானோ என்று ஒவ்வொரு கணமும் உள்ளத்திற்குள் செத்துக் கொண்டிருப்பான். வெளிக்குத் தைரியம் உள்ளவனாகப் பேசலாம். இருந்தாலும் உள்ளம் பட்படென்று அடித்துக் கொண்டிருக்கும். திருடன் பலசாலியாக இருப்பான். அவனைப் பிடித்த போலீஸ்காரன் நோஞ்சையாக இருந்தாலும் அவனிடம் திருடன் பிடிபடுவதற்குக் காரணம் திருடன் மனத்திலுள்ள நடுக்கம். யானையைச் சிங்கம் வெல்கிறது அல்லவா? முருகனின் அழுகைக் குரல் கேட்டவுடன் அச்சத்தால் அழுதவன் சூரன். கோல மயில்மீது இப்போது ஏறி வருகிறான் என்று கேட்டவுடன் திடுக்கிட்டான்; நடுங்கினான்.

இவ்வாறு கற்பனை பண்ணி ஒரு காட்சியைச் சொல்கிறார் அருணகிரியார்.

எம்பெருமான் சூரனைச் சங்காரம் செய்யப் போகிறான். சங்காரம் நடப்பதற்கு முன் கொடுந்தீமை புரிந்து வந்த சூரன் பலம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது. கடைசியில் சூரசங்காரம் நடக்கிறது. திண்மையான மலையை உடைப்பதற்குத் துளை போட்டு மருந்தைக் கெட்டித்து வெடிப்பார்கள். பெரும் பெரும் பாறையாக விரிசல் கண்டவுடன் பின்னர் உடைப்பார்கள். அவ்வாறு திண்மையாக இருந்த சூரன், கொடுமையே உருவாக இருந்த சூரன், நாசம் அடையவேண்டும். அதற்கு முன்பு அவன் பாறை போன்ற உள்ளத்தில் தைரியத்தை உடைத்து, அவனை நடுங்கச் செய்து, படைகளை அழித்துப் பிறகு அவனை அழிக்கிறான் ஆண்டவன். மலைபோல் உறுதியாக இருக்கிற அவனை, ''எம்பெருமான் கோல மயில்மீது வருகிறான். அந்த மயில் இறக்கையை அடித்துக் கொண்டு பறந்தது. மலை இடிந்து விழுகிறது'' என்ற செய்தியைக் கேட்டு உள்ளத்தின் உறுதி இடிய, நடுங்க வைக்கிறான் எம்பெருமான்.

**கொடுஞ்சூரன் நடுங்க வெற்பை**
**இடிக்கும் கலாபத் தனிமயில்.**

*வெற்பு – மலை. கலாபம் – தோகை.*

## *மென்மையும் வன்மையும்*

*இதில் ஒரு நுட்பமான சிறப்பு இருக்கிறது. மெத்தென்ற தோகையை உடையது மயில். அது சிறகை அடித்துக் கொண்டால் மலை இடிந்துவிடுமா என்று கேட்கலாம். சூரியன் தோன்றினால் தாமரை மலர்கிறது. அதை மலரச் செய்யும் சூரியனே புழுக்களையும் பூச்சிகளையும் சாக அடிக்கிறான். அதே போன்று இறைவன் திருவருள் பக்தர்களுக்கு மென்மையானதாக, இன்பம் தருவதாக இருக்கிறது. யார் இறைவனை நினையாமல் அடியார்களுக்குத் தீங்கு செய்கிறார்களோ அவர்களுக்கு அதே அருள் வன்மையாகத் துன்பம் அளிப்பதாகத் தோன்றும். இது மயிலின் செயலால் தெரிகிறது. ஆண்டவனுடைய அடியார்களுக்கு மெத்தென்று இருக்கிற மயில் ஆண்டவனுடைய திருவருளை நினையாமல் வாழ்கிறவர்களுக்குக் கடுமையாக இருக்கிறது. தன் தோகையை அடித்துக் கொள்வதன் மூலம் மயில் இதைக் காட்டுகிறது. தோகையை அடித்துக் கொண்டு வரும்போது அடியார்கள் எல்லாம் உவகை அடைகிறார்கள். மலை ஆடுகிறது; இடிகிறது. அதைக் கண்டு சூரன் உள்ளம் நடுங்குகிறது.*

*முன்பு ஒரு பாட்டில் மயிலின் வேகத்தை விரிவாகப் பாடியிருக்கிறார் அருணை முனிவர். (11)*

***“குசைநெகி ழாவெற்றி வேலோன் அவுணர் குடர்குழம்பக்***
***கசையிடு வாசி விசைகொண்ட வாகனப் பீலியின் கொத்து***
***அசைபடு கால்பட் டசைந்தது மேரு; அடியிடஎண்***
***திசைவரை தூள்பட்ட; அத்தூளின் வாரி திடர்பட்டதே.”***

*இங்கே முருகனை, ‘இராவுத்தனே’ என்று சொல்கிற அருணகிரியார், முன்பும் “கண்டுண்ட சொல்லியர்” என்னும் பாட்டில் (37),*

***“வெஞ் சூர்க்கொன்ற ராவுத்தனே”***

*என்று சொல்லியிருக்கிறார். யானையைப் பழக்குகிறவனை மாவுத்தன் என்றும், குதிரையைப் பழக்குபவனை இராவுத்தன் என்று சொல்வார்கள்.*

## மனம் ஒருமுகப்படுதல்

*கலாபத் தனி மயில் ஏறும் இராவுத்தன் நம் மனமாகிய பாம்பின் மீது மயிலை நடத்தினால் மனம் அடங்கிவிடும்; ஒரு முகப்பட்டுவிடும். மனத்தில் அமைந்திருக்கிற, ஐந்து பொறிகளின் வழியாகச் செல்கிற ஆசை அடங்கிவிடும். இதற்குத்தக்க வழி என்னவென்றால் இறைவன் திருப்புகழை மனனம் செய்வதுதான். இவ்வாறு மனத்தை ஒருமுகப்படுத்தப் பழகிக் கொண்டால், திருப்புகழைப் படித்துப் போற்றப் பழகிக் கொண்டால், காலனால் வருகிற அச்சம் வராது. இத்தகைய அருமையான கருத்தை இந்தப் பாட்டுச் சொல்கிறது.*

★

படிக்கும் திருப்புகழ் போற்றுவன்;
　　கூற்றுவன் பாசத்தினால்
பிடிக்கும் பொழுதுவந்து அஞ்சல்என்
　　பாய்;பெரும் பாம்பில் நின்று
நடிக்கும் பிரான்மரு கா!கொடும்
　　சூரன் நடுங்கவெற்பை
இடிக்கும் கலாபத் தனிமயில்
　　ஏறும் இராவுத்தனே!

*(படித்து வரும் உன் திருப்புகழை மனத்தில் வைத்துப் பாதுகாப்பேன்; யமன் கயிற்றினால் எறிந்து என்னைப் பிடிக்கும் மரண சமயத்தில் நீ எழுந்தருளி வந்து, 'பயப்படாதே'' என்று திருவாய் மலர்ந்தருளுவாயாக: பெரிய பாம்பாகிய காளிங்கன் மேலே நின்று நடனம் செய்யும் கண்ணபிரானுடைய மருமகனே! கொடுமையான சூரன் நடுங்கும்படியாக மலைகளை இடிக்கும் தோகையையுடைய ஒப்பற்ற மயில்மீது ஏறிப் பவனிவரும் குதிரை வீரனே!*

*போற்றுவன் – மனனம் செய்து பாதுகாப்பேன்; ''படியில் கல்வி விரும்பினோன் பாடம் போற்றும் அதுபோல'' (பிரபுலிங்க லீலை) என்பதில் போற்றும் என்ற சொல் இப்பொருளில் வந்தது. கூற்றுவன் – யமன். பாசம் – கயிறு. அஞ்சல் – அஞ்சாதே. பெரும்பாம்பு – காளிங்கன். பிரான் – கண்ணன். கலாபம் – தோகை; மயிலின் சிறகு. தனி–ஒப்பற்ற. இராவுத்தன் – குதிரையை அடக்கி ஓட்டும் வீரன்.)*

# பொதிசோறும் துணையும்

## 1

அருணகிரி நாதர் இறைவனிடம் பக்தி செய்யவேண்டுமென்று சொல்வதோடு அற உபதேசங்களையும் சில சமயங்களில் சொல் வார். இப்போது இந்தப் பாடலில் அறத்தைப் பற்றிய நினைவை நமக்கு உண்டாக்குகிறார்.

### *அறத்தின் தலைமை*

அறம் எல்லோரும் செய்வதற்குரியது. அறத்தைச் செய்வதற்குப் பொருள் கருவியாக இருக்கிறது. அறத்தின் வழியாக வந்த பொருளே மீட்டும் அறத்தைச் செய்வதற்குரிய கருவியாகும். அறத்தினின்றும் வழுவிய பொருள் பொருளாகாது. அப்படியே இன்பம் அறத்தோடு பொருந்தி வரவேண்டும். அறத்தைச் செய்வதற்கு ஏற்ற வாழ்க்கைத் துணைவியாகிய மனைவியோடு பெறும் இன்பமே இன்பம். அறத்தின் வழுவிய இன்பம் இன்ப மாகாது. ஆகவே அறம் பொருள் இன்பம் என்ற மூன்றிலும் அறம் ஜீவனைப் போல இருப்பது. அறம் என்பது நாம் செய்ய வேண்டியவை இன்ன, செய்யக் கூடாதவை இன்ன என்று தெரி விப்பது. விதி, விலக்கு என்று சொல்வார்கள். கடமை, கடன், ஒழுக்கம், ஆசாரம் என்று சொல்லப்படுவன எல்லாமே அறம்.

### *அறத்தின் வகை*

அறம் என்பதற்குப் பகுதி அறு. இன்ன இன்னது செய்ய வேண்டுமென்று வரையறுப்பது அறம். இது செய்யக் கூடா தென்று வரையறுப்பதும் அதுவே. நம்முடைய கடமைகளை எல்லாம் வேதம் முதலிய நூல்களும் பெரியவர்களும் வரையறுத் திருக்கிறார்கள். அப்படி வரையறுத்த நெறியே அறநெறி என்று சொல்லப்பெறும். ஒழுக்கம், வழக்கு, தண்டம் என்று அந்த அறம்

மூன்று வகைப்படும் என்ற சொல்வார்கள். இந்த மூன்றிலும் மிகவும் முக்கியமானது ஒழுக்கம். செய்ய வேண்டியவையும், செய்யக் கூடாதனவுமாகிய அறத்தின் பகுதிகளைத் திருவள்ளுவர் தம் நூலில் சொல்லி இருக்கிறார். அறத்துப்பால் என்ற தலைப்பில் முப்பத்தேழு அதிகாரத்தில் அறத்தின் பகுதிகளை முறையாகச் சொல்கிறார். மனிதன் வாழும்போது எவற்றைச் செய்யவேண்டும், எவற்றைச் செய்யக் கூடாது என்று வரையறையாகச் சொல்லி யிருக்கிறார். எல்லாவற்றுக்கும் ஜீவனைப் போல இருப்பது ஈகை, எல்லா அறங்களிலும் தலையாயது ஈகை. இது எப்படித் தெரிகிறது என்பதைச் சற்றுப் பார்க்கலாம்.

## ஔவையின் சுருக்கப் பேச்சு

ஒரு சமயத்தில் ஔவைப் பாட்டியைச் சில புலவர்கள் வணங்கி, "பாட்டி, நூல்கள் யாவும் தர்மார்த்த காம மோக்ஷம் என்ற நான்கையும் சொல்கின்றன. ஒவ்வொன்றைப் பற்றியும் விரிவாகப் பேசுகின்றன. அந்த நூல்களை எல்லாம் தெரிந்து கொள்வதற்கு வாழ்நாள் போதாது. சுருக்கமாக தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். நீங்கள் சுருக்கிச் சொல் வதில் வல்லவர்கள் அல்லவா?" என்று கேட்டார்கள்.

பாட்டி சுருக்கமான எதையும் சொல்வதில் வல்லவள். பெருக்க மாகவும் சொல்வாள். பெருக்கமாகச் சொல்வதற்கு அறிவு நுட்ப மாக இருக்கவேண்டுமென்பது இல்லை. சுருக்கிச் சொல்லத்தான் நுட்பம் வேண்டும். பெரிய அம்மிக் கல்லைப் பொளிபவனைக் காட்டிலும் வைரக்கல்லில் வேலை செய்பவனுக்கு நல்ல திறமை வேண்டும் அல்லவா?

## "வரப்புயர'

சோழனுக்கு முடிசூட்டு வைபவம் நடந்தது. பெரிய புலவர்கள் எல்லாம் - ஔவைப் பாட்டியும்கூட - வந்திருந் தார்கள். சோழனை வாழ்த்தி அப்புலவர்கள் பல பாட்டுக்களை எழுதி வந்திருந்தார்கள். ஆனால் ஔவைப்பாட்டி எதையும் எழுதி வரவில்லை. எப்படியும் அவள் வாழ்த்துவாள் என்று யாவரும் எதிர்பார்த்தார்கள். நினைத்தால் வேகமாகப் பாடக்கூடிய வன்மை உடையவள். ஆகையால் திடீரென்று பல பாடல்களைப்

பாடக்கூடும் என்று நினைத்தார்கள். அவரவர்கள் தங்கள் பாட்டை வாசித்தார்கள். ஆனால் பாட்டியோ, ''வரப் புயர'' என்று சொல்லி நிறுத்தினாள். இந்தக் காலமாக இருந்தால் பாட்டிக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லியிருப்பார்கள். பழங்காலத்தில் பெரியவர் யாரேனும் ஒன்று சொன்னால் அதை மறுத்துக் கேள்வி கேட்கும் வழக்கம் இல்லை. பெரியவர்களைப் பெரியவர்கள் என்று தெரிந்துகொண்ட பிற்பாடு அவர்கள் சொல் வதில் நம்பிக்கை வைத்து அன்போடு கேட்பார்கள்.

ஆகவே புலவர்கள் பாட்டியிடம் சென்று, ''பாட்டி, இன்று தான் எங்கள் அறியாமை வெளிப்பட்டது'' என்று சொன்னார்கள்.

''எதற்காக இப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று அந்தப் புலவர்களைப் பாட்டி கேட்டாள்.

''நீங்கள் அரசவையில் வரப்புயர என்று சொன்னீர்கள். முடிசூட்டு வைபவத்தில் இப்படிச் சொல்வதற்குக் காரணம் என்ன என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு விளங்க வில்லை'' என்றார்கள்.

பாட்டி புன்னகை பூத்தாள்.

''நீங்கள் சொன்ன தொடருக்குப் பொருளை விளக்க வேண்டும்'' என்று புலவர்கள் கேட்டுக் கொண்டார்கள். பாட்டி விளக்கத் தொடங்கினாள்.

''வரப்புயர என்று நான் சொன்னேன். வரப்பு வயல்களில் இருக்கும். வயல்களில் வரப்பு அமைப்பது நடப்பதற்காக அன்று. நீர் தேங்கி நிற்பதற்கு வரப்பு அமைக்கிறார்கள். ஆகவே வரப்பு உயர்ந்தால் நீர் உயர்ந்து தேங்கும். நீர் உயர்ந்தால் வயல்களில் பயிர் செழித்து உயரும். பயிர்கள் செழித்தால் நல்ல விளைச்சல் ஏற்படும். நல்ல விளைச்சலினால் குடிமக்கள் பசியின்றி உண்டு வாழ்வார்கள்; மேலும் வளங்களைச் சேர்த்துக் கொள்வார்கள். குடிகள் உயர்ந்தால் கோன் ஆகிய அரசன் உயர்வான். அரசனுடைய உயர்வுக்கு மற்ற மற்றக் காரணங்கள் இருந்தாலும் அடிப்படை யான காரணம் நீர்வளமும் நில வளமும் மிகுதியாவது தான்.''

இத்தனை கருத்தை வைத்து வரப்புயர என்று சொன்னாள் பாட்டி.

## மற்றொரு பொருள்

அவள் சொல்லாத ஒரு பொருளும் உண்டு. வரப்பு என்பது வரம்பு என்பதன் விகாரம். பள்ளிக்கூடத்தில் நம் பிள்ளைகள் படிக்கிறார்கள். பழங்காலத்தில் படித்தவர்கள் இப்போதுள்ள படிப்பைப் பார்த்து, ''இந்தக் காலத்துப் படிப்பு என்ன ஐயா வரவர மட்டமாகிவிட்டது. 'ஸ்டாண்டர்டு' இல்லை'' என்று சொல்கிறார்கள். 'ஸ்டாண்டர்டு' என்பது வரம்பு. மனிதனுடைய லட்சிய வரம்பு உயரவேண்டுமென்பதையும் பாட்டி அந்த ஓர் அடியில் குறிப்பிட்டாள். மனிதனுடைய லட்சியம் உயர உயர அவனது வாழ்க்கை அநுபவங்கள் உயரும். அவனும் உயர்ந்து வருவான். வயல்களில் உள்ள வரப்பு உயர வேண்டும் என்பதோடுகூட மனிதனுடைய வாழ்க்கையின் லட்சிய வரம்பும் உயரவேண்டுமென்று ஔவை வாழ்த்தியதாகக் கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை.

## அணுவும் அலையும்

ஔவைப் பாட்டி சுருக்கமாகப் பேசுகின்றவள், பாடுகிறவள் என்பதற்கு மற்றோர் உதாரணம் உண்டு. திருவள்ளுவர் குறளின் அருமை பெருமைகளை நன்கு உணர்ந்த பெரியவர்கள் அதனைப் பாராட்டி ஒவ்வொரு பாட்டுப் பாடினார்கள். திருவள்ளுவ மாலை என்ற பெயரோடு அவற்றைத் தொகுத்து வைத்திருக்கிறார்கள். ஔவைப் பாட்டியும் ஒரு பாட்டுப் பாடினாள். ஔவைக்கு முன்பு இடைக்காடர் என்பவர் ஒரு பாட்டுப் பாடினார். மிகச் சிறிய உருவத்தில் மிகப் பெருக்கமான பொருளைத் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார் என்று சொல்ல வந்தவர்,

> **''கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
> குறுகத் தறித்த குறள்''**

என்று பாடினார். கடுகைத் துளைத்து அதற்குள் ஏழு கடல்களைப் புகட்டின மாதிரி திருக்குறள் இருக்கிறது என்றார். ஔவைப் பாட்டி இன்னும் நுட்பமாகச் சொன்னாள். கடுகு என்று சொல்லக் கூடாது. அது கண்ணுக்குத் தெரிவது. பின்னும் நுட்பமாகச் சொல்லவேண்டும் என்று எண்ணினாள்.

***"அணுவைத் துணைத்தேழ் அலையைப் புகட்டிக்***
***குறுகத் தறித்த குறள்"***

*என்று பாடினாள். அணுவைத் துளைத்தால் அணுகுண்டு விளையும் என்று பாட்டிக்குத் தெரியாதோ என்னவோ? மிகவும் நுட்பமான கருத்துக்களை வைத்துத் திருக்குறளைப் பாடியிருக்கிறார் வள்ளுவர் என்பதற்கு அந்த அருமையான உவமையை ஔவை எடுத்தாண்டாள்.*

## *உறுதிப் பொருள்கள்*

*இப்படிச் சுருக்கமாகப் பாடுகிற ஆற்றல் பெற்ற பாட்டி மனிதனுக்கு உரிய உறுதிப் பொருள்கள் நான்கையும் சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்று புலவர்கள் கேட்டபோது ஒரு பாட்டுப் பாடினாள்.*

***"ஈதல் அறம்"***

*என்று எடுத்தவுடன் விளக்கினாள். தர்மம் செய்ய வேண்டுமானால் பொருள் வேண்டும். பொருளை எவ்வாறு ஈட்டுவது?*

***"தீவினை விட்டு ஈட்டல் பொருள்"***

*என்று சொன்னாள். பணம் ஈட்டுவதற்கு இந்தக் காலத்தில் எத்தனையோ தந்திரங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். எப்படியாவது பொருள் கிடைத்தால் போதும் என்ற ஒரே நோக்கத்தோடு இப்போது பொருளை ஈட்டுகிறார்கள். ஆனால் பழங்காலத்தில் இப்படி ஈட்டுவதைப் பொருளாக நினைக்கவில்லை. நல்ல வழியில் ஈட்டிய பொருளையே பொருள் என்று சொன்னார்கள். நல்ல வழியாவது அறநெறி. அறநெறியில் ஈட்டிய பொருளே பின்னும் அறம் செய்வதற்குத் தகுதியானது. இந்தப் பண்பை நினைவு கொண்டு ஔவை பொருளைப் பற்றிச் சொன்ன பிறகு காதலைப் பற்றிச் சொன்னாள்.*

"காதல் இருவர் கருத்து ஒருமித்து – ஆதரவு
பட்டதே இன்பம்."

## *உயிரோடு ஒட்டிய காதல்*

*இது ஒரு சூத்திரம் போல அமைந்தது. கணவனும் மனைவியும் வாழ்கின்ற இன்ப வாழ்க்கைக்கு மிக அருமையான*

இலக்கணத்தை இந்த அடி சொல்கிறது. உலகத்திலுள்ள எல்லாப் புலவர்களுமே காதல் இன்பத்தைப் பற்றிக் கருதி இருக்கிறார்கள்; பாடி இருக்கிறார்கள். இந்த உலகத்தில் ஒருவனும் ஒருத்தியும் ஒன்று பட்டுப் பழகுவதே இன்பம் என்று யாவரும் அறிவார்கள். அப்படிப்பட்ட வாழ்க்கையில் உடம்பு இணைவது மாத்திரம் அன்று; உள்ளமும் இணைய வேண்டுமென்று வற்புறுத்திப் பேசு வார்கள். கருத்து ஒருமித்து ஆதரவு படும் இன்பத்தை உலகத் திலுள்ள பெரியவர்கள் எல்லோருமே சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் தமிழ்நாட்டில் காதலைப் பற்றிச் சொல்கிற நுட்பம் ஒன்று உண்டு. உடல் இணைவது, உள்ளம் இணைவது போலவே உயிரோடு ஒன்றுபட்டு அமைவது காதல் என்பது அவர்களுடைய கருத்து. பிறவிதோறும் காதல் தொடர்ந்து வரும் என்ற உண்மையை அவர்கள் பல இடங்களில் வற்புறுத்திப் பேசி இருக்கிறார்கள். ஒளவைப் பாட்டி,

**"காதல் இருவர் கருத்து ஒருமித்து – ஆதரவு**
**பட்டதே இன்பம்"**

என்று சொன்னாள். "கருத்து ஒருமித்த பிற்பாடுதானே காதல் உண்டாக வேண்டும்? காதல் என்பது கண்ணால் கண்டு, கருத்து ஒருமித்து ஆதரவு படும்போது உண்டாவது அல்லவா? முதலில் காதல் என்று சொல்கிறாளே" என்று நமக்குத் தோன்றலாம். அந்தச் சொல்லிலேதான் நம் நாட்டுக் காதல் வாழ்க்கையின் நுட்பத்தைப் பாட்டி அமைத்திருக்கிறாள். பல பிறவியிலே ஒன்றுபட்டுக் காதல் உடையவர்கள், இந்தப் பிறவியிலும் காதல் கொண்டு கருத்து ஒருமித்து அன்பு செய்வதே இன்பம் என்று பொருள் கொள்ளவேண்டும்.

## பிறவிதோறும் வரும் காதல்

சங்ககாலத்து நூல்களிலே, ஒருவனும் ஒருத்தியும் செய்கிற காதல் பல பிறவியில் தொடர்ந்து வருகிறதென்று புலவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**"இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீயா கியர்எம் கணவனை;**
**யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே"**

என்பது குறுந்தொகையில் வரும் பாட்டு. சிவபெருமானே பாடிய தாகச் சொல்லும் பாட்டு ஒன்று குறுந்தொகையில் உண்டு.

**"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி,**
**காமஞ் செப்பாது கண்டது மொழிமோ;**
**பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்**
**செறிஎயிற்று அரிவை கூந்தலின்**
**நறியவும் உளவோநீ அறியும் பூவே"[1]**

என்பதில்,

'பயிலியது கெழீஇய நட்பு'

என்று காதலை அவர் சொல்கிறார். பயிலியது கெழீஇய நட்பு – பிறவிதோறும் இணைந்து பழகிய அன்பு.

ஆகவே பிறவிதோறும் வருகின்ற காதல் காரணமாகத் திருவருள் கூட்டிவைக்க ஒருவனும் ஒருத்தியும் கண்டு இந்தப் பிறவியில் தொடர்பு கொள்கிறார்கள். யாரிடமும் காதல் கொள்ளாத ஒருவன், எத்தனையோ மகளிர்களைக் கண்டாலும் அவர்கள் அழகிகளாக இருந்தாலும், அவர்களிடத்தில் அவன் உள்ளம் செல்வது இல்லை. பிறவிதோறும் தொடர்ந்து வந்த தொடர்பு உடையவள் ஒருத்தியிடம் மாத்திரம் அவன் மனம் செல்லுகிறது. அந்த ஒருத்தி வரும்போது இந்தப் பிறவியில் பழக்கம் இல்லாவிட்டாலும் உயிரோடு ஒட்டிய தொடர்பு இவன் அவளைப் பார்க்கச் செய்கிறது. அவள் இவனைப் பார்க்கிறாள். இரண்டு பேர்களுடைய உள்ளமும் ஒன்றுபடுகின்றன. அவள் இவனுக்காகவே இந்தப் பிறவியில் பிறந்து காத்துக் கொண்டிருக் கிறாள். இவனும் அவளுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறான். இரண்டுபேரும் முன்னைத் தொடர்பு காரணமாகத் தம்மை அறியாமல் ஒருவருக்காக ஒருவர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பக்குவத்தினால் கண்டவுடனேயே அவர்கள் ஒன்று படுகின்றனர். உயிருக்கும் உயிருக்கும் உள்ள காதல் இது.

---

1. பூந்தாதைத் தேரும் வாழ்க்கையையுடைய அழகிய சிறகையுடைய தும்பியே, என்னிடமுள்ள நட்பை எண்ணி அதற்கேற்றபடி சொல்லாமல் நீ உணர்ந்ததைச் சொல், பல பிறவிகளிலும் பயின்று பொருந்திய நட்பையும், மயிலின் மென்மையையும், நெருங்கிய பற்களையும் உடைய என் காதலியின் கூந்தலைப் போல நீ அறியும் மலர்களில் மணம் உடையவையும் உண்டா?

உடம்புகளுக்கும் உள்ளங்களுமிடையே உள்ள தொடர்பு அந்த மூலக் காதலினுடைய விளைவுகளே.

இவற்றையெல்லாம் எண்ணிய பாட்டி பிறவிதோறும் காதல் உடைய இருவர் இந்தப் பிறவியில் மனம் ஒத்துக் காதல் செய்வது இன்பம் என்று சொன்னாள்.

**"காதல் இருவர் கருத்து ஒருமித்து – ஆதரவு
பட்டதே இன்பம்."**

இந்த மூன்றிலும் பற்றற்று இறைவனுடைய திருவருளைப் பெறுவது வீடு என்று முடித்தாள்.

**"பரனைநினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."**

## அறத்தின் இலக்கணம்

இந்தப் பாட்டில் அறத்தின் இலக்கணத்தைச் சொல்ல வந்த வள் மிகச் சுருக்கமாக "ஈதல் அறம்" என்று சொல்லிவிட்டாள். ஈதல் – கொடுப்பது. எதைக் கொடுப்பது? ஆடை கொடுத்தாலும், ஆபரணம் கொடுத்தாலும் உண்டி கொடுத்தாலும், உறங்கும் இடம் கொடுத்தாலும், யார் யாருக்கு எது எது வேண்டுமோ அதைக் கொடுத்தாலும் எல்லாம் ஈகைதான்.

அறச்செயல்கள் பலவகையானாலும் அவற்றுள் ஈகை சிறந்தது. அதுபோலவே பலவகையான ஈகைகளிலும் சிறந்ததாக ஓர் ஈகை இருக்கிறது. அறங்கள் முப்பத்திரண்டு வகை என்று சொல்வார் கள். அவை எல்லாவற்றுள்ளும் சிறந்தது அன்னதானம். அறத்தின் பகுதிகளில் சிறந்தது ஈகை என்றால், ஈகைப் பகுதிகளில் சிறந்தது பிறருடைய பசியைப் போக்க உண்டி அளிக்கும் ஈகையாகும்.

## சிறந்த தானம்

காஞ்சீபுரத்தில் எம்பெருமான் கொடுத்த இரு நாழி நெல் கொண்டு அம்பிகை முப்பத்திரண்டு அறங்கள் நடத்தியதாகச் சொல்வார்கள். அந்த முப்பத்திரண்டு அறங்களிலும் அன்னதானம் மிகச் சிறப்பாக நடந்தது.

எல்லா வகையான ஒழுக்கங்களுக்கும் மூலகாரணமாக இருப்பது உயிரும் உடம்பும் சேர்ந்த இந்த வாழ்க்கை. உயிரும் உடம்பும் சேர்ந்து அமைந்து இருப்பதனால்தான் உலகமே வாழ்கிறது. உயிர் தனித்து நில்லாது; உடம்போடு சேர்ந்தே நிற்கும்.

**''உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே''**

என்று சொல்வர் திருமூலர். இந்த உடம்பு சோற்றால் அடித்த சுவர். சோறு இல்லாவிட்டால் சோர்ந்துவிடும்.

## நெடுஞ்செழியன் வரலாறு

இந்த உண்மையை மறந்து வாழ்ந்தான் பாண்டியன் நெடுஞ்செழியன். அவன் எப்போதும் போரின் மீது நாட்டம் உடையவனாக, நெடுநாளாக வெற்றி மிடுக்கோடு அரசாட்சி செய்து வந்தான். ''அரசன் போர் புரிவதிலேயே நாட்டம் உடையவனாக இருக்கிறானே! நாட்டில் உள்ளோர் அமைதியாக வாழ்வதற்குரிய காரியங்களைச் செய்யவில்லையே!'' என்று மக்கள் பேசிக் கொண்டார்கள். போருக்கு வேண்டிய படைக்கலன்களைப் பெருக்குவதிலும், நால்வகைப் படைகளைக் கூட்டுவதிலுமே அவன் நோக்கம் உடையவனாக இருந்தான். 'குடி மக்கள் எவ்வாறு வாழ்க்கை நடத்துகிறார்கள்? நீர்வளம் நிலவளம் எப்படி இருக்கின்றன?' என்று ஆராய்ச்சி செய்யவில்லை. நாட்டில் இருந்த குளங்கள் மேடிட்டுப் போயின. ஏரிகளின் கரைகள் உடைந்திருந்தன. அதனால் நீர் தேங்கவில்லை. விளைவும் குறைந்து விட்டது. இந்த நிலையை அரசனிடத்தில் எடுத்துக் கூறும் தைரியம் யாருக்கும் வரவில்லை. கடைசியில் குடபுலவியனார் என்னும் நல்லிசைப் புலவர், எப்படியாவது இந்தச் செய்தியை அரசன் காதில் போட்டுவிட வேண்டுமென்று துணிந்தார்.

அவர் அரசனிடம் வந்து வாழ்த்துக் கூறினார். ''நான் சொல்லப் போகும் சில செய்திகளை மன்னன் கவனித்துக் கேட்க வேண்டும்'' என்று பணிவோடு விண்ணப்பித்துக் கொண்டார். ''சொல்லுங்கள். கேட்போம்'' என்றான் பாண்டியன். குடபுலவியனார் உலகியல் நன்கு தெரிந்தவர். அரசனுடைய வீரதீரப் பிரதாபங்களைச் சொல்லிக் கொண்டு வந்து இடையில் தாம் சொல்ல வேண்டியதையும் சொன்னார்.

"உலகிலுள்ள உயிர்கள் உடம்போடு வாழ்கின்றன" என்றார்.

"உம்" என்றான் பாண்டியன்.

"அந்த உடம்புகள் சோற்றால் வாழ்கின்றன. அந்தச் சோறு நிலமும் நீரும் சேருவதால் உண்டாவது. நிலமும் நீரும் சேர்ந்தால் நிறைய உணவு விளையும். உணவினால் நாட்டில் வாழும் மக்களுடைய உடம்புகள் காப்பாற்றப்படுகின்றன. மேலும் மேலும் மக்கள் பிறக்கிறார்கள். ஆகவே நீரையும் நிலத்தையும் ஓரிடத்தில் சேமிப்பவர்கள் நாட்டில் வாழும் மக்களது உடம்பிலே உயிர் தரிக்கும்படி செய்பவர்கள். நிலம் இருந்தால் போதாது. விதை விதைத்தாலும் போதாது. நிலத்தில் நீர் தேங்கச் செய்ய வேண்டும். அப்போதுதான் விதைத்த விதை முளைக்கும். மேடாக இருக்கும் நிலங்களைப் பள்ளமாக்கினால் தான் நீர் தேங்கும். யார் தண்ணீரைத் தேக்கி வைக்கிறார்களோ அவர்கள் உலகில் அழியாப் புகழைத் தேக்கிக் கொள்வார்கள்."

**"தட்டோ ரம்ம இவண்தட் டோரே**
**தள்ளா தோரிவண் தள்ளா தோரே"[1]**

என்று பாடி முடித்தார் புலவர்.

அப்படிச் சொன்ன பிறகுதான் அரசனுக்கு தன்னுடைய தவறு நன்றாகப் புலப்பட்டது. பிறகு ஆறு குளங்கள் முதலியவற்றைச் செப்பம் செய்யப்புகுந்தான். புலவர் பெருமான் அரசனுக்கு அவ்வாறு சொன்னதற்குக் காரணம் மக்கள் நன்றாக வாழவேண்டு மென்ற நோக்கந்தான்.

## பசித்துன்பம்

**உ**டம்பு வாழ்வதற்குச் சோறு மிக அவசியம். சோறு இல்லா விட்டால் பசிநோய் உண்டாகும். எல்லா நோய்களையும்விடப் பெரியது பசிநோய். அது வந்துவிட்டால் எல்லா வகையான அறங்களும், ஆசாரங்களும் அழிந்து போகின்றன.

சந்நியாசிகளையும் பசித் துன்பம் விடுவது இல்லை. பசி வந்துவிட்டால் அவர்களுக்கும் அறிவு மங்கிவிடும். எத்தனையோ

1. தட்டோர் – நீரைத் தடுத்தவர். இவண் – இவ்வுலகத்தில். தட்டோர் – புகழைத் தேக்கியவர்கள். தள்ளாதோர் – தேக்காதவர்கள்.

மக்கள் பசியினால் பிள்ளையை விற்றுப் பிழைக்கிறார்கள். சண்டைக் காலத்தில் ரங்கூன் முதலிய இடங்களிலிருந்து இந்தியாவுக்குப் பிள்ளை குட்டியோடு நடந்து வந்தார்கள் நடுவில் சோறு கிடைக்காமல பட்டினியால் வாடித் துவண்டபோது, குழந்தை களை எறிந்துவிட்டு வந்தார்கள். இது உண்மையான செய்தி. தாய்மார்களே தங்கள் பிள்ளைகளை விட்டுவிட்டு ஓடி வந்தார்கள். பசி தாய் அன்பையும் நசிக்கச் செய்துவிட்டது. ஊருக்கு வந்த பிறகு, "இப்படிச் செய்து வந்தேனே!" என்று அரற்றிக் கொண் டிருந்தார்கள். ஆனால் அப்போது இந்த நினைவு வரவில்லை.

சாமானிய மக்கள்தாம் இப்படி இருக்கிறார்கள் என்று எண்ணக் கூடாது, மிக்க தவம் புரிந்தவர் ஆகிய விசுவாமித்திரர் தியானத் தில் அமர்ந்திருந்தார். அவருக்குப் பசி வந்துவிட்டது. அவருக்குப் பிச்சை போடுவார் யாரும் இல்லை. நாயின் ஊனைத் தின்றாராம். மற்றொரு சமயமாக இருந்தால் அப்படிச் செய்வாரா? பசிநோய் முறுகி நிற்க, அதனை மாற்றுவதற்கு வழி இல்லாமையினால் அவ்வாறு செய்தார்.

தானம், தவம் ஆகிய இரண்டும் உலகத்தில் நிற்க வேண்டும். இல்லறத்தார் தானத்தினால் சிறப்பு அடைகிறார்கள். துறவறத்தார் தவத்தினால் சிறப்பு அடைகிறார்கள். இந்த இரண்டும் நிற்க வேண்டுமானால் பசிப்பிணி போகவேண்டும். பசிப்பிணியைப் போக்குவதற்கு முக்கிய காரணமாக இருப்பது மழை. அதனால்,

**"தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்**
**வானம் வழங்கா தெனின்"**

என்று பாடினார் வள்ளுவர். மணிமேகலை ஆசிரியர் பசியை,

**"பசிப்பிணி என்னும் பாவி"**

என்று கூறுகிறார்.

**"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே"**

என்றும் அன்னதானத்தின் சிறப்பைச் சொல்கிறார்.

## மணிமேகலை

மணிமேகலை என்னும் பிட்சுணி தவம் செய்ததாக மணி மேகலை என்னும் காவியம் சொல்கிறது. அவள் செய்த மற்றத்

தவத்தைவிட அன்னதானம் என்னும் தவத்தையே பெரிதாக அந்தக் காவியம் சொல்கிறது. கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை. அவள் அறவண அடிகளிடத்தில் உபதேசம் பெற்றாள். பிறருக்கு ஞான உபதேசம் செய்து நன்மை விளைவிக்கலாம் என்று அவளுக்குத் தோன்றவில்லை. யாவருக்கும் பயன்படுகிற ஒரு காரியத்தை அவள் மேற் கொண்டாள். அவளுக்கு அமுத சுரபி ஒன்று கிடைத்தது. ''பசித்தோர் எல்லோரும் வாருங்கள்'' என்று அழைத்து அவர்களுக்கு எல்லாம் சோறு கொடுத்தாள்.

## அன்ன தானம்

இந்த நாட்டில் எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதனோடு அன்னதானத்தைச் சேர்த்துச் செய்வார்கள். இறைவனுடைய திருக்கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றால் அன்னதானமும் முக்கியமாக நடைபெறும். திருமணம் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகள் வீட்டில் நடந்தால் அவற்றுடன் அன்னதானத்தையும் நடத்துவது இந்த நாட்டு வழக்கம். யார் பசித்து வருகிறார்களோ அவர்களுக்கு அன்னம் அளிப்பது சிறந்த அன்னதானம்.

**''அன்னஸ்ய க்ஷுதிதம் பாத்ரம்''**

என்று வடமொழியில் ஒரு வாக்கியம் உண்டு. அன்னமிடுவற்குத் தக்க பாத்திரம் பசித்து வந்தவர்களே என்பது அதன் பொருள்.

## தவத்தினும் சிறந்தது

இந்த அன்னதானத்தைப்பற்றி அருணகிரிநாதர் சொல்லுகிறார். அதுவே தவம் என்றும் சொல்கிறார். தவத்தைச் செய்கிறவர்கள் பெரியவர்களாக இருக்கும்போது, அன்னதானம் செய்பவர்கள் எப்படிப் பெரியவர்கள் ஆவார்கள் என்று கேட்கலாம். திருவள்ளுவர் இதற்குச் சரியான விடை சொல்கிறார். 'தவம் செய்கிறவர்களுக்கு ஆற்றல் இருக்கிறது. ஆனால் அன்னதானம் செய்கிறவர்களுடைய ஆற்றலுக்கும் பின்தான் அதை நிறுத்த வேண்டும்' என்று அவர் சொல்கிறார்.

**''ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்; அப்பசியை**
**மாற்றுவா ராற்றலிற் பின்''**

என்பது அவர் கூறியுள்ள குறள். தவம் செய்கிறவனுடைய ஆற்றல் பெரிதுதான். அவன் தன்னுடைய ஊனை உருக்கி உண்ணாவிரதம் இருக்கிறான். உடம்பை வருத்தித் தவம் செய்கிறான். இந்திரிய நிக்கிரகம் செய்கிறான்; ''உண்ணாது நோற்பார் பெரியர்'' என்று பிறிதோரிடத்தில் வள்ளுவர் சொல்கிறார். ஆனால் அந்த உண்ணாவிரதத்திற்கும் ஓர் எல்லை உண்டு. பசி மிகுந்துவிட்டால் தவம் செய்வாருடைய தவம் அழிந்துவிடும். இவர்கள் தாம் பட்டினி கிடப்பார்களேயொழியப் பிறர் பட்டினியைப் போக்கும் ஆற்றல் இல்லாதவர்கள். அன்னதானம் செய்கிறவனோ தன்னுடைய பசியைப் போக்கிக் கொள்வதோடு, பசித்து வருகிற மற்றவர் களுடைய பசியையும் போக்கிவிடுகிறான். 'தாமும் பசித்துப் பிறரையும் அது தீர்க்கமாட்டாதார் ஆற்றலின், தாமும் பசியாது பிறரையும் அது தீர்ப்பார் ஆற்றல் நன்றென்பதாம்' என்று இக் குறளுக்குப் பரிமேலழகர் விளக்கமாக உரை எழுதியிருக்கிறார்.

தானத்தில் சிறந்த அன்னதானத்தைச் செய்யவே தான், ''நெல்பயிர் விளை'' என்று சொன்னாள் நம் பாட்டி. முன்பு நம் நாட்டில் எங்கெல்லாம் நிலம் இருந்ததோ அங்கெல்லாம் நெல் விளைந்தது.

## வீடும் வயலும்

**''இடம்பட வீடு இடேல்''**

என்று பாட்டி சொல்லியிருக்கிறாள். வீட்டை இடம் அழியும்படி பெரியதாகக் கட்டாதே என்பது அதன் பொருள்.

ஒரு பக்கத்தில் நெல் விளைச்சலை அதிகப்படுத்துங்கள் என்று சொல்லிக்கொண்டு, மற்றொரு பக்கத்தில் நெல் விளைகிற வயல்களை அழித்துக் கட்டிடங்களைக் கட்டிக் கொண்டிருக் கிறோம். அன்னத்தை விளைக்கிற நிலம் அழிந்துபோகிறது. அன்னத்தைச் சாப்பிடுகிற மக்கள் அங்கே குடியேறுகிறார்கள். உண்ணுதற்குரிய அன்னத்தை அழித்துவிட்டு உண்ணுகின்ற மனிதன் அங்கே நடமாடுகிறான். இது கூடாது. சிறுகக் கட்டிப் பெருக வாழவேண்டும் என்று அந்தக் காலத்தில் பெரியவர்கள் நினைத் தார்கள். ஜனத்தொகை இவ்வளவு அதிகமாக இல்லாத அந்தக் காலத்திலேயே இந்த உண்மையை அறிந்து சொல்லியிருக்கிற

போது, ஜனத்தொகை மிகுதியாகிற இந்தக் காலத்தில், ''இடம் பட வீடிடேல்'' என்ற உண்மை எவ்வளவு சிறப்பானது என்பதை உணரவேண்டும்.

## செல்வரும் அன்னதானமும்

இந்த நாட்டில் செல்வர்களை மதிப்பிடும் முறையே வேறு; எத்தனை பங்களாக்கள், எத்தனை கார்கள் ஒருவனிடம் இருக்கின்றன என்பதைக் கணக்கெடுத்துப் பார்த்து, இன்னான் பணக்காரன் என்று சொல்வது வழக்கம் அன்று. ஒருவன் வீட்டுக்குள் இருந்து எத்தனை எச்சில் இலைகள் தெருவிலே வந்து விழுகின்றன என்பதைக் கணக்கு எடுத்தே இன்னான் பணக்காரன் என்று சொன்னார்கள். ''சோறு இல்லாமற் செத்தவன் இல்லை'' என்று பழமொழியைச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தோம். இந்தப் பழமொழி நம் நாட்டிலுள்ள மக்களின் தர்ம சிந்தையை மாத்திரம் காட்டவில்லை. நாட்டு மக்களின் முயற்சியையும் காட்டுகிறது. நிறைய நெல் விளைந்தால் தான் அறம் செய்ய முடியும். பழைய காலத்தில் எல்லா மக்களும் சோம்பல் இல்லாமல் வேளாண்மை செய்தார்கள். பிச்சை கேட்கிறவன் ஒரே ஒருவன்தான். அவன் துறவி. ''பவதி பிட்சாந் தேஹி' என்று துறவிகள்தாம் கேட்பர். இரவலர் என்ற பெயர் கலைஞர்களுக்கு உரியதாக இருந்தது. பாணர், புலவர், கூத்தர் ஆகிய இவர்கள் அங்கங்கே சென்று தம் கலைத்திறத்தைக் காட்டி வள்ளல்களிடம் பரிசு பெற்றார்கள். அவர்களையன்றிப் பிறரிடம் பிச்சையென்று இரப்பவர்கள் மிக அரியர். ஆனால் நாளடைவில் அந்த நிலை மாறிப் பலர் பிச்சையெடுக்கும் நிலை வந்துவிட்டது. அருணகிரிநாதர் காலத்தில் பலர் பிச்சை எடுத்தார்கள்.

அன்னத்தை மிகுதியாக விளைத்த நாடாக இது இருந்தது. மனிதன் முதலில் உயிர் வாழ வேண்டும். மற்ற வளங்கள் பெறுவது பின்பு. உயிர்வாழ்வதற்கு உடம்பு வாழவேண்டும். உடம்பு அன்னத்தாலானது என்ற உண்மை யாவருக்கும் தெரிந்தது. இந்த நாட்டில் தொழில் துறையில் மிகுதியான கவனம் செலுத்தவில்லை என்று குறை கூறுகிறோம். எத்தனை தொழில்கள் வளர்ந்தாலும் மனிதனுடைய மூலத் தேவையாகிய சோறு கிடைக்கவில்லையென்றால் மற்றத் தொழில்களினால்

பலன் இல்லை. ஆதலினால் இந்தியா பெரிய வேளாண்மை நாடாக இருந்தது.

## சடையப்ப வள்ளல்

தமிழிலே இராமாயணம் என்ற பெரும் காப்பியத்தைச் செய்த கவிச்சக்கரவர்த்தி கம்பநாட்டாருக்குச் சோறு அளித்து அவரைக் காப்பாற்றினார் சடையப்ப வள்ளல். இந்தப் புலவருக்கு அளித்ததைப் போல இன்னும் பலருக்கு உண்டி கொடுத்து உயிர் கொடுத்திருக்கிறார் அவர்.

ஒருநாள் அவரிடம் பரிசு பெற்றுப் போக ஒரு புலவர் வந்தார். அப்போது சடையப்ப வள்ளல் நெல்மூட்டைகளைத் தம் முடைய வீட்டுக்குள் கொண்டுபோய் அடுக்கிக் கொண்டிருந்தார். வரும் வழியில் வண்டியில் இருந்து நெல் சிந்தியிருந்தது. வள்ளல் அந்த நெல்லைப் பொறுக்கித் தம் மேல்துண்டில் போட்டுக் கொண்டிருந்தார். அப்போது அவரைப் பார்த்த புலவர், 'வீதியில் சிந்திக் கிடக்கிற நெல்லைப் பொறுக்கும் கருமியாக இருக்கிறாரே! இவர் நமக்கு எங்கே பரிசு கொடுக்கப் போகிறார்?' என்று எண்ணினார். புலவருடைய முகத்தைப் பார்த்தபோது சடையப்ப வள்ளலுக்கு அவருடைய எண்ணம் விளங்கியது. சடையப்பர் அந்தப் புலவரைத் தம் வீட்டுக்குள் அழைத்துச் சென்று இனிமையாகப் பேசிச் சாப்பிட்டுப் போக வேண்டு மென்று சொல்லி இலையைப் போட்டு உட்கார வைத்தார். ஆனால் இலையில் சோற்றை வைப்பதற்குப் பதிலாகக் கைநிறையப் பொன்னைக் கொண்டு வந்து வைத்தார்.

அதைப் பார்த்த புலவர் முகத்தைச் சுளித்தார். அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்களே! நெல்லைப் பொறுக்கும் போது ஒருவிதமாகப் பார்த்தீர்கள். நெல்லைவிடப் பொன் உயர்ந் தது என்று நீங்கள் நினைத்தீர்கள் என்பதற்காகப் பொன்னைக் கொண்டுவந்து வைத்தேன். இப்போது மலைத்து விட்டீர்களே!'' என்றார் சடையப்ப வள்ளல். புலவருக்கு உண்மை புலனாகியது.

''பொன்னால் உடம்பு வளராது. அரிசி உடம்பை வளர்க்கும் என்பதை உணர்ந்தேன்'' என்றார் புலவர். இப்படி மணிமணியாக

நெல்லைப் பொறுக்கிச் சேர்த்து நாட்டிலுள்ள புலவர்களை எல்லாம் வாழ வைக்கிறவர் சடையப்ப வள்ளல் என்பதை அப்புலவர் தெரிந்து கொண்டார்.

## கம்பரின் நன்றியறிவு

தமக்குச் சோறு அளித்த சடையப்பரைக் கம்பர் இராமாயணத்தில் பத்து இடங்களில் பாடியிருக்கிறார். மிகவும் முக்கியமான இடத்தில் அந்த வள்ளலைப்பற்றிய புகழை அமைத்திருக்கிறார். இராமாயணத்தை இந்த நாட்டில் பிரசங்கம் செய்கிறவர்கள் ஏழு நாள், ஒன்பது நாள், ஒரு மாதம், ஒரு வருஷம் என்று சொல்வார்கள். மிகக் குறைந்த நாளில் எத்தனை சுருக்கிச் சொன்னாலும் இராம பட்டாபிஷேகத்தைச் சொல்லாமல் யாரும் விடமாட்டார்கள். எவ்வளவு நாள் குறைவாகச் சொன்னாலும் இராமாவதாரம், சீதா கல்யாணம், இராவண சங்காரம், இராம பட்டாபிஷேகம் ஆகியவற்றைச் சொல்லாமல் இருக்கும் வழக்கம் இல்லை.

யார் இராமாயணம் சொன்னாலும் இராமனுடைய புகழோடு சடையப்பர் புகழும் வரவேண்டும் என்று கம்பர் கருதினார். இராமபட்டாபிஷேகத்தைச் சொல்லும் பாட்டில் சடையப்பர் புகழைப் புதைத்து வைத்தார். "இராம பட்டாபிஷேகத்தன்று விசுவாமித்திரர், வசிஷ்டர், அநுமன், சீதா பிராட்டி முதலிய எல்லோரும் சபையில் இருந்ததாகச் சொல்லலாம். அவற்றையெல்லாம் கதைப் போக்கில் சொல்வது இயற்கை. சடையப்பரைப் பற்றி என்ன சொல்வது? அங்கே அவருக்கு இடம் ஏது?" என்று நமக்குத் தோன்றும். கம்பருக்கு எப்படியோ ஒரு தந்திரம் தெரிந்தது. சடையப்பர் புகழை அந்தப் பாட்டில் மிகவும் நயமாக அமைத்துவிட்டார்.

"அரியணை அநுமன் தாங்க
அங்கதன் உடைவாள் பற்றப்
பரதன்வெண் குடைக விக்க
இருவரும் கவரி வீச
விரைசெறி குழலி ஓங்க,
வெண்ணெய்மன் சடையன் கங்கை
மரபுளோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி."

சிங்காதனத்தை அநுமன் தாங்கினான். அங்கதன் உடைவாளை ஏந்திக் கொண்டிருந்தான். பரதன் வெண்கொற்றக் குடை பிடித்தான். லட்சுமணனும் சத்துருக்னனும் கவரி வீசினார்கள். சீதாபிராட்டி மிக்க பொலிவோடு இராமன் அருகில் அமர்ந்திருந்தாள். அப்போது வசிட்டன் மகுடத்தைச் சூட்டினான் - இப்படிச் சொன்னாலே போதும். ஆனால் அங்கே சடையப்பர் புகழைக் கொண்டு வந்து இணைக்கிறார் புலவர்.

**"விரைசெறி குழலி ஓங்க வெண்ணெய்மன் சடையன் கங்கை மரபுளோர் கொடுக்க வாங்கி."**

இராமசந்திர மூர்த்திக்கு வசிட்டன் திருமுடியைச் சூட்டினான் என்கிறார். அந்த மகுடத்தை சடையப்பருக்கு முன்னோராகிய வேளாளர் மரபில் வந்தவர்கள் எடுத்துக் கொடுத்தார்கள் என்று பாடியிருக்கிறார்.

ஒருவகையில் ராமனுக்கு முடிசூட்டும்போது கம்பர் சடையப்ப வள்ளலுக்கும் புகழ் முடி சூட்டிவிட்டார் என்று சொல்லவேண்டும். அப்படி இராமபட்டாபிஷேகத்தில் சடையப்பருடைய பட்டாபிஷேகத்தையும் வைத்துக் கொண்ட கம்பருடை அன்புக்கு மூல காரணம் அவ்வள்ளலின் சோறே ஆகும். அன்னதானம் சடையப்பரை இராமனுக்குச் சமமாக நிமர்த்தி விட்டது.

# 2

## அநுபவ பூர்வமான முறை

"என்னிடம் பொருள் சேர்ந்தால் நானும் அன்னதானம் செய்யலாம். அதற்கு வழி இல்லையே! எப்படி அன்னதானம் செய்ய முடியும்?" என்று சிலர் நினைக்கலாம். அத்தகைய எண்ணம் உடையவர்களுக்கு வாழ்க்கையில் அநுபவபூர்வமான முறையில் ஒரு தந்திரத்தைச் சொல்லித் தருகிறார் அருணகிரிநாத சுவாமிகள். அந்த வழியை விளக்குகிற அலங்காரப் பாட்டை இப்போது பார்க்கப் போகிறோம்.

**மலைஆறு கூறெழ வேல்வாங்கி னானை**
**வணங்கி அன்பின்**
**நிலையான மாதவம் செய்குமி**
**னோ; நும்மை நேடிவரும்**

**தொலையா வழிக்குப் பொதிசோறும்
உற்ற துணையும்கண்டீர்;
இலைஆ யினும்வெந்த தேதா
யினும்பகிர்ந் தேற்றவர்க்கே.**

*''நீங்கள் கொஞ்சம் சோறு கொடுத்தாலும் அது பெரிய சோறு ஆகி விடும். ஒரு பிடி சோறு கொடுத்தால் மலையளவு சோறாகி விடும். நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நீங்கள் போக வேண்டிய தொலையா வழி ஒன்று இருக்கிறதே, அந்த வழியில் இப்போது நீங்கள் கொடுக்கும் பிடி சோறு பொதி சோறாகி, கட்டுச் சோறாகி, வந்து சேரும்'' என்று அவர் சொல்கிறார்.*

*அருணகிரி நாதருக்கு நம்முடைய நிலைமை தெரியாதா? முன்பே,*

***''நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள்''***

*என்று சொன்னார். இப்போது மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ள வர்களுக்கும் அறம் செய்வதற்கு வாய்ப்பு உண்டு என்பதைத் தெரிந்து கொண்டு நடைமுறைக்கு ஏற்ற உபதேசம் செய்கிறார்.*

***இலை ஆயினும் வெந்தது ஏது ஆயினும் பகிர்ந்து ஏற்றவர்க்கே.***

*''நல்ல நல்ல பதார்த்தங்களோடு விருந்து படைக்க வேண்டும். அதுதான் சிறந்தது'' என்று அவர் சொல்லவில்லை. அப்படிச் செய்வதற்குப் பணம் வேண்டுமென்பது உண்மை. ''காய்கறி களோடு என் வீட்டில் சமைக்கவில்லை. என் வீட்டில் அரிசிச் சாப்பாடே இல்லை'' என்று சிலர் சொல்லக்கூடும். அவர்கள் வீட்டில் கீரையையாவது சுண்டிச் சாப்பிடுவார்கள். புறநானூறு முதலிய சங்க நூல்களில் வறியவர்கள் உப்பும் இல்லாமல் கீரையைச் சுண்டிச் சாப்பிட்டார்கள் என்று புலவர்கள் வருணித் திருக்கிறார்கள். மக்கள் எதையாவது வேகவைத்துச் சாப்பிட்டுப் பசியைப் போக்கிக் கொள்கிறார்கள். 'அப்படி வெந்தது எதுவோ அதைக் கொடுங்கள்' என்று சொல்கிறார். அது முழுவதையும் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லவில்லை,*

இலையாயினும் வெந்தது ஏதாயினும் பகிர்ந்து.

''பசி என்று வந்து கேட்கிற வறியவர்களுக்குக் கொஞ்சம் பகிர்ந்து கொடுத்து நீங்களும் சாப்பிடுங்கள்'' என்று சொல்கிறார். பகிர்தலாவது தனக்கு உரியதில் ஒரு பகுதியைப் பிரித்துக் கொடுத்தல். இப்படிப் பகுத்து உண்ணும் உணவைப் பாத்தூண் என்பர் திருவள்ளுவர்.

''ஐயா, நான் ஏதோ கீரையைச் சுண்டிச் சாப்பிடுகிறேன். என்னிடம் பெரிய துறவி வந்து கேட்டால் அந்தக் கீரையை இதுதான் இருக்கிறதென்று கொடுக்கலாமா?'' என்று நாம் கேட்கலாம்.

''நீ கொடுக்கிற பொருளில் உயர்வு தாழ்வு இல்லை. பிறருக்குக் கொடுக்கவேண்டுமென்று நினைக்கிற நினைப்பில் தான் உயர்வு இருக்கிறது. நீ அதைப் பகிர்ந்து கொடு'' என்று அவர் சொல்கிறார்.

## மனத்தோடு செய்தல்

எந்தக் காரியத்தை யார் செய்தாலும் அதைத் தக்கபடி செய்ய வேண்டும்; மனத்தோடு செய்யவேண்டும். ''எனக்கு ஆயிரம் ரூபாய் வந்தால் அநாதை விடுதிக்குக் கொடுத்து விடுவேன்'' என்று சிலர் நினைப்பார்கள். ஆனால் பணம் வரும் போது அந்த எண்ணம் மறைந்துவிடும். அது இல்லையே, இது இல்லையே கொடுக்க என்று நினைத்துக் கொண்டிருப்பதைவிட நினைக்கும் போதே கையில் எது இருக்கிறதோ அதைக் கொடுத்து விட வேண்டும். அப்புறம் கொடுக்கலாம் என்று நினைத்தால், இடையில் எத்தனையோ மாயா சக்திகள் வந்து அந்த நினைப்பை மறைத்து விடும். இறந்து போன ஒருவரை எண்ணி, ''ஐயோ போய்விட்டாரே!'' அழுகிறவர்களைவிட, ''எனக்கு அதைக் கொடுக்கிறேன் என்றாரே. அதற்குள் போய்விட்டது!'' என்று என்று அழுகிறவர்கள்தாம் அதிகம். ஆண்டவனுடைய திருவருளை நாடி இருப்பவர்கள் எதை எதை எவ்வெப்போது யார் யாருக்குக் கொடுக்கவேண்டு மென்று நினைக்கிறார்களோ அப்போதே கொடுத்து விடுவார்கள். பசி என்று தெருவில் வந்து நிற்பவனைப் பார்த்து, ''நாளைக்கு வா. பாயசத்தோடு அமுது படைக்கிறேன்'' என்று சொல்வதைக் காட்டிலும் நொய்யாக இருந்தாலும் வெறும் கீரையாக இருந்

தாலும் இருக்கிறதை இருக்கிறபோதே முதலில் அவனுக்கு ஒரு பிடி கொடுத்துவிட்டு உண்ணுவதே உயர்வு.

## பொதுவுடைமைக் கொள்கை

தர்மம் செய்வதற்கு இன்ன இன்ன பொருள் வேண்டுமென்று அருணகிரியார் சொல்லவில்லை. மனிதராகப் பிறந்தவர் எல்லோரும் தர்மம் செய்யவேண்டுமென்று அவர் நினைக்கிறார். பணக்காரர்களுக்குத்தான் அறம் உண்டு. மற்றவருக்கு இல்லை என்று சொல்ல இயலாது. பசி எனக் கேட்பானுக்கு ஒரு பிடி அன்னமிட்டாலும் போதும். ஒரு பிடிதான் கொடுக்க முடியும் என்ற நிலையில் உள்ள மனிதனுக்கு அதுவே பெரும் பயனைத் தரும். அருணகிரியார் சொல்வது ஒரு வகையான பொதுவுடைமைக் கொள்கை. அவர் திட்டம் பணக்காரர்கள் மாத்திரம் அல்ல. அன்றாடம் கீரை கிழங்குகளை வேகவைத்து உண்ணுகிறவர்களும் பங்குகொள்ளக் கூடியது.

அவர் சொல்வதில் மற்றோர் உண்மையும் அடங்கியிருக்கிறது. வெந்தது எல்லாவற்றையும் தானம் செய்து விடு என்று அவர் சொல்லவில்லை. ''உனக்கு வைத்துக் கொண்டு அவனுக்குக் கொடு. உனக்கு இல்லாமல் அவனுக்குக் கொடுக்க வேண்டாம். இரண்டு பேரும் கலந்து பகிர்ந்து உண்ணுங்கள்'' என்றே சொல்கிறார்.

## மாதவம்

இப்படிச் செய்கிற தானமே தவமாகும் என்று அருணகிரியார் பேசுகின்றார்.

அன்பின்
நிலையான மாதவம் செய்குமினோ.

''தவம் செய்யவேண்டுமென்று நினைக்கிறாயே. இந்திரிய நிக்கிரகம் செய்வதுதான் தவம் என்று நினைக்காதே. தவம் செய்கிறவனுடைய ஆற்றலைவிடப் பிறருடைய பசியைப் போக்குகிறவன் ஆற்றல் பெரிது என்பதை வள்ளுவர் சொல்லியிருக்கிறார். ஆகவே பசியைப் போக்கும் தவத்தைச் செய். அதையும் அன்போடு செய். அது அழிவில்லாத நிலையான தவம்'' என்று அவர் நமக்கு

உபதேசம் செய்கிறார். அப்படிச் செய்தால் என்ன பயன் உண்டாகும்?

## தொலையா வழி

நும்மை நேடிவரும்
தொலையா வழிக்குப் பொதி சோறும், உற்ற துணையும்
கண்டீர்.

"நீ கொடுக்கிற சிறு சோறு பின்பு பொதி சோறாக விளையும்" என்று அவர் பாடுகிறார். நான் எந்த ஊருக்குமே போனது இல்லை என்று சொல்கிறவர்களும் கடைசியில் தொலையா நெடுவழிப் பிரயாணம் ஒன்றைச் செய்ய வேண்டும். அதற்கு முடிவே கிடையாது. இந்த உடம்பு முடிந்தாலும் வேறு உடம்பு தயாராக இருக்கும். கொல்லை வழியாக வீட்டைவிட்டுப் போய்விடலாமே என்று நினைக்கிறவர்கள் அந்தக் கொல்லையே அடுத்த வீட்டின் வாசலாக இருப்பதைக் கண்டு ஏமாறுவார்கள். இது போன்றதுதான் மரணம். "இந்த உடம்பு போய்விட்டது. இனிக் கவலை இல்லை" என்று நினைக்க முடியாது. மற்றோர் உடம்புக்குப் போகிற பிறவி என்னும் வாசல் அடுத்து நிற்கிறது.

மரணத்திற்குப் பின் உண்டாகிற நெடிய பயணத்திற்கு முடிவே இல்லை. அதைக் கடைவழி என்று முன்பு சொன்னார். இப்போது செய்கிற நிலையான மாதவந்தான் அந்தப் பயணத்தில் பொதி சோறாகவும், துணையாகவும் வந்து சேரும்.

இந்த நிலையான மாதவத்தை எப்படிச் செய்யவேண்டு மென்பதை நுட்பமாக அருணகிரிநாதர் தெரிவிக்கிறார்.

## அன்போடு அறம் செய்தல்

அறிவை மழுங்க அடிக்கிற பசியை, இந்திரியங்களைச் செயலற்றுப் போகும்படியாகச் செய்கிற பசியைப் போக்குவது சிறந்த தானம். இறைவனை எண்ணி அதைச் செய்தால் அதுவே தவமாகிவிடும்.

பிறருடைய பசியைப் போக்கும்போது நம்முடைய மனத்தில் ஒரு தகுதி வேண்டும். பலர் அன்னதானம் செய்கிறார்கள். அவர் களுடைய செயல் எல்லாம் தவம் ஆகிவிடும் என்று சொல்வதற்

கில்லை. அவர்களுடைய மனத்தில் அவ்வாறு தானம் செய்வதற்குக் காரணமான உணர்ச்சி வேறாக இருக்கிறது. சிலர் பேருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு அன்னதானம் செய்கிறார்கள். ''அவன் செய்கிறானே; நாம் ஏன் செய்யக்கூடாது?'' என்ற பொறாமை யினால் சிலர் செய்யக்கூடும். சிலரோ, அப்படிச் செய்யாவிட்டால் ஊரிலுள்ளவர்கள் அடித்துப் பிடுங்கிக் கொண்டு போய்விடப் போகிறார்களே என்று செய்கிறார்கள். வருமான வரிக்குப் பயந்து 'போனஸ்' கொடுப்பது போல அவர்கள் தானம் இருக்கிறது. இவை எல்லாம் தானம் ஆவதில்லை; தவமும் ஆவதில்லை.

**''அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்ற தறம்''**

என்று வள்ளுவர் சொல்கிறார். பொறாமை, ஆசை, கோபம், கடுமையான சொல் இவற்றில் ஒன்றும் இல்லாமல் செய்கிற தர்மமே தர்மம் என்பது அவர் கருத்து.

## இறைவனை நினைத்துச் செய்தல்

**உ**ண்டுவிட்டு வீதித் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொள் கிறோம். ''ஐயா பசிக்கிறதே!'' என்று கால் கொப்புளிக்கும் வெயிலில் ஒருவன் வந்து நிற்கிறான். அப்போது நாம் எதை நினைக்க வேண்டும்? 'இவனை இப்படி வீதி வீதியாகப் பிச்சை கேட்க வைத்தவன் யார்? இவனைப் போல மனிதனாகப் பிறந்த நாம் சற்றும் சிரமம் இல்லாமல் சோறு புசிக்கும்படியாகச் செய்கிறவன் யார்?' என்று யோசிக்க வேண்டும். 'நம்மிடத்தில் சோற்றையும், அவனிடத்தில் பசியையும் கொடுத்தவன் நம்மிடத் தில் பசியையும் அவனிடத்தில் சோற்றையும் கொடுத்திருந்தால் என்ன ஆகும்?' என்று ஆராய வேண்டும். அப்படி ஆராய்ந்தால் நம்முன் பிச்சை கேட்டுக் கொண்டு நிற்கிறவனை இழிவாக நாம் கருதுவோமா? நம்மிடம் சோற்றைக் கொடுத்து வைத்திருக்கும் ஆண்டவனே அவனிடத்தில் பசியைக் கொடுத்து நம்மிடத்தில் கேட்கும் படியாகச் செய்திருக்கிறான் என்று நினைத்தால், அப்போது, ''ஆண்டவனே, உன் கட்டளையை உணர்ந்துகொண் டேன்'' என்று கசிந்த உள்ளத்தோடு சோற்றைக் கொடுக்கத் தோன்றும். அத்தகைய நினைப்போடு அறம் செய்தால் அழுக்

காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகியவை வருவதற்கு நியாயம் இல்லை.

ஆண்டவனுடைய நினைவோடு செய்கிற அறந்தான் நிலையான மாதவம் ஆகிறது. தர்மங்கள் செய்கிறபோது நம்மை நினைத்தால் அவா வளரும். அதுவே வெறும் கர்மம் ஆகிறது. இறைவனை நினைந்து செய்தால் அதுவே கர்ம யோகம் ஆகிறது. கர்மயோகமும் ஒருவகைத் தவந்தான்.

ஆகவே, நாம் பிறருடைய பசியைத் தீர்க்கும்போது இறைவனை நினைத்துக்கொண்டு அந்தச் செயலைச் செய்தால் வேறு எந்தவிதமான உணர்ச்சியும் வந்து தடைப்படுத்தாது. அதுவே தவமாக முடியும்.

**மலை ஆறு கூறு எழ வேல் வாங்கினானை வணங்கி, அன்பின்**
**நிலையான மாதவம் செய்குமினோ**

என்று அருணகிரியார் சொல்வது இந்த நுட்பத்தை நமக்குத் தெரிவிப்பதற்காகத்தான்.

## கிரௌஞ்ச மலை பிளந்தது

ஆண்டவனை எவ்வாறு இங்கே புகழ்கிறார்? அவன் கிரௌஞ்ச மலையின்மீது வேலைவிட்டான். அது பிளந்து போய் விட்டது. ஆறு கூறாகப் பிளந்தது. கூறு–துண்டு. கிரௌஞ்சமலை ஆறு துண்டுகளாகப் பிளந்து விட்டது. முருகப்பெருமானுக்கு ஆறுமுகங்கள் இருப்பது போல வேலுக்கும் ஆறு பட்டை உண்டு. ஆறு பட்டையையுடைய வேல் பாய்ந்ததால் மலை ஆறு கூறுகளாகப் போயிற்று. மலைமீது வேலைவிட்டவன் எம்பெருமான். அவனை நினைந்து, 'அவன் என்னிடம் பொருளைக் கொடுத்து வந்தவனிடம் பசியைக் கொடுத்து அவனை என்பால் அனுப்பி இருக்கிறான்' என்று நினைவோடு, கூழ் குடித்தாலும், அதையாவது கொடுத்திருக்கிறானே என்ற நன்றி அறிவோடு அதைப் பகிர்ந்தளித்து நாம் அறம் செய்தால், அதுவே நிலையான மாதவம் ஆகும். நிலையான மாதவம் என்பது நெடுங்காலத்துக்குப் பின்னும் வந்து கைகொடுக்கும் தவம்.

**அன்பின்**
**நிலையான மாதவம் செய்குமினோ.**

*அன்பு இருந்தால்தான் வறியவனைக் கண்டு எள்ளத் தோன்றாது. இறைவன் நினைவு உண்டாகும்.*

*மரணம் அடைந்த பிறகு செல்லும் வழிக்குத் துணையாக இருப்பது இந்தத் தவம் என்று சொன்னார் அருணகிரிநாதர். மற்ற ஒன்றும் பற்றித் தொடராது.*

***"பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே"***

*என்று பட்டினத்தார் சொன்னார்.*

## *வழித்துணை*

*நமக்கு வழித் துணையாகிய அறங்களில் சிறந்த அறம் ஈகை. ஈகையில் சிறந்தது அன்னதானம். அன்னதானத்தை இறைவன் நினைவோடு செய்யவேண்டும். செய்வது ஒரு பிடியாக இருந்தாலும் அதனால் உண்டாகிற புண்ணியம் மலையாக இருக்கும். இப்போது செய்கிற அறம் சிறிதாகத் தோற்றினாலும் அது பயனாக விளையும்போது பெரிதாக இருக்கும். மூடி வைத் திருக்கும் குடை சிறிதாகத் தோற்றலாம். வெயிலில் விரிக்கும் போது பெரிதாகத் தோற்றுகிறது.*

*கிரௌஞ்சமலை ஆறு கூறுகளாகப் போகும்படி வேல் வாங்கின வனை அன்பால் நினைந்து வணங்கி, "நான் கொடுக்கிறேன்" என்ற அகந்தை ஒழிய, நம்மிடம் கொடுப்பதற்கு இதுவாவது இருக்கிறதே என்று எண்ணி, இலையாயினும் வெந்தது ஏதாயி னும் யாசிப்பவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டும். அப்படிச் செய்வது நிலையான பெரிய தவம். தொலையா நெடுவழியில் நாம் போகும்போது நம்மைப் பாதுகாக்கும் பொதிசோறாகவும் துணையாகவும் அந்தத் தவம் வந்து விளையும் என்பதை இந்தப் பாட்டின் மூலம் வலியுறுத்துகிறார் அருணகிரியார்.*

★

**மலைஆறு கூறெழ வேல்வாங்கி னானை**
**வணங்கிஅன்பின்**
**நிலையான மாதவம் செய்குமி னோநும்மை**
**நேடிவரும்**

தொலையா வழிக்குப் பொதிசோறும் உற்ற
 துணையும்கண்டீர்;
இலைஆ யினும்வெந்த தேதாயி னும்பகிர்ந்
 தேற்றவர்க்கே.

*(கிரௌஞ்சமலை ஆறு துண்டுகளாகப் போக வேலை ஏவிய முருகனை வணங்கி, அன்போடு கீரையானாலும் வெந்த உணவுப் பொருள் ஏதானாலும் இரந்தவர்களுக்கு ஒரு பகுதி அளித்துப் பெரிய தவத்தைச் செய்யுங்கள்; அப்படிச் செய்வதனால் உண்டாகும் புண்ணியம், உம்மைத் தேடிப் பின்னாலே வர இருக்கும் நீண்ட வழிக்குக் கட்டுச்சோறும் நெருங்கிய துணையும் ஆகும்; இதை உணருங்கள்.*

*கூறு - துண்டு. வாங்கினான் - பிரயோகம் செய்தான். ஏற்றவர்க்குப் பகிர்ந்து மாதவம் செய்குமின் என்று கூட்டுக. அன்பின் - அன்போடு. செய்குமினோ; ஓ, அசை. நேடி - தேடி. தொலையாவழி - கடக்கக் கடக்க மாளாத நெடுவழி. பகிர்ந்து - யாசிப்பவர்க்கும் ஒரு கூறு பங்கிட்டு. ஏற்றவர்க்கு - இரப்பவருக்கு.)*

# பாடும் ஆர்வம்

# 1

### *அருணகிரியாரின் சமரச இயல்பு*

இதுவரையில் நாம் பார்த்துள்ள பல பாடல்களின் வாயிலாக அருணகிரிநாதப் பெருமான் பல வகையான சமரச வழிகளைக் காட்டுகிறார் என்பதை அறிந்திருக்கிறோம். சைவ வைணவ வேறுபாடு இல்லாமல் எல்லா மூர்த்திகளையும் வாயாராத் தம் பாடல்களிலே துதித்திருக்கிறார். யோகம், ஞானம், பக்தி என்ற மூன்றையும் மிக அழகாகத் தமது பாடல்களில் உணர்த்தியிருக்கிறார்.

அதுமட்டும் அல்ல. தமிழிலே அவர் கொண்டுள்ள ஆர்வத்தினாலே தமிழை எல்லோரும் நன்றாகக் கற்கவேண்டும். பிழையறக் கற்கவேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதையும் பார்த்தோம். தமிழ்ப் பாடல்களை எழுத்துப் பிழையறக் கற்க வேண்டும் என்றவர் அப்படிச் சொல்லும் பாட்டிலே தமிழுக் குரிய சிறப்பெழுத்துக்களை விரவ வைத்திருக்கிறார் என்பதை முன்பே கண்டோம்.

"அழித்துப் பிறக்கஒட் டாஅயில் வேலன் கவியைஅன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீர்எரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெம் கூற்றன்
விடும்கயிற்றால்
கழுத்தில் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே!"

என்ற அழகான செந்தமிழ்ப் பாடலில் இந்த அமைப்பைப் பார்க்கிறோம். தமிழ் மொழிக்கே சிறப்பான ழ கரமும், ற கரமும் இதில் அதிகமாக விரவிக் கிடக்கின்றன.

முருகப் பெருமானுக்கு மிகவும் உகந்த பல அலங்காரப் பாடல்களை நல்ல தமிழிலே சொன்ன பெருமான் அருணகிரியார்.

சைவ நெறியிலே நின்ற அருணை முனிவருக்கு எப்படிச் சைவம் அல்லாத பிற சமயங்களிலே வெறுப்பு இல்லையோ, அப்படியே நல்ல தமிழிலே அவருக்குள்ள ஆர்வம் பிறமொழியிலே வெறுப்பை விளைவிக்கவில்லை. சாதியிலோ, சமயத்திலோ, மொழியிலோ வேறுபாடு காணாதது, அவரது சமரசத்தன்மை நிரம்பிய தூய உள்ளம். நாம் முன்பு பார்த்த,

> ''மரணப்ர மாதம் நமக்கில்லை யாம்என்றும் வாய்த்ததுணை
> கிரணக் கலாவியும் வேலுமுண் டேகிண் கிணிமுகுள
> சரணப் ரதாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
> பரண! க்ரு பாகர! ஞான கரசுர பாஸ்கரனே!''

என்ற பாடலிலே முன் இரண்டடிகளில் தமிழும் வடமொழியும் கலந்து இருக்கின்றன. பின் இரண்டடிகளில் வட மொழித் தொகைச் சொற்கள் மிகுதி. தொகைச் சொல்லைக் சமாசபதம் என்று வடமொழியில் சொல்வர். ''சமஸ்கிருதப் பாடல்களில் கூட இவ்வளவு தொகைச் சொற்களைச் சேர்த்துச் சொல்லி இருக்கமாட்டார்களே! தமிழ்ப்பாட்டில் இப்படி வடமொழியைக் கலப்பது முறையா? இது தகுமா? இது தருமந்தானா?'' என்று கேள்வி எழுகின்ற காலம் இது. எனக்குத் தமிழ்தான் வேண்டும் என்று சொல்கிற மக்கள் இருக்கிறார்கள். அதுவும் இன்று பார்க்கப் போகிற பாடலை முருகக் கடவுளே எதிரில் வந்து நின்று, ''இது என்னுடைய அன்பன் அருணகிரி எழுதிய பாட்டு. அன்பினாலே சொன்ன பாட்டாகையினாலே எனக்கு மிகவும் உகந்தது'' என்று சொன்னாலுங்கூட, ''இந்தப் பாட்டை நான் பாடமாட்டேன்! இது எனக்கு வேண்டாம் என்று சொல்லும் தமிழ்ப் பெருமக்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். அரசியல் உலகத்தில் பலவித மான வெறி இருப்பது போலவே மொழியின் திறத்திலும் வெறி தலைதூக்கி நிற்கிற காலம் இது.

## ஒரே பண்பாடு

இந்திய நாடு முழுவதும் ஒரே ஒரு பண்பாட்டில் திளைக் கிறது என்பதைச் சில அரசியல்வாதிகள் ஒப்புக் கொள்வதில்லை. தமிழன் என்பது ஒரு தனி இனம் என்றும், அவனுக்கோர் தனிப் பண்பாடு உண்டென்றும் சொல்வார்கள். ஒரு பண்பாட்டைப்

பின்பற்றும் தன்மையிலே சில வேறுபாடுகள் இருக்கலாம். இமயம் முதல் குமரி வரையிலும் ஒரு பண்பாடு விரவிக் கிடக்கிறது என்பதை நம் நாட்டு நூல்கள் மாத்திரம் அல்ல. பிறமொழி நூல்களும் சொல்கின்றன.

அதோடு மட்டுமன்று; சைவர்களாகிய தமிழ்நாட்டு அன்பர்கள் தொழுகின்ற சிவபெருமானே கைலாசத்தில் வாசம் செய்கிறதாக நம்புகிறோம். தட்சிண கைலாசம் தென்னாட்டில் இருக்கிறதென்று சொல்வார்களே தவிர, இயற்கையான கைலாசம் இங்கு இருக்கிறதென்று யாரும் சொல்வது இல்லை; அது இமாசலத்தில் இருக்கிறதென்றே ஒப்புக் கொள்வார்கள்.

தமிழ்நாட்டில் இருந்து இமயமலைச் சாரலில் உள்ள கைலாசத்திற்கு நாம் போகிறோம்; வடக்கே உள்ளவர்கள் நம் நாட்டிலுள்ள கன்யாகுமரியை நாடி வருகிறார்கள். இப்படி இமயத்திற்கும் குமரிக்கும் ஒரு தொடர்பு இருப்பதைப் பார்க்கிறோம்.[1] இந்தப் பெரும் நிலப்பரப்பில் வாழ்கிற மக்களுக் கிடையே உணவு, உடை, ஆகாரம் ஆகியவற்றில் வேறுபாடு இருந்தாலும், அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய உயிருக்குப் பயன்படுகிற செய்திகளில் பாரத நாட்டிலுள்ள எல்லா மக்களும் ஒரே விதமான கொள்கையை உடையவர்கள். இந்தப் பண் பாட்டில் வேற்றுமை இல்லை. மொழியினாலே நாம் தமிழர்கள் என்றால், பண்பாட்டை ஒட்டி இந்தியர்களாகவும் அன்பினாலே உலகத்திலுள்ளவர்களுக்கு எல்லாம் சகோதரர்களாகவும் இறைவனுடைய குழந்தைகளாகவும் விளங்குகிறோம்.

''அப்படியானால் நம்முடைய தமிழைக் காப்பாற்ற வேண்டாமா?'' என்று ஒரு கேள்வி எழும். காலை நன்றாகக் காப்பாற்ற வேண்டும் என்பதற்கோ, உடம்பிலுள்ள உறுப்பு களிலேயே உத்தமாங்கம் என்று சொல்லப்படுகிற தலையைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்கோ, காலுக்கும் தலைக்கும் தனித் தனியாக உணவு ஊட்டுகிறோமா? தலையிலே வலி வந்தாலும், காலிலே குடைச்சல் எடுத்தாலும் உள்ளுக்கு மருந்து சாப்பிடுகிறோம். அப்படித் தமிழர்களுடைய பண்பு குலையாமல் இருக்க வேண்டு

1. இக்கருத்தை 'இமயமும் குமரியும்' என்ற கட்டுரையில் விரிவாக விளக்கியிருக்கிறேன்.

மென்றால், தெலுங்கர்களுடைய பண்பு குறையாமல் இருக்க வேண்டுமென்றால், வங்காளிகளுடைய பண்பு குறையாமல் இருக்க வேண்டுமென்றால் இமயமுதல் குமரி வரையிலும் எல்லோருக்கும் பொதுவாக இருக்கிற இந்தியப் பண்பாடு குறையாமல் இருக்கப் பாடுபடவேண்டும்.

## வடமொழியும் தமிழும்

பொதுவாக இந்திய பண்பாட்டின் வளர்ச்சியில் தமிழும் வடமொழியும் சேர்ந்து கைகோத்துக் கொண்டு நடனம் ஆடிய நாடு இது. பக்தர்கள் எல்லாம், ''முருகா, ஷண்முகா'' என்று ஆண்டவனுடைய நினைவிலே மனம் ஒன்றித் துதித்தார்கள். ''முருகா என்பது தென்மொழி; ஆகவே அது இருக்கட்டும். ஷண்முகா என்பது வடமொழி; அது நமக்கு வேண்டாம்'' என்று மொழி ஆராய்ச்சி செய்து பார்த்து வெறுத்தார்கள் இல்லை. இறைவனைத் துதிக்கும்போது தோத்திரத்திலே உள்ள சொற்களில், ''இது வடசொல், நமக்கு வேண்டாம்; இது தமிழ், இருக்கட்டும்'' என்றெல்லாம் பார்த்தால் இறைவன் திருவருள் கிடைக்காது. உயிர் ஆண்டவனோடு தொடர்புடையது; மொழி நிச்சயமாக நாக்காகிய கரணம் ஒன்றோடு தொடர்புடையது. இந்திரியங்களினால் நுகர்வதற்கு அப்பாற்பட்டவனாயும், மொழிக்கும் அப்பாற்பட்ட வனாயும் இருக்கிறவன் எம்பெருமான். நாக்குடனே தொடர் புடைய மொழியை மட்டும் பற்றிக் கொண்டவர் இறைவனோடு தொடர்புடைய உயிரின் பற்றை அறுத்துக் கொண்டவர்களாகிறார்கள்.

பாரத நாட்டு மக்களிடையே வழங்கும் மொழி எண்ணற்றன என்றாலும் இலக்கண இலக்கியச் செறிவு இல்லாதவற்றை விலக்கிச் செப்பும் மொழி பதினெட்டு என்று குறித்தார்கள். அந்தப் பதினெட்டிலும் வடமொழி, தென்மொழி ஆகிய இரண்டுமே தலைமையானவை. வடக்கே வழங்கிய மொழி வடமொழியா யிற்று. தெற்கே பேசப்பட்ட மொழி தென்மொழி ஆயிற்று. வட நாட்டில் உள்ளவர்கள் பிராகிரத மொழி பேசினார்கள். பிராகிரதம் என்றால் இயற்கை. பிராகிருத மொழி சுத்தமாகத் தெரிந்தெடுக்கப் படாத, இயற்கையான மொழி; பேச்சில் வழங்கும் மொழி. தமிழிலும்கூடப் பேச்சுத் தமிழ் வேறு, எழுத்துத் தமிழ் வேறு. எழுதுவது செந்தமிழ்; பேசுவது கொடுந்தமிழ். சுத்தமாக

இலக்கணப் பிழை எதுவும் இன்றிப் பொறுக்கி உருவம் குலை யாத வார்த்தைகளைப் போட்டு எழுதுவது செந்தமிழ். பேசும் போது நாம் வளைந்து வளைந்து சென்று பேசுகின்றோம். ஆகவே இதற்குக் கொடுந்தமிழ் என்று பெயர் வந்தது. குழந்தை வளைந்து வளைந்து நடப்பது எப்படித் தவறு இல்லையோ அப்படிப் பேசுவதில் செந்தமிழ் இல்லாமல் வளைந்து வளைந்து கொடுந்தமிழில் பேசுவது தவறு என்று கருதுவதில்லை. பேச்சுத் தமிழ் எப்போதும் கொச்சையான தமிழாக இருக்கும். கொச்சைத் தமிழிலே எழுதினால் எல்லாப் பகுதி மக்களும் புரிந்துகொள்ள முடியாது. ஆகவே எல்லோருக்கும் பொதுவான செந்தமிழில் எழுதுவார்கள். அப்படியே பேசப்பட்ட பிராகிருத மொழி வேறு; பிராகிருதத்திலிருந்து நன்றாகத் திருத்திச் செய்யப்பட்டது சம்ஸ் கிருதம். சம்ஸ்கிருதம் என்றாலே நன்றாகச் செய்யப்பட்டது என்பதுதான் பொருள்.

சம்ஸ்கிருதத்தை ஒத்த மதிப்பைப் பெற்ற மொழி தமிழ்; சம்ஸ்கிருதத்தில் வேதம் உண்டு என்றால், தமிழ் வேதமாகிய தேவாரமும் திவ்யப் பிரபந்தமும் தமிழ்மொழியில் உண்டு. சம்ஸ்கிருதம் எத்தனை பழையதோ அத்தனை பழையது தமிழ். ஹிந்தி மொழியைப் பரமேசுவரன் உபதேசித்தான் என்று யாரும் சொல்லவில்லை. சம்ஸ்கிருத மொழியின் இலக்கணத்தைப் பாணினிக்கும், தமிழ் மொழியின் இலக்கணத்தை அகத்தியருக் கும் பரமேசுவரன் உபதேசித்தான் என்று பல இடங்களில் புலவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

**"விடையு கைத்தவன் பாணினிக் கிலக்கணம் மேனாள்**
**வடமொ ழிக்குரைத் தாங்கியல் மலயமா முனிக்குத்**
**திடமு றுத்தியம் மொழிக்கெதி ராக்கிய தென்சொல்"**

என்று பரஞ்சோதி முனிவர் கூறுகிறார். இரண்டு மொழிகளும் பரமேசுவரனுக்கு உகந்த மொழி; இரண்டு மொழிகளிலும் பல காலமாகப் பல பல பெரிய புலவர்கள் பாடியிருக்கிறார்கள். ஒரு பொருள் பல காலம் இருக்க வேண்டுமானால் அதற்குப் பலம் வேண்டும்; எத்தனைக்கு எத்தனை கப்பும் கிளையுமாக மரம் படர்ந்து கிடக்கிறதோ அத்தனைக்கு அத்தனை அதன் வேர் பூமிக்குள் நெடுந்தூரம் ஓடியிருக்கும். சமய நூல்களும் காவியங்

களும் இலக்கியங்களும் தமிழ் வடமொழிகளில் அதிகமாக இருப்பதிலிருந்தே தமிழ் வடமொழி ஆகியவற்றின் வேர்கள் மிக்க பலம் உடையவை என்று தெரியவரும். சம்ஸ்கிருதத்தில் பேசுவோர் இல்லை என்கிறோம். அது ஒரு குறையன்று. நாம் எழுதும் செந்தமிழில் பேசுவோரும் இல்லை. இரண்டு மொழியும் பரமேசுவரனால் உபதேசிக்கப்பட்ட மொழியாகையால் இரண்டையும் நம் நாட்டவர்கள் சமமாகவே கண்டார்கள்; வடமொழி தமிழ்மொழி ஆகிய இவ்விரண்டிலும் இருந்துதான் மற்ற மற்றப் பாரதநாட்டு மொழிகள் எல்லாம் உருப்பெற்று வளம் பெற்றன. இயற்கையான பேச்சில் இந்த இரண்டு மொழியும் கலந்தே வருகின்றன.

## வடமொழியின் பொதுத்தன்மை

ஆங்கிலம் நம் நாட்டு மொழியே அன்று. இருப்பினும் ஆங்கிலப் பத்திரிகைகள் நம் நாட்டில் இருந்து வெளிவருகின்றன. இந்த நாட்டில் தெலுங்கு பேசுபவராக இருந்தாலும், தமிழ் பேசுபவராக இருந்தாலும், வங்காளம் பேசுபவராக இருந்தாலும் பத்திரிகை வாங்கிப் படிப்பவர்கள் பொதுவாக ஆங்கிலம் படித்தவர்களாக இருப்பதால் ஆங்கிலத்தில் பத்திரிகைகள் வருகின்றன.

அதுபோலப் பழைய காலத்தில் எந்த மொழி பேசுபவராக இருந்தாலும் கற்றவர் சம்ஸ்கிருதமும் படித்தவராக இருந்தமையால் எல்லோருக்கும் பயன்படவேண்டி மணியின் லட்சணம், வேதாந்தம், ஆகமம், சித்தாந்தம் முதலிய நூல்களை வடமொழியில் எழுதி வைத்தார்கள். அதை உணர்ந்து கொள்ளாது வடக்கே இருப்பவர்களுக்கு மட்டும் பயன்பட வேண்டுமென்று வடமொழியிலே எழுதி வைத்தார்கள் என்று சொல்வது சரியல்ல.

## வடமொழி அறிந்த தமிழர்

தென்னாட்டிலுள்ள பிராமணர்களுக்குத்தான் சம்ஸ்கிருதம் தெரியும் என்று சொல்வதும் தவறு. வடமொழியை நன்றாகக் கற்றுணர்ந்த சைவர்கள் பலர் இருந்திருக்கிறார்கள்; இப்போதும் இருக்கிறார்கள். வால்மீகி இராமாயணத்தில் ஒவ்வொரு பகுதியையும் படித்து நன்றாகச் சுவைத்துப் பின்னர்த் தமிழிலே வடித்துத் தந்த பெரும் புலவர் கம்பர். தென்மொழியை நன்றாகக் கற்றுத்

தெரிந்து வடமொழியிலேயே காவியங்கள் இயற்றிய புலவர்களும் உண்டு. மெய்கண்டார் இயற்றிய சிவஞான போதத்திற்குப் பாஷ்யம் எழுதியவர் சிவஞான முனிவர். வடமொழி தென்மொழி இரண்டையும் கரைகண்டு உணர்ந்தவர் அவர்.

ஆகவே வடமொழி என்பது இந்திய நாட்டிலுள்ள ஏதோ ஒரு பகுதியினருக்கு மட்டுந்தான் சொந்தம் என்று நினைப்பது தவறு. இமயம் முதல் குமரிவரையிலுள்ள எல்லோருக்கும் சொந்தமானது அது. ஆகையினால் அம்மொழி ஓர் ஒழுங்கோடு இருக்கவேண்டும். அதற்காகப் பேச்சிலே இருந்த பிராகிருத மொழிச் சொற்களைப் பொறுக்கி எடுத்து ஒழுங்குப்படுத்தி அமைத்ததுதான் சம்ஸ்கிருதம். உபதேச மந்திரங்கள் எல்லாம் சம்ஸ்கிருதத்திலேயே உள்ளன. பிராமணர்கள் அல்லாத தீட்சை பெற்ற தென்னாட்டுச் சைவர்கள் பலர் சுத்தமான சமஸ்கிருதத்திலேயே இன்னும் பல சட்ங்குகளைத் தமிழ்நாட்டில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சிற்பிகளும் சைவர்களின் குருக்களும் வடமொழிப் பயிற்சி உடையவர்களாக இருக்கிறார்கள்.

ஆரியத்திற்குச் சமமான மொழி தமிழ். இரண்டும் ஒப்ப நோக்கத் தக்கனவே தவிர ஒன்றுக்கு ஒன்று உயர்வு தாழ்வு என்று காண்பது தவறு.

குமரகுருபரர் மீனாட்சி அம்மையைப் பாடுகிறார். ''அருமையாகத் தொடுக்கப்பட்ட தெய்வத் தன்மை வாய்ந்தது. வடமொழி வேதம். அந்த வேதத்தைத் தெரிந்து கொள்வதன் மூலம் கிடைக்கும் பயனாக இருக்கிற பெருமாட்டி மீனாட்சி'' என்கிறார்.

**''தொடுக்கும் கடவுட் பழம்பாடல் தொடையின் பயனே!''**

அதுமாத்திரமா? வேதத்தைப் பெற்ற வடமொழியைப் போலவே சிறந்து நின்று பழுத்த மொழி தமிழ். தமிழ் பேசினால் அது நாக்கிலே சுவைக்கும். தமிழிலே பல துறைகள் இருக்கின்றன. ஒவ்வொரு துறையும் இனிமையானது; தேன் கசியும் சுவையை உடையது. அத்தகைய துறைகளையுடைய தமிழில் ஒழுகுகின்ற இனிய சுவையாக இருக்கிறான் அங்கயற்கண்ணி.

**''நறைபழுத்த**
**துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ் சுவையே!''**

என்று அழைக்கிறார் குமரகுருபரர். வடமொழி, தென்மொழி ஆகிய இரண்டும் தெய்வங்களுக்கு உகந்த மொழிகள் ஆகையாலே அடியார்கள் இரண்டையும் சமமாகவே கண்டார்கள்.

''வடநாட்டு மொழி ஆரியம்; அது வேண்டாம்'' என வெறுத்து ஒதுக்குபவர்கள் போக்கை நினைந்து இத்தனையும் சொன்னேன். நம் நாட்டுப் பண்டம் அல்ல என்று குட்டிகூராப் பவுடர் வாங்காமல் இருக்கிறோமா? பிளேடு வாங்காமல் இருக்கிறோமா? பல மருந்துப் புட்டிகளை வாங்காமல் இருக்கிறோமா? வெளிநாடுகளிலிருந்து அவற்றையெல்லாம் வாங்கி உபயோகித்த பழக்கம் இருப்பதனாலே அவற்றை வேண்டாம் என்று ஒதுக்க நமக்கு மனசு வரவில்லை. அவை எந்த நாட்டுப் பொருள் என்றாலும் மனித சமுதாயம் அத்தனையும் அநுபவிக்கிற பொருள் ஆகையால் நாம் எல்லோரும் வாங்குகிறோம். அப்படியே மனித சமுதாயம் உய்வதற்குரிய அரிய பல கருத்துக்கள் கொண்ட மொழி சம்ஸ்கிருதம்; அதோடு ஒரே பண்பாட்டையுடைய பாரத நாட்டு மொழி அது. ஆகையாலே தென்னாட்டவர்களும் அதை விரும்பிப் படித்தார்கள்.

## தமிழ்நாட்டில் வேதம்

**பா**ண்டிய நாட்டைத்தான் சிறப்பாகத் தமிழ்நாடு என்பர். தமிழ் வளர்த்த சங்கத்தின் பீடமாக அமைந்திருந்தது பாண்டிய நாடு. தமிழரசியின் அரசிருக்கை மதுரை. சிவபெருமானே சங்கப் புலவர்களோடு கூடி அமர்ந்து தமிழ் ஆய்ந்த இடம் என்று மதுரையைச் சிறப்பிப்பார்கள்.

அந்த மதுரையிலே ஒரு சமயம் சேர சோழ பாண்டிய நாட்டுப் புலவர்கள் பலர் கூடியிருந்தார்கள். பேச்சு வாக்கிலே ஒரு புலவர், ''எங்கள் நாட்டில் உள்ளவர்கள் முதற் கோழி கூவியவுடனேயே எழுந்துவிடுவார்கள்'' என்று சொன்னார். அவர் பாண்டி நாட்டவர் அல்ல; சோழ நாட்டவர்.

அதைக் கேட்ட மதுரை நகரப் புலவர், ''நீங்கள் எல்லாம் கோழி கூவித்தான் எழுந்திருப்பீர்களா? எங்கள் நாட்டிலுள்ளவர்கள் கோழி போன்ற பறவை கூவி எழுந்திருப்பது இல்லை. திருமாலினுடைய நாபியில் உதித்த தாமரைப் பூவில் வாசம் செய்கிற பிரமன்

நாவில் இருந்து வெளிப்பட்ட நான்மறையின் ஒலி கேட்டு விழித் தெழுவோம்'' என்றார்.

> **''பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த**
> **நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப**
> **ஏம இன்துயில் எழுதல் அல்லதை**
> **வாழிய வஞ்சியும் கோழியும் போலக்**
> **கோழியின் எழாஅதெம் பேரூர் துயிலே.''**

மதுரை மாநகரத்தில் வேத வல்லுநர்கள் பாட, அந்த ஒலியைக் கேட்டு மற்றவர்கள் எழுந்திருப்பார்களாம். ''சேர மன்னர் தலை நகராகிய வஞ்சியிலும் சோழர் தலைநகராகிய உறையூரிலும் உள்ள மக்கள் கோழியின் குரலைக் கேட்டு எழுவது போல நாங்கள் எழுவதில்லை'' என்கிறார் புலவர்.

அக்காலத்தில் தமிழின் தலைநகரில் வடமொழி மறைக்கு எத்தனை மதிப்பு இருந்ததென்பதை இது புலப்படுத்தும்.

''வேதம் நிறைந்த தமிழ்நாடு'' என்று நம் காலத்துப் புலவ ராகிய பாரதியாரும் பாடியிருக்கிறார்.

சிவம் பெரிதா, சக்தி பெரிதா என்று சீர்தூக்கிப் பார்த்து ஒன்றை விலக்க முடியுமா? பரமேசுவரன் வடமொழி என்றால் பராசக்தி தமிழ்.

> **''ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்''**

என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார். வடமொழியில் வெறுப்பில் லாமல் தமிழ் மொழியை வளர்த்தவர்கள் தமிழர்.

## வடசொல்

தொல்காப்பியத்தில் செய்யுட்குரிய சொற்களை இயற் சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று நான்காகப் பிரித்து இலக்கணம் வகுத்தார்.

வடசொல் என்றால் என்ன? ராம: என்றால் சம்ஸ்கிருதம் அல்லது ஆரியம்; அதுவே ராமன் என்று வந்துவிட்டால் வட சொல் ஆகிறது. தெற்கே இருக்கிறவன் வடக்கிலிருந்து வருபவனைப் பார்த்து வடக்கத்தியான் என்கிறான். சம்ஸ்கிருதச் சொல் அப்படியே இருந்தால் சம்ஸ்கிருதம்; அல்லது ஆரியச் சொல்; தமிழில் வந்து

புகுந்தால் வட சொல். வடசொற்களைத் தேவார திருவாசக திவ்யப் பிரபந்த ஆசிரியர்கள் எல்லாம் மிகுதியாக ஆண்டிருக்கிறார்கள்.

# 2

## அருணகிரியார் ஆர்வம்

**சா**தி, சமயம், மொழி ஆகிய எல்லாவற்றிலும் தெள்ளத் தெளியத் தமது சமரச மனோபாவத்தைக் காட்டும் அருணகிரிநாத சுவாமிகள் தமிழில் வல்லவர் என்பது மட்டுமன்றி வட மொழி யிலும் நல்ல புலமை படைத்தவர். அதற்குச் சான்று இந்தப் பாட்டு. வடமொழியையும் தமிழையும் இணைத்து அவர் பாடும் பாடல்களில் இதுவும் ஒன்று.

இந்தப் பாட்டின் முதல் இரண்டடிகளில் ஆண்டவனிடத்தில், 'ஆண்டவனே நான் வேண்டுமென்று ஒன்றைக் கேட்கிறேன்; அதை எனக்கு நீ வழங்குவாயாக'' என்று விண்ணபித்துக் கொள்கிறார். அவர் கேட்பது எது?

ஆர்வம் ஈ!

''ஆர்வத்தை, விருப்பத்தை, கொடுப்பாயாக.'' விருப்பம் எதிலே வரவேண்டும்? நாம் செல்வத்தில், வீட்டில், மனையாட்டியிடத் தில் ஆர்வத்தை வைப்போம். அருணை முனிவர் அவற்றிலே விருப்பம் வைப்பாரா? அவர் எதை விரும்பி யாசிக்கிறார்?

''ஆண்டவனே, உன்னுடைய புகழை நேர்முகமாகச் சொல்வ தற்கு இன்னும் எத்தனையோ பக்குவம் உயர வேண்டும். பக்கத்து வீட்டிலுள்ள பெரிய பணக்காரரோடு நட்புப் பூண்பதற்கு, முதலில் அவன் வீட்டு வேலைக்காரனைச் சிநேகம் பிடிக்க வேண்டியிருக்கிறது. உன்னோடு நான் நேராகத் தொடர்பு கொள்ள வேண்டுமென்றால் அதற்கு ஏற்ற தகுதி எனக்கு வரவேண்டாமா? உன்னுடைய புகழுக்கு அணிகளாக இருக்கிற வேலையும், செஞ் சேவலையும் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அவற்றைப் புகழ்கின்ற பாட்டுப் பாட வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. அதுவும் செந்தமிழால் பாட வேண்டும். சேவலையும் வேலையும் செந்தமிழால் பாடுகின்ற ஆர்வத்தை எனக்குக் கொடுப்பாய், அப்பா'' என்று கேட்கிறார்.

## வேலும் சேவலும்

**சிகராத்ரி கூறிட்ட வேலும் செஞ்சேவலும் செந்தமிழால் பகர் ஆர்வம் ஈ.**

அத்திரி என்பது மலை. சிகராத்ரி – கொடுமுடிகளோடு கூடிய மலை. இங்கே கிரௌஞ்ச மலையைக் குறிப்பிக்கிறது. போன பாட்டிலே,

**''மலையாறு கூறெழ வேல் வாங்கினானை''**

என்று கிரௌஞ்ச மலை ஆறு கூறுகளாகப் போகும்படி வேலை விடுத்த முருகனை வணங்கி, அன்பால் நிலையான மாதவம் செய்யச் சொன்னார் அல்லவா? கிரௌஞ்ச மலை ஆறு கூறுகளாகப் போகும்படி செய்தது முருகன் கரத்திலிருந்து விடுபட்ட வேல். அதை இங்கே சொல்கிறார்.

**சிகராத்ரி கூறிட்ட வேலும்**

கொடுமுடிகளோடு கூடிய மலையாகிய கிரௌஞ்ச கிரியைக் கூறிட்ட, பொடிப் பொடியாக்கிய, வேலையும்.

**செஞ் சேவலும்.**

சிவந்த இறகுகளோடு கூடிய கோழியையும்.

**செந் தமிழால் பகர் ஆர்வம் ஈ.**

''செய்ய தமிழினாலே, சிறிதேனும் குற்றமில்லாத, இலக்கணப் பிழை இல்லாத தமிழினாலே தோத்திரம் பண்ணுகிற ஆர்வத்தை எனக்குக் கொடுப்பாயாக'' என்று சொல்கிறார். தமிழ்ப் பாட்டிலே பாடும் ஆர்வத்தைக் கொடுப்பாயாக என்று இவர் இரப்பதற்குக் காரணம் என்ன? 'இவருக்குத் தமிழ் நன்றாக வராது போலிருக்கிறது. எடுத்த எடுப்பிலேயே சிகராத்ரி என்று வட சொல்லாலே ஆரம்பித்திருக்கிறாரே. அந்தக் குறையை இவரே உணர்ந்து கேட்கிறார்' என்று சில அதிக ஆராய்ச்சிக்காரர்களுக்குத் தோன்றும். அவர் எத்தனை அழகான தமிழ்ப் பாடல்களைப் பாடியிருக்கிறார் தெரியுமா? கந்தர் அநுபூதியில்,

**''செம்மான் மகளைத் திருடும் திருடன்**
**பெம்மான் முருகன் பிறவான் இறவான்**
**சும்மா இருசொல் அறஎன் றலுமே**
**அம்மா பொருளொன் றும்அறிந் திலனே''**

என்று வருகின்ற பாட்டிலே ஒரு வடசொல்கூட இல்லை. இப்படிப் பல பாடல்களைச் செந்தமிழில் பாடும் பெரும் புலவர் அருணகிரியார். கந்தர் அலங்காரத்திலும் இதற்குச் சான்றாகப் பல பாடல்கள் உண்டு. ஆகவே, வடசொற்கள் பாட்டிலே வருவதனால் அருணகிரியாருக்குத் தமிழ் தெரியாது என்று சொல்லிவிட முடியாது. நன்றாகத் தெரியும்.

## வடசொல் இணைப்பு

வடமொழியும் தமிழும் எம்பெருமானுக்கு உகந்த மொழிகளாதலால் தமிழ்ப் பாட்டினிடையில் வடசொற்களை இணைத்துப் பாடினால் அவற்றையும் எம்பெருமான் உகந்து கேட்பான்; அது தவறு அல்ல என்ற கருத்தைக் குறிப்பாகத் தெரிவிக்கவே, இந்தப் பாட்டின் முன் இரண்டடிகளிலே, ''செந்தமிழால் பகர்கின்ற ஆர்வத்தைக் கொடுப்பாயாக'' என்று கேட்டுவிட்டு, பின் இரண்டடிகள் முழுவதையும் வட சொற்களாலே அமைக்கிறார் போலும்.

**பணிபாச சங்க்ராம பணாமகுட**
**நிகராட்சம பட்ச பட்சி துரங்க ந்ருப! குமரா!**
**குக! ராட்சச பட்ச! விட்சோப தீர! குணதுங்கனே!**

## மயிலின் பெருமை

பணத்தை உடையது பணி. பணம் – படம். படத்தை உடைய நாகப்பாம்புக்குப் பணி என்று பெயர். அந்தப் பாம்பு மயில் போகும்போது காலிலே கயிறு போலச் சுற்றிக் கொள்கிறது. அதோடு படத்தை எடுத்துச் சண்டை போடுகிறது. நாகப்பாம்புக்கும் கருடனுக்கும் எப்படி விரோதமோ அப்படியே மயிலுக்கும் பாம்புக்கும் விரோதம். பணியாகிய கயிற்றோடு போரிடும் தன்மை உடையது மயில். சங்க்ராமம் – போர். நாகம் படத்தை எடுத்தாலே மயிலுக்குக் கோபம் வந்துவிடும்.

பணாமகுட நிகரம் – படங்களையுடைய முடிகளின் தொகுதி. படங்கள் சேர்ந்த கூட்டம் உடைய தலை ஆதி சேஷனுக்கு உண்டு. நிகரம் – கூட்டம். பல தலைகளைக் கூட்டமாக உடைய ஆதிசேஷனைப் போன்ற பாம்புகளைக் கண்டால் எம்பெருமானின் வாகனமாகிய மயில் அஞ்சுவதில்லை. பல முடிகள் இருப்பதனால் பாம்பு சீறுகிறது. அந்தத் தலைக் கூட்டத்தைக் கண்டு மயில்

சினத்தைக் கொள்கிறது. அதைப் பட்சிக்கும் துணிவைக் கொள்ளும் பட்சி அது.

**பணாமகுட நிகர அக்ஷம பட்ச பட்சி.**

ஆயிரம் பணா முடியை உடைய பாம்பைக் கண்டாலே போதும்; கொஞ்சம்கூட க்ஷமை இல்லாத கோபத்தோடு கூடிய மயில், அந்தப் பாம்பைப் கொத்திக் கொத்தி அடக்குகின்றது. க்ஷமை என்றால் பொறுமை. அதற்கு நேர் விரோதம் அட்சமை. அட்சமை என்றால் பொறுமை இன்மை; கோபம். மற்றப் பாம்பாகிய கயிறுகளைப் போலப் போர் செய்ய வருகின்ற பல தலைகளை உடைய, படங்களின் கூட்டத்தை உடைய நாகப் பாம்பைக் கண்டு அஞ்சாமல், பொறுக்கும் தன்மையில்லாத கோபத்தோடு அப்பாம்பைக் கொத்திக் கொத்திப் பட்சிக்கின்ற பறவை மயில்; அதை வாகனமாக உடைய அரசன், தலைவன் முருகன்.

**பட்சி துரங்க ந்ருப! குமரா!**

பறவையாகிய மயிலைக் குதிரை போன்ற வாகனமாக உடைய பெரிய நிருபன். ந்ருபன் – பெரிய தலைவன்; அரசன் என்று பொருள். "நிருபனே, குமரனே" என்று விளிக்கிறார்.

## அரசன்

"தேவர்களுக்குத் தலைவன் இந்திரன்; அவனைத்தான் தேவராஜா என்பர். முருகன் எப்படி அரசனாவான்?" என்று கேட்கலாம். சூரபன்மனால் சிறையில் அடைக்கப்பட்டபோது அந்தத் தேவராஜனால் தேவர்களைக் காப்பாற்ற முடிந்ததா? தன் மனைவி சசி தேவியின் மாங்கல்யத்தைத்தான் காப்பாற்ற முடிந்ததா? இல்லை. அந்தத் தேவராஜனுக்கும் அரசனாகிய முருகன் அவதாரம் செய்தான்; எல்லோரையும் காப்பாற்றினான். சசிதேவி மங்கல்ய தந்து ரக்ஷா பரணனாக வந்த அரசன் ஷண்முக நாதன். இந்திரன் அரசனானால் அந்த அரசனுக்கும் அரசனான சக்ரவர்த்தி முருகன்.

## குமரன்

நிருபன் என்று சொன்னவர் அடுத்து,

**குமரா!**

என்கிறார். குமாரன் என்ற சொல்லுக்கு இளமை உடையவன் என்பது ஒரு பொருள். மாரனுடைய அழகைக் குலைப்பவன் என்பது ஒரு பொருள். மாரன் அழகு புறக்கண்ணுக்குத்தான் தோற்றும். குமாரனின் அழகு அகக் கண்ணுக்கும் தோன்றும்.

## குகன்

அடுத்தபடி,

**குக!**

என்றார். குகன் – குகையில் இருப்பவன். குறிஞ்சி நிலத்து வள்ளியெம்பெருமாட்டியை மலைக்குகையில் அளவளாவி இன் புற்றான். இந்த ஞானமூர்த்தி எல்லோருடைய இருதயத்திலும் வசிக்கின்றான். இருதயம் குகை போன்ற இடம். இருதய குகையிலே யார் ஞான விளக்கை ஏற்றி வைத்துக் கொள்கிறார் களோ அவர்கள் இருட்டிலே தெரிந்து கொள்ள முடியாது இருந்த எம்பெருமானைத் தெரிந்து கொள்கிறார்கள். இருதயத்திலுள்ள குகையைத் தகராகாசம் என்று சொல்வார்கள். அங்கே அவன் இருப்பதனால் அவனுக்குக் குகன் என்று பெயர் வந்தது.

## அசுரர்க்குப் பகைவன்

**ராட்சச பட்ச!**

ராட்சசர் என்ற சொல் உபலட்சணத்தினாலே அசுரர்களையும் குறிக்கும். நல்ல காரியங்களைச் செய்து வருகிற நல்லவர்களுக்கும், தேவர்களுக்கும் தீங்கை விளைப்பவர்கள் அசுரர்களும் ராட்சசர் களும். இந்த ஒற்றுமையினால் சில சமயங்களில் ராட்சசர்களை அசுரர் என்றும், அசுரர்களை ராட்சசர் என்றும் சொல்வது உண்டு. இங்கே அருணகிரிநாதர் அசுரர் என்ற பொருளில் ராட்சசர் என்பதை அமைத்திருக்கிறார்.

''ராட்சசர்களைப் பட்சிக்கின்றவனே' என்பது இத்தொடரின் பொருள். ''அவர்களைக் கொன்று தின்கின்ற நர மாமிச பட்சிணியா உங்கள் இறைவன்!'' எனக் கிண்டலாகச் சிலர் கேட்கலாம். ஒருவனைப் பார்த்து, ''அவனிடம் நீ போகாதே. அவன் உன்னைச் சாப்பிட்டு விடுவான் ஐயா'' என்று நாம் சொல்கிறோம்.

சாப்பிட்டு விடுவான் என்று சொல்வதற்கு என்ன பொருள்? இவனையும்விடச் சாதுரியம் நிரம்பியவன் அவன். தன்னுடைய திறமையினாலே இவனை அவன் வென்று விடுவான் என்ற கருத்தையே அப்படிச் சொல்கிறோம்.

அசுரர்கள் பொல்லாதவர்கள்; நல்லவர்கள் செய்கின்ற யாகங்களை அழிக்கின்றவர்கள்; நல்லவர்களுக்குத் தீங்கை விளைப்பவர்கள். முருகப் பெருமான் நல்லவர்களைக் காப்பாற்றி யாக ரக்ஷணம் பண்ணுகிறவன்.

யாகத்திலே ஆகுதி பண்ணும் முன், ''ஸுப்ரம்மண்யோம்'' என்று மூன்று முறை சொல்வார்கள். பிறகு வேள்வியை நிறைவேற்றுவார்கள். பல தெய்வங்களுக்குச் செய்கின்ற ஆகுதிகளை நடுவில் அசுரர்கள் கைப்பற்றாமல் இருக்கப் பாதுகாவலன் வேண்டுமல்லவா? ''ஸுப்ரம்மண்யோம்'' என்று மும்முறை சொல்லி ஆகுதி செய்வதற்குக் காரணம், முருகப் பெருமான் காவலனாக இருந்து அந்த யாகங்களுக்கு அசுரர்களால் இடையூறு வராவண்ணம் காப்பாற்றவேண்டும் என்ற நோக்கமே. அவன் அப்படியே செய்கிறான்.

**''அந்தண் மறை வேள்வி காவற்கார''**

என்று திருப்புகழில் வருகிறது.

**''நிருதரார்க்கொரு காலா''**

என்றும் திருப்புகழில் வருகிறது.

நல்ல காரியங்களுக்கு இடையூறாக இருக்கிற அசுர சம்பத்துக்களை நாசம் செய்கிறவனாக முருகன் இருக்கிறான் என்பது உள்ளுறை. ஆதலின்.

**ராட்சச பட்ச!**

என்கிறார் அருணகிரியார்.

## கலக்கமில்லாத் தீரன்

அசுரர்களிடத்தில் இரக்கமும், அவர்களைக் காண்பதனாலே பயமும், கலக்கமும் இருந்தால் முருகப் பெருமானால் அவர்களைச் சங்கரித்துச் சுரர்களுடைய நல்ல காரியங்களுக்குப் பாதுகாப்பாக இருக்க முடியாது. முருகன் விட்சோபனாக இருக்கிறான்.

விட்சோப!

க்ஷோபம் என்றால் கலக்கம். விட்சோபம் என்றால் கலக்கமில்லாத தன்மை. எம்பெருமான் கலக்கம் இல்லாதவனாக இருக்கிறான். பாசமாகிய கட்டுடைய மக்கள் அஞ்ஞானத்தில் அழுந்திக் கலக்கம் உடையவர்களாகிறார்கள். பாசமாகிய கட்டை அறுத்து எறிகின்ற ஞானவேலைப் படைத்த எம்பெருமான் எப்போதும் சுத்தஞானத் தெளிவு உடையவனாக இருக்கிறான்; ஞான பண்டித சாமியாக விளங்குகிறான். ஆகவே, 'விட்சோப - கலக்கமில்லாதவனே!' என்கிறார் அருணகிரிநாதர்.

தீர!

''தைரியம் உள்ளவனே'' என்கிறார். நாம் நெஞ்சிலே தீரம் இல்லாமல் பயந்து கொண்டிருக்கிறோம். பக்கத்து வீட்டுச் செல்வனுக்குப் பயப்படுவது மாத்திரம் அல்ல. நமக்கு மேலே இருக்கிற உத்தியோகஸ்தருக்குப் பயப்படுவது மாத்திரம் அல்ல. கரிய கடாமீது வருகின்ற காலனைக் கண்டு பயந்து 'ஓ'வென அலறுகிறோம். எம்பெருமான் காலனுக்கும் காலனாக இருப்பதாலே யாரைக் கண்டும் அவன் அஞ்சுவதில்லை. அவன்தான் மகாதீரன். ''தீர தீர தீராதிதீரப் பெருமாளே'' என்று பாடுவார் திருப்புகழில்.

குணதுங்கனே!

எம்பெருமான் பலவிதமான தூய அருட்குணங்கள் நிரம்பியவன். ஆகவே தூய குணங்களுடையவனே என்கிறார்.

'மயில் வாகனப் பெருமானே, குமரனே, குகனே, ராட்சசர்களைச் சங்கரிக்கின்றவனே, கலக்கமில்லாதவனே, தீரனே, தூய குணங்கள் எல்லாம் நிரம்பப்பெற்றவனே' என்று வடசொல்லாலே ஆண்டவனைத் துதிக்கிறார் அருணகிரியார்.

## வேல் சேவல் மயில்

அருணகிரிநாத சுவாமிகள் தனியே முருகப்பெருமானை மாத்திரம் கும்பிட்டு நிற்பவர் அல்ல. ஞானப்பெருமானுடைய திருக்கரத்திலே படையாக விளங்குகின்ற வேலையும், வாகனமாக இருக்கிற மயிலையும், வெற்றிக் கொடியாக இருக்கிற சேவலையும் சேர்த்துத் துதிப்பது அவரது வழக்கம். சேவல் விருத்தம், மயில் விருத்தம், வேல் விருத்தம் என்று அவற்றைத்

தனியே பாடியிருக்கிறார். வேல் வகுப்பு, மயில் வகுப்பு என்று இரண்டு வகுப்புகள் வேறு பாடியிருக்கிறார்.

அவர் பாடிய நூல்கள் பல. திருப்புகழ், திருவகுப்பு, கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், வேல் மயில் சேவல் விருத்தங்கள், கந்தர் அநுபூதி என்ற ஆறு தொகுதிகளை அவர் பாடினார். இந்த ஆறு நூல்களுக்குள்ளும் இறுதியில் பாடிய நூல் கந்தர் அநுபூதி. கந்தர் அநுபூதியில் முதல் பாட்டில், 'ஆடுகின்ற பரியாகிய மயிலையும், படையாகிய ஞானவேலையும், வெற்றிக் கொடி யாகிய சேவலையும் பாடுகின்ற உத்தியோகத்தை ஆண்டவனே எனக்குக் கொடுப்பாயாக' என்று விண்ணப்பித்துக் கொள்கிறார்.

**"ஆடும் பரிவேல் அணிசே வல்எனப்**
**பாடும் பணியே பணியா அருள்வாய்!"**

## வேலின் தத்துவம்

**வே**ல் வெறும் இரும்பு என்றோ மயிலும் சேவலும் வெறும் பறவைகள் என்றோ நினைப்பதற்கு உரியன அல்ல. அவை சில உண்மைகளைப் புலப்படுத்தும் அடையாளங்கள்.

**சிகராத்ரி கூறிட்ட வேல்**

என்றால், கொடுமுடிகளோடு கூடிய பெரிய மலையைக் கூறு போட்டது என்று பொருள். அதைக் கண்டு இது நல்ல இரும்பினால் ஆன வேல் என்று எண்ணத் தகுமா? பெரிய மலையாக நிற்பது எது? மனிதனுடைய அகங்காரம் மலை போல் நிற்கிறது. ஆடாமல் அசையாமல் பின்னாலே இருக்கிற அத்தனை பொருள்களையும் மறைத்துக் கொண்டு நிற்கிற மலைபோல, நான் நான் என்கிற அகங்காரம் மற்றவர்களுடைய நலன்களை எல்லாம் மறைத்துக் கொண்டு நிற்கிறது. பிறர் படுகின்ற நோவைக் கண்டு மனம் இளகாதவனை, "ஏண்டா பாறைபோல் நிற்கிறாய்?" என்று சொல்வது இல்லையா? உள்ளத்திலே அசைவு இல்லாமல், இரக்க உணர்ச்சி இல்லாமல் மனிதர்கள் இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களுடைய உள்ளம் கொடுமுடிகளோடு வளர்ந்து நிற்கும் மலைபோன்ற அகங்காரத்தை உடையதாக இருப்பதுதான். அகங்காரமுடை யவன் பிறரிடத்திலே அன்பு இல்லாமல், கருணை இல்லாமல்

நெகிழ்ச்சி இல்லாமல், 'நமக்கும் அவன் படுகின்ற துன்பம்போல நாளைக்கு வருமே' என்கிற நினைவு இல்லாமல் கல் மலை மாதிரியாகத்தான் நிற்பான். மனிதனுடைய அகங்காரமாகிய மலையிலே மமகாரமாகிய பல கொடுமுடிகள் இருக்கின்றன. இந்த அகங்கார மமகாரமாகிய அகப்பற்றுப் புறப்பற்றுகளே பல பல பிறவிகளுக்குக் காரணமாகின்றன. மமகாரங்களாகிய கொடு முடிகளோடு வளர்ந்து நிற்கும் அகங்காரமாகிய அத்திரியைக் கூறுபோட வேண்டுமானால் ஞானம் வரவேண்டும்.

அகங்கார மமகாரங்களாகிய சிகராத்திரியைக் கூறிட்டது ஞானவேல்; அகங்காரத்தைச் சார்பாகக் கொண்ட சூரனைச் சங்காரம் பண்ணியது வேல்.

சிகராத்திரி கூறிட்ட வேலோடு செஞ்சேவலையும் பாட வேண்டும் என்கிறார் அருணகிரிநாதர்.

## சேவலின் தத்துவம்

சேவல் ஆண்டவனுடைய வெற்றிக் கொடியாக விளங்குகிறது. கோழி என்று நினைத்த மாத்திரத்திலே நல்லவர்களுக்குப் புற இருளைப் போக்கடிக்கின்ற சூரியனுடைய நினைவு வரும். முருகனிடத்தில் ஈடுபட்டவர்களுக்கு அஞ்ஞான இருளைப் போக்கடிக்கின்ற ஞானபானுவாகிய முருகனுடைய நினைவு முந்தும்.

செம்மை என்பது தமிழில் மிகச் சிறப்புடைய சொல். நம் உடம்பில் ஊற்றமாக இருக்கும் குருதி செம்மைதான். பரிபூரணம், நிறைவு என்பதைக் குறிப்பதற்கும் செம்மை என்ற சொல்லை வழங்குகிறோம்; ஒருவன் நன்றாகப் பாடினான் என்றால், ''செம்மையாகப் பாடினான்'' என்றும், ஒரு காரியத்தைத் திறம் படச் செய்தால், ''செம்மையாகச் செய்தான்'' என்றும் சொல் கிறோம். குறையின்றி நிறைவாக முடித்தான் என்பதையே, ''செம்மையாகச் செய்தான்'' என்கிறோம். உள்ளத்தில் கெடுதல் இல்லாமல் நேர்மை நிறைவு பெற்றிருந்தாலும் உள்ளம் செம்மை யாக, தூயதாக இருக்கிறது என்று சொல்லலாம். சிறப்புடைய சேவலை நிறம் பற்றி மாத்திரம் செஞ்சேவல் என்று சொல்ல வில்லை; குணம் பற்றியும் அவ்வாறு சொன்னார்.

அஞ்ஞானத்திலே உறங்கி வீழ்ந்து கொண்டிருப்பவர்களை, ''ஞானபானுவாகிய எம்பெருமான் எழுந்தருளுகின்றான்; தூங்கா தீர்கள்'' என்று அறைகூவி அழைப்பது சேவல். சக்தி சிவனிடத் தில் இருந்து தோன்றிய மாத்திரத்தில் முதல் முதலாகத் தோன்றி யது நாத தத்துவம். அந்த நாத தத்துவமே கோழி. அதன் பின்னர் எஞ்சியுள்ள எல்லாத் தத்துவங்களும் வெளிப்பட்டன.

உலகத்துக் கோழி கூவும்போது புற இருள் விலகிப் பொழுது விடிகிறது; அஞ்ஞான இருள் நீங்கி, ஞான ஒளி பிரகாசிப்பதற்கு அடையாளமாகக் கூவும் கோழி எம்பெருமான் திருக்கரத்தி லுள்ளது; அது செஞ்சேவலாக விளங்குகிறது.

''என்னுடைய மமகாரமாகிய கொடுமுடியோடு கூடிய அகங்கார மலையைக் கூறிடுவது வேல்; அதையும் அஞ்ஞான இருளைப் போக்க வழிகாட்டும் சேவலையும் செந்தமிழால் பகர்கின்ற ஆர்வத்தை எனக்குத் தருவாயாக'' என்று பிரார்த்தனை செய்து கொண்டார்.

## மயிலின் தத்துவம்

வேல் சேவல் ஆகிய இரண்டோடு, மயிலையும் பாடுகின்ற பணி எப்போதும் இருக்கவேண்டும் என்பது அருணகிரியார் ஆர்வம். முதலில் வேலையும் சேவலையும் சொன்னவர் மயிலை மறக்கவில்லை. அதனை அடுத்த அடியில் இணைத்து விடுகிறார்.

பணி பாச சங்க்ராம பணாமகுட
நிகராட்சம பட்ச பட்சி.

பணிபாசம் என்றால் பாம்பாகிய கயிறு என்று பொருள். இங்கே நாகபாசம் எது? நம்முடைய பாசபந்தங்கள்தாம். பிறவிக்குக் காரணமான இந்தப் பாசபந்தங்களுக்குக் கட்டுப் பட்டுக் கிடக்கிறோம். பாசமாகிய பாம்புக்குக் கட்டுப்படு வதனாலே உயிர் குலைந்து விடுகிறோம். இந்தக் கட்டை அறுத்துக் கொண்டால்தான் மயக்கம் தீரும். சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிற பாம்பைக் கொத்திக் கொத்திக் கொன்றுவிடுவது மயில். மயில் ஓங்காரத்தின் வடிவம். பாம்பு பெரிய பாசமாக இருப்பதனாலே, பாம்பை அடக்குகின்ற மயில் ஓங்கார மந்திர மாக இருக்கிறது. ஓங்கார மந்திரத் தியானம் பாசத்தை நீக்கும்

என்று பெரியவர் சொல்வர். பிரணவ மந்திரத்தைத் தினமும் ஜபித்தால் பாசங்களினின்றும் விடுபட்டு எம்பெருமானை வணங்கு கின்ற ஞானம் உண்டாகும். எல்லா மந்திரங்களுக்கும் மூலம் பிரணவம்.

சுருண்டு கிடக்கின்ற குண்டலினி ஆகிய பாம்பு கிடப்பது நீங்கி ஓடவேண்டும். மூலக்கனலை எழுப்பினால் இது நிகழும் என்று யோக சாஸ்திரம் கூறும். இதற்குக் குண்டலினி யோகம் என்று பெயர். சுருண்டு கிடக்கின்ற பாம்பு வாலையும், தலையையும் நீட்டிக் கொண்டு ஓடவேண்டுமானால் மயில் வரவேண்டும். யோகிகளுக்கும் முருகன் மயில் வாகனத்தில் காட்சிகொடுத்தால் நன்மை உண்டாகும்.

## வேண்டுகோள்

இந்தத் தத்துவங்களை எல்லாம் உள்ளடக்கி, ''கயிறு போன்ற பாம்போடு சண்டை போடுவதும், படத்தின் தொகுதி களைக் கண்டு பொறுமை இல்லாமல் கொத்திக் கொத்தி அடக்கு வதுமாகிய பறவையாகிய மயில்'' என்று சிறப்பித்தார். ''அந்த மயிலை வாகனமாக உடைய பெருமானே என்றும் இளைய வனே, மாரனைக் குற்சிதம் பண்ணின குமரனே, தகராகாசத்தில் வசிக்கின்ற குகனே, அசுரர்களைச் சங்காரம் பண்ணுகின்றவனே, கலக்கம் இல்லாதவனே, தீரனே, குணக்களஞ்சியமே, மலையைக் கூறுபோட்ட ஞானமயமான வேலையும், நாத தத்துவமாகிய சேவலையும் குற்றமில்லாத தமிழிலே பாடுகின்ற விருப்பத்தை எனக்கு அளிப்பாயாக'' என்று அருணகிரியாரைப் போல நாமும் வேண்டிக் கொள்ளலாம்.

★

சிகராத்ரி கூறிட்ட வேலும்,செஞ்
சேவலும் செந்தமிழால்
பகர்ஆர்வம் ஈ;பணி பாசசங்
க்ராம பணாமகுட
நிகராட் சமபட்ச பட்சி
துரங்க ந்ருபகுமரா!
குக!ராட் சசபட்ச! விட்சோப!
தீர! குணதுங்கனே!

*(முடிகளையுடைய மலையைத் துண்டுபோட்ட வேலையும், செந்நிறமுள்ள சேவற்கொடியையும், செந்தமிழால் பாடிப் புகழும் ஆர்வத்தை நீ தருவாயாக; பாம்பாகிய கயிற்றோடு போர்செய்வதும் படத்தோடு கூடிய தலைத் தொகுதியைக் கண்டு கோபம் அடைவதும், அதை அடக்குவதுமாகிய மயிலாகிய பறவையை வாகனமாக உடையவனே! அரசனே! குமரனே! குகனே! அசுரர்களை அழிப்பவனே! கலக்கமற்றவனே! தீரனே! தூய குணங்களை உடையவனே!*

*குணதுங்கனே, ஆர்வம் ஈ என்று கூட்டுக.*

*சிகரம் - முடி. அத்ரி - மலை. கூறு - துண்டு. பணி - பாம்பு. பாசம் - கயிறு. சங்க்ராமம் - போர். பணாமகுட நிகரம் - படத்தோடு கூடிய தலைத்தொகுதி. அக்ஷமம் - கோபம். பட்ச - உண்ணும் இயல்பையுடைய; இங்கே அடக்கும் என்று கொள்க. துரங்க - வாகனமாக உடையவனே. பாச சங்க்ராம பட்சி, பணாமகுட நிகராட்சம பட்சி, பட்சபட்சி என்று தனித்தனியே கூட்டுக. ந்ருப - அரசனே, ராட்சச பட்ச - அரக்கர்களை உண்பவனே; இங்கே அழிப்பவனே என்று பொருள்.)*

# ஈயாதவர் படும் பாடு

அருணகிரி நாதர் மனிதன் இந்த உலகத்தில் வாழ்வதற்குரிய வகைகளையும் அவ்வப்போது சொல்லி வருகிறார். இறைவன் திருவருளைப் பெறுவதற்கு என்ன என்ன வழி என்பதைப் பல பாடல்களில் தம் அநுபவத்தைக் கொண்டு வழி காட்டுகிறார்.

## சமுதாயமும் தனி மனிதனும்

மனிதன் தனியாக வாழ்வது இல்லை. அவன் சமுதாயத்தில் ஒருவனாக இருந்து வாழ்கிறான். சமுதாயம் என்பது பல மனிதர்களின் கூட்டம். தனி மனிதன் நல்ல வழியில் நடந்து கொண்டால் சமுதாயம் சிறப்பான வழியில் வாழும். முற் பிறவியில் செய்த புண்ணிய பாவங்களின் பயனாக ஒவ்வொரு மனிதனும் தனித்தனி மன இயல்பு உடையவனாக இருக்கிறான். சமுதாயம் என்பது தொகுதியாகப் பார்க்கும் போது ஒன்றாகத் தோன்றினாலும் ஒவ்வொரு மனிதனும் தனித் தனி நிலையில் இருக்கிறான். ஒருவன் கல்வி கற்றிருக்கிறான்; மற்றொருவன் செல்வம் பெற்றிருக்கிறான். ஒருவனுக்கு மக்கட் செல்வம் இருக்கிறது; வேறு ஒருவனுக்கு அது இருப்பது இல்லை. ஒருவன் வீட்டிலுள்ள குடும்பம் ஒற்றுமையாக வாழ்கிறது; வேறு வீட்டில் அப்படி இல்லை. மனைவியிடம் அன்பு உள்ளவனும், அன்பு இல்லாதவனும் அருகருகில் வாழ்கிறார்கள். உலகம் முழுவதும் இப்படி வேறுபாடான நிலையும், இயல்பும் கொண்டதுதான்.

## ஈகையின் வகை

ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு குறை இருந்தால் அந்தக் குறையை அவரால் நீக்கிக் கொள்ள முடியாத போது அதனை நீக்குகின்ற ஆற்றல் உடையவர் அவருக்கு உதவி செய்ய வேண்டும். பள்ளமும் மேடும் இருக்கிற இடத்தில் மேட்டிலுள்ள அதிக மண்ணைப் பள்ளத்தில் போட்டு நிரவினால் சமநிலம் ஆகிவிடும்.

அதுபோல் யார் யார் எந்தப் பொருளை நிரம்ப பெற்றிருக்கிறார்களோ அவர்கள் அதைப் பெறாதவர்களுக்கு உதவி செய்யவேண்டும். இப்படி உதவி செய்வதுதான் அறம் என்று சொல்வார்கள். கையிலுள்ள பணத்தைக் கொடுப்பது மாத்திரம் ஈகை அன்று. கல்வியைக் கொடுப்பதும் ஈகைதான். தம்முடைய ஆற்றலைப் பிறருக்குப் பயன்படுத்துவதும் ஈகை தான். தொண்டு செய்வதும் ஒரு வகையில் ஈகையே ஆகும். இப்படித் தம்மிடம் இருக்கிற ஆற்றலையும், பொருளையும், கல்வியையும் பிறருக்குக் கொடுக்காமல் இருப்பது பாவம் என்று நம்முடைய பெரியவர்கள் கருதினார்கள். ஔவைப் பாட்டி,

**''இயல்வது கரவேல்''**

என்று சொன்னாள்.

## ஈயாமைக்குக் காரணம்

**உ**லகில் பொருள் உடையவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களிடத்திலிருந்து பொருளைப் பெற்று நன்கு வாழ்வதற்குரிய நிலையில் உள்ளவர்களும் பலர் இருக்கிறார்கள். ஆனால் பொருள் உடையவன் பொருள் இல்லாதவனுக்கு ஈவது இல்லை. அதற்குக் காரணம் என்ன? முயற்சியினால் ஈட்டப் பெற்றது என்ற எண்ணத்துடன் இருக்கிறான். தானே ஈட்டியதைத் தானே உரிமையுடன் அநுபவிக்க வேண்டுமென்று நினைக்கிறான்.

## பற்றும் ஈகையும்

**த**ன்னுடன் சார்ந்தவர்களுக்கு மாத்திரம் அதைக் கொடுக்கிறான். மனைவி மக்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் கொடுக்கிறான். சில மக்கள் தாம் உண்ணாவிட்டாலும் தம்முடைய மனைவி மக்களுக்கு நிரம்ப அளிக்கிறார்கள். மனைவியும் மக்களும் அந்தப் பொருளை ஈட்டவில்லை. ஈட்டியவன் அவன்தான். தான் ஈட்டியதைத் தானே அநுபவிக்க வேண்டுமென்று நினைக்கிற அவன், அந்தப் பொருளை ஈட்டுவதில் சிறிதும் பங்கு இல்லாத மனைவி மக்களும் அநுபவிக்கும்படி பயன்படுத்துகிறானே; இதற்குக் காரணம் என்ன? அந்த மனைவி மக்களால் தான் இன்பம் அடையலாம் என்ற நினைவு ஒரு காரணம். அவர்களுக்கும்

அவனுக்கும் உள்ள தொடர்பு, அவ்வாறு உதவி செய்ய வேண்டு மென்ற நினைவை உண்டாக்குகிறது. இதுவும் ஒரு காரணம்.

தனக்குத் தானே இன்பம் பெறுகிற நிலை மனிதனுக்கு இல்லை. பிறரால்தான் இன்பம் வருகிறது, உலக இயலில். தனக்கு இன்பம் தருகிறவர்கள் தன் மனைவி மக்கள் என்று நினைந்து, தான் ஈட்டிய பொருளை அவர்களுக்குக் கொடுக் கிறான். உலகத்திலுள்ள சமுதாயம் அத்தனையும் நமக்கு இன்பம் தரும் என்ற நினைவு வந்தால் எல்லோருக்குமே தான் ஈட்டிய பொருளை வழங்குவான்.

தன்னுடைய மனைவி மக்கள் துன்பப்படும்போது பார்த்துக் கொண்டிருக்க எவனுக்கும் மனம் வருவது இல்லை. அவர் களுடைய துன்பத்தைத் தன்னுடைய துன்பமாக எண்ணுகிற இயல்பு இயற்கையாக அமைகிறது. அப்போது உள்ளம் கசிக் கிறது. அந்தக் கசிவு காரணமாக தன்னிடத்திலுள்ள பொருளைப் பற்றிக் கொள்ளாமல் அவர்களுக்குப் பயன்படுத்தும் எண்ணமும் தோன்றுகிறது.

## பற்றும் நெகிழ்ச்சியும்

தான் ஈட்டிய பொருளைப் பற்றிக் கொள்வது பற்று. தன்னைச் சார்ந்தவர்களுக்கும் கொடுக்க மூலமாக இருப்பது அன்பு. பற்று என்பது ஒருவகையான திண்மை. அன்பு என்பது ஒருவகையான நெகிழ்ச்சி. பணத்தைக் கையில் பற்றிக் கொள் வதைவிட மனத்தினால் பற்றிக் கொள்வது மனிதனிடத்திலுள்ள மிகவும் கொடிய செயல். நெகிழ்ச்சி இன்மையினால் மனம் பொருள்களைப் பற்றிக் கொள்கிறது. அதில் நெகிழ்ச்சி உண்டாகி விட்டால் பொருள்களைப் பிறருக்கும் பயன்படுத்தும் நிலை வரும்.

## குழந்தையின் இயல்பு

குழந்தை மிகவும் பிடிவாதம் செய்து ஒரு பொம்மையைப் பெற்றுக் கையில் இறுகப் பற்றிக் கொண்டிருக்கிறது. வேறு ஒரு குழந்தைக்கு அதைக் கொடுத்துவிடு என்று சொன்னால், கொடுக் காமல் வன்மையாகப் பற்றிக் கொள்கிறது. ஆனால் அந்தக் குழந்தை தூங்கத் தொடங்கினால் எவ்வளவு இறுகப் பற்றிக்

கொண்டிருந்தாலும் அந்தப் பொருளை நெகிழவிட்டுவிடுகிறது. அதுபோல் மனிதன் தன்னுடைய மனத்தில் நெகிழ்ச்சி இல்லாமல் கல்லைப் போன்ற வன்மையைப் பெற்றிருந்தால் நல்ல பொருள்களை எல்லாம் இறுகப் பற்றிக் கொள்ளும் தன்மை உடையவனாக இருக்கிறான். அப்படியின்றி மனம் கசிவு பெற்றதானால் பிறருக்கும் கொடுக்க வேண்டுமென்ற நினைவு உண்டாகிறது. பெரும்பாலான மக்களுக்குத் தம்முடைய மனைவி மக்கள் என்ற ஓரளவு கசிவு இருக்கிறது. இந்தக் கசிவே விரிந்தால் அவரல்லாத பிறருக்கும் தம்முடைய பொருளைப் பயன்படுத்த வேண்டுமென்ற நினைவு ஏற்பட்டுவிடும்.

## உள்ளக் கசிவு

ஆகவே மனிதன் பொருளை ஈட்டிக் கொண்டிருந்தால் மாத்திரம் போதாது. ஈட்டின பொருளைப் பிறருக்கும் கொடுக்க வேண்டுமென்ற நினைவு வேண்டும். அந்த நினைவுக்குக் காரணமாக இருப்பது உள்ளக் கசிவு. மனிதனுக்கு அத்தகைய கசிவு இப்போது ஓரளவு இருக்கிறது. தன்னைச் சார்ந்தவர்களுக்கு அதைக் கொடுக்கலாம் என்ற வகையில் அந்தக் கசிவு அவன் உள்ளத்தில் நிலவுகிறது. அது பின்னும் விரிய வேண்டும்; பலருக்கும் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாக வேண்டும். அதற்கு வழி என்ன?

## அருணகிரியார் கூறும் வழி

அருணகிரிநாத சுவாமிகள் வழி சொல்கிறார்; நெஞ்சம் கசிந்து தான் ஈட்டிய பொருளை எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்ற நிலை வருவதற்கு மிகவும் அருமையான வழியை அவர் சொல்கிறார்.

உலகியல் வாழ்க்கையில் பொருளை நாம் அல்லவா முயன்று ஈட்டுகிறோம் என்று நினைத்தால், கசிவு ஏற்பட நியாயம் இல்லை. உலகத்தில் எத்தனையோ பணக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யாவருமே ஒரே வகையில் சிரமப்பட்டுப் பொருளை ஈட்டுகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. உண்மையைச் சொல்லப் போனால் அவர்களைக் காட்டிலும் மிக்க உழைப்பை மேற்கொள்கிற மக்கள் வறியவர்களாக இருக்கிறார்கள். கல்வி ஆற்றல்

உடையவர்கள் பொருள் உடையவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. ஒரே வகையில் திட்டமிட்டு ஒரே முறையில் இரண்டு பேர்கள் உழைத்து வருகிறார்கள்; வியாபாரம் செய்து வருகிறார்கள். ஆனால் இருவருக்கும் ஒரே வகையில் பொருள் கிடைக்கிறதா? ஒருவன் சிறந்த செல்வனாக இருக்க, மற்றொரு வன் கையிலுள்ளதையும் இழந்து வறியவனாகப் போகிறான். நினைத்ததை நினைத்தபடியே திட்டமாக ஈட்டுகிற வாய்ப்பு, பொருள் முயற்சியில் கிடைப்பது இல்லை. கணக்கும் முறையும் தெரிந்தால் பொருளை அடையலாம் என்றால், எல்லோருமே பொருளை ஈட்டிவிடுவார்கள். நம்முடைய அறிவுக்கு எட்டாத ஒன்று இந்தப் பொருளை ஈட்டுவதற்குத் துணையாக இருக்கிறது. முன்னை வினைப் பயத்தினால் பொருள் குவிகின்றது, அழி கின்றது என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

## அருள் நினைவு

ஆகவே, நாம் ஈட்டிய பொருள் நம்முடைய முயற்சியால் வந்தது என்று நினைப்பதே தவறு. நம்முடைய ஆற்றல் நமக்கு உதவுகிறதென்று எண்ணுவதும் தவறு. நம்மையெல்லாம் கருவி யாக்கி ஏதோ ஓர் ஆற்றல் இயக்குகிறதென்ற நினைவு வந்தால், இந்தப் பொருள் நாம் ஈட்டியது அன்று என்ற நினைவும் உண் டாகும். எல்லாம் இறைவன் திருவருளால் வந்தது என்ற நினைவு வரவேண்டும். உலகிலுள்ள எல்லாப் பொருளையும் ஆட்டி வைத்து, அவரவர்களுடைய புண்ணிய பாவப் பயன்களுக்கு ஏற்ற அநுபவத்தைக் கூட்டி வைத்து, அருள் செய்கிற பரம் பொருள் ஒன்று உண்டு என்ற நினைவு வந்தால் நம்முடைய நெஞ்சம் கசியும். பரம் பொருளின் நினைவை உடையவர்கள் அதற்கு முன்பு எவ்வளவு கடுமையான நெஞ்சு உடையவர்களாக இருந்தாலும், இறை அன்பு முதிர முதிர அவர்கள் நெஞ்சு நெகிழும். உண்மையான அன்பு உடையவர்களுக்கு நெஞ்சம் நெகிழும்.

## மாம்பழம்

மாமரத்தில் மாங்காய் இருக்கிறது. அது பார்க்கப் பச்சையாக இருக்கிறது. அதன் சுவையோ புளிப்பு. மரத்திலிருந்து அதைப் பறித்தால் பால் வருகிறது. மரத்தினின்றும் பிரிவதற்கு மனம்

இல்லாமல் காய் கண்ணீர் வடிப்பதுபோல அந்தப் பால் வடிகிறது அந்தக் காய் முதிர்ந்து பழுக்கும்போது என்ன ஆகிறது? அப்போது அதனிடத்தில் ஒரு மாற்றம் நிகழ்கிறது. பசுமை நிறம் மாறி மஞ்சள் நிறம் உண்டாகிறது. கடுமை மாறி நெகிழ்ச்சி ஏற்படு கிறது. புளிப்பு மாறி இனிப்பு உண்டாகிறது. நாம் வேண்டி னாலும் வேண்டாவிட்டாலும் மரத்திலுள்ள பிடிப்பு மாறி அது தானே உதிர்ந்துவிடுகிறது.

## அன்பினால் நெகிழ்ச்சி

தன்பால் உள்ள பொருள்களை எல்லாம் தன்னுடையன என்று பற்றிக் கொண்டு, தன்னுடைய முயற்சியால் எல்லா வற்றையும் சேமித்ததாக எண்ணி இறுக்கிப் பிடித்துக் கொண் டிருக்கும் மனிதனுக்கு இறைவன்பால் அன்பு உண்டானால் இத்தகைய மாற்றம் நிகழும். அவனுடைய உள்ளம் ஆருயிர் எல்லாவற்றிலும் அன்பு உடையதாகும். அதன் பயனாக உலகியற் பொருள்களிலுள்ள பற்று மெல்ல மெல்ல நழுவும். தன்னிடத் திலுள்ள பொருள்களால் எல்லோருக்கும் பயன் உண்டாக வேண்டுமென்ற விரிந்த மனோபாவம் ஏற்படும்.

## பக்தியும் உயிர்க் கருணையும்

பக்தி உடையவர்கள் இறைவனுடைய பேரருளை நினைப்பவர் களாதலின் கசிவோடு பிறருடைய துன்பத்தை நினைந்து நெகிழ் கிறார்கள். உண்மையான பக்திக்கு உயிர்க் கருணை சிறந்த அடையாளம். ஜீவ தயை இல்லாவதர்கள் இறைவனிடம் பக்தி உள்ளவர்களாக இருக்க முடியாது. விடியற் காலையில் எழுந்து நீராடித் திருநீறு அணிந்து கொண்டு, ருத்திராட்சம் தரித்து, சிவபூசையை விரிவாகச் செய்து, தேவார திருவாசகங்களை ஓதிக் கண்ணீர் விடுகிறவன், தன் வீட்டுக்கு வெளியில் வந்து நின்ற ஏழைகளைக் கோபிப்பானானால் அவன்விட்ட கண்ணீர் பொய் யென்று வைத்துக் கொள்ள வேண்டும். அவர்களை நினைந்தே பட்டினத்தார், "அழும் கள்ளர், தொழும் கள்ளர், ஆசாரக்கள்ளர்" என்று பாடினார். உண்மையாக இறைவன் அன்பு நெஞ்சில் இருக்குமானால் அந்த நெஞ்சு உருகும்; இறைவன் அன்பினால் உருகும். உருகுவதற்கு முன் நெகிழ வேண்டும். அது முதல் நிலை.

## நெகிழ்தலும் உருகுதலும்

தன்னுடைய குற்றங்களையும், இறைவனுடைய திருவருளைப் பெறாமல் இருக்கும் இழிந்த நிலையையும் நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ வேண்டும். பின்பு இறைவனது பெருமையையும் கருணையையும் எண்ணி உருகவேண்டும். நெகிழ்வது, உருகுவது இரண்டும் இருவேறு நிலை.

**''நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்து உருக''**

என்று அருணகிரியார் அநுபூதியில் பாடுவார். உருகின இடத்தில் இறுகுகிற தொழில் இராது. நெய் உருகி ஓடினால் எந்தப் பொருளும் அதில் சிக்காது. உருகிய நீர் பனிக்கட்டியாகும் போது அந்த நீரிலுள்ள பொருள்கள் பனிக்கட்டிக்குள் சிக்கிவிடும். மறுபடியும் உருகும்போது சிக்கிய பொருள்கள் எல்லாம் விடுதலை பெறும். தேக அபிமானத்தால் இறுகிப் போன நெஞ்சில் உலகப் பொருள்கள் எல்லாம் சிக்கிக் கிடக்கின்றன. இறைவனுடைய திருவருட் பிரகாசத்தினால் நெஞ்சம் உருகும் போது அதில் சிக்கிக் கொண்டிருக்கிற பொருள்கள் எல்லாம் விடுபடுகின்றன. இவை என்னுடைய பொருள் என்ற மமகாரம் மாறிவிடுகிறது. பொருள்களிடத்தில் ஆசையும், அவற்றை இறுக்கிப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்ற பற்றும், பிறருக்குக் கொடுக்கக் கூடா தென்ற எண்ணமும் உண்டாவதற்கு மூல காரணம் நெஞ்சிலுள்ள இறுக்கந்தான். இறைவனுடைய தன்மையை நினையாமல் தன்னுடைய சிறுமையையும் நினையாமல் பொருளை மாத்திரம் நினைத்துக் கொண்டிருக்கிறவனுக்கு இத்தகைய இறுக்கம் இருக்கும். அது மாறி நெஞ்சு கசிந்தால் பொருள்களின்பாலுள்ள பற்றுத் தானே மாறிவிடும்.

## உலகியல் அநுபவம்

உலகியல் அநுபவத்தில் இத்தகைய காட்சி ஒன்றைப் பார்க்கிறோம். பல காலமாகப் பணத்தை ஈட்டிப் பிறருக்குக் கொடுக்காமல் உலோபியாக ஒருவன் இருக்கிறான். அவனுக்கு ஒருத்தியிடம் காதல் உண்டாகிறது. நிலையான காதல் அன்று. ஆனாலும் அவன் மனம் அந்தக் காதலில் முறுகி நிற்கிறது. அதைக் காதல் என்று சொல்வதைவிடக் காமம் என்று சொல்வது

பொருத்தம். காமியாகப் போன அவன் அதற்கு முன்பு எச்சி கையினால் காக்கையை ஓட்டாமல் இருந்திருப்பான். ஆனா பெண்ணாசை உண்டான பிறகு தான் பற்றிக் கொண்டிருந் பொருளில் அபிமானம் போய்த் தாராளமாகச் செலவழிக் ஆரம்பிப்பான். சூதில் நாட்டமுடையவனும் பொருளில் பற்று கொள்ளாமல் அதனைச் செலவழிப்பான். பொருளில் பற்று கொள்ளாமல் செலவழிப்பதனால் அவர்களை நல்லவர்கள் என்( சொல்லலாமா? ஒரு தீமை போய் மற்றொரு தீமை அவர்க நெஞ்சில் இடம் கொள்கிறது. அவர்களுடைய நெஞ்சம் காமத் னால் உருகுகிறது; சூதினால் உருகுகிறது. எப்படியோ அந் உருக்கம் ஏற்பட்டதனால் அங்கே இறுகிப் பற்றிக் கொண்டிருந் பொருள் விடுதலை பெறுகிறது.

இவ்வாறு உலக அநுபவத்தில், இத்தகைய கசிவு ஏற்பட்டாலே மனத்திலே பற்றிவிட்ட பொருளைப் பிறருக்கு உதவும் இயல் உண்டாகிறதென்பதை அறிகிறோம். அந்தக் கசிவு நெடுநா இருப்பதாக, நல்ல பயனைத் தருவதாக, உண்மைத் தன்மை உடையதாக இருந்தால் பொருள் நல்ல வழியில், ஈகையில் செலவாகும்.

## கசிவு உண்டாக வழி

அந்தக் கசிவு உண்டாவதற்கான வழியை அருணகிரியா சொல்லித் தருகிறார்.

> வேடிச்சி கொங்கை விரும்பும் குமரனை
>     மெய்அன்பினால்
> பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர்
>     பாதகத்தால்
> தேடிப் புதைத்துத் திருட்டில் கொடுத்துத்
>     திகைத்திளைத்து
> வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு
>     மாய்ப்பவரே.

முருகப்பெருமானைப் பாடி நெஞ்சம் கசிய வேண்டுமென்று சொல்கிறார். இங்கே முருகப் பெருமானை, 'வேடிச்சி கொங்கை விரும்பும் குமரன்' என்கிறார். இறைவன் பெரிய செல்வன்.

அருள் என்னும் செல்வத்தை அவன் படைத்திருக்கிறான். மனிதன் பிற உயிரைக் கண்டு இரங்கும் இரக்கம் ஆகிய அருள் அவன் படைத்திருக்கும் பெரிய பொருளைவிடச் சிறந்தது என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

**''அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்; பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள''**

என்பது திருவள்ளுவர் வாக்கு. நம்முடைய சிறிய கருணையே பெரிய செல்வம். ஆனால் இறைவனுடையது பெரும் கருணை. அவன் எத்தனை பெரிய செல்வனாக இருக்க வேண்டும்!

## முருகனிடம் உள்ள செல்வம்

அந்தச் செல்வம் உடையவனாகிய முருகப் பெருமான் அதை எப்போதும் தன்னிடத்தில் வைத்துக் கொள்ள வேண்டு மென்று விரும்பவில்லை. அதை யாருக்காவது கொடுக்க வேண்டுமென்றே ஒவ்வொரு கணமும் ஆசை கொண்டிருக் கிறான். அருள் என்னும் சுமையைச் சுமந்து கொண்டு அதனை எங்கே இறக்கலாம் என்று காத்துக் கொண்டிருக்கிறான். அந்த அருட் செல்வம் கொடுக்கக் கொடுக்கக் குறையாதது. அநாதி காலமாக எண்ணத் தொலையா ஆருயிர்களுக்கு அருளை வழங்கி வழங்கி வந்திருந்தாலும் இன்னும் அது வற்றாமல் இருக்கிறது. அது எப்போதும் வற்றாத சமுத்திரம்.

## ஈதலின் வகை

பொருள் உள்ளவன் அதைப் பிறருக்கு ஈவதில் பல வகை உண்டு. அடுத்து அடுத்துக் கேட்கும் ஒருவனுக்கு ஈவது ஒரு வகை. ஒரு முறை கொடுத்தால் இன்னொரு முறை கொடுக்கா திருப்பது மற்றொரு வகை. யார் குறை உடையவனோ அவன் நேரே சொல்லாமல் அவனுக்கு வேண்டியவர்கள் சொல்லப் பொருளைத் தருவது ஒரு வகை. அவனுக்கு இது வேண்டு மென்று தானாகவே உணர்ந்து கொண்டு வலிந்து கொடுப்பது ஒருவகை. இந்த நான்கு வகையிலும் மிகச் சிறந்த ஈகை, பிறருடைய துன்பத்தைக் குறிப்பால் அறிந்து தானே வலியச் சென்று ஈவதுதான். பலமுறை கேட்டுக் கொடுத்தால் அது அவன்

பலமுறை வருவதற்குக் கூலி கொடுப்பது போல ஆகும் ஒருவனுடைய வறுமையைக் குறிப்பினால் அறிந்து, ''இறைவன் திருவருள் நம்மிடத்தில் பொருளை வைத்திருக்கிறது. வேண்டிய வர்களுக்கு வழங்குவதற்காகவே அது இருக்கிறது'' என்று உணர்ந்து கொடுக்க முன்வருகிறவன் சிறந்த வள்ளல்.

இறைவன் எல்லோரினும் சிறந்த வள்ளலாக இருக்கிறான். அவனிடத்தில் உள்ள அருட்செல்வம் பிறருக்குப் பயன்படுவதற் காகவே அமைந்தது. அருட்செல்வம் பெறாதவர்கள் அதனை யாசிக்காமல் இருக்கும்போது தானே வந்து தடுத்தாட்கொண்டு அதனை அவர்களுக்கு வழங்குகிறவன் இறைவன். இந்த அற்புத மான பெரும் கருணையை முருகப் பெருமான் தன்னுடைய செயலினால் காட்டினான்.

## வள்ளியின் நிலை

வேடர் குலத்தில் பிறக்காதவளாக இருந்தும் அங்கே வளர்ந்தமையினால் அதுவே தனக்கு இயல்பான இடம் என்று கருதி, தன் நிலையை மறந்து வாழ்நாள் வேடிச்சியாகிய வள்ளி. சத்துவ குணம் நிறைந்த மானுக்கும், ஞானம் நிரம்பிய முனிவருக் கும் குழந்தையாகப் பிறந்த பெருமாட்டி இறைவனோடு வாழ்வது தான் இயற்கை. அப்படிச் செய்யாமல் மாயைப் பெருங்காட்டில், இரக்கமற்ற மனித மரங்கள் வாழ்கிற இடத்தில், ஐந்து புலன் களாகிய வேடர்களுக்கு நடுவில், ஆணவம் என்னும் யானைகள் உலாவுகிற சூழ்நிலையில், சிற்றின்பம் ஆகிய தினையைப் பாதுகாத்துக் கொண்டு, இதுவே தன் வாழ்வின் பணி என்று எண்ணி வாழ்ந்தாள். ஆனால் வேட்டுவர் குலத்தோடு வாழ்ந்த பழக்கத்தால் குறிஞ்சிநிலத் தெய்வமாகிய முருகப் பெருமானிடத் தில் ஒருவகை அன்பு இருந்தது. அது மிகச் சிறிய வித்தாக இருந்தது. அது வளர்ச்சிபெற வேண்டுமென்று அவள் நினைக்க வில்லை. பரம கருணாநிதியாகிய முருகப் பெருமான் அதனை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டுமென்று எண்ணினான்.

ஓடியாடும் குழந்தையைத் தாய் சில சமயங்களில் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு செல்வாள். இல்லாவிட்டால் தான் முன்போக அது பின் தொடரச் செய்வாள். ஆனால் முடமான

குழந்தையைத் தன் ஒக்கலில் எடுத்துக் கொள்வாள். தன் நிலை மறந்து தாழ்ந்திருந்த வள்ளியெம்பெருமாட்டியைத் தானே வலிய ஆட்கொள்ள வேண்டும் என்று எண்ணினான் முருகன். தன்னுடைய அருளை ஏழைகளிடத்தில் வலியச் சென்று கொடுப்பவன் அவன். அப்படியே வள்ளியிடம் தானே சென்றான். அந்தச் செயல் அவனிடத்தில் பெண் மயலால் உண்டாகவில்லை. அது கருணையினால் உண்டாகியது; அவனது பெரிய வள்ளன்மையைக் காட்டியது. இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட பரப்பிரம்மம் ஆகிய அவன் காமத்தால் துன்புற்றான் என்று சொல்வது முறையன்று. அவன் அருளை வழங்கும் முறை பல்வேறு விசித்திர வகையாக அமையும். அப்படி உள்ள வகைகளில் ஒன்று, வள்ளியெம்பெருமாட்டியை நாடி, அவளிடம் காதல் கொண்டவனைப் போல நடித்து, அவளைத் தன்னிடத்தில் ஒன்றுபடுத்திக் கொண்ட திருவிளையாடல்.

## அருளை வழங்கல்

முருகன் தன் அருட் செல்வத்தை வேடிச்சியாக வளர்ந்த வள்ளியெம்பெருமாட்டியை நாடிச் சென்று வழங்கினான். அவன் ஈகையில் சிறந்தவன். அவன் கொடுத்த செல்வம் எல்லாவற்றிலும் சிறந்தது. மிகப் பெரிய செல்வத்தை, மிகப் பெரிய அருளோடு, மிகப் பெரிய ஈகையாக, மிகப் பெரியவனாகிய ஆண்டவன் வழங்கினான். அவனை நினைத்தால் நம்முடைய உள்ளம் கசியும்.

உள்ளத்தில் அவன் நினைப்பு அழுந்துவதற்குப் பலவகையான சாதனங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று அவன் புகழைப் பாடுதல். தன்னை மறந்து வாழ்ந்திருந்த குறமகளைத் தடுத்தாட்கொள்வதற்காகத் தானே சென்று அருளை வழங்கிய முருகப் பெருமானைப் பாடவேண்டும். பாடினால் உள்ளம் கசியும். அப்படிக் கசிந்தால் தன்னிடம் உள்ள பொருளைப் பிறருக்குக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாகும். முதலில் பொருளிலுள்ள பற்று அறவேண்டும். பின்பு பொருளைப் பிறருக்கு ஈயும் செயல் நிகழவேண்டும்.

வேடிச்சி கொங்கை விரும்பும் குமரனை மெய்அன்பினால்
பாடிக் கசிந்து

## அன்பினால் பாடுதல்

இறைவனைப் பாடுவதில் இரண்டுவகை உண்டு. பிறருடைய காது கேட்கப் பாடுவது, பிறர் மெச்சப் பாடுவது ஒரு வகை. உள்ளன்பினால் பாடுவது மற்றொரு வகை. நாடகத்தில் நோயாளி யாக நடிக்கிறவன் டாக்டராக நடிக்கிறவனிடத்தில் நோயைத் தீர்க்க வேண்டுமென்று பரிதாபத்தோடு கெஞ்சுகிறான். உண்மை யாகவே நோய் பெற்ற ஒருவனும் உண்மை மருத்துவனிடத்தில் அப்படியே கெஞ்சுகிறான். தோற்றத்தில் இரண்டு செயல்களும் ஒன்றுபோல இருந்தாலும் உண்மையாகக் கெஞ்சுகிறவன் உண்மை யான நோயாளியே. உலக இயலில் இறைவனிடம் அன்பு செய் கிற வகையிலும்கூட இப்படிப் போலிகள் இருக்கிறார்கள். இறை வனை அவர்கள் பாடினவுடன் அவர்களுக்கு இன்பம் கிடைப்பது இல்லை. காரணம் அந்தப் பாட்டுக்கு மூலம் உண்மை அன்பாக இருப்பதில்லை.

பாடினவுடன் நெஞ்சம் கசியவேண்டுமானால் உள்ளன் போடு பாடவேண்டும். நெஞ்சம் எங்கும் ஓடாமல் பாடினால் அந்தப் பாட்டு நெஞ்சிலே பதிந்து நிற்கும். நெடுநாள் பிரிந்திருந்த தாயைக் கண்டு குழந்தை அம்மா என்று ஓடுகிறது. அந்த அம்மா என்ற சொல்லுக்கு அகராதியில் உள்ள பொருள் பொருள் அன்று. மற்றவர்கள் நினைக்கிற பொருளும் அதற்கு இல்லை. பலகாலம் பிரிந்திருந்த உணர்ச்சியை எல்லாம் சேர்த்து வெளிப்படுத்தும் சொல் அது. அந்த உள்ளத்தில் இருக்கிற பெரிய பிரிவுத் துயரமே அதற்குப் பொருள். அப்படி இறைவனிடத்தில் முறுகிய அன்பு உடையவர்கள் அவனைப் பாடினால் அந்தப் பாட்டு வெறும் சொல்லாக மாத்திரம் இராது. இறைவனுடைய புகழாக மாத்திரம் இராது. அவன் உள்ளத்தின் தாபமே, உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சிப் பொங்கலே அவ்வாறு வெளிவரும்; அது உருக்கத் தோடு வரும். அதனால்,

**மெய்யன்பினால் பாடிக் கசிந்து**

என்று சொன்னார்.

## உள்ள போதே

மற்றொன்று சொல்கிறார். ''உள்ளபோதே கொடாதவர்'' என்று சொல்கிறார். கொடுக்க வேண்டும் என்ற மனம் பலருக்கு

இருப்பது உண்டு. யாராவது ஒருவர் தர்மத்தைச் செய்தால், ''என்னிடம் பணம் இருந்தால் நானும் அப்படியே கொடுப்பேன்'' என்று சிலர் சொல்வது உண்டு. ஆனால் அவர்களிடம் பணம் வரும்போது கொடுக்க மனம் வராது. இது ஒரு வகை மாயை. கொடுக்க வேண்டுமென்ற மனம் உடையவனுக்கு அந்த எண்ணம் அழுத்தமாக இருக்கவேண்டும். அதனால்தான் ஔவைப்பாட்டி, ''அறம் செய விரும்பு'' என்று சொன்னாள். கொடுப்பதற்கு விருப்பம் அதிகமானால் எப்போது கொடுப்பதற்குரிய பொருள் வரும் என்று எதிர்பார்த்திருப்பான். பசி உடையவன் எப்போது சோறு வந்தாலும் சாப்பிடமாட்டானா? வேளைக்குச் சோறு சாப்பிடுவது என்பது பசி இல்லாதவர்கள் செயல். பசி உடையவனுக்கு வேளை இல்லை; உணவு கிடைத்த அந்தக் கணமே அவன் உண்பான். மிகவும் அலுத்துப்போனவனுக்கு இரவு வந்தால்தான் தூக்கம் வரும் என்பது இல்லை. அலுப்பு முறுகினபோது தூக்கம் வந்துவிடும். அப்படியே உள்ளத்தில் அறம் செய்யவேண்டுமென்ற நினைப்பு உள்ளவன் எப்போது எந்தப் பொருள் கையில் கிடைத்தாலும் அதனைப் பிறருக்கு வழங்க முற்படுவான். அவனுடைய நெஞ்சில் கசிவு ஏற்பட்டுப் பொருளும் வசதியாகக் கிடைக்கு மானால் அதை உள்ளபோதே கொடுத்துவிடுவான்.

சிலருக்குச் சில சமயங்களில் கொடுக்க வேண்டுமென்ற நினைவு உண்டாகிறது. கொடுப்பதற்குரிய பொருள் வந்தாலோ அந்த நினைவு போய் அந்தப் பொருளின்மீது பற்று உண்டாகிறது. பத்து ரூபாய் கொடுக்க வேண்டுமென்ற நினைவு தோன்றும் போது கொடுத்துவிட வேண்டும். அடுத்த கணமே பத்து ரூபாய் ஐந்து ரூபாயாக ஆகிவிடும். பின்பு மெல்ல மெல்ல, 'இப்போது அவசியம் இல்லை' என்ற நினைவு தோன்றும். இது மனித மனத்தின் இயற்கை; எப்போது நெஞ்சில் கொடுக்க வேண்டு மென்ற எண்ணம் தோன்றுகிறதோ அப்போதே கையில் பொருள் இருந்தால் உடனே கொடுத்துவிட வேண்டும்.

உள்ளபோதே கொடாதவர்.

என்று அருணகிரிநாதர் சொன்னார். உள்ளபோதே கொடாதவன் பின்பு கொடுக்கமாட்டான். அருணகிரிநாதர் பல பாடல்களில் எதிர்மறை வாயிலாகத் தம்முடைய கருத்தைச் சொல்வது உண்டு.

கசிவு உள்ளபோது கொடுக்க வேண்டும் என்ற உண்மையைத் தான் அப்படிக் கொடாதவர் பெறுகின்ற துன்பத்தைச் சொல்லும் வாயிலாக நமக்கு அறிவுறுத்துகிறார்.

## ஈயாதவர் அடையும் துன்பம்

தன்னுடைய அருளை வலிந்து சென்று வள்ளியெம் பெருமாட்டிக்கு ஈந்த முருகப்பெருமானை எண்ணி, அவன் புகழைப் பாடி, நெஞ்சம் கசியவேண்டும். கசிந்த உள்ளத்தோடு பொருளிலே பற்றுக் கொள்ளாமல், பொருள் இருக்கும்போது பிறருக்கு ஈயவேண்டும். அப்படி ஈயாதவர்கள் இன்ன இன்ன துன்பத்தை அடைவார்கள் என்று சொல்கிறார்.

அவர் சொல்வது உலக இயல்போடு ஒத்ததாக இருக்கிறது. பணத்தினிடத்தில் இறுக்கமான பற்று உள்ளவர்கள் அந்தப் பணம் முழுமையும் அநுபவிக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. பழங்காலத்தில் பணத்தைப் பாதுகாப்பதற்குப் பாங்குகள் இல்லை. பிறரிடம் கொடுத்து வைப்பதற்கோ நம்பிக்கை இராது. அதனால் பணத்தைப் பூமியில் புதைத்து வைப்பார்கள். பிறருடைய கண்ணுக்குத் தெரியாமல் தாம் வேண்டிய போது எடுத்துக் கொள்ள வேண்டு மென்று மண்ணிலே புதைப்பது பழைய கால வழக்கம். பல இடங்களில் புதையல் கிடைத்தது என்று சொல்கிறார்கள். புதையல் யாருக்குக் கிடைக்கிறதோ அவன் அதிருஷ்டசாலி என்றும் நினைக்கிறார்கள். உண்மையில் ஒருவனுக்குப் புதையல் கிடைத் தால் கிடைத்தவனுடைய அதிருஷ்டத்தை நினைப்பதைக் காட்டி லும் அதைப் புதைத்தவனுடைய துரதிருஷ்டத்தை நினைக்க வேண்டும். தன்னிடம் பொருள் உள்ள போதே கொடுக்காமல், பிறருக்குத் தெரியாமல் புதைத்து வைத்த மனிதன் அதைத் தான் பயன்படுத்திக் கெள்ளாமல் போய்விடுகிறான்; அதனால் இப்போது வேறு ஒருவனுக்கு அது கிடைக்கிறது.

புதைத்து வைக்கிறவர்கள் திருட்டில் கொடுத்து விடுகிறார்கள் என்று அருணகிரியார் சொல்கிறார். பிறன் ஒருவன் ஈட்டிய பொருளை அவன் அறியால் கொள்வது திருட்டு. தான் சேகரிக் காத பொருளைப் பயன்படுத்துவதும் ஒரு வகைத் திருட்டு. தன் தேவைக்கு மிகுதியான பொருளைப் பயன்படுத்துவது மற்றொரு

வகைத் திருட்டு. இதை அடிக்கடி மகாத்மா காந்திஅடிகள் சொல்வார்கள்.

இறைவனை நினைந்து கசிந்து பிறருக்கு ஈயும் இயல்பு இல்லாதவர்கள் மேலும் மேலும் பணத்தை ஈட்டுகிறார்கள். அந்தக் கசிவு இருப்பதற்கு இறைவனுடைய திருவருள் நினைவு வேண்டும். முன்னை வினைப்பயன் அதற்கு இடம் கொடுப்பது இல்லை. அவர்கள் முன் செய்த பாதகத்தினால் இப்போது பொருளைப் பிறருக்குக் கொடுக்காமல் குவிக்கிறார்கள். தேடியதை யாரிடத்தும் நம்பிக்கை இல்லாமையால் புதைக் கிறார்கள். அந்தப் புதையலைத் தம்முடைய காலத்திலேயே பிறர் மறைவாக எடுத்துக் கொண்டு செல்ல அதனால் ஏமாந்து போகிறவர்கள் உண்டு. அவர்கள் தம்முடைய வாழ்நாளில் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் இறந்து போகப் பிறகு யாரோ ஒருவர் அதை எடுத்துக் கொள்வதும் உண்டு.

## திருட்டில் கொடுத்தல்

**தா**ம் ஈட்டியதை இப்படிப் புதைத்து வைத்துவிட்டு மீண்டும் ஒருநாள் புதையலைப் பிரித்துப் பார்க்கும்போது அது கிடைக்காமல் திண்டாடியவர்கள் பலர். திருட்டில் கொடுத்த பிறகு அவர்களுக்கு உண்டாகிற திகைப்புக்கு அளவேயில்லை. மனத்தில் கவலை மிகுதியாகிறது. அதனால் அவர்கள் உடம்பு இளைத்துப் போகிறது. ''ஐயோ! போய் விட்டதே!'' என்று வாடிச் சாகிறார்கள்.

அவர்கள் அறிவு உடையவர்களாக இருந்தால் ஒரு முறை திருட்டில் கொடுத்த பிறகு இனி இப்படிச் செய்யக்கூடாது என்று நினைக்கவேண்டும். 'போனது போகட்டும் இனியாவது நாம் ஈட்டிய பொருளைப் பிறருக்குக் கொடுக்கவேண்டும்' என்று அறிவு வேண்டும். பொருளிடத்தில் உள்ள பற்று அப்படிச் செய்ய இடம் கொடுப்பது இல்லை. ஒருமுறை திருட்டில் கொடுத்து விட்டால் அதனையே நினைந்து ஏங்கி வாழ்நாள் முழுவதும் துயரத்தில் இளைத்துச் சாம்புகிறார்கள். பணத்தை ஈட்டியது சில காலம். அதனை இழந்தால் உண்டாகிற துன்பமோ எஞ்சியிருக்கிற வாழ்நாள் முழுவதும் நின்று வாட்டுகிறது. என்னுடைய

அநுபவத்தில், பணம் போய்விட்டதே என்ற கவலையினால் தம் உயிரையே விட்டவர் சிலரை அறிந்திருக்கிறேன். இதுதான் வாழ்வின் பயன்போலும்!

## ஈயாரும் ஈக்களும்

"ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்" என்பது கொன்றை வேந்தன். 'தம்மிடத்தில் பொருள் இருக்கும் போது அதை வறிய வர்களுக்கு ஈயாமல் பாதுகாத்துக் கொண்டிருந்தால், அவர்கள் தேடிய அந்தப் பொருளைத் தீயவர்கள் வலிந்து கைப்பற்றிக் கொள்வார்கள்' என்பது இதன் பொருள். மனசோடு பிறருக்கு ஈந்தால் ஈபவனுக்கும் இன்பம்; பெறுபவனுக்கும் இன்பம். அப்படி இன்றி ஈயாமல் புதைத்து வைத்தால் அப்படி வைத்த வர்களுக்கும் பழி; பிறர் பொருளைப் பற்றிக் கொள்பவர்களுக்கும் பழி. ஈயாதவர்களால் இருமருங்கும் பழி உண்டாகிறது.

இந்த அடிக்கு மற்றொரு பொருளும் உண்டு. ஈயார் என்பது பரிகாசமாக ஈக்களைக் குறிக்கும் சொல். ஈக்கள் பல இடங் களுக்குப் பறந்து சென்று மலர்களை நாடி அவற்றிலுள்ள தேனைத் தேடிக் கொணர்ந்து தேன் அடை வைக்கின்றன. அவற்றின் தேட்டுத்தான் தேன். தேட்டு – தேடிவைத்தது. மலைப் பக்கங்களில் பாறைகளில் பெரிய பெரிய தேனடைகள் சாரி சாரியாக இருக்கும். அவற்றை மக்கள் எடுத்துத் தேனைப் பிழிந்து தொகுத்துப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். எவ்வாறு தேனை எடுக்கிறார்கள், தெரியுமா? தீப்பந்தங்களைக் கொண்டு சென்று ஈக்களைக் கொளுத்துவார்கள்; தேனடைக்குக் கீழே பெருந்தீயை மூட்டி எரிய விடுவார்கள். அதனால் ஈக்கள் தேனடைய விட்டு ஓடிவிடும்; பல இறந்து போகும். பிறகு தேனடையை எடுத்துக் கொள்வார்கள். ஈக்கள் தேடித் தொகுத்த தேனாகிய தேட்டைத் தீயை உடையவர்களாகிய மக்கள் கொள்கிறார்கள். 'ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்' என்பதற்கு இப்படியும் ஒரு பொருள் கொள்ளலாம்.

இந்த இரண்டு வகையான கருத்தையும் ஒன்றுக்கு ஒன்று உவமையாக வைத்து நாலடியாரில் ஒரு பாட்டுச் சொல்கிறது. "தாம் ஈட்டிய பொருளைக் கொண்டு சிலர் நல்ல உடையை

அணிவதில்லை. வயிறாரச் சாப்பிடுவதில்லை. அவற்றால் பொருள் குறைந்துவிடும் என்று எண்ணுவார்கள். போதிய அளவுக்கு உணவு கொள்ளாமையால் அவர்கள் உடல் நலியும். அவர்கள் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டித் தம்மைத்தாமே நலிந்து கொள்வார்கள். பொருள் நிலையாக நில்லாமல் போய்விடும். அதனால் செய்யும் அறம் கெடாது. இதனை அறிந்து பொருளைக் கொண்டு நல்ல அறங்களையும் செய்யமாட்டார்கள். யாருக்கும் கொடுக்காமல் இப்படி ஈட்டிய பொருளையெல்லாம் தாமே வைத்துக் கொண்டு பணங்காத்த பூதமாக இருப்பவர்கள் கடைசியில் அந்தப் பொருளை இழந்துவிடுவார்கள். இது உலக இயல்பு. இதற்கு உவமை வேண்டுமா? வானளவும் ஓங்கியிருக்கும் மலைநாடனே, உனக்குத் தெரிந்ததையே சொல்கிறேன். மலைச் சாரல்களில் தேனைக் கொண்டுவந்து பெரிய பெரிய தேனடைகளை வைக்கும் தேனீக்களே சாட்சி. அந்தத் தேனடைகளை மக்கள் எடுத்துக் கொள்கிறார்கள். தேனீக்கள் தேனை இழப்பதோடு தம் உயிரையே இழந்துவிடு கின்றன'' என்று பொருள் விரித்து உணரும்படி அமைந்திருக் கிறது அந்தப் பாட்டு.

***''உடாஅதும் உண்ணாதும் தம்உடம்பு செற்றும்***
***கெடாஅத நல்அறமும் செய்யார்; - கொடா அது***
***வைத்தீட்டி னார்இழப்பர்; வான்தோய் மலைநாட!***
***உய்த்தீட்டும் தேனீக் கரி.''[1]***

பெற்ற பொருளைக் கொடாமல் ஈட்டி வைத்து இழந்து ஏமாந்து வாடுபவர்கள் நிலை எவ்வளவு இரங்கத் தக்கது!

இப்படி வாழ்நாளை வீணாகச் செலவழித்துக் கடைசியில் மரணம் அடைகிறவர்களைப் பார்த்து, ''ஐயோ பாவம்! தாம் பெற்ற பொருளை உள்ளபோதே கொடுக்காதவர்கள் அல்லவா இப்படி வீணாக மரிக்கிறார்கள்?'' என்று அருணகிரியார் இரக்கத் தால் பேசுகின்றார்.

★

1. உடாஅதும் - நல்ல உடையை உடுக்காமலும். செற்றும் - வருத்தியும். ஈட்டினார் - பொருளைச் சேமித்தவர். உய்த்து - செலுத்தி; கொண்டுவந்து. கரி - சாட்சி.

வேடிச்சி கொங்கை விரும்பும்
குமரனை மெய்அன்பினால்
பாடிக் கசிந்துள்ள போதே
கொடாதவர் பாதகத்தால்
தேடிப் புதைத்துத் திருட்டில்
கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை
வீணுக்கு மாய்ப்பவரே.

*(வேடர்குலப் பெண்ணாகிய வள்ளிநாயகியின் கொங்கையை விரும்பும் குமரனை, உண்மையான அன்பினால் புகழ்ந்து பாடி, நெஞ்சம் உருகி, தம் கையில் பொருள் இருக்கும்போதே அதை வறியவர்களுக்குக் கொடாதவர்கள், தாம் முற்பிறவியில் செய்த பாவத்தினால், பொருளைத் தேடி அதைப் பூமியில் புதைத்து வைத்துப் பின்பு அதை அவர்கள் அறியாமல் சிலர் கொள்ள, அதைத் திருட்டில் பறிகொடுத்துவிட்டு, அது காரணமாகச் செயலற்று உடம்பு இளைத்துப்போய் வாட்டமடைந்து துயருற்று, இப்படியே தம் வாழ்நாளை ஒரு பயனும் இன்றி வீணாக்கி அழிப்பவர்கள் ஆவார்கள்.*

*கொடாதவர்கள் மாய்ப்பவரே என்று கூட்டுக.*

*கசிந்து - மனம் நெகிழ்ந்து. உள்ளபோதே - கையில் பிறருக்குக் கொடுப்பதற்குரிய பொருள் இருக்கும்போதே. கொடாதவர் - வறியவர்களுக்கு வழங்காதவர்கள். பாதகம் - தீங்கு; இங்கே தீய செயலால் விளைந்த பாவம். திகைத்து - மயங்கி; செயலிழந்து. கிலேசித்து - துயருற்று. வீணுக்கு - வீணாக.)*

# அருளும் ஈகையும்

# 1

## இரண்டு எல்லைகள்

மனித வாழ்வுக்கு இரண்டு எல்லைக் கற்கள் இருக்கின்றன. ஒன்று பிறப்பு; மற்றொன்று சாவு. இந்த இரண்டு எல்லைக் கற்களினிடையே மனிதன் வாழ்கிறான். வாழும்போது பலபல செயல்களைச் செய்தாலும் அவனது ஆன்மாவுக்குப் பயன்படுகிறவை சிலவே. பெரும்பாலும் தனது வருங்கால வாழ்வுக்காக, மறுமைக்காக, அவன் ஏதும் செய்வது இல்லை. இந்த வாழ்வே நமக்குச் சரி என்று எண்ணிக் கொண்டு இப்போது அநுபவிக்கும் இன்பமே மேலானது என்ற மயக்கத்தில் வாழ்கிறான். 'செத்த பின்னால் ஒரு வாழ்க்கை இருக்கிறது. அது நல்ல வாழ்வாக அமைய வேண்டும். மீண்டும் மீண்டும் இறந்து பிறக்காத நிலை பெற வேண்டும்' என்ற நினைவு இருந்தால்தான் அதற்கு ஏற்ற முயற்சியைச் செய்வான். இறைவன் திருவருள் கிடைத்தால் அத்தகைய ஆராய்ச்சியில் தலைப்படுவான். அப்போது பிறரிடத்தில் அன்பு வைத்துத் தன் பொருளை ஈயும் நிலை உண்டாகும்.

## பொருளும் அருளும்

பொருளை வைத்திருந்தாலும், ஈவதற்குரிய ஏழைகள் அருகில் இருந்தாலும் எல்லோருமே கொடுக்க முடிவதில்லை. கொடுக்கவேண்டும் என்ற மனம் இருந்தால் கொடுத்துவிடத் தோன்றும். அத்தகைய மனம் இறைவன் திருவருளால் வர வேண்டும். இறைவன் நினைத்தால் அன்றி நம்மால் கொடுக்க வகை கிடையாது.

**சாகைக்கும் மீண்டு பிறக்கைக்கும் அன்றித்**
**தளர்ந்தவர்க்கு ஒன்று**
**ஈகைக்கு எனை விதித்தாய் இலையே**

பிறர் அடைகின்ற நன்மைகளைப் பார்த்து, 'அத்தகைய நன்மை எனக்குக் கிடைக்கவில்லையே' என்று ஏங்கிச் சொல் பவரைப் போலச் சொல்கிறார் அருணகிரிநாதர். உலகில் பிறந்த எல்லோரும் செத்துப் போகிறார்கள்; பிறகு பிறக்கிறார்கள். இடைக்காலத்தில் பல தர்மங்களைச் செய்து அதனால் புண்ணியத்தை ஈட்டிக் கொள்கிறார்கள் சிலர். பிறப்பதற்கும் சாவதற்கும் இடையிலுள்ள வாழ்வுக் காலத்தில் இந்தப் புண்ணியத்தை ஈட்டிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. பலர் அந்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ளாமல் சாகிறார்கள். புண்ணியத்தை ஈட்டிக் கொள்வதற்காகத்தான் பிறப்பு. சாவதும் பிறப்பதுமாகிய செயல்கள் நம்மால் தவிர்க்க முடியாதவை. புண்ணியச் செயலோ நாம் விரும்பிச் செய்வது. 'புண்ணியம் என்னால் செய்ய முடியவில்லையே' என்று அருணகிரியார் சொல்லவில்லை. 'சாவதும், பிறப்பது மாகிய இரண்டையும் நீ எப்படி எனக்கு விதித்தாயோ, அது போலவே ஈவதையும் விதிக்க வேண்டும். அதனை நீ எனக்கு விதிக்கவில்லையே' என்று சொல்கிறார்.

## ஒற்றுமையும் வேற்றுமையும்

எல்லோரும் பிறப்பதிலும் சாவதிலும் ஒரேமாதிரி இருந்தாலும், வாழ்க்கையில் இன்ப துன்பம் அநுபவிப்பதில் வெவ்வேறு வகையில் இருக்கிறார்கள். பணம் பெற்றவர்கள் எல்லோரும் இன்பம் அடைகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆசை இருந்தாலும், எத்தனை பணம் இருந்தாலும், மன அமைதி பெறாமல் வாழ்கிற வர்கள் உண்டு. பணத்தைப் பெறுவதற்கு இறைவன் திருவருள் எப்படி அவசியமோ அப்படியே அதனை அநுபவிப்பதற்கும் இறைவன் திருவருள் அவர்களுக்கு வேண்டும். பணத்தை வைத் திருக்கிறவர்கள் எல்லோரும் பிறருக்குக் கொடுக்க முடியாது; தாமும் உண்ண முடியாது.

அவரவர்களுடைய புண்ணிய பாவ வினைக்கு ஈடாக இந்த உலகத்தில் பிறந்து இன்ப துன்பங்களை அநுபவிக்கிறார்கள். அப்படி அநுபவிக்கும்போது, 'நம் போன்று மற்றவர்கள் அநுபவிக் காமல் இருக்கிறார்களே! இதற்குக் காரணம் என்ன?' என்று மனிதன் ஆராயவேண்டும். அப்போது, 'இந்த உலகத்தில் பிறந்த பிறகு நாம் ஒன்றும் செய்யாமல் இருக்க, நமக்குத் துன்பம்

உண்டாகிறதே; எத்தனையோ தீங்குகளைப் புரிந்து வருகிற அவனுக்கு இன்பம் கிடைக்கிறதே' என்று அவனுக்கு ஆலோசனை தோன்றும். அதனால் இப்போது உண்டாகிற விளைவுக்கு வேறு ஏதோ காரணம் இருக்க வேண்டுமென்ற தெளிவு உண்டாகும். 'முற்பிறவியில் நாம் தக்கபடி நடக்காமல் இரப்பவர்களுக்குக் கொடுத்துப் புண்ணியத்தைத் தேடிக் கொள்ளாமையினால் இந்த நிலை வந்தது' என்ற உணர்ச்சி உண்டாகும்.

**"இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்**
**சிலர்;பலர் நோலா தவர்"**

என்பது திருக்குறள். உலகத்தில் பலர் வறுமை வாய்ப்பட்டிருக்கிறார்கள். சிலர் பொருள் உடையவர்களாக இருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்றால், முற்பிறவியில் இந்த உடம்புக்கு வேண்டிய சுகங்களை மட்டும் எண்ணி வாழாமல் நல்ல காரியங்களைச் செய்து விரதம் மேற்கொண்டவர்கள் சிலரே, அப்படி இல்லாதவர்களே பலர்.

## ஏறுபவனும் சுமப்பவனும்

மற்றோர் உதாரணம் காட்டுகிறார் திருவள்ளுவர். ஒரு பல்லக்கு; அதன் மேல் ஒருவன் ஏறிச் செல்கிறான்; அதனை நான்கு பேர்கள் சுமக்கிறார்கள். இன்பத்தை அநுபவிக்கிறவன் ஒருவன்; துன்பத்தை அநுபவிக்கிறவர்கள் நான்கு பேர். பிறரால் சுமக்கப்பட்டுப் பணத்தை வைத்து வாழ்பவன் ஒருவன்; பிறரைச் சுமந்து சிறிதளவு கூலியைப் பெறுகிறவர்கள் நான்கு பேர். இதே அளவுதான் உலகத்தில் சுகம் துக்கம் என்பதற்கும் அமைந்திருக்கிறது. சுகப்படுகிறவர்கள் ஒரு பங்கானால் துன்பப்படுகிறவர்கள் நான்கு பங்கு.

**"அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை**
**பொறுத்தானோ டூர்ந்தான் இடை"**

என்று திருவள்ளுவர் சொல்கிறார். 'அறம் செய்கிறவர்கள் அடையும் பயன் இன்னது என்று ஆராய்ச்சி செய்யவேண்டாம். கண்முன் னால் பார்க்கிற உதாரணத்தினால் தெரிந்து கொள்ளலாம். ஒருவன் சிவிகையில் ஏற நான்கு பேர் சுமக்கிறார்கள். இரண்டு வகையினருக்கும் தோற்றத்தில் வேறுபாடு இல்லை; பிறப்பிலும்

சாவிலும் வேறுபாடு இல்லை. ஆனால் அவர்கள் அநுபவத்தில், இப்போது உள்ள வாழ்வில், வேறுபாடு உண்டாவதற்குக் காரணம் அவர்கள் முற்பிறவியில் செய்த அறந்தான். சிவிகையில் இருக்கிறவன் முன்பு அறம் செய்திருக்கிறான். சுமக்கிறவர்கள் முன்பு அறம் செய்யவில்லை.' இத்தகைய கருத்துக்களை அடக்கி அந்தக் குறளைச் சொல்லியிருக்கிறார்.

முன்னைப் பிறவியில் அறம் செய்தவர்கள் இந்தப் பிறவியில் பொருளாளர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இறைவன் திருவருளால் மீண்டும் அறம் செய்ய வேண்டுமென்ற நினைவு உண்டானால், வரும் பிறவிகளுக்கும் அவர்கள் நன்மை செய்து கொண்டவர்களாகிறார்கள்.

## ஈய வைத்தார்

இடைக்காலத்தில் நாம் பார்க்கிற செல்வம் மறுபடியும் போய்விடும் என்ற உணர்வோடு, 'இது நமக்காக வந்தது அன்று. இரப்பவர்களுக்குக் கொடுப்பதற்காக இறைவன் தந்தது' என்ற நினைவு மெய்யறிவாளிகளுக்குத் தோன்றும். இறைவன் நமக்குச் செல்வம் தந்தது இரப்பவர்க்கு ஈவதற்காகத்தான் என்ற எண்ணம் இருப்பவர்கள், தம்முடைய பொருளைப் பிறருக்குக் கொடுத்து இறைவனது அருளைச் சம்பாதித்துக் கொள்வார்கள்.

**''இரப்பவர்க்கு ஈய வைத்தார்**
**ஈபவர்க்கு அருளும் வைத்தார்''**

என்பது அப்பர் சுவாமிகள் பாட்டு. உலகத்திலுள்ள மனிதர் களிடம் பொருளை வைத்துத் தன்னிடம் அருளை வைத்துக் கொண்டிருக்கிறான் ஆண்டவன். அருளும் பொருளும் பிறருக்கு ஈவதனால்தான் சிறப்பு அடைகின்றன. பொருளைப் பெற்றவன் பிறருக்கு ஈந்து அருள் என்னும் செல்வத்தை அடையவேண்டும். பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்ற கருணையோடு ஆண்டவன் தன்னிடத்தில் அருளை வைத்துக் கொண்டிருக்கிறான். அதுபோலவே பணக்காரனும் பிறருக்குக் கொடுப்பதற்காகவே பணத்தை இறைவன் தனக்குக் கொடுத்திருப்பதாக எண்ண வேண்டும். பிறருக்குப் பொருளைக் கொடுக்கிறவன் இறைவன் வழங்கும் அருளைப் பெறுகிறான்.

## தளர்ந்தவர்களுக்குக் கொடுத்தல்

**யா**ருக்குக் கொடுப்பது? இப்போது பணக்காரர்கள் பிறருக்குக் கொடுப்பது உண்டு. தம்முடைய பிள்ளைக்குக் கொடுக்கிறார்கள்; மாப்பிள்ளைக்குக் கொடுக்கிறார்கள்; உறவினர்களுக்குக் கொடுக்கிறார்கள். ஏதாவது திருமணம் அவர்கள் வீட்டில் நடந்தால் ஆயிரக்கணக்கில் செலவழிக்கிறார்கள்; தம் பொருளை அழித்துப் பெரிய விருந்து செய்கிறார்கள். வேண்டியவர்களுக்குப் பணம் கடன் கொடுக்கிறார்கள்; ஆடையாபரணங்களைச் சில சமயங்களில் இரவலாகக் கொடுக்கிறார்கள். இப்படிக் கொடுப்பதும் கொடைதானே என்றால், அது கொடையாகாது. தம்மோடு சார்ந்தவர்கள் என்ற அபிமானத்தாலும், தமக்குப் பெயர் வரவேண்டுமென்ற ஆசையினாலும் செய்வது அது. உண்மையான ஈகை, யாருக்குக் குறையுண்டோ அவர்களுக்குக் கொடுப்பதுதான். அருணகிரியார் இதை நினைந்தே,

> **தளர்ந்தவர்க்கு ஒன்று ஈகைக்கு**
> **எனை விதித்தாய் இலையே!**

என்று சொல்கிறார்.

> **"வறியார்க்கொன் றீவதே ஈகை;மற் றெல்லாம்**
> **குறிஎதிர்ப்பை நீர துடைத்து"**

என்பது திருக்குறள். ஒரு பொருளால் குறை உடைய ஏழைகளுக்கு அவர்களுக்கு வேண்டிய பொருளைத் தம்பால் உள்ளவர்கள் கொடுப்பதுதான் ஈகையாகும். அப்படி இன்றி மற்றவர்களுக்குக் கொடுத்தால் அப்படிக் கொடுப்பதற்குக் கைம்மாறாக ஏதோ ஒன்றை எதிர்பார்க்கிறார்கள் என்றே கொள்ள வேண்டும். தம்முடைய மாப்பிள்ளைக்குப் பணம் கொடுப்பதற்கு, அவன் தம் பெண்ணை நன்றாக வைத்துக் கொள்வான் என்ற நினைவு காரணம். தம்முடைய அலுவலகத்தில் உடன் வேலை பார்க்கும் ஒருவருக்கு விருந்து வைப்பதற்கு, அவர் திரும்பத் தம்மைக் கூப்பிட்டு விருந்து வைப்பார் என்பதே காரணம். மதுரையில் இருந்து வந்த நண்பர் ஒருவருக்குப் பாயசம், பொங்கல் முதலியவற்றோடு உணவு அளித்தால் அதற்குக் காரணம் அவர்கள்பாலுள்ள அன்பு மாத்திரம் அன்று; நாம் அவர் ஊருக்குப் போனால் நமக்கும் அப்படியே விருந்து செய்வார் என்று எதிர்பார்த்தே

அப்படிச் செய்கிறார்கள். ஒரு பொருளைக் கொடுத்து மீட்டும் அளந்து வாங்கிக் கொள்வதைக் குறியெதிர்ப்பை என்று சொல் வார்கள். ஏழைகளுக்கு அளிக்காத கொடை, பின்பு அது திரும்பி வரும் என்ற எண்ணத்தால் செய்வதே என்பது திருவள்ளுவர் கருத்து.

ஆகையால் யாருக்கு உண்மையாகப் பொருள் தேவையோ, யாருக்குக் குறை இருக்கிறதோ, வாழ்க்கைக்கு வேண்டிய அவசிய மான பொருள்களைப் பெறாதவர்களாக யார் இருக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுப்பதுதான் கொடை; அறம். உண்மையான வள்ளல்கள் வறியவர்கள் தம்மை நோக்கி வராவிட்டாலும் தாம் அவர்களைத் தேடிச் சென்று கொடுப்பார்கள். தாம் பொருளை வைத்திருப்பதற்குப் பயன் இரவலர்களுக்குக் கொடுப்பதே என்று அறம் செய்வோர் எண்ணுவார்கள். பழங்காலத்தில் அரசர்கள், ஒரு நாள் தம்மை நாடி யாரேனும் இரவலர் வராவிட்டால் அதற் காக வருந்தினார்கள். ஒருவன் ஓரிடத்தில் சபதம் செய்கிறான். ''நான் இப்படிச் செய்வேனானால் பலநாட்கள் என்னை நாடி இரவலர்கள் வராமல் இருப்பார்களாக'' என்கிறான்.

**''இரவலர் வாரா வைகல்**
**பலஆ குகயான் செலவுறு தகவே''[1]**

என்பது அவன் கூற்று. ஒவ்வொரு நாளும் நன்றாகச் கழிந்தது என்ற நிறைவு வரவேண்டுமானால் அன்று நல்ல அறச் செயல் செய்தோம் என்ற நினைவு இருக்க வேண்டும். பொருளை ஈட்டு வது பெரிதன்று; அதனால் நாம் நன்மை அடைவதும் பெரிதன்று. அதனைப் பிறருக்கும் கொடுத்து அதனால் வருகிற இன்பத்தைப் பெறுவதே அதனால் உண்டாகும் சிறந்த பயன். அந்த இன்பம் மிகுதியாக வேண்டுமானால் செல்வரிடமிருந்து பொருளைப் பெறுகிறவர்கள் உண்மையான ஏழைகளாக இருக்கவேண்டும். வறுமையினால் தளர்ந்தவர்களுக்கு, உடல் வலிமை இல்லாமல் தளர்ந்தவர்களுக்கு, அன்னமும் ஆடையும் இல்லாமல் தளர்ந்தவர் களுக்கு, இப்படியே எந்த எந்தப் பொருள் இல்லாமல் தளர்ந் திருக்கிறார்களோ அவர்களுக்கு அந்த அந்தப் பொருளைக் கொடுக்க வேண்டுமென்று அருணகிரியார் இறைவனிடம் விண்ணப்பித்துக் கொள்கிறார்.

1. இரப்பவர்கள் என்னை நோக்கி வாராத நாட்கள் பலவாகட்டும், நான் இனிப் பிறக்கும் பிறப்பில்.

## ஈகையின் வகை

'தளர்ந்தவர்களுக்கு வேண்டியதைக் கொடுக்கின்ற வகையில் என்னை வைக்கவில்லையே!' என்று குறைபட்டுக் கொள்கிறார் அவர். ''தளர்ந்தவர்களுக்குக் கொடுக்கும்படியா எனக்குப் பொருள் தரவில்லையே'' என்று அவர் சொல்லவில்லை. பணத்தைப் கொடுப்பதுதான் ஈகை என்பது அன்று. யாரேனும் ஒருவர் தம் நண்பருடைய பெயரைச் சொல்லி அவருடைய விலாசம் எங்கே இருக்கிறதென்று கேட்கிறார். அந்த விலாசம் நமக்குத் தெரியும். அவருக்கு விலாசத்தைச் சொல்லி வழிகாட்டுவதும் ஒருவகை ஈகைதான்; கூடப் போக முடியாவிட்டாலும் இன்ன இடத்தில் இருக்கிறதென்று தெளிவாகச் சொல்வதும் ஈகை. உத்தியோகம் தேடி அலைகிற பல பேர்களுக்கு உத்தியோகம் கொடுக்கிறவர் களிடம் சிபாரிசு செய்வதும் ஒருவகை ஈகைதான். மிகச் சிறந்த வர்கள் தம் மனத்தினால் இவன் நன்றாக வாழ வேண்டுமென்று நினைத்தாலும் இன்பம் உண்டாகும். அந்த நினைவுகூட ஒரு வகையில் ஈகைதான்.

நிரம்பிய செல்வத்தை ஈட்டி வைத்துப் பிறகே மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று நினைப்பது முறை யன்று. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் ஏதாவது ஒரு பொருள் உரிமையாக இருக்கிறது. ஒன்றும் இல்லாவிட்டாலும் கை கால்கள் இருக் கின்றன. அவற்றைக் கொண்டு பிறருக்கு உதவி செய்யலாம். ஆகவே, அறம் செய்வதற்குப் பொருள்தான் முக்கியமான கருவி என்பது இல்லை. பொருள் மிகுதியாக இருந்தால் அறத்தின் அளவு மிகுதியாகும். பலர் நலம் பெறுவார்கள். ஆனால் அறம் செய் வதற்கு மனந்தான் முக்கியம்.

## கரப்பவர் பெறும் துன்பம்

என்னிடம் இருந்தால் கொடுப்பேன் என்று சிலர் சொல்வது உண்டு. அது போலி வாதம். முன்னை நல்வினைப் பயன் காரண மாக வளப்பமான வாழ்வைக் கொடுத்து, பொருளையும் கொடுத்து, ''இரப்பவர்க்கு ஈவாயாக'' என்று ஆண்டவன் அனுப்பியிருக்க, அவன் திருவருளை உணர்ந்து கொள்ளாமல் பிறருக்குக் கொடுக் காமல் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் செல்வத்தைத்

திருட்டிலே கொடுத்து, இளைத்து வாடி, கிலேசித்து, வாழ்நாளை வீணுக்கு மாய்க்கிறார்கள் என்று முன்பு அருணகிரியார் சொன்னார். அத்தகையவர்களுக்கு இறைவன் மறுமையில் நரகங்களை வைத் திருக்கிறார்.

**''கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநர கங்கள் வைத்தார்''**

என்பது அப்பர் வாக்கு. தம்மிடம் பிறர் வந்து இரக்கிற காலத்தில் உதவி செய்வதற்குப் பொருள் இருந்தாலும் கொடுப்பதற்கு அஞ்சி மறைத்துக் கொள்கிறார்களே, அவர்களுக்குக் கடுமை யான நரகத்தை ஆண்டவன் வைத்திருக்கிறானாம்.

நாமும் மக்கள் ஆகையால் பிறருக்கு எதனால் தளர்ச்சி உண் டாகும் என்பது நன்றாகத் தெரியும். பசியினால் மனிதன் துடிக்கும் போது அவன் தளர்ச்சி நமக்கு நன்றாகத் தெரிகிறது. தன்னுடைய தொழில் முயற்சியில் பொருள் இல்லாமல் திண்டாடும் போது அந்தத் திண்டாட்டத்திற்குப் பொருள் இல்லாத தளர்ச்சியே காரணம் என்பது நமக்குத் தெரியும். தளர்ச்சியைத் தெரிந்து கொள்ளாமல் இருந்தால் பொருளைக் கொடுக்கத் தெரியாமல் இருக்கலாம்; ஆனால் தளர்ச்சி இன்னாருக்கு உண்டென்பதை நன்றாகத் தெரிந்து கொண்டும் அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்யாமல் இருக்கும் இயல்பு மிகக் கொடிது.

உலகத்தில் தளர்ச்சியற்றவர்கள் மிகக் குறைவு. எங்கே பார்த்தாலும் தளர்ச்சியுள்ளவர்களையே காண்கிறோம். உடல் தளர்ச்சி, உள்ளத் தளர்ச்சி இவற்றினால் வாடுகிற மக்கள் எங்கும் நிறைந்திருக்கிறார்கள். ஆகையால் தளர்ச்சி உள்ளவர்கள் யாரும் இல்லை என்று சொல்ல இயலாது. என்னிடம் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லையே என்று சொல்வதும் முறையன்று. தளர்ச்சி உள்ளவர்களுக்குக் கொடுப்பதற்கு எனக்கு மனம் வரவில்லையே என்று சொல்லலாம். அப்படிச் சொல்வதுகூடப் பிழை. மனத்தில் அத்தகைய எண்ணத்தை இறைவன் திருவருள் உண்டாக்கவில்லையே என்று சொல்வது தான்உண்மை. அதை அருண கிரியார் சொன்னார்.

**தளர்ந்தவர்க்கு ஒன்று**
**ஈகைக்கு எனை விதித்தாய் இலையே**

# 2

இப்படிச் சொன்ன அருணகிரியார் அடுத்த இரண்டடியில் ராமபிரான் புரிந்த செயல் ஒன்றை நினைவு ஊட்டுகிறார். எத்தனையோ இடங்களில் ராமபிரானது திருவிளையாடல்களை நமக்கு நினைப்பூட்டும் வழக்கம் உள்ளவர் அருணகிரியார். அப்படிச் சொல்லும்போதெல்லாம் தாம் சொல்ல வந்த கருத்துக்குப் பொருத்தமான திருவிளையாடலைச் சொல்வார். இங்கேயும் அப்படிப் பொருத்தமான வரலாறு ஒன்றை நினைப்பூட்டுகிறார்.

## *ராமபிரான் வரலாறு*

**இலங்காபுரிக்குப்**
**போகைக்குநீ வழிகாட்டு என்று போய்க் கடல்**
**தீக்கொளுந்த**
**வாகைச் சிலை வளைத்தோன்.**

*ராமசந்திர மூர்த்தியின் வரலாறு விரிந்தது. அளவிலாத் திரு விளையாடல் புரிந்த வள்ளல் அப்பெருமான். அவர் நாட்டைத் துறந்து காட்டுக்கு வந்தார். இராவணன் அபகரித்துச் சென்ற சீதா பிராட்டியைத் தேடிக் கொண்டு கானகத்தில் அலைந்து திரிந்தார். இலங்கையில் இருப்பது தெரிந்து அதை நாடிச் சென்றார். அப் போது விபீஷணன் வந்து அடைக்கலம் புகுந்தான்.*

*ராமபிரானுடைய வருகையை எதிர்பார்த்து ஊண் உறக்க மின்றிச் சீதாபிராட்டி இலங்கையில் தவம் கிடக்கிறாள். கடலுக்கு அப்புறம் இருக்கிறது இலங்கை. இப்புறத்தில் ராமபிரான் இருக் கிறார். கடலைக் கடந்து இலங்கைக்குப் போகவேண்டும். இதற்கு என்ன வழி என்று ராமபிரான் யோசனை பண்ணுகிறார். விபீஷணனைப் பார்த்துச் சொல்கிறார். ''நல்ல அறிவுடைய விபீஷணா, என்னுடைய தோள் வலியினால் யாராக இருந்தாலும் வென்று விடுவேன்; அதைப் பற்றிக் கவலையில்லை. இலங்கையில் உள்ள பகைவர்கள் எத்தனை பலம் உடையவர்களானாலும் நான் அஞ்சமாட்டேன். ஆனால் முதலில் இந்தக் கடலைக் கடந்து போகவேண்டுமே! நீ என்ன உபாயம் சொல்கிறாய்?'' என்று கேட்கிறார்.*

பிறருக்குத் தர்மத்தை விளக்கிக் காட்டவந்த செல்வர் அல்லவா அவர்? அவர் நினைத்திருந்தால் இருந்த இடத்தில் இருந்த படியே சீதாபிராட்டியை மீட்டுக்கொண்டு வர முடியும். விண் உலகத்தை விட்டு மண் உலகத்திற்கு வந்த பெருமானுக்குக் கடலுக்கு இக்கரையிலிருந்து அக்கரைக்குப் போகத் தெரியாதா? தாம் மேற்கொண்ட அவதார தர்மத்திற்கு ஏற்றபடி நடக்க வேண்டுமே தவிர, வேறு வழியில் நடக்கக் கூடாதென்பது அவர் கருத்து. ஆகவே, மற்ற மக்கள் செய்கிறது போலக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் விபீஷணனைக் கேட்கிறார். அதற்கு விபீஷணன் வருணனைச் சரண் அடைவது ஒன்றே கடலைக் கடக்கும் உபாயம் என்று சொல்கிறான்.

ராமபிரான், ''வருணனையா நான் வேண்டிக் கொள்வது?'' என்று சொல்லவில்லை. விபீஷணன் சொன்ன யோசனையை ஏற்றுக் கொண்டு தர்ப்பைப் புல்லைப் பரப்பி அதன்மேல் ஏழு நாட்கள் தவம் செய்தார். அந்தப் பெருமான் தவம் செய்த இடந்தான் திருப்புல்லணை என்ற பெயருடன் இருக்கிறது. ராமேசுவரம் போகிறவர்கள் அந்தத் தலத்திற்குப் போவது மரபு.

ராமபிரானது பெருமையை வரணன் அப்போது உணர்ந்து கொள்ளவில்லை. 'தாம் பெற்ற இந்திரச் செல்வம் போன்ற அயோத்திமாநகரத்தையே தம் தம்பிக்குக் கொடுத்துவிட்ட வள்ளல் இவர். உலகம் வேண்டியது அத்தனையையும் வேண்டியபோது கொடுக்கும் பிரான். அத்தகைய கருணைக் கடல் இங்கே உப்புக் கடலின் வாசலுக்கு வந்து நம்மையும் ஒரு பொருளாக மதித்துக் குறையிரப்பவர் போல இப்படித் தவம் புரிகிறாரே! இது நமக்கு வாய்த்த பெருமை அல்லவா? இவருக்கு வேண்டிய உதவியை நாம் உடனே செய்வோம். வலியப் போய்ச் செய்து இவர் அருளைப் பெறலாம்' என்று வருணன் எண்ணவில்லை. 'இவர் நம் உதவியை நாடி நிற்கிறார்; கிடக்கட்டும்' என்ற அகங்காரத்தினால் ஒளிந்து இருந்தான்.

**''தருண மங்கையை மீட்பதோர் நெறிதரு கென்னும்**
**பொருள் நயந்துநன் னூல்நெறி யடுக்கிய புல்லில்**
**கருணை யங்கடல் கிடந்தனன் கருங்கடல் நோக்கி,**
**வருண மந்திர மெண்ணினன் விதிமுறை வணங்கி.''[1]**

தம்முடைய அரசைப் பிறருக்குக் கொடுத்துவிட்டு வந்த பெருமான் அவர். யார் எதைக் கேட்டாலும் கொடுக்கிற வள்ளல். அவருடைய இயல்பான நிலை அது. எல்லாப் பொருளையும் உடைய சுவாமி அவர். அவரே உடையவர். நாமோ நம்மிடத்திலுள்ள பொருளைக் கேட்டால்தான் கொடுக்கமுடியும். நம்மிடத்தில் இல்லாத பொருள் ஒன்றைக் கேட்டால் இல்லையென்று கை விரிப்போம். ஆனால் இறைவனுக்கோ எல்லாப் பொருளும் சொந்தமாக இருப்பதனால் எதனைக் கேட்டாலும் தருவான். அவனிடம் என்ன பொருள் இருக்கிறதென்று நமக்குத் தெரியாதேயொழிய அவன் எதைக் கேட்டாலும் தருவதற்குரிய ஆற்றல் உள்ளவன்தான்.

எல்லாவற்றையும் பிறருக்குக் கொடுக்கும் அந்தக் கருணைக் கடலாகிய ராமபிரான் உப்புக் கடலின் வாசலில் வருணனைத் தெய்வமாக எண்ணி விதிமுறைப்படி வணங்கித் தோத்திரம் செய்து கொண்டு கிடந்தார். ஒருநாள் அல்ல; இரண்டு நாட்கள் அல்ல; ஏழு நாட்கள் திருப்புல்லணையில் தவம் கிடந்தார். இப்படிக் கிடக்க வேண்டிய நிலை தமக்கு வந்ததே என்ற நினைவு அவருக்கு அப்போது உண்டாயிற்று.

**“ஒன்றும் வேண்டில ராயினும் ஒருவர்பால் ஒருவர்**
**சென்று வேண்டுவ ரேல்அவர் சிறுமையில் தீரார்.”**

‘எவரிடத்திலும் ஒன்றையும் வேண்டாத குறையற்ற பெரியவராக இருந்தாலும், பிறர் கேட்பதற்கு முன்பே எல்லாம் கொடுக்கும் திறன் உடையவராக எல்லாப் பொருளும் நிரம்பியவராக இருந்தாலும், அற்ப குணமுடையவரிடத்தில் காலத்தினாலும், இடத்தினாலும் இளைத்து ஏதேனும் உதவியை நாடிச் சென்றால், அவர்கள் தம் அற்ப குணத்தையே காட்டுவார்கள். நாம் இந்த வருணனின் உதவியை நாடி வந்தோம். நாம் இப்போது இளைப்புற்று இருக்கிறோம் என்று அவன் அலட்சியமாக இருக்கிறான். நமக்கு உதவி செய்யாமல் ஒளிந்து கொண்டிருக்கிறான்’ என்று நினைத்தார் ராமபிரான்.

---

1. தருணம் – இளம் பருவம். நெறி தருக என்னும் – வழியைக் காட்டு என்கிற. நூல் நெறி – சாத்திர விதிப்படி. வருண மந்திரம் எண்ணினன் வணங்கிக் கிடந்தனன்.

## ராமபிரான் சினம்

அவருக்குக் கோபம் வந்துவிட்டது. க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவர் அவர். தளர்ந்தவர்களுக்கு உதவி செய்யாமல் ஒளிந்து கொள்பவர்களுக்குக் கடும் நரகம் விதிக்கும் பிரான். ஆகவே தம்பியைச் சிலை கொண்டுவரச் செய்தார். அதை வளைத்து,

> **"பார்இ யங்கிரும் புனலெலாம் முடிவின்றிப் பருகும்**
> **சூரி யன்கதி ரனையன சுடுசரம் துரந்தான்."**

ராமர் அம்பை விட்டார்; கடல் வற்றிவிட்டது. வருணனது உடம்பு அப்படியே தீய்ந்து போய்விட்டது. வரிசை வரிசையாக ராமர் விட்ட பாணங்களினால் கடலில் வாழும் உயிர்கள்,

> "வெந்தன தீந்தன கரிந்தன பொரிந்தன."

எங்கே பார்த்தாலும் ராமர் விட்ட அம்புகள் குத்திக் கொண்டு நின்றன. பூமியாகிய மடந்தை முன்பு கடலாகிற நீல ஆடையைச் சுற்றிக் கொண்டிருந்தாள். இப்போது கடல்நீர் வற்றிவிட்டது. ராமபிரான் விட்ட கொடுங்கணைகள் அவள் உடம்பு முழுவதும் குத்திக் கொண்டு குருதி வழிந்தது. நில மடந்தை நீல ஆடையைக் களைந்துவிட்டுச் செந்நிற ஆடையை அணிந்தாற்போல இருந்த தாம் அந்தத் தோற்றம்.

வருணன் இதனால் துன்பத்தை அடைந்தான். பின்பு அவன் சும்மா இருக்க முடியுமா? அழுத கண்ணீரோடு, "நான் உனக்கு அபயம்" என்று கதறிக்கொண்டு வந்து வீழ்ந்தான். முன்னாலே தளர்ந்து வந்து உதவி கேட்ட பெருமானுக்குக் கரவாமல் அவன் உதவியிருந்தால் இந்தத் தண்டனை கிடைத்திருக்குமா? இரப்ப வர்க்கு ஈயாமல் இருந்தான். அதனால் தண்டனை கிடைத்தது. இரப்பவர்களுக்கு ஈயாமல் கரப்பவர்களுக்கு இப்படித்தான் தண்டனை கிடைக்கும் என்பதை ராமபிரான் காட்டினார்.

இந்த வரலாற்றை இப்போது அருணகிரியார் இடத்துக்குப் பொருத்தமாக நினைப்பூட்டுகிறார்.

> **'இலங்காபுரிக்குப்**
> **போகைக்கு நீ வழி காட்டு' என்று போய்க்கடல்**
> **தீக்கொளுந்த**
> **வாகைச் சிலை வளைத்தோன் மருகா! மயில்வாகனனே.**

இலங்கைக்குப் போகவேண்டுமென்ற கருத்தினால், ''நீ வழி காட்டுவாய்'' என்று ராமபிரான் வருணனிடம் கேட்டுக் கொண்டார். பணம் கேட்கவில்லை, காசு கேட்கவில்லை. வழி தெரியாமல் சுற்றி அலைந்து தளர்ந்திருக்கிற ஒருவனுக்கு, ''மயிலாப்பூர் போக வழி என்ன?'' என்று கேட்டால், ''இதுதான் வழி'' என்று சொல்லக் கூடாதா? அதுபோல், ''இலங்கைக்குப் போக ஒரு வழி காட்டு'' என்று ராமபிரான் கேட்டார். எப்படிப் போகவேண்டுமென்று சொல்ல வருணனுக்குத் தெரியும். ஆனால் ஒரு சொல்கூடச் சொல்லாமல், தளர்ந்து வந்து யாசித்த பெருமானுக்கு வழி இதுதான் என்று காட்டாமல், அவன் கரந்திருந்தான். அதன் பலன் என்ன? கடல் தீப்பற்றிக் கொள்ள வெற்றிச் சிலை வளைத்து அம்பைப் பொழிந்தார் ராமர்.

''அத்தயை பெருமானுடைய மருகன் நீ. இரப்பவர்க்கு ஒன்று ஈயவில்லையானால் தண்டனை கிடைக்கும் என்பதை உன்னுடைய மாமா தம் வாழ்வில் காட்டியிருக்கிறார். அதனை நான் நினைத்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஈய வேண்டுமென்ற ஆசை இருந்தும் அது நிறைவேறுவதற்குரிய வழியில் என்னை நீ விதிக்கவில்லையே! செத்துப்போவதற்கும் பிறப்பதற்குமாகப் படைத்திருக்கிறாயேயன்றி, தளர்ந்தவர்க்கு ஒன்று ஈய நீ என்னை விதிக்கவில்லையே!'' என்று அருணகிரியார் இந்தப் பாடலில் குறையிரந்து வேண்டிக் கொள்கிறார்.

### நமக்காக

அருணகிரியார் பிறருக்கு ஈயாமல் வாழ்ந்தவரா? இப்படி அவர் சொல்கிறாரே. – அவர் சோறு போட்டிருந்தால் ஒரு வேளையோடு போயிருக்கும். உடை வாங்கிக் கொடுத்திருந்தால் சில மாதங்களுக்குள் கிழிந்து போயிருக்கும். தம் வாழ்க்கைக் காலத்தில் நேருக்கு நேராக உபதேசம் செய்திருந்தாலும் தமக்குப் பின்னால் வருகிற மனித சமுதாயம் அந்த உபதேசத்தால் பயன்பெற முடியாது. தளர்ந்தவர்களுக்குப் பிறவித் துன்பத்தைப் போக்கிப் பிறப்பில்லா இன்ப நிலையை அடைவதற்குரிய வழியைக் காட்டவேண்டுமென்ற பரம கருணையினால் திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி முதலான நூல்களை வழங்கி விட்டுப் போயிருக்கிறார். நம்மைப் போலச் செத்துப் பிறப்பதற்கு அவர் வாழ்ந்தாரா? இல்லை. இல்லை.

*இந்தப் பாட்டில் உள்ள முறையீட்டை நாம் சொல்ல வேண்டும்; நமக்குச் சொல்லத் தெரியவில்லை. அவர் தம்மையே சொல்லிக் கொள்வதைப் போலச் சொல்லி நமக்குக் கற்பிக்கிறார்.*

★

சாகைக்கும் மீண்டு பிறக்கைக்கும் அன்றித்
    தளர்ந்தவர்க்குஒன்று
ஈகைக்கு எனைவிதித் தாய்இலை
    யே!இலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டுஎன்று
    போய்க்கடல் தீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மரு
    கா!மயில் வாகனனே!

*(இலங்கைக்குப் போவதற்கு நீ வழி காட்டுவாயாக என்று வருணனிடம் போய்க் குறையிரந்து கிடந்து, அவன் ஒன்றும் செய்யாமல் இருந்தமையால் கடலானது தீயால் எரிய வெற்றிமாலையையுடைய தம்வில்லை வளைத்தவனாகிய ராமபிரானுடைய மருமகனே! மயில் வாகனப் பெருமானே! என்னை இந்த உலகில் பிறந்து மீண்டும் செத்துப் போவதற்காக அல்லாமல் ஒரு பொருளின்றித் தளர்ச்சி அடைந்தவர்களுக்கு அவர் வேண்டும் பொருளைக் கொடுப்பதற்காக நீ திருவுள்ளங்கொண்டு அமைக்கவில்லையே!*

*விதித்தாய் இலையே - ஆணையிட்டு அமைக்கவில்லையே. என்று - என்று வருணனிடம் விண்ணபித்து. கொளுந்த - எரிய. வாகை - வெற்றி மாலை. சிலை - வில்)*

# முகவுரை

கந்தர் அலங்காரச் சொற்பொழிவு வரிசையில் இது பதினோராவது புத்தகம். இதில் ஐம்பத்தைந்தாவது பாடல் முதல் ஐம்பத்தொன்பதாவது பாடல் வரையில் உள்ள ஐந்து பாடல் களுக்குரிய விளக்கம் இருக்கிறது.

ஓங்கார ஒளி என்னும் முதற் சொற்பொழிவில் அருணகிரி நாதப் பெருமான், "இவ்வாறு செய்யாமல் மக்கள் வீணாக வாழ்கிறார்களே! யமதூதர்கள் வந்தால் என்ன செய்வார்கள்!" என்று இரங்கும் பாட்டுக்குரிய விளக்கம் இருக்கிறது. இவை செய்ய வில்லையே என்று இரங்கும் வாயிலாக, இவை செய்தால் யம பயத்தைப் போக்கிக் கொள்ளலாம் என்பதைப் புலப்படுத்துகிறார். ஓங்காரம் ஒரு மந்திரம்; அது ஒலிவடிவானது. அதைப்பற்றிப் பல பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பாட்டில் அருண கிரிநாதர் ஓங்காரத்துக்கு ஒளியும் உண்டு என்று சொல்லுகிறார். அநுபூதிமானாகிய அவர் கூறுவது கற்பனை அன்று. ஓங்காரம் அனுபவ நிலையில் ஒலியாகவும் ஒளியாகவும் இருந்து பொறிகள் பராமுகப் படாமல் ஒருங்கி நிற்க உதவி செய்யும் என்ற இரகசியத்தை இந்தப் பாடல் தெரிவிக்கின்றது.

இருவகைக் கவிகள் என்னும் சொற்பொழிவில், "கிழியும் படி" என்ற திருப்பாடலின் விளக்கம் இருக்கிறது. இதிலும் யம பயத்தைப் போக்க ஒரு வழியை அருணகிரியார் கூறுகிறார். இறைவனுடைய புகழாகிய கவிகளைக் கேட்டு உருக வேண்டும் என்றும், இழியும் கவிகளைக் கேட்கலாகாதென்றும் உபதேசம் செய்கிறார். காதுள்ள போதே நல்ல கவிகளைக் கேட்டு உருகாத வர்கள் யம வாதனைக்கு ஆளாவர் என்ற கருத்தையும் தெரி விக்கிறார்.

இருபிடி சோறு என்ற சொற்பொழிவு, "பொருபிடியும் களிறும்" என்ற பாட்டின் விளக்கம். மனிதனுடைய நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் உபதேசம் புரிகிறவர் அருண கிரியார் என்பது இந்தப் பாடலினால் நன்றாகப் புலப்படுகிறது.

அறம் செய் என்றும், ஐயம் இட்டு உண் என்றும் பொது வகையாக உபதேசம் செய்தவர்கள் பலர் உண்டு. அருணகிரியார் அதை மாத்திரம் சொல்லவில்லை. இரு மடங்கு ஈட்டி ஒரு மடங்கு அறம் செய்து ஒரு மடங்கு உண்டு அமைதியாக இருங்கள் என்று சொல்கிறார். ஈட்டும் போதும் ஈயும்போதும் நுகரும் போதும் அமைதி பெறும்போதும் இறைவனை நினைக்க வேண்டும் என்பது அவருடைய நல்லுரை. 'இருபிடி சோறு கொண்டு, இட்டு, உண்டு, இரும்' என்ற இந்த உபதேசம் புதுமையானது; நடைமுறைக்கு ஏற்றது.

இனிய பிரான் என்ற சொற்பொழிவில், "நெற்றாப் பசுங்கதிர்" என்ற பாட்டின் விளக்கம் அமைந்திருக்கிறது. இங்கே முருகப் பெருமானுடைய திருவிளையாடல்கள் யாவும் ஞான உலகக் காட்சிகளே என்பதைக் குறிப்பாகப் பெற வைக்கிறார் அருணை முனிவர். வள்ளிக்கு இனியபிரான் ஞானகுருவாகிய தென்முகக் கடவுளுக்கும் இனியவன் என்று இணைத்துக் கூறுவதனால் இந்தக் கருத்தை உள்ளம் கொள்ளச் செய்கிறார். இந்தப் பாட்டில் 'நெற்றா' என்ற புதிய சொல் ஒன்றைப் படைத்து அமைத்திருக்கிறார்.

அடுத்தது 'எங்காயினும் வரும்' என்ற சொற்பொழிவு. "பொங்கார வேலையில்" என்ற பாடலின் விளக்கம் அது. இறைவன் திருவருளும் நாம் செய்யும் அறத்தின் பயனும் எங்காயினும் வந்து உதவும் என்ற கருத்தை இந்தப் பாடல் உணர்த்துகிறது. முன்பு செய்த அறம் பின்பு வந்து பயன்தரும் என்பதைப் பலர் சொல்லியிருக்கிறார்கள். ஆயினும் அருணை முனிவர் சொல்வதில் ஒரு சிறப்பு இருக்கிறது. அறத்தை நினைப்பூட்டும் போதே அதற்கு உவமையாக வைத்து இறைவன் திருவருளையும் நினைப்பூட்டுகிறார். இறைவனது திருவருள் நம்மை எப்படியாவது வந்து பாதுகாப்பது உறுதி; அது போலவே அறமும் நம்மைக் காக்கும். இந்த இரண்டு உண்மைகளையும் ஒருங்கே பெறவைக்கிறார். அவன் அருள் எங்காயினும் வந்து உதவுவதை அவர் தம் அநுபவத்தில் கண்டவர்; ஆதலின் அதனை உவமையாக்கினார்.

இதில் உள்ள ஐந்து பாடல்களில் மக்களைப் பார்த்து உபதேசம் செய்யும் உருவத்தில் இருப்பவை மூன்று பாடல்கள் (2,3,5,) ஒன்று மக்களின் நிலையைப் படர்க்கையில் வைத்துச்

சொல்லுகிறது (1). மற்றொன்று முருகப் பெருமானுடைய பெருமையைப் பேசுகிறது (4). உபதேசமானாலும், இரக்கமானாலும், அநுபவமானாலும் ஒவ்வொரு பாட்டிலும் முருகனுடைய தொடர்பு அமைந்திருக்கும்; கந்தர் அலங்காரம் அல்லவா? முருகன், கிழியும்படி அடல் குன்று எறிந்தோன், புனச்சிறு மான் தருபிடி காவலன், சண்முகன், வள்ளி முற்றாத் தனத்திற்கு இனியபிரான், வேள்பட விழியாற் செற்றார்க்கு இனியவன், தேவேந்த்ர லோகசிகாமணி, பொங்கார வேலையில் வேலை விட்டோன் என்று அவன் பெயர்கள் வருவது காண்க.

இந்த ஐந்து பாடல்களும் படர்க்கைப் பரவல்; முருகனை முன்னிலையில் வைத்துப் புகழாமல், அவனைப் புகழ்ந்தவை.

கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள் வாரந்தோறும் நிகழ்ந்து வருகின்றன; நிறைவடையும் நிலையில் உள்ளன. அவை முற்றுப் பெறுவதற்கு முன் இந்த நூல் வரிசையையும் வெளியிட்டு விடலாம் என்ற எண்ணம் ஒருகால் தோன்றியதுண்டு. ஆயினும் சிறிய ஆற்றலுடைய எளியேனுடைய எண்ணத்துக்குத் திண்மை ஏது? இந்த அளவில் முருகன் திருவருள் துணை செய்கிறதே என்று எண்ணி அவனை வாழ்த்துகிறேன்.

**கி.வா. ஜகந்நாதன்**

04.09.1958

# ஓங்கார ஒளி

இறைவன் திருவருள் நெறியில் புகுந்து சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு சோபானங்களில் சென்று, எம்பெருமான் திருவருளால் இன்ப நலம் துய்த்த பெருமக்கள் பலர் இந்த நாட்டில் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்குள்ளேயும் இறைவன் திருவருள் நெறியில் ஒன்றியிருந்து தியான சமாதி கைவரப் பெற்ற அநுபூதிமான்கள் பாடுகிற பாட்டின் சுவையே தனிச் சிறப்புடன் இருக்கும். இவர்களுள் தலைசிறந்து விளங்கும் அருணகிரியார் நல்ல பல்வகையான உபதேசங்கள் அடங்கிய பாடல்கள் பலவற்றை நமக்கு அருளியிருக்கிறார்.

## அநுபவ வேட்கை

'ஆண்டவன் கோயிலுக்குப் போக வேண்டும்; அவன் திருவுருவத்தை மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும்; அவன் திருநாமத்தைச் சொல்ல வேண்டும்; தியானம் பண்ண வேண்டும்' என்று அவர் அறிவுறுத்தியுள்ள பல வகையான பழக்கங்களை நாம் செய்து கொண்டு வந்தாலும், அவற்றோடு நாம் நின்றுவிடக் கூடாது. பொழுதைப் பிற செயல்களிலே கழிக்கும் மக்களைக் காட்டிலும் இறைவன் திருவருளைப் பெற வேண்டுமென்ற ஆசையோடு அவன் திருநாமத்தை ஓதி, பஜனை செய்து வாழ்வது சிறந்ததுதான். ஆனாலும் ஒருவேளை சாப்பிட்டாலும், 'பட்டினி கிடந்தவனைக் காட்டிலும் நாம் சிறந்திருக்கிறோம்' என்று யாரும் திருப்தி அடைவதில்லை. 'இரண்டு வேளை சாப்பிட வேண்டும்; மறுநாளும் சாப்பிட வேண்டும். என்றைக்கும் நன்றாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டும்' என்றுதான் விரும்புவான். இறைவன் அருள் நெறித் திருக்கூட்டத்தில் கலந்து அவன் திருநாமத்தைச் சொல்லி, திருப்புகழைப் பாடி, வாழ்கிற வாழ்வு நல்ல வாழ்வுதான். அதோடு நின்றுவிட்டால் ஒருவேளை சாப்பிட்டவன் கதிதான் கிடைக்கும். அப்படி இல்லாமல் அதற்கும் மேலே எம்பெருமான் அருளால் மனத்தில் அமைதி காணுகின்ற

நிலையைப் பெற வேண்டும். அந்த நிலையைப் பெறுவதற்கு வழி இன்னது என்று நூல் ஆராய்ச்சியினாலே தெரிந்து கொண்டு சொல்வது ஒரு வகை. அதைவிடச் சிறந்தது சொந்த அநுபவத்தின் மூலம் வழி காட்டுவது.

## அருணகிரியார் சொல்லும் முறை

அநுபூதிமானாகிய அருணகிரிநாதர், எதிர்மறை முகத்தால், 'இப்படி எல்லாம் மக்கள் செய்யாமல் இருக்கிறார்களே!' என்று இரங்கும் வாயிலாக, இன்னது செய்ய வேண்டும் என்பதை நமக்கு ஒரு பாட்டின் மூலம் அறிவிக்கிறார். இந்தப் பாட்டு அவரைப் போன்ற நல்ல அநுபூதிமான் ஒருவரால்தான் சொல்ல முடியும்.

''ஐயா, இந்தக் குழந்தை இன்ன மருந்து சாப்பிட மாட்டேன் என்கிறானே! எங்கே பார்த்தாலும் விஷ சுரம் பரவிக் கொண்டிருக் கிறதே! இன்ன மருந்தைச் சாப்பிடாவிட்டால் அந்த நோய் வந்தால் என்ன செய்வான்?'' என்று ஒருவர் இரங்குகிறார். அவர் அப்படிச் சொல்வதிலிருந்தே இன்ன மருந்து சாப்பிடுகிறவர் களுக்கு விஷ சுரம் வராது என்பது நமக்குத் தெரியவில்லையா? இன்ன மருந்தை உட்கொள் என்பதற்கும் அதற்கும் அதிக வேறுபாடு இல்லை.

## தந்தையின் இயல்பு

எப்போதும் ஒரு குடும்பத்திலுள்ள தாய்க்கும் தகப்பனுக்கும் அன்பின் வெளிப்பாட்டிலே வேறுபாடு உண்டு. அவர்களுடைய குழந்தை பரீட்சையில் தேர்ச்சி பெறுகிறான். அதைப்பற்றித் தாய் மிகவும் மகிழ்ச்சி அடைவாள். ''என் குழந்தை பரீட்சையில் தேறி விட்டான்'' என்று ஊரிலுள்ளவர்களிடம் எல்லாம் பெருமை யாகச் சொல்லி மகிழ்வாள். தந்தைக்கும் மகிழ்ச்சி இராதா? இருந்தாலும், ''பெரிதாகத் தேறிவிட்டானாக்கும்! அடுத்த தெரு முருகன் ராஜ்யத்திற்கே முதல்வனாகத் தேறியிருக்கிறான். இவன் நன்றாகப் படித்திருந்தால்தானே அப்படித் தேர்ச்சி பெற?'' என்று வெளிப்படையாகப் பேசுவார். தம்முடைய பிள்ளை குறை சிறிதுமின்றி, நிரம்பி வரவேண்டுமென்ற எண்ணத்திலேயே அப்படிச் சொல்வார். தம் பையன் தேர்ச்சி பெற்றது பற்றி அவருக்கு உள்ளுக்குள் மகிழ்ச்சி இருக்கத்தான் இருக்கும்.

குழந்தையிடத்தில் அன்புடைய தகப்பனாரைப் போன்று, உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் தகப்பனார் நிலையில் இருப்பவர் அருணகிரியார். உலகில் நல்ல வழியில் போகிற வர்கள் எத்தனை பேர்கள் இருந்தாலும் அவர்களைப் பார்த்து வெளிப்படையாக மகிழ்ச்சி அடையமாட்டார். அவர் அப்படி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளா விட்டாலும் அவர்கள் நல்ல நெறியிலேதான் நிற்பார்கள். யார் நல்ல நெறியில் போய்க் கொண்டிருக்கவில்லையோ அவர்களைப் பார்த்து இரங்கினால் அவர்கள் திருந்தக்கூடும் என்ற பேரன்பினாலே, 'இறைவன் திரு வருளை மறந்து, அவன் அருளைப் பெறுவதற்குரிய சாதனங் களைச் செய்யாமல், இந்திரியங்களின் வசப்பட்டுத் துன்பத்தை அடைகிறார்களே!' என்று அத்தகையவர்களைக் குறித்துத் தம்முடைய இரக்கத்தைப் புலப்படுத்துகிறார்.

**ஆங்கா ரமும்அடங் கார்ஒடுங் கார்பர மானந்தத்தே**
**தேங்கார் நினைப்பும் மறப்பும் அறார்தினைப் போதளவும்**
**ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருகன் உருவங்கண்டு**
**தூங்கார் தொழும்புசெய்யார்**

என்கிற வரைக்கும் இவை செய்யவில்லையே என்று சுட்டிக் காட்டுகிறார்.

தன் தந்தையைப் பார்த்து, "நான் படிக்காவிட்டால் உங்களுக்கு என்ன?" என்று முரட்டுப் பிள்ளை கேட்கிறான். "எனக்கு என்னடா? நான்தான் நீ பின்னாலே படப்போகிற துன்பங்களை எல்லாம் பார்த்துக் கொண்டு இருக்கப் போகி றேனா? இப்போது படிக்காவிட்டால், நாளைக்குக் கல்யாணம் பண்ணிக் கொண்டு, குழந்தை குட்டிகளைப் பெற்று அவர்களைக் காப்பாற்றத் திண்டாடு வாயே! அப்போது என்ன செய்வாய்?" என்று சொல்கிற தந்தையைப் போல, அருணகிரியார் தாம் சொல்லியவற்றைச் செய்யாமையினால் என்ன உண்டாகும் என்பதைக் கடைசியில் சொல்கிறார்.

**என் செய்வார் யமதூதருக்கே?**

"இப்போது வருகிற இடையூறுகளை எல்லாம் தம்முடைய அறிவினாலே, வாய் பலத்தினாலே, உடம்பின் ஆற்றலினாலே போக்கிக் கொள்ளலாம். இவற்றினாலே போக்கிக் கொள்ள

முடியாமல், நான் சொல்கிற இந்த வழிகளில் சென்றால் அன்றி மாய்க்க முடியாத துக்கம் ஒன்று இருக்கிறது. அந்தத் துக்கத்தை உண்டு பண்ணுவதற்காகவே வருகிறவர்கள் யம தூதர்கள். அப் போது அவர்களை எதிர்த்து நிற்க இவர்கள் என்ன செய்வார்கள்?'' என்று இரங்குகிறார்.

அறுவடைக் காலத்தில் மட்டும் அரிவாளை எடுத்துக் கொண்டு போனால் அறுக்கக் கதிர் இராது. விதைக்கும் காலத்தில் விதை விதைத்து? உரமிடும் காலத்தில் உரமிட்டு, களை எடுக்கும் காலத்தில் களை எடுத்துப் பயிரை வளர்த்தால்தான், அறுவடைக் காலத்தில் வாள் எடுத்துச் சென்றால் கதிர் அறுக்கலாம். அப்படி யம தூதரைக் கண்டு அஞ்சாமல் இருக்க வேண்டுமென்றால் ஆங்காரம் அடங்க வேண்டும்; ஒடுங்க வேண்டும்; பரமானந் தத்தே தேங்க வேண்டும்; நினைப்பும் மறப்பும் அறவேண்டும். ஒரு கணமாவது ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு தூங்க வேண்டும்; தொழும்பு செய்ய வேண்டும். ''இப்படிச் செய்யாதவர்கள் யம தூதர் வந்தால் அவர்களுக்கு எதிரே என்ன செய்வார்கள்?'' என்று கேட்கிறார்.

''ஆங்காரம் அடங்காதவர்கள், ஒடுங்காதவர்கள் யமதூதருக்கு அஞ்சுவார்கள். ஆங்காரம் அடங்குபவர் அஞ்சார்; ஒடுங்குவார் அஞ்சார். பரமானந்தத்தே தேங்காதவர்கள் அஞ்சுவார்கள்; தேங்கு பவர்கள் அஞ்சமாட்டார்கள். நினைப்பும் மறப்பும் அறாதவர்கள் அஞ்சுபவர்கள்; நினைப்பும் மறப்பும் அறுபவர்கள் அஞ்சாத வர்கள். தினைப்போது அளவும் ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு தூங்காதவர் அஞ்சுபவர்கள்; தூங்குப வர்கள் அஞ்சார். தொழும்பு செய்யார் அஞ்சுவார்; தொழும்பு செய்வார் அஞ்சார்'' என்று இந்தப் பாட்டில் அருணகிரியார் எதிர்மறையில் சொன்னவற்றை எல்லாம் உடன்பாடாக அமைத்துப் பார்த்தால் நாம் உய்வு பெறும் நெறி தெரிகிறது.

## மூன்று பகுதிகள்

இதில் மூன்று பகுதிகள் உள்ளன.

ஆங்காரமும் அடங்கார் ஒடுங்கார் பரமானந்தத்தே
தேங்கார் நினைப்பும் மறப்பும் அறார்.

என்பது வரையில் ஒரு பகுதி.

திணைப் போதளவும்
ஓங்காரத்து உள்ஒளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு
தூங்கார்; தொழும்பு செய்யார்

என்பது அடுத்த பகுதி. இந்த இரண்டு பகுதியிலே சொல்லும் கருத்துக்களில் வேறுபாடு உண்டு.

## தலையளவும் கடையளவும்

ஒரு தகப்பனார், தம் குழந்தை ஆங்கிலத்தில் நல்ல புலமை பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவனோ படிப்பதில்லை. அவனைப் பார்த்து, ''அடே, ஆங்கிலத்தில் நல்ல அறிவு வேண்டு மென்றால் ஷேக்ஸ்பியர் படிக்க வேண்டும்; மில்டன் படிக்க வேண்டும். ஒன்றும் படிக்கவில்லை. ஆங்கிலப் பத்திரிகையின் தலையங்கமாவது படிக்கக் கூடாதா?'' என்று சொல்லுகிறார். ஷேக்ஸ்பியர், மில்டன் போன்ற கவிஞர்களின் நூல்களைப் படிப்பது சிறந்த நிலை. அது முடியவில்லை என்றால் குறைந்த பட்சம் ஆங்கிலப் பத்திரிகையின் தலையங்கம் படிப்பது. இது இருந்தால் நாளடைவில் அது வரும்.

அப்படி, ஆங்காரம் அடங்கி ஒடுங்கி, பரமானந்தத்தே தேங்கி, நினைப்பும் மறப்பும் அறுவது தலை நிலை; இது மேலளவு (Maximum). இது வரவேண்டுமானால் இதற்குப் பல வழிகள் உண்டு. இறைவன் திருவருள் அநுபவம் கிடைத்துவிடும் என்று தெரிந்து கொள்வதற்கு அறிகுறி ஒரு கணமாவது ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு தூங்க வேண்டும்; இறைவனுக்குத் தொண்டு செய்ய வேண்டும். இது மிகக் குறைந்த நிலை; தாழ்ந்த அளவு (Minimum). இந்த இரண்டு அளவுகளையும் அநுபவத்தில் கண்டால் என்ன பயன்? ''யமதூதரைக் கண்டு அஞ்சாமல் வாழலாம். மரணம் இல்லாத பெருவாழ்வு எய்தலாம்'' என்று அந்தப் பயனைக் கடைசிப் பகுதியில் வைத்துச் சொல் கிறார் அருணகிரியார்.

இனி ஒவ்வொரு பகுதியாகப் பார்க்கலாம்.

## ஆங்காரம் அடங்கல்

ஆங்காரமும் அடங்கார்; ஒடுங்கார்.

ஆங்காரம் என்ற சொல் அகங்காரம் என்பதன் திரிபு. ஆங்காரம் என்று சொல்லும்போது நாம் அகங்காரத்தைக் குறிப்ப தில்லை. ஆங்காரம் உடையவன் என்றால் கோபம் உடையவன் என்கிற நினைப்புத்தான் வருகிறது. அகங்காரத்திற்கும் கோபத் திற்கும் தொடர்பு உண்டு. நான் என்ற நினைவு வரும்போது பற்று உண்டாகிறது. தன்னால் பற்றப்படுகிற பொருளை வேறு ஒருவன் பற்றினால் கோபம் உண்டாகிறது. நான் என்ற நினை வும், எனது என்ற பற்றும் வந்தால் கோபம் உண்டாகிறது. ஆங்காரம் என்ற சொல்லுக்கே கோபம் என்ற அர்த்தம் வழக்கில் வந்து விட்டது. ஆங்காரமாகிய கோபம் அடங்க அகங்காரம் என்ற செருக்கு அடங்க வேண்டும்.

''காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்''

என்று சொல்கிற வள்ளுவர் வெகுளி என்பதை நடுவில் வைத்தார். வெகுளி என்பது கோபம். உள்ளத்திலுள்ள ஆசாபாசங்களின் வெளியீடு. மனம் உடைய எல்லாருக்கும், சாதனம் பண்ணுகிறவர் களுக்குங்கூடக் கோபம் வரும்.

கோபம் வராமல் இருப்பது வேறு; வருகிற கோபத்தை அடக்குவது வேறு. மனத்தில் கோபம் வராமல் இருக்கிறவர்கள் யாரும் இல்லை. அதனால்தான் ஔவைப்பாட்டி, ''அறுப்பது சினம்'' என்று சொல்லவில்லை. ''ஆறுவது சினம்'' என்று சொன் னாள். சினம் உண்டாவது மனத்தின் இயல்பு. இயல்பான ஒன்றை அறுக்க முடியாது. மனிதனுக்குக் கோபம் வருவது இயற்கை யாதலால், வருகிற கோபத்தை உடனே அறிவினால் அடக்கிவிட முயல வேண்டும்.

''உள்ளங் கவர்ந்தெழுந்தோங்கு சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணம்என்க''

என்று சிவப்பிரகாச சுவாமிகள் சொல்கிறார்.

ஒருவன் நல்லவனாக இருப்பான். மற்றவர்களிடத்தில் நயமாகப் பேசிக் கொண்டிருப்பான். அவன் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டு சினம் எழுந்துவிட்டால் அவனுக்கும் கண் தெரியாமல் போய்விடும். அவனது சுமுகமான குணம் மூர்க்கத்தனமாகி விடும். அவனால் மிகவும் மதிக்கப்படுகிறவர்கள் குறுக்கே

சமாதானம் பண்ணி வைக்க வந்தாலும் அவர்களுக்கு மரியாதை கொடுக்காமல் கத்துவான். பகைவன்மேல் விழவேண்டிய அடி சமாதானம் பண்ண வந்தவர்மேல் விழுந்தாலும் விழும். அதை அவன் உணரமாட்டான். கோபம் அவனது அகக்கண்ணையும் மறைத்து, புறக்கண்ணையும் மறைத்துவிடும். இப்படி உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கும் சினத்தைக் காத்துக் கொள்ளும் குணமே குணம்.

சினம் வராமலேயே இருப்பது உயர்ந்ததுதான். அந்த நிலை முதிர்ந்த ஞானிகளிடந்தான் காணலாம். வீடு தீப்பற்றிக் கொள்ளாமல் பாதுகாப்போடு இருப்பது உயர்வுதான். பற்றிக் கொண்டு விட்டால் வீடு முழுவதும் தீப்பரவாதவாறு தீயை அணைக்கிறோம். முழுவதும் பரவிவிட்டால் பக்கத்து வீடுகள் பற்றிக் கொள்ளும் முன்னே அணைக்கப் பார்க்கிறோம். பக்கத்து வீடுகளும் பற்றிக் கொண்டுவிட்டால் ஊர் முழுவதும் நாசமாகாதவாறு அணைக்க முற்படுவது இல்லையா? கோபம் உண்டாகும் போல் இருந்தால் உடனே அதை அடக்க முயல வேண்டும். உண்டாகிவிட்டால் அதன் விளைவு மற்றவர்களிடத்திலும் பரவாதவாறு உடனே தடுத்துக் கொள்வதற்கு முயல வேண்டும். இதுதான் அறிவுக்கு அழகு.

ஒருவன்மேல் கோபம் உண்டானால், அந்தக் கோபம் வெளிப்படும் முன், 'அவன்மேல் எதற்காகக் கோபம் வந்தது? அவன் என்ன தவறு செய்தான்? அந்தப் பிழையை அவன் செய்யும்படி நாம் என்ன செய்தோம்?' என்று கொஞ்சம் சிந்தனை செய்ய முற்பட்டால் போதும்; கோபம் தணிந்துவிடும். அதற்காகவே சிலர், கோபம் வரும்போது பத்து வரை எண்ணச் சொல்வார்கள். அதையும்விடத் தம்முடைய இன்பப் பொருளாக மதிக்கிற மனையாட்டியை நினைத்துக்கொண்டால் கோபம் போய்விடும் என்பர். மனையாட்டியிடத்திலே கோபம் வந்துவிட்டால் ஆண்டவன்தான் அடக்கவேண்டும்!

## அகங்கார மமகாரங்கள்

ஆண்டவனுடைய நினைப்பு இருந்தால் போதும்; யாரிடத்திலே கோபம் வந்தாலும் அது வெளிப்பாடு இல்லாமல் அவிந்து

விடும். இறைவன்பால் பக்தி உரம் பெறப்பெற அகங்கார மமகாரங்கள் மங்கி வரும். அதனால் கோபம் ஒழியும்.

"யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்"

என்பர் வள்ளுவர்.

அவற்றை அறுப்பது எப்படி? நம் நாட்டில் உள்ளவர்கள் பல நல்ல பழக்கத்தை உண்டாக்கி வைத்தார்கள். ஒருவர் வீடு கட்டினார். கிருகப் பிரவேசம் நடைபெற்றது. அன்றைக்கு வந்திருந்த நண்பர் ஒருவர் வீட்டுக்காரரைப் பார்த்து, ''வீட்டை நன்றாகக் கட்டிவிட்டீர்களே'' என்று பாராட்டினார். ''உம் நானா கட்டி முடித்தேன்? ஆண்டவன் திருவருளால் முடிந்தது' என்று வீட்டுக்காரர் சொன்னார். இது அகங்காரத்தை மாற்றும் பழக்கம்.

தன் பெண்ணுக்கு ஒருவர் கல்யாணம் பண்ணினார். ''பெண்ணுக்குச் சிறப்பாகக் கல்யாணம் பண்ணிவிட்டீர்கள்'' என்று சொன்னால், ''ஆம், நன்றாகப் பண்ணினேன்'' என்று அவர் சொல்லிக் கொள்வாரா? ''ஆண்டவன் திருவருளினால் திருமணம் இனிது முடிந்தது'' என்று சொல்கிறார். இப்படி வாக்கினாலே நான் செய்கிறேன் என்று கூறுவதை மாற்றி, அவன் செய்கிறான் என்ற பேச்சையும் நினைப்பையும் உண்டாக்கிக் கொண்டால் நம்மையும் அறியாமல் இவ்வுணர்ச்சி மெல்ல மெல்ல ஆழமாக நெஞ்சிலேயும் பாய்ந்துவிடும். ''ஆண்டவனே, என்னுடையது என்று இவ்வுலகில் என்ன இருக்கிறது? எல்லாம் உன்னுடையன. நான் நான் என்று எண்ணி மயங்கினேனே! நானே எங்கே இருக்கிறேன்? எங்கும் நீதான் இருக்கிறாய்'' என்கிற உணர்வு உள்ளத்தில் உறைந்துவிடும்.

நம் நாட்டுப் பெரியவர்கள் நான் என்று சொல்வது இல்லை. ''நாம்'' என்று சொல்வது வழக்கம். ''நான் தனி அல்ல. நான் என்பது ஒரு சமஷ்டியில் கலந்துள்ள ஒன்று. ஒரு பெரிய சமுதாயத்தில் சேர்ந்த ஒன்று'' என்று நினைத்து நாம் என்று சொல்வார்கள். சில அகங்காரிகளுங்கூட அதைப் பார்த்து, ''நாம்'' என்று சொல்லிக் கொள்வதுண்டு. நாம் என்பது அவர்களிடம் அகந்தையை ஒழித்துக் கொள்ளப் பயன்படுவதில்லை; அகங்காரத்தை மிகுவிக்கிறது. ஆற்றிலே குளித்து அழுக்கைப் போக்கிக் கொள்ளப் போய்ச் சேற்றைப் பூசிக் கொண்ட கதைதான் அது.

மனத்தின் தீய நினைப்பு மாறி, ''நான் செய்யவில்லை. எல்லாம் ஆண்டவன் செய்கிறான். எனது என்று ஒன்றும் இல்லை. எல்லாம் ஆண்டவனுடையவை'' என்கிற உண்மையான ஞானம் ஒருவனுக்கு உண்டானால் அவனுக்குப் பிறரிடத் தில் கோபமே உண்டாகாது. அகங்காரம் அடங்கி விடுகிறது. இல்லாதவர்கள்,

**ஆங்காரமும் அடங்கார்; ஒடுங்கார்.**

## ஒடுக்கம்

ஒடுக்கம் என்பது வெளிப்பாட்டின் குறைவு. வெளிப் படுதலாவது யாது? நம்முடைய திரிகரணங்களின் செயல் வெளிப் பாடு. மாறுபட நினைப்பது மனத்தின் செயல். மாறுபடப் பேசுவது வாக்கின் செயல். மாறுபடச் செய்வது உடம்பின் செயல். இந்த மூன்று வகையான செயல்களும் அடங்கினால், பொறி வழியே உண்டாகும் ஐந்து வகையான அநுபவங்களும் ஒடுங்கும்.

வாக்கினாலே பேசுகிறோம். அது செயல். ஒரு பொருளை வாயிலே போட்டுச் சுவைக்கிறோம். அது அநுபவம். செய லுக்குக் காரணமாகக் கர்மேந்திரியங்கள் ஐந்து இருக்கின்றன. அநுபவத்திற்குக் காரணமாக ஞானேந்திரியங்கள் ஐந்து இருக் கின்றன. வாக்கு, உடம்பு ஆகிய இரண்டினுள்ளும் ஐந்து கர்மேந் திரியங்களும் அடங்கும். மற்றொன்று மனம். மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்று கரணங்களினாலும் நாம் செயல் செய் கிறோம். கண் காது மூக்கு முதலிய ஞானேந்திரியங்களினாலே அநுபவிக்கிறோம். செயல்படுகிற மூன்று காரணங்களையும் அடக்கினால் அவற்றால் உண்டாகிற அநுபவங்கள் ஒடுங்கும்.

திரிகரணங்களின் செயல் அடங்கி, ஐந்து பொறிகளின் நுகர்ச்சியும் ஒடுங்கினால் அதை ஒடுக்கம் என்று சொல்வர். சைவ மடங்களில் ஒடுக்கம் என்று ஓர் இடம் இருக்கும். அங்கேதான் மடாதிபதி இருப்பார். கர்மேந்திரியங்கள் ஐந்தும் அடங்கி, ஞானேந்திரியங்கள் ஐந்தும் ஒடுங்கித் தவம் செய்கிற இடம் எதுவோ அதற்கு ஒடுக்கம் என்று பெயர். மடாதிபதியோடு உடன் இருந்து தொண்டு புரியும் அணுக்கத் தொண்டருக்கு ஒடுக்கத் தம்பிரான் என்று பெயர். பெரும்பாலும் அடுத்த தலைவராக அவரே வந்துவிடுவதுண்டு. ஒடுக்கத் தம்பிரான் என்றால் பிறரைத் தம்முடைய அதிகாரத்தினாலே மடத்தில் ஒடுக்குகிற தம்பிரான்

என்று பொருள் கொள்ளக் கூடாது. புலன்கள் ஒடுங்கி இருக்கும் தம்பிரான் என்று பெயர்.

'ஒழிவில் ஒடுக்கம்' என்பது ஒரு நூல். ஒழிந்தால் ஒடுக்கம் வருமாம். செய்கிற காரியங்களிலிருந்து ஒழிந்து நிற்றல் உண்மை யான ஒழிவாகும்; அதுவே உண்மைத் துறவு. துறவற நெறியை மேற்கொள்வதுதான் துறவு என்று எண்ணக் கூடாது. செய்யத் தகாத காரியங்களைச் செய்யாமல் இருப்பதும் ஒரு வகையில் துறவுதான். கொஞ்சம் கொஞ்சமாக நம்முடைய செயல்களை அடக்கிக் கொண்டு வந்தால், தேவைகளைத் துறந்து கொண்டு வந்தால், பூர்ணமான துறவு தானே சித்திக்கும். நம்முடைய அநாவசியத் தேவைகளைத் துறத்தல் முதல் நிலை. மிக அவசிய மான பொருள்களில் ஒரு பங்கைத் துறத்தல் அடுத்த நிலை. மிக அவசியமானவற்றையும் துறந்துவிடுவது கடைசி நிலை. இப்படிப் படிப்படியாகத் துறக்கும்போது கர்மேந்திரியங்களுடைய செயலும் படிப்படியாக அடங்கும்; ஞானேந்திரியங்களுடைய அநுபவ நுகர்ச்சியும் ஒடுங்கும்.

இப்படி அடங்கி ஒடுங்குவதற்கு இந்த உலகியல் வாழ்வில் இருந்து கொண்டே, ஆசாபாசங்களுக்கிடையே வாழ்ந்து கொண் டிருக்கும்போதே, முயற்சி செய்ய வேண்டும். இவை எல்லாம் ஒழிந்த பின் முயலலாம் என்று இருப்பவன் கடல் அலை ஓய்ந்தவுடன் நீராடலாம் என்று இருப்பவனைப் போன்றவன். அநுபவப் பொருள்கள் இருக்கும்போது எதையும் அநுபவிக்கா மல் துறந்து இருப்பதுதான் துறவு.

"இளையான் அடக்கமே அடக்கம்"

என்பர். உடம்பினால் தளர்ந்து முதிர்ந்து போன பெண் ஒருத்தி, "நான் கற்புடையவளாக இப்போது வாழ்கிறேன்" என்று சொல்லிக் கொண்டால் எப்படி இருக்கும்? "விருத்தா நாரீ பதிவ்ரதா" என்று வடமொழியில் சொல்வார்கள். பொருள் இருக்க வேண்டும்; அதை அநுபவிக்காமல் மனத்தை அடக்க வேண்டும். உடல் வலிவுடைய கட்டிளம் காளையாக இருக்க வேண்டும்; பிரம்ம சரிய ஒழுக்கத்தை மீறாமல் மனத்தை அடங்கி, இந்திரியங்களை அடக்கி வாழ வேண்டும். இதுதான் உண்மையான அடக்கம்; ஒடுக்கம். இது உள்ளத் துறவினால் வருவது.

"அறந்தான் இயற்றும் அவனிலுங் கோடி அதிகம்இல்லம்
துறந்தான்; அவனிற் சதகோடி உள்ளத் துறவுடையோன்."

இல்லறத்தில் இருந்து பலவிதமான தர்மங்களைச் செய்கிறவனை விட இல்லம் துறந்தவன் ஒரு கோடி உயர்வானவன். அதைவிட நூறு கோடி அதிகமானவன் உள்ளத் துறவு உடையோன்' என்கிறார் பட்டினத்தடிகள். உள்ளத் துறவு, செயலும் அநுபவமும் மெல்ல மெல்லக் குறையும்போதுதான் உண்டாகும்.

உடம்பிலிருந்து உள்ளம் என்பதையே தனியாக அறுத்துவிட முடியாதா? விறகில் தீப் பற்றிக் கொண்டு கொழுந்து விட்டெரிகிறது. விறகிலிருந்து தீச்சுடரைத் தனியாகப் பிரிக்க முடியுமா? அப்படியே உடம்பினுள் இருக்கிற மனத்தைப் பிரிக்க முடியாது. வாசனா பலத்தினாலே நிலை பெறுவது மனம். செயலால் உண்டாகிற வாசனையைச் சார்ந்து மனம் நிற்கும். வினைகளை அறுத்தால் வாசனை மடியும். வாசனை மடிந்தால் மனம் மடியும். செயலும் அநுபவமும் குறையும்போது யான் எனது என்னும் செருக்கு மாயும்.

ஆங்காரமும் அடங்கார் ஒடுங்கார்.

## பரமானந்தத்தே தேங்குதல்

ஆங்காரம் அடங்குதல் ஐந்து கர்மேந்திரியங்களின் செயல் குறைவதனால் உண்டாகும். ஒடுங்குதல் – ஐந்து ஞானேந்திரியங்களின் நுகர்ச்சி மெல்ல மெல்லக் குறைதல். செயல் குறைந்தால் தான் அநுபவம் குறையும். நான் எனது என எண்ணிச் செயல்படுகிற மனிதன், "ஆண்டவன், ஆண்டவனது" என்று எண்ணினால் அந்த எண்ணம் குறையும். எல்லாம் ஆண்டவன் செய்கிறான் என்கிற நினைப்பினாலே தன் செயல் இழந்து, எல்லாப் பொருளும் ஆண்டவனுடையது என்கிற நினைப்பினாலே தன் நுகர்ச்சியும் குறைந்து போகும். இதன் பயன் என்ன? பரமானந்தத்தே தேங்கலாம். ஆங்காரம் அடங்காதவர்கள், ஒடுங்காதவர்கள்,

பரமானந்தத்தே தேங்கார்

பள்ளம் கண்ட இடத்தை நோக்கி நீர் ஓடுவது போல இன்பம் கண்ட இடத்தை நோக்கி நம்முடைய இந்திரியங்கள் எல்லாம் ஓடிவிடுகின்றன. இன்பம் எங்கே கிடைக்கும் எனத் தேடுகின்றன.

கொஞ்சம் சுகமாகத் தூங்கவேண்டும் என்றால் ஓடுகிற வண்டியில் ஏறிப் படுத்தால் தூங்க முடியுமா? ரெயில்வே நிலையத்தில் வேலை செய்கிற ஊழியர்கள் நன்றாகத் தூங்க வேண்டுமென்று ரெயில் வண்டியில்தான் படுத்துக் கொள்வார்கள். ஓடும் வண்டியில் படுக்கமாட்டார்கள். கவர்னர், உயர்தர அதிகாரி இவர்களுக்குத் தனியாக எங்கோ மூலையில் கிடக்கும் வண்டியில் ஏறிப் படுத்துக் கொள்வார்கள். அவர்களைப் போல நமக்கும் ஓடாத வண்டியில் ஏறிப் படுத்துக் கொண்டு தூங்கத் தெரியவில்லை. ஓடுகிற வண்டியிலேயே தூங்கப் பார்க்கிறோம்.

உடம்பாகிய வண்டி ஓடிக்கொண்டே இருக்கிறது. மனம், வாக்கு, காயம் எல்லாம் ஓடிக் கொண்டே இருக்கும் போது தூங்க முடியுமா? உலகத்தில் நாம் தூங்குகிற தூக்கம் தூக்கமே அல்ல. கருவி கரணங்கள் எல்லாம் ஓடி ஓடிக் களைப்படைந்து தளர்ந்து போய் இளைப்பாறுவதை நாம் தூக்கம் என்கிறோம். கொஞ்சம் இளைப்புத் தணிந்தவுடன் மறுபடியும் அவை ஓட ஆரம்பித்து விடுகின்றன. கருவி கரணங்கள் களைப்படையாமல் பலத்தோடு இருக்கும்போதே மனத்தை அடக்கி, வாக்கை அடக்கி, செயலை அடக்கி அவற்றின் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தித் தூங்குகிற தூக்கந்தான் உண்மையிலேயே இன்பமான தூக்கம். நாம் தூங்குகிற தூக்கத்தில் கருவி கரணங்கள் ஓய்ந்து போய் நிற்கின்றன. ஞானிகள் தூங்குகிற தூக்கத்தில் கருவி கரணங்கள் ஒழிந்து போய் நிற்கின்றன.

தூக்கம் என்பதே இன்ப அநுபவத்திற்குப் பின்தான் ஏற்படும். சிற்றின்பம் அநுபவித்த பின் அயர்ந்த தூக்கம் விளைகிறது. நல்ல விருந்து சாப்பிடுகிறான். உடனே அப்பாடி என்று படுத்துக் கொண்டு குறட்டைவிட ஆரம்பித்து விடுகிறான். இது நாக்கினால் விளைந்த இன்பம். சங்கீதம் கேட்கும் போது தான் ஆனந்தம் என்று நினைக்கிறோம். உயர்ந்த சங்கீதமானால் கேட்கிறபோது ஆனந்தம் விளைவது மாத்திரம் அல்ல; கேட்டுவிட்டு வீட்டிற்கு வந்தால் சாப்பிடக்கூடப் போகாமல் உட்கார்ந்து கொண்டு கேட்டு வந்த இன்னிசையை மனத்தாலே எண்ணி தூங்கத் தோன்றும்.

குற்றாலத்து அருவி மலையிலிருந்து பளார் பளார் என்று அலை மோதிக் கொண்டு வேகமாகக் கீழே விழுகிறது. அப்படி

அடித்துக் கொண்டு வேகமாக வருகிற அருவி சமபூமிக்கு வந்தவுடனே மெல்ல ஓடுகிறது. வாய்க்கால்களிலே பாய்ந்து பாய்ந்து அதன் வேகம் மிகவும் குறைந்து போகிறது. கடைசியில் சமுத்திரத்தோடு கலந்தவுடனே தேக்கமாகி விடுகிறது. அப்படி மிக வேகமாகச் சுற்றிச் சுழன்றுகொண்டு போகிற நம்முடைய பொறிகள் எல்லாம் மெல்ல மெல்ல வேகம் தணிந்து, ஓட்டம் குறைந்து, இறைவன் திருவருட் சமுத்திரத்திலே, பேரானந்த சாகரத்திலே, கலந்துவிடும்போது தேக்கம்உண்டாகிறது.

"பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண் டேன்செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மானந்த சாகரத்தே"

என்று அருணகிரியார் முன்பு பாடியுள்ளார். அந்தப் பரமானந்த சாகரத்தில் கலந்துவிட்டால் ஓட்டம் அடங்கி விடும்; தேக்கம் உண்டாகும். அடித்துச் சுருட்டிக் கொண்டு வருகிற நதி தேங்கிக் கிடக்கிற கடலோடு கலந்து விட்டால் தானும் தேங்கி விடுவது போல, ஆங்காரம் அடங்கி, ஒடுங்கி, ஐம்புலன்களைச் சுட்டறுத்துப் பரமானந்த சாகரத்தே கலந்துவிட்டால் தேக்கம் உண்டாகும்.

## நினைப்பும் மறப்பும் அறுதல்

தேக்கமாவது செயலும், அநுபவங்களும் அற்று நின்று, இன்பத்தின் உறைப்பாய் நிற்கிற நிலை. அதற்கு அப்புறம் என்ன? நினைப்பு இல்லை, மறப்பு இல்லை. இப்படி ஆங்காரம் அடங்கி, ஒடுங்கிப் பரமானந்தத்தே தேங்காதவர்கள்,

நினைப்பும் மறப்பும் அறார்

என்கிறார் அருணகிரியார்.

நாம் ஆழ்ந்து தூங்குகிறோம். தூக்கத்திலே தட்டி எழுப்பினால் எழுந்திருக்கும்போதே, "நாம் இன்னார்" என்ற நினைவுடனே எழுந்திருக்கிறோம். அப்படியின்றி எழுந்திருந்து, "நான் யார்? எங்கே இருக்கிறேன்? நீங்கள் எனக்கு என்ன வேண்டும்?" என்று யாராவது கேட்பதுண்டா? எவ்வளவு நன்றாகத் தூங்கினாலும் எழுந்தவுடனேயே, "நான் இந்த இடத்தில் இருக்கிறேன்; நான் இன்னார்" என்ற நினைவுடனே எழுந்திருப்போம்.

இந்த வாரம் ஒரு தொடர் கதையைப் படிக்கிறோம். அடுத்த வாரம் தொடர் கதையை எடுத்தவுடன் ஒரு வார இடையீட்டினால் எப்படிப் பழைய கதையை நாம் மறக்காமல் மேலே படிக்கிறோமோ அப்படித்தான். தூங்கும் போது நான் இன்னான் என்ற நினைவு இல்லாமல் அயர்ந்து தூங்கினாலும் எழுந்திருக்கும் போதே அந்த நினைவுடன் எழுந்திருக்கிறோம். இது இருட்டுத் தூக்கம். தூங்கும்போது மறக்கிறோம்; விழிக்கும் போது நினைக்கிறோம். இந்தத் தூக்கத்தைக் கேவலாவஸ்தை என்றும், இந்த விழிப்பைச் சகலாவஸ்தை என்றும் சொல்வார்கள். ஞானிகளோ கருவி கரணங்கள் தளர்ந்து போகாமல் சுறுசுறுப்பாக இருந்தாலும் அவற்றைத் தாமாகவே செயலற்றுப் போகும்படி செய்து தூங்குவார்கள். அப்போது விழிப்பும் இராது; தூக்கமும் இராது. அதுவே ஞானத் தூக்கம்.

நினைத்தேன் என்று சொன்னால் முன்பு மறந்திருந்தேன் என்பது சொல்லாமலே புலனாகிறது. மறத்தலும், நினைத்தலும் இல்லாத நிலை ஒன்று உண்டு. நாம் உலகில் வாழும்போது நம்மை மறக்கிறது இல்லை. நன்றாக மறந்து தூங்கினாலும்கூட, நம்மையும் அறியாமல், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்று செயல்படுகிற மனத்தின் நான்கு பகுதிகளில் அகங்காரத்தின் விளைவாக நான் என்ற நினைவு எப்போதும் அந்தக்கரணத்தில் இருக்கிறது. அதையும் மறந்து விடுகிற ஒரு நிலைதான் இறைவனிடத்தில் ஒன்றுகின்ற சமாதி நிலை என்பர் பெரியவர்கள். உலகத்து இருள் அகற்றி, எம்பெருமானின் ஞான ஒளியோடு கலக்கிற நிலை அது.

உலகத்து ஒளி எல்லாம் நிழல் தருகிற ஒளி. விளக்கின் ஒளிக்கும் சூரியனின் ஒளிக்கும் வேறுபாடு உண்டு. விளக்குப் பிற இடத்திலே ஒளியைக் கொடுக்கிறது. தன்னிடத்திலே தன் நிழலையே பெரியதாகக் காட்டுகிறது. சூரியன் தன்னுடைய நிழலைக் கொடுக்காமல் எங்கே பார்த்தாலும் ஒளியைப் பரப்புகிறான். அவன் ஒளியிலும் நிழல் விழுகிறதே என்றால் அவன் ஒளிக்கு முன்னால் இருக்கும் கட்டிடங்கள், மரங்கள் முதலியவற்றின் நிழல்களே விழுகின்றன. ஒளிக்கு முன்னால் ஒளியைத் தடைப் படுத்துகிற பொருள் இருந்தால் நிச்சயம் நிழலும் இருக்கும்.

ஆண்டவன் அருள் ஒளிக்கு முன்னால் நான் எனது என்கிற அகங்கார மமகாரம் இருப்பதனால் மயக்கம் ஆகிய நிழல் பற்றுகிறது; நிழல் இருள் இரண்டும் இனந்தானே? பொருள் இல்லாவிட்டால் ஒளிக்கு முன்னால் நிழல் இல்லை. நிழல் விழச் செய்யும் பொருளாகிய நான் எனது என்கிற பற்று ஒழிந்து, ஜீவபோதம் போய்விட்டால், பரமானந்தத்தே தேங்கி, இரவும் பகலும் இல்லா நிலையில், நிழல் இல்லாப் பேரொளியில், நினைப்பும் மறப்பும் அற்றுத் தூங்கலாம்.

'இந்த நிலையை ஒருவரும் அடையவில்லையே! இறைவன் திருவருளினால் காலஜயம் பண்ணவேண்டுமென்று கருதி அகங்கார மமகாரத்தை ஒழிக்கவில்லையே! கர்மேந்திரியங்களின் செயல் அடங்கி, ஞானேந்திரியங்களின் அநுபவம் ஒடுங்கவில்லையே! ஆங்காரம் அடங்கி ஒடுங்கினால் பரமானந்தத்தே தேங்கலாம்; அப்படித் தேங்கவும் இல்லையே! நினைப்பு மறப்பு அறவும் இல்லையே! இப்படி இருக்கிறார்களே!' என்று ஏங்குகிறார் அருணகிரியார்.

ஆங்காரமும் அடங்கார் ஒடுங்கார் பரமானந்தத்தே
தேங்கார் நினைப்பும் மறப்பும் அறார்.

இந்நிலை எல்லாராலும் எய்துதற்கு ஒண்ணாதது. இருந்தாலும் இதுவே நம்முடைய லட்சியமாக இருக்க வேண்டும். இந்த லட்சியத்தை எய்துவதற்குரிய வழி ஒன்று வேண்டும் அல்லவா? ''நான் முன்னே சொன்ன அத்தனையும் இந்த ஒரு வழியைப் பின்பற்றினால் போதும்; தானே வந்துவிடும்'' என்று சொல்கிற அளவு மிகக் குறைந்ததான நிலையை, எல்லோரும் பின்பற்றி உய்வு பெறும் வழியை, அருணகிரியார் இப்போது சொல்கிறார்.

ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு
தூங்கார், தொழும்பு செய்யார்.

## ஓங்காரத்து ஒளி

ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு தூங்குவது உயர்ந்த அநுபவம். தியானத்தில் ஈடுபட்டுச் சமாதி நிலை எய்த விரும்புகிறவர்களுக்கு மிகச் சிறந்த வழியாகும்.

நாம் கோயிலுக்குப் போகிறோம். எத்தனை பெரிய கோயில் ஆனாலும், பிராகாரத்தால் பெரியதாக இருக்குமே தவிரக் கடைசியில் மூல விக்கிரகம் இருக்கும் கர்ப்பக்கிருகம் சிறியதாகத்தான் இருக்கும். 'அந்தக் காலத்தில் விஷயம் ஒன்றும் தெரியாமல் மூல மூர்த்தியை ஒரே இருட்டு அடைந்த குகை போன்ற இடத்தில், காற்று வெளிச்சம் எதுவும் இல்லாத இடத்தில் வைத்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் இடித்துவிட்டு நல்ல வெளிச்சம் உள்ள இடத்தில் வைக்கக் கூடாதா?' என்று சிலர் நினைக்கிறார்கள். வேண்டுமென்றேதான் நம்முடைய முன்னோர்கள் இருதயம் போன்று சன்னல் இல்லாத ஓர் இடத்தில் ஆண்டவனை வைத்தார்கள். கோயிலுக்குப் போய்க் கர்ப்பக் கிருகத்தில் இருக்கும் ஆண்டவனை ஒரு கணம் பார்த்தால் இருட்டில் தெரியாது. அப்புறம் மெல்லக் குனிந்து, கண்ணைக் கூர்ந்து பார்த்தால்தான் தெரியும். குருக்கள் தீபாராதனை காட்டும்போது மிக்க பிரகாசமாக, விளக்கமாகத் தெரியும்.

அவர்கள் தீபாராதனை காட்டும்போது தீபத்தால் ஓங்கார எழுத்தை எழுதுவதுபோல, ஓம் என்கிற சுழிப்பாகக் கையைச் சுற்றிக் காட்டுவார்கள். இந்த ஓங்கார ஒளி வட்டத்திற்குள் நாம் இறைவனது உருவத்தைக் காண வேண்டும். அப்படிப் பார்க்கும் போதே அதை நாம் அடுத்தடுத்துப் பார்க்கக் கூடிய தியானப் பொருளாக வைக்க வேண்டும். ஓங்கார ஒளி வட்டத்திற்குள் நாம் காணுகின்ற சொரூபத்தை மனத்திலும் வைத்துப் பார்க்க வேண்டும்.

ஓம் என்ற மந்திரம் ஒலி உடையது என்று உணர்ந்திருக்கிறோம். தியான யோகத்தில் ஈடுபட்டவர்களுக்கு அதுவே ஒளியாகவும் தோன்றும். ஒலி ஒளி இரண்டும் கலந்த ஒன்றுதான் பிரணவ மந்திரம்.

புறத்தே ஒலியே இல்லாத மௌனம் ஒருவகை. புற ஒலி இருக்கையில் மௌனம் நிலவுவது ஒருவகை. ஒலியில்லாத மௌனத்தைப் பயிலுதல் நம்மால் இயலாது. ஒலி இல்லாத மௌன தியானத்தில் ஈடுபடும்போது புறத்திலிருந்து சிறிய ஒலி வந்தாலும் தியானம் கலைந்து விடும். புறச்சத்தம் காதில் விழுந்து தியானம் கலையாதவாறு நாமே ஓங்கார சத்தத்தை உள்ளே எழுப்பிக் கொண்டிருந்தால் அந்த ஒலி இதில் கலந்து அழிந்து விடும்.

இதற்காகவே ஆராதனைக் காலங்களில் நம்முடைய தேவாலயங்களில் அழகான ஒரு பழக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கிறிஸ்துவர்களைப் போல நம்முடைய கோயில்களிலும் மௌனமாக எல்லோரும் நின்று வழிபடுவது சிறந்ததுதான். என்றாலும் எல்லோரும் ஒரே சமயத்தில் ஒரே விதமான பாட்டைத்தான் சொல்லி வழிபடவேண்டும் என்கிற பழக்கம் நம்நாட்டில் இல்லை. ஒருவர் திருப்புகழ் சொல்வார். மற்றொருவர் அநுபூதி சொல்வார். கந்தர் அலங்காரத்தை மனம் உருகிப் பாடி நிற்பாரும் உண்டு. இவற்றில் ஒன்றுமே சொல்லாமல், ''ஆண்டவனே! எனக்கு உன்னுடைய அருளைத் தர மாட்டாயா? அல்லல்பட்டு அவதியுற்று எத்தனை காலம் இவ்வுலகில் துன்புறுவேன் அப்பா!'' என்று மனம் நைந்து இறைஞ்சுபவர்களும் இருப்பார்கள். இத்தனை குரல்களும் எழுந்தால் கோயில் எப்படி இருக்கும்? இந்த எல்லாச் சத்தமும் தீபாராதனை சமயத்தில் கேட்காமல் இருக்க வேண்டுமென்றால் இவற்றையெல்லாம் தன்னுள் அடக்கிக் கொண்டுவிடுகிற வேறு ஒரு பெரிய இசைநாத வெள்ளம் ஓட வேண்டும். இதற்காகத்தான் நாகஸ்வரம் என்னும் அருமையான ஊதுகுழலைக் கண்டுபிடித்தார்கள் நம் நாட்டவர்கள். நாகஸ்வர வாத்திய இன்னிசை எல்லா ஒலிகளையும் தன்னுள் அடக்கிக் கொண்டு எழும்பும் போது நாம் அதன் சுருதி யோடு கலந்து லயித்து விடுகிறோம்.

தியானம் சுலபமாகச் சித்திப்பதற்காக ஓங்கார நாதத்தைச் சுருதியோடு உள்ளே எழுப்பிக் கொண்டு லயித்தால் புற ஒலி நம் அளவில் அடங்கும். புறச்சத்தம் எதுவும் காதில் விழாதவாறு காது குப்பென்று அடைக்கிற மாதிரி இருக்கும் என்று ஒருவகை அநுபவத்தைச் சிலர் சொல்வார்கள்.

முதலில் நாம் கண்ணை மூடிக்கொண்டால் ஒரே இருளாகத் தான் இருக்கும். ஆண்டவன் திருக்கரத்திலுள்ள வேலை நன்றாகப் பார்க்க வேண்டும். பார்த்த வேலை மெள்ளக் கண்ணை மூடிக்கொண்டு மனத்திரையில் வைத்துப் பார்க்க வேண்டும். கொஞ்சம் வேல் நிற்கும். அப்புறம் அதே வேல் ஜோதி மயமாக நிற்கும். இப்படியே, நாதவடிவாகிய ஓங்காரம் ஒளி எழுத்து வடிவமாக, பிறகு ஜோதிர்மயமாக இருக்கும். நம்முடைய குருநாதர் அருணகிரியார் அப்படிச் சொல்கிறார்.

ஓம் என்பது எல்லா மந்திரங்களுக்கும் மூலமானது. எல்லா மந்திரங்களும் முடிந்த இடம் அது. உலகத்திற்கு மூலமாக இருப்பது கடல். கடல் நீர் மேகமாகி, மழையாகி, ஆறுகளாகிப் பூமியை வளப்படுத்துகின்றது. கடைசியில் அந்நீர் கடலில் வந்து விழுகின்றது. கடல் மூலமாகவும், முடிந்த முடிபாகவும் இருக் கிறது. அது போன்றது ஓம்.

எல்லாமே ஒரு லயத்தோடு சேர்ந்து வேகமாகச் சுற்றும் போது ஒரு திரட்சியை அடைகிறது. பஞ்சாய்ப் பறக்கிறான் என்று சொல்கிறோம். சிறிய பொருள் பஞ்சு. அது சர்க்காவின் வேகத் திற்கு உட்படும்போது, முறுக்கு ஏறி உருண்டு திரட்சி பெற்று நூலாகிறது. பஞ்சு படாத பாடுபடும் தன்மை உடையது மனம். ஓம் என்ற பிரணவ மந்திரத்தைக் கருவியாகக் கொண்டு வேகமாக ஒரு லயத்தோடு (Rhythm) சேர்ந்து ஜபிக்க ஜபிக்க மனத்திலே அந்த ஓம் என்ற ஒலியே திரட்சி பெற்று உருவம் எடுத்து ஜோதிர் மயமாக ஆகிவிடும்.

எல்லா மந்திரங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு விளங்கும் பிரணவ மந்திரத்தை முதலில் வாய் விட்டு ஜபிக்கப் பழக வேண்டும். இரண்டாவது நிலையில் நாக்கு அசைவு மாத்திரம் இருக்கும்; ஒலி வெளிப்படாது. மூன்றாவது நாக்குக் கூட அசையாது; சுவாசம் போல உள்ளத்திற்குள் ஒலி நிற்கும். அதனுடன் கருவிகரணங்கள் எல்லாம் லயிக்க வேண்டும். அப்போது ஓம் என்பதன் உருவம் மனக்கண்ணில் ஒளிமயமாகப் பிரகாசிக்கும். அதற்குள் முருகன் உருவத்தை நிலை நிறுத்திக் காணமுடிந்தால் அதற்குப் பின்தான் அநுபவம் தொடங்குகிறது. ஓங்காரத்தின் ஒளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு அப்படியே தூங்கலாம்.

> ''ஆங்கார முள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
> தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்''

என்று பத்திரகிரியார் பாடுகிறார்.

நம்மைப் பார்த்து ஒருவன் முட்டாள் என்றால், ''நீதான் முட்டாள். உங்கள் அப்பாதான் முட்டாள்'' என்று அவனை வாயினால் வைதுகொண்டே கையை நீட்டி அடிக்கக்கூடப் போகிறோம். நன்றாகத் தூங்குகிறோம். அப்போது நம் பக்கத்தில்

ஒருவன் நின்று, ''இவன் முட்டாள்'' என்று திட்டுகிறான். நாம் எழுந்து அவனை அடிக்கப் போவதில்லை. காரணம் உறுப்புகள் எல்லாம் இருந்தாலும் தூங்குகிறோம். அப்போது பொறிகள் உணராமல் இருக்கின்றன. மனமும் இயங்காமல் போகிறது. விழித்துக் கொண்டிருக்கும்போது இப்படி நம்மால் இருக்க முடிகிறதா? விழித்துக் கொண்டிருக்கும்போதும் இந்நிலை வரவேண்டுமானால் யான் எனது என்னும் அகந்தையை ஒழித்து, ஐம்புலன்களையும் சுட்டறுத்து, ஓங்கார ஒளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு சமைந்துபோனால் இருக்கலாம். அதுவே தூங்காத தூக்கம்.

இதுபோன்ற ஒரு நிலை நமக்குச் சிலசமயங்களில், அதுவும் கணநேரம் வருவது உண்டு. மிகுந்த துக்கத்தோடு உட்கார்ந்திருக்கிறோம். அப்போது வீட்டிற்குள் என்ன நடந்தாலும் கவலைப் படுவதில்லை. கதவைத் திறந்து கொண்டு தோட்டத்திற்குள் மாடு புகுந்துவிட்டது என்றாலும் விரட்டுவதில்லை. மிகுதியான இன்பம் வரும் போதும் இப்படித்தான் எல்லாவற்றையும் மறக்கிற நிலை வரும். எல்லாவற்றையும் மறந்து தூங்குகிற தூக்கம் சுகமாகத் தூங்குகிற தூக்கம். ஆனால் சுகமாகத் தூங்கினேன் என்று சொல்கிறானே, அப்போது அந்தத் தூக்கத்தை அநுபவித்துச் சொல்வது எது? மனம் அன்று. கைகால்கள் எதுவும் அப்போது வேலை செய்யவில்லை. கண்கள் மூடி இருந்தமையால் எதையும் பார்க்கவில்லை. நாக்குச் சுவை உணரவில்லை. காதும் செயல்படவில்லை. இருந்தும், சுகமாகத் தூங்கினேன் என்றால் சுகத்தை நுகர்ந்தது யார்? அதுதான் 'நான்'.

வாழ்க்கை இந்திரியங்களுடைய அநுபவம். சொப்பனம் மனத்தின் அநுபவம். கனவில்லாத சுஷுப்தி ஆத்மாவின் அநுபவம். பொறிபுலன்கள் எல்லாம் தொழில்படும் போதே நான் என்பதையும் மறந்து தூங்கினால் எவ்வளவு சுகமாக இருக்கும்.

## தன்னை மறத்தல்

தம்மை மறந்த நிலை வேண்டுமென்றுதான் பலர் உயர்ந்த சாராய வகைகளைச் சாப்பிடுகிறார்கள். சாராயம் குடித்த அவர்கள் தம்மை மறக்கிறார்கள். தம்மை மறந்தாலும் அவர்களுடைய பொறிபுலன்கள் எல்லாம் வேலை செய்கின்றன. உடம்பு கட்டை மாதிரி கிடக்கவில்லை. அப்போது அவர்களுக்கு இருக்கிற சுகம்

எவ்வளவு தெரியுமா? அதற்காகத்தானே திரும்பக் குடிக்கிறார்கள்? நமக்கு அப்படிச் சுகம் வரவேண்டாம். சாராயம் குடித்தவன் அடைகிற இன்பம் மறுபடியும் புத்தி தெளியும்போது இருப்ப தில்லை. தெளிந்த நிலையில் அவனுக்குத் துன்பமே விளைகிறது. அவன் இருட்டில் இருக்கிறவன். ஜீவன் முக்தர்களும் ஒரு வகையில் அவனைப் போன்றே இன்ப நிலை எய்துகிறார்கள் என்றாலும் அவர்கள் ஒளியில் சுகம் அனுபவிப்பார்கள்.

## தூங்குதல்

முருகன் உருவம் கண்டு தூங்கும் தூக்கம் நாம் தூங்கும் தூக்கம் போன்றது அல்ல; நாம் விழித்திருக்கும் விழிப்பும் அல்ல. அந்த நிலையில் இருப்பவர்களின் பொறிபுலன்கள் எல்லாம் செயல்படுவன போன்று தோன்றினாலும் அது தூக்கந் தான். நான் என்பது இல்லாமையினால் அது தூக்கம் ஆகிறது.

இந்த நிலையை மக்கள் அடையவில்லையே என்று அருண கிரி நாதர் இரங்குகிறார். ''ஆங்காரம் அடங்கி, ஒடுங்கி, பரமானந்தத்தே தேங்கி, நினைப்பும் மறப்பும் அற்றுப் போக வேண்டும். இந்தத் தலை நிலையை அடைவதற்கு ஆரம்ப நிலையாகிய ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு தூங்கக் கூடாதா?'' என்கிறார்.

## தினைப்போதளவு

ஓங்காரத்துள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு ஒருநாள் முழுவதும் தூங்கவேண்டாம். ஒரு நாளைக்கு இருபத்து நான்கு மணி, ஒரு மணிக்கு அறுபது விநாடி என்றெல்லாம் பாகுபாடு பண்ணிக் கொண்டு செயல் செய்து வருகிற நாம், முருகன் உருவத்தைப் பிரணவ ஒளி வட்டத்திற்குள் கண்டு தியானம் செய்ய ஒரு தினைப்போதளவாவது முயற்சி செய்யக் கூடாதா என்கிறார்.

**தினைப்போதளவும்**
**ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு தூங்கார்.**

கொஞ்ச நேரம் தியானம் செய்யக் கூடாதா என்று சொல்ல வருகிறார் அருணகிரியார். கொஞ்ச நேரத்தைக் குறிக்க, ''தினைப்

போதளவு'' என்று சொல்கிறார். கடுகு அளவு காலம் என்று சொல்லியிருக்கலாம்; எள்ளளவு நேரம் என்றும் கூறியிருக்கலாம்.

அவர் எப்போதும் முருகனையும் வள்ளியெம் பெருமாட்டியையும் நினைந்து வாழ்ந்து கொண்டிருந்தவர். வள்ளியெம் பெருமாட்டியிடத்தில் முருகன் காதல் கொண்டு அவளை ஆட்கொண்ட போது அவள் அவனுக்குத் தேனும் தினைமாவும் தந்தாள். வள்ளி தினையைக் கொடுத்து முருகனை அடைந்தாள். நாமும் தினைப்போதளவு காலத்தில் நெஞ்சைக் கொடுத்து அவன் திருவருளைப் பெற முடியாதா என்ற நினைப்பு அவருக்கு வருகிறது. பின்னே முடிவாக வரும் மிக மிக உயர்ந்த தூக்கத்தைச் சொல்கிறார். முன்னே சிறிய அளவு சொல்லவேண்டிய அவசியம் வந்தவுடன் அதுவும் இறைவன் சம்பந்தமான நினைப்பாக, தினையாக வந்து நிற்கிறது.

தினைப்போதளவும் ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே
முருகன் உருவம் கண்டு தூங்கார்.

## தொழும்பு செய்தல்

இறைவன் திருவருளில் ஈடுபட்டு தியானத்தில் புகுந்து ஓங்கார ஒளி வட்டத்திற்குள் முருகனது திருவுருவத்தைக் கண்டு தூங்கினால் போதுமா? உலகத்திற்குத் தொழும்பு செய்ய வேண்டும்.

தொழும்பு செய்யார்.

தொழும்பாவது, தொண்டு. எம்பெருமான் திருவருளினால் பலவிதமான குண நலன்களைப் பெற்று அகங்காரம் மமகாரம் அற்றுப்போய்த் தொண்டு செய்கின்ற நெறி எளிதில் வராது. உலகத்தில் உள்ள உயிர்களுக்குத் தொண்டு செய்பவன் இறைவனுக்குத் தொழும்பு செய்தவன் ஆகிறான்.

## கால ஐயம்

அப்படி வந்துவிட்டால்,

''தண்டாயுதமும் திரிசூலமும் விழத் தாக்கி உன்னைத்
திண்டாட வெட்டி விழவிடுவேன்''

என்று அருணகிரியாரைப் போலச் சொல்லலாம். அவர் அவ்வாறு என்ன தைரியத்தில் சொல்கிறார் என்பதை முன்பே பார்த்தோம். காலனைப் பார்த்து,

"செந்தில் வேலனுக்குத்
தொண்டாகிய என் அவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டாயடா அந்தகா வந்துபார் சற்றுஎன் கைக்கெட்டவே"

என்று மார்தட்டி நின்றார். அப்படித் தொழும்பு அல்லது தொண்டு செய்ய வேண்டும் என்றால் அது எப்படி வரும்?

ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு தூங்கவேண்டும். அப்படித் தூங்கிச் சுகம் பெறுபவர்கள் இறைவனுக்கும், இறைவனுடைய குழந்தைகளாகிய ஆருயிர்களுக்கும் தொண்டு செய்வார்கள். தொழும்பு செய்வதால் தொண்டாகிய அவிரோத ஞானச் சுடர்வடிவாள் கிடைக்கும். அந்த வாளைப் பெற்று, "அந்தகா! வந்துபார், என் கைக்கு எட்டவே" என்று அருணகிரியாரைப் போலக் கால ஜயம் உண்டாகும்படி பேசலாம். "அப்படிச் செய்யாதவர்கள் யம தூதர்கள் வரும்போது என்ன செய்வார்கள்?" என்று கேட்கிறார் அருணகிரியார்.

என்செய்வார் யமதூதருக்கே?

அருணகிரியாருடைய இந்தப் பாட்டு நமக்கு மிகவும் முக்கியமான உபதேசமாகும். பாட்டு மிகச் சுருக்கமாக இருந்தாலும் பல வகையான பெருக்கத்திற்கும் இடமாக இருக்கிறது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற பல படிகளில் உள்ள தத்துவங்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. ஆங்காரம் அடங்கி ஒடுங்கி, பரமானந்தத்தே தேங்கி, நினைப்பும் மறப்பும் அற்று, ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு தூங்கி, தொழும்பு செய்து காலனை ஜயம் பண்ணுவதற்கு நமக்கு வழிகாட்டியாக இருக்கும் அருமையான பாட்டு.

ஆங்கா ரமும்அடங் கார்; ஒடுங்
　　கார்;பர மானந்தத்தே
தேங்கார்; நினைப்பும் மறப்பும்
　　அறார்; தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே
　　முருகன் உருவம் கண்டு
தூங்கார் தொழும்புசெய் யார்என்செய்
　　வார்யம தூதருக்கே?

*(கோபம் அடங்கமாட்டார்; பொறிகளை அடக்கி ஒடுங்க மாட்டார்; பரமானந்தத் கடலில் செயல் இழந்து தேங்கி நில்லார்; சகல கேவல அவஸ்தைகளை நீங்கார்; தினையளவு போதாவது ஓங்காரமாகிய பிரணவத்தினுள் இருக்கும் ஒளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு தூங்கார்; தொண்டு செய்யார்; இத்தகையவர்கள் வாழ்நாள் இறுதியில் யம தூதர்கள் வந்தால் அவர்களால் வரும் துன்பத்துக்கு மாற்றாக அப்போது என்ன செய்வார்கள்?*

*நினைப்பு - ஜாக்கிரமாகிய சகலாவஸ்தை. மறப்பு - தூக்கமாகிய கேவலாவஸ்தை. தொழும்பு - தொண்டு. யமதூதருக்கு - யமதூதரால் வரும் துன்பத்துக்கு; ஆகுபெயர். பசிக்கு மருந்து என்பது போலத் துன்பத்தை நீக்க என் செய்வார் என்று பொருள் கொள்ள வேண்டும்.)*

*இது கந்தர் அலங்காரத்தின் ஐம்பத்தைந்தாம் திருப்பாடல்.*

# இருவகைக் கவிகள்

மனிதன் தான் வாழ்கிற பிரபஞ்சத்தைச் சில நயம் கருதி வெவ்வேறாகச் சொல்வது வழக்கம். தொழிலாளர் உலகம், அரசியல் உலகம், புலவர் உலகம் என்று வெவ்வேறு கூட்டத்தையே வெவ்வேறு உலகமாகப் பிரித்துச் சொல்வதைப் பார்க்கிறோம். பழங்காலத்திலும் அப்படித்தான் பிரித்தார்கள். அந்தப் பிரிவுக்குள் மிகவும் முக்கியமானவை இரண்டு. அவை சப்தப் பிரபஞ்சம், அர்த்தப் பிரபஞ்சம் என்பன. சப்தம் மாத்திரமாக இருக்கிற உலகம் ஒன்று. பொருளாக இருக்கிற, பண்டமாக இருக்கிற, உலகம் ஒன்று. இவற்றை ஒலி உலகம், பொருள் உலகம் என்று தமிழிலே சொல்லலாம்.

## ஒலி உலகம்

காதாலே கேட்பது ஒலி. ஏனைய இந்திரியங்களினால் நுகர்வது பொருள். ஒலி உலகம் என்று சொல்கிற சப்தப் பிரபஞ்சம் நாதத்தின் கூறுபாடு. நாம் பேசுகிற பேச்சு ஒலி உருவாக வரு கிறது. இந்த ஒலியானது பஞ்சபூதங்களுள் ஒன்றான ஆகாசத்தின் சம்பந்தம் உடையது. ஒலியோடு சம்பந்தமுள்ள வெளியே – ஆகாசமே – பஞ்சபூதங்களில் முதலில் தோன்றியது; முதலில் தோன்றும் தத்துவம் நாதந்தான்.

## வாயும் காதும்

மனிதனுடைய அவயவ அமைப்பில் பார்த்தாலும் வாய் சிறப்பாக அமைந்திருக்கிறது. வாய் மாத்திரம் இருந்தால் போதாது. வாயினால் சொல்வதைக் கேட்கக் காதும் வேண்டும். காதும், வாயும் சேர்ந்தால்தான் முழுப் பயனும் உண்டாகும். முன்பு டெலிபோன் அமைப்பு ஒருவகையாக இருந்தது. அதாவது இரண்டு கருவிகள் இருக்கும்; ஒன்று பேசுவதற்கும் மற்றொன்று கேட்பதற்குமாக அமைந்திருந்தன. அதில் ஒன்று பழுதுபட்டாலும்

மற்றொன்றினால் பயன் இராது. இப்போதோ ஒரே கருவியின் ஒரு தலைப்பில் பேசுகிறோம். மற்றொரு தலைப்பைக் காதில் வைத்துக் கொண்டு கேட்கிறோம். இதைப் பார்க்கும்போது எனக்கு மனிதனது வாயும், காதுமே நினைப்பு வருகின்றன. 'வாயுடையவன் பேசுகிறான். காது உடையவன் கேட்கிறான்' என்று இல்லாமல் வாய் உடையவன் பேசும்போதே அவனும் காது உடையவன் ஆதலால் எதிராளி பேசுவதைக் கேட்கவும் முடிகிறது. பேசவும் பேசுகிறான்; கேட்கவும் கேட்கிறான்.

பேசுவது அதிகம் வேண்டுமா? கேட்பது அதிகம் வேண்டுமா? ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். பேச்சை வெள்ளி என்றும், மௌனத்தைத் தங்கம் என்றும் சொல்வர். (Speech is Silver and Silence is Golden) வெள்ளி உயர்வா, தங்கம் உயர்வா என்று நானா சொல்ல வேண்டும்? பேசுவதைவிடக் கேட்பது உயர்வுதான். அதை மற்றொரு வகையாலும் தெரிந்து கொள்ளலாம்.

பேசுகிற கருவியாகிய வாய் இறைவனுடைய படைப்பில் ஒன்று தான். கேட்பதற்குரிய கருவியாகிய காதோ இரண்டு உள்ளன. ஆகவே, ''ஒரு பங்கு பேசு; இரண்டு பங்கு கேள்'' என்று ஆண்டவனே இவ்வகை அமைப்பினால் தெரிவித்திருக்கிறான்.

எப்பொழுதும் கேட்பது அதிகமாகவும், பேசுவது குறைவாகவும் இருக்கவேண்டும். இதற்கு இறைவனுடைய படைப்பே அநுகூலமாக இருக்கிறது . நாம் எப்போது பார்த்தாலும் வாயைத் திறந்து கொண்டிருப்பது இல்லை. பேசும்போது ஒலிகளைச் சரியாக வெளிப்படுத்துவதற்குப் பயன்படுகிற உதடுகள், பேசாதபோது வாயை மூடிக் கொள்ளவும் பயன்படுகின்றன. அப்படியே கண்ணை மூடிக் கொள்ளக் கண்ணோடு ஒட்டியிருக்கும் இமைகள் உதவுகின்றன. ஆனால் காதை மூடிக் கொள்ளக் காதுடன் இணைந்த உறுப்பு எதுவும் இல்லை. வேண்டுமென்றால் கையால்தான் மூடிக் கொள்ள வேண்டும். இல்லையானால் விமானப் பிரயாணத்தின்போது பஞ்சை வைத்துக் காதை அடைத்துக் கொள்ளுவதுபோல் எதையாவது வைத்து அடைத்துக் கொள்ள வேண்டும்.

பிறர் சொல்வதைக் கேட்டுக் கொண்டே இரு என்பது போல ஆண்டவன், கதவு வைக்காத திறந்த வாசலுடையனவாகக்

தேர்தலில் எத்தனை பேர்களைப் பார்த்தோம்! "ஐயா. காதுப் பெட்டியில் வோட்டுப் போடுங்கள். கண்ட பெட்டியில் போடா தீர்கள். உங்கள் நண்பர்களுக்கும் சொல்லுங்கள்" என்று நம்மிடம் வந்து வோட்டுக் கேட்கிறார்கள். "கடன் வாங்கிச் செலவு பண்ணி விடப்போகிறான் ஐயா. நாளைக்குக் கடன்காரன் வழக்குப் போடுவானே! வாரண்டு கொண்டுவந்து நீட்டுவானே! ஜப்திக்கு அமீனா வந்துவிடுவானே! இவற்றை எல்லாம் மறந்து கடன் வாங்கிக் கொண்டிருக்கிற அவனிடம் இப்படியெல்லாம் வரும் என்று சொல்லக்கூடாதா?" என்று சிலர் சொல்கிறார்கள். இந்த மாதிரியாக அருணகிரியார் இப்போது பேசுகிறார்.

"நாளைக்கு யமதூதன் வந்துவிடுவானே! அவன் நம்மை இழுத்துக் கொண்டு போகிற வழியும், கொண்டு போய்த் தள்ளுகிற குழியும் சொல்ல முடியாத துன்பத்தை அளிக்குமே! எரி வாய் நரகக் குழியும், கூற்றுவன் ஊர்க்குச் செல்லும் வழியும் மிக்க துயரமாக இருக்குமே! இவற்றையெல்லாம் மறந்துவிட்ட உங்கள் நண்பர்களுக்கு இவற்றைக் கொஞ்சம் எடுத்துச் சொல்லுங்கள், சொல்லுங்கள்" என்று நம்மைப் பார்த்து முறையிட்டுக் கொள்கிறார்.

போன பாட்டிலே, "இவற்றையெல்லாம் செய்யார் என் செய்யார் யமதூதருக்கே?" என்று இரங்கி எதிர்மறை முகத்தால், "இவற்றையெல்லாம் செய்வார் யாமதூதருக்கு அஞ்சார்" என்கிற உண்மையைப் புலப்படுத்தினார். இந்தப் பாட்டிலோ, "இறைவன் கவியைக் கேளுங்கள். அல்லாத கவியைக் கேளாதீர்கள். இதை மறந்தவர்களுக்கு நாளைக்கு வரப்போகிற யம பயம், நரக வாதனை இவற்றையெல்லாம் எடுத்துப் பகரீர், பகரீர்" என்று சொல்வதன் மூலம், "இழிந்த கவியைக் கற்றிடாமல், இறைவன் கவியைக் கேட்பவர்களுக்கு யம பயம் இல்லை; நரக வாதனை இல்லை" என்கிற உண்மையைப் பெற வைக்கிறார்.

## மனோலயமும் மனோநாசமும்

"இறைவன் நாமத்தைக் கேட்பதனாலே, கவியைக் கேட்டு உருகுவதனாலே எப்படி ஐயா யமனை வெல்ல முடியும்?" என்பது ஒரு கேள்வி. இறைவன் கவியைக் கேட்கும்போது காற்றைப் போலச் சுற்றிச் சுழன்றுகொண்டிருக்கிற மனம் ஒருமைப்பாடு அடைகிறது. உலகத்திலுள்ள எல்லா மதங்களும்

இறைவனுடைய தத்துவத்தைப் பற்றி எப்படிச் சொன்னாலும், மோட்சத்தைப் பற்றிய இலக்கணத்தை எப்படிச் சொன்னாலும், மனத்தை அடக்கி ஒருமைப்பாடு அடைவது அவசியம் என்பதில் வேறுபடவில்லை. இதைப்பற்றி வற்புறுத்திச் சொல்லாத ஞானிகள் உலகத்தில் எங்குமே இல்லை.

மனம் ஒருமைப்பட்டுச் செத்துப் போவதுதான் சமாதிநிலை. குறிப்பிட்ட சமயத்தில், குறிப்பிட்ட வேளையில் மனம் அடங்கிக் கட்டுப்பட்ட நிலையில் இருப்பது மனோலயம். இப்படி மனம் அடங்கி நிற்கவேண்டுமானால் அடுத்தடுத்துத் தியானம் பண்ண வேண்டும். தியானம் பண்ணிப் பண்ணி மனம் ஒன்றை நினைத்து நிலைபெற்று நிற்கும்போது மனோலயம் உண்டாகிறது. அந்த மனோலயம் நீடிக்கும்போதுதான் கருவி கரணங்கள் கழன்று சமாதி நிலை உண்டாகும். சிலருக்கு அந்நிலை கோழித் தூக்கம் போல் இருக்கலாம். அது சவிகற்ப சமாதி. சிலருக்குக் காடாந்த காரத் தூக்கமாக இருக்கும். அது நிர்விகற்ப சமாதி. சகஜ சமாதி என்பது தூக்கமே இல்லாத நிலை. விழித்துக் கொண்டுள்ள போதே தாமரை இலைத் தண்ணீர் போல ஒட்டாமல் இருப்பது அது. நம்மைப் போலவே அவர்களும் நடந்துகொண்டும், உட்கார்ந்துகொண்டும், இருப்பார்கள். ஆனால் மனம் செயல்படாது; அது நாசமாகிவிடும். நமக்கு அந்த நிலை வரவேண்டுமென்றால் முதலில் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிற மனத்தை நிறுத்தப் பழக வேண்டும்.

நிற்பதாவது, பலவற்றை எண்ணுகின்ற எண்ணம் மாறி, ஒன்றையே எண்ணி ஒருமைப்படுதல். ஒன்றையே எண்ணுகின்ற நிலை வரவேண்டுமானால் இறைவனைப் பற்றி நினைக்க வேண்டும். அவன் திருவடியை நினைந்து தியானம் செய்ய வேண்டும். எங்கெங்கோ அலைந்து திரிந்து கொண்டிருக்கிற மனம் ஒன்றைப் பற்றியே நினைக்கும்போது நிற்கிறது. நெடு நேரம் நிற்கும்போது தூங்குகிறது. தூங்கிப் பழகினால் கடைசியில் செத்துப் போகிறது. அதை மனோநாசம் என்பார்கள். அது படிப்படியாக வர வேண்டும். மனோலயம் இன்றி மனோநாசம் உண்டாகாது.

நம் கையில் அகப்படாமல் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிற மனத்தை அடக்கி நிற்கவைத்துப் பிறகு தூங்கப் பண்ண வழி என்ன?

## பொந்தும் பறவையும்

ஒரு மரப் பொந்துக்குள் பறவை ஒன்று இருக்கிறது. அதைப் பிடிக்க வேண்டுமென்றால் பறவை பறந்து போகாதபடி பொந்துக் குள் கையை விட்டு அப்படியே அமுக்கிப் பிடிக்க வேண்டும். இந்த மரமாகிய உடம்பிலோ ஐந்து பொந்துகள் இருக்கின்றன. இதற்குள் மனமாகிய பறவை ஒளிந்து கொண்டிருக்கிறது. ஒரு பொந்தின் வழியாகக் கையை விட்டுப் பிடிக்கப்போனால் வேறு ஒரு பொந்தின் வழியாக வெளியே ஓடிவிடுகிறது. இந்த ஐந்து பொந்துகளுள் ஒன்றின் வழியாகத்தான் அதைப் பிடித்தாக வேண்டும். வேறு பொந்துகள் இல்லை. என்ன செய்வது?

கண்ணாகிய பொந்தை அடைத்துப் பிடிக்கலாம் என்று கோயிலுக்குச் சென்று, இறைவன் திருவுருவத்தைப் பார்த்துக் கண்ணை மூடிக்கொண்டால் அவன் திருவுருவம் மனத்தில் வர மாட்டேன் என்கிறது. வாயாகிய பொந்தை அடைக்க அயில் வேலன் கவியைப் பிழையறக் கற்றுச் சொல்லலாம் என்றால், அதற்கும் நம்மால் முடியவில்லை. வாய் சொல்லிக் கொண்டே இருக்கிறது; மனம் எங்கோ ஓடிவிடுகிறது. ''ஐயோ! எங்களுக்கு வேறு வழி கிடையாதா?'' என்று அழுகிற மக்களை இரக்கத் தோடு பார்த்துச் சொல்கிறார் அருணை முனிவர்.

''ஆண்டவன் உங்களுக்குக் காது கொடுத்திருக்கிறான் அல்லவா? அந்தக் காதின் வழியாக மனத்தைப் பிடித்து அடக்க உபாயம் சொல்கிறேன்'' என்று மற்றொரு வழி காட்டுகிறார்.

## கவி கேட்டு உருகுதல்

அன்பினால் இளகாத மனத்தைக் கல் என்பர். செறிவோடு இருக்கிற நமது நெஞ்சக் கன கல் நெகிழ வேண்டும்; உருக வேண்டும். கல்லாலான மலையையே, கிரௌஞ்ச கிரியையே, கிழித்து எறிந்த பெருமான் யாரோ அவனுடைய புகழைக் கேட் டால் நமது வன்மனப் பாறை நெக்குவிட்டுக் கிழிந்து போகும்.

> **கிழியும்படி அடல் குன்று எறிந்தோன் கவிகேட்டு உருகி**
> **........................ இருப்பீர்!**

நாம் உருகி இருக்க வேண்டும். கேட்டு உருகி இருக்க வேண்டும். எதைக் கேட்டு உருகி இருக்க வேண்டும்? கவி

கேட்டு உருகி இருக்க வேண்டும். யாருடைய கவியை? கிழியும் படி அடல் குன்று எறிந்தோன் கவியைக் கேட்டு உருகி இருக்க வேண்டும் என்கிறார் அருணகிரியார். இது முதல் பயிற்சி.

## கவிஞர் உள்ளம்

கவியைக் கேட்டால் உருக்கம் உண்டாகுமா? உருக்கத்தை உண்டாக்குவதற்கு அதில் என்ன இருக்கிறது?

கவி உண்மையான கவிஞனிடத்தில் பிறக்கிறது. கவிஞனுடைய மனப்பண்போ மலரினுடைய மென்மை, தண்மை மணம் முதலியவை போன்றது. கடினமான பொருளினிடம் மணம் இராது. மலர் அரும்பாக இருக்கும்போது கடினமாக இருக்கிறது. முனை குவிந்து இருக்கிறது. அப்போது வாசனை இல்லை அதுவே மலரும்போது தண்மை உடையதாக, மென்மை உடையதாக, மணம் உடையதாக ஆகிவிடுகிறது.

பக்குவம் அடையாதபோது நம்முடைய உள்ளம் கடினமாகக் குவிந்திருக்கிறது. நல்ல பக்குவம் அடைந்துள்ள கவிஞர்களுடைய உள்ளமோ சிறிய காற்று அடித்தாலும் அசைந்தாடுகிற மென்மை உடையதாகி விடுகிறது. அவர்கள் உள்ளம் விரிந்து கிடப்பதனாலே அவர்கள் காணுகின்ற சின்னஞ் சிறிய சம்பவங்களும் அதில் ஆயிரம் ஆயிரம் உணர்ச்சி அலைகளை எழுப்புகின்றன.

கலைமகள் தாமரையில் இருக்கிறாள் என்று சொல்வார்கள். வெண்மையான தாமரை அது; மென்மையான தாமரை; மணமுள்ள இதழ்களை உடைய தாமரை; அதில் கலைமகள் வீற்றிருக்கிறாள். வெண்டாமரையைப் போன்ற பண்புகளையுடைய உள்ளத்தில் உண்மையான கவிமணம், கலை மணம் கமழ்கிறது என்பது இதன் பொருள். கவிஞனுடைய உள்ளம் விருப்பு வெறுப்பு இல்லாத தூய வெள்ளைத் தன்மை உடையதாக இருக்கும்.

வேதாந்தியும் கவிஞனும் உள்ளதை உள்ளபடியே பார்க்கிறார்கள். வேதாந்தி பார்க்கிறான்; சொல்வது இல்லை. கவிஞன் பார்க்கிறான்; அழகாகச் சொல்லி விடுகிறான். இவர்களுடைய உள்ளங்கள் வெண்மையாக, தண்மையாக, விரிவாக, மணமுள்ளனவாக இருக்கின்றன.

ஒரு குழந்தை அழுதாலும் போதும்; அந்தச் சத்தத்தை வைத்துக் கொண்டு நூறு பாடல்களைப் பாடிவிடுவான் கவிஞன். அவன் உள்ளம் அத்தனை மென்மையானது; நுட்பமானது; சிறு சம்பவங்களையும் பிரதிபலிக்கிற ஆற்றல் அதற்கு உண்டு. கோபமாக இருக்கலாம்; தாபமாக இருக்கலாம்; அவன் உள்ளத் தின் வழியே புகுந்து வரும் போது அதுவே பெரிய காப்பியம் எழக் காரணமாகி விடுகிறது. வாழ்க்கையில் துன்பம் அளிப்பன எல்லாம் அவன் காவியத்தில் இன்பமாக இருக்கும்.

## வாழ்க்கையும் கலையும்

வாழ்க்கைக்கும் வாழ்க்கையை ஓவியமாக்கும் காவியத் துக்கும் உள்ள வேறுபாட்டைப் பாருங்கள். வாழ்க்கையில் இருப்பது நிகழ்ச்சி; காவியத்தில் இருப்பது கற்பனை. வாழ்க்கை யில் உண்டாவன சுகதுக்கங்கள்; காவியத்தில் உண்டாவது சுவை. பக்கத்து வீட்டு அம்மாளுடைய குழந்தை இறந்து போய் விட்டது. பிணத்தை வைத்துக் கொண்டு அவள் அலறுகிறாள். அங்கே சென்றால் நாமும் அழுகிறோம். இந்தத் துயரம் யாருக்கும் வரவேண்டாம் என்று நினைக்கிறோம். இந்த நிகழ்ச்சி யில் சோக உணர்ச்சி உண்டாகிறது. மயான பூமியில் தன் பிள்ளை லோகிதாசனைப் போட்டுக் கொண்டு சந்திரமதி அலறுகிறாள். இந்தக் கட்டத்தை அநுபவிக்க வேண்டுமென்று போட்டி போட்டுக் கொண்டு அரிச்சந்திர நாடகத்திற்கு ஓடுபவர்கள் எத்தனையோ பேர்கள். இது நிகழ்ச்சியன்று; கலையில் ஒரு கற்பனை. இங்கே உண்டாவது சோக நிகழ்ச்சி அன்று; சோக ரசம், அவலச் சுவை. குஷ்டரோகியைத் தொட மாட்டோம்; பார்க்கவே வெறுத்து அப்பால் போய் விடுவோம். குஷ்டரோகி வேஷம் போட்டுப் பாட்டுக் பாடி ஒருவன் நடிக்கிறான். அந்த இடத்திற்கு ஐந்து ரூபாய் டிக்கெட் என்றாலும் வாங்கிக் கொண்டு போவோம். காரணம், அங்கே குஷ்டரோகி போல நடிப்புக் காட்டி உயர்ந்த தத்துவத்தைப் புலப்படுத்துவதால், ரசமாக அந்தக் காட்சி அமைந்திருப்பதுதான்.

வாழ்க்கையிலுள்ள இப்படிப்பட்ட பல விதமான உணர்ச்சி களைக் கொண்டு ரசத்தை எடுத்துக் கொடுப்பவர்கள் கவிஞர்கள். கவி பாடுவதற்கு முன்பு அவர்கள் உள்ளம் மெழுகாக அந்த அந்த

உணர்ச்சிகளைக் கற்பனை செய்து நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகு கிறது. பின்புதான் அவ்வுணர்ச்சிகளைச் சுவையாக்கிக் காப்பிய மாக வடித்தெடுத்து நம்மையும் உருகச் செய்கிறார்கள்.

கவிஞனுடைய உள்ளத்திலும் ஞானப்பசியுள்ளவனுடைய உள்ளத்திலும் பார்த்தவுடன் எந்தக் காட்சியும், எந்த உணர்ச்சியும் பதிவதைப் போல வேறு யாருக்கும் பதிவது இல்லை.

## சீவகன் துறவு

சிந்தாமணியில் ஒரு கதை. சீவகன் பொழிலுக்குச் சென்று அங்குள்ள காட்சிகளைக் கண்டிருந்தான். அங்கே ஒரு பலாமரம் இருந்தது. மரத்தில் இரண்டு குரங்குகள் இருந்தன. ஒன்று ஆண்; மற்றொன்று பெண். பெண் குரங்குக்கு ஆணின் மேல் கோபம். அதைப் போக்க அந்த ஆண் குரங்கு பலாப்பழம் ஒன்றைப் பறித்து அதைக் கீறிச் சுளைகளைப் பெண் குரங்குக்குக் கொடுத்துக் கொண்டிருந்தது. தோட்டக்காரன் அங்கே வந்து அந்தப் பழத்தைப் பிடுங்கிக் கொண்டு இரண்டு குரங்குகளையும் ஓட்டி விட்டான். இதைக் கண்ட சீவகனுக்கு ஒரு நினைவு தோன்றியது. அடடா! கட்டியங்காரனிடமிருந்து நான் அரசைக் கொண்டேன். நான் வலியவனாதலால் இதனை அடைந்தேன். என்னைவிட வலியவன் வந்தால் என்னிடமிருந்து இதைப் பற்றிக் கொள் வான். இந்தச் செல்வம் யார் பலசாலியோ அவனால் வலிந்து பற்றிக் கொள்வதற்குரியது. நிலையுடைதன்று' என்று எண்ணி னான். உடனே அவன் துறவியாகிவிட்டான். சின்னச் சம்பவந் தான் அது. இருந்தாலும் அவன் உள்ளத்தில் அது பெரிய மாறு தலை உண்டாக்கி விட்டது.

## சித்தார்த்தர் துறவு

நம்மைப் போலவேதான் இந்த உலகத்தில் சித்தார்த்தர் வாழ்ந்தார். அரசராக இருந்து அரண்மனை இன்ப போகத்தில் திளைத்தார். அழகான மனைவியும் அருமையான குழந்தையும் அவருக்கு இருந்தார்கள். ஒரு நாள் வீதியில் போகும் பிணத்தைக் கண்டார். எத்தனையோ பிணங்களை நாம் தினமும் பார்க்கிறோம். நமக்கு ஒரு விதமான உணர்ச்சியும் ஏற்படுவதில்லை. அதுவே சித்தார்த்தருக்கு அவரது வாழ்க்கையின் பெரிய திருப்பமாக

அமைந்து விட்டது; உலகம் உய்ய வழிகாட்டும் கௌதம புத்தராக விளங்க அவருடைய வாழ்க்கைப் பாதையைத் திருப்பிவிட்டது; அரண்மனையைத் துறந்து, மனைவியைத் துறந்து, மகனைத் துறந்து, இன்ப போகத்தை எல்லாம் துறந்து, இரவுக்கு இரவாகவே அவரைப் போதிமரத்தடிக்கு ஓடும்படியாகச் செய்துவிட்டது.

## மாஷ வைராக்கியம்

யாரோ உளுந்து உடைத்துக் கொண்டிருந்தார்கள். அவரைப் பார்த்தார் ஒரு ஜைனர். ''இத்தனை நாளும் தோலும் பருப்புமாக ஒட்டி வாழ்ந்த உளுந்து உடைக்கும்போது தோல் வேறு பருப்பு வேறாகப் போய்விட்டதே! அப்படி உடம்பும் உயிரும் ஒட்டியே இருந்தாலும் யமன் வந்தால் உயிர் வேறாக, உடம்பு வேறாக அல்லவா போகப் போகின்றன?'' என்கிற ஞானம் பிறக்கவே துறவியாக மாறிவிட்டார். இதை 'மாஷ வைராக்கியம்' என்பர்.

இப்படி ஞானப்பசியுடைய உள்ளத்திலும் கவிஞனுடைய உள்ளத்திலும் எந்தச் சிறிய சம்பவமாக இருந்தாலும் பெரிய கிளர்ச்சியை உண்டாக்கிவிடும். அவர்களுடைய உள்ளம் மெழுகு போல் எதைக் கண்டாலும் உருகும் தன்மை உடையது. அதில் எந்தப் பொருளை வைத்தாலும் அது பதிவை உண்டாக்கி விடுகிறது; ஒட்டிக் கொண்டு விடுகிறது.

## பொன்னின் உருக்கம்

நாமும் நம்முடைய துன்பத்தைக் கண்டும், பிறருடைய பெருமையைக் கண்டும் உருகுகிறோம்; இரங்குகிறோம். இப்படிப் பட்ட உருக்கமும் உருக்கந்தான். அது பயன் இல்லாத உருக்கம். களிமண்ணில் நீரைக் கொட்டி மிதித்தாலும் அது இளகுகிறது; உருகுகிறது. அதில் வைரத்தைப் பதிக்க முடியுமா? இரும்பை உலையில் இட்டால் அதுவும் உருகுகிறது. அதில் வைரக்கல்லைப் பதிப்பார்களா? மண்ணின் உருக்கமோ இரும் பின் உருக்கமோ வைரத்தைப் பதிக்கப் பயன்படாது. பொன்னின் உருக்கந்தான் பயன்படும். எத்தனையோ பேர் எத்தனையோ விதமான விஷயங்களை நினைந்து உருகினாலும் இறைவனை நினைந்து உருகுகின்ற பக்தர்களுடைய உருக்கத்தில்தான் எம்பெருமானாகிய மாணிக்கம் பதிகிறது. அவர்கள் மனம் பொன் போன்றது. இந்த உருக்கந்தான் வேண்டுமென்று சொல்கிறார் அருணகிரியார்.

## உருக்கம் உண்டாகும் வழி

இந்த உருக்கம் எப்படி வரும்? யார் உருகிப் பாடுகிறார்களோ அவர்களுடைய பாட்டைக் கேட்டால் வரும். ''வேல் முருகா! வேல்முருகா!'' என்று ஒருவர் வெறும் நாமாவளிதான் பாடுகிறார்; என்றாலும் கண்ணை மூடிக் கொண்டு அந்த நாத ஒலிக்குக் காதைக் கொடுத்து விட்டால் சிறிது நேரத்தில் நமக்கு ஒருவித உணர்ச்சி உண்டாகிறது. பாட்டு முடிந்துவிட்டால் நாம் அப்படியே செயலற்றுபோய் நிற்கிறோம். உள்ளம் உருகிப் போய் விடுவதனால் பாட்டு முடிந்ததுகூடத் தெரியாது போகிறது. அந்த உருக்கம் ஆரம்பத்திலேயே வந்துவிட்டால் பாடுகிறவர் இன்னார் என்பதுகூடத் தெரியாமல் போய்விடுகிறது. சிலருக்கு ஆவேச உணர்ச்சி பொங்கி விடுகிறது.

## கவிஞன் உருக்கம்

மாபெருங் கவிஞனுடைய பாடல்கள் இப்படித்தான் எந்தக் காலத்திலோ, எந்த இடத்திலோ, தனக்கு உண்டாக்கிய உருக்கத்தை, வேறு வேறு காலத்தில்,வேறு வேறு இடத்தில்,வேறு வேறு அநுபவத்தை உடைய மக்களிடத்தில் உண்டாக்குகின்றன என்பர். உணர்ச்சியின் இடமாற்றந்தான் கலையின் தத்துவம் என்பார்கள். இறைவனை நினைந்து உருகிப் பாடின பெரியவர்கள் பாட்டை எப்பொழுதானாலும் திரும்பத் திரும்பப் படிக்கிறவர்களுக்கு அதே உருக்கம் உண்டாகும்.

'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்!'

என்று ஒரு பழமொழி உண்டு. அதற்கு ஏன் உருகுகிறார்கள்? திருவாசகம் பாடியவர் உருகி உருகிப் பாடினார். அவரது உள் உருக்கத்திலிருந்து வெளிப்பட்ட பாடல்கள் நம்மையும் உருக வைக்கின்றன.

நல்ல நிலத்திலே வித்து விழுந்தால் உடனே அது முளைத்து மரமாகும். அந்த மரத்தில் மறுபடியும் ஆயிரம் ஆயிரம் வித்துக்கள் உண்டாகும். அப்படி உருக்கமாகிய ஆதிவித்து மாணிக்க வாசகரின் உள்ளமாகிய நல்ல நிலத்தில் விழுந்தது. அந்த வித்தில் தோன்றியது மரமாகிய திருவாசகம். அந்தத் திருவாசக மரத்தில் மீட்டும் ஆயிரம் ஆயிரம் வித்தாகிய உருக்கமே விளைகிறது. ஒரு

வருடைய உருக்கம் பலரிடம் உருக்கத்தை உண்டாக்குகிறது. மு லில் உருகிப் பாடியவர் ஒருவர். அவர் பாட்டைப் படிக்கிறவர்க எல்லாரும் பின்னால் உருகுகிறார்கள்.

## கலைஞன் மனோபாவம்

நான் ஒரு தலத்தில் உள்ள முருகன் கோயிலுக்குச் சி நண்பர்களுடன் சென்றிருந்தேன். கோயிலின் மேல்விதானத்தி ஒரு சித்திரகாரர் அழகான வண்ணங்களை எல்லாம் குழைத்து கந்தபுராணக் கதையை ஓவியமாகத் தீட்டியிருக்கிறார்; ஆறு படை வீட்டையும் எழுதியிருக்கிறார். சித்திரத்தைப் பார்த்துக்கொண்டே வரும்போது என்னுடன் வந்தவர்களில் ஒருவர், ''சித்திரம் எப்படி இருக்கிறது? எப்படி இருக்கிறது?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார். நான் விடை ஒன்றும் சொல்லாமல் அண்ணாந்து பார்த்து கொண்டே சென்றேன். எங்களுக்கு முன்னால் வேறு சிலரும் அந்தப் படங்களைப் பார்த்துச் சென்றார்கள். அவர்களிலே ஒருவன் வள்ளியெம்பெருமாட்டியின் படத்தைப் பார்த்துவிட்டு, ''இது இன்னவள் மாதிரியாக இல்லையா?'' என்று ஒரு சினிமா நடிகை யின் பெயரைச் சொன்னான். அப்படியே மற்றப் படங்களையும் பார்த்துக் கூறினான். உடனே நான் பக்கத்தில் இருந்தவர்களிடம், ''படம் எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொண்டீர்களா?'' என்று சொன்னேன். அவர்கள் விழித்தார்கள்.

இறைவனை, நினைந்து நினைந்து உருகி அப்படத்தை ஓவியன் தீட்டியிருந்தால் அந்தப் படத்தைப் பார்க்கும்போது பார்க்கிறவர்களுக்கு இறைவனின் நினைப்பு உண்டாகும். 'ஆறு முகக் கடவுளின் படம் போட்டிருக்கிறேன்' என்று எதையோ நினைத்துக் கொண்டு ஆறுமுகங்களுடையவோர் உருவத்தைத் தீட்டி விட்டால், அந்தச் சித்திரம் ஆறுமுகநாதனை நினைக்கச் செய்து விடாது. உள்ளத்தில் பல காலம் நினைந்து நினைந்து உருகினால் அன்றி எழுத வராது. வெறும் பழக்கத்தினால் எழுத வராது. எம் பெருமானுடைய மூர்த்தத்தைக் கண்ணால் காணவேண்டும்; கருத்தைச் செலுத்தி உள்ளம் உருக வேண்டும். உருகி உருகிக் கண்ணை மூடிக் கொண்டு உள்ளக்கிழியில் அவன் திருவுரு வத்தை முதலில் எழுதிக் கொள்ள வேண்டும். அப்படி எழுதிக் கொண்டு உருகுகிறவனுக்கு உடம்பெல்லாம் கிளுகிளுக்கும்;

வருடைய உருக்கம் பலரிடம் உருக்கத்தை உண்டாக்குகிறது. முத லில் உருகிப் பாடியவர் ஒருவர். அவர் பாட்டைப் படிக்கிறவர்கள் எல்லாரும் பின்னால் உருகுகிறார்கள்.

## கலைஞன் மனோபாவம்

நான் ஒரு தலத்தில் உள்ள முருகன் கோயிலுக்குச் சில நண்பர்களுடன் சென்றிருந்தேன். கோயிலின் மேல்விதானத்தில் ஒரு சித்திரகாரர் அழகான வண்ணங்களை எல்லாம் குழைத்துக் கந்தபுராணக் கதையை ஓவியமாகத் தீட்டியிருக்கிறார்; ஆறு படை வீட்டையும் எழுதியிருக்கிறார். சித்திரத்தைப் பார்த்துக்கொண்டே வரும்போது என்னுடன் வந்தவர்களில் ஒருவர், ''சித்திரம் எப்படி இருக்கிறது? எப்படி இருக்கிறது?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார். நான் விடை ஒன்றும் சொல்லாமல் அண்ணாந்து பார்த்துக் கொண்டே சென்றேன். எங்களுக்கு முன்னால் வேறு சிலரும் அந்தப் படங்களைப் பார்த்துச் சென்றார்கள். அவர்களிலே ஒருவன் வள்ளியெம்பெருமாட்டியின் படத்தைப் பார்த்துவிட்டு, ''இது இன்னவள் மாதிரியாக இல்லையா?'' என்று ஒரு சினிமா நடிகை யின் பெயரைச் சொன்னான். அப்படியே மற்றப் படங்களையும் பார்த்துக் கூறினான். உடனே நான் பக்கத்தில் இருந்தவர்களிடம், ''படம் எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொண்டீர்களா?'' என்று சொன்னேன். அவர்கள் விழித்தார்கள்.

இறைவனை, நினைந்து நினைந்து உருகி அப்படத்தை ஓவியன் தீட்டியிருந்தால் அந்தப் படத்தைப் பார்க்கும்போது பார்க்கிறவர்களுக்கு இறைவனின் நினைப்பு உண்டாகும். 'ஆறு முகக் கடவுளின் படம் போட்டிருக்கிறேன்' என்று எதையோ நினைத்துக் கொண்டு ஆறுமுகங்களுடையஓர் உருவத்தைத் தீட்டி விட்டால், அந்தச் சித்திரம் ஆறுமுகநாதனை நினைக்கச் செய்து விடாது. உள்ளத்தில் பல காலம் நினைந்து நினைந்து உருகினால் அன்றி எழுத வராது. வெறும் பழக்கத்தினால் எழுத வராது. எம் பெருமானுடைய மூர்த்தத்தைக் கண்ணால் காணவேண்டும்; கருத்தைச் செலுத்தி உள்ளம் உருக வேண்டும். உருகி உருகிக் கண்ணை மூடிக் கொண்டு உள்ளக்கிழியில் அவன் திருவுரு வத்தை முதலில் எழுதிக் கொள்ள வேண்டும். அப்படி எழுதிக் கொண்டு உருகுகிறவனுக்கு உடம்பெல்லாம் கிளுகிளுக்கும்;

தலையை அப்பால் திருப்பியவுடன்தான் தலை விண்டு உயிர் போயிற்றாம். குண்டு போட்டால் சத்தம் கேட்கும். இப்படிக் கத்தியினால் கிழித்தால் சத்தமா உண்டாகும்? சத்தம் இல்லா மல், ஆடம்பர ஆரவாரம் இல்லாமல் கணப்பொழுதில் ஆண்டவன் கிரௌஞ்சகிரியை சங்காரம் செய்ததை நினைந்து, ''கிழியும்படி அடற்குன்று எறிந்தோன்'' என்று சொல்கிறார். அருணகிரிநாதர் அவ்வப்போது தம் கற்பனைக் கண்ணால் காணும் காட்சிகளில் இது ஒன்று.

**கிழியும்படி அடல் குன்று எறிந்தோன் கவிகேட்டு உருகி ...................................... இருப்பீர்**

அடல் - வலிமை. ''வலிமை பொருந்திய கிரௌஞ்ச மலை கிழியும்படியாக வேலை எறிந்த வேலாயுதனுடைய கவியை, அவன் புகழ்பாடும் கவிகளை, கேட்டு உருகுங்கள்'' என்கிறார்.

## கருத்து இணைதல்

நமக்குக் கருத்து இருக்கிறது; முருகப் பெருமானைப் பற்றிப் பாடியுள்ள அநுபூதிமான்களின் பாடல்களில் பொருள் உண்டு. நம் கருத்தையும் அந்தப் பொருளையும் ஒன்றாகச் சேர்த்தோமானால் உருக்கம் உண்டாகும். சொற்பாவும் பொருள் தெரிந்து கற்றால் உள்ளத்தின் ஒவ்வொரு பகுதியிலும் கிளர்ச்சி உண்டாகும். வெறும் ஒலிக்கே எத்தனையோ பெருமை உண்டே!

தன் வீட்டு வாசலில் ஒரு தாய் நின்றுகொண்டிருக்கிறாள். தெருவோடு போகிறவன் ஒருவன், ''அந்தக் கார்ப்பரேஷன் பள்ளிக்கு எதிரில், ஒரு குழந்தையின் மேல் கார் ஏறிவிட்டது'' என்று யாரிடமோ சொல்லிக் கொண்டு போகிறான். அவளிடம் அவன் சொல்லவில்லை. அவன் பேச்சு அவள் காதில் விழுகிறது. உடனே அந்தப் பள்ளி வாசலை நோக்கி ஓடுகிறாள். காரணம்: அவளுடைய பிள்ளை அந்தப் பள்ளியில்தான் படிக்கிறான். ''நம்முடைய குழந்தை வீதிக்கு வந்திருப்பானோ? நம் குழந்தையின் மேல் கார் ஏறியிருக்குமோ?'' என்று பல பல சிந்தனையுடன் கூடிய கிளர்ச்சியுடையவளாக, பதற்றத்தோடு அந்தப் பள்ளிக்குப் போகிறாள். அந்தக் கிளர்ச்சிக்குக் காரணம் என்ன? அவள் பிள்ளை இறக்கவில்லை. அவன் வகுப்புக்குள்தான் இருக்கிறான்.; பாடம் நன்றாகக் கேட்டுக்கொண்டிருக்கிறான்.

இருந்தாலும் தெருவோடு போகிறவன் சொன்னதைக் கேட்டவுடன் அவள் உள்ளத்தில் ஒரு சித்திரம் தன் மகன் ஓடி வருவது போலவும் கார் அவன் மேல் ஏறிவிட்டதுபோலவும், குழந்தை இறந்து விட்டது போலவும் தோன்றிவிட்டது. உடனே உணர்ச்சி கொந்தளிக்க ஓடுகிறாள்.

'சிந்திக் கிலேன்! நின்று சேவிக்கி
லேன்! தண்டைச் சிற்றடியை
வந்திக் கிலேன்! ஒன்றும் வாழ்த்து
கிலேன்மயில் வாகனனைச்
சந்திக்கி லேன்பொய்யை நிந்திக்கி
லேன் உண்மை சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமும் காயக்
கிலேசமும் போக்குதற்கே''

என்னும் அருணகிரியாரின் பாடலை ஒருவன் பாடுகிறான். அதைக் கேட்கும்போது நம்முடைய கருத்து அந்தப் பாட்டின் பொருளோடு கலந்துவிட்டால் உள்ளம் துடிதுடிக்காதா? ''ஐயோ நாம் இப்படியெல்லாம் செய்யாமல் இருக்கிறோமே!'' என நினைந்து, நம்முடைய சிறுமையை எண்ணி நொந்து, உருகி உருகி விம்மாதா?

சாத்திரம் படித்தால் அறிவு வளரும். தோத்திரம் படித்தால் உள்ளம் வளரும். தோத்திரத்தைப் படிக்கும் போதும் கேட்கும் போதும் நம்முடைய சிறுமையை நினைந்தும் உருகலாம்; இறைவனுடைய பெருமையை அறிந்தும் உருகலாம். இப்படி இரண்டு வகையிலும் அநுகூலம் ஏற்படுகிறது. ''காது படைத்து விட்டால் போதாது. உருகும் கவி கேட்டு இருப்பீர்'' என்று சொல்லித் தருகிறார் அருணகிரியார்.

## வேலி

தோட்டம் போடுவதானால் ஆடுமாடுகள் செடிகொடிகளை மேய்ந்துவிடாமல் இருக்க வேலி போடவேண்டும். நாலு சால் ஓட்டி உழுது நாற்று நட்டு விட்டால் போதாது. பாதுகாப்புடைய வேலியிட்டுக் களையும் எடுக்காவிட்டால் பயிர் நாசமாகிவிடும். ஓர் ஊரில் ஒரு கோயில் இருக்கிறது; அங்கே போனால் நல்ல தேவாரம், திருப்புகழ் முதலியவைகளைக் கேட்கலாம். அந்த

ஊரிலேயே ஒரு டீக்கடையும் இருக்குமே! அங்கே சினிமாப் பாடல்கள் இரவு பகலாக ஒலித்துக் கொண்டிருக்கும். அவற்றை யும் கேட்கலாமா? 'கிரௌஞ்ச மலையைக் கிழித்த வேலாயுத னுடைய கவியைக் கேட்டு உருகி இருங்கள்' என்று சொன்ன அருணை முனிவர் அடுத்த அடியில்,

**இழியும் கவி கற்றிடாது இருப்பீர்**

என்றும் சொல்லித் தருகிறார். இது இரண்டாம் பயிற்சி.

## மருந்தும் பத்தியமும்

நாட்டு வைத்தியர்களிடம் எனக்கு நோய் என்று சொல்லிக் கொண்டு சென்றால் அவர்கள் மருந்து கொடுப்பார்கள். கூடவே இன்னவாறு பத்தியமாக இருக்க வேண்டும் என்றும் சொல் வார்கள். பத்தியம் என்பது சில உணவுப் பொருளை அகற்றுவது. மருந்து சாப்பிட்டால் பத்தியம் இருக்கத்தான் வேண்டும். நாக்கு ருசிக்காகக் கண்டதைச் சாப்பிடாமல் இருந்திருந்தால் நோய் வந்திருக்காது. நோய் போக வேண்டுமென்றால் மருந்து சாப் பிடத்தான் வேண்டும்; பத்தியமாக இருக்கவும் வேண்டும். மருந்து சாப்பிடும்போதே நாக்கு ருசிக்காகக் கண்டதைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தால் நோய் தீருமா? மருந்தும் பத்தியமும் சரிவர இருந்தால் உடம்பு விரைவில் நலம்பெறும்.

எம்பெருமானின் புகழ் அல்லாத பல கவிகளைக் கேட்டு நோயை வருவித்துக் கொண்டுவிட்டோம். பிறவி நோய் போக வேண்டும். பிறவிப் பிணிக்கு மருந்தாக இறைவனுடைய புகழைச் சொல்லும் கவி கேட்டு உருக வேண்டும். மருந்து உண்டால் பத்தியம் வேண்டுமே! இறைவனுடைய புகழைக் கேட்கும்போதே, மட்டமான பாட்டுக்களை மற்றொரு புறம் கற்காமல் இருந் தால்தான் விரைவில் மனம் வளப்படும்; ஒருமைப்படும். இழிந்த பாட்டுக்களைக் கேட்டால் அகந்தை வளரும்; ஆபாசமான உணர்ச்சிகள் ஊற்றுப் போலச் சுரக்கும். அருமையான ஒன்றை வளர்க்கும்போது கூடவே அதை அழிக்கக் கூடிய ஒன்றையும் வளர்க்கலாமா? 'வளர்க்காதீர்கள்' என்பதைச் சொல்கிறார் அருண கிரிநாதர்.

**இழியும் கவி கற்றிடாது இருப்பீர்.**

## இழியும் கவி

இழியும் கவி – சுவையிலும் பயனிலும் இழிந்த கவி என்று பொருள் கொள்ளவேண்டும். நம்முடைய பண்பாடு, அறிவு, உணர்ச்சி ஆகியவற்றையெல்லாம் வளரும்படியாகச் செய்கிற கவி உயர்ந்த கவி. அவை அழியும்படியாகச் செய்கிற கவி இழிந்த கவி. எந்தப் பாடலைப் படிக்கும்போது நம்முடைய உண்மை யான தாழ்ந்தநிலை புலப்படுகிறதோ அந்தப் பாட்டு நம்முடைய உள்ளத் தடத்தில் திட்பத்தை உண்டாக்கிப் பண்புகளை உயரச் செய்கிறது. எந்தப் பாட்டைப் படிக்கும்போது நாம் ஏதோ உயர்ந்த நிலையில் இருப்பதாகத் தோன்றுகிறதோ அந்தப் பாட்டு உண்மையிலேயே நம்முடைய உள்ளத்தில் செருக்கை உண்டாக்கி நம்மைப் பண்பாட்டிலே, குணத்திலே சரிந்து விழச் செய்கிறது. ''குணங்களினால் இழிந்து, உணர்ச்சியினால் இழிந்து, சொல்லி னால் இழிந்துள்ள கவிகளைக் கற்றிடாது இருங்கள்'' என்று இரண்டாவது பயிற்சியை முடிக்கிறார் அருணகிரியார்.

**கிழியும்படி அடல் குன்று எறிந்தோன் கவி கேட்டு உருகி**
**இழியும் கவி கற்றிடாது இருப்பீர்.**

''வலிய குன்று கிழியும்படி வேலாயுதத்தை எறிந்த முருகனுடைய புகழைப்பாடும் கவியை, கேட்டால் மனம் உருகும் கவியை, கேட்டு இருப்பீர்'' என்பது முதல் பயிற்சி. ''இழியும் கவி கற்றிடாது இருப்பீர்'' என்பது இரண்டாவது பயிற்சி. இந்த இரண்டு பயிற்சி களிலும் நன்றாகத் தேறியவர்களுக்கு என்ன பயன்? யம பயம் போய் விடும்; நரகக் குழியில் விழாது தப்பிக் கொள்ளலாம்.

இதை அருணகிரியார் எப்படிக் குறிப்பிக்கிறார்? ''உருகும் கவி கேளுங்கள். இழியும் கவி கற்றிடாதீர்கள். இது தெரியாமல் இருக் கிறார்களே, தெரிந்தும் மறந்து இருக்கிறார்களே, அவர்களுக்குக் கொஞ்சம் சொல்லுங்கள்'' என்கிறார்; அவர்களுக்குச் சொல்லும் படி சொல்லி, நாம் உணர்ந்து கொள்ளும்படி குறிப்பிக்கிறார்.

உருகும் கவி கேட்க வேண்டும், இழியும் கவி கற்கக் கூடாது என்பது தெரியாதவர்களுக்கு, மறந்தவர்களுக்கு, என்ன சொல்ல வேண்டும்?

## குழியும் வழியும்

எரிவாய்நரகக்
குழியும் துயரும் விடாய்ப்படக் கூற்றுவன்
ஊர்க்குச் செல்லும்
வழியும் துயரும் பகரீர், பகரீர் மறந்தவர்க்கே.

''எரிகின்ற தீ வாயை உடைய நரகக் குழியைப் பற்றிச் சொல்லுங்கள்'' என்கிறார். உயிரானது தான் பண்ணிய வினைக்கு ஏற்ப மீட்டும் கருக் குழியில் புகுந்து பலவிதமான உடம்புகளை எடுத்துத் துன்ப வேதனைக்கே ஆளாகும் என்ற நுட்பமான நிலையைச் சொல்ல, அதைப் பருப்பொருளாகக் காட்டி விளக்கு வது பெரியவர்கள் மரபு. பிறவியாகிய பெருந்துன்பத்தை அளிக்கிற நிலை எதுவோ, பாதை எதுவோ, அதை விளக்க வேண்டுமென் றால் அதே விதமான துன்பத்தைத் தருகிற பொருளை வைத்துச் சொன்னால்தான் உணர்ந்து கொள்ள முடியும். நெருப்பு என்ற உடனேயே அதனால் ஏற்படுகிற வெம்மையை எண்ணி அஞ்சுகிறோம். பாம்பு என்றவுடனேயே அதன் நஞ்சை எண்ணிப் பயப்படுகிறோம். மீட்டும் பிறவி எடுப்பதற்குரிய நிலையை, நரகம் என்று பெயர் வைத்துச் சொல்கிறார்கள். அது எப்படி இருக்கும்? கொழுந்து விட்டெரியும் நெருப்புக் குழியாக இருக் கும், கொடிய நஞ்சைக் கக்குகின்ற பாம்புக் குவியலாக இருக்கும் என்று சொன்னால் தீவினைகளால் உண்டான துன்பத்துக்கு அஞ்சுவார்கள்; தீவினை செய்ய அஞ்சுவார்கள்.

ஜியாமெட்ரியில் புள்ளியைக் காட்ட இரண்டு கோடு போட்டு வெட்டுவார்கள்; இரண்டு கோடும் சந்திக்கிற இடந்தான் புள்ளி என்று சொல்வார்கள். புள்ளிக்குத் தனியே பரப்பளவு இல்லை; அதைக் காட்ட முடியாது; ஆகையாலே அப்படிக் காட்டுவார்கள். இதை முன்பே ஒருமுறை சொல்லியிருக்கிறேன். இப்படி நுட்பமான பொருளைச் சொல்ல வேண்டுமானாலும் பருப்பொருளாகச் சொன்னால்தான் மனிதன் புரிந்து கொள்வான். நல்ல வினை செய்பவர்களுக்கு மோட்சம் கிடைக்கும், பாவ வினைகளைச் செய்பவர்களுக்கு நரகம் கிடைக்கும் என்று அந்த அநுபவங்களைக் காட்சிகளாக்கிக் காட்டினார்கள்.

மோட்சமாவது என்ன? மீட்டும் பிறவி உண்டாகாதநிலை. நரகம், மீட்டும் கருக்குழியிலே செல்லும் துன்பத்தை உண்டாக்கும்

நிலை. இந்த நிலைக்குப் போகக் கூடாது என்கிற எண்ணம் வளர வேண்டுமானால் இதைப்பற்றிய பயம் உண்டாக வேண்டும். ஆகவே தான், "நரகம் ஒரே தீக்குழியாக இருக்கும்; கொழுந்து விட்டெரியக் கூடிய அந்த எரிவாய் நரகக் குழியில் யம தூதர்கள் பாவம் செய்கிறவர்களைக் கொண்டு போய்த் தள்ளுவார்கள்" என்று சொல்லிப் பயத்தை உண்டாக்கினார்கள்.

அந்த இடம் கூற்றுவனுடைய ஊர். கூற்றுவனுடைய ஊர் மாத்திரம் அப்படி இராது. ஊருக்குப் போகும் வழியும் துயரம் நிரம்பியது. அந்தப் பக்கம் போகும் உயிர்கள் எல்லாம் வெப்பத் தால் தீய்ந்து, தாகத்தினால் தவிக்கும் என்றார்கள். அதற்காகத்தான் யாராவது இறந்து போனால் அவருடைய உயிர் யமபுரிக்குச் செல்லும் வழியில் விடாய்ப்பட்டுத் துயருறுமே என்று எண்ணி எள்ளும் தண்ணீரும் விடுவார்கள். அவ்வுயிரினுடைய தாகத்தைத் தீர்ப்பதற்காக என்று சொல்வார்கள்.

வெம்மையினால் ஏற்படுவது விடாய்; வெம்மை தீயினால் உண்டாகிறது. தண்மை, குளிர்ச்சி; அது நீரினால் உண்டாகிறது. உள்ளத்திற்குக் குளிர்ச்சியைத் தருவது அன்பு. அன்பு இல்லாத உயிருக்கு அன்பு இல்லாத நிலைதான் வரும். அன்பு இல்லாத சுயநலக்காரர்களுக்குக் கடைசிப் பயணத்தில் கிடைக்கிற வெப்பம் நிறைந்த வழியையும், தீக்குழியையும், அவற்றினால் உண்டாகிற துயரையும் அருணகிரியார் நினைப்பூட்டுகிறார். 'உருகும் கவி கேளாதவர்களுக்கு, இழியும் கவி கற்பவர்களுக்கு, இந்தக் குழியை யும், வழியையும், துயரையும் சொல்லுங்கள், சொல்லுங்கள்' என்று வேண்டிக் கொள்கிறார்.

எரிவாய் நரகக்
குழியும் துயரும் விடாய்ப்படக்
கூற்றுவன் ஊர்க்குச் செல்லும்
வழியும் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே.

## பகரீர் பகரீர்!

நல்ல வினைகளைச் செய்யாவிட்டால் மீட்டும் பிறவியாகிய துன்பந்தான் விளையும் என்பது தெரியாமல், உருகும் கவி கேளாது, இழியும் கவி கற்று வருபவர்களுக்கு, "எரிவாய் நரகக் குழி காத்து இருக்கிறது. விடாய்ப் படும் துயரும் காத்து இருக்கிறது.

கூற்றுவன் ஊர்க்குச் செல்லும் வழியையும் நினைவில் கொள்ளுங் கள்'' என்று ஒருமுறை பகர்ந்து நினைப் பூட்டினால் போதும். அவர்கள் இயல்பாகவே தெரியாதவர்கள். அவர்கள் இதைத் தெரிந்து கொண்டு நல்ல நெறியில் நடக்க முயல்வார்கள்.

பகரீர் பகரீர் மறந்தவர்க்கே.

உருகும் கவி கற்றிடாது, இழியும் கவி கற்றுக் கொண் டிருப்பதனால் நரகந்தான் விளையும், மீட்டும் பிறவியாகிய துன்பம் உண்டாகும் என்பதை உணர்ந்தும் மறந்து விடுகிறார் களே அவர்களுக்கு, ''பாவிகளே! எரிவாய் நரகக் குழியும் வழியும் இருக்கின்றன, இருக்கின்றன' என்று அடுத்தடுத்து இடித்துச் சொல்ல வேண்டும் என்கிறார் அருணகிரியார். பகரீர், பகரீர் என்று இரண்டுமுறை சொல்கிறார். இரண்டு முறை என்று கணக்காகச் சொல்லவில்லை. தமிழில் ஒன்றுக்குமேல் போனால் எல்லாம் பலவே. ஆதலில் அடுத்தடுத்துச் சொல்லுங்கள் என்பதையே அவ்வாறு கூறினார். உண்மையைத் தெரிந்து கொண்டும் மயங்கு கிறவர்களுக்கு அடித்துச் சொல்லத்தானே வேண்டும்?

## முரண்பாடு இல்லை

மனிதன் உய்வுபெற வேண்டுமென்றால் நல்ல உணர்ச்சி அதிகம் உடையவனாக இருக்க வேண்டும்; அல்லாத உணர்ச்சி கொஞ்சங்கூட இருக்கக்கூடாது. மனம் நல்ல உணர்ச்சியினால் கிளர்ந்து உருகினால் இறைவன் திருவருளால் தியான சமாதி நிலை கூடிவிடும். யமவாதனை இராது. காலனை வென்று விடலாம்.

காலஜயம் பண்ணுவதற்கு மனோநாசம் ஏற்படவேண்டும். மனோநாசம் ஏற்படுவதற்கு முதல் நிலை மன உருக்கம். மனம் உருகினால்தான் ஒருமைப்பாடு உண்டாகித் தியானம் செய்ய முடியும். மனோலயம் உண்டாகும்; இதற்கு ஆரம்பம்: இழிந்த கவியைக் கற்றிடாது ஒதுக்கி, உயர்ந்த கவியை – மனத்தை உருக்கும் வேலாயுதன் கவியைக் கேட்டு உருக வேண்டும். இந்த அரிச்சுவடி படித்தால் போதும்; எம்.ஏ. பட்டம் பெறும் கல்லூரி நிலையாகிய ஆங்காரம் அடங்கி, ஒடுங்கிப் பரமானந்தத்தே தேங்கி, நினைப்பும் மறப்பும் அற்று, ஓங்காரத்து உள்ளொளிக்

குள்ளே சதா காலமும் முருகன் திருவுருவம் கண்டு தூங்கலாம்; இந்த இரண்டுக்கும் முரண்பாடு இல்லை.

## செவி படைத்த பயன்

செவி படைத்த பயனே இறைவனுடைய புகழைக் கேட்டுக் கேட்டு உருகுவதுதான். இறைவன் புகழைக் கேளாத செவி ஓயாது இழவுச் செய்தியைக் கேட்கும் செவி என்று வள்ளலார் பாடுகிறார்.

''கடவுள்நின் புகழ்தனைக் கேளாத வீணர்செவி
கைத்து இழவு கேட்கும் செவி''

இறைவனுடைய புகழைத் தெரிந்து கொண்டு நாமாகக் கவி பாடுவது எளிதன்று; பிறர் பாடியதைக் கேட்டு இன்புறலாம் அல்லவா?

கிழியும் படிஅடல் குன்றுஎறிந்
தோன்கவி கேட்டுஉருகி,
இழியும் கவிகற்றிடாது இருப்
பீர்;எரி வாய்நரகக்
குழியும் துயரும் விடாய்ப்படக்
கூற்றுவன் ஊர்க்குச்செல்லும்
வழியும் துயரும் பகரீர்
பகரீர், மறந்தவர்க்கே.

(வலிமையுடைய கிரௌஞ்சமலை கிழியும்படி அதன்மேல் வேலை எறிந்தவனாகிய முருகப் பெருமானைப் பற்றிய பாடல்களைக் கேட்டு உருகி, இழிவான நிலையை உண்டாக்குவனவாகிய தாழ்ந்த பாடல்களைக் கற்றிடாமல் வாழுங்கள்; இவற்றால் இன்ன பயன் உண்டு என்பதை மறந்தவர்களுக்கு, நெருப்பைத் தன்னிடத்தே கொண்ட நரகமென்னும் பள்ளத்தையும் அதனால் விளையும் துயரங்களையும், இறந்தபின் தாகம் உண்டாக யமனுடைய ஊருக்குப் போகும் வழியையும் அங்கே உண்டாகும் துயரங்களையும் சொல்லுங்கள், சொல்லுங்கள்.

மக்களைப் பார்த்து உபதேசம் செய்கிற முறையில் அமைந்திருக்கிறது பாட்டு.

கிழிதல் - பிளத்தல், அடல் - வலிமை, குன்று - கிரௌஞ்சமலை. எறிந்தோன் - தாக்கினவன். இழியும் - இழிவான போக்கிலே செல்லும்; தாழ்வான உணர்ச்சிகளை உண்டாக்கும். விடாய் - தாகம்)

இது கந்தர் அலங்காரத்தில் ஐம்பத்தாறாவது பாடல்.

# இருபிடி சோறு

## வயிறுடையவர்களுக்கு

"காதுடையவர்கள் எல்லாம் இறைவனுடைய புகழைக் கேட்டு உருக வேண்டும். மற்றக் கவிகளைக் கேளாமல் இருக்க வேண்டும். அதனால் உள்ளமானது பண்பட்டு யமனையும் வெல்லுகிற ஆற்றலைப் பெறுவார்கள்" என்கிற உபதேசத்தைப் போன பாட்டிலே அருணை முனிவர் சொல்லக் கேட்டோம். இந்தப் பாட்டில் வயிறுடைய மக்களுக்கு ஓர் உபதேசம் செய்கிறார். காது இல்லாத செவிடர்கள் இருக்கலாம்; கண் இல்லாத குருடர்கள் இருக்கலாம்; பேச வாய் இல்லாத ஊமைகள் இருக்கலாம். பிற உறுப்புகள் குறைபாடு உடையவராக இருந்தாலும் வயிறு உண்டு. வேறு தொழில் செய்வதில்லை என்று சோம்பியிருந்தாலும் வயிறு சும்மா இராது. அதற்கு ஏதாவது கொடுக்கத்தான் வேண்டும்.

வயிறுடைய மக்களைப் பார்த்து, "உங்களுக்குக் காது இருந்தாலும் இறைவன் புகழைச் சொல்லும் கவியைக் கேட்பதற்கு முடியவில்லை என்று நீங்கள் சொல்லலாம். வயிறு இருக்கிறது அல்லவா? வயிற்றுக்கு வேளை வேளைக்குச் சோறு போடுகிறீர்கள் அல்லவா? உங்களுக்கு ஒரு வழி சொல்கிறேன் கேளுங்கள்" என்பாரைப் போல இந்தப் பாட்டில் பேசுகிறார்.

## உணவின் இன்றியமையாமை

மனித சமுதாயத்தில் எல்லாரும் செல்வராக இருக்க முடியாது; எல்லாரும் படித்து ஞானிகளாக இருக்க முடியாது. ஆனால், வயிறு எல்லோருக்கும் இருப்பதால் எல்லோரும் சாப்பிடுகிறவர்களாக இருக்கிறார்கள். உலகத்தில் பிறந்தவர்கள் வயிற்றை நிரப்புவதில் சோம்பல் படுவது கிடையாது. பிச்சை எடுத்தாவது உண்கிறார்கள். பெரிய தவ முனிவர்களும் சிலகாலம் உண்ணாமல்

இருந்து விரதம் இருக்கலாமே யொழியப் பின்பு, ''எங்கே சோறு கிடைக்கும்?'' எனத் தேடவேண்டியிருக்கும்.

## துறவியர் நிலை

''துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்''

என்று வள்ளுவர் சொல்கிறார். இல்லறத்தான் இல்லறத்தை மேற்கொள்வது தன்னுடைய சுகத்திற்காக மட்டும் அல்ல. வயிறு என்பது துறவிகளுக்கும் இருப்பதால் அவர்களுக்கு வேண்டிய உணவைக் கொடுத்து அவர்களையும் காப்பாற்ற வேண்டும். ''எல்லோரும் துறந்து தவம் செய்யப் புறப்பட்டுவிட்டால் துறவிகளுக்கு யார் உணவு தருவார்கள்? அவர்களுக்குச் சோறு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தால்தான் மற்றவர்களாகிய இல்லறத்தார் தாம் தவம் செய்யாமல் இருக்கிறார்களோ!'' என்று வள்ளுவர் கேட்கிறார்.

சம்பாதிப்பதற்கு ஆற்றல் இல்லாத குழந்தைகளையும், ஏழை உறவினர்களையும் எப்படி இல்லறத்தான் உணவு கொடுத்துக் காப்பாற்றுகிறானோ அப்படியே கவலை இல்லாத துறவிகளை, பற்றை விட்டுப் பரமனின் தியானத்தில் எப்போதும் ஈடுபட்டிருக்கும் ஞானிகளை, அவன் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறான். தன்னுடைய வயிற்றைப் போலவே துறவிகளுடைய வயிற்றையும் நிரப்பும் காரியத்தை அவன் செய்து வரவேண்டும். அப்போதுதான் துறவியின் துறவறம் ஒழுங்காக நடக்கும்.

துறவிகள் நன்றாக வாழ்ந்தால் உலகம் ஒழுங்காக வாழும் என்று பழங்காலத்தில் நினைத்தே துறவிகளைக் காப்பாற்றினார்கள்; ''துறவிகள் அன்னக் காவடிகள். இவர்களால்தான் நாடு பிச்சைக்கார நாடாகிறது'' என்று அரசியல்வாதிகள் சொல்ல, துறவிகளுக்குச் சோறு போடாமல் துரத்தி அடிக்கிற காலம் இப்போது வந்துவிட்டது. இல்லறத்தான் தன் கடமையை மறந்துவிட்டான். துறவிகளும் நம்மைப் போல வயிறு படைத்தவர்கள். ஆதலாலே, 'நாளைக்கு வேண்டிய உணவுக்கு என்ன செய்வது? எந்த இல்லறத்தானும் சோறு போட மாட்டானே' என்று எண்ணிப் பணம் வைத்துக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

"துறவிக்கு எதற்கு ஐயா பணம்? இந்தக் காலத்தில் எந்தச் சாமியார்தாம் பத்துப் பதினைந்து எனப் பணம் முடிச்சுப் போட்டு வைத்துக் கொள்ளாமல் இருக்கிறார்? இவர்கள் உண்மைத் துறவிகளா?'' என்று சிலர் கேட்கிறார்கள். நம்முடைய பணம் சந்நியாசிகளுக்கும் உரியது என்கிற நினைவு நமக்கு இல்லை. அவர்கள் ஏதாவது வைத்துக் கொண்டிருந்தால், ''அவர்களுக்கு எதற்குப் பணம்?'' என்று கேட்கிறோம். ''சந்நியாசிகளுக்கு எதற்கு உடம்பு?'' என்று கேட்கிறோமா? நம்மைப் போல அவர்களுக்கு உடம்பு இருப்பதனாலே வயிறும் இருக்கிறது. வயிறு இருப்பதனாலே பசி இருக்கிறது. பசித்தால் உண்ண வேண்டும். உணவுக்குப் பணம் வேண்டாமா? அவர்கள் வயிற்றுக்கு வேண்டிய உணவை அன்றாடம் இல்லறத்தான் கொடுத்துவிட்டானேயானால் அவர்களுக்குப் பணம் வேண்டாம். இல்லறத்தான் சந்நியாசிகளுக்குத் தானும் உணவு படைக்காமல், அவர்களும் பணம் வைத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்வதைக் காட்டிலும், அவர்கள் வயிற்றை வைத்துக் கொண்டிருக்கக்கூடாது என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். அப்படி எவனாவது சொல்வானா? சொன்னால் முட்டாள் பட்டம் கட்டிக் கொள்வான்.

## உண்ணும் நேரம்

இந்தக் காலத்தில் சந்நியாசிகளுடைய வயிற்றுக்குச் சோறு போடாவிட்டாலும், சம்பாதிக்கும் ஆற்றல் இல்லாத குழந்தைகளுக்குச் சோறு போடாது பிச்சை எடுக்க வெளியே விரட்டினாலும், தம்முடைய வயிற்றுக்குச் சோறு போடாமல் இருப்பவர் யாரும் இல்லை. ''வயிறு நிரம்ப நான் மூன்று வேளையா சாப்பிடுகிறேன்?'' எனறு பலர் சொல்லலாம். ஒரு வேளையாவது ஒரு பிடி சோறாவது சாப்பிடுகிறான் அல்லவா? ''அந்த ஒரு பிடியைச் சாப்பிடும் போதாவது அதை நமக்குக் கிடைக்கும்படி செய்த இறைவனை நினைக்க வேண்டாமா?'' என்று சொல்வாரைப் போல அருணகிரியார் பாடுகிறார்.

''இறைவனை நினைப்பதற்கு எனக்கு நேரமே இல்லையே! கொஞ்சங்கூட ஓய்வு இல்லாமல் இயந்திரமாக வேலை செய்து கொண்டிருக்கிறேனே!'' என்று சொல்பவனுங்கூட வயிற்றுக்குப் போட்டுக் கொள்ள ஒரு நேரம் வைத்திருக்கிறான் அல்லவா?

நேரம் இல்லாமல் இருந்தாலும் பசி வந்துவிட்டால் உணவை உண்ண நேரத்தைக் கண்டுபிடிக்கிறான். மனிதன் வாழ்வது அவன் முயற்சிக்குள் அடங்கவில்லை; ஆனால் சாப்பிடுவது அவன் முயற்சியினால் உண்டாகிறது. நியாயமான முறையில் சம்பாதித்து சாப்பிடுகிறான்; அல்லது திருடி உண்ணுகிறான்; எப்படியாவது உண்டுவிடுகிறான். உண்ணுவது என்பதை விட்டால் உடம்பு இராது. "அப்படி உண்ணும் போது இறைவனை நினைக்கும் பழக்கத்தைச் செய்துகொள்" என்கிறார். உடம்பு சோற்றால் எடுத்த வீடு; தினந்தோறும் சாப்பிடுவதே இந்த உடம்பை வளர்ப்பதற்காகத்தான்.

## உயிர் போன உடம்பு

இப்படி உணவு தின்று தின்று வளர்க்கும் உடம்பு எத்தனை நாளைக்கு இருக்கும்? சாகிற வரைக்கும் இருக்கும். செத்த பிறகு இது எங்கும் போவது இல்லை; இதை எரித்து விடுகிறார்கள்; அல்லது புதைத்து விடுகிறார்கள். "எத்தனை எத்தனையோ விதமான உணவுப் பொருள்களினாலே கட்டப்பட்ட உடம்பாயிற்றே! இதை வைத்துக் கொள்ளலாம்" என்று யாராவது வைத்துக் கொள்ளுகிறார்களா? இந்தச் சரீரத்தினால் இன்பம் கண்டவர்கள் கூட, மனைவி மக்கள்கூட, இறந்துவிட்டால் இரவுக்கு இரவாகவே இதை எடுத்துக் கொண்டு போய்க் கொளுத்திவிட வேண்டும் என்கிறார்கள். இந்த உடம்பினால் வருகிற இன்பத்திற்காக மனையாட்டி, 'நாயகன் என்னுடன் தனித்து இருக்க மாட்டானா? அங்கே யாரும் இல்லாமல் இருக்க மாட்டார்களா?' என்று ஏங்கித் தவிக்கிறாள். அவளே நாயகன் இறந்துவிட்டால் அவன் சரீரத்தை வைத்துக் கொண்டு தனித்திருக்கப் பயப்படுகிறாள். துணைக்குப் பத்துபேர் இருக்க வேண்டுமென்று விரும்புகிறாள். அந்தச் சரீரத்தைகக் கட்டி தழுவித் தனியாக இருக்க முயற்சி பண்ணினவள் இன்றைக்கு அந்தச் சரீரம் தனியாக இருந்தாலும் அதன் அருகில் செல்ல அஞ்சுகிறாள்; மற்றவர்களும், "நேரமாகிவிட்டது. இனிப் பிணம் கிடக்கக்கூடாது. எடுத்துக் கொண்டு போய் எரிக்க வேண்டும்" என்கிறார்கள். அதைக் கொளுத்துகிற வரைக்கும் யாரும் சாப்பிடுவது இல்லை. கொள்ளி வைத்து விட்டுத்தான் இலையில் உட்காரு கிறார்கள். அதைக்

கொளுத்திவிட்ட பின்பே சாப்பிடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டவர்களைப் போலத் தோன்றுகிறது அவர்கள் செயல்!

## பிடி சாம்பலும் இல்லை

பல காலமாகப் பல பல சுவையுள்ள பண்டங்களைப் போட்டு வளர்த்த உடம்பு கடைசியில் எப்படி ஆகிறது? வறட்டிச் சாம்பல், விறகுச் சாம்பலோடுகூடச் சாம்பலாகி விடுகிறது. இந்த உடம்புச் சாம்பல் நிறைய மலைபோல் இருக்குமா? அஸ்தி கரைக்கும் தினத்தன்று மயானம் சென்று சிதையை விலக்கினால் உடம்புச் சாம்பல் பிடியளவு கிடைப்பதுகூடக் கஷ்டமாக இருக்கிறது. ஒரு பிடி சாம்பலும் காணாத மாய உடம்பு இது.

வெயிலுக்கும் மழைக்கும் பாதுகாப்பான இடத்தில் இருக்க வீடு கட்டுகிறோம். கட்டின வீட்டை சுத்தமாகவும், ஆரோக்கிய மாகவும் வைத்துக் கொள்ள வேண்டியதுதான். அந்த வீடு சாசுவத மாகவே இருக்குமா? நில நடுக்கம் வந்தால் எல்லா வீடுகளும் அப்படியே பொடிப் பொடியாக விழுந்து விடுகின்றன. அந்த வீட்டையே நம்பி வாழ்ந்தால் என்ன செய்வது?

இந்த உடம்பு நமக்கு உரியதுதான். உடம்பைக் கொண்டு தான் வாழ வேண்டும். ஆற்றல் உடையவன் அதை நன்றாக வைத்துக் கொள்வான். ஆனால் இந்த உடம்பையே நம்பி இருக்கிற நிலை வந்துவிட்டால், நாளைக்குக் காலன் வந்து இதைச் சாய்த்து விடுவானே! உடம்புக்குள் உயிர் இருக்கிறது. உடம்பை விட்டு எளிதில் உயிர் வெளிப்படுவதற்கு விரும்ப வில்லை. ஆயினும் வெளிப்படாமல் இருப்பதற்குரிய ஆற்றல் அதற்குக் கிடையாதே! உயிரை வெளியே விடாது கட்டி வைத் திருக்கும் ஆற்றல் உடம்புக்குத்தான் உண்டா? தன்னைப் பாது காத்துக் கொள்கிற தன்மை இல்லாத உயிருக்குப் பாதுகாப்பாக நாம் உடம்பை வளர்த்துக் கொண்டிருக்கிறோம். உயிர் போன பிறகு இந்த உடம்பினால் என்ன பயன்?

பிராணிகளுடைய மாமிசத்தைச் சாப்பிடுகிறவர்கள் இருக் கிறார்கள். ஆனால் மனித உடம்பின் மாமிசத்தை யாரும் சாப்பிடு வதில்லை.

''புலையனும் விரும்பாதஇப் புன்புலால் யாக்கை''

என்று சொல்வர். மனிதனுடைய ஊன் யாருக்கும் ஊணாகிறது இல்லை. அதனால்தான் இறந்துவிட்டால் இந்த உடம்பை எரித்து விடுகிறார்கள். எரித்துவிட்ட பிறகு ஒரு பிடி சாம்பருங்கூட இந்த உடம்பில் இருந்து கிடைப்பது இல்லை.

ஒரு பிடி சாம்பரும் காணாது மாய உடம்பிதுவே.

'நம்முடைய உடம்புதான் ஒரு பிடி சாம்பரும் காணாது; பெரிய அரசர்களுடைய உடம்பானால் அதிக சுகபோக உணவு களை உண்டு வளர்த்த உடம்பாகையால் மலை அளவு சாம்பல் கிடைக்கும்' என்று நினைக்கலாமா?

## பட்டினத்தார் உபதேசம்

"முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும் முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி னம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேஅறி வாரில்லையே"

என்று பட்டினத்தார் சொல்கிறார்.

பட்டினத்தார் பெரிய மாளிகையில் வாழ்ந்தவர். நிறையச் செல்வத்தைப் பார்த்தவர். நாள்தோறும் பல வகையான பண்டங் களை உண்டு வளர்த்து வரும் இந்த உடம்பு கடைசியில் என்ன ஆகிறது என்பதை ஆராய்ச்சி செய்ய வேண்டுவோர் போல மயானக் கரைக்குச் சென்றார். முதல்நாள் எரிந்த பிணம் மறுநாள் பிடி சம்பல்கூட இல்லாது போனதைக் கண்டார். 'சாதாரண மக்களுடைய பிணத்துக்குத்தான் ஒரு பிடி சாம்பல்கூட வராது போலிருக்கிறது' என்று நினைத்தார். அடுத்த நாள் பெரிய அரசன் ஒருவன் இறந்து போனான். அவன் உடம்பைக் கொண்டுவந்து எரித்துவிட்டுப் போனார்கள். அந்த அரசனுடைய உடம்பும் எரிந்து கடைசியில் ஒரு பிடி சாம்பல்கூட இல்லாதுதான் போயிற்று. அதுவும் மயான மண்ணோடு மண்ணாகக் கலந்துவிட்டது. இதைக் கண்டார். பின்புதான்,

"முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும் முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவதும் கண்டு"

என்று அவர் சொல்கிறார் என்று நினைக்கத் தோன்றுகிறது.

"இதைக் கண்டும் மக்களுக்கு ஞானம் உண்டாகிறதா? மேலும் இவ்வுலக வாழ்க்கையின் சுகத்தை அதிகப்படுத்திக் கொள்ள நினைக்கிறார்களே தவிரப் பொன்னம்பலத்தில் நடமிடுகிற பெருமானுடைய குஞ்சித பாதத்தைச் சார்ந்து நாமும் உய்வு பெறவேண்டுமென்று நினைக்கிறவர்கள் யாரும் இல்லையே!" என்று வருந்தி ஏங்குகிறார் பட்டினத்துப் பிள்ளையார்.

இந்த உடம்பு முடிவில் அழிந்துபோய் ஒரு பிடி சாம்பரும் இல்லாமல், மண்ணோடு மண்ணாகப் போகும் என்பதை நம்மில் பலர் உணராதவர்கள் அல்ல. "இந்த அறிவு இருப்பதனால் இது வாழும்போதே ஒரு காரியம் செய்யலாம் அல்லவா?" என்று சொல்ல வருகிறார் அருணகிரியார்.

## ஈட்டுதலும் இடுதலும்

"இறைவனை நம்பி வாழ்ந்தால் சாப்பாடு கிடைக்குமா? வையத்தை மறந்து வானத்தைப் பார்த்தால் வாழ முடியுமா?" என்று சில அறிவாளிகள் பேசுவதுண்டு. "இறைவன் திருவருளைப் பெற வேண்டுமானால் நீ சாப்பிடாதே; சம்பதிக்காதே; சாப்பிடாமல் பட்டினி கிட" என்று யாரும் சொல்வதில்லை.

மிகவும் சாதாரண நிலையில் இருக்கும் நமக்கு உபதேசம் செய்ய வருகிற அருணகிரியார், "நன்றாக இருமடங்கு சம்பாதி; சாப்பிட்டுச் சுகமாக வாழ்ந்து கொண்டிரு" என்றுதான் இந்தப் பாட்டில் உபதேசம் செய்கிறார். ஆனால், சம்பாதிப்பது, சாப்பிடுவது ஆகிய இரண்டுக்கும் நடுவில் ஒன்று இருக்க வேண்டும். ஆண்டவனை மறந்தவர்கள், சம்பாதிப்பதற்கு முயற்சி செய்யும்போது பொருள் ஈட்ட வேண்டும் என்கிற வெறியில் தப்பான வழியில் சென்று ஈட்டுவார்கள். பிறகு, 'ஈட்டிய பொருளைப் பிறர் கண்டுவிட்டால் என்ன செய்வது? திருடன் கொண்டுபோய் விட்டால் என்ன பண்ணுவது?' என்ற அச்சத்தினால் எப்போதும் செத்துக் கொண்டிருப்பார்கள். ஆண்டவனுடைய நினைப்பு உடையவர்கள் அப்படிப்பட்ட மற நெறியில், தப்பான வழியில், பொருளை ஈட்டமாட்டார்கள். ஈட்டிய பொருளைப் பாதுகாக்க வேண்டுமே என்று அஞ்சவும் மாட்டார்கள்.

ஆகவே, "நீங்கள் ஒரு பங்குக்கு இரண்டு பங்காக இறைவனை நினைந்து பொருளை ஈட்டுங்கள்; இறைவனை நினைந்து

சாப்பிடுங்கள்; இந்த இரண்டுக்கும் இடையில் இறைவனை நினைந்து கொடுக்கவும் கொடுங்கள். நன்றாக இறைவனை நினைந்து ஈட்டி, இறைவனை நினைந்து கொடுத்து, இறைவனை நினைந்து சாப்பிட்டு, இறைவனை நினைந்து சுகமாக அமைதி யாக இருங்கள்'' என்று அருணகிரியார் சொல்கிறார். நாம் சுகமாக வும், அமைதியாகவும் சம்பாதித்துச் சாப்பிட்டு இருக்கத்தானே விரும்பிகிறோம்?

## இறைவன் நினைவினால் வரும் நலம்

இறைவனை நினைந்து வாழாதவர்களுக்கு வாழ்வில் துக்கம், அவநம்பிக்கை, சோர்வு எல்லாம் உண்டாகின்றன. ஒருமூட்டை அரிசி வாங்கிப் போடுகிறோம். 'உடம்பு நிலையாமையை உணராது வாங்கிப்போட்டேன்' என்று நினைக்கலாமா? நாம் உயிரோடு இருந்தால் சாப்பிடுகிறோம்; இல்லாவிட்டால் இன் னொருவன் சாப்பிடுகிறான். இந்த நம்பிக்கையாகிய அடிப் படையில்தான் வாழ்வு வளம்பெறுகிறது.

''உடம்புக்குள் நாமாகவா உயிரை வைத்துக் கொண்டோம்? உடம்புக்குள் உயிர் தங்கும்படியாகச் செய்தவன் ஆண்டவன். உண்ண வாயும், கேட்கக் காதும், சுவைக்க நாவும் தந்தவன் அவன். தொழில் செய்யக் கை கொடுத்திருக்கிறான். கண்களுக் குள் விழி கொடுத்து அவற்றை இமையாக இருந்து காப்பாற்று கிறான். மூச்சுக் காற்றாக இருந்து காப்பாற்றுகிறான். தங்குவதற்கு மண்ணாக, பருக நீராக, சுவாசிக்கக் காற்றாக இருப்பவன் அவன் தான். தொழில் செய்ய அறிவாக இருப்பவனும் அவனே. என்னுடைய முயற்சியால் நான் வாழவில்லை. அவன் அருளால் அல்லவா வாழ்கிறேன்?'' என்கிற நினைப்பு நமக்கு வருமானால் வாழ்வில் தோன்றும் சோர்வும், அவநம்பிக்கையும் போய் விடும். நம்பிக்கையும், புத்துணர்ச்சியும் உண்டாகும். துன்பம் வந்தாலும், இன்பம் வந்தாலும் கலக்கமில்லா உள்ள உறுதியோடு நிலைத்து நிற்கும் ஆற்றல் உண்டாகும். எந்தத் துன்பமானாலும் சரி, இன்பமானாலும் சரி, கவலை இல்லாமல் இருக்கும். கிழக்குக் கும் மேற்குக்கும் வித்தியாசம் இராது. கறுப்புக்கும் சிவப்புக்கும் வேறுபாடு இராது. கசப்புக்கும் இனிப்புக்கும் மனம் ஒன்றாகவே இருக்கும். இந்தச் சமநிலை உள்ளம் படைத்துவிட்டவனுக்குத்

துன்பம் வந்தால் என்ன? துன்பம், அவனிடத்திலே துன்பத்தை விளைவிப்பதற்குப் பதிலாகத் தானே துன்பத்தை விளைவித்துக் கொள்ளும்.

"இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்
கிடும்பை படாஅ தவர்"

என்று வள்ளுவர் சொல்கிறார். தமக்குத் துன்பம் வந்து விடுமே என்று துன்பத்தைக் கண்டு அஞ்சாதவர்கள் அத்துன்பத்திற்குத் தான் துன்பம் விளைவிப்பர். இந்த நிலை, 'இறைவன் அருளால் நாம் வாழ்கிறோம்; தொழில் படுகிறோம்; சம்பாதிக்கிறோம்; கொடுக்கிறோம்; சம்பாதிப்பதைச் சாப்பிடுகிறோம்' என்று நினைப்பவர்களுக்கு உண்டாகும்.

இது நமக்கு வரவேண்டும் என்பதற்காக மிக எளிய வழியை நம்முடைய குருநாதர் இப்பாட்டில் உபதேசிக்கிறார்.

"பொருபிடி யும்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல! சண்முகவா!" எனச் சாற்றி, நித்தம்
இருபிடி சோறு கொண்டு இட்டு உண்டு இரும்.

எப்படி ஆண்டவனை நினைக்க வேண்டும்? வள்ளி நாயகனாக, ஆறுமுகப் பெருமானாக நினைந்து புகழ வேண்டும். சாற்றி என்ன செய்ய வேண்டும்?

**இரு பிடி சோறு கொண்டு, இட்டு உண்டு இரும்.**

சோறு என்றால் உண்ணுகிற சோற்றையும் கொள்ளலாம். நுகர்ச்சிக்குரிய எந்தப் பொருளாக இருந்தாலும் அதையும் குறிப்பாகக் கொள்ளலாம். "நீங்கள் கொஞ்சமாகக் சம்பாதிக்க வேண்டாம். உங்கள் அறிவை, உங்கள் ஆற்றலை உபயோகித்து இரண்டுபிடி சோறு சம்பாதியுங்கள்; இரண்டு மடங்கு பொருள்களை ஈட்டுங்கள். 'பொருபிடி காவல சண்முகவா!' எனச் சாற்றி நித்தம் இரண்டு மடங்கு சம்பாதியுங்கள். அதை என்ன பண்ண வேண்டும் தெரியுமா? பொருபிடி காவல, சண்முகவா என இறைவனை நினைந்து ஒரு பிடி சோற்றைப் பிறருக்கு இட்டு, அவனை வாழ்த்தியே ஒரு பிடி சோற்றை உண்ணுங்கள். சம்பாதிப்பது இருண்டு பிடி; ஒரு பிடி இட்டுவிட்டீர்கள்; ஒரு பிடி உண்டுவிட்டீர்கள். இனிக் கவலைப்பட எதுவும் இல்லை.

ஆதலால் பொருபிடி காவல சண்முகவா என்று சாற்றி இருங்கள்; அமைதியாக இருங்கள்'' என்று உபதேசம் செய்கிறார்.

சம்பாதிப்பது இரண்டு பிடி. இடுதல் ஒரு பிடி; உண்ணுதல் ஒரு பிடி. கடைசியில் ஒன்றும் இல்லாமையினால் அமைதியாக இருக்கும் நிலை விளைகிறது.

## தனக்கு மிஞ்சித் தான தர்மம்

''நீ சம்பாதிப்பதைப் பிறருக்குக் கொடுத்துவிடு. நீ சாப்பிடாதே'' என்று சொன்னால் உலகம் அந்த உபதேசத்தை ஏற்காது. ''தனக்கு மிஞ்சித் தான தர்மம்'' என்று வழங்குகிற பழ மொழியைச் சொல்லி எத்தனை பேர், ''எனக்குக் கண்டு மிஞ்சினால் அல்லவா ஐயா உனக்குக் கொடுக்க?'' என்று சொல்லிப் பிச்சைக்காரர்களை விரட்டுகிறார்கள்? ''தலைக்கு மிஞ்சிப் போய்விட்டான்'' என்றால், ''என்னைக் காட்டிலும் அவன் உயர்ந்துவிட்டான்'' என்று பொருள். தனக்கு மிஞ்சித் தான தர்மம் என்றால் தன்னைக் காட்டிலும் உயர்வாக இருப்பது தான தர்மம் என்று கொள்ள வேண்டும். ஒரு பிடிதான் இருக்கிறது. நமக்குப் பசிக்கிறது; அப்போது வேறு ஒருவன் வந்து கேட்கிறான் என்றால் அவனுக்கு அதைக் கொடுத்து விட வேண்டும். தன்னையும் மிஞ்சியது தர்மம். மதுரை மாநகரின் பெருமையைப் பற்றிச் சொல்ல வருகிற பரஞ்சோதி முனிவர்,

''தம்மை மாறியும் புரிவது தருமம்அந் நாடு''

என்று பேசுகிறார். மாறுதல் – விற்றல். தம்மை விலைக்கு விற்றா வது தர்மத்தைக் காப்பாற்றுகிறது அந்நாடு என்கிறார். தர்ம புத்திரர் அதைச் செய்தார். அரிச்சந்திரன் அதைச் செய்தான்.

நமக்கு இல்லாவிட்டாலும் அவனுக்கு இடவேண்டும் என்கிற நினைப்பு உடையாருக்கு மனம் தீய வழியில் செல்லாது. அந்த நிலைக்கு ஏற்ற மனப் பக்குவம் அடையாத நம்மைப் பார்த்து அருணகிரியார், ''சாப்பிட வேண்டாம், சம்பாதிக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. இறைவனை நினைந்து இரண்டு மடங்கு சம்பாதியுங்கள். ஒரு மடங்கு இடுங்கள். ஒரு மடங்கு சாப்பிடுங்கள். பிறகு செய்ய வேண்டியவற்றைச் செய்துவிட்டோம் என்ற அமைதியாக இருங்கள்'' என்று உபதேசம் செய்கிறார்.

தருபிடி காவல! சண்முகவா! எனச் சாற்றி நித்தம்
இருபிடி சோறு கொண்டு, இட்டு உண்டு இரும்.

## உண்ணும்போது இறைவன் நினைவு

நாம் எல்லாரும் சம்பாதிக்கிறோம்; சாப்பிடுகிறோம். ''நான் சம்பாதிக்கிறேன்; நான் சாப்பிடுகிறேன்'' என்கிற நினைவோடு இவற்றைச் செய்கிறோம். நம்முடைய பெரியவர்கள் உண்ணும் போது, ''கோவிந்தா, மகாதேவா, முருகா'' என்று ஒவ்வொரு கவளத்தையும் எடுத்துச் சாப்பிடுவார்கள். உண்ண வாயும், எடுத்துப் போடக் கையும், இலையில் அன்னமும் கொடுத்தவன் இறைவன் என்கிற நினைவோடு அப்படிச் செய்வார்கள் என்பது மட்டும் அன்று; மற்றொரு பயனும் உண்டு. உண்ணும் போது எந்த உணர்ச்சியோடு உண்ணுகிறோமோ அந்த உணர்ச்சி உண்ட சோற்றினால் மிகுதியாக விளைகிறது என்பர்.

குழந்தைக்குத் தாய் பால் கொடுக்கும்போது, வீரக் கதைகளை நினைந்து கொடுத்தால் வீர உணர்ச்சி பாலோடு சேர்ந்து குழந்தையிடத்திலே மிகுதியாக உண்டாகும் என்பார்கள். சாப்பிடும் போது காதில் எது விழுந்தாலும் அது நன்றாக மனத்தில் பதியும். இதை நம்முடைய சொந்த அநுபவத்தில் பார்க்கலாம். நம்மிட மிருந்து ஒன்றை வேண்டிப் பெறுவதற்கு, நம்முடைய மனையாட்டி மற்றச் சமயத்தில் சொல்லிப் பெறுவதைக் காட்டிலும், சாப்பிடும் போது சுவைமிக்க உணவுப் பொருள்களைப் படைத்து விட்டு, இனிமையான சொல்லாலே தனக்கு வேண்டியவற்றை மெள்ளச் சொல்லுகிறாள். உடனே ''அதெற்கென்ன? அதை வாங்கிக் கொள்'' என்று சொல்லி விடுகிறோம். இப்படி உண்ணுகிறபோது நினைக்கிற ஒன்று நிச்சயமாக வாழ்வில் பதிவை உண்டாகும். ஆகையால் நாம் சாப்பிடும் போது இறைவனை நினைந்து சாப்பிட வேண்டும். அப்படிச் சாப்பிட்டால் அந்தச் சோறு நம் உடம்பில் உறைக்கும் போது நிச்சயமாக உள்ளத்திலும் இறை வனுடைய நினைப்பு உறைக்கும்.

அப்பர் சுவாமிகள் இறைவனைப் பார்த்துச் சொல்கிறார். ''அப்பா, உன்னை நான் எவ்வாறு புகழ்வேன்! இவ்வுலகிலே எனக்கு இன்பத்தைத் தருகிறது பொன் என்றால் அந்தப் பொன் னாகவே நீ இருக்கிறாய்; இன்பத்தைக் கொடுப்பது மணி என்றால்

அந்த மணியாகவே நீ இருக்கிறாய்; இன்பத்தைத் தருகிற எல்லாப் பொருளாகவும் நீ இருப்பதோடு அவற்றை அநுபவிக்கும் போது போகமாகவும் நீ விளங்குகிறாய்! உன் பெருமையை நான் எவ்வாறு சொல்வேன்!'' என்கிறார்.

''பொன்னானாய் மணியானாய் போகமானாய்
பூமிமேற்புகழ்தக்க பொருளே யுன்னை
என்னானாய் என்னானாய் என்னின் அல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்து கேனே?''

இப்படி அப்பர் சுவாமிகளைப்போல நாமும் சாப்பிடும் போதெல்லாம் இறைவனை நினைக்க வேண்டாமா?

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு''

என்று வள்ளுவர் பேசுகிறார். செய்த நன்றியைக் கொல்லாமல் இருக்க வேண்டுமானால் பொருளை ஈட்டும்போதும் பொருளை ஈட்டுவதற்குரிய கருவி கரணங்களைக் குறைவில்லாமல் கொடுத்த இறைவனை நினைக்க வேண்டும். ஈட்டிய பொருளைப் பிறருக்கு இட்டு உண்ணுகிறபோதும் இறைவனை நினைக்க வேண்டும்.

## *'பூசை பண்ணுகிறார்'*

பழைய காலத்தில் யாராவது ஒருவர் வீட்டுக்குச் சென்றால் அவர் சாப்பிட்டுக் கொண்டிருப்பார். அப்போது அவருடைய வீட்டுக்காரி, ''ஐயா பூசை பண்ணுகிறார்; கொஞ்சம் உட்கார்ந்து இருங்கள்; வருவார்'' என்று சொல்லிப் போவாள். ''சாப்பிடு கிறார்; பூசை பண்ணுவதாவது?'' என்று நமக்குத் தோன்றலாம். சாப்பிடுவதாவது என்ன? வெளியே இருக்கிற இறைவனுக்கு மலராலும் இலையாலும் பூசை பண்ணிவிட்டு; இறைவன் நாமத்தைச் சொல்லிக் கொண்டே அவர்கள் ஒவ்வொரு பிடியாகச் சாப்பிடுகிறார்கள். வெளியில் இருக்கும் இறைவன் உள்ளேயும் இல்லையா? வெளியில் உள்ள இறைவனுக்கு மலரினால் அர்ச்சனை பண்ணுவது போல, உள்ளே இருக்கிற இறைவனுக்கு அன்னத்தினால் அர்ச்சனை செய்கிற செயலாக அது அமைவதால், சாப்பிடும் போதுகூடப் பூசை பண்ணுகிறார் என்று சொல்லும் வழக்கம் ஏற்பட்டது. இப்படிப் பெரியவர்கள் சாப்பிட்டாலும்,

மூச்சுவிட்டாலும், நடந்தாலும், ஓடினாலும் இறைவனையே நினைத்தார்கள்.

"செப்புவதெல் லாஞ்செபம்நான் சிந்திப்ப தெல்லாம்நின்
ஒப்பில் தியானம்என ஓர்ந்தேன் பராபரமே!"

"நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே!"

என்று பேசுவார் தாயுமானவர். அவரைப் போல எந்தச் செயலைச் செய்தாலும் இறைவனை நினைந்தே செய்கிற பெருமக்கள் பலர் இருந்தார்கள் நம் நாட்டில். இப்போது சம்பாதிப்பதற்கும், சாப்பிடுவதற்கும் மாத்திரம் தெரிந்து கொண்டிருக்கிற நம்மைப் பார்த்து, "சம்பாதிக்காதே, சாப்பிடாதே" என்று சொல்லாமல், "நன்றாகச் சம்பாதியுங்கள்; இரு மடங்கு சம்பாதியுங்கள்; இறைவனை நினைந்து இரண்டு மடங்கு சம்பாதியுங்கள்; இறைவனை நினைந்து ஒரு மடங்கு கொடுத்து விடுங்கள்; இன்னொரு மடங்கை இறைவனை நினைந்து நீங்கள் உண்ணுங்கள். பின் அவனை நினைந்து சுகமாக இருங்கள்" என்று உபதேசம் செய்கிறார் அருணகிரியார்.

தருபிடி காவல! சண்முகவா! எனச் சாற்றி நித்தம்
இருபிடி சோறு கொண்டு இட்டு உண்டு இரும்.

சாற்றிச் சோறு கொண்டு, சாற்றி இட்டு, சாற்றி உண்டு, சாற்றி இரும் என்று ஒவ்வொன்றோடும் கூட்டவேண்டும். "நாம் சம்பாதிக்கிறோம்; நாம் சாப்பிட்டுவிட்டு மீதியைத்தானே யாருக்காவது கொடுக்க வேண்டும். அதில் சரி பாதியைப் பிறருக்குக் கொடுத்து விட்டு எஞ்சியதைத்தான் சாப்பிட வேண்டும். 'இட்டு' என்று சொல்லிவிட்டுப் பின்புதான் 'உண்டு' என்கிறார். ஒளவைப்பாட்டியும். "ஐயம் இட்டுண்" என்று இடுதலை உண்ணுவதற்கு முன்னே வைத்துச் சொன்னாள்.

## கொடுக்கும்போது இறைவன் நினைவு

"சம்பாதிக்கும்போது இறைவனை நினைந்து சம்பாதிக்கிறேன். சாப்பிடும்போது இறைவனை நினைந்து சாப்பிடுகிறேன். கொடுக்கும்போதும் கூடவா இறைவனை நினைக்க வேண்டும்?" என்றால் கொடுக்கிறபோதும், "தருபிடி காவல சண்முகவா"

என்று நினைந்து கொடுக்க வேண்டும். இல்லையெனில் கொடுப்பதாகிய செயலை அடுத்தே நமக்கு ஆணவம் விளைந்துவிடும்; 'நான் கொடுக்கிறேன்' என்ற நினைவு இன்றி, 'அவன் கொடுக்கிறான்; எல்லாம் அவனுடைய பொருள். அவன் என்னிடம் கொடுத்து வைத்தான்; இப்போது வாங்கிப் போக ஆள் அனுப்பியிருக்கிறான். அவனுடைய பொருளை அவன் அனுப்பிய ஆளிடம் கொடுக்கும் கருவி நாம்' என்று நினைந்து கொடுக்க வேண்டும்.

முன்பு ஓர் இடத்திலேயும்,

> ''வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி, வறிஞர்க்கு என்றும்
> நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள்''

என்ற அலங்காரத்தில் வந்ததைப் பார்த்தோம். நான் என்கிற அகங் காரம் மாற, 'அவன் கொடுக்கிறான்' என்கிற நினைவும், 'என்னுடைய பொருளைக் கொடுக்கிறேன்' என்கிற மமகாரம் சிதைவு பெற, 'அவனுடைய பொருளைக் கொடுக்கிறேன்' என்கிற நினை வும் இருக்க வேண்டும். அதற்காகவே, ''வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்திக் கொடுக்க வேண்டும்'' என்று அங்கேயும் சொன்னார்.

சிலர் கோயிலுக்குச் சென்றால் நாமம் நட்சத்திரம் எல்லாம் சொல்லி ஆண்டவனுக்குத் தம் பேரில் அருச்சனை செய்யச் சொல்வார்கள். வேறு சிலர், ''ஆண்டவன் பெயருக்கே அர்ச்சனை செய்யுங்கள்'' என்று குருக்களிடம் சொல்வார்கள். இதற்குக் காரணம் என்ன? 'இறைவனை வழிபடுவதே நாம் நம்மைப் பற்றிய நினைவை மறக்கத்தானே? அப்படியிருக்க ஆலயத்திலும் நம்முடைய நினைவுதானா முந்தவேண்டும்? எல்லாம் இறைவன் செயல்தான். இறைவன் பெயருக்கே பண்ணட்டும்' என்கிற நினைப்பே காரணம்.

**அறம் செய்வதனால் மனிதனுக்கு ஏற்படுவது புகழ்.**

> ''ஈவார்மேல் நிற்கும் புகழ்''

என்று வள்ளுவர் சொல்கிறார். உலகத்தில் எல்லாப் புகழையும் விடக் கொடுப்பார் மேல் சாருகிற புகழ்தான் சிறந்த புகழ். இந்தப் புகழ் அகங்காரத்தை விளைவிப்பதற்கு வித்தாகப் போய்விட்டால் ஆன்ம இன்பம் கிடையாது.

## மாலையைக் கழற்றி வைத்தல்

நம்மைப் பேச அழைக்கிறார்கள். நாம் பேசுகிறோம். நம்மைப் பாராட்டி மாலை இடுவது கூட்டத்தை அமைத்த நிர்வாகிகளுடைய கடமையாக, தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளும் செயலாக இருக்கிறது. 'ஆகா! நம்மைப் பாராட்டி மாலை சூட்டினார்கள்' என்று நாம் நினைத்து அந்த மாலையை அப்படி வைத்துக் கொண்டா இருக்கிறோம்? உடனே கழற்றிப் பக்கத்தில் வைத்து விடுகிறோம். இதைப்பற்றி ரசமான நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வருகிறது.

திருப்புகழ் மணி அவர்கள் ஒரு கூட்டத்தில் தலைமை வகித்தார். பேச வந்த ஒருவர் தமக்கு மாலை போட்டவுடன் கழற்றி வைக்கவில்லை; அதோடு அந்த வழக்கத்தைக் கண்டிக்கும் முறையில் பேசினார். ''நல்ல மாலையைப் பாராட்டிப் போடுகிறார்கள். அந்த மாலையை உடனே எதற்காகக் கழற்ற வேண்டும்? அது அவமதிப்பு ஆகாதா?'' என்று சொன்னார். அதற்குத் திருப்புகழ் மணி பதில் கொடுத்தார். ''அவர்கள் தங்களுடைய மரியாதையைக் காட்ட மாலை போட்டார்கள். அவர்கள் மரியாதையை நான் என் தலையை வளைத்து ஏற்றுக் கொண்டேன். அந்த மரியாதைக்கு உண்மையில் தகுதி உடையவன் நான் அல்ல என்கிற நினைவு வந்தது. உடனே கழற்றி வைத்து விட்டேன்'' என்றார்கள்.

## புகழும் செருக்கும்

தர்மம் செய்யும்போது மற்றவர்கள் தர்மம் செய்வானைப் புகழ்வார்கள். அது அவர்களுடைய நன்றியுணர்ச்சியைக் காட்டுகிறது. ஆனால் அந்தப் புகழை அப்படியே நாம் ஏற்றுக் கொண்டு செருக்கினால் தலைதருக்கி அலையலாமா? உடனே, ''எம் பெருமானே! இந்தப் புகழ் எல்லாம் உன்னுடையது அல்லவா? பிறருக்குக் கொடுக்க என்னிடம் பொருளை வைத்தாய்; கொடுத்த பொருளை வாங்கிப் போகத் தக்காரையும் அனுப்பினாய். அவர்கள் என்னைப் புகழ்கிறார்கள். உன் ஆணைக்கு நான் கருவியாகத் தான் இருந்தேன் என்பது எனக்கு அல்லவா தெரியும்? இந்தப் புகழை நீ ஏற்றுக் கொள் அப்பா'' என்று இறைவனிடம் தள்ளி

விட்டால் புகழ் வருவதனாலே அகங்காரம் விளையாது. இவற்றை யெல்லாம் தம்முடைய வாழ்க்கை அநுபவத்தில் கண்டிருக்க மாட்டாரா அருணகிரியார்? அதனால்தான் நம்மிடம் செருக்கு வராமல் இருக்க, ''இறைவனைச் சம்பாதிக்கிற போதும் நினை யுங்கள்; கொடுக்கிறபோதும் நினையுங்கள்'' என்று உபதேசம் செய்கிறார்.

## மூன்றும் நான்கும்

நமக்கு மூன்று நிலை தெரியும். சம்பாதிப்பது, சாப்பிடுவது, சாப்பிட்டுவிட்டு, ''ஐயோ செலவாகிவிட்டதே! நாளைக்கு என்ன செய்வது?'' என்று பின்பு கவலைப்பட்டு உழல்வது ஆக இருக் கிறோம். நம்மைப் பார்த்து அருணகிரியார் நான்கு நிலைகளை விளக்குகிறார். ''சம்பாதியுங்கள்; பிறருக்கு கொடுங்கள்; நீங்களும் சாப்பிடுங்கள்; அமைதியாக இருங்கள்; இந்த நான்கு காரியங் களையும் **இறைவனை நினைந்தே செய்து கொண்டிருங்கள்**'' என்று வயிறு படைத்தவர்களுக்கு வழி காட்டுகிறார்.

கையில் பணம் இல்லாதபோது நமக்கு அமைதி வருவது இல்லை. இறைவனைப் பற்றிய நினைப்பும் வருவது இல்லை. பிறரிடம் கோபந்தான் விளைகிறது. ''இறைவன் அருளாலே சம்பாதித்தோம்; பிறருக்கும் கொடுத்தோம்; நாமும் சாப்பிட் டோம்; இப்போது ஒன்றும் இல்லாவிட்டால் என்ன? மறுபடியும் சம்பாதிக்கலாம். முன்பு பொருளைக் கொடுத்த இறைவனே பின்பும் பொருளைக் கொடுக்காமல் போய்விடுவானா?'' என்கிற நம்பிக்கை உண் [illegible] யாது. சம்பாதித்துப் பிறருக்குக் கெ [illegible] ற்கு ஒன்றும் இல்லாத நில [illegible] றைவனை நினைந்தால் அப்போதுதான் [illegible] தியான வாழ்வு இந்த நான்கு நிலையில் அடங்கி [illegible] து. அதற்கு இறைவன் நினைவு துணையாக இருக்கிறது.

எந்த இறைவனுடைய நினை [illegible] ண்டும்? அருணகிரியார் தம்முடைய சொந்த அநுபவத்தைச் சொல்கிறார். நாம் ஓரிடத் திற்குப் போகிறோம்; அங்கு உள்ளவர்கள் நம்மைக் கோயிலுக்கு அழைத்துப்போனால் எந்தக் கோயிலுக்கு அழைத்துப் போவார்கள்? அவர்களுடைய பேட்டையில் உள்ள கோயிலுக்கு, அவர்கள்

அடிக்கடி போய் வருகிற கோயிலுக்கு நம்மை அழைத்துப் போவார்கள். அதனால் மற்ற இடங்களில் கோயில் இல்லை என்பது அன்று. அருணகிரிநாதர் முருகப் பெருமானின் திருவருளி னால் எல்லா விதமான இன்பங்களையும் பெற்று, பிரபஞ்சச் சேற்றைக் கழித்து உய்வு பெற்றவர். ஆதலால் இங்கே முருகப் பெருமானை நினைக்கச் சொல்கிறார். அதனால் மற்றத் தெய்வங் களை நினைக்க கூடாது என்பது பொருள் அல்ல. தெய்வத்தை நம்பி வாழ வேண்டும் என்ற அடிப்படையான கருத்தை முருகன் மேல் சார்த்திச் சொல்கிறார்.

## காட்டு நிகழ்ச்சி

முருகனை நினைக்கச் சொல்லும் போது அவனை வள்ளி நாயகனாகவும், ஆறுமுகப் பெருமானாகவும் நமக்குக் காட்டு கிறார். வள்ளி கல்யாணத்தைக் காட்டிலே நிகழ்ந்த காட்சியாகச் சித்தரிக்கிறார்.

பொரு பிடியும் களிறும் விளையாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல!

வள்ளிநாயகி வாழ்ந்துகொண்டிருந்த இடம் காடு. அங்கே யானைகள் இருந்தன. தனக்கு முன்பே தேவ யானை ஒரு மனை யாட்டியாக வாய்த்தும், எம்பெருமான் காட்டிலுள்ள வள்ளி என்னும் பெண் யானையை தேடிச் சென்றான். வள்ளிநாயகி திருமால் அம்சமான முனிவருக்கும், திருமகளின் அம்சமான மானுக்கும் பிறந்தவள் என்பதை முன்பே சொல்லி இருக்கிறேன். காட்டில் லட்சுமி அம்சமுடைய மான், குழந்தையை வள்ளிக் கிழங்குக் கொடி யருகில் ஈன்றுவிட்டுப் போயிற்று; அதனால் அவளுக்கு வள்ளி என்ற பெயர் அமைந்தது. மான் வயிற்றில் பிறந்த வள்ளி காட்டு யானைகளோடு தானும் ஒரு பெண் யானையாக மிடுக்கோடும் செருக்கோடும் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

## பொரு பிடியும் விளையாடும் களிறும்

அந்தக் காட்டில் நடந்த அழகான காட்சியை அருணகிரியார் தம்முடைய கற்பனையால் படம் பிடித்துக் காட்டுகிறார். புனத்தில் திரிந்து வாழ்ந்த சிறு மான் ஒன்று ஈன்ற பெண்மானா கிய வள்ளி அக்காட்டில் ஒருபிடிபோல், பெண் யானையைப்

போலச் சுற்றிக் கொண்டிருந்தாள். ஆண் யானைபோல முருகன் வந்தான்; பெண் யானையைப் போல் இருந்தவள், ஆண் யானையைப் போல வந்தவனோடு சேர்ந்து வாழ வேண்டாமா? ''என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்'' என்று முருகன் கேட்டான். அவள் சண்டை போட்டாள்; சீறி விழுந்தாள். முருகன் அதைப் பொருட்படுத்தாமல் குழைந்து குழைந்து கெஞ்சினான். ''போடா, மூடா வேடா!'' எனச் சினந்து அவள் சண்டை போட்டதை எல்லாம் அவன் விளையாட்டாக எண்ணி மகிழ்ந்தான். 'அவள் பொருகிறாளே' என்று அவனும் அவளோடு பொரவில்லை. அதை ஒரு விளையாட்டாக நினைந்து, அவளைக் கெஞ்சிக் கெஞ்சிச் சுற்றிவந்தான்; அப்புறம் வசப்பட்டுவிட்டாள். ஆண்டவன் அவளை மணந்து கொண்டான். இது அந்தக் காட்டுக்கே சம்பிரதாயம்போல் இருக்கிறது. எப்படி? அது,

பொரு பிடியும் களிறும் விளையாடும் புனம்.

பிடி என்றால் பெண் யானை. பிடி என்ன செய்கிறது, பொரு கிறது; சண்டை போடுகிறது; மோதுகிறது. பெண்யானை தன் னோடு மோதிச் சண்டை போடும்போது களிறு என்ன செய்கிறது? அது சண்டை போட்டால் இதுவும் சண்டை போடத்தானே வேண்டும்? ஆனால் ஆண் யானை அதை விளையாட்டாக நினைத்துத் திரும்பப் பொராமல் இருக்கிறது.

குழந்தையைத் தூக்கி வைத்துக் கொள்ளுகிறோம். அது உதைக்கிறது; உடனே நாமும் அதை உதைக்கிறோமா? அது நம் முகத்தில் 'தூ தூ' என்று துப்புகிறது. திருப்பி நாமும் அதன் முகத் தில் துப்புகிறோமா? இல்லையே! அது நமக்கு விளையாட்டாக இருக்கிறது. உதைக்கும் காலை முத்தமிடுகிறோம். அது துப்பிய எச்சிலைத் துடைத்துக் கொண்டே சிரித்து அதனை முத்தமிடுகிறோம்.

இப்படி அந்தக் காட்டில் ஒரு பக்கத்தில் மான் வயிற்றில் பிறந்த வள்ளியாகிய பிடி, முருகப் பெருமானாகிய களிற்றைப் பொருகிறது. சினத்தால் சொற்களை அள்ளி வீசிச் சண்டை போடுகிறது. அதை அவன் இன்பமாக எண்ணி, அவளைச் கோபித்துக் கொள்ளாமல், ''உன்னுடைய கோபச் சொற்களே இனிமையாக இருக்கின்றனவே! இன்னும் கொஞ்சம் வைய மாட்டாயா?'' என்று விளையாடுகிறான்.

மற்றொரு பக்கத்தில் பெண் யானை ஒன்று ஆண் யானையை மோதுகிறது; பொருகிறது. அந்த ஆண் யானை அதை இன்பமாக எண்ணி விளையாடுகிறது; "சீ, சீ! ஆண் யானைக்கு வீரம் இல்லை போலிருக்கிறது! ஆண் யானையைப் போல வந்தவனுக்குங் கூடப் பெண் யானையைப் போலப் பொருகிற வேடிச்சியிடம் பயமா? இவனுக்கு வீரம் இல்லை" என்று சொல்லலாமா? இப்படிப் பொருவது, சண்டை போடுவது, விளையாட்டு வகையைச் சார்ந்தது; பார்ப்பதற்கு என்னவோ பிடி பொருவ தாகத் தோன்றினாலும் அது ஊடலின் விளைவு.

## தோற்றவர் வெல்லுதல்

உலகத்தில் வாழ்கிற நம்முடைய குடும்பங்களில் இந்தச் சண்டை நாடகங்கள் எத்தனை நடக்கின்றன! அலுவலகத்தி லிருந்து கொஞ்ச நேரம் கழித்து வருகிறார் வீட்டுக்காரர். அவ்வளவுதான்! அம்மா காளியாகக் காட்சி அளிக்கிறாள். உள்ளே நுழையும் போதே குழந்தையிடம் தம்மைப் பற்றிக் காரசாரமாகத் தாக்கிப் பேசுவது கேட்கிறது. "போடா, இந்தக் காபியைக் கொண்டு போய் உன் அப்பாவிடம் கொடு" என்று தான் வராம லேயே பிள்ளையை அனுப்புகிறாள். பிள்ளையாண்டான் என்ன நினைக்கக்கூடும்? 'அப்பா பயங்கொள்ளி போலிருக்கிறது! இத்தனை பேசுகிறாள் அம்மா; இவருக்கு ரோசம் இருந்தால் இதைப் பொறுத்துக் கொண்டு சும்மா இருப்பாரா?' என்று நினைக்கலாம்.

எவனொருவன் அந்தக் கோபத்தையும் சண்டையையும் உண்மையாக நினைத்துத் தன் மனையாட்டியிடம் தானும் கோபித்துச் சண்டைக்குப் போய்விடுகிறானோ அவன் காதலின்பத்தை இழந்துவிடுகிறான். வள்ளுவர் சொல்கிறார்;

"ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும்

'உண்மைக் காதல் உடைய பெண்கள் கோபமாக எதிர்த்து ஊடும் போது அவர்களை எதிர்த்துத் தாமும் சண்டைக்குப் போகாமல் அவர்களை எதிர்க்க ஆற்றாதவரைப் போலத் தாழ்ந்து போகிற வர்கள், அந்தச் சமயத்தில் தோற்றவர்களைப் போல இருந்தாலும் அவர்களே வெற்றியை அடைவார்கள்' என்கிறார் வள்ளுவர். வெற்றி எப்போது தெரிகிறது?

"அது மன்னும்
கூடலில் காணப்படும்"

என்று சொல்லுகிறார்.

முருகப் பெருமான் எல்லோருக்குமே எல்லாவற்றையும் சொல்லித் தருகிறவன். களவு கற்பு என்பவற்றைத் தன் வாழ்விலேயே காட்டி நாடகம் ஆடினவன். வைதாரையும் வாழ வைக்கின்ற பெருமானுக்கு இந்த இரகசியம் சொல்லித்தரவா வேண்டும்? அவன் வள்ளிநாயகி பொருவதை விளையாட்டாக எண்ணி மகிழ்ந்தான். காட்டிலே உள்ள யானைகளுக்குங்கூட இது தெரியுமே! பிடி பொருகிறது; களிறு திரும்ப அதோடு மோதாமல் விளையாடுகிறது. பொருகிற பிடியோடு களிறு விளையாடும் புனம் அது. இந்தக் காட்டில் மான் வயிற்றிலே பிறந்த வள்ளி ஒரு பெண் யானையைப் போல உலாவிக் கொண்டிருந்தாள். ஆண் யானையைப் போல வந்த முருகன் கண்டையிலே தோற்று, அதனாலேயே வென்று அவளுடைய காதலன் ஆனான். முதலிலே சண்டைபோல ஆரம்பித்துப் பின்னர் விளையாட்டாக, இன்பமாக முடிகிறது அந்தக் கதை.

## போராட்டத்தில் இன்பம் காணுதல்

மனிதர்களுடைய வாழ்க்கையே ஒரு போராட்டந்தானே? உத்தியோகம் தேடுவது ஒரு போராட்டம். சம்பாதிப்பது ஒரு போராட்டம். குடும்பம் நடத்துவது ஒரு போராட்டம். அன்றாடம் சாப்பிடுவதே ஒரு போராட்டம். இந்தப் போராட்டங்களை எல்லாம் எவனொருவன் விளையாட்டாகக் கருதுகிறானோ அவனுக்கு அவைகளே இன்பமாக இருக்கும். இதை அந்தப் புனத்தில் இருக்கும் களிறு சொல்லித் தருகிறது.

## சண்முகன்

வள்ளி நாயகனைக் கண்டுகொள்ள ஏதாவது அடையாளம் உண்டா? அவன் ஆறுமுகப் பெருமான்; சண்முகன். நமக்கு ஆறுதல் அளிக்கும் அவனுடைய ஆறுமுகங்களைக் கொண்டே அவனை அடையாளம் கண்டு கொள்ளலாம்.

சண்முகவா!

என்று சொல்லுங்கள் என்கிறார்.

பொரு பிடியும் களிறும் விளையாடும் புனச் சிறுமான்
தருபிடி காவல! சண்முகவா! எனச் சாற்றி நித்தம்
இருபிடி சோறு கொண்டு இட்டு உண்டு இரும்.

*இவ்வாறு ஒவ்வொரு நாளும் கழியுமானால் வாழ்வு முழுவதும் இன்பமயமாகி விடும். நாள் பல சேர்ந்து மாதம் ஆகின்றன; மாதங்கள் ஆண்டு ஆகின்றன; ஆண்டுகள் வாழ்வு ஆகின்றன.*

## *உபதேசம்*

*இறைவன் நினைப்போடு ஒவ்வொரு பிடி சோறும் உள்ளே போகும்போது உள்ளம் வளர்கிறது. உள்ளம் வளர்ந்தால் அன்பு விளைகிறது. அன்பு இல்லாவிட்டால், தானே சம்பாதித்து, தானே உண்டு, இறைவனுடைய நினைப்பு இல்லாமல் இருப்பான். அவன் உள்ளம் வளராது. உடம்புதான் வளரும். வெறும் ஊன் வளரும். இந்த வளர்ச்சி கடைசியில் எப்படி ஆகிறது?*

வினையோம் இறந்தால்
ஒரு பிடி சாம்பரும் காணாது மாய உடம்பிதுவே.

*இது மாயாத உடம்பு அல்ல; மாய உடம்பு; நிலையில்லாத வஞ்சனையான உடம்பு. எந்தச் சமயத்தில் உயிரை இது வெளியே போகவிடும் என்ற சொல்ல முடியாது. ''நிலையில்லாத இந்த மாய உடம்பை வளர்ப்பதற்காகப் பொழுதை எல்லாம் செலவிடுகிறீர்களே! இறந்தால் இந்த உடம்பு என்ன ஆகும்? புண்ணியம் பாவம் ஆகிய இரு வினைக்கு உட்பட்டிருக்கிற நாம் இறந்தால் இந்த உடம்பு ஒரு பிடி சாம்பரும் காணாது. இது நிலை என்ற நம்பிக்கையோடு இதை வளமுடையதாக்கச் சம்பாதிப்பதும் சாப்பிடுவதுமாக இருக்கிறீர்களே; இதில் பயன் இல்லை. உள்ளத்தை வளமுடையது ஆக்க, அன்புடையது ஆக்க, முயற்சி செய்ய வேண்டும். அதற்கு நீங்கள் சம்பாதியுங்கள்; சாப்பிடுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் இறைவனை நினைந்து சம்பாதியுங்கள். இறைவனை நினைந்து சாப்பிடுங்கள் இரண்டுக்கும் நடுவில் இறைவனை நினைந்து சம்பாதிப்பதில் பாதியைக் கொடுத்துவிடுங்கள். பின்பு இறைவனை நினைந்து அமைதியாக இருங்கள். ஒவ்வொரு நாளும் இதுவே செயலாக இருங்கள்'' என்று வயிற்றைப் படைத்துவிட்டு, வயிற்றுக்காகவே வாழ்நாளைச் செலவிட்டுக் கொண்டிருக்கிற நமக்கு உபதேசிக்*

*கிறார். இறைவன் திருவருளும் அதனால் பேரின்பமும் கிடைப் பதற்குரிய எளிய வழியைச் சொல்லித் தருகிறார் அருணகிரியார்.*

பொருபிடி யும்களி றும்விளை
யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல! சண்முக
வா! எனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறு கொண் டிட்டுண்
டிரும்;வினை யோம் இறந்தால்
ஒருபிடி சாம்பரும் காணாது
மாய உடம்பிதுவே.

*('மோதுகின்ற பெண் யானையும் ஆண் யானையும் விளையாடுகின்ற காட்டையுடைய தினைப்புனத்தில் இருந்த சிறிய மான் ஈன்ற பெண் யானையைப் போன்ற வள்ளி நாயகியின் தலைவனே! ஆறுமுகனே!' என்று சொல்லி நாள்தோறும் இரண்டு பிடிசோறு ஈட்டி, ஒரு பிடி பசித்த வர்களுக்கு அளித்து, எஞ்சிய ஒரு பிடியை நீங்கள் உண்டு அமைதியாக இருங்கள். இரு வினைகளையும் உடைய நாம் இறந்துபோனால் மாயமாக மறைந்து போகும் உடம்பாகிய இது ஒரு பிடி சாம்பரேனும் காணாது. ஆதலின் இதனைப் போற்றுவதோடு நில்லாமல் இது உள்ளபோதே அறம் செய்யத் தலைப்படுங்கள்.*

*பொரு – மோதும். புனம் – தினைக் கொல்லை. காவலன் – தலைவன். இட்டு – பிறருக்குக் கொடுத்து. இரும் – கவலையற்று இருங்கள். 'இருவினையோம்' என்பது ஒரு பாடம். வினையோம் – இருவினைகளையுடைய நாம். தமக்கும் அதுவே கதி என்பாரைப் போல இப்படிச் சொல்கிறார். வினையோம்: உளப்பாட்டுத் தன்மைப் பன்மை. காணாது – எஞ்சாது. மாயம் – நிலையாமை.)*

*இது கந்தர் அலங்காரத்தில் ஐம்பத்தேழாவது திருப்பாடல்.*

# இனிய பிரான்

எப்போதும் அருணகிரிநாதர் ஒரு பாட்டில் இரண்டு கருத்துக் களைச் சொன்னாரானால் பெரும்பாலும் அவை இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்பு உடையனவாக இருக்கும். இரண்டு கருத்துக்களை அடுத்தடுத்து வைப்பதே, ஒரு கருத்தை மற்றொரு கருத்தால் வளப்படுத்துவதற்காகத்தான். இப்போது பார்க்கப் போகிற பாட்டிலும் இரண்டு கருத்துக்களைச் சொல்கிறார்.

## இரண்டு நிகழ்ச்சிகள்

கந்தபுராணத்தில் வரும் இரண்டு நிகழ்ச்சிகள் பெரும் பாலும் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். கந்தப் பெருமானின் அவதாரக் கதையும், வள்ளி நாயகியின் திருமணக் கதையும் கந்தபுராணத்தில் முன்னும் பின்னும் சிறப்பாக அமைந்திருக் கின்றன. கந்தப் பெருமானின் அவதாரக் கதை தட்சிணாமூர்த்தி யின் கதையில் தொடங்குகிறது. இந்தப் பாட்டில் அருணகிரிநாத சுவாமிகள் எடுத்த உடனேயே வள்ளியெம்பெருமாட்டியின் திருமணத்தைச் சொல்லி, பின்னே முருகனின் அவதாரத்திற்கே காரணமான தட்சிணாமூர்த்தியின் கதையைச் சொல்கிறார்.

நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல்
  காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற்கு இனிய
  பிரான், இக்கு முல்லையுடன்
பற்றாக் கையும்வெந்து சங்க்ராம
  வேளும் படவிழியால்
செற்றார்க் கினியவன், தேவேந்த்ர
  லோக சிகாமணியே.

முதல் இரண்டடியில், ''நீலவள்ளி முற்றாத் தனத்திற்கு இனிய பிரான்'' என்றும், அடுத்த அடிகளில், ''சங்க்ராம வேளும் பட விழியால் செற்றார்க்கு இனியவன்'' என்றும் சொல்கிறார். ''காம

சங்காரம் பண்ணின ஞானமூர்த்திக்கு இனியவன். அவனுக்குப் பிரியமான குழந்தை'' என்று அவர் பின்னே நினைப் பூட்டுகிற போது, ''இவனா? காட்டில் தினைப் புனத்தைக் காவல் காத்துக் கொண்டிருந்த குறத்தியிடம் காதல் கொண்டவன், நீல வள்ளி முற்றாத் தனத்திற்கு இனிய பிரானாகத் திரிந்தவன் அல்லவா இவன்? தகப்பனார் மிக்க நல்லவர். காமனைத் தகனம் பண்ணின அந்தத் தகப்பனாருக்குப் பிள்ளையாகப் பிறந்து இவன் காமுக னாகத் திரிந்திருக்கிறான். அவர் ஒழுக்கம் உடையவர். இவன் ஒழுக்கம் இல்லாதவன் போலிருக்கிறது!'' என்று சொல்லலாம் போலத் தோன்றுகிறது. அப்படி நினைக்கும்படி அருணகிரியார் சொல்வாரா? நல்ல அறிவும், அநுபவமும், மரபும் தெரிந்தவர்கள் சரியானபடி உணர்ந்து கொள்வார்கள் என்கிற நினைப்பில் தான் இந்த இரண்டையும் ஒரு சேர வைக்கிறார். முதலில் வள்ளி கல்யாணத்தைச் சொல்லி, பின்பு தட்சிணாமூர்த்தியின் கதையைச் சொல்கிறார்.

## முன்னுக்குப் பின் முரணா?

''முருகன் வள்ளியெம் பெருமாட்டியிடம் காதல் கொண்டது காமம். தட்சிணாமூர்த்தியின் தன்மை ஞானம்'' என்று இரண்டை யும் வேறு பிரித்துப் பார்க்கலாமா? இவை இரண்டும் ஒரு கதையில் இரு வேறு பிரிவுகள். ஒன்று மூலம்; ஒன்று முடிவு. முடிவை முதலில் சொல்லி, மூலத்தைப் பின்னே சொன்னார். கதையின் முதல் அத்தியாயத்திற்கும், கடைசி அத்தியாயத்திற்கும் தொடர்பு இருக்கும் அல்லவா?

அவர் அமைத்த சொற்களைக் கவனியுங்கள். நீலவள்ளி முற்றாத் தனத்திற்கு **இனிய பிரான்**'' என்கிறார். பிறகு, ''சங்க்ராம வேளும்பட, விழியால் செற்றார்க்கு **இனியவன்**'' என்கிறார். இனிய பிரான் என்றாலும், இனியவன் என்றாலும் பொருள் ஒன்றுதான். 'வள்ளியெம்பெருமாட்டியின் முற்றாத, இளமையையுடைய தனத்துக்கு இனிய பிரானாக இருந்து கொண்டே காமனைச் சங்காரம் பண்ணின சாமிக்கும் இனியவனாக நடிக்கும் பொல் லாத பிள்ளை போலிருக்கிறது!' எனத் தோன்றுகிறது அல்லவா?

பெரும் கவிகள் ஒன்றோடொன்று பொருத்தம் இல்லாதவை போல இப்படித்தான் சில கருத்துக்களை இணைத்து அறிவுடை

யவர்கள் கண்டுகொள்ளட்டும் என்று வைப்பார்கள். அப்படியே முன்னால் முருகப் பெருமானைக் காமுகனாகத் தோற்ற வைத்து, ''அப்படி எண்ணிவிடுவது தவறு; இதன் உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள். பார்ப்போம்'' என்று சொல்வாரைப் போலப் பின்னாலே அக்கருத்துக்கு முரண்பாடுள்ளது போன்ற ஒருகதையை அருணகிரியார் சொல்கிறார்.

## தட்சிணாமூர்த்தி

சிவபெருமான் ஞானசொரூபியாக, தட்சிணாமூர்த்தியாகக் கல்லால மரத்தடியில் தெற்குமுகமாக வீற்றிருந்தான். கல்லால மரம் என்றால் கல்லினாலே பண்ணின ஆல மரம் அல்ல. இது கல்லுக்கு நடுவில், மலைப் பாறைகளுக்கு இடையில் முளைத்த சிறிய ஆலமரம்; ஆதலாலே கல்லால மரம் என்று பெயர்; கல் இச்சி என்று இதைச் சொல்வார்கள். அந்த மரத்தின் அடியில் தட்சிணாமூர்த்தி யோக சமாதியில் அமர்ந்திருந்தான்.

சனகர், சனந்தனர், சனத் சுஜாதர், சனத்குமாரர் ஆகிய நான்கு பேர்களுக்கும் ஒரு சந்தேகம் வந்துவிட்டது. அவர்களோ நான்மறையும் ஆறங்கமும் கற்றுக் கேள்வியிலும் வல்லார்கள். அவர்களுக்கு வேதத்திலே சந்தேகம் வர நியாயம் இல்லை; வேதத்தை நன்கு படித்தவர்கள்; அதைக் கொண்டே போக்கிக் கொள்ள முடியும். சாஸ்திரத்திலும் சந்தேகம் இல்லை; அவர்கள் வேதசாஸ்திர அறிவின் தலைநிலத்திலே இருப்பவர்கள். அவர்களுடைய சந்தேகத்தைப் பேசித் தீர்க்கலாம் என்றால் அவர்கள் பேச்சிலும் வல்லவர்கள். அவர்கள் கேட்டறியாத பொருளும் இல்லை. அவர்களுக்கே ஐயம் உண்டாயிற்று என்றால் அந்த ஐயத்தை எவ்வாறு நீக்குவது? வேதத்திற்கு அப்பாற்பட்டதாய், சாஸ்திரத்திற்கு அப்பாற்பட்டதாய், கல்விக்கும் கேள்விக்கும் அப்பாற்பட்டதாய் எழுந்த அவர்களுடைய சந்தேகத்தை, பேசாத பேச்சினாலே, தன்னுடைய திருக்கரத்தினால் சின்முத்திரையைக் காட்டிச் சொல்லாமல் சொல்லி அவர்களுடைய சந்தேகத்தை நீக்கிவிட்டான் தட்சிணாமூர்த்தி.

## சின்முத்திரை

சித் என்பது ஞானம். சின்முத்திரை என்பது ஞானத்தின் அடையாளம். முன்பு ஒரு முறை இதைப் பற்றிச் சொல்லியிருக்

கிறேன். ஆன்மா எப்போதும் மூன்று மலங்களோடு சேர்ந்திருக் கிறது. ஒரு கையில் ஐந்து விரல்கள் இருந்தாலும் நான்கு விரல்கள் ஒரு வரிசையிலும், ஐந்தாவதாகிய கட்டை விரல் அவற்றோடு சேராமல் தனித்தும் இருக்கின்றன. கட்டைவிரல் தனித்து இருந்தாலும் அது மற்ற நான்கு விரல்களோடு சேராத காலத்து எந்த வேலையும் செய்ய முடியாது. பல காரியங்களைச் செய்யும்போது மற்ற விரல்களோடு கட்டைவிரலும் சேர்ந்து உதவி புரிகிறது; வேலை செய்யாதபோது அவற்றோடு சேராமல் தனித்தே நிற்கிறது.

ஆன்மாக்கள் செய்கிற காரியங்களில் எல்லாம் இறைவன் உறுதுணையாக இருந்தாலும் அவன் இந்த உலகத்துக்கு அப்பாற் பட்டவனாக, மலங்களுடைய சம்பந்தம் இல்லாத வனாகவே இருக்கிறான்.

கட்டைவிரலுக்கு அடுத்தபடி சுட்டுவிரல் இருக்கிறது. அதை ஆள்காட்டி விரல் என்றும் சொல்வார்கள். ''அதோ போகிறான் பார்'' எனத் தெருவில் போகிற ஆளைக் காட்டுவதனால் அதற்கு ஆள்காட்டி விரல் என்று பெயர் வந்ததாகக் கூறுவர். அதையும் விடச் சிறப்பான பொருள் வேறு ஒன்று சொல்லலாம். ஆள் என்றால் அடிமை, ஏவலன் என்று பொருள். ''ஆளான அடியவர் கட்கு அன்பன் தன்னை'' என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார். எல்லா ஆத்மாக்களும் இறைவனை நாடிச் செல்லவேண்டிய ஆட்கள். ஆள் என்பது ஆன்மா. ஆளாகிய ஆன்மாவைக் குறிக்கிற விரல் ஆதலில் ஆள்காட்டி விரல் என்று பேர் வந்தது. ஆள்காட்டி விரல் ஆன்மாவைச் சுட்ட, கட்டைவிரல் ஆண்டவனைச் சுட்டுகிறது.

ஆன்மா எப்போதும் மலங்களோடு சேர்ந்து நிற்கிறது. சுட்டு விரல் கட்டைவிரலோடு சம்பந்தப்படாமல் மற்ற மூன்று விரல் களோடு சம்பந்தப்பட்டே இருக்கிறது. மலத்தோடு சம்பந்தப்பட்டு ஆன்மா தொழில்படும்போதும் அந்தத் தொழில்களுக்கு இறைவன் உதவியாக இருப்பது போலவே, கட்டை விரலானது மற்ற மூன்று விரல்களோடு சேர்ந்து ஆள்காட்டி விரல் தொழில்படும்போது கூட நின்று உதவுகிறது. இறைவன் மலத்திற்கு அப்பாற்பட்ட வனாக இருப்பதுபோல் கட்டைவிரல் தனியே இருக்கிறது.

இறைவன் பதி. ஆத்மா பசு. மலங்கள் பாசம். ஆத்மா பாசத்தோடு சம்பந்தம் உடையதாக இருக்க வேண்டும்; அல்லது பதியோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும். பாசத்தோடு சம்பந்தமுடையதாக இருக்கும் போது பலவிதச் செயல்களைப் புரிந்து இன்ப துன்ப நுகர்ச்சிகளை அடைகிறது. பதியோடு சேர்ந்து விட்டால் பாசம் கழன்று விடும். பதிக்கு மல சம்பந்தம் இல்லை. பதியோடு ஒன்றாக இணைந்துவிட்ட பசுவுக்கும் மல சம்பந்தம் இல்லாமற் போகிறது.

தட்சிணாமூர்த்தி என்ன செய்தான்? ஆள்காட்டி விரலையும், கட்டைவிரலையும் சேர்த்து, பிற மூன்று விரல்களும் தனித்து நிற்கும்படி சின்முத்திரையைக் காட்டினான்.

பாசத்திலிருந்து ஆத்மா விடுதலை பெறவேண்டுமானால் பதியோடு சேர்ந்திருக்க வேண்டும் என்கிற பொருளை அந்த ஞான முத்திரையினால் அவன் உணர்த்தினான். இறைவனுடைய தொடர்பு இல்லாமல் யாருக்கும் இருக்க முடியாது. எப்பொழுதும் இறைவனுடைய தொடர்பு இருக்கிறது. சுட்டு விரல் மற்ற மூன்று விரலோடு சேர்ந்து தொழில்படும்போது கட்டைவிரல் தானே போய்ச் சேர்ந்து கொண்டு அதற்கு உறு துணையாக இருக்கிறது. அப்படிச் சேர்வது போதாது; மூன்றையும் விட்டுப் பெருவிரலோடு இணைய வேண்டும்.

நாம் மூச்சு விடுகிறோம். உண்ணுகிறோம். உறங்குகிறோம். பலவிதமான தொழில் செய்கிறோம். அப்போது எல்லாம் இறைவனுடைய தொடர்பு இருக்கிறது என்றாலும், ஆத்மா மலங்களோடு சேர்ந்து தொழில்படுகிறது. அதனால் இறப்பு, பிறப்பு என்னும் பிணிக்கு உள்ளாகிறது. அது என்றைக்கு இறைவனோடு ஒன்றிவிடுகிறதோ அப்போது முத்தியின்பம் பெறுகிறது. அந்த முத்தியை அடைவதற்குரிய உபதேசத்தைச் சின்முத்திரையினாலே குறிப்பித்தான் தென்முகக் கடவுள்.

## தென்முகம் ஏன்?

அவன் ஏன் தெற்கு முகம் நோக்கி இருந்து காட்ட வேண்டும்? நாம் எந்தக் காரியத்தையும் தெற்கு முகம் நோக்கிச் செய்ததில்லை.ஆனால் பரமேசுவரனாகிய குருநாதன் அடியார்

களுக்கு அருள் செய்வதற்காக, அடியார்களுடைய பகைவனை அழிப்பதற்கு ஆயத்தமாகத் தெற்கு முகம் நோக்கி உட்கார்ந்திருக்கிறான். நடராஜனாகக் காலைத் தூக்கிக் கொண்டு நிற்கும்போதும் தென்முகம் நோக்கி நிற்கிறான். பகைவன் முன்னால் இருக்கும் போது அவனுக்கு முதுகு காட்டுவது வீரனுக்கு அழகல்ல. அவனை நேர் நின்று எதிர்க்க வேண்டும். சங்கநூல்களில் ''கடந்தடும்'' என்று ஒரு தொடர் வரும். அதற்கு உரையாசிரியர்கள் 'வஞ்சியாது எதிர் நின்று கொல்லும்' என்று உரை எழுதுவார்கள். அதுதான் சுத்த வீரம்.

நமக்கு மிகவும் துன்பத்தைத் தருகின்ற மரணத்தை விளைக்கும் காலனைத் தென்னவன் என்றும் தென்புலக்கோன் என்றும் கூறுவர்.

''சட்டத் தென்னவன் தன்கடா வேந்தனை
வெட்டி''

என்பது தக்கயாகப் பரணி.

''தென்புலக்கோன் பொறியொற்றி''

என்பது பெரியாழ்வார் திருமொழி. யமன் தென்திசைக்குத் தலைவன்.

நம்முடைய பகைவன் யார்? இறப்பும் பிறப்புந்தான் நமக்குப் பகை. இறப்புத்தான் பெரும் பகை; கொடும் பகை. மரணம் இல்லாத வாழ்வு நமக்கு வந்துவிட்டால் பிறகு துன்பம் இல்லை. அந்த இறப்பு என்பதைப் பருப்பொருளாக உருவாகக்காட்டி யமன் என்றார்கள். யமன் நமக்கு மரணத்தை விளைவிக்கிறான் என்றார்கள். மரணம் என்ற நினைவை உண்டாக்குகின்றவனாக அவனை வைத்தார்கள்.

அவனை ஏன் கிழக்கே இருப்பவனாக வைக்கக் கூடாது? மேற்கேகூட வைத்திருக்கலாமே? தெற்கே ஏன் வைத்தார்கள்?

## தெற்கும் வடக்கும்

நம்முடைய பாரத நாட்டில் கிழக்கிலும் மேற்கிலும் கடல்கள் இருக்கின்றன. வடக்கே போகப் போக நிலப்பரப்பு விரிந்து கொண்டே போகிறது. ஆனால் தெற்கே வரவரக் குறுகிக்

கொண்டே வருகிறது. கடைசியில் ஆழமான கடலாகிவிடுகிறது. வடக்கே போகப் போக மனிதன் உயர்ந்துகொண்டே போகிறான். மலையின் உச்சிக்கே போய் விடுகிறான். தெற்கே போகப் போகக் கடலில்தான் போய் வீழ்ந்து மூழ்க வேண்டும். இதைப் பூகோளமே சொல்கிறது. வாழ்வு வளம் பெற்று உயர்வு பெற்று உய்வு பெற அருள் வழங்கும் பரமேசுவரனை வடக்கே உள்ள இமாசலத்தின் உச்சியிலே வைத்தார்கள். மரணம் என்பது தெற்கே இருந்து வருவதாகச் சம்பிரதாயமாக வைத்தார்கள். மரணத்தைத் தருகிறவனும் அதை நீக்குகிறவனும் எதிரிகள். ஒருவன் தெற்கே இருக்கிறான்; மற்றவன் வடக்கே இருக்கிறான். ஒருவன் பள்ளத்தில் இருக்கிறான்; மற்றவன் மேட்டில் இருக்கிறான்.

மனிதர்களுக்குப் பகைவனாக இருக்கிறவன் தென்னவன், அல்லது காலன். நம்முடைய பகைவனைத் தன்னுடைய பகைவனாக நினைந்து அவனை அடக்குவதற்கு ஆயத்தமாக இருப்பவனைப் போலத் தெற்கு நோக்கித் தட்சிணாமூர்த்தி அமர்ந்திருக்கிறான். கையில் அம்பு முதலிய கருவிகளை வைத்துக் கொண்டு செய்யும் போர் அல்ல இது. அஞ்ஞானத்தை ஞானத்தினாலே ஒழிக்கும்போர். மரணத்திற்குக் காரணமாக உள்ள காலனை, அஞ்ஞான உருவத்தை. ஒழிப்பதற்காக ஞானாசிரிய னாகிய தட்சிணாமூர்த்தி சின்முத்திரையோடு, ஞான அடையாளத்தோடு தெற்கு நோக்கி வீற்றிருக்கிறான்.

## தேவர்களின் கவலை

எல்லா உயிருக்கும் உயிராய் இருக்கிற இறைவன் தென் முகம் நோக்கிச் சின்முத்திரையோடு யோகத்தில் அமர்ந்துவிட்டான் என்றால் உலகம் எல்லாம் செயல்படுமோ? அவன் யோகத்தில் அமர்ந்தான். உலகமே யோகத்தில் அமர்ந்துவிட்டது. யாரும் சிந்திக்கவில்லை. தொழில் செய்யவில்லை. ஆடவர்கள் பெண்களை நாடிப் போகாமல் அப்படியே தவத்தில் அமர்ந்துவிட்டார்கள். பெண்களும் அப்படியே. இப்படி இருந்தால் உலகம் என்ன ஆவது? நல்லவர்கள் ஒன்றும் செய்யவில்லை என்றால் தேவர்களுக்கு வாழ்வு எங்கே? சூரபன்மன் முதலிய அரக்கர்கள் தேவர்களை வருத்தத் தொடங்கிவிட்டார்கள். தேவர்களுடைய அரசை அடித்துப் பிடுங்கிக் கொண்டு அவர்களை விரட்டிவிட்டார்கள்.

நல்லவர்கள் செயல்படாது ஒடுங்கிவிட்டால் கெட்டவர்களுடைய செயல்கள்தாமே ஓங்கி நிற்கும்?

அப்போது தேவர்கள் ஒன்றுகூடி யோசித்தார்கள். 'இதற்கு என்ன செய்வது? தூங்கு மூஞ்சிச் சாமியை எழுப்பியாக வேண்டுமே! யோகத் தூக்கத்திலிருந்து விழிப்புறச் செய்ய வேண்டுமே! அவர் விழித்தால் அல்லவா உலகம் உய்வுபெறும்? அவரை எப்படி விழிப்படையச் செய்வது?' என்று கூடி ஆலோசித்தார்கள். ''மன் மதனை அனுப்ப வேண்டியது தான்; உலகத்தைக் காப்பாற்றும் பிள்ளை நமக்கு வேண்டுமானால் இப்போது மன்மதன்தான் வேலை செய்தாக வேண்டும்'' என்று முடிவு செய்து அவனை அனுப்பித் தட்சிணாமூர்த்தியின் தியானத்தைக் கலைக்கச் சொன் னார்கள். அந்த ஞானமூர்த்தியின் முன்னாள் அவன் உடம்பெல் லாம் நடுங்கப் போய் நின்றான்.

## காமன் செயல்

உலகத்தையே மயக்குகிறவன் மன்மதன். அவன் அழகு மிக்கவன்; மென்மை மிக்கவன்; மதுரமானவன். அவனுடைய அரசு, படைகள் எல்லாம் அழகியவை. அழகுதான் மன்மத னுடைய ராஜ்யம். அவன் கையில் இருக்கிற வில் கரும்பு; அது இனியது. அந்தக் கரும்பு வில்லுக்கு வண்டுகளின் கூட்டமே நாண், வண்டின் ரீங்காரமே நாணொலி என்றால் எவ்வளவு இனிமையாக இருக்கும்! நாணில் வைத்துப் பூட்டுகின்ற அம்பு களோ ஐந்து மலர்கள். மலர்கள் அழகுக் குவியல்கள். அவனுக்கு முன் ஊதும் திருச்சின்னம் குயில். அவன் கூடவே இருக்கிற துணைவன் வசந்தன். அவனுக்கு யானை இரவு. குதிரை கிளி. தேர் தென்றல். முரசு கடல். அவனுடைய படை பெண்கள். இப்படிக் காமத்தைத் தூண்டும் பொருள்களை எல்லாம் வைத் திருக்கிறவன் காமன்; எவ்வளவு அழகான கற்பனை பாருங்கள்!

ஞானமூர்த்தி கல்லால மரத்தடியில் ஞானமுத்திரையோடு யோகத்தில் ஆழ்ந்திருந்தான். அவனுடைய யோகத்திற்கு இடையூறு விளைவிக்கக் காமன் வந்தான். அவன் வரும்போதே தென்றல் மெல்ல மீதூர்ந்து வந்து தென்முகக் கடவுளின் உடலைத் தழுவிற்று. இராத்திரியாகிய யானை மதம் பொழிய நின்றது. அவனுடைய காகளமாகிய குயில்கள் கூவ ஆரம்பித்து

விட்டன. இவை எல்லாம் எம்பெருமானுடைய தியானத்தைக் குலைத்துவிடுமோ?

சாதாரண மனிதர்களாக இருந்தால் இதற்குள்ளேயே ஆடிப் போயிருப்பார்கள். மன்மதன் தன் கையிலுள்ள கரும்பு வில்லில் மலர் அம்மைப் பூட்டிக் கொண்டு விடலாமா வேண்டாமா என்று தயங்கித் தயங்கி நின்றான். அவன் உடம்பெல்லாம் நடுங்கியது. அவன் உயிர் தப்ப வேண்டுமென்றால் அந்தக் காரியத்தை அவன் செய்யக் கூடாது. ஆனால் உலகம் எல்லாம் உய்வுபெற வேண்டு மென்றால் அதைச் செய்துதானே ஆகவேண்டும்? வேறு வழி என்ன? உலகம் வாழ வேண்டும் என்று நினைத்தான். மன்மதன் தன்னுடைய வில்லிலிருந்து மலர் அம்புகளை எம்பெருமானின் திருவடியில் அர்ச்சனை செய்வது போலத் தொடுத்தான்.

## காம சங்காரம்

ஞானமூர்த்தி மெல்ல நெற்றிக்கண்ணைத் திறந்தார். திறந்த மாத்திரத்தில் மன்மதன் எரிந்து சாம்பலாகி விட்டான்.

''அன்புடையார் உலகத்தில் வாழ்வார்கள்; அன்பு இல்லாத வர்கள் அறக் கடவுளால் தண்டிக்கப்படுவார்கள்'' என்பர். ''கடவுளுக்கு இவ்வளவு பட்சபாதமா?'' என்று கேட்கலாமா?

கதிரவன் தோன்றுகிறான். சுடர்விடும் அவன் பொற்கிரணங் களைக் கண்டு தாமரைகள் மலர்கின்றன. சூரியன் தாமரையை மலரச் செய்கின்றான் என்று சொல்கிறோம். அவனுடைய கிரணம் பட்டு எலும்பு இல்லாத புழுக்கள் செத்துப் போகின்றன. சூரியன் புழுக்களைக் கொல்கிறான் என்று சொல்கிறோம். அப்படிச் சொன்னாலும், தாமரை மலர்வதும் புழு இறப்பதும் தாமே நிகழ்கின்றன. அவன் இந்த இரண்டு காரியங்களையும் விரும்பிச் செய்யவில்லை. அவன் எல்லாவற்றுக்கும் நடுநிலை யில் நின்று தனக்கு இயல்பாக உள்ள கதிர்கோளடு தோன்றுகிறான்.

''என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்''

என்றார் வள்ளுவர். சூரியனுடைய சுடரைக் கண்டு தாமரை மலர்கிறதற்குக் காரணம் அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி

தாமரைக்கு இருப்பதுதான். எலும்பு இல்லாத புழுக்கள் செத்துப் போகின்றன என்றால் அவற்றிற்குத் தாங்கும் சக்தி இல்லை. எப்படி வெயில் எலும்பு இல்லாத புழுக்களைக் கொன்று விடுமோ அப்படி அன்பு இல்லாதவர்களை அறக்கடவுள் கொன்று விடும் என்று சொன்னார். கொல்லப்படுவதற்குக் காரணம் கதிரவன் அல்ல. அவற்றின் வலியின்மையே இறந்து படுவதற்குக் காரண மாகிறது. சூரியனுடைய ஒளி பொது. தாமரை அதைத் தாங்கும் ஆற்றல் உடையது; அதை ஏற்று மலரும் தன்மை உடையது. எலும்பு இல்லாத புழுவோ அதைத் தாங்கும் சக்தியற்றதாகை யால் இறந்து போகிறது.

அவ்வண்ணமே, தட்சிணாமூர்த்தி காமனை எரிக்க வேண்டு மென்று நெற்றிக் கண்ணைத் திறக்கவில்லை. ஞானமூர்த்தி, யோக சமாதியில் அமர்ந்திருந்த தவப் பெருமான், தன் ஞானக் கண்ணைத் திறந்தான். ஞானத்திற்கு முன்னால் காமம் நிற்குமா? ஞானத்தின் வலிமையைத் தாங்கும் வல்லமை இல்லாத மன்மதன், தன்னுடைய பலவீனத்தால் எரிந்து போனான். காமன் இறந்து பட்டானே என்று அவன் மனைவி ரதி வருந்த, ''யாக்கை இல்லாதவனாகவே அவன் இனியும் இயங்குவான். ஆனால் உனக்கு மட்டும் யாக்கை உடையவனாகத் தோன்றுவான்'' என்று சிவபெருமான் வரம் அளித்தான்.

## முருகன் அவதாரம்

அப் பெருமானுடைய யோகம் கலைந்துவிட்ட மகிழ்ச்சி யினால், திரும்பவும் அவன் யோகத்தில் அமர்ந்து விடுவதற்குள் அவனிடம் ஓடிச் சென்று காலில் விழுந்த தேவர்கள் தங்க ளுடைய துயரத்தைச் சொல்லி, ''நாங்கள் உய்வு பெற ஒரு குமாரனை வழங்க வேண்டும்; உலகம் ஒரு குமாரனை விரும்பு கிறது'' என்று வேண்டி இறைஞ்சினார்கள். சிவ பெருமானுடைய அருள் பின்னும் விரிவு பட வேண்டும் என்பது அவர்களுடைய அவா. ஆதலின்,

''ஆயவெஞ் சூரன தாவி நீக்கவோர்
சேயினை அருளுவான் சிமைய மாகிய
மீயுயர் வரையிடை மேவி நோற்றிடும்
மாயையின் மனைவியை மணத்தல் வேண்டும்நீ''

என்று வேண்டிக் கொண்டார்கள். இறைவன் பார்வதியை மணந்து கொண்டான். அப்பால் எம்பெருமான் கண்களிலிருந்து ஆறு பொறிகள் எழுந்தன. அவற்றிலிருந்து குமாரன் தோன்றி னான் என்கிற வரலாறு நமக்குத் தெரியும்.

மாரனுடைய சமாதியின்மேலே குமாரன் பிறந்தான். மன்மதனை எரித்ததும் குமாரனைத் தோற்றுவித்ததும் நெற்றிக் கண்ணே. ஒரு காரியம் செய்வதற்குமுன் அதற்கு ஏற்ற மனநிலையில் (Mood) இருக்க வேண்டும் என்பார்கள். உலகத்துக் குமார ஜனனம் போன்றதன்று முருகன் திரு அவதாரம். அது காம சம்பந்தமே இல்லாதது. ஞானமாக விளைவது. ஆதலின் அந்த நிகழ்ச்சி தோன்று வதற்கு முன் காமன் யார் கண்ணிலும்படாதபடி ஒழிந்தான்.

## வேளைச் செற்றார்க்கு இனியவன்

தென்முகக் கடவுளாகிய ஞானமூர்த்திக்கு இனியவனாக ஞானபண்டித சாமியாகத் தோற்றியவன் முருகன் என்பதை அருணகிரியார் கூறுகிறார்.

இக்கு முல்லையுடன்
பற்று ஆக்கையும் வெந்து, சங்க்ராம
வேளும் படவிழியால்
செற்றார்க்கு இனியவன்.

இக்கு என்பது இக்ஷு என்ற வடசொல்லின் திரிபு. இக்கு – கரும்பு. அது மன்மதனுக்கு வில். அவனுடைய வில்லாகிய கரும்பு இனிப்புடைய பொருள். அதிலே அவன் தன்னுடைய அம்பாகிய ஐந்து மலர்களை வைத்துத் தொடுக்கிறான். தாமரைப்பூ, மாம்பூ, அசோகம்பூ, முல்லைப் பூ, நீலோற்பல மலர் என்னும் ஐந்தும் அவனுடைய அம்புகள். பரமேசுவரன் தவ நிலையில் இருக்கும் போது இந்த மன்மதன் முதலில் தாமரைப் பூவாகிய பாணத்தை விடுத்தான். அது தன்னுடைய மென்மையையும் தண்மையையும் மணத்தையும் பரப்பிக் கொண்டு போய் எம்பெருமானின் திரு வடியில் வீழ்ந்தது.

## மலரம்புகள்

காமன் தாமரை மலரை எய்தால் அது மற்றவர்களுக்குத் தம் காதலிமார் நினைவை இருதய தாமரையிலே உண்டாக்கிவிடும்.

காதலன் எங்கோ இருக்கிற தன் காதலியை நினைக்க ஆரம்பிப்பான். மன்மதனுடைய அடுத்த பாணம் மாம்பூ. அது வசந்த காலத்தில் பூக்கிறது. மாம்பூப் பட்டவுடனேயே உடம்பெல்லாம் வெப்பம் உண்டாகிக் பிரிவினால் பசலை தோன்றும். உடம்புக்குப் பிரிவினாலே உண்டாகின்ற நிறத்தைப் பசலை என்பார்கள். தாமரை எய்தவுடன் நினைப்புண்டாகி, மாம்பூ எய்தவுடன் பசலை பூக்கும். அவனுக்கு உற்சாகம் எல்லாம் போய்விடும். காதலியைக் காணோமே என்று ஏங்கி ஏங்கிச் சோர்ந்து உட்கார்ந்துவிடுவான். எந்த வேலையிலும் ஊக்கம் இருக்காது. அடுத்து மூன்றாவது பாணமாகிய அசோகம் பூவை எய்தவுடன் செயலற்றுப் போய் விடுவான். அசோக மலர் வேனிற் காலத்தில் செக்கச்சேவல் என்ற நிறத்துடன் மலரும். அந்த அம்பைக் காமன் விட்டவுடன் காதலன் தன்னுடைய சூழ்நிலையையும், வேலையையும் மறந்து காதலியின் நினைவாகவே சமைந்து போய் உட்கார்ந்துவிடுவான். அன்ன ஆகார நினைப்புக்கூட இல்லாமல் அமர்ந்து விடுவான். அடுத்தாற்போல மன் மதன் தன்னுடைய நான்காவது அம்பாகிய முல்லையை விடுத் தானோ இல்லையோ, கொஞ்சநஞ்சம் இருந்த உணர்ச்சியும் போய்ப் பிணம் போலக் கிடப்பான்; காதலி வந்தால் பிழைத் தான்; இல்லையானால் மன்மதனுடைய ஐந்தாவது பாணமாகிய நீலோற் பலத்தை எய்தவுடனே இறந்து படுவான். ஐந்து மலரம்புகளாலும் இன்ன இன்ன விளைவு உண்டாகும் என்பதை ஒரு பாட்டுச் சொல்கிறது.

"நினைக்கும் அரவிந்தம்; நீள்பசலை மாம்பூ;
அனைத்துணர்வும் நீக்கும் அசோகு; – நுனித்துணரின்
முல்லைகிடை காட்டும்; முழுநீலம் மாதராய்;
கொல்லும்;மதன் அம்பின் குணம்."

இங்கே பரமேசுவரனுடைய கருணையையும், மன்மதனுடைய குறும்பையும் எடுத்து விளக்குவார் போன்று அருணகிரியார். காமனுடைய நான்காவது அம்பாகிய முல்லையைச் சொல்லுகிறார்.

இக்கு முல்லையுடன்
பற்று ஆக்கையும் வெந்து

எப்போதுமே அருணகிரியார் புராணக் கதைகளை அழகுபடுத்திச் சொல்வது வழக்கம்.

மன்மதன் தன்னுடைய கரும்பு வில்லில், தாமரையாகிய முதல் அம்பை வைத்துக் தொடுத்துப் பரமேசுவரனது தியான சமாதிக்குப் பங்கம் விளைவித்தபோதே இறைவன் தன்னுடைய நெற்றிக் கண்ணைத் திறந்து அவனை எரித்திருக்கலாம். 'போனால் போகிறது. தன்னுடைய அறியாத் தனத்தால் செய்கிறான். ஞான மூர்த்தி தன்னுடைய ஞானக்கண்ணை விழித்தால் காமம் எரிந்து விடும் என்பதுகூடத் தெரியாமல் விளையாடுகிறான்' என்று விட்டு விட்டான்; கண்ணைத் திறக்கவில்லை. மன்மதன் சும்மா போயிருக்கக் கூடாதா? தன்னுடைய இரண்டாவது அம்பாகிய மாம்பூவைத் தொடுத்தான். எம் பெருமானின் திருமேனி காமத் தீயினால் அலைப்புற்றுப் பசலை பூத்தால் தியானம் கலைந்து விடும் என்பது அவன் நினைவு. மன்மதன் இரண்டாம் முறை யாகத் தவறு செய்தபோதிலும் இறைவன் தன்னுடைய சிறந்த கருணையினால் பேசாமல்தான் இருந்தான். மூன்றாவது பாண மாகிய அசோகத்தையும் விட்டுவிட்டான் மன்மதன். ஒருமுறை தவறு செய்தாலேயே நாம் பொறுக்க மாட்டோம். மன்மதன் மூன்றாம் முறையாகச் செய்த பிழையையும் பொறுத்துக் கொண்டு எம்பெருமான் சும்மா இருந்தான்.

ஆனால் நான்காவது பாணமாகிய முல்லையை எடுத்து வில்லில் பூட்டினான். இனியும் பொறுக்கலாமா? ஏதோ ஒரு முறை தெரியாது செய்துவிட்டான் என்று விடலாம். இறைவன் மூன்று முறையும் பொறுத்துக்கொண்டான். மூன்று முறை பொறுப்பது என்பது பெரியவர்கள் வழக்கம். அதற்குமேல் தண்டிப்பது தான் முறை. நான்காவது முறையாகக் காமன் தவறு இழைக்கக் கரும்பு வில்லில், வண்டுகளென்னும் நாணிலே, முல்லையாகிய அம்பை எடுத்து வைத்தானோ இல்லையோ, ஞானமூர்த்தி தன் கண்ணைத் திறந்து விட்டான். எல்லாம் வெந்து விட்டன. கரும்பு வில் எரிந்தது. அதிலே கட்டிய நாண், பூட்டிய முல்லை அம்பு, வில்லைப் பிடித்திருந்த கை, உடம்பு எல்லாமே எரிந்து சாம்பலாகிவிட்டன.

சங்க்ராம வேளும் பட.

சங்க்ராம வேள் – போர் செய்த மன்மதன். ஆண்டவன் செய்த தவத்திற்கு உதவியாக மன்மதன் அவனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டு, அவனுடைய திருவடியை

*மலரால் அர்ச்சித்துக் கொண்டிருந்தானானால் ஆண்டவன் அவனுக்கு அருள் செய்திருப்பான். இப்போதும் மலர்களை எடுத்து வந்தான்; அர்ச்சிப்பதற்காக அல்ல அம்பாகத் தொடுத்துத் தவத்திலே வீற்றி ருக்கிற பெருமானின் தவத்தைக் குலைக்க வந்தான். சங்க்ராம வேளாக, சண்டை போடும் காமனாக வந்தான். ஞானமூர்த்தியின் திருக்கண் பட்ட மாத்திரத்திலே பட்டான்; அழிந்தான். அந்த ஞானமூர்த்தியின் கண்களிலேதான் மற்றொரு வேளும் வந்தான். கருவேள் வெந்தான்; செவ்வேள் வந்தான். 'செவ்வேளைத் தோற்றுவித்த கண் கருவேளைச் சுட்டெரிக்கலாமா?'' என்றால் அவரவர்களுடைய பலத்திற்கும் பலவீனத்திற்கும் ஏற்றபடி விளைவு நேர்ந்தது.*

இக்கு முல்லையுடன்
பற்றாக்கையும் வெந்து சங்க்ராம வேளும் பட விழியால்
செற்றார்க்கு இனியவன்

*மன்மதனைக் கண்களினாலே அழித்தவனுக்கு இனிய பிரானாகச் செவ்வேள் தோன்றினான். அஞ்ஞானம் அழிந்து ஞானம் தோன்றினால், காமம் அழிந்து காமனுடைய சமாதியிலே ஞானம் உருவெடுத்து நின்றால், அது ஞானப் பெருமானின் கண்ணுக்கு இன்பம் அளிக்காதா? ஞானமூர்த்திக்கு இனிய வனாகிய இவன் யார் தெரியுமா?''இவன்தான் நான் முன்னாலே சொன்னேனே; தினைக் கொல்லையிலே கிளி ஓட்டிக் கொண் டிருந்த வள்ளியை நாடிச் சென்றவன்; வள்ளியின் பக்குவம் தெரிந்து நாடி ஓடியவன்'' என்கிறார் அருணகிரியார்.*

## *வள்ளி நாயகியின் நிலை*

*முருகனை அடைவதற்கு முழு உரிமையை உடைய வள்ளி, தான் யார் என்பதை உணர்ந்து கொள்ளாதவளாய்க் குறச் சிறுமி யாய்த் தினைப்புனம் காத்துக் கொண்டிருந்தாள். அவள் காவல் புரிந்து கொண்டிருந்த புனம் எப்படி இருந்தது, விளைந்த தினைக் கதிர்கள் எவ்வாறு இருந்தன?*

நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல்

*முருகன் இளையவன். வள்ளியெம்பெருமாட்டி இளையவள். அப்பெருமாட்டி காவல் புரிந்து கொண்டிருந்த புனத்தில் இருந்த*

*தினைக் கதிர்களும் இளமை நிலையிலேயே இருந்தன. அவை இன்னும் முதிரவில்லை; கதிர்கள் முற்றவில்லை.*

## *கவிஞரின் புதிய படைப்பு*

*நெற்றா - நெற்று ஆகாத. நெற்று என்பது பெயர்ச்சொல். அதன் அடியாக நெற்றா என்ற எதிர்மறைப் பெயரெச்சத்தை உண்டாக்கிக் கொண்டார் அருணகிரியார். நெற்றுதல் - நெற்றாதல்; நெற்றாத - நெற்று ஆகாத; அது ஈறுகெட்டு நெற்றா என்று நின்றது.*

*பெரிய கவிகள் இப்படித்தான் புதுப்புதுச் சொற்களை உண்டாக்குவார்கள். கம்பன் சில புது நடைகளை உண்டாக்கி இருக்கிறான்.*

"ஓம் நராயணாய"

*என்று ஓர் இடத்திலே அவன் உபயோகப்படுத்துகிறான். 'கம்பன் போன வழி' என்று ஒரு வழக்கு உண்டு. அவன் இலக்கணம் அறிந்தவன். இலக்கணம் அவனிடம் நிரம்பி வழிந்தது. அவன் பழைய மரபை மாற்றிப் புதிதாக ஒன்று சொன்னால் அதுவே இலக்கணமாகி விடும். இது பெருங் கவிஞர்களின் உரிமை.*

*'கம்பன் இலக்கண வரம்பை மீறித் தன் விருப்பப்படி சொல் அமைக்கிறானே; நாங்களும் ஏன் அப்படிப் புனையக் கூடாது?' என்பதுபோலக் காளமேகம் வேடிக்கையாக ஒரு பாட்டுப் பாடியிருக்கிறார்.*

"நாரா யணனை நராயணனென் றேகம்பன்
ஓராமற் சொன்ன உறுதியால் - நேராக
வாரென்றால் வர்என்பேன்; வாளென்றால் வள்என்பேன்
நாரென்றால் நர்என்பேன் நன்."

*பெரும்புலவர்கள் தாம் எழுதுவதே இலக்கணமாக, சட்ட மாக ஆக்கிவிட்டுப் போகிறார்கள்.*

*அருணகிரிநாதப் பெருமான் இறைவன் அருள்பெற்ற பெரும் புலவர்;*

"யாம்ஓ தியகல் வியும்எம் அறிவும்
தாமே பெறவே லவர்தந் ததனால்

என்று முருகனைக் குருவாகக் கொண்டு கலைநலம் பெற்ற அருட்கவிஞர். அவர் சொல்லிலும் பொருளிலும் யாப்பிலும் பல புதுமைகளைப் புகுத்தியிருக்கிறார்.

எம்பெருமானின் திருக்கரத்திலுள்ள வேலை ஞானவேல் என்று பெரியவர்கள் சொன்னார்கள். அருணகிரியார் ஞானத்தைத் தரும் கருவிகளாகிய வேதமும் ஆகமமும் வேலாயுதமாக இருக்கின்றன என்று புலப்படுத்தி, ''வேதாகம சித்ரவேல்'' என்று ஒரு புதுக் கருத்தைச் சொன்னார். 'இப்படி யாரும் சொல்லவில்லையே!'' என்று கேட்க முடியுமா? அவருக்குப் புதிய கருத்தையும் புதிய சொல்லையும் படைக்கும் உரிமை இருக்கிறது.

இங்கே நெற்று என்ற பெயர்ச்சொல்லின் அடியாக வினையை உண்டாக்கி நெற்றா என்ற எதிர்மறைப் பெயரெச்சத்தை அமைக்கிறார். நெற்றாத என்பது நெற்றா என்று விகாரமாய் நின்றது.

நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற.

இன்னும் நெற்று ஆகாத, முற்றாத, பசுமை நிறத்தை உடைய கதிர்களையுடைய சிவந்த தினைப்புனத்தை வள்ளி காவல் காத்துக் கொண்டிருந்தாள். தினையின் மேல் நிறம் சிவப்பாதலால் செவ்வேனல் என்றார். இளமை மாறாத கதிர்களை உடைய செந்நிறம் பெற்ற தினைக்கொல்லையைக் காவல் புரிகின்ற வள்ளியின் காதலன் முருகன்.

நீலவள்ளி.

நீலம் என்பது கருமையும் பசுமையும் கலந்த ஒரு தோற்றம். உமாதேவியின் திருமேனி அத்தகையது. பச்சைப் பசுங்கொடி போல நீல நிறத்தையுடைய வள்ளி பச்சைப் பசுங்கதிர் உள்ள தினைப்புனத்தைக் காத்துக் கொண்டிருந்தாள்.

## வள்ளியின் பக்குவம்

நெற்றாப் பசுங் கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற்கு இனிய பிரான்.

முற்றாத செவ்வி அவளுடைய கனிந்த பக்குவத்தைக் காட்டுகிறது. தனம் பருவத்தைக் காட்டுகின்ற அடையாளம்; நாயகனைப் பெறுவதற்குரிய பருவத்தை அடைந்து விட்டாள் என்பதற்குரிய அடையாளம். மற்ற பெண்களுக்கு ஏற்படும் பருவம் போன்றது

அன்று இது. பரமேசுவரனுடைய ஞானக் கண்களிலிருந்து தோன்றிய ஞான பாஸ்கரனை அடைவதற்குரிய பக்குவம் ஆன்மா வாகிய வள்ளிக்கு உண்டாயிற்று. ஆன்மா முதிர்ச்சியை அடைந்தது. அவளிடத்திலே தோன்றிய பருவத்தின் அடையாளத்தைக் கண்டு முருகன் தானே வலிய வந்து அவளை ஆட்கொண்டான்.

அன்று வந்தவன் யார்? காமம் தன்னுடைய எல்லையிலே கூட வராதவாறு காம சங்காரத்திற்குப் பிறகு தோன்றிய குமார நாதன். ஞானமயமாகத் தோன்றிய பெருமான் உள்ள இடத்தில் அஞ்ஞானமயமான காமம் இருக்க முடியுமா? அவன் அருளைப் புணையாகக் கொண்டு அல்லவா கலங்காத சித்த உறுதியுடன் வெங்காம சமுத்திரத்தைக் கடந்தார் அருணகிரிநாதப் பெருமான்?

அந்த ஞானக்கதிரவனையே நினைந்து வாழ்பவர்களுக்குக் காமமயமான அஞ்ஞானம் அருகில்கூட வராது. அவனை நினைப் பவர்களுக்கு ஞானம் தோன்றுகிறது. ஞானம் தோன்றியவுடன் மனப்பக்குவம் முதிர்கிறது. பக்குவம் முதிர்ந்த ஆன்மா இறை வனோடு ஒன்றுபடுகிறது.

வள்ளியெம்பெருமாட்டி ஓரளவு முருகனை நினைந்து காட்டில் வாழ்ந்தாள். அவளை அறியாமலே அவளுடைய பக்குவம் முதிர்ந்து கொண்டிருந்தது. வேடிச்சியாக வாழ்ந்த அவளுடைய வாழ்வில் வேடன் ஒருவன் வந்தால் தன்னைப் பற்றிய நினைப்பை மறந்து அஞ்ஞானமயமான காம வாழ்வில் இறங்கி விடுவாளோ என்று சோதிக்க வேடனாக வந்தான் முருகன். ஒருவரைத் தான் அடைய வேண்டும் என்று எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பாள் காதலி. இந்த எண்ணம் உறுதிப் பாடுடையதானால் அவள் வேறு யார் வந்தாலும் திரும்பிக்கூடப் பாராமல் வெறுத்து ஒதுக்குவாள். யார் மாட்டுக் காதல் உண்டானதோ அவனை அடைய முயலுதல், அதற்குத் தடையாக இருப்பவர்களை வெறுத்தல் என்று இரண்டு வகையான இயல்பு கள் அவள்பால் தோன்றும்.

## முருகன் செய்த சோதனை

முருகனை அடையவேண்டும் என்கிற நினைவோடு இருந்தவள் வள்ளி. அதற்குரிய பக்குவத்தை அடைந்த அவளிடம் முருகனாக வராமல் வேடனாக அவன் வந்தான். அவனைக் கண்டு வெறுத்து

ஓடினாள்; ஏசினாள். அவளது உள்ளத்தில் கொண்டுள்ள உண்மைக் காதலைச் சோதிக்க முருகன் பல விளையாடல்களை நிகழ்த்தினான். அவனுடைய பரீட்சைகளில் வெற்றிபெற்றாள் வள்ளி. நன்றாகப் படிக்காதவர்கள் பரீட்சைக்குப் பயப்படுவார்கள். வள்ளியெம்பெருமாட்டி நன்றாகப் படித்தவள்; முருகப் பெருமானைத் தவிர வேறு யாருக்கும் உரியோம் அல்லோம் என்று படித்தவள். அவளுடைய பக்குவம் உயர்ந்து நிற்பதைக் கண்டு அவளை முருகன் ஆட்கொண்டான். அவளுடைய முற்றாத் தனத்திற்கு இனிய பிரான் ஆனான்.

காம மிகுதியினாலே அவளுக்கு இனியவன் ஆனான் என்று நினைக்கலாமா? வெளித்தோற்றத்தையே உண்மை என்று நினைந்தால், அவனுடைய புறத் திருவிளையாடலைக் கண்டு அதுதான் மெய் என்று ஏமாற வேண்டியதுதான்.

ஒரு குழந்தை முற்றத்திலுள்ள நீர்த் தொட்டியைப் பார்க்கிறது. அதிலே முழுமதியின் வடிவம் நன்றாகத் தெரிகிறது. "அம்மா, சந்திரன் சந்திரன்!" என்று அதைப் பிடிக்க நீருக்குள் கையை விடுகிறது. நீர் கலங்கிவிட்டதால் பிரதிபிம்பம் பூர்ணமாக இல்லாமல் உடைந்துவிடுகிறது; மங்கிப் போகிறது. குழந்தை, "சந்திரன் உடைந்து விட்டானே, கலங்கிவிட்டானே!" என்று அழுதால் அது உண்மையாகுமா? தண்ணீரில் தோன்றும் பிரதி பிம்பம் உடைந்தது உண்மை; ஆனால் அது வெறும் தோற்றம். வானத்தில் முழுமதி நன்றாக ஒளிர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அப்படியே புறத்தோற்றத்தில், எம்பெருமானின் ஞானநாடகத்தின் வெளித்தோற்றம், உலக மாயையோடு சம்பந்தப்பட்டு மலங்களோடு சேர்ந்து தொழில் படுகிறவர்களுக்கு ஊன நாடகமாகத் தோன்றுகிறது. தன்னுடய கருணை மிகுதியினாலே, சாதியாலும், சமயத்தாலும், நாகரிகத்தாலும் மிகவும் தாழ்ந்தவள் என்று உலகினோர் நினைக்கும் வள்ளி நாயகியின் பக்குவம் உணர்ந்து, வலிய வந்து ஞானநிலை நிறைவுறத் செய்து ஆட்கொண்ட திருவிளையாடல் அல்லவா அது?

## இணைத்துப் பார்க்க வேண்டும்

கரும்பு வில்லும் முல்லை மலரம்பும் வெந்து காமவேள் படும்படியாக விழியால் செற்றவனுக்கு இனிய பிரான் என்று

பின்னே சொல்வதைக் கொண்டு முருகன் வள்ளியினிடம் கொண்ட காதல் வெறும் காமக்கிளர்ச்சி அன்று என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஞானயோகியாக அமர்ந்திருந்த சிவ பெருமான் தன் ஞானவிழியால் கருவேளைச் சுட்டெரித்துவிட்டுச் செவ்வேளைத் தோற்றுவித்தான். அந்த ஞானக் கண்களுக்கு இனியவன் ஞான உருவனாகத்தானே இருக்க வேண்டும்? அவன் செய்த திருவிளையாடல் ஞானாசிரியன் செய்யும் செயலாகக் கொள்வதற்குரியது. பக்குவம் அடைந்த ஆன்மாக்களை ஆட்கொள் வதற்காக ஓடிவரும் இனிய பிரான் அவன். 'முற்றாத் தனத்துக்கு இனியபிரான்' என்று சொன்னால் உண்மை விளங்காது என்று, 'வேள்பட விழியால் செற்றார்க் கினியவன்' என்றும் கூறினார். அந்த இரண்டையும் இணைத்துச் சொன்னதற்குக் காரணம் நாம் ஏமாந்து போகாமல் உண்மையை உணர வேண்டும் என்பதுதான்.

முருகன் ஞானாசிரியன் ஆதலாலே வள்ளிநாயகியின் பக்குவம் உணர்ந்து அவளிடம் தானே சென்று வலிய ஆட் கொண்டான். இது வேறு, அது வேறு என்று நினைக்கக் கூடாது. தனித் தனியாகப் பார்த்தால் வேறாகத் தோன்றும். அவனுடைய வரலாற்றோடு, கருணைத் திருவிளையாடல்களோடு சேர்த்துப் பார்க்க வேண்டும். மாரனுடைய அழிவிலே தோன்றிய குமாரன் காமவயப்படுவானா? நமக்கு மயக்கம் உண்டாகிறதா இல்லையா என்று சோதித்துப் பார்ப்பவரைப் போல வள்ளி கல்யாணத்தை முதலில் சொன்னார், அருணகிரியார். நாம் முடிவு கட்டுவதற்குள் அவனுடைய அவதார ரகசியத்தைப் பின்னே சொன்னார். அதனால் வள்ளி கல்யாணம் ஞானத் திருமணம் என்று புலனா யிற்று. முருகன் பூவுலகத்து வள்ளியை ஆட்கொண்டான் என்பதைக் கொண்டு அவன் நம்மைப் போன்றவன், மலத்தோடும் சம்பந்தப் பட்டவன் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. அவன் எத்தகையவன் தெரியுமா?

## அமரர் தலைவன்

**தேவேந்த்ர லோக சிகாமணியே.**

தேவர்களுக்கு எல்லாம் தலைவனாகிய இந்திர லோகத் திற்குச் சென்று பார்க்கலாம். முருகன் வந்துவிட்டான் என்றால் தேவர்கள் அவனைத் தூக்கித் தங்கள் தலையில் வைத்துக்

கொண்டு கூத்தாடுவார்கள். தேவலோகத்தில் வாழ்கிற அமரர்களுடைய தலைமேலே முடி இருக்கிறது; அந்த முடிக்குமேல் மணியாக அவன் விளங்குவான்.

அவர்களுடைய முடிக்கு அவன் மணியாக இல்லாவிட்டால் அவர்கள் தலையில் மகுடமே இராமற் போயிருக்கும். அவனை அவர்கள் வணங்காமல் இருந்திருந்தால் சூரன் அவர்கள் வாழ்வையே குலைத்திருப்பான்.

'தேவர்களின் முடிக்கு மணியாக விளங்குபவன்; நெற்றிக் கண்ணால் காமனையே சங்காரம் பண்ணின பெருமானுக்கு இனியவன்; வள்ளிக்கும் இனியவன்' என்று அடியிலிருந்து பார்த்தால், 'முருகன் தேவர்களுக்கும் உபகாரம் செய்த தலைமையுடையவன். காமத்தின் லேசமும் சார இயலாத ஞானவெளியில் உலவும் ஞானப்பிரான். அவன் தன்னுடைய கருணையினால் பக்குவமுள்ள ஆன்மாக்களை வலிந்து வந்து தடுத்து ஆட் கொள்வான்' என்ற கருத்துப் புலனாகும்.

நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல்
  காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற்கு இனியபி
  ரான்,இக்கு முல்லையுடன்
பற்றாக் கையும்வெந்து, சங்க்ராம
  வேளும் படவிழியால்
செற்றார்க்கு இனியவன், தேவேந்த்ர
  லோக சிகாமணியே.

(முதிர்ந்த நெற்று ஆகாமல் இருக்கும் பசிய கதிரையுடைய சிவந்த தினையைக் காக்கின்ற நீலநிறம் படைத்த வள்ளிநாயகியின் இளம்பருவ அடையாளமாகிய தனங்களுக்கு இனிமை தரும் பெருமான், கரும்பாகிய வில்லுடனும் முல்லையாகிய அம்புடனும் அவற்றைப் பற்றியிருந்த உடம்பும் வெந்து போர் புரிய வந்த காமனும் அழியத் தம் ஞானவிழியால் தண்டித்தவராகிய தட்சிணாமூர்த்தியின் திருவுள்ளத்துக்கு இனிமை தரும் குமாரன், தேவர்களின் தலைவனாகிய இந்திரனது லோகத்தில் யாவருடைய முடியிலும் மணிபோல வணங்குதற்குரியவனாக எழுந்தருளியிருப்பவன்.

இனியபிரான், இனியவன், சிகாமணி என்று கூட்டுக. இனிய பிரான்; எழுவாய்; மற்ற இரண்டும் பெயர்ப்பயனிலைகள். 'வள்ளியைக் காமுற்ற

வனைக் காமவிளையாடல் உடையவன் என்று எண்ணாதீர்கள். அவன் காமனை எரித்த ஞானவிழியிலே தோன்றியவன்' என்று முதலில் குறிப்பித் தார். 'ஏனலைக் காக்கின்ற வள்ளிக்கு இனிய பிரான் என்பதனால் இழிந்த நிலையில் இருப்பவன் என்று எண்ணாதீர்கள்; அவன் தேவேந்திர லோகத்தில் உள்ளவர்களால் வணங்கப் பெறுபவன்' என்று பின்னால் புலப்பட வைத்தார்.

நெற்றா – முதிராத. பசும் கதிர் – இளங்கதிர். ஏனல் – தினை. முற்றாத்தனம் – தளர்ச்சி பெறாத நகில். இக்கு – கரும்பு. பற்று ஆக்கை; ஆக்கை – உடம்பு. சங்க்ராமம் – போரைச் செய்த. வேள் – காமன். பட – அழிய. செற்றார் – சிவபிரான். சிகாமணி – முடிமணி. ஏ: அசைநிலை)

இது கந்தர் அலங்காரத்தில் 58–ஆவது திருப்பாடல்.

# எங்காயினும் வரும்

## 1

### நீண்ட பயன்

எந்த அறிவாளியும் தான் செய்கிற காரியம் ஒவ்வொன்றும் தனக்குப் பல காலத்திற்குப் பயன்படும்படி செய்ய வேண்டும் என்றுதான் விரும்புவான். ஒரு நாளைக்கு மட்டும் சோறு சமைத்துச் சாப்பிடுகிறவன் அன்றாடம் காய்ச்சி. பல காலத்துக்கும் பொருள் சேகரித்து வைத்துக் கொண்டு சுகமாகச் சாப்பிடுகிறவன் செல்வன். ''இது என்ன, அன்றாடம் காய்ச்சி வாழ்வு!'' என்று பழிப்புச் செய்கிறது உலகம். ஆனால் பல காலத்திற்குப் பலவகையில் பயன்படுகிற காரியத்தைச் செய்கிறவனை அறிவாளி என்று பாராட்டுகிறது.

அடுத்த ஆண்டுக்கு ஆடை வாங்கி வைத்துக் கொள்ளுகிறோம். பெண் பிறந்துவிட்டால், கல்யாணம் பண்ண வேண்டுமே என்று முன்கூட்டியே பணம் சேமிக்கிறோம். இவற்றையெல்லாம் நெடுங்காலத்திற்குப் பின்னே பயன்பட வேண்டும் என்பதற்காக இப்போதே செய்கிறோம். இவை அறிவுடையவன் செயல்கள்.

நம்முடைய உடம்பு நிலையானது அல்ல என்று நமக்குத் தெரியும். ஆயுளைப் பொறுத்து உடம்பு இருக்கிறதே தவிர உடம்புக்காக ஆயுள் இல்லை. உயிருக்கு இறுதி கிடையாது. என்றைக்கு இறைவனோடு ஒன்று படுகிறதோ அன்றைக்குத்தான் அதன் பயணம் முடிவடைகிறது. அந்த உயிருக்குப் பயன்படுகிற பொருளைச் சேமித்து வைக்க வேண்டாமா? நம்முடைய கைப் பொருளை யாசிப்பவர்களுக்கு இட்டு வைத்திருந்தால் அது நமக்குப் பின்னால் உயிருக்குப் பயன் அளிக்கும் என்று இந்தப் பாட்டில் சொல்ல வருகிறார் அருணகிரியார்.

பொங்கார வேலையில் வேலை விட்டோன்
அருள்போல் உதவ
எங்காயினும்வரும் ஏற்பவர்க்கு இட்டது.

*நாம் செய்த காரியத்தின் பயன் உடனேயே கிடைக்குமா என்று எதிர்பார்க்கக் கூடாது. தேசியச் சேமிப்புப் பத்திரம் வாங்கி னால் மறுநாளே காசு கொடுத்து விடுவார்களா? பல காலத் திற்குப் பிறகுதான் மொத்தமாக வரும்.*

## *ஔவையின் பாடல்*

*இதைப் பற்றி ஔவைப்பாட்டி சொல்கிறாள்.*

*''அப்பா உன்னுடைய வீட்டில் தென்னமரம் இருக்கிறதா? இருந்தால் நீ அதை எப்போது வைத்தாய்?''*

*''தென்னமரம் இருக்கிறது. நன்றாகக் காய்க்கிறது. அதை நான் வைத்தேனா? எப்போதோ எங்கள் தந்தை காலத்தில் அவர் வைத்தது.''*

*''அப்படியா? அவர் காலத்தில் வைத்த தென்ன மரம் இப்போது உனக்கு நல்ல தேங்காய், இளநீர் எல்லாவற்றையும் கொடுக்கிறது அல்லவா? தந்தையார் வைத்த போது அதற்கு வெறும் தண்ணீர்தான் விட்டார். அது இப்போது நல்ல இள நீராகத் தருகிறது அல்லவா?- அப்படியே நீ இப்போது தர்மம் செய்தால் அந்தத் தர்மம் விளைந்து பின்னால் உனக்கு நன்றாகப் பயன் தரும். தென்னமரம் தனக்கு இட்ட தண்ணீரை, பலகாலம் கழித்துத் தன் தலையாலே சுமந்து வெறும் நீருக்குப் பதிலாகச் சுவையுள்ள இளநீராகத் தருகிறது.''*

''நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா – நின்று
தளரா வளர்தெங்கு தாள்உண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்''

*''ஒருவனுக்கு உபகாரம் செய்தால் அதன் பயன் மறுபடியும் நமக்கு எப்படிக் கிடைக்கும் என்று நீ யோசிக்காதே. நிச்சயமாக நீ செய்ததைவிடக் குறைவாகத் கிடைக்காது; அதிகமாகவே கிடைக்கும். தென்ன மரத்திலிருந்து இதைத் தெரிந்து கொள்ள லாம்'' என்கிறாள் பாட்டி.*

## அறமும் அருளும்

இதைப் போலவே இந்தப் பாட்டில் அருணகிரியார் நமக்கு உபதேசம் செய்கிறார். ''நீ உன்பால் வந்து இரப்பவர்களுக்கு உன்னுடைய பொருளை இட்டால், அதனால் என்ன பயன் என்று நினைக்காதே. நீ அளிக்கிற கொடை உனக்கு எங்காயினும் வந்து உதவி பண்ணும். நீ செய்த தர்மம் ஒன்று, இறைவன் அருள் ஒன்று. இரண்டும் உனக்கு உதவி செய்ய எப்படி வரும் என்று உனக்கே தெரியாது. ஆனால் நீயே ஆச்சரியம் அடையும்படியாக எங்காயினும் அந்த இரண்டும் வந்து உதவும்'' என்கிறார்.

**பொங்கார வேலையில் வேலைவிட்டோன் அருள்போல் உதவ**
**எங்காயினும் வரும், ஏற்பவர்க்கு இட்டது.**

## அவர் விரதம்

உத்தியோகத்தில் இருந்த ஒருவருடைய அன்னை மிக்க தர்ம நினைவு உடையவள். அவள் இறக்கும்போது தன் புதல்வரிடம் ஒன்றைச் சொல்லிப் போனாள். ''அப்பா, குழந்தைகளுடைய மனம் மிகவும் மேன்மையானது. குழந்தைகளைத் திருப்தி செய்தால் ஆண்டவன் திருப்தி அடைகிறான். உன் கையில் எது கிடைத்தாலும் உடனே அங்கே எந்தக் குழந்தை இருந்தாலும் அதனிடத்தில் ஒரு பகுதியைக் கொடுத்துவிட்டு எஞ்சியதைச் சாப்பிடு'' என்று உபதேசம் செய்து போனார். அதிலிருந்து அவர் எப்போது எங்கே எதை உண்டாலும் குழந்தைகளுக்குக் கொடுக்காமல் சாப்பிடுவது இல்லை.

ஒருநாள் ஒரு சமாராதனைக்கு உண்ணச் சென்றிருந்தார். உள்ளே நுழையும் போது ஓர் ஏழைக் குழந்தை வீதியில் நின்று கொண்டிருந்தது. அதை உள்ளே போய்ச் சாப்பிடவிடாமல் அங்கே இருந்தவர்கள் விரட்டிக் கொண்டிருந்தார்கள். அவர் உள்ளே போய்ச் சாப்பிட உட்கார்ந்த போது அவருக்கு அந்தக் குழந்தையின் நினைவு இருந்தது. உடனே அன்னை சொன்ன உரையும் அவருக்கு நினைவுக்கு வந்தது. அந்தச் சமயம் இலையில் லாடு போட்டுக் கொண்டு வந்தார்கள். அவர் தம்முடைய லாடுவைக் கையில் வாங்கிப் பக்கத்தில் வைத்துக் கொண்டார். வெளியே வந்தவுடன் அந்த ஏழைப் பிள்ளையிடம் அதைக் கொடுத்தார். அதைத் தின்று அந்த பிள்ளை மிகவும் மகிழ்ச்சி

யோடு ஓடுவதைக் கண்ட பிறகுதான் அவருக்கு மனத்தில் அமைதி உண்டாயிற்று.

## பிள்ளைகளின் இயல்பு

அந்த மனிதருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். இரண்டு பிள்ளைகளும் நன்றாகப் படித்து வேலைக்குப் போய் விட்டார்கள். அவருக்கும் வயசு ஆகிவிட்டதால் வேலையி லிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார். ஒரு பிள்ளை எம்.ஏ. படித்து விட்டுத் திருநெல்வேலியில் பெரிய அதிகாரியாக இருந்தான். மற்றொருவன் கலெக்டராகக் கோயம்புத்தூரில் இருந்தான். அவருடைய மனைவி இறந்து போனாள். அப்போது அவர், 'இரண்டு பையன்களும் நல்ல வேலையில் இருக்கிறார்கள். ஒவ்வொருவர் வீட்டிலும் ஆறு ஆறு மாதம் இருந்து காலத்தை ஓட்டிவிடலாம். எதற்காகத் தனியாக நாம் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும்?' என்று நினைத்தார். உடனே தம்முடைய சொத்துக் களை எல்லாம் அவர்கள் இரண்டு பேருக்கும் சமமாக எழுதி வைத்துவிட்டு மூத்த பிள்ளையின் வீட்டுக்குத் திருநெல் வேலிக்குப் போய்விட்டார்.

அங்கே கொஞ்சநாள் சிறப்பாக உபசாரம் நடந்தது. அவருடைய மூத்த மருமகள் மிகவும் பிரியமாகத்தான் அவரிடம் இருந்தாள். ஒரு நாளைக்குத் தன் கணவனிடம் அவள் பேசிக் கொண்டிருந் தது மாமனார் காதில் விழுந்தது. ''அப்பா இங்கேயே இருக்க லாம். அவர் இங்கே இருப்பது நமக்கு எவ்வளவோ மகிழ்ச்சியாக இருக்கிறது. இருந்தாலும் நீங்கள் ஒருவர் மாத்திரம் அவருடைய பிள்ளை அல்லவே! உங்கள் தம்பி தம்மிடம் வந்து இருக்க வில்லையே என்று வருத்தப்படமாட்டாரா? அவருக்கும் தம்மிடம் தம் அப்பாவை வைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை இராதா? இவருக்கு அங்கே போக மனம் இல்லாவிட்டாலும் பேருக்கா வது பத்துநாள் போய் இருந்து வரச் சொல்லுங்கள். இல்லா விட்டால் நன்றாய் இராது'' என்று மிகவும் நயமாகப் பேசினாள்.

அதைக் கேட்டவுடனே, 'ஓகோ. நான் இங்கே இருப்பது அதற்குள் கைத்துவிட்டதோ? சரி, கோயம்புத்தூருக்கு இன்றைக்கே போய்விடுகிறேன்' என்று மனத்திற்குள் எண்ணிக் கொண்டு இரண்டாவது பிள்ளையிடம் சென்றார்.

இரண்டாவது பிள்ளையிடம் போய் ஒரு மாதம் இருந்திருப்பார். அவனுடைய மனைவி மூத்தவளையும்விடக் கெட்டிக்காரி. அவள் தன் கணவனிடம், ''என்ன, உங்கள் அப்பா இங்கேயே தங்கி விடலாம் என்று நினைத்துக் கொண்டு விட்டாரோ? திருநெல்வேலியில் நான்கு மாதம் இருப்பதற்குள் போதும் போதும் என்று அவர்களே விரட்டிவிட்டார்கள் போலிருக்கிறது. அங்கே அவமானப்பட்டு தான் இங்கே வந்து தங்கிவிட்டாரோ? எதற்காக இப்படி நகரங்களில் இருந்து அல்லற்படவேணும்? சிவனே என்று காவேரிக்கரையில் போய்ச் சுகமாக வாழலாமே. வேண்டுமானால் மாதம் இருபது ரூபாய் அனுப்பி விடுகிறது'' என்றாள்.

இதைக் கேட்டவுடன் கிழவருக்கு அழுகை அழுகையாக வந்தது. 'சொந்தப் பிள்ளைகள். இவர்களைப் படிக்க வைத்தவன் நான். இவர்களுக்கே என்னுடைய சொத்துக்களை எல்லாம் எழுதி வைத்திருக்கிறேன். என்னை வைத்துக் கொண்டு காப்பாற்ற வேண்டிய இவர்கள் என்னைக் கிராமத்திற்குத் தனியாக அனுப்பி விட்டுப் பணமாக உதவி செய்யப் போகிறார்களாம்! இவர்கள் பணமும் வேண்டாம்; இவர்கள் என்னைக் காப்பாற்றவும் வேண்டாம். இவர்கள் கண்ணிலேயே படாமல் எங்காவது போய்ப் பிழைத்துக் கொள்கிறேன்' என்று காசியை நோக்கி யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பி விட்டார்.

## காசியில் நிகழ்ந்தது

வடக்கே போனவருக்குப் பல விதமான துன்பங்கள் உண்டாயின. உடம்புக்கு நோய் வேறு வந்துவிட்டது. கங்கைக்கரையில் ஒரு நாள் மிகவும் சலிப்பு அடைந்த மனத்தோடு, ''ஆண்டவனே! என்னை இன்னும் ஏன் உயிரோடு வைத்துத் துன்பத்துக்கு உள்ளாக்குகிறாய்?'' என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டு உட்கார்ந்தார். சட்டென்று அந்தப் பக்கம் போன ஒருவன் அவரைக் கூர்ந்து பார்த்தான். ''யார் சுவாமி நீங்கள்? எந்த ஊர்?'' என்று கேட்டான். வடக்கே இந்தி மொழியே வழங்கக்கூடிய இடத்தில் அவர் தமிழில் பேசியதைக் கேட்டு, அவனும் தமிழன் ஆதலால் அவ்வளவு அன்போடு கேட்டான்.

''நானா? தமிழ்நாட்டைச் சேர்ந்தவன்'' என்றார் அவர்.

''நானும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவன்தான். தமிழ்நாட்டில் எந்த ஊர்?'' என்றான் அவன் மிக்க ஆவலோடு.

அவருக்குத் தம் ஊரைச் சொல்லிக் கொள்ள முதலில் மனம் இல்லை; ஊர், பிள்ளைகுட்டி எல்லாவற்றையும் மறக்க வேண்டும் என்று ஓடிவந்தவர் அல்லவா? இருந்தாலும் அவன் முகத்தைப் பார்த்தவுடனேயே அவருக்குப் பொய் சொல்ல மனம் வரவில்லை. உண்மையைச் சொல்லாமல் இருக்க நாக்கு இடம் கொடுக்கவில்லை. ''கள்ளக்குறிச்சி அப்பா, கள்ளக்குறிச்சி'' என்றார் சற்று உற்சாகம் இழந்தவராகவே.

''கள்ளக்குறிச்சியா? நானும் கள்ளக்குறிச்சிதான். கள்ளக் குறிச்சியில் யார்? உங்கள் பெயர் என்ன?'' என்று அவன் முன்னையும்விட மிக்க ஆவலோடு கேட்டான்.

''கள்ளக்குறிச்சியில் சுப்பிரமணிய தீட்சிதர் என்பார்கள் என்னை'' என்று அவர் சொன்னாரோ இல்லையோ, அவன் அப்படியே நெடுஞ்சாண்கிடையாக அவருடைய காலில் விழுந்தான். ''சுவாமி! என்னைத் தெரிகிறதா? உங்களால்தான் நான் இன்றைக்கு ஓர் ஆளாக இங்கே உத்தியோகம் செய்து பிழைத்துக் கொண் டிருக்கிறேன். நீங்களே என்னுடைய தந்தை. என்னுடைய வீட்டுக்கு வாருங்கள்'' என்று அவருடைய கால்களை இறுகப் பிடித்துக் கொண்டான்.

அவருக்கு ஒன்றும் புரியவில்லை. 'இவனை நாம் ஆளாக்கி விட்டோமா? நம்மால் ஆளாக்கிவிடப்பட்ட பிள்ளைகள் எல்லாம் நம்மையே விரட்டிவிட்டுச் சுகமாக இருக்கிறார்கள். இவனை நாம் முன்பின்கூட பார்த்தது இல்லையே! இவன் நமக்கு உதவி செய்ய வருகிறானே!' என்று வியப்பில் மூழ்கி விட்டார்.

''என்னை உங்களுக்குத் தெரியவில்லையா சுவாமி! வீட்டுக்கு வீடு கம்பக்காலைப் பிடித்துக் கொண்டு பிச்சை எடுத்து வந்தவன் நான். ஒரு நாளைக்கு ஒரு பெரிய சமாராதனையில் என்னை உள்ளே விடமாட்டோம் என்று எல்லோரும் அடித்து விரட்டினார்கள். நீங்கள் ஒரு பெரிய லாடுவை எடுத்து வந்து எனக்குக் கொடுத்தீர்களே! அந்த லாடு எனக்கு எவ்வளவு இனிமை யாக இருந்தது, தெரியுமா? அதைச் சாப்பிட்டவுடனேயே

எனக்கு, 'இனி இதுமாதிரி வாங்கிச் சாப்பிடக்கூடாது. உழைத்துச் சாப்பிட வேண்டும்' என்கிற எண்ணம் உதித்தது. அப்புறம் ஆண்டவன் அருளால் சிலருடைய உதவியின் மேல் படித்து, இங்கே வேலை செய்து கொண்டிருக்கிறேன். அன்றைக்கு நீங்கள் லாடு கொடுத்தீர்களே, எங்கள் தகப்பனார் மாதிரி. நீங்கள்தாம் என் தந்தை'' என்று அவன் விழிகளில் கண்ணீர் வாரப் பேசினான்.

அவர் அப்படியே சிலையாகச் சமைந்துபோய் உட்கார்ந் திருந்தார். அவர் மனம் என்ன என்னவோ நினைத்தது. 'ஆண்ட வனே, எனக்கு நீ இரண்டு பிள்ளைகளைக் கொடுத்தாய்; நல்ல வருமானத்தையும் அளித்தாய். என்னுடைய பொருளை எல்லாம் செலவழித்து அந்தப் பிள்ளைகளைப் படிக்க வைத்தேன். உன் அருளால் அவர்களுக்கு நல்ல வேலையும் கிடைத்தது. கல்யாண மும் ஆயிற்று. இனி எனக்கு என்று எதற்காகப் பணம் என்று என்னிடம் இருந்த எல்லாவற்றையும் அவர்கள் இரண்டு பேர்களுக்குமே கொடுத்தேன். வேறு யாருக்கும் இம்மி அளவும் கொடுக்கவில்லை. ஆனால் இவனிடம் நான்கு மாதம், அவனிடம் ஒரு மாதம் இருப்பதற்குள் பெற்ற தகப்பனாரையே வைத்துக் காப்பாற்ற அவர்கள் மேலும் கீழும் பார்த்தார்கள். அவர்கள் என்னிடம் அன்புடன் நடக்கவில்லை. நான் எப்போதோ, ஏதோ ஒரு நாளைக்கு இந்தப் பிள்ளைக்கு வேறு ஓர் இடத்தில் எனக்குக் கிடைத்த லாடு ஒன்றைக் கொடுத்தேன்; ஒருவேளைச் சாப்பாடுகூட இல்லை; கிடைத்ததிலே ஒரு பகுதியைக் கொடுத்தேன். அதுவா இத்தனை பெரிய அன்பாக இவன் உள்ளத்தில் விளைந்திருக்கிறது? இன்றைக்கு இவ்விடத்திலே என்னைக் காப்பாற்ற வந்து உதவுகிறது?' என்று நினைந்து உள்ளம் உருகினார்.

## இட்டது வரும்

பொங்கார வேலையில் வேலை விட்டோன்
அருள்போல் உதவ
எங்காயினும் வரும் ஏற்பவர்க்கு இட்டது.

ஏற்பவர்க்கு இட்டது எங்காயினும் வரும்; பசிக்கு ஏதாவது கிடைக்காதா என்று ஏங்குகிறவர்களை வலிய அழைத்து ''இந்தா

அப்பா; இதைச் சாப்பிடு'' என்று செய்கிற தர்மம் எங்காயினும் வரும். எந்த இடத்தில் எப்படி வரும் என்று சொல்ல முடியாது. நானூறு ரூபாயைப் பாங்கில் போட்டால் அது முதலும் வட்டியுமாக நமக்குப் பின்னே சேர்ந்து வருவதுபோல, நாம் என்றைக்கோ செய்த தர்மம் எங்காயினும் வட்டியும் முதலுமாக வந்து சேரும்.

## எங்காயினும்

எங்காயினும் என்றால் இந்த உலகத்தில் மாத்திரம் அல்ல. மறு பிறவியிலும் வரும். சிவஞானிக்கு ஒரு கவளம் அன்னம் போட்டால் எடுக்கிற பிறவியில் சோற்றுக்குப் பஞ்சம் இல்லாமல் வாழலாம். 'நீ அறம்செய்தால் உனக்கு அது பின்பு வந்து விளையும். பொருள் கொடுத்தால் அது பிறனால் உனக்குக் கொடுக்கப்படுகிற பொருளாக வந்து சாரும்' என்று ஔவையார் போன்றவர்கள் சொன்னார்கள். அருணகிரிநாத சுவாமிகள் அதையே சொன்னாலும் தமக்கு ஏற்ற முறையில் சொல்கிறார். அப்படிச் சொல்வதில் அவர் முத்திரை இருக்கிறது. அதற்கு ஓர் உவமை சொல்லுகிறார்.

''எங்கள் பெருமானுடைய அருள்போல், ஏற்பவர்க்கு இட்டது எங்காயினும் வரும்'' என்கிறார்; ''வேலையில் வேலை விட்டோன் அருள் எங்காயினும் வரும்; அப்படியே யாசிப்பவர் களுக்கு அறம் செய்தால் அந்த அறப்பயனும் வரும்'' என்பது அவர் கருத்து.

# 2

## திருவருள் எங்காயினும் வரும்

இறைவன் திருவருள் எப்படி வரும் என்று சொல்ல முடியுமா? எல்லோரும் அவரவர்களுடைய வாழ்க்கையில் நன்றாகக் காணலாம். இறைவன் திருவருளினாலே நல்லது பொல்லாதது ஆகிய இரண்டுமே வந்து கொண்டிருந்தாலும் தீமை வரும்போதுதான், ''கடவுள் என்னைப் இப்படி சோதிக்கி றாரே!'' என்று பலர் நினைக்கிறார்கள். இறைவனுடைய அருளை உணர்வதற்கு நமக்கு மனம் இருந்தால் வாழ்க்கையில் ஒவ்வொரு

கணமும் அவனுடைய திருவருளை அநுபவிக்கலாம்; மகாத்மா காந்தி அநுபவிக்கவில்லையா?

## எதிர்பாராத நிகழ்ச்சி

என்னுடைய பக்கத்து வீட்டில் ஒரு பெரிய உத்தியோகஸ்தர் இருந்தார். ஒருநாள் காரியாலய விஷயமாக டெல்லிக்குப் போக விமானச்சீட்டு முதற்கொண்டு வாங்கி வைத்துவிட்டார். அன்றைக்கு என்று அவருடைய குழந்தைக்குச் சற்று உடம்பு சரியில்லை. மனைவி அவரைப் போகக்கூடாது என்று தடுத்து விட்டாள். தம்முடைய மனைவியிடம் அவருக்குக் கடுங்கோபம். மறுநாள் பத்திரிகையைப் பார்த்தார்; அவர் கிளம்பிச் செல்ல இருந்த விமானம் நடுவழியில் எரிந்துபோய் விழுந்து விட்டதாகச் செய்தி வந்திருந்தது. அதைப் பார்த்தவுடன்தான், 'இறைவனுடைய திருவருள் அல்லவா நம்மை ஊருக்குப் போகாது தடுத்திருக்கிறது?' என்று நினைந்து உருகினார்; 'மனைவியிடத்தில் கோபித்துக் கொண்டோமே!' என்று வெட்கப்பட்டார்.

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் எதிர்பாராத நன்மைகள் இப்படி எத்தனையோ நம்முடைய சக்திக்கும் அப்பாற்பட்டனவாக நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் இறைவனுடைய திருவருள் என்று நினைக்க மனம் இல்லை.

எதிர்பாராமல் வந்து நிற்கிற லாபத்தைக் காண்கிறோம். அதை நம் அதிருஷ்டம் என்று சொல்கிறோம். ஒருவன் எம்.ஏ. பரீட்சை எழுதுகிறான். கல்யாணம் நடக்கிறது. எம்.ஏ.யில் தேர்ச்சிபெற்ற செய்தி வருகிறது. உடனே வேலை கிடைக்கிறது. அவன் அது தன் மனையினுடைய அதிருஷ்டம் என்று நினைக்கிறான்; பானை பிடித்தவள் பாக்கியம் என்கிறான். இறைவன் திருவருள் என்கிற நினைப்பு அவனுக்கு வருகிறதா? இல்லை.

## எல்லாம் திருவருட் செயல்

எதிர்பாராத வகையில் யாராவது எங்காயினும் உதவி செய்தால் அதை அவன் செய்தான் என்று நினையாமல் அவனைக் கருவியாகக் கொண்டு இறைவன் திருவருள் துணை செய்தது என்று நினைக்க வேண்டும். துன்பம் வந்தால் யாரோ நமக்கு

வேண்டுமென்றே செய்ததாக நினைக்கிறோம். அதனால் அவனி டம் கோபப் படுகிறோம். எதிர்பார்த்து விளைந்தால் நம்மால் விளைந்தது எனச் சொல்லிக் கொள்ளலாம். எதிர்பாராமல் எத்தனை காரியங்கள் நடக்கின்றன! எதிர்பாராமல் நல்லது வந்தாலும் ஆண்டவன் திருவருள் என்று நினைக்க வேண்டும்; தீயது வந்தாலும் அவ்வாறே நினைக்க வேண்டும். உடம்புக்கு நோய் வந்துவிட்டது. நோயைக் குணப்படுத்துபவர் டாக்டர் என்கிற நம்பிக்கை நமக்கு வந்துவிட்டதானால் அவர் இனிப்பு மருந்து கொடுத்தாலும் குடிக்கிறோம்; கசப்பு மருந்து கொடுத் தாலும் குடிக்கிறோம். டாக்டரிடம் யாராவது, ''இனிப்பு மருந்தே கொடுங்கள்; கசப்பு மருந்து வேண்டாம்'' என்று சொல்ல முடியுமா? இன்ன நோய்க்கு இன்ன மருந்து கொடுக்க வேண்டும் என்பது அவருக்குத்தானே தெரியும்?

உயிருக்கு வந்துள்ள நோய் பிறவி. நம்முடைய புண்ணிய பாவ வினைகளைக் கழுவிவிட வேண்டும் என்பதற்காகவே ஆண்டவன் இந்தப் பிறவியைக் கொடுத்திருக்கிறான். அவன் அருளால் நம்முடைய ஊழ்வினைக்கு ஏற்ப இன்ப துன்பங்கள் விளைகின்றன. துன்பம் வந்தாலும் இன்பம் வந்தாலும் ஆண்டவ னுடைய திருவருள் என்று நினைந்து வாழ்பவர்களுக்குத் துன்பத்தினாலே வருத்தம் இராது. ஆண்டவனுடைய சோதனை களில் தேர்ச்சி பெற்றால்தான் அவனுடைய அருள் பூரணமாகக் கிடைக்கும் என்று அவர்கள் நினைப்பார்கள். இன்ப துன்பம் இரண்டும் அவர்களுக்குச் சமமாகவே இருக்கும்.

ஒரு சின்னக்குழந்தையிடம், ''ஒரு மணு இரும்பு கனமா? ஒரு மணு பஞ்சு கனமா?'' என்று சிலர் வேடிக்கையாகக் கேள்வி கேட்பது வழக்கம். கொஞ்சம் மந்தமான குழந்தையாக இருந்தால் பஞ்சைவிட இரும்பு கனமாயிற்றே என்று எண்ணி, ''இரும்பு தான் கனம்'' என்று சொல்லும். புத்திசாலிக் குழந்தையோ, ''ஒரு மணு என்பதே குறிப்பிட்ட கனத்தைச் சொல்வது தானே? பஞ்சாய் இருந்தால் என்ன? இரும்பாய் இருந்தால் என்ன? இரண்டு சமம்'' என்று சொல்லும். அப்படி, 'இன்பமாக இருந் தால் என்ன? துன்பமாக இருந்தால் என்ன? இரண்டும் ஆண்ட வன் அருள்தான்' என்று நினைப்பவர்களுக்கு இன்பமும் துன்ப மும் சமமாகவே இருக்கும். இன்பத்தைக் கண்டு அவர்கள் மனம்

புதிய மகிழ்ச்சியை அடையாது. துன்பத்தைக் கண்டு அவர்கள் மனம் அவலப்படாது.

"நன்றாங்கால் நல்லவாக் காண்பவன் அன்றாங்கால்
அல்லற்படுவ தெவன்"

என்பது திருக்குறள்.

'நல்லதுதான் வேண்டும், தீயது வேண்டாம்' என்று சொல்வதற்கு நமக்கு என்ன உரிமை இருக்கிறது? இரண்டையும் ஒரே மாதிரியாகப் பார்க்க வேண்டும். ஆண்டவனுடைய அடியார்கள் அப்படித்தான் உணர்கிறார்கள்.

நாம் ஒரு மனிதனைத் தேடிக் கொண்டு போகிறோம். அவன் வெளியூருக்குப் போயிருப்பதாகக் கேள்விப்பட்டே போகிறோம். ஒருகால் வந்திருக்க மாட்டானா என்கிற நினைப்பு. அப்போது தான் அவனும் ஊரில் இருந்து வந்திருப்பான். முதல்நாள் போயிருந்தால் அவனைப் பார்த்திருக்க முடியுமா? சில மணி நேரங்கள் முன்பாகப் போயிருந்தாலும் அவனைப் பார்த்திருக்க முடியாது. 'ஆண்டவன் அருள் அல்லவா இப்படிக் கூட்டி வைத்தது?' என்று நினைத்துக் கொள்வதே முறை.

நாம் நிச்சயமாக ஒன்றை நம்பிக் கொண்டிருக்கும் போது அது அப்படியே நடந்து விடுகிறது. அப்போது அதிருஷ்டம் என்று நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம். "ஆண்டவன் திருவருள் அவ்வாறு வந்து உதவுகிறது' என்று நினைக்கும்படி இந்தப் பாட்டில் அருணகிரியார் குறிப்பிடுகிறார்.

இறைவன் அருள் முன்அறிவிப்பு அனுப்பிவிட்டு வராது. இறைவனிடத்தில் பக்திசெய்ய வேண்டும். நம்மை எப்படிக் காப்பாற்ற வேண்டுமென்பது அவனுக்குத் தெரியும். நாம் நினைக்கிறபடி எல்லாம் வேலை செய்யும் வேலைக்காரனா அவன்? குழந்தை கேட்கிறபடி எல்லாம் உணவுப் பண்டங்களைக் கொடுத்து விட்டால் குழந்தை உருப்படுமா? பலாப்பழம் வேண்டு மென்று குழந்தைக் கத்துகிறது. தாய் அதை அதன் கண்ணில் படாம லேயே ஒளித்து விடுகிறாள். குழந்தை மாந்தம் வந்து துன்பப்பட்டு இறந்துவிடக்கூடாது என்கிற மேலான கருணையால் அப்படிச் செய்கிறாள். நம்முடைய ஆத்மாவுக்கு இன்பம் அளிப்பது எது, துன்பம் அளிப்பது எது என்று நமக்கு எப்படித் தெரியும்? எம்

பெருமான் அல்லவா, நாம் உய்வு பெற வேண்டும் என்ற கருணை உள்ளத்தோடு அருள் செய்து கொண்டிருக்கிறான்? 'டாக்டர் கொடுக்கிற மருந்து கசப்பாக இருக்கிறதே' என்றால் அது நம் நோயைப் பொறுத்தது. நம்முடைய பாவ புண்ணிய வினைகளுக்கு ஏற்ப ஆண்டவனுடைய அருள் துன்பமாகவும் வரலாம்; இன்பமாகவும் வரலாம். டாக்டரிடத்தில் நம்பிக்கை வைத்து, கசப்பு மருந்தாய் இருந்தாலும், இனிப்பு மருந்தாய் இருந்தாலும் விருப்புவெறுப்பு இன்றிச் சாப்பிடுவதைப் போல, துன்பமாக இருந்தாலும், இன்பமாக இருந்தாலும் ஆண்டவ னிடத்தில் நம்பிக்கை வைத்து, இரண்டையும் அவன் திருவரு ளாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

துன்பம் இன்பம் கலந்த வாழ்வில் ஆண்டவன் அருள் என்பது தனியாக வருவது இல்லை. அவையே அவனுடைய அருள்தான். இத்தகைய மனப்பாங்கு வந்துவிட்டவர்கள் இடுக்கண் வந்தால், அதைக் கண்டு அஞ்ச மாட்டார்கள்.

நமக்குத் துன்பம் வந்தால் நெஞ்சு நடுங்குகிறது. இன்பம் வந்தால் கிளுகிளுப்பு உண்டாகிறது. துன்பத்தைத் துன்பம் என்று பார்க்காமல் ஆண்டவனின் அருள் என்று நினைப்பார்க்கு, ''எந்நாளும் துன்பமில்லை'' என்று உறுதி வந்துவிடும்.

ஒருத்திக்கு இடுப்பு வலி எடுக்கிறது. மிகவும் வேதனைப்பட்டுக் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். குழந்தையின் முகத்தைக் கண்டவுடனே அவளுக்கு அந்த வேதனைகள் மறந்து போகின்றன. எல்லையில்லா மகிழ்ச்சி உண்டாகிறது. அவளுடைய துன்பத்தின் முடிவு இன்பமாக இருப்பதனாலே அந்த வேதனையை அவள் நன்மையாகவே கருதுகிறாள். நாம் அநுபவிக்கிற துன்பங்கள் எல்லாம் நம்முடைய பாவங்களைக் கழுவுகின்றன என்கிற நினைப்புடையாருக்குத் துன்பம் ஒன்றும் செய்வதில்லை. துன்பத்தை அநுபவிக்கும்போது அது ஆண்டவனுடைய திருவருள் என்ற நினைப்பும், அவன் நம்மைக் காப்பாற்றுவான் என்கிற நம்பிக் கையும் உண்டாகும்.

## அருள் வரும் வழி

இறைவனுடைய திருவருள் எப்படிக் காப்பாற்றும் என்று சொல்ல முடியுமா? ஒரு பாலைவனத்திலே போய் நிற்பான்.

தாகத்திற்குத் தண்ணீர் கிடைக்கவில்லையே என்று அவன் துன்பப்பட்டுக் கொண்டிருப்பான். அவ்வழியே போகிறவன் தனக்காக எடுத்துச் செல்லும் இளநீரை இவனுக்குக் கொடுத்து விடுவான். ஆண்டவன் திருவருள் இவன் தாகத்திற்கு இளநீராக வரும். எம்பெருமானின் அருள் எங்கு வரும், எப்படி வரும் என்று சொல்ல முடியாது; எங்காயினும் வரும்.

இவன் வாழ்க்கையில் மிகவும் அல்லற்பட்டவனாக இருப் பான்; இவனை வைத்துத் தாங்கும் சிறந்த பிள்ளையாக வரும்; அடுத்த பிறவியில் இவனைப் பெரிய பணக்காரன் என்று எல் லோரும் போற்றக் கூடிய செல்வமாக வரும். அதைப் போலவே யாசிப்பவர்களுக்கு இடுவதும் வீணாகப் போகாது. எங்காயினும் வரும் என்று சொல்கிறார் அருணகிரியார்.

## 3

**பொங்கார வேலையில் வேலைவிட்டோன் அருள்போல் உதவ எங்காயினும் வரும் ஏற்பவர்க்கு இட்டது.**

(வேலை – சமுத்திரம். பொங்கு ஆர வேலையில் – முத்துகளையுடைய பொங்கும் சமுத்திரத்தில்.)

முத்துக்கள் உண்டாகும் சமுத்திரத்தில் வேலை ஏவிய வனுடைய அருள்போல, ஏற்பவர்க்கு இட்டது எங்காயினும் வரும் என்கிறார். "இறைவன் அருள் இன்ன இடத்தில் இப்படி வரும், இப்படி உபகாரம் செய்யும் என்று சொல்ல முடியாமல் எங்காயினும் வந்து உதவி செய்வது போலவே, இரப்பவர் களுக்குத் தர்மம் செய்கிற பொருளும் வந்து உதவும். இந்த உலகத்தில் மாத்திரம் அல்ல; வேறு உலகத்தில் வேறு பிறவி யிலும் வந்து சாரும். வேளாண்மை செய்தால் விளைவு உண்டு என்பது போலவே பிறருக்குக் கொடுத்தால் அதற்கும் விளைவு உண்டு" என்கிறார் அருணகிரியார்.

### கடல் சுவற வேல் விட்டவன்

சூரபன்மனுக்கும் முருகப்பெருமானுக்கும் போர் நடந்தது. என்ன என்ன உருவங்களையோ எடுத்துக் கொண்டு சூரன் எதிர்த்தான். எல்லாவற்றையும் முருகன் அழித்துக் கொண்டே

வந்தான். இனி அப்பெருமானிடத்தில் இருந்து தப்ப வழி இல்லையே என்று அஞ்சி அவன் மாமரமாக உருவெடுத்துக் கடலுக்குள் போய் ஒளிந்து கொண்டான். மிகமிகப் பாவியாகிய அவனுக்குக் கடல் ஒளிய இடம் கொடுத்தது. ஆறுமுகநாதன் தன் திருக்கரத்தில் இருந்த வேலைக் கடலுக்குள் விட்டான். அது சுவறிப்போக அதற்குள் கிடந்த முத்துக்களும் மணிகளும் பளிச்சுப் பளிச்சு என்று ஒளிவிட்டன. சூரபன்மன் தலைகீழாக ஒரு மாமரமாய் இருப்பதும் தெரிந்தது. தன் வேலினால் மாமரத்தைப் பிளந்து, அதற்குள் இருந்த சூரனும் மாளச் சங்காரம் பண்ணினான் எம்பெருமான். சேவற்கொடியாகவும் மயில்வாகன மாகவும் அவனை ஆக்கிக் கொண்டான்.

கடல் முத்துக்களை மாத்திரம் வைத்துக் கொண்டிருந்த போது அதனிடம் முருகனுக்குச் சினம் இல்லை. பிறருக்குத் தீங்கு பண்ணிக் கொண்டிருந்த, பிறருடைய இன்ப வாழ்வைக் குலைத்து கொண்டிருந்த, சூரனுக்கு ஒளிய இடம் கொடுத்த போதுதான் அதனிடத்தில் அவனுக்குக் கோபம் வந்தது. தண்ணீர் சுவறிப் போகும்படியாக வேலை விட்டான்.

கெட்டவனை உள்ளே கொண்ட கடலைச் சுவறிப் போகும் படி வேலை விட்ட முருகவேள் நல்லவர்களுக்கு நல்லவன். நம் மனத்தில் கெட்ட எண்ணங்கள் ஒளிய இடம் கொடுக்காமல் அற நினைவுகளை வைத்துக் கொண்டு அவனிடத்தில் பக்தி செய்து வாழ்ந்தால் அவனுடைய அருள் எங்காயினும் வந்து உதவும். அப்படியே யாசிப்பவர்களுக்கு நாம் இடுவதும் வீண் போகாமல் எங்காயினும் வந்து உதவும்.

# 4

இது தெரிந்தும், ஆண்டவனிடம் பக்தி கொள்ளாமல் பொருளை ஈட்டி, அதைப் பிறருக்குக் கொடுக்காமல் தமக்கே பயன்பட வேண்டும் என்று பலர் சேமித்து வைத்துக் கொள்ளுகிறார்களே, அவர்களைப் பார்த்து அருணகிரியார் ஒன்று சொல்ல வருகிறார்.

**வங்காரமும் உங்கள் சிங்கார வீடும் மடந்தையரும்**
**சங்காதமோ கெடுவீர்! உயிர் போம்அத் தனி வழிக்கே?**

## தனி வழி

தம்மிடம் உள்ள பொருளை யாசிப்பவர்களுக்கு இடாமல் வைத்துக் கொண்டிருப்பவர்கள் என்ன நினைக்கிறார்கள்? தம்மிடமுள்ள பொருள், தங்கம், தாங்கள் கட்டிக்கொண்ட அழகான வீடு - இரண்டு லட்சம் பெறுமான அளவில் கட்டப்பட்டிருக்கும் சிங்கார பங்களா - மனைவி இவைகள் எல்லாம் தங்களுக்கு எப்போதும் துணையென நினைக்கிறார்கள். வங்காரம் - தங்கம்: தெலுங்கில் பங்காரு என்பார்கள். அருணகிரியார் சொல்லுகிறார். ''நீங்கள் தனியாகப் பிரயாணம் செய்ய வேண்டிய நெடும்பாதை ஒன்று இருக்கிறதே, மரணத்தின்பின்; உயிர் பிரயாணம் செய்யப் போகிற அந்தத் தனி வழியில் இவை எல்லாம் துணை செய்யுமா? துணை செய்யும் என்று பிறருக்குக் கொடுக்காமல் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே! கெடுபவர்களே!'' என்று இடித்துச் சொல்கிறார்.

## பொன்னும் வீடும் மடந்தையரும்

ஒருவன் தன்னிடம் இருக்கும் பணத்தை எல்லாம் தங்கமாக மாற்றி வைத்துக் கொள்கிறான். தங்கத்தின் மதிப்பு என்றைக்கும் நிலையானது என்று நினைக்கிறான். எப்போதும் அது துணையாக இருக்கும் என்று நினைக்கிறான்.

பெரிய பங்களா கட்டிக் கொள்கிறான். அதில் எத்தனை அறைகள் இருக்கின்றன தெரியுமா? மாடு கட்டும் கொட்டகையே மிகப் பெரியதாக, மிக அழகாக இருக்கிறது. சாப்பாட்டுக் கூடம், படுக்கை அறை முதலிய பல அறைகள் சித்திர வேலைப் பாட்டோடு கட்டியிருக்கிறான். இரண்டு லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கும் அந்த மாளிகையில் ஆண்டவனுக்கு ஓர் இடம் இல்லை. மனத்தில் இருந்தால் அல்லவா அங்கே இருக்கும்? இறைவனை மறந்து சிங்காரமாகக் கட்டிய வீடு அது. அந்த வீட்டைத் தன்னுடைய மனைவியின் திருவுள்ளப்படி கட்டியிருக்கிறான். அவள் என்ன வசதி சமையலறையில் வேண்டும் என்றாளோ அவற்றையெல்லாம் அமைத்திருக்கிறான். அவள் விருப்பப்படியே நல்ல காற்று வரும் இடத்தில் படுக்கை அறையை வகுத்திருக்கிறான். சிங்கார வீட்டில் அந்தச் சிங்கார மடந்தையுடன் வாழ்கிறான். தன்னுடைய கைப்பொருளை

மனைவிக்கே எத்தனை பேர்கள் கொடுத்து விடுகிறார்கள்? காரணம் அவளால் இன்பம் கிடைக்கிறது என்ற நினைவுதான்.

இப்படித் தம்மிடம் இருக்கும் பொருளைப் பிறர்க்குக் கொடுக்காமல், யாசிப்பவர்க்கு இடாமல் தங்கமாக வைத்துக் கொண்டிருப்பவர்களும், வீடாக வைத்திருப்பவர்களும், மடந்தை யரோடு வாழும் வாழ்வாக வைத்திருப்பவர்களும் கடைசியில் செத்துத்தான் போகிறார்கள். அவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு திட்டமாக இத்தனை காலம் வாழலாம் என்ற வரை யறையாவது உண்டா?

"நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு"

என்கிறார் வள்ளுவர்.

## திருமூலர் சொல்வது

திருமூலர் நமக்கு ஒரு காட்சியைக் காட்டுகிறார்.

ஒரு செட்டியார், அவருக்கு நாக்குச் சுவை அதிகம். அதற்கு ஏற்றபடி அவருடைய மனைவியும் நன்றாகச் சமைத்துப் போடும் ஆற்றல் படைத்திருந்தாள். தினமும் அவரே பையை எடுத்துக் கொண்டு காய்கறிக் கடைக்குப் போய்ப் பிஞ்சுக் கத்தரிக்காய், பிஞ்சு வெண்டைக்காய் முதலியன வாங்கி வருவார். அவருக்குப் புடலங்காய் என்றால் உயிர். ஒருநாள் அவர் கடைக்குப்போய் இருந்தார். நல்ல பிஞ்சுப் புடலங்காய் கட்டுக் கட்டாக வந்திருந்தது. அவருக்கு நாக்கிலே நீர் சுரந்தது. உடனே இரண்டு புடலங்காயை வாங்கி ஒடித்துப் பையில் போட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்து மனைவியிடம் கொடுத்து அடிசில் பண்ணச் சொன்னார். அந்த அம்மாளும் சுருள்சுருளாக நறுக்கிச் சுவைபடச் சமையல் பண்ணினாள். அதை நன்றாகச் சப்புக் கொட்டிச் சாப்பிட்டார் செட்டியார்; உள்ளே போய் இளைப்பாறினார்.

மனைவி வந்தவுடன், "இன்றைக்கு நீ புடலங்காய்க் கறி பண்ணியிருந்தாயே, மிக அருமை, அருமை!" என்று மிகவும் இரகசியமாகப் பேசினார். அதற்குப் பின்பு, "என்னவோ இடப் பக்கமாக வலிக்கிறதே!" என்று சொல்லிப் படுத்தார். படுத்தவர் 'படுத்தவர்தாம்; எழுந்திருக்கவே இல்லை.

"அடப்பண்ணி வைத்தார்; அடிசிலும் உண்டார்;
மடக்கொடி யாரொடு மந்தணம் கொண்டார்;
இடப்பக்க மேஇறை நொந்ததே என்றார்;
கிடக்கப் படுத்தார்; கிடந்தொழிந் தாரே!"

*அத்தனை அன்புடைய மனைவி அவருடன் போகவில்லை. அவர் செல்வமும் போகவில்லை. யாவும் இந்த உடம்பு வாழும் வரைக்கும் இங்கே தொடர்புடையவைபோல இருக்கும்.*

## *எதுவரை வரும்?*

"அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே

*என்பார் பட்டினத்தார். பணம், உத்தியோகம், வீடு எல்லாம் வீட்டில் இருக்கிறவரைக்குந்தான். உயிர் இருக்கிற வரைக்கும் அநுபவிக்கலாம். உயிர் போம் காலத்தில் அவை பயன்படுமா? கூட வருமா? வரா. அவை வீட்டோடு சரி. அன்புடைய மடந்தை யராவது கூட வருவார்களா?*

"விழி அம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே."

*கிராமங்களில் பெண்கள் சுடுகாட்டுக்குப் போகும் வழக்கம் இல்லை. பிணத்தை எடுத்துக் கொண்டு போகும்போது தெரு முனை வரையில் வருவார்கள். சுடுகாட்டுப் பக்கம் திரும்பிய வுடனேயே அவர்கள் ஆற்றுக்குப் போய்விடுவார்கள். ஆகவே பெண்களும் வீதிமட்டுந்தான் வருவார்கள்.*

*அப்பா அப்பா என்று விம்மி விம்மி அலறி அழுகின்ற மைந்தர்களாவது கூட வருவார்களா? அவர்களும் சுடுகாட்டோடு நின்று விடுவார்கள்;*

"விம்மிவிம்மி இரு
கைத்தல மேல்வைத் தழுமைந் தருஞ்சுடு காடுமட்டே"

*அப்போது நம்மைத் தொடர்ந்து வருவன எவை?*

**'பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே.'**

*நாம் செய்கின்ற புண்ணிய பாவ வினைகளே நம்மைத் தொடர்ந்து வரும் என்கிறார் பட்டினத்தார்.*

"அத்தமும் வாழ்வும் அகத்துமட் டே;விழி அம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டே;விம்மி விம்மிஇரு
கைத்தலம் மேல்வைத் தழுமைந் தரும்சுடு காடுமட்டே;
பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே."

## *இருவினை*

*புண்ணிய பாவ வினை என்பன உலகிலுள்ள மக்களின் கண்ணுக்குத் தெரியாதவை. அவை உண்டென்று அவற்றின் விளைவாகிய இன்ப துன்பங்களை அநுபவிக்கும்போது உணர்ந்து கொள்ள முடிகிறது.*

*இரண்டு கம்பிகள் ஒரேமாதிரியாகத்தான் ஓடுகின்றன. இரண்டுக்கும் வித்தியாசம் ஒன்றும் தெரியவில்லை. ஒரு கம்பியைத் தொடுகிறான்; ஒன்றும் தெரியவில்லை. மற்றொரு கம்பியைத் தொடுகிறான்; டக்கென்று 'ஷாக்' அடிக்கிறது. இந்த விளைவைக் கொண்டே இது மின்சாரக் கம்பி, தொடக்கூடாது என்று உணர்கிறான். சாதாரணக் கம்பிக்கும் மின்சாரக் கம்பிக்கும் வித்தியாசம் கண்ணுக்குத் தெரிகிறதா? இரு வினைகளும் இப்படியே அநுபவமாக வந்து தாக்கும்போதுதான் உண்மை தெரியும்.*

*ஒரு தகப்பனாருக்கு இரண்டு பிள்ளைகள், இரட்டைக் குழந்தைகளாகப் பிறக்கிறார்கள். இரண்டு பேரையும் படிக்க வைக்கிறார். ஒருவனுடைய முயற்சி எல்லாம் பயன் அளித்து வருகிறது. மற்றொருவன் தொட்டது எல்லாம் தோல்வியாக முடிகிறது. அவன் எம்.ஏ. தேர்ச்சி பெற்று விட்டு நல்ல உத்தியோகத்தில் இருக்கிறான்; இவன் எஸ்.எஸ்.எல்.ஸி.கூடப் படிக்காமல் வீட்டில் இருக்கிறான். இதற்குக் காரணம் என்ன? இரண்டு கம்பியும் ஒன்றாகத் தோன்றினாலும் ஒரு கம்பியைத் தொடும்போது 'ஷாக்' அடிப்பதனால் அது மின்சாரக் கம்பி என்று தெரிந்து கொள்வதுபோல, இரண்டு பிள்ளைகளும் ஒரே தகப்பானாருக்கு, ஒரே சமயத்தில் பிறந்து, ஒரே வீட்டில் வளர்ந்து வந்தாலும் அவனுடைய புண்ணிய வினையால் அவனுக்கு எல்லாக் காரியமும் அநுகூலமாகின்றன; இவனுடைய பாவம் இவன் முயற்சி எல்லாம் தோல்வி அடையும்படியாகச் செய்கிறது. இப்படி உணர்ந்து கொள்ளாமல் வேறு எப்படி உணர்ந்து கொள்*

வது? இந்தப் பிறப்பில் அவர்கள் எவ்விதமான பாவபுண்ணியங்களையும் செய்யவில்லையாதலால் அவர்கள் முன் பிறப்பில் செய்தவை தொடர்ந்து வருகின்றன என்று கொள்ள வேண்டும்.

ஆகவே, ஒருவன் இறக்கும்போது அவன் உயிர் செல்கின்ற தனி வழியே வீடு தொடர்ந்து வருவது இல்லை. அவன் சேர்த்து வைத்திருக்கிற தங்கம், அவனுடைய மனைவி, மைந்தர்கள் யாரும் தொடர்ந்து வருவது இல்லை. புண்ணிய பாவமே தொடரும்.

## உயிர் போம் வழி

உயிர் போகின்ற கடைசி வழி எப்படிப்பட்டது? தனி வழி அது. யாரும் உடன் வரமுடியாத தனி வழி. உடம்போடு போகத் துணை உண்டு; உயிரோடு போகத் துணை இல்லை.

''பயந்த தனிவழி''

என்று ஓர் இடத்தில் அருணகிரியார் சொல்கிறார்.

''நும்மை நேடிவரும் தொலையா வழி''

என்று முன்பு சொல்லியிருக்கிறார். ''நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தானாகவே உங்களைத் தேடி வருகிற தொலையா வழி அது. அதில் நீங்கள் யாத்திரை செல்லும் போது துணை வேண்டுமென்றால், மலை ஆறு கூறுகளாகப் போகும்படி வேலை விடுத்த வேலாயுதனை வணங்கி, ஏற்றவர்களுக்குக் கீரை இருந்தாலும், வெந்தது எது இருந்தாலும பகிர்ந்து கொடுக்கும் நிலையான மாதவத்தைச் செய்யுங்கள். அந்தத் தர்மந்தான் தொலையா வழிக்குப் பொதி சோறும் உற்ற துணையுமாக உங்களுக்கு வந்து உதவும்'' என்று முன்பு எல்லோரையும் பார்த்துச் சொன்னார்.

ஒரு நாள் இரண்டு நாள் போகக்கூடிய வழியாக இருந்தாலே, ''துணையோடல்லது நெடு வழி போகேல்'' என்று சொல்வார்கள். உயிர் எத்தனை பிறவிகள் யாத்திரை செய்யப்போகிறதோ தெரியாது. அது போகிற வழியும் தொலையா வழி; நெடு வழி; அதுவும் யாரும் துணைக்கு வர இயலாத தனி வழி. பொன், பொருள், மனைவி, மக்கள் எல்லாம் உயிர் போகின்ற அந்தத்

தனி வழிக்குத் துணையாக வரமுடியாதே. அவற்றைச் சங்காதம், துணை என்று எண்ணிக் கொண்டிருந்தால் கெட்டுப்போக வேண்டிவரும். உயிரைத் தொடர்ந்து வருவது புண்ணிய பாவ வினைகள்தாம். நம்மிடம் உள்ள பொருள்களை ஏற்பவர்களுக்கு இட்டுப் புண்ணியத்தைத் தேடிக் கொள்ள வேண்டும். பொங்கார வேலையில் வேலைவிட்டோன் அருள்போல, அது எங்காயினும் உதவ வரும்.

இறைவனுடைய அருளைப் பொருளாக நினைக்கிறவர் களுக்குத் தங்கள் கையிலுள்ள பொருள் எதுவும் பொருளாகத் தோன்றாது. இறைவன் அருளிடத்தில் நம்பிக்கை உடையவர் களுக்குப் பொருளிலே பற்று இராது. இறைவன் அருள் உதவி செய்ய வந்தால் பொருள் அறமாக மாறிவிடும்.

## இளையான்குடி மாற நாயனார்

இளையான்குடி மாறனார் என்கிற வேளாளர் ஒருவர் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தார். அவருக்குப் பண்ணை நிலங்கள் மிகுதியாக இருந்தன. விளைச்சல் முழுவதையும் சிவனடியார்களுக்கே அமுது படைப்பதில் செலவிட்டுக் கொண் டிருந்தார்.

''எத்தனை அன்பு! எத்தனை தர்மம் செய்கிறார்!'' என்று சிலர் அவரைப் பாராட்டிக் கொண்டிருந்தார்கள். எல்லோரும் அப்படிப் பாராட்டுவார்களா? ''என்னிடம் பணம் இருந்தாலும் நானும் அப்படித் தர்மம் செய்வேன்'' என்று சொல்கிறவர்கள் எத்தனை பேர்? பணம் படைத்தவர்கள் எல்லோரும் தர்மம் செய்கிறார்களா? ரூபாய்க்கு ரூபாய் வட்டி சேர்த்து வாங்கிச் சேமித்து வைக்கிறவர்கள் இல்லையா? நம்மால் தர்மம் செய்ய முடியாவிட்டாலும், ''அவன் தர்மவான். அளவற்ற தர்மங்களைச் செய்து வருகிறான்'' என்று சொல்வது நல்லது. ''அவன் பண்ணு கிறானே. நீ பண்ணவில்லையே'' என்று யாராவது சுட்டிக் காட்டப் போகிறார்களே என்பதற்காக இவர்களே, ''எனக்கும் பணம் இருந்தால் தர்மம் செய்வேன்'' என்று சொல்லிக் கொண்டு விடுகிறார்கள்.

இளையான்குடி மாறனார் செய்த தர்மத்தைப் பார்த்தும் இப்படித்தான் பேசினார்கள். ''அவனுக்கு இருக்கிறது; தர்மம்

செய்கிறான். அந்த மாதிரி நமக்கு இல்லையே, தர்மம் செய்ய'' என்று பொறாமைப்பட்டுக் கொண்டிருந்த பாவிகளுக்குப் புத்தி புகட்ட வேண்டுமென்று இறைவன் கருதினான். மாறனாருக்கு வறுமை உண்டாயிற்று. கையில் இருந்த கொஞ்ச நஞ்சம் பொருளையும் அவர் தர்மம் செய்து வந்தார். நிலங்களை எல்லாம் விற்றுத் தர்மம் செய்து விட்டார். ஒரே ஒரு வயல்தான் எஞ்சி யிருந்தது. அதில் விளைகிற நெல்லைக் கொண்டு தொடர்ந்து அடியார்களுக்கு அமுது இடவேண்டுமென்று அவருக்கு ஆசை.

வீட்டில் வைத்திருந்த நெல்லைக் கொண்டுபோய் அன்று காலையில்தான் விதைத்துவிட்டு வந்தார். மாலையிலே இடி மின்னலுடன் மழை வந்துவிட்டது. ''ஐயோ! வயலில் விதை மிதக்குமே'' என்று கவலைப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கும் போது, இரவு பத்துமணிக்கு ஒருவர், ''ஐயா! ஏதாவது கொடுங்கள் புசிக்க; மிகவும் பசிக்கிறது'' என்று கேட்டுக் கொண்டு வந்தார்.

எத்தனை தர்ம நினைவுடையவர்களாக இருந்தாலும் நாமாக இருந்தால் என்ன சொல்வோம்? ''போ ஐயா, போ. இராத்திரி பத்து மணிக்குத்தான் பிச்சை கேட்க வருகிறதோ? காலையில் வா'' என்று விரட்டுவோம்.

அவர் என்ன நினைத்தார் தெரியுமா? கொட்டுகிற மழையில் இரவு பத்து மணிக்குப் பிச்சை கேட்க அவன் வந்தான். ஆகையால், ''ஐயோ பாவம்! எத்தனை நாளாகப் பட்டினியாக இருக்கிறாரோ! எவ்வளவு பசியோ!'' என்று நினைத்து இரங்கினார். வருத்தம் உண்டாயிற்று. உள்ளே போனால் சாப்பாடு இல்லை. சமைக்க லாம் என்றால் அரிசி இல்லை. விறகு இல்லை. உள்ளே அத்தனை வறுமை!

அவருடைய வேதனையை ஒரே விநாடியில் உணர்ந்து கொண்டாள் அவருடைய மனைவி. அவள் அறம் வளர்க்கும் பெருமாட்டி. ''நீங்கள் ஏன் வருந்துகிறீர்கள்? காலையிலே விதைத்த நெல் இந்த மழையில் நிச்சயம் மேலாகத்தான் மிதக் கும். அதுவும் ஒரு பக்கமாக ஒதுங்கிக் கிடக்கும். வயலுக்குப் போய் அதை அரித்துக் கொண்டு வந்துவிடுங்கள். நான் அதைக் குத்தி அரிசியாக்கி விரைவில் சமைத்து விடுகிறேன்'' என்று ஆறுதல் கூறினாள். அவரும் அப்படியே கொட்டுகிற மழையில்

கூடையை எடுத்துக் கொண்டு போய் நெல்லை அரித்து வந்தார். விறகு இல்லை. வீட்டில் மேல் இருந்த கூரையிலுள்ள கம்பு களைப் பிரித்துக் கொடுத்துச் சமைக்கச் சொன்னார். காய்கறி ஒன்றும் இல்லை. புறக்கடையில் இளம் பயிராகக் குழியில் ஏதோ இருந்தது. அதை அப்படியே அவசர அவசரமாக அரிந்து கொண்டு வந்தார்.

அவர் குழியிலுள்ள பயிரையா அரிந்தார்? தம்முடைய பாசத்தின் அடியவரையே அரிந்தார். இதைச் சேக்கிழார் அழகாகச் சொல்கிறார்.

''குழிநிரம் பாத புன்செய்க்
குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப்
பறித்தவை கறிக்கு நல்க''

என்கிறார்.

சமையல் செய்துவிட்டுத் திண்ணையில் வந்து பார்த்தால் அடியாரைக் காணவில்லை. சிவபிரான் காட்சியளித்து, ''நானே உன்னைச் சோதனை செய்தேன்'' என்று அருளி இன்ப வாழ் வளித்தான்.

## இறைவன் நினைவும் இடுதலும்

இப்படிக் கடைசிப் பொருள் உள்ளவரைக்கும் ஏற்பவர்க்கு இடுகிற உத்தமர்கள் உலகில் இருக்கிறார்கள். பொருள் இருந்தா லும் கொடுக்க மனம் இல்லாத லோபிகளும் இருக்கிறார்கள். அறம் செய்வதற்குப் பொருள் வேண்டும் என்பது அல்ல; மனம் வேண்டும். இதை இளையான்குடி மாறனாரிடத்தில் பார்த்தோம். இறைவன் திருவருளை உணர்ந்தவர்கள், அவன் அருள் எப்படிக் கிடைக்கும் என்று ஏங்கி, தம்மிடமுள்ள பொருள்களைத் தர்மம் செய்வார்கள். இறைவன் அருளை நினைத்தால்தான் அவ்வாறு கொடுக்கத் தோன்றும்.

இறைவன் அருளை மனத்தில் வைக்காதவர்களுக்கு தங்க மாகவும் வீடாகவும் பொருளைச் சேர்த்துக் கொள்ளத் தெரியும். மடந்தையர்களுக்காகப் பொருளை அழிக்கத் தெரியும். அவர் களுடைய வீடும் மடந்தையருமா உயிர்போம் தனி வழிக்குத்

*துணையாக வருவார்கள்? அத்தகையவர்களைப் பார்த்து இடித்து உரைக்கிறார் அருணகிரியார்.*

*''நீங்கள் எவற்றை வாழ்க்கைக்கு நலம் செய்யும் என்று சேர்த்து வைக்கிறீர்களோ அவை பிறகு உதவ வருவதில்லை. ஏற்பவர்களுக்கு இட்டதுதான் வரும். அது எப்போது எப்படி வரும் என்று உங்களுக்குத் தெரியாது. எப்படியும் எங்கேனும் வரும். முத்துக்களையுடைய கடலில் வேலை விட்டவனுடைய அருள் போல எங்காயினும் வந்து உதவும். இது சத்தியம்'' என்று அருளையும், பொருளையும் இணைத்து ஓர் அறிவுரைப் பாடலை அருள்கிறார் அருணை முனிவர்.*

பொங்கார வேலையில் வேலைவிட்
டோன்அருள் போல்உதவ
எங்கா யினும்வரும், ஏற்பவர்க்கு
இட்டது; இடாமல்வைத்த
வங்கா ரமும்உங்கள் சிங்கார
வீடும் மடந்தையரும்
சங்காத மோகெடு வீர்!உயிர்
போம்அத் தனிவழிக்கே!

*(கெடுமதியாளர்களே! பொங்குகின்ற முத்துக்களை உடைய கடலில் வேலாயுதத்தை விட்ட முருகனுடைய அருள் அவனுடைய அன்பர்களுக்கு எங்காயினும் வந்து உதவுவது போல, உங்களிடம் வந்து குறையிரந் தவர்களுக்கு இட்ட புண்ணியத்தின் விளைவு எங்காயினும் உதவி புரிய வந்து சேரும்; அப்படி இரந்தவர்களுக்குக் கொடுக்காமல் பாதுகாத்து வைத்த தங்கமும், உங்கள் அழகிய வீடும், அழகிய மனைவிமாரும் உயிர் உடம்பை விட்டுச் செல்லும் அந்தத் தனி வழிக்குத் துணை ஆவார்களோ?*

*பொங்கு வேலை, ஆர வேலை என்று கூட்ட வேண்டும். ஆரம் - முத்து. வேலை - கடல். ஏற்பவர்க்கு இட்டது எங்காயினும் வரும். ஏற்பவர் - இரப்பவர். இட்டது - அளித்தது. வங்காரம் - பொன்; உப லட்சணத்தால் எல்லா வகையான பொருள்களையும் குறித்தது. சிங்காரம் - அழகு. சிங்கார மடந்தையர் என்றும் சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டும். ''சிங்கார மடந்தையர் தீநெறி போய்'' என்பது* **கந்தர் அநுபூதி.** *சங்காதம் - உறவு; இங்கே துணை. கெடுவீர் என்பது இரக்கத்தால் வரும் ஒரு சொல்; கெடுவாய் என்பதும் அது; ''கெடுவாய் மனனே கதிகேள்'' என்று* **கந்தர் அநுபூதி***யில் வரும். தனி வழி - உயிர் உடம்பை விட்டு*

*மறுமையை நோக்கிச் செல்லும் வழி. அ: உலகறி சுட்டு. இட்டது வரும். இடாதது வராது என்பது கருத்து.*

*ஆசைகள் மூன்று என்று சொல்வார்கள். பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை என்பவை அவை. இந்தக் காலத்தில் மண்ணாசை என்பதற்குப் பொருளே வேறாகி விட்டது. நாடு பிடிக்க ஆசைப்படுவது மண்ணாசை. விரிவான நிலங்களை வாங்கிச் சொந்தமாக்கிக் கொள்வதும் மண்ணாசையே. தனக்கென்று வாழும் இடம் ஒன்று பெற விரும்புவதும் மண்ணாசைக்கு இனமென்றே கொள்ளலாம். அப்படி வைத்துக் கொண்டால் இங்கே அருணகிரியார் மூவகை ஆசைக்கும் உரிய பொருள் களைச் சொல்கிறார் என்று கூறலாம். வங்காரத்தில் உள்ள விருப்பம் பொன்னாசை; சிங்கார வீட்டில் மேலுள்ள ஆசை மண்ணாசை; சிங்கார மடந்தைபால் உள்ள பற்றே பெண்ணாசை. இப்படியே மூன்று ஆசை களைச் சொல்லும்போது, மண்ணாசையாக இல்லத்தின் மேலுள்ள ஆசையைச் சேர்த்துக் சொல்வது அருணகிரியாருக்கு இயல்பு. ''அகமாடை மடந்தையர் என்று அயரும், சகமாயை'' என்று* **கந்தர் அநுபூதி***யில் பாடுகிறார். அங்கே அகம் – வீடு; மாடை – பொன்; மடந்தையர் – பெண்கள். இங்கே வங்காரம் என்பதை அங்கே மாடை என்றார்; சிங்கார வீடு என்பதை அகம் என்றார்.)*

*இது கந்தர் அலங்காரத்தில் 59–ஆவது திருப்பாடல்.*

# தண்டைச் சிற்றடி

# முன்னுரை

முருகப் பெருமானுடைய திருவருளால் கந்தர் அலங்காரச் சொற்பொழிவு வரிசையில் பன்னிரண்டாம் புத்தகமாகிய இது இப்போது வெளியாகிறது. பதினோராம் புத்தகம் வெளியாகிக் கிட்டத்தட்ட ஓராண்டு ஆகிறது. பல வேலைகளுக்கிடையே செய்ய வேண்டியிருந்தமையாலும்; இயல்பாக எனக்கு உள்ள சோம்பலினாலும் இந்த மலர் வெளியாக இவ்வளவு தாமதமாகி விட்டது. இனியேனும் ஏனைய புத்தகங்களை வெளியிட முயல்வேன்.

இந்தப் புத்தகத்தில் அறுபதாவது பாடல் முதல் அறுபத் தைந்தாவது பாடல் வரையில் உள்ள ஆறு பாடல்களுக்குரிய விரிவுரைகள் உள்ளன.

நம்முடைய மன நோயையும் உடம்பு நோயையும் போக்கும் வழியை எதிர்மறை உருவத்தில் அருணகிரி வள்ளல் புலப் படுத்தும் பாட்டின் விரிவுரையே இதில் உள்ள **'தண்டைச் சிற்றடி'** என்னும் முதல் கட்டுரை. இறைவனிடம் ஈடுபடும் முறைகள் எவ்வாறு அடுத்தடுத்து நிகழ்கின்றன என்பதை இதில் காணலாம்.

**'வேலவன் போதித்த ஞானம்'** என்ற இரண்டாவது சொற்பொழிவு ஞானம் பெற்றவர் அடையும் அநுபவ நிலையை உணர்த்துவது.

முருகனுடைய தந்தைக்கும் மாமனுக்கும் உரிய **அணிகலங் களைக்** கூறிப் பிறகு, அவனுடைய திருவடிக்கும் வேலுக்கும் உரிய அணிகலன்களை அடுத்த பாட்டின் விளக்கத்தால் தெரிந்து கொள்ளலாம்.

**'சோதனையும் சாதனையும்'** என்பது அருணகிரியார் தாம் இறைவனை அன்பு கொண்டு வழிபட்டுச் சோதித்து வெற்றி பெற்ற பெருமிதத்தில் பாடும் பாட்டின் விளக்கம். போதித்த மெய்யன்பினால் அழுது தொழுதுருகிச் சாதித்துக் கொண்ட சாதனையை அப்பாட்டில் கூறுகிறார்.

ஐந்தாவது சொற்பொழிவு **'காலனை வெல்லுதல்'** என்பது. காலனை நேரே அழைத்து அறைகூவும் முறையில் அமைந்த பாடலின் விளக்கம் இது. அவ்வாறு செய்யும் ஆற்றல் இறைவனுடைய அருள் துணையினால் உண்டாவது என்பதை இந்த விளக்கத்தால் உணரலாம்.

கடைசிச் சொற்பொழிவு, **'வேண்டுகோள்'**. அருணகிரியார் யம பயம் இன்றித் தம்மைப் பாதுகாக்கும்படி மயில் வாகனப் பெருமாளை வேண்டிக் கொள்ளும் பாடலின் விரிவுரை இது.

தேனாம்பேட்டையில் உள்ள முருகன் திருக்கோயிலில் கந்தர் அலங்கார விரிவுரை ஏறத் தாழ மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வந்தது; அந்த விரிவுரை 1958-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ஆம் தேதியோடு நிறைவெய்தியது.

சொற்பொழிவுகளையெல்லாம் அன்பர் **அனந்தன்** சுருக்கெழுத்தில் எடுத்துக் கொடுத்திருக்கிறார். ஆதலின் இனித் தொடர்ந்து இந்த அலங்கார மாலைப் புத்தகங்கள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. முருகன் திருவருளைத் துணைக் கொண்டு இன்னும் எட்டுப் புத்தகங்களில் இந்த மாலையை நிறைவேற்றலாம் என்று எண்ணுகிறேன்.

பல வகையில் இந்த வெளியீடுகளுக்கு ஊக்கம் அளித்து வரும் அன்பர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

**கி.வா. ஜகந்நாதன்**
14.08.1958

# தண்டைச் சிற்றடி

## 1

மனிதனுக்கு வரும் துன்பங்கள் இரண்டு வகை. ஒன்று உடம்பினால் அநுபவிப்பது. மற்றொன்று மனத்தினால் அநுபவிப்பது. ஒருவகையில் எல்லாமே மனத்தினால் அநுபவிக்கின்ற துன்பங்களே என்றாலும், வெறும் நினைப்பினாலே அநுபவிக்கும் துன்பம் ஒரு வகை; சரீர உணர்ச்சியோடு நினைப்பும் சேர்ந்து நுகரும் துன்பம் மற்றொரு வகை.

### இருவகைத் துன்பங்கள்

உடம்பிலே தோன்றிய கட்டியை மருத்துவர் அறுத்து மருந்திடுகிறார். அறுப்பதற்கு முன் மயக்க மருந்து கொடுக்கிறார். அவர் அறுவை மருத்துவம் செய்யும்போது உடம்பிலிருந்து ரத்தம் வருகிறது. ஆனால் அந்தத் துன்பத்தை நோயாளி உணர்வதில்லை. மனமும் உடம்பும் ஒட்டி இயங்காததால் இந்த நிலை உண்டாகிறது. உடம்பிலே துன்பத்துக்குரிய காரியம் நிகழ்ந்தாலும் அதை மனம் உணராவிட்டால் துன்பம் இருப்பதில்லை. ஆனால் உடம்பில் துன்பத்துக்குக் காரணமான நிகழ்ச்சி ஒன்றும் இல்லாவிட்டாலும் மனம் துன்பத்தை அடையும். கனவிலே திருடன் துரத்துவதாகக் கண்டால் அப்போது துயரம் உண்டாகிறது. ஆனால் உடம்புக்கும் அந்த உணர்ச்சிக்கும் தொடர்பு இல்லை. மனம் மாத்திரம் அந்த அநுபவத்தை அடைகிறது.

முன்பு எப்பொழுதோ வந்த துயரத்தை இப்போது நினைந்து துயர் அடைகிறோம். வேறு யாருக்காவது துன்பம் நேர்ந்தாலும் அதைக் கண்டு பெரியவர்கள் துன்புறுகிறார்கள். நாளைக்கு இந்தத் துன்பம் வருமே என்று இப்போதே வருந்துகிறோம். இத்தகைய சமயங்களில் துன்பத்துக்குக் காரணமாக செயல் ஏதும்

உடம்பில் நிகழவில்லை; மனம் வெறும் நினைவுகளை விரிய விட்டுத் துன்புறுகிறது.

நிகழ் காலத்தில் உடம்பிலே உண்டாகும் துன்பத்தை நாம் உணர்ந்து துன்புறுகிறோம். அந்த ஒரு சமயத்தில்தான் உடம்பும் மனமும் இணைந்து துன்புறுகின்றன. உடம்பு துன்புறாமல் மனம் மட்டும் துன்புறும் நிலைகளை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். தமக்குச் சென்ற காலத்திலும் வருங்காலத்திலும் நேரும் துன்பங் களை நினைத்துத் துன்புறும் நிலைகள் இரண்டு; அப்படியே பிறருக்கு முக்காலத்திலும் உண்டாகும் துன்பங்களை எண்ணி வருந்தும் நிலைகள் மூன்று என்று ஐந்து வகைகள் ஆக்கிச் சொல்லலாம்.

ஒரு குழந்தை இறந்துவிட்டதை நினைத்து வரும் துன்பம், அது இறக்கும் நிலையில் இருப்பதை நினைத்து வரும் துன்பம், இனி இறந்துவிடுமே என்று எண்ணுவதால் வரும் துன்பம் என்று பிறரைச் சார்ந்து மூன்று நிலைகள் இருக்கின்றன. அப்படியே நாம் முன்பு அநுபவித்த துன்பத்தை எண்ணிப் படும் துயரம், வருங்காலத்தில் இது வருமே என்று அஞ்சும் துயரம் என்று நம்மைச் சார்ந்த நிலைகள் இரண்டு இருக்கின்றன.

உடம்பு காரணமாகப் படும் துயரத்தைக் காயக்கிலேசம் என்றும், மனத்தால் படும் துயரை மனக் கிலேசம் என்றும் சொல்வார்கள். இந்த இருவகையிலும் நாம் படுகிற துயரத்தைப் போக்கிக் கொள்ள வழி உண்டா? - இந்த ஆராய்ச்சியை நாம் செய்வதில்லை. இன்பம் வந்த போது ஆரவாரம் செய்து கூத்தாடிக் குதிக்கிறோம். துன்பம் வந்துவிட்டால் ஐயோ, அப்பா என்று புலம்புகிறோம். மறுபடியும் அவற்றை மறந்து வாழ் கிறோம். திரும்பத் திரும்ப இந்தச் சுழல் சக்கரமாகவே நம் வாழ்க்கை அமைந்துவிடுகிறது.

அருணகிரிநாதர் இந்தக் கிலேசங்களைத் தாம் படுவதாகச் சொல்லிப் பரிகாரமும் சொல்கிறார். கிலேசப்படாத நிலையை எய்திய அவர் அவ்வாறு சொல்வது நமக்காக என்றும், அது அவருடைய இணையற்ற கருணைச் செயல் என்றும் அடிக்கடி சொல்லி வந்திருக்கிறேன்.

எப்படி இந்தக் கிலேசங்களைப் போக்கிக் கொள்ளலாம் என்பதைப் பார்ப்போம்.

சிந்திக் கிலேன் நின்று சேவிக்கி
லேன்தண்டைச் சிற்றடியை
வந்திக் கிலேன்ஒன்றும் வாழ்த்து
கிலேன்மயில் வாகனனைச்
சந்திக் கிலேன்பொய்யை நிந்திக்கி
லேன்உண்மை சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமும் காயக்
கிலேசமும் போக்குதற்கே.

ஏழு காரியங்களைச் சொல்கிறார் அருணகிரியார். ஏழு காரியங்களில் முதல் ஐந்தும் இறைவனோடு தொடர்புடைய செயல்கள். சிந்தித்தல், நின்று சேவித்தல், சிற்றடியை வந்தித்தல், வாழ்த்துதல், முருகனைச் சந்தித்தல் என்பவை எனலாம். முருகனோடு சம்பந்தப்பட்டவை. பொய்யை நிந்தித்தல், உண்மை சாதித்தல் இரண்டும் பொதுவானவை. இப்படி இறைவனுடைய தொடர்புடையவை ஐந்து, இறைவனுடன் தொடர்பு இல்லாதவை இரண்டு ஆகிய ஏழு காரியங்களைச் செய்திருந்தால் மனத்தில் துன்பம் இராது; உடம்பில் உண்டாகின்ற துன்பமும் இப்போது இராது என்பதைக் குறிப்பாகப் பெற வைக்கிறார்.

## இறைவன் திருவுருவம்

இறைவன் எங்கோ இருக்கிறான் என்று சொல்கிற வேதத்தைக் காட்டிலும் நம் அருகில் இருக்கிறான் என்று சொல்கிற அநுபவ பூர்வமான வாக்கு மிகச் சிறந்தது. இறைவன் உருவம் உடையவனாய் இருக்கிறான். நாம் கோயில்களில் காணும் உருவம் வேறு; அது நம்முடன் பேசாது; இயங்காது. அவனுடைய மெய்யான உருவத்தை, பேசி இயங்கும் தேஜோ மய உருவத்தை, அநுபவத்தால்தான் காண முடியும்; புறக் கண்ணால் காண ஒண்ணாது. அநுபவத்தில் அவன் திருவுருவத்தைக் காண்பதற்குரிய மனப் பக்குவம் நமக்கு வேண்டாமா? அப்பக்குவத்தை உண்டாக்க வேண்டும் என்பதற்காகத்தான் இறைவனுடைய கல்யாண குணங்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து, அக்குணங்களுக்கேற்ற உருவம் ஒன்றைப் பெரியவர்கள் நம் கண் காணச் சமைத்துத் தந்திருக்கிறார்கள்; இயங்கும் உருவத்தைக் காணாதவர்களுக்குப் படம் பிடித்துக் காட்டுவது போன்றது இது.

## மனமும் நாம ரூபங்களும்

நாம ரூபம் இல்லாவிட்டால் மனம் எதையும் பற்றிக் கொள்ளாது. நமக்குக் கண், காது, மூக்கு எல்லாம் இருக்கின்றன. கண்ணாலே ஒன்றைப் பற்றிக் கொள்ள வேண்டுமானால் அது ஒரு பொருளாக இருக்க வேண்டும். புகை இருக்கிறது; கண் ணாலே அதைப் பார்க்கிறோம்; புகையைக் கையினால் பற்றிக் கொள்ள முடியுமா? கையினால் கட்டையாக இருந்தால் பற்றிக் கொள்ளலாம். கையினால் பற்றுகிற பொருளைக் காதினால் பற்றிக் கொள்ள முடியுமா? காதினால் பற்றிக் கொள்வது ஒலியாக இருக்க வேண்டும். மூக்கினால் பற்றிக் கொள்வது மணமாக இருக்க வேண்டும். இந்திரியங்களில் ஒவ்வொன்றும் எல்லாவற்றையும் பற்றிக் கொள்ள இயலாது.

மனம் ஒன்றைப் பற்றிக் கொள்ள வேண்டுமானால் அது இந்த ஐந்து இந்திரியங்களின் சார்புடையதாக வரவேண்டும். மூக்கினுடைய சார்பு பெற்று மணமாகவும், காதினுடைய சார்பு பெற்று ஒலியாகவும், கண்ணினுடைய சார்பு பெற்று ஒளியாக வும், நாவின் வழியாகச் சுவையாகவும், உடம்பின் வழியே பரிச மாகவும் இப்படி ஐந்து வகையான இந்திரியங்களின் சார்பாக வரும் அநுபவத் திரட்சியைத்தான் மனம் பற்றிக் கொண்டு நிற்கும்.

ஐந்து இந்திரியங்களுள் சிறப்பாக இருப்பவை கண்ணும் காதும். கண்ணுக்குப் புலனாவது உருவம். காதுக்கு விஷயமாக இருப்பது நாமம். நாம ரூபம் இல்லாத எந்தப் பொருளையும் உணர்ந்து கொள்ளும் சக்தி மனத்திற்கு இல்லை. இறைவனை மனம் உணர்ந்து கொள்ள வேண்டுமென்றால் அவனுக்கும் நாமமும், ரூபமும் இருந்தாகவேண்டும். ஆகவே மனவாக்குக் காயத்திற்கு அப்பாற்பட்டவனாக அவன் இருந்தாலும், கருவி கரணங்களோடு மனம் நடமாடுகிற பிரதேசத்தில், மனத்தினால் பற்றிக் கொள்ளத் தக்க வகையில் அவன் நாமரூபத்தைப் பெற்றுக் கொண்டு வருகிறான். பெருங் கருணையுடையவனாகிய அவன் மனத்திற்கும் வாக்குக்கும் கட்டுப்பட்டு நமக்காக நாம ரூபம் உடையவனாக வரும்போது, நாம் அவனைப் பற்றிக் கொள்ளாவிட்டால் உலகில் நாம் வாழ்வதால் பெறும் பயன் இல்லை. எந்த இடத்தில், எந்தக் காலத்தில், எந்தப் பொருள்

கிடைக்கிறதோ அந்தப் பொருளைப் பயன்படுத்திக் கொள்கிறவன்தான் அறிவாளி.

நமக்குச் சரீரம் கிடைத்திருப்பது பெரிய பாக்கியம். இது கிடைத்தற்கரியது. இது பெரும்பேறு என்று எப்போது நாம் சொல்லலாம்? சரீரம் உடைய நமக்காக இறைவன் திருமேனி எடுத்துக் கொண்டு வருகிறானே; இந்தச் சரீரம் அந்தத் திருமேனியோடு சம்பந்தப்பட்டால்தான் பாக்கியம்; இல்லாவிட்டால் பயன் இல்லை.

## சம்பந்தம் செய்து கொள்ளுதல்

சரீரம் படைத்தவர்களாகிய நாம் நம்மைப் போலவே சரீரம் படைத்தவர்களோடு சம்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம். சரீரம் சரீரத்தோடு சம்பந்தப்படுகிறது.

கணவன் மனைவி சம்பந்தம், குரு சிஷ்ய சம்பந்தம், அதிகாரி ஊழியன் சம்பந்தம் என்று இரண்டு இரண்டு பேர்கள் சேர்ந்து சேர்ந்து ஒப்பந்தம் செய்து கொள்ளும் பல சம்பந்தங்கள் உலகில் இருக்கின்றன. அரசன் என்றால் குடி இருக்க வேண்டும். எசமான் என்றால் ஊழியன் இருக்க வேண்டும். இரவலன் என்றால் கொடுக்கிறவன் இருக்க வேண்டும். மனைவி என்றால் கணவன் இருக்க வேண்டும். குழந்தை என்றால் தாய் இருக்க வேண்டும். இப்படி ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டு உலகம் இயங்குகிறது. அப்படி இயங்குகிற உலகத்தில் சரீரம் படைத்திருப்பதனால் சம்பந்தத்தையும் அதிகமாக்கிக் கொள்கிறோம்.

ஒருவன் மற்றொருவனோடு சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளும் போது பெரும்பாலும் அவன் நம்மைவிட உயர்ந்தவனாக இருக்க வேண்டும் என்றே நினைக்கிறான். பெண்ணைப் பெற்றவன் தன்னைவிட அதிகப் பணக்காரன் வீட்டுப் பிள்ளைக்குத் தன் பெண்ணை மணம் செய்து கொடுக்க நினைக்கிறான். பிள்ளையைப் பெற்றவன் தன் பிள்ளைக்குத் தன்னைவிடப் பணக்காரன் வீட்டுப் பெண் மனையாட்டியாக வாய்க்க வேண்டும் என்று நினைக்கிறான். தாம் சம்பந்தம் பண்ணுகிற இடம் தம்மைக் காட்டிலும் சிறந்த இடமாக இருக்க வேண்டும் என்று நினைப்பது மனிதர்களின் இயல்பு.

நம்மையும்விட அதிகச் செல்வாக்கு உடையவர்களோடு, பெரும் பதவியில் உள்ளவர்களோடு, உறவு கொள்ள வேண்டும் என்று நாம் நினைக்கிறோம். பெரிய நிலையில் உள்ளவர் களுக்கும் நமக்கும் உள்ள உறவு மிகவும் சிறியதாக இருந்தாலும் அதைப் பெரிதாகப் பிறருக்கு எடுத்துச் சொல்கிறோம். சொந்தத் தம்பி மிக ஏழையாக இருக்கிறான். அவனைத் தம் தம்பி என்று கூடப் பணம் படைத்தவர்கள் சொல்லிக் கொள்ள விரும்புவ தில்லை. தம்பி என்கிற உறவையே பலர் மறந்து விடுகிறார்கள். மறக்காமல் இருந்தாலும் பிறருக்குச் சொல்வது இல்லை. இது உலக இயல்பு.

## பெரிய உறவு

இப்படி நம்மையும்விடப் பெரியவர்களோடு உறவு கொள்ள வேண்டும் என்று நாம் விரும்புகிறோமே; இறைவனைக் காட்டி லும் உலகத்தில் பெரியவன் யாராவது இருக்க முடியுமா? சரீரம் உடைய நாம் அவனோடு தொடர்பு கொள்ள வேண்டுமானால் அவனும் சரீரம் உடையவனாகத்தானே இருக்க வேண்டும்? தாயாகத் தந்தையாகக் குழந்தையாக அவனோடு தொடர்பு கொள்ள வேண்டும் என்று நினைத்தே நாம ரூப எல்லையைக் கடந்து நிற்கும் அவனுக்கு, நாம ரூபங்களோடு கூடிய திவ்ய மங்கள சொரூபத்தைக் கற்பித்து, நம் நாட்டுப் பெரியவர்கள் அமைத்திருக்கிறார்கள். கோயில்களில் அவன் விக்கிரக ரூபத்தில் இருப்பது, நாம ரூப வடிவம் உடைய நமக்காகத்தான்; சரீரம் உடைய நாம் சரீரம் உடையவனாகக் காட்சி தரும் அவனோடு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். ஒரு பெரிய பணக்காரனோடு நாம் தொடர்பு கொள்ள விரும்புவதற்குக் காரணம், பணமுடை வந்தால், அவன் நமக்கு உதவி செய்வான் என்கிற நினைப்புத் தான். இறைவன் நமக்குப் பேருதவி செய்கிறவன் என்ற நினைப் போடு அவனுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

## செல்வர்களும் இறைவனும்

ஒரு சிறிய பணக்காரரைப் போய்ப் பார்க்க வேண்டுமென் றால் எளிதில் முடிகிறதா? காலையில் போனால் அவர் இருப்பது இல்லை. மாலையில் போனாலும் அப்படித்தான். எப்போது பார்க்கலாம் என்றால், "எப்படிச் சொல்ல முடியும்? விடியற்

காலையில் வந்து விடுங்கள். காபி சாப்பிட்டுவிட்டுச் சிறிது நேரம் பத்திரிகையைப் பார்ப்பார். அதற்குள் பார்த்தால் தான் பார்த்தது'' என்று எவ்வளவு இடங்களில் சொல்கிறார்கள்? 'இவர்கள் எல்லோரையும்விடப் பெரிய பணக்காரனாகிய ஆண்டவனைப் பார்க்க வேண்டும், அவனோடு தொடர்பு கொள்ள வேண்டும் என்றால் அது எப்படி எளிதில் முடியும்?' என்று தோன்றும்.

இந்தப் பணக்காரர்களைப் போன்றவனா ஆண்டவன்? இவர்கள் பணம் கிடைக்கக் கிடைக்கத் தங்களையும்விட அதிகப் பணக்காரர்களையே தேடி ஓடுகிறார்கள். ஏழையைக் காணாமல் விலகி நிற்கவே விரும்புகிறார்கள். சொந்தத் தங்கை, மிகவும் வறுமையுள்ள இடத்தில் வாழ்க்கைப்பட்டவள், ''வருகிறேன்'' என்றால், ''இங்கே ஏன் வருகிறாய்? இப்போது இங்கே என்ன வேலை? வராதே'' என்று விரட்டி அடிக்கிறார்கள். அவர்கள் நெருங்கினால் கைப்பணம் செலவாகி விடுமோ என்று அஞ்சு கிறார்கள். ஏழைகளைக் கண்டு விலகி ஓடியோடித் தம்மையும் விடப் பணக்காரர்களுக்குத் தாசர்களாக உறவு கொண்டாடுவார்கள்.

ஆனால் ஆண்டவனாகிய பணக்காரன் இவர்களைப் போன்ற வனா? எங்கே ஏழை, எங்கே ஏழை என்று ஏழைகளைத் தேடிக் கொண்டு போகிறான். அவன் ஏழை பங்காளன், தீனரட்சகன். பணத்தால் செருக்கு அடைந்து தன்னிடம் வருபவர்களைக் கண்டு வெறுக்கிறவன். பணம் இல்லாத பரம ஏழைகளை நாடித் தேடிக் கொண்டு ஓடுகிறான், அவர்களுக்கு உதவி செய்ய.

உலகத்திலுள்ள அத்தனை பணக்காரர்களையும் ஒன்றாகச் சேர்த்தாலும் அவனிடம் இருக்கும் பொருளுக்கு ஈடாகச் சொல்ல முடியுமா? அவனைக் காட்டிலும் வேறு யாராவது நமக்கு வேண்டிய பொருள்களை எல்லாம் கொடுக்கக் கூடிய செல்வன் உண்டா?

''செல்வாய செல்வம் தருவாய் மதுரைப் பரமேட்டி''

என்று ஞானசம்பந்தர் பாடுகிறார்.

## செல்வர் யார்?

உலகத்தில் யார் பணக்காரன் என்று தேடிக் கொண்டே போனார் ஒருவர். இவன் பணக்காரன் என்று ஒருவனிடம்

போனால், அவன் தன்னையும்விடப் பணக்காரனோடு உறவாடிக் கொண்டிருந்தான். இவரைப் பார்க்கக்கூடச் சம்மதிக்காது அப்புறம் வரும்படியாக விரட்டி விட்டான். ''இவனைப் போய்ப் பார்ப்பானேன்? இவனைவிடப் பணக்காரனாகிய வேறொரு பணக்காரனோடு அல்லவா இவன் உறவாடுகிறான்? அந்தப் பணக்காரனோடு நாமே சென்று உறவாடலாம்'' என்று அங்கே போனால், அவன் தன்னையும்விடப் பணக்காரனாகிய வேறொரு செல்வனோடு உறவாடிக் கொண்டிருந்தான். அவன் தன் வீட்டுக் குள்ளே நுழையவே இவரை அநுமதிக்கவில்லை. 'இவர்களை எல்லாம் பணக்காரர்கள் என்று நாம் எண்ணிக் கொண்டிருக் கிறோம். இவர்கள் பிச்சைக்காரர்கள் அல்லவா? இத்தனை பணம் படைத்திருந்தும் இவர்கள் தங்களையும்விடப் பணக்காரருடைய தயவை நாடியல்லவா பிச்சை கேட்டுக் கொண்டு நிற்கிறார்கள்? இவர்கள் எல்லோரையும் ஒரு தட்டில் வைத்தாலும் எதிர்த் தட்டில் இருக்கிற ஆண்டவனாகிய பணக்காரனோடு ஒப்பிட முடியாதே! அவனிடம் போய், ''செல்வாய செல்வம் தருவாய் மதுரைப் பரமேட்டி'' என்று கேட்டுக் கொள்ளலாம்' என்று போய்விட்டாராம்.

## தொடர்புள்ள செல்வன்

அமெரிக்காவில் ஒரு கோடீசுவரன் இருக்கிறான் என்று சொன்னால் அவனால் நமக்கு இந்த ஊரில் பயன் என்ன? நமக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு? செல்வம் அவனிடம் இருந்தால் போதாதே. அவனுக்கும் நமக்கும் தொடர்பு அல்லவா வேண்டும்? தொடர்பு இருந்தால் போதாது. அந்தத் தொடர்பைப் பயன்படுத்திக்கொள்வதற்கு வாய்ப்பு வேண்டும். மற்ற மக்க ளோடு தொடர்பு கொள்ள வாய்ப்பு உண்டோ, வழி உண்டோ இல்லையோ ஆராய்ச்சி செய்ய வேண்டும். தகப்பனாரோடு நமக்குத் தொடர்பு இருப்பது நியாயமானால் இந்தத் தொடர்பு ஆண்டவனோடும் இருப்பது பலகாலும் நியாயமானதுதான். இந்தப் பிறவிக்குத் தாயாகத் தந்தையாக வருபவர்கள் இவர்கள். ஆனால் எல்லாப் பிறவியிலும் ஆன்மாவுக்குத் தாய் தந்தையாக வருபவன் ஆண்டவன். அவனோடு நமக்கு மிக மிக அதிகமான தொடர்பு உண்டு. யார் யாரையோ தம்முடைய உறவினராக

எண்ணித் தொடர்பு கொள்ள நினைக்கிற அறிவுடைய மக்களுக்கு எல்லாக் காலத்திலும் ஆண்டவன் நம்மோடு உறவு உடையவன் என்று நினைக்க நேரம் இல்லை. ''அவனுக்கும் நமக்கும் தொடர்பு உண்டு. அவன் மிகவும் பணக்காரன்; நமக்குச் சொந்தக்காரன். நாம் ஏழையாக வாடுவது தெரிந்தால் அவன் நமக்கு உதவி செய்ய முன் வருவான். அவனோடு தொடர்பு கொண்டு உறவாட வாய்ப்பை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். வாக்குக்கும் மனத்திற்கும் செயலுக்கும் அப்பாற்பட்டவனாக இருந்தாலும் சரீரம் படைத்த நம்மோடு உறவாடவே அவனும் நாமம் சரீரம் இவற்றோடு, நாம் வாழுகிற குடிசையிலேயே வாழ்கிறான். வீதியிலேயே வாழ்கிறான். நாட்டிலேயே வாழ் கிறான். இந்த மண்மீதே வாழ்கிறான்'' என்று நினைக்க நமக்கு நேரம் உண்டோ? இல்லையே!

கண் உடைய மக்களுக்குக் கண்ணினாலே பற்றிக் கொள்ளக் கூடிய உருவமுடையவனாக வருகிறான். வாய் உடைய மக்க ளுக்கு வாயினாலே கூவி அழைப்பதற்குரிய நாமம் உடையவனாக வருகிறான். கையுடைய மக்களுக்கு நீர் எடுத்துத் திருமஞ்சனம் ஆட்டி, அலங்காரம் பண்ணி, அர்ச்சிப்பதற்குரிய திவ்ய மங்கள சொரூபத்தோடு இருக்கிறான். ஆண்டவன் வசிக்கிற வீதி உலகம். அவன் வீட்டு வாசல் கோயில். அந்தக் கோயிலைக் கண்டு உள்ளே நுழைய வேண்டும். எவனாவது வந்துவிடப்போகிறானே என்று மற்றப் பணக்காரர்களைப் போல அவன் நாயையோ, கூர்க்காவையோ வாசலில் நிறுத்தி வைக்கவில்லை. எப்போது வந்தாலும், எத்தனை பேர்கள் வந்தாலும் ''வாருங்கள், உள்ளே வாருங்கள்'' என்று அழைப்பதுபோல, தன் வீட்டு வாசலின் கதவுகளைத் திறந்து வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான். உள்ளே நுழைந்து அவனைத் தரிசித்து வாழ்த்தினால் மறுநாள் நாம் வீட்டுக்குள்ளே இருந்தாலும் அவன் நம்மைச் சந்திக்க ஓடி வருவான். அத்தனை எளிமை உடையவன். நம் வீட்டுக்கு வந்து நம் கஷ்டங்களைப் பார்த்தால் அவனே நமக்கு உதவி செய்து நம் துன்பத்தைப் போக்கி விடுவான். அத்தனை இரக்கமுடையவன். 'அவனை நாடி நயந்து, வாழ்த்தி வணங்கி, சந்தித்து மனத்திற்கு வருகிற துன்பத்தையும் உடம்புக்கு வருகிற துன்பத்தையும் போக்கிக் கொள்ளவில்லையே!' என்று அருணகிரியார் இரங்குகிறார்.

நமக்குப் புந்திக் கிலேசமும், காயக் கிலேசமும் இருக்கின்றன. இந்தக் கிலேசம் போகவேண்டுமானால் ஆண்டவனுடைய உதவி வேண்டும். அவன் நமக்காகவே காத்துக் கொண்டிருக்கிறான். அவனோடு நாம் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு என்ன வழி?

# 2

## ஏழையின் கதை

மிக்க ஏழை ஒருவன், ஒரு பெரிய பணக்காரன் தனக்கு உதவி செய்வான் என்று எண்ணி அவனிடம் போகிறான். அவன் இவனை ஒரு குமாஸ்தாவாக நாற்பது ரூபாய் சம்பளத்தில் வேலைக்கு அமர்த்திக் கொள்கிறான். காலையில் ஏழு மணிக்கே போக வேண்டும். சில சமயங்களில் வீட்டுக்கு வரும்போது இரவு ஒன்பது மணியும் ஆகலாம்; பத்து மணியும் ஆகலாம். மிகவும் துன்பப்பட்டுக் கொண்டு வேலை செய்து வருகிறான். தூங்கி எழுந்து காரியாலயத்துக்கு ஓடும்போதே எங்கே நேரமாகி விடுமோ என்கிற பயம். முன்பு நேரமாகிப் போனதனால் எச்சரிக்கை செய்திருக்கிறார்களே என்கிற வருத்தம். இன்றைக்கு நேரம் கழித்துப் போனால் என்ன செய்வார்களோ, வேலையை விட்டே துரத்திவிடுவார்களோ என்கிற வேதனை! வீட்டிலோ குழந்தைக்கும் மனைவிக்கும் உடல் நலம் சரியில்லை. அவர்கள் துன்பப்படும்போது வீட்டில் இருந்து உதவ முடியவில்லையே என்கிற மன வருத்தம்; வறுமையினால் ஏற்படுகிற வாட்டம்; ஆக இத்தனை துன்பத்தோடு – உடல் துன்பம், மனத் துன்பத்தோடு – அன்றாடம் காரியாலயத்திற்கு ஓடி ஓடிப் போவதும் ஓடி ஓடி வருவதுமாக நகர வேதனையை அநுபவித்துக் கொண்டிருக்கிறான்.

## பெரியவர் உபதேசம்

ஒருநாள் ஒரு பெரியவர் அவனைப் பார்த்தார். ''ஏன் அப்பா, நீ இப்படி வருத்தமுற்றுக் கொண்டிருக்கிறாய்? நீ காரியாலயத்துக்கு எந்தச் சாலை வழியாகத் தினமும் காலையும் மாலையும் போய்வருகிறாயோ, அந்தச் சாலையிலேயே ஒரு பணக்காரன்

மாளிகை கட்டிக் கொண்டு வசிக்கிறானே; அவன் உனக்கு உறவு தானே? அவன் ஒருவன் இருக்கிறான் என்று என்றாவது நீ சிந்தனை செய்தது உண்டா? அவனிடம் போகவேண்டுமென்று நீ எண்ணியதுகூட இல்லை போலிருக்கிறதே! பணம் இல்லாமல் பல பேர்களிடம் கடன் வாங்கிக் கொண்டிருக்கிறாய். முந்திய கடனை நினைத்துச் சாம்புகிறாய். இன்றைக்கு வாங்கியிருக்கிற கடனை நினைத்துச் சாம்புகிறாய். நாளைக்கு வாங்கப் போகிற கடனை நினைத்து வருந்துகிறாய். சாப்பிடும்போது உண்டாகிற கொஞ்ச இன்பமும் உனக்கு இந்த நினைவுகளினாலேயே விஷமாகி விடுமே அப்பா. உனக்குச் சொந்தக்காரன், பெரிய பணக்காரன் ஒருவன் இருக்க, அவனைச் சிந்திக்காது எங்கெங்கோ அலைகிறாய்!'' என்று சொன்னார்.

''ஐயோ! அப்படி ஒரு பணக்காரர், எனக்கு உறவினர் இருக்கிறாரா? நான் என்னுடைய காரியாலயத்துக்குத் தினமும் போய் வந்து கொண்டிருக்கும் சாலையிலேயே மாளிகை கட்டிக் கொண்டிருக்கிறாரா? அவரைப் பற்றி எனக்குத் தெரியாமல் போய் விட்டதே! அவரைப் பற்றி நான் சிந்திக்கவே இல்லை, சுவாமி.''

**சிந்திக்கிலேன்**

''இத்தனை நாளும் சிந்திக்காமல் இருந்தது கிடக்கட்டும். இனியாகிலும் கொஞ்சம் சிந்தி; பயன் உண்டு. நான் அப்புறம் வருகிறேன்'' என்று பெரியவர் போய்விட்டார்.

## சேவித்தல்

அடுத்த வாரம் அவர் மறுபடியும் வந்தார். அப்போது இந்த ஏழை துன்பத்தால் வாடிய முகத்தோடு, தொங்கிய தலையோடு உட்கார்ந்திருந்தான். ''என்னப்பா, நீ இப்படி உட்கார்ந்திருக்கிறாய்? அந்தப் பணக்காரனைப் போய்ப் பார்த்தாயா?''என்று கேட்டார் பெரியவர்.

''அவரைப் போய்ப் பார்க்கவில்லை சுவாமி. அவரைப் பற்றித்தான் சிந்தனை செய்து கொண்டிருக்கிறேன்'' என்று இவன் சொல்வதற்கு முன்னர் அவர் பேசினார்.

''அட பைத்தியமே! சிந்தித்தல்தான் காரியம் செய்வதற்கு முதல் படி; இப்படியே சிந்தித்துக் கொண்டு இருந்தால் போதாது

அப்பா. போகிற போக்கில் ஒரு கணம் நின்று சேவிக்க வேண்டும்; அப்படிச் செய்யவில்லைபோல் இருக்கிறதே!'' என்று சொன்னார்.

''நான் என்ன செய்வேன்! காலையில் எழுந்தால் ஆறரை மணிக்கே காரியாலயத்துக்கு ஓடுகிறேன்; இரவு ஒன்பது மணிக்குத்தான் திரும்ப முடிகிறது. விடுமுறை என்பது இந்தப் பாவிக்கு இல்லையே! யார் யாரையோ தினமும் சேவித்துக் கொண்டிருக்கிறேன் சுவாமி! ஒரு நாளைக்குக்கூட அந்தப் பணக்காரரை நான் நின்று சேவிக்கவில்லையே!''

## நின்று சேவிக்கிலேன்

''இப்போதுதான் என்ன குடி மூழ்கிப் போய்விட்டது? நாளைக்கு நீ காரியாலயம் போகிறாய் அல்லவா? மிக வேகமாகப் போகும் போதே ஒரு கணம் அந்த வீட்டு வாசலில் நில் அப்பா. நிற்காவிட்டால் ஓடுகிற ஓட்டத்தில் அந்த மாளிகை உன் கண்ணில் படாது. நின்றால் நிச்சயம் அந்தச் செல்வனை நீ பார்த்தாலும் பார்ப்பாய். நின்று அவனைத் தொழுது, அவனிடம் உன் வறுமையை எடுத்துச் சொல்ல உனக்கு நேரம் இல்லா விட்டாலும், போகிற போக்கில் ஒரு கும்பிடு போட்டுவிட்டுப் போ. இப்படித் தினமும் நீ நின்று சேவித்துவிட்டுப் போனால் போதும். அவனே, 'அது யாரப்பா, தினமும் நின்று என்னைச் சேவித்துவிட்டுப் போகிறான்' என்று உன்னைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புவான். முன்பு அவனைப் பற்றிச் சிந்திக்க வில்லை என்றாய்; இப்போதோ சிந்திக்கிறாய். சிந்திப்பதன் பயனை அடைய வேண்டுமானால் கொஞ்சம் அவனது மாளிகை யின் முன் நின்று சேவிக்க வேண்டும்'' என்று சொல்லிவிட்டு அந்தப் பெரியவர் போய்விட்டார்.

மறுநாள் இவன் காரியாலயத்திற்குச் சோற்றுச் சம்புடத்தை எடுத்துக் கொண்டு ஓடுகிற வேகத்திலேயே, அந்தப் பணக்காரனின் வீட்டு வாசலின்முன் நின்றான். யார் யாரோ உள்ளே போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருந்தார்கள். இவனுக்கும் உள்ளே போக வேண்டும் என்ற ஆசை. நேரம் இல்லாமையினால் நின்றபடியே ஒரு கும்பிடு போட்டுவிட்டு ஓடிவிட்டான்.

மறுவாரம் அந்தப் பெரியவர் மீண்டும் வந்தார் ''என்னப்பா, கொஞ்சம் உற்சாகமாக இருக்கிறாய்? அந்தப் பணக்காரனை

நின்று சேவித்தாயா? அவன் உன்னைக் கண்டு கொண்டானா?'' என்றார்.

''சுவாமி! நீங்கள் சொன்னபடியே நான் தினமும் காரியாலயம் போகும்போதும் வரும்போதும் அவரது மாளிகையின் முன் நின்று ஒரு கும்பிடு மாத்திரம் போட்டு வருகிறேன். அவர் வீட்டுக்குள் போக வேண்டுமென்ற ஆசை தோன்றுகிறது; பிடர் பிடித்து உந்துகிறது. முன்பின் தெரியாத அவரது வீட்டுக்குள் எப்படி நுழைவது என்று சற்று வெட்கமாக இருந்தது. ஆனாலும் யார் யாரோ போய் வந்து கொண்டிருக்கிறார்களே என்று நானும் நேற்றுத்தான் உள்ளே நுழைந்தேன்.''

''நுழைந்தாயா? அவனைக் கண்டு கொண்டாயா? அவனது பார்வை உன்மேல் படும்படியாக வீழ்ந்து வணங்கினாயா? யார் யாருடைய காலிலேயோ தினமும் நீ வீழ்ந்து வீழ்ந்து வணங்குகிறாயே; அந்தப் புண்ணியமூர்த்தியின் திருவடியை வந்தித்தாயா?'' என்று அந்தப் பெரியவர் மிகவும் உற்சாகமாகக் கேட்டார்.

## அந்தக் குழந்தை

''அதுதானே இல்லை சுவாமி? எனக்கு அந்தப் பணக்காரர் யார் என்று கண்டு கொள்ள முடியவில்லையே! அந்த வீட்டுக்குள்ளே ஒரே கூட்டமாக இருந்தது. ஒரு பெரிய பீடத்தின் மேலே சின்னக் குழந்தை உட்கார்ந்திருந்தது. அந்தக் குழந்தையை எல்லோரும் வணங்கினார்கள். அந்தக் குழந்தையின் காலிலேகூட...''

''தண்டை இருந்ததா? சிலம்பு இருந்ததா? அந்தக் குழந்தைதான் அப்பா நான் சொன்ன பணக்காரன். மிக்க கருணையாளன். தான் இருப்பது தெரியாமல் எங்கெங்கோ பார்த்துக் கொண்டிருக்கிறவர்களின் கவனத்தை எல்லாம் திருப்புவதற்காகத்தான் அந்தக் கருணையாளன் தண்டையும் சிலம்பும் அணிந்திருக்கிறான். பெரியவர்களாக இருந்தால் தம்மிடம் வருபவர்களுடைய தகுதி, தராதரம் ஆகியவற்றைப் பார்த்து, அவற்றிற்கேற்பப் பேட்டியளித்து உதவி செய்வார்கள். அவன் குழந்தை. தன்னுடைய அன்பர்களின் தகுதி முதலியவற்றைப் பார்க்கமாட்டான். அன்போடு தன்னைச் சிந்தித்துச் சேவித்துத் தண்டைச் சிற்றடியை வந்திப்பவர்களுக்கு வாரி வாரி வழங்கும் வள்ளல் அவன். அவனைப்

பார்த்தும் அவனது தண்டைச் சிற்றடியை வந்திக்கவில்லையா நீ?'' என்று மூச்சுவிடாமல் கேட்டார் அந்தப் பெரியவர்.

''இல்லையே சுவாமி! இந்தப் பாவியின் வினை – அங்கே போயும், அந்தப் பணக்காரரைப் பார்த்தும் – அவர் சிற்றடியை வந்திக்க வேண்டும் என்கிற அறிவை மறைத்து விட்டதே!''

தண்டைச் சிற்றடியை வந்திக்கிலேன்

என்று இவன் அழுதான்.

## வந்தித்தல்

அந்தப் பெரியவர் அவனைப் பார்த்து மிகவும் இரக்கத்தோடு சொன்னார்; ''அப்பா! உன்னுடைய துன்பங்கள் நீங்க வேண்டு மானால் அந்தப் பணக்காரனைத்தான் சரணாகதி அடைய வேண்டும். அவனை நினைக்காமலேயே முன்பு இருந்தாய்; இப்போது நினைக்க ஆரம்பித்தாய். அவன் விலாசம் எது என்று தெரியாமல் இருந்தாய்; அதைத் தெரிந்துகொண்டு சேவிக்க ஆரம்பித்தாய். மாளிகைக்குள் நுழைந்து அந்தப் பெருமானை யார் என்றும் தெரிந்துகொண்டு விட்டாய்; காலிலே தண்டை அணிந் துள்ள அடையாளத்தையும் கண்டு கொண்டாய். இனி, காரியால யத்துக்கு ஏழு மணிக்குப் போக வேண்டுமென்றால் ஐந்து மணிக்கே எழுந்திரு. நீராடி விட்டு, திருநீறு அணிந்து கொண்டு வீட்டை விட்டு ஆறு மணிக்கே கிளம்பி விடு. நேராக முதலில் அவன் மாளிகைக்குப் போ. அவனது தண்டைச் சிற்றடியை, அன்பினால் கெட்டியாகப் பற்றிக் கொள்'' என்றார்.

சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன்
தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேன்.

இதுவரைக்கும், 'எம்பெருமான் ஒருவன் இருக்கிறான். அவனிடம் சென்றால் நம்முடைய துன்பம் எல்லாம் நீங்கிப் போகும்' என்கிற நினைப்பே இல்லாமல் இருந்தான். எதை எதையோ சிந்தித்துச் சிந்தித்து மங்கிக் கொண்டிருந்தான். இறைவனைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் இருந்தது. நல்ல குருநாதர் ஒருவர் அவனுக்குக் கிடைத்தவுடன் இறைவனைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தான்.

## வேகம்

சிந்திக்க ஆரம்பித்தால் போதுமா? இறைவனது கோயிலைத் தாண்டிப் போகும்போதும், வரும்போதும் மிக வேகமாக ஓடிக் கொண்டிருந்தானே தவிர நின்று ஒரு கணமாவது சேவிக்க வில்லை. நடையிலே வேகம்; வாக்கிலே வேகம்; மனத்திலே வேகம்.

''வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க.''

என்கிறார் மாணிக்கவாசகர்.

இறைவன் அருளால் முதலில் வேகம் கெடவேண்டும்.

பெரிய நகரங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோமே அது இன்னும் மோசம். பம்பாய்க்குப் போயிருக்கிறேன். விழாக்கள் கொண்டாடுவதானால் அங்கே இரவு நேரங்களில் 8–30 மணிக்குப் பின்தான். அதுவும் இரவு ஒரு மணி, இரண்டு மணி வரையில் கொண்டாடுவார்கள். ஒருவர் விளையாட்டாகச் சொன்னார்: அவருடைய மனைவி குழந்தையிடம், ''அப்பா வருவாரடா'' என்று சொன்னாளாம். அந்தக் குழந்தை, ''அப்பா யார்? ஞாயிற்றுக்கிழமை ஞாயிற்றுக்கிழமை நம் வீட்டுக்கு வருகி றாரே அந்த மாமாவா?'' என்று கேட்டதாம். காரணம்: குழந்தை எழுந்திருப்பதற்குள் காலையில் காரியாலயம் போய் விடுகிறான். இரவு அவன் வருவதற்குள் குழந்தை தூங்கி விடுகிறது. அப்பாவை மற்ற நாட்களில் குழந்தை பார்க்கிறது இல்லை; ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் பார்க்கும். பெரிய உத்தியோகம். ஆயிரம் ரூபாய் சம்பளம் என்று உயர உயர மனைவி மக்களோடு சற்று அமைதியாக உட்கார்ந்து பேசுவற்குக்கூட நேரம் கிடைக் காமல் போய் விடுகிறது. நாகரிகம் சிறக்கச் சிறக்க மனிதனின் வேகமும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. கார் உடையவன் காரில் பறக்கிறான். இல்லாதவன் கால்களினாலே ஓடுகிறான். ஒரு கணம்கூடக் கோயில் வாசலிலே நின்று வணங்க நேரம் இல்லை.

## உபதேசப் பயன்

''ஆண்டவன் இருக்கும் விலாசம் – கோயில் – தெரிந்து கொண்டால் பயன் இல்லை. கோயிலுக்குள் போக நேரம்

இல்லை என்றாலும், போகிற வழியில் கோயிலின் வாசலிலேயே நின்று ஒரு கும்பிடு போடக்கூடாதா?'' என்று குருநாதர் சொன்ன வுடன், கொஞ்சம் வேகம் தணிந்தவனாக இறைவனது ஆலயத்தைக் கண்டால் நின்று கும்பிடப் பழகிக் கொண்டான் இவன்.

வேகமாக ஓடிக் கொண்டிருக்கிற மனத்தில் குருநாதர் இறை வனைப் பற்றிய நினைப்பையும் உண்டாக்கி ஓட விட்டார். பிறகு போகிற போக்கிலே ஒரு கணம் ஆண்டவன் கோயில்முன் சற்று நின்று சேவிக்கிற நிலையையும், ஒரு கணம் வேகமின்றி அமைதி யாக மனம் நிற்கிற நிலையையும் உண்டாக்கினார்.

நின்று பார்க்கும்போது வேறு யாரையாவது பார்த்துக் கொண்டிருந்தால் என்ன செய்வது? யாரைப் பார்க்க வேண்டுமோ அவனைப் பார்க்க வேண்டும். பலருக்கு மத்தியிலே இருக்கிற அவனைக் கண்டுகொள்ள அடையாளம் தெரிய வேண்டாமா?

''ஆள் கறுப்பாய், உயரமாய், கட்டையாய் இருப்பான்'' என்று அடையாளம் சொல்வது வழக்கம் அல்லவா? அப்படி, குருநாதர் இவனுக்கு ஆண்டவனைக் கண்டு தொழ, அடையாளம் சொல்லிக் கொடுத்தார். ''அப்பா! அவனைப் பார்த்தவுடனேயே அவன்தான் எசமானன் என்று கண்டு கொண்டுவிடலாம். ஆனால் அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்க நமக்குத் தைரியம் கிடையாது. அவன் தாளைக் குனிந்து பார். கல்கல் என்று ஒலிக்கும் தண்டை இருக்கும். சின்ன அடி; பெரிய அடி அல்ல. அந்தத் தண்டைச் சிற்றடியைப் பற்றிக் கொண்டு சரணாகதி அடைய வேண்டும். துன்பங்கள் எல்லாம் நீங்கி உய்வு பெறுவதற்குச் சரணாகதி அடைய வேண்டிய இடம் அந்தச் சின்னத் திருவடிதான்'' என்று உபதேசம் செய்தார்.

ஆசாரியரின் அநுக்கிரகத்தினால், பெரியவர்களுடைய சம்பந்தத் தினால், சிறுமை நீங்கி, பெருமை வந்துவிடும் என்று சொல்வார் கள். அப்படி இவனுடைய ஊழ்வினையின் பயனாக, பெரிய வருடைய சம்பந்தம் கிடைத்தது. இவனுடைய மனப் பக்குவம் உயர ஆரம்பித்தது.

எதை எதைப் பற்றியோ சிந்தித்துக் கொண்டிருக்கிற மனத்தை இறைவனைப் பற்றியும் சிந்திக்கச் செய்தான். எங்கெங்கோ ஓடிக் கொண்டிருக்கிற கால்களைக் கோயிலைக்

காணும் போது, நிற்கச் செய்து சேவிக்கலானான். யார் யார் வீட்டுக்கோ போவதற்கு நேரம் கண்டு பிடிக்கிற மனத்தை, ஆண்டவனுடைய ஆலயத்திற்குப் போக நேரத்தைக் கண்டு பிடிக்கச் செய்தான். ஆலயத்திற்குச் சென்று எம்பெருமானின் தண்டைச் சிற்றடியை வந்திக்கச் செய்தான். ஒருநாள், இரண்டு நாள் அல்ல; தினமும் இந்தப் பழக்கம் வந்தது. காலப் போக்கில் அதுவே இவனுக்கோர் இன்பமாக விளைந்தது. ஆலயத்திற்குப் போனவுடனேயே ஒரு மகிழ்ச்சி; ஓர் உற்சாகம். தண்டைச் சிற்றடியில் வீழ்ந்து வீழ்ந்து வணங்க, அந்தப் பெருமானின் கடாட்ச வீட்சண்யத்தால் இவனுக்கு ஒன்றுமே தெரியாமல், உடம்பு புளகம் போர்த்துவிடும்.

## வாழ்த்துதல்

கண்களில் நீர் தாரை தாரையாகச் சொரிய அந்தக் குழந்தையின் தண்டைச் சிற்றடியைப் பார்ப்பான். மெல்லக் கண்ணை உயர்த்தி அந்தப் பெருமான் தன் திருக்கரத்தில் வைத்திருக்கும் வேலைப் பார்ப்பான். மறுபடியும் கமல அடியைப் பார்ப்பான். சேவல் கொடியைப் பார்ப்பான்; ஷண்முகத்தைப் பார்ப்பான். ''இவனைப் பார்த்தவுடனே ஓர் இன்பம் கொந்தளிக்கிறதே. இக்குழந்தையின் முகத்தில் கோடித் துன்பம் நீங்கி விடுகிறதே!'' என்று என்ன என்னவோ சொல்ல வேண்டுமென்று நெஞ்சு துடிக்கும்; நாவோ தழுதழுக்கும்.

''இந்தக் குழந்தையை என்ன சொல்லி வாழ்த்துவது; ஒன்றும் வாழ்த்தத் தெரியவில்லையே!''

ஒன்றும் வாழ்த்துகிலேன்

என்று இவன் வேதனைப்பட்டுக் கொண்டு குருநாதரிடம் ஓடினான். ''அந்தக் குழந்தையின் பெயர் என்ன சுவாமி? அவனை எப்படி அழைக்க வேண்டும்? எப்படி வாழ்த்த வேண்டும்?'' எனக் கெஞ்சினான்.

''அந்தக் குழந்தையின் புகழைச் சொல்லும் 1500 திருப்புகழ்ப் பாடல்கள் இருக்கின்றன. 108 அலங்காரப் பாடல்கள் இருக்கின்றன. 51 அநுபூதிப் பாடல்கள் உள்ளன. கந்தபுராணம் என்கிற தனிப் புராணமே இருக்கிறது. அவனுக்கு ஆயிரம் பேருக்குமேல்

உண்டு; சுருக்கமாகச் சொல்ல 108 நாமங்கள். 12 நாமங்கள் எல்லாம் இருக்கின்றன. இவை யாவும் அந்தக் குழந்தையைப் பற்றியவைகளே. இப்படிக் கங்குகரை இல்லாமல் பல பெரு மக்கள் அவனை வாழ்த்திப் பாடியிருக்கிறார்கள். இத்தனை யையும் நீ கற்றுச் சொன்னால்தான் அவன் மகிழ்வான் என்று நினைக்காதே. 'முருகா, குகா, குமரா' என்று சொல். இல்லை யானால், 'ஆறுமுகம் ஆறுமுகம், ஆறுமுகம், ஆறுமுகம், ஆறு முகம், ஆறுமுகம் என்று நீ சொன்னாலும் போதும் அப்பா. அவன் உனக்கு அருள் செய்வான்'' என்று உபதேசம் செய்தார்.

குருநாதரின் பேரருளினால் இவனுக்கு மந்திரோபதேசம் சித்தியாயிற்று. தீட்சை வாங்கிக் கொண்டுவிட்டான்.

இறைவனைப் பற்றிச் சிந்திக்காமல் இருந்தவன். கோயிலைப் பார்த்து நின்று சேவிக்காமல் இருந்தவன், இறைவன் திருவடி யிலே ஒரு முறைகூட வீழ்ந்து வந்திக்காமல் இருந்தவன், அவனுடைய நாமத்தை ஒருதடவைகூடச் சொல்லி வாழ்த்தாமல் இருந்தவன் சிந்தித்தான்; நின்று சேவித்தான்; சிற்றடியை வந்தித் தான். ''முருகா முருகா முருகா'' எனச் சதா காலமும் அவனை வாழ்த்திக் கொண்டிருக்க ஆரம்பித்தான்.

## சந்தித்தல்

குருநாதர் ஒருநாள் திடீரென்று இவனிடம் வந்து சேர்ந்தார். ''அப்பா! நீ தினமும் அந்தப் பணக்காரனுடைய மாளிகை தேடிப் போய்க் கொண்டிருக்கிறாய் அல்லவா? சில சமயங்களில் உன்னைத் தேடிக் கொண்டு அவன் வரலாம். உன் விலாசம் அவனுக்குத் தெரியும். மற்றப் பணக்காரர்களிடம் கார்கள் பல உள்ளன. அவனிடம் கார் மயில் இருக்கிறது. மயில் வாகனத்தில் ஏறிக் கொண்டு அவனே உன்னைத் தேடிவரும் அற்புதம், என் றைக்கு வேண்டுமானாலும் நிகழும். அப்படி அவனே வரும் போது எதிர்சென்று அழைத்து உபசரி. பேசாமல் இருக்காதே. அவனைச் சந்திக்காமல் இருந்து விடாதே'' என்று உபசரித்தார்.

''இந்த ஏழையின் குடிசையை நோக்கி அந்தப் பணக்காரன் - கார் மயில் வாகனன் - வருவானா? அப்படி வருவதற்கு நான் என்ன பாக்கியம் பண்ணியிருக்க வேண்டும்! என்றைக்கு வரு வான் சுவாமி? இன்று வரையில் அவன் வரவில்லையே! வந்தால்

இனி அசட்டையாக இருப்பேனா? இன்னும் இந்தப் பாவிக்கு அவனைச் சந்திக்கும் பாக்கியம் கிட்டவில்லையே!''

**மயில் வாகனனைச் சந்திக்கிலேன்**

சந்திப்பதாவது என்ன? நாமும் அவனை நோக்கிப் போக வேண்டும்; அவனும் நம்மை நோக்கி வரவேண்டும். இரண்டு பேரும் நடுவில் சேர்ந்தால் அதைச் சந்திப்பது என்று சொல்வோம்.

ஒருவருக்கொருவர் போய்க் கண்டு வராமையினால் உறவு கெட்டது என்று சொல்வது உண்டு. ''கடன் கேளாமல் கெட்டது; உறவு காணாமல் கெட்டது'' என்கிற பழமொழி உண்டு. உறவு கெடாமல் இருக்கும் பொருட்டு உறவினரைப் பார்க்க அவர் வீட்டுக்கு நாம் போகிறோம்; இது நாம் பேட்டி காண்பது. அவர் நம் வீட்டுக்கு நம்மைப் பார்க்க வருகிறார்; இது அவர் பேட்டி கொடுப்பது. ஆனால் அவர் நம்மைப் பார்க்க வரும்போது, நாமும் அவரைக் காணப்போய் இடையிலே இரண்டு பேரும் ஒன்று சேருவதுதான் சந்தித்தல்.

''எம்பெருமான் மயில் வாகனத்தின்மீது வரும்போது, நான் அப்பெருமானை எதிர்கொண்டு அழைக்கவில்லையே! என் வீட்டைவிட்டு வெளியே வந்து சந்திக்கவில்லையே!''

**மயில் வாகனனைச் சந்திக்கிலேன்!**

என்று இவன் மனம் புழுங்கினான்.

## உற்சவ மூர்த்தி

மயில் வாகனன் என்று சொல்லும்போதே உற்சவ மூர்த்தியின் ஞாபகம் வரும். வீட்டை விட்டு வெளிக் கிளம்பாமல், ஆலயத்திற்கு ஒருநாளும் வந்தறியாதவர்களுடைய வீட்டு வாசலை அவனே தேடி வருகிறான்.

''நான் இருக்குமிடம் தேடி நீ வராவிட்டாலும் நீ வசிக்கிற வீடு தேடி நான் வருகிறேன். எழுந்திரு அப்பா. தூங்காதே. வெளியே வந்து பார்'' என்று கொட்டு முழக்கோடு, வாணங்களோடு, திவ்யாலங்காரம் உடையவனாய் வருகிறான்.

உற்சவ மூர்த்தியின் இயல்பை விளக்கும் பாடல் ஒன்று திருவிசைப்பாவில் இருக்கிறது. ஆலயத்திற்குச் சென்று மூல

மூர்த்தியைத் தேடிக் கண்டு கொண்டு உள்ளம் நெகிழ்ந்து உரை தடுமாறி வந்திப்பவர் சிலர் இருக்கலாம். கோயிலுக்குப் போகாமல், உள்ளம் நெகிழாமல், வீட்டை விட்டு இறங்காமல் இருந்து நையாத மனத்தினரைத் தானே தேடி வந்து, அவர்களது வன்மனப் பாறையை உடைத்து, அவர்களும் நைந்து உருக வேண்டும் என்பதற்காகவே அவன் உற்சவ மூர்த்தியாக வீதி வலம் வருகிறான். என்றைக்கும் இளமை மாறாத சுந்தரனாகிய அவன் பல பல அலங்காரங்களைச் செய்து கொண்டு பிறர் கண்களைக் கவர வருகிறான். அந்த அழகனைப் பார்த்தாள் ஒரு பெண். அவனிடம் தீராத காதல் கொண்டுவிட்டாள். அவனை நினைந்து அவள் மனம் முன்பெல்லாம் குழையவில்லை; நைந்து உருகவில்லை. வாகனத்தில் ஏறிக் கொண்டு அவன் வரும் சுந்தரக் கோலத்தைக் கண்டவுடன் அவள் மனம் நைந்து உருகிற்றாம். அவள் தாய் இதைச் சொல்கிறாள்.

"நையாத உளத்தினரை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலர்ப்போந்த அன்றுமுதல்."

வீட்டை விட்டு வெளிவராத மக்கள் தன் அருளுக்குப் பாத்திரமாகாமல் போகக் கூடாது என்கிற பெருங்கருணையினாலே அவன் வெளிவருகிறான். "இத்தெருவே அன்றொரு நாள் நீ பவனி போகின்ற அழகைக் கண்டாள். உன்மேல் தீராத மோகம் கொண்டாள். உன்னைத் தரிசனம் பண்ணி மனம் நைந்து உருகாதவர்களுடைய மனத்தை நையும்படி செய்ய வேண்டும் என்கிற கருணையினால் அல்லவா மூலமூர்த்தியாக மட்டும் இருந்து கொண்டிராமல் உற்சவராகவும் வந்து ஆட்கொள்ளுகிறாய்?" என்று அந்தப் பாடல் கூறுகிறது.

"இவ்வாறு மயில்வாகனப் பெருமாள் உன்னைத் தேடி வரும் போது வீட்டை விட்டு வெளியே வந்து சந்திக்க வேண்டும்" என்பதைக் குருநாதர் போதித்தார். "இது வரையிலும் அந்தப் பெருமானைச் சந்திக்கவில்லை சுவாமி இனிமேல் சந்திக்கிறேன்" என்று சொன்னான் இவன்.

## மயில் வாகனனைச் சந்திக்கிலேன்

வீதியில் வரும் உற்சவமூர்த்தியைச் சந்திப்பது முதல்நிலை. நாம் வீதியின் வழியாகப் பல இடங்களுக்குப் போகிறோம். கால்

போகிற வழியில் எம்பெருமானைச் சந்திப்பது போல மனம் போகிற வழியிலும் அவனைச் சந்திக்க வேண்டும். உலகில் நடமாடுகிறோம். தொழில்படுகிறோம். கோயிலுக்குச் சென்று, இறைவன் தண்டைச் சிற்றடியை வந்தித்து, வாயார வாழ்த்திப் பின்னர் நம் வீட்டுக்கு வருகிறோம். உட்கார்ந்திருக்கும்போது என்ன என்னவோ எண்ணங்கள் உண்டாகின்றன. கண்ணை மூடிக் கொண்டு, ''ஐயோ இப்படிப்பட்ட கெட்ட எண்ணங்கள் எல்லாம் வருகின்றனவே! மயில் வாகனப் பெருமானே! நீ வந்து இவற்றை எல்லாம் ஒழித்து என் உள்ளத்திலேயே எப்போதும் தங்கிவிடமாட்டாயா?'' என்று நம்முடைய முயற்சியினால் அவனை அடைவதற்கு முயன்றால் எம்பெருமான் மயில் வாகனத்தில் நம் உள்ளத்திலேயே வந்து எழுந்தருளுவான். நாம் செல்கிற பாதையிலே, எண்ணும் மனத்திலே நாமும் மயில் வாகனப் பெருமானும் சந்திக்கலாம். கோயிலுக்குப் போய் வழி பட்டு வருவதன் பயன் இதுதான். அப்பெருமான் தன்னுடைய கருணையினால் தன் வீட்டை விட்டு நம்முடைய மனத்திலேயே வந்து நம்மைச் சந்திக்க வரும்போது நாம் சும்மா இருக்கலாமா? அந்த இடத்திலே அவனைச் சந்திக்க முயல வேண்டாமா? ''மயில்வாகனனைச் சந்திக்கவில்லையே! இனிமேல் நானும் முயன்று சந்திக்கிறேன் சுவாமி'' என்றான் இவன்.

## அநுபவ உதயம்

குருநாதரின் அநுக்கிரகத்தினால் மயில் வாகனனைச் சிந்தித்தான். சேவித்தான். வந்தித்தான். வாழ்த்தினான். அப்பெருமான் தன் கருணையினால் இவன் வீட்டு வாசலிலே எழுந்தருளும் போது சந்தித்தான். பிறகு இவன் மனமாகிய வீதியிலே எழுந்தருளும் போதும் சந்தித்தான்.

''இப்படிச் சந்தித்த பின்னே உண்டாவது என்ன?'' பின்பு தான் அநுபவம் உண்டாகிறது. இதுவரைக்கும் சாதன வகை. தொழிற்சாலையில் பொருள்களைப் பண்ணுகின்ற வகை. பின்பு உபயோகம். மயில் வாகனனைச் சந்திக்க ஆரம்பித்தவுடன்தான் அநுபவ நலன்கள் உண்டாக ஆரம்பிக்கின்றன.

நடையிலே வேகம், பேச்சிலே வேகம், மனத்திலே வேகம் – இப்படியாக எப்போதும் சுழன்று கொண்டிருப்பதன் மூலம்

புத்திக்கும், உடம்புக்கும் பலவிதமான துன்பங்களை உண்டாக்கிக் கொண்டு, வாழத் தெரியாமல் வாழ்ந்து கொண்டிருந்த இவனுக்கு ஒரு நல்ல குருநாதர் கிடைத்தவுடன், பலபலவற்றை எண்ணி எண்ணிச் சதா சலித்துக் கொண்டிருந்த சிந்தனையிடையே இறைவனுடைய நினைவு உண்டாயிற்று. எதை எதையோ எண்ணி ஓடிக் கொண்டிருந்த அவன் சிந்தனை இறைவனை நினைந்து கொஞ்சம் கொஞ்சம் நிற்க ஆரம்பித்தது. எங்கெங்கோ ஓடிக் கொண்டே இருந்த இவன் கால்கள் போகிற வழியில் எந்தக் கோயில் தென்பட்டாலும் ஓட்டம் நின்று சேவிக்கச் செய்தன. சேவிக்கும்போது அக்கால்களும் கொஞ்சம் நின்றன; மனமும் நின்றது.

அநுபவம் முதிர்ந்து வரவர இவன் கோயிலுக்குள் சென்று இறைவன் சந்நிதானத்தில் நின்று அவனது தண்டைச் சிற்றடியைப் பற்றிக் கொண்டு வாயார வாழ்த்த ஆரம்பித்தான். உடம்பினுடைய ஓட்டம் அங்கே நின்றுபோய்விட்டது; மனத்தின் ஓட்டமும் நின்று போயிற்று. வாழ்த்திக் கொண்டிருந்த வாயினின்றும் சொல்லும் வெளிப்பட மறுத்து நின்றுவிட்டது. மனமும் எம்பெருமானை வாழ்த்தத் தலைப்பட்டது. ஒருமைப்பட்ட அவன் மனத்தை நாடி மயில்வாகனன் உலா வர ஆரம்பித்தான். இவனும் முந்தி நின்று அவனைச் சந்திக்க ஆரம்பித்தான். இருவருக்கும் மனத்திலே சந்திப்பு ஏற்பட ஆரம்பித்தவுடன் வாயின் மொழிக்கோ, உடம்பின் செயலுக்கோ அங்கே வேலை உண்டா? அநுபவம் ஆரம்பமாகி விட்டது.

## பொய்யும் மெய்யும்

அதற்கப்புறம் ஒன்று போயிற்று; ஒன்று வந்தது. எந்த எந்தத் துன்பங்கள் நம்முடைய பிறவிக்குக் காரணமாக இருந்தனவோ, அவை போகும். ஆண்டவனுடைய அருளைப் பெறுவதற்கு அநுகூலமாக இருப்பவை வந்து ஒட்டிக் கொள்ளும்.

மனைவி, வீடு, வாசல், செல்வம் எல்லாம் நிலையானவை என்று எண்ணிக் கொண்டிருக்கிறான் முதலில். கோயிலுக்குப் போவது என்றாலே பிடிக்காது. தினமும் ஒரு சினிமாவுக்காவது போக வேண்டும். அதுதான் மெய், வாழ்க்கையிலே இன்பத்தை அளிப்பது என்று எண்ணிக் கொண்டிருக்கிறான். யார் யாரையோ

தனக்கு உறவு என்றும், அவர்கள்தாம் தன்னைத் தாங்குவார்கள் என்றும் எண்ணிக் கொண்டிருக்கிறான். இரண்டு வட்டிக்குக் கடன் கொடுக்கிற மார்வாடியைக் கட்டிக் கொண்டு அலைகிறான். இப்படிப் பலவகையிலே பொய்யான வாழ்வையே விரும்பி ஓடியவன் பெரிய பணக்காரனாகிய மயில்வாகனனைச் சந்திக்க ஆரம்பித்துவிட்டால் முன்பு பார்த்தவர்களை வெறுத்து ஓட ஆரம்பிக்கிறான். பொய்யை வெறுக்கிறான். தனக்கு மீட்டும் பிறவிக்குக் காரணமான தன்னுடைய பொய்யான செயல்களை வெறுக்கிறான். ஆறு மணி ஆட்டத்துக்கு இரண்டு மணியிலிருந்தே 'க்யூ' வரிசையில் முன்பெல்லாம் நிற்பவன், நண்பர்கள் இப்போது டிக்கெட்டை வாங்கி வைத்துக் கொண்டு சினிமாவுக்கு வரவேண்டும் என்று தொந்தரவு செய்தாலும் வரமாட்டேன் என்கிறான். ''எனக்குச் சினிமா வேண்டாம்'' என்று அதை வெறுக்கிறான். ''அந்தக் கருணை வள்ளலின் கோயில் எங்கே இருக்கிறது? எந்த ஊர்களில் எல்லாம் இருக்கின்றன'' என்று தேடிக் கொண்டு ஓடுகிறான்.

தையலார் மையலிலே தாழ்ந்து வீழ்ந்து, அதுவே இன்பம் என எண்ணிப் பஞ்சார் அடி மடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டுக் கொண்டு இருந்தான் முன்பெல்லாம். இப்பொழுதோ மயில் வாகனனைச் சிந்தித்து, வந்தித்து, வாழ்த்தி, சந்தித்து, அவனுடைய அருளையே வெங்காம சமுத்திரத்தைக் கடக்கும் தெப்பமாகக் கொண்டுவிட்டான். ஊர், பேர், உற்றார், கற்றார் என்று விரும்பி ஓடிக் கொண்டிருந்தவன் ஊர் வேண்டாம். பேர் வேண்டாம், உற்றார் வேண்டாம், கற்றார் வேண்டாம், எல்லாம் எனக்கு இறைவன்தான் என்று ஓடுகிறான். இறைவனது அருளைப் பெற்ற மாணிக்கவாசகர், ''குற்றாலத்தில் நடமிடும் பெருமானே! எனக்கு ஒன்று வேண்டும்; ஒன்று வேண்டாம். நான் வேண்டுவது மெய். நான் வெறுப்பது பொய். தன்னுடைய கன்றை நினைந்து அன்போடு கத்துகின்ற பசுவினுடைய மனம்போல, உன்னுடைய குரைகழற்கே நான் கசிந்து உருகிக் கொண்டிருக்க வேண்டுகிறேன். உற்றார் வேண்டும், ஊர் வேண்டும், பேர் வேண்டும் என்று முன்பு அவற்றை மெய்யென்று நினைந்து வேண்டியிருக்கலாம். இப்போது அவை அத்தனையும் பொய்யென்று தெரிகிறது. ஆகவே,

"உற்றாரை யான் வேண்டேன், ஊர்வேண்டேன், பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன், கற்பனவும் இனிஅமையும்;
குற்றாலத்து அமர்ந்துஉறையும் கூத்தா, உன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துஉருக வேண்டுவனே"

என்று வேண்டிக் கொள்கிறார்.

மயில்வாகனனைச் சந்திக்காதவரையில் உண்மையிலேயே துன்பம் கொடுப்பன எல்லாம் இவனுக்கு இன்பமாக இருந்தன. அவனைச் சந்தித்தவுடன் உலக மாயை போய் விட்டது. எவற்றை மெய்யென்று முன்பு பாராட்டினானோ அவற்றைப் பொய் என்று நிந்திக்கிறான். நண்பர்கள், உறவினர்கள் என்று பலர் விலாசத்தை எழுதி வைத்துக் கொண்டிருந்தான். பெண்ணுக்கு வரன் தேடுவதற்காக, பையனை மருத்துவக் கல்லூரியில் சேர்ப்பதற்காக இவன் எத்தனையோ விலாசங்களைக் குறித்து வைத்துக் கொண்டிருந்தான். இப்போது எங்கே கோயில்கள் இருக்கின்றன. எங்கெங்கே இறைவன் குடிகொண்டிருக்கிறான் என்று நாடித் தலந்தலமாகச் சுற்ற ஆரம்பித்துவிட்டான். இறைவன் திருவருள் விலாசம் பெற்ற ஞானசம்பந்தப் பெருமான் எத்ததனை தலங்களுக்கு, ரோடு வசதி இல்லாத தலங்களுக்குச் சென்று, நல்ல கட்டிடம் இல்லாத இடங்களில் உறைந்திருக்கும் இறைவனை நாடி அந்தக் காலத்திலேயே ஓடியிருக்கிறார்!

பொய்யை நிந்திக்கிலேன்

என்று வருந்தின பேர்வழி குருவின் அருட் பார்வையால் முருகனைச் சந்திக்க ஆரம்பித்தவுடன் பொய்யை நிந்திக்க ஆரம்பித்தான். இவனைப் பொறுத்த அளவில் ஒன்று போய் விடுகிறது; பொய்யான பேச்சுப் போய்விடுகிறது; பொய்யான எண்ணம் போய்விடுகிறது; பொய்யான செயல் போய்விடுகிறது; பொய்யான எல்லாமே போய் விடுகின்றன. பொய்ப் பொருளைக் கண்டாலே அருவருப்பு உண்டாகிவிடுகிறது. அழுக்கு எப்போது தெரிகிறது? ஒளி இருக்கும்போது தெரிகிறது. அப்படியே மனத்திலே அஞ்ஞான இருள் சூழ்ந்திருக்கும்போது பொய்யான வாழ்க்கையை அருவருக்கத் தோன்றுவதில்லை. மயில்வாகனனைச் சிந்தித்து, சேவித்து, வந்தித்து, வாழ்த்தி, மனத்திலே சந்தித்து ஞானம் பிறக்கும்போது, ஊன் உருகி உள்ளொளி பெருகும்போது, பொய் தோன்றும், பொய்யை நிந்திக்கும் நிலை உண்டாகும்.

பொய்யை நிந்தித்துவிட்டால் போதுமா? மெய்யை உறுதிப் பாட்டோடு பற்றிக் கொள்ள வேண்டும். கோயிலுக்குப் போவது நல்லது. ஆண்டவனை வாழ்த்தி வணங்குவது நல்லது. ஆகாரத் திலே நியமம், ஆசாரம் ஒழுக்கம் இவை எல்லாவற்றையும் கடைப்பிடிப்பது நல்லது என்ற ஞானம் நமக்குந்தான் தோன்று கிறது. ஆனால் கோயிலுக்குப் போகிறோமா? நாம் பிறன் பொருளை இச்சிப்பது தவறு. பிறருக்குக் கெடுதி நினைப்பது தவறு என்ற ஞானம் பல பல தடவைகள் தோன்றினாலும்கூட நம்மால் பிறருக்குத் துன்பம் விளைவிக்காமல், பிறருடைய பொருளை இச்சிக்காமல் வாழத் தெரியவில்லையே! காரணம் என்ன? மனத்திலே திண்மை இல்லை. நினைப்பதைச் செய லாக்கக்கூடிய ஆற்றல், உண்மையைச் சாதிக்கக்கூடிய உறுதிப் பாடு அதற்கு இல்லை.

மயில்வாகனனின் அருளைப் பெற்றவர்களோ உண்மையைச் சாதிக்கிறார்கள். எத்தனை இடையூறுகள் வந்தாலும் அவர்கள் கொண்ட உறுதி குலைவதில்லை. உண்மை நமக்குத் தெரிகிறது; பிறருக்கு உபதேசம் செய்யவும் தெரிகிறது. ஆனால் வாழ்க்கை யிலே அவற்றை மேற்கொள்ளும் மன உறுதி பெரும்பாலோர்க்கு இருப்பது இல்லை.

நல்ல ஒட்டுமாஞ்செடி வளர்ந்து பூத்து நிற்கிறது. ''இது பூக்குமா? பூத்தால் காய்க்குமா?'' என்று ஏங்கினார் இராமலிங்க வள்ளலார். காய்த்தது; பிறகு, ''இது பழுக்குமா? பழுத்தால் குரங்குகள் வந்து தின்றுவிடாமல் இருக்குமா? குரங்குகள் தின்னாமல் நானே தின்றாலும் தொண்டை விக்கிக் கொள்ளாமல் இருக்குமா?'' என்று அவர் ஆண்டவனை நோக்கிச் சொல்கிறார்.

''களக்கமறப் பொதுநடம்நான் கண்டுகொண்ட தருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்ததொரு காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பிஉதிர்ந் திடுமோ
வெம்பாது பழுக்கினும்என் குறிப்பில்அகப் படுமோ
கொளக்கருது மலமாயைக் குரங்குகவர்ந் திடுமோ
குரங்குகவ ராதெனது குறிப்பிலகப் படினும்
துளக்கமற உண்ணுவனோ தொண்டைவிக்கிக் கொளுமோ
சோதிதிரு வுளமெதுவோ ஏதுமறிந் திலனே.''

*இறைவனுடைய அருளைப் பெறுவதற்கு இத்தனை தடைகள், இடையூறுகள் உண்டாகும். இத்தனையையும் தாண்டி, இன்பத்தைப் பெறவேண்டுமென்றால் மனத்திலே உறுதி ஓங்க வேண்டும்; உண்மையைச் சாதிக்கும் உறுதி வேண்டும்.*

*மயில் வாகனனைச் சிந்தித்து, நின்று சேவித்து, சிற்றடியை வந்தித்து, வாழ்த்தி, மனத்திலே சந்திக்க ஆரம்பித்தபின் பொய்யை நிந்திக்கும் நிலை வரும்; உண்மை சாதிக்கும் மன உறுதிப்பாடு வளரும். மன உறுதி முறுக முறுக மெய்யைச் சாதிக்கலாம். அப்போது கிலேசம் இராது. துன்பம் இராது. புந்தியினாலே வருகின்ற கிலேசம், காயத்தினாலே வருகின்ற கிலேசம் போய் விடுகின்றன. மனத்தினால் வருகின்ற துன்பம் போகவேண்டுமானால் மனோநாசம் ஏற்படவேண்டும். உடம்பினாலே வருகின்ற துன்பம் போகவேண்டுமானால் உடம்பு அற்றுப் போக வேண்டும். உடம்பு இல்லாத நிலை பிறவி எடுக்காத நிலை. இறைவனை நினைந்து, வாழ்த்தி, தியானித்துச் சமாதி கூடினால் மனோநாசம் உண்டாகும்; பிறவி இல்லா முக்திநிலை ஏற்படும். மனமற்றநிலை, பிறவி அற்ற நிலை வருவதற்கு, அதாவது மனத்தின் கிலேசத்தை, உடம்பின் கிலேசத்தை போக்குவதற்கு எம்பெருமானைச் சிந்திக்க வேண்டும்; நின்று சேவிக்க வேண்டும்; சிற்றடியை வந்திக்க வேண்டும்; வாழ்த்த வேண்டும்; அவனைச் சந்திக்க வேண்டும்.*

சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன்
 தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேன் ஒன்றும் வாழ்த்துகிலேன்
 மயில்வாகனனைச்
சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேன்
 உண்மை சாதிக்கிலேன்
புந்திக்கிலேசமும் காயக்கிலேசமும்
 போக்குதற்கே.

*'புந்திக்கிலேசமும் காயக்கிலேசமும் போக்குதற்கு நான் சிந்திக்கவில்லையே! நின்று சேவிக்கவில்லையே! தண்டைச் சிற்றடியை வந்திக்கிலேன்; ஒன்றும் வாழ்த்துகிலேன்; மயில் வாகனனைச் சந்திக்கிலேன்; பொய்யை நிந்திக்கிலேன்; உண்மை சாதிக்கிலேன்'' என்று எதிர்மறை வாயிலாக அருணகிரியார் சொல்*

வதிலிருந்து புந்திக்கும், உடம்புக்கும் வரும் துன்பத்தைப் போக்க இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதை நாம் உணரலாம்.

புலன்களின் வழியே சென்று பல பல காரியங்களைச் செய்து துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு முதலில் தெய்வ நினைவு வரவேண்டும். தெய்வ சித்தம் உண்டான பிறகே கோயில்களின் இருப்பிடம் தெரிகிறது. கோயில்களை கண்ட போது, உள்ளே போகாவிட்டாலும் நின்று சேவிக்கும் மனப் பக்குவம் வர வேண்டும்.

பசிப்பவனுக்குச் சோறு வேண்டும். சோற்றைப் பார்த்தால் போதாது; தொட்டால் போதாது; எடுத்துச் சாப்பிட்ட பின்தான் பசி தீரும். இறைவன் இருக்கின்ற நினைப்புத் தோன்றினால் மட்டும் துன்பம் நீங்காது. மனம் வாக்குக் காயம் ஆகிய மூன்று கரணங்களையும் கொடுத்து வாழச் செய்திருப்பவன் ஆண்டவன். மனத்தினால் சிந்தித்து, உடம்பினால் வந்தித்து, வாயினால் வாழ்த்தி வாழ வேண்டும். இப்படி வாழ்ந்தால் இறைவனும் நம்மைச் சந்திக்க வருவான். நாமும் அவனைச் சந்திப்போம். சந்திப்பின் பயனாக மனோலயம் ஏற்பட, ஞான ஒளி விளங்கும். பொய்யைப் பொய் என்று உணரும் தன்மை வரும்; எவற்றை யெல்லாம் மெய்யென்று நம்பி வாழ்ந்தோமோ அவற்றின் உண்மைத் தன்மை தெரிய, அதனால் அவற்றையே பொய் பொய் என்று நிந்தித்து ஓடும் தன்மை வரும். மெய்யைச் சாதிக்கலாம். இப்பொழுது எடுத்திருக்கும் பிறவியினால் மனத்தில் உண்டா கின்ற துன்பங்கள் போய் விடும்; உடம்பினால் வருகின்ற துன்பங் கள் போய்விடும். மீட்டும் பிறப்பு எடுப்பதற்குக் காரணமான வினைகளே அற்றுப் போய் விடுவதால் பிறப்பில்லா முத்தி இன்பத்தை, துன்பமில்லாத பெருவாழ்வை, அடையலாம்.

பொய்யை நிந்தித்து, மெய்யைச் சாதிக்கிறவர்களுக்கு உடம்பு இருந்தும் அதனாலே துன்பம் இல்லை; மனம் இருந்தும் அதனாலே துக்கம் இல்லை. நமக்கும் அந்த நிலை வரவேண்டுமானால் முருகனது நினைவு வேண்டும். அவன் சிற்றடியை வந்திக்க வேண்டும்; அவனை வாழ்த்த வேண்டும். அவன் நம்மைத் தேடிவர, நாமும் அவனை நாடிச் சென்று சந்திக்க வேண்டும். இவற்றின் பயனாகப் பொய்யை நிந்தித்து, மெய்யைச் சாதித்து,

*வாழவேண்டும். அப்படியின்றி மனத்தினால் துக்கம் உண்டாகிறதே, உடம்பினால் துக்கம் உண்டாகிறதே என்றால் அது யாருடைய குறை? ''ஐயோ! புந்திக்கிலேசத்தையும், காயக்கிலேசத்தையும் போக்குவதற்கு நான் இப்படியெல்லாம் செய்யவில்லையே!'' என்று நாம் வருந்த வேண்டும். வருந்தத் தெரியாத நமக்காக அருணகிரியார் தாம் வருந்துவது போல எதிர்மறை முகத்தால் நமக்கு ஒரு பேருபதேசத்தைச் செய்கிறார்.*

**சிந்திக்கி லேன்;நின்று சேவிக்கி**
**லேன்; தண்டைச் சிற்றடியை**
**வந்திக்கி லேன்; ஒன்றும் வாழ்த்துகி**
**லேன்; மயில் வாகனனைச்**
**சந்திக்கி லேன்; பொய்யை நிந்திக்கி**
**லேன்; உண்மை சாதிக்கிலேன்;**
**புந்திக் கிலேசமும் காயக் கிலேசமும்**
**போக்குதற்கே.**

*(மனக்கவலையையும் உடல் துன்பத்தையும் போக்குவதற்கு, முருகனுடைய தண்டையை அணிந்த சிற்றடியை நான் நினைக்கவில்லை; நின்று சேவிக்கவில்லை; வணங்கவில்லை; சிறிதளவும் வாழ்த்தவில்லை; மயில்வாகனனாகிய அவனைத் தரிசிக்கவில்லை; பொய்யானவற்றை வெறுக்கவில்லை; உண்மையானவற்றையே உறுதிப்படுத்தவில்லை.*

*தண்டைச் சிற்றடியை முன்னும் கூட்டுக. வந்தித்தல் – வணங்குதல். கிலேசம் – துன்பம். காயம் – உடல். போக்குதற்குச் சிந்திக்கிலேன், சேவிக்கிலேன், வந்திக்கிலேன், வாழ்த்துகிலேன் என்று கூட்டிப் பொருள் கொள்க.)*

# வேலவன் போதித்த ஞானம்

வழக்கமாக அருணகிரிநாத சுவாமிகளைப் பலபடியாகப் பாராட்டிக் கொண்டு வந்திருக்கிறோம். இன்றைக்கு அவரைக் கொஞ்சம் வையலாமென்று தோன்றுகிறது. 'அவர் முழுப் பொய்யர்; புரட்டர்; எப்பொழுதுமே சத்தியத்தைப் பேச வேண்டிய மகாத்மாக்கள் இப்படிப் பொய்ப் பேசலாமா?' என்று தோன்றுகிறது.

## பொய் கூறுபவர்

யாரோ ஒருவர் மற்றொருவரிடத்தில் வந்து, ''ஐந்து ரூபாய் பணம் இருந்தால் கொடுங்கள்'' என்று கடன் கேட்கிறார். அதற்கு இவர், ''எனக்குச் சம்பளம் இன்னும் வரவில்லை. என் பையில் ஐந்து நயா பைசாவே இருக்கின்றன. அரிசி இல்லை. வாங்க வேண்டும். என்ன செய்வது என்று தெரியாமல் நான் உட்கார்ந் திருக்கிறேன். என்னிடம் பணம் இல்லையே!'' என்று சொல்லுகிறார்.

இன்னும் கொஞ்ச நேரம் கழித்து அவருடைய சொந்தக்காரர் ஒருவர் வருகிறார். அவரோடு பேசிக்கொண்டிருக்கும்போது, ''உங்களுக்குத் தெரியுமா? என்னுடைய கதைக்கு ஆயிரம் ரூபாய் பரிசு கொடுத்திருக்கிறார்கள். செக்காகக்கூடத் தரவில்லை. நோட்டுக்களாகவே கையில் கொடுத்தார்கள். எல்லாம் ஐந்து ரூபாய் நோட்டுகள், இன்னும் செலவழிக்கவில்லை. அப்படியே வைத்திருக்கிறேன் பாருங்கள்'' என்று தமக்கு வந்த பரிசை எடுத்துக் காட்டுகிறார். ஒருவரிடம் ஐந்து நயா பைசாக்கூட இல்லை என்று சொல்லிவிட்டு, ஐந்து ரூபாய் நோட்டுக்களாகவே ஆயிரம் ரூபாய் இருக்கிறது என்று மற்றொருவரிடத்தில் சொல் கிறவர், முன்னாலே ஒன்று சொல்லிப் பின்னாலே ஒன்று சொல் கிற பொய்யர் அல்லவா? அருணகிரியாரையும் அத்தகைய பொய்யர் என்று சொல்ல வேண்டும். எப்படி?

## அதுவும் இதுவும்

சென்ற பாட்டிலே, ''ஆண்டவனே! மனத்திலே உண்டாகிய துக்கத்தையும், உடம்பிலே உண்டாகிற துக்கத்தையும் போக்கிக் கொள்ள நான் உன்னைச் சிந்திக்கவில்லையே; நின்று சேவிக்க வில்லையே; தண்டைச் சிற்றடியை வந்திக்கவில்லையே; உன் புகழ் ஒன்றையும் வாழ்த்தவில்லையே; உன்னைச் சந்திக்கவும் இல்லையே!'' என்று வரிசையாக ஏழு தடவைகள் 'இல்லை, இல்லை' என்று சொன்னார் அருணகிரியார். சொல்லி, ஐந்தாறு பாட்டுக்கள் தள்ளியாவது வேறு சொல்லக் கூடாதா? அடுத்த பாட்டிலேயே தமக்குக் கிடைத்திருக்கும் அற்புதமான அநுபவப் பரிசைச் சொல்கிறார்.

**வரைஅற்று அவுணர் சிரம் அற்று**
**வாரிதி வற்றச் செற்ற**
**புரை அற்ற வேலவன் போதித்த**
**வா!பஞ்ச பூதமும்அற்று**
**உரைஅற்று உணர்வுஅற்று உடல் அற்று**
**உயிர்அற்று உபாயம் அற்றுக்**
**கரையற்று இருள்அற்று எனதுஅற்று**
**இருக்கும்அக் காட்சியதே!**

முன்பு படிப்படியாக 'இல்லை, இல்லை' என்று சொல்லி வந்தவர், இங்கே தமக்குக் கிடைத்த பரிசுகளை அடுக்குகிறார். இவர் பேச்சு நான் முன்னாலே சொன்ன ஆசாமியினுடையது போல இருக்கிறது அல்லவா? அவரைப் பொய்யர் என்றால் இவரையும் பொய்யர் என்றுதானே சொல்ல வேண்டும்? அவர் வஞ்சகர் என்றால் இவரும் வஞ்சகரே அல்லவா?

## வேற்றுமை

ஆனால் ஒரு வேற்றுமை இருக்கிறது. தம்மிடம் வந்து ஐந்து ரூபாய் கடன் கேட்ட ஏழையிடம் பணம் இல்லை என்று சொன்னவர், யாரிடம் இருக்கிறது என்று சொன்னார்? அவரிடமே சொல்லவில்லை. வேறு ஒருவரிடம். அவர் தம்மைப் பணம் கேட்க மாட்டார் என்கிற நம்பிக்கையினால் தாம் பெற்ற பரிசைச் சொன்னார். அவரிடம் என்ன சொன்னார் என்று இவருக்குத்

தெரியாது. இவரிடம் என்ன சொன்னார் என்பது அவருக்குத் தெரியாது. ஆக, இருவரிடமும் தனித்தனியாக மற்றவர் காதில் படாமல் மாறுபாடாகச் சொன்னார். வெவ்வேறு மனிதருக்குச் சொன்ன வார்த்தை அவை. இது வஞ்சகம்; பொய். அருணகிரி யாரை வஞ்சகர், பொய்யர் என்று திட்டுவதற்கு அவர் இத்தகைய பொய்யைச் சொன்னாரா என்று யோசித்துப் பாருங்கள்.

''சிந்திக்கிலேன், சேவிக்கிலேன், வந்திக்கிலேன், வாழ்த்து கிலேன்'' என்று ஒருவரிடம் சொல்லிவிட்டு, ''வேலவன் அருளால் எனக்கு இது கிடைத்தது. அது கிடைத்தது'' என்று வேறு மனிதரிடம் சொல்லவில்லை. தாம் சொல்பவை இரண் டையும் அடுத்தடுத்துச் சொல்கிறார்; வெளிப்படையாகச் சொல் கிறார்; ஒருவனுக்கு ஒன்றும், மற்றவனுக்கு வேறு ஒன்றும் இன்றி, யாவருடைய காதிலும் இவை இரண்டும் விழும் படியாகச் சொல்கிறார். இப்படிச் சொல்வதிலிருந்தே அது பொய் அன்று, புரட்டு அன்று, வஞ்சனை அன்று என்று நிச்சயமாகத் தெரிந்து கொள்ளலாம். அது ஒருவருக்கும் இது ஒருவருக்குமாக அருணகிரிநாத சுவாமிகள் சொல்லியிருந்தால் வஞ்சகந்தான். ஒரே கூட்டத்திற்கு இதையும் சொல்லி அதையும் சொல்கிறார். ஆகவே வஞ்சனை செய்த குற்றமென்று சொல்ல முடியாது.

## முரணா?

அப்படியானால் மற்றொரு குற்றமாக இதைக் கொள்ளலாம். முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறவன் சித்தத் தெளிவு இல் லாதவன். அருணகிரிநாதர் அப்படி ஒருவேளை இருக்கலாமோ? அவரைப் பைத்தியம் என்று சொல்வதானால் அப்பெருமான் வாக்கிலே இத்தனை தொடர்பு இராது. பைத்தியம் முன் பின் னாகப் பேசும்; சொல்வது எதையும் தெளிவாகத் தொடர்ச்சியாகச் சொல்லாது; அதன் பேச்சிலே ஒரு வரையறை இராது. அருண கிரியார் கூறிய அந்தப் பாட்டு, அந்தக் கருத்துக்கு ஒட்டித் திருத்த மாக இருக்கிறது. இந்தப் பாட்டு இந்த அளவுக்குத் திருத்தமாக இருக்கிறது. ஆகவே, அவரைப் பைத்தியம் என்றும் நினைப் பதற்கு இல்லை.

ஒருகால் முன்னொன்றும் பின்னொன்றும்,பேச்சில் ஒன்றும், பத்திரிகையில் ஒன்றுமாகக் கருத்தை வெளியிடுகிற அரசியல்

வாதியின் கூட்டத்தைச் சேர்ந்தவரோ? அவர் அரசில்வாதியும் அல்ல; சமரச சமயஞானி என்பதை நாம் முன்பே அறிவோம். பின் ஏன் அப்படிப் பேசுகிறார்? இதைப் பற்றி முன்பே பல முறை சொல்லியிருக்கிறேன்.

## அருணகிரியார் கருணை

தம்மை மிகவும் இழிந்த நிலையில் இருப்பதாக அவர் பாடுகிற பாட்டுக்கள் எல்லாம் மிகவும் இழிந்த நிலையில் உழன்று கொண்டிருக்கும் நம்மை நினைந்தே பாடியவை. நாம் அழவேண்டியதை நமக்காக அவர் அழுகிறார்; பார்வை மானைக் காட்டாவிட்டால் பிற மான்களைப் பிடிக்க முடியுமா? அவர் அப்படி நம்மைப் போல அழாவிட்டால் அவரிடம் நாம் நெருங்கு வோமோ? அவர் தாம் மிகவும் இழிந்த நிலையில் இருப்பவரைப் போலச் சொல்கின்ற பாடல்கள் நம்மிடம் அவருக்கு உள்ள கருணையைக் காட்டும். அவர் தாம் பெற்ற அநுபவத்தைச் சொல்லும் பாடல்கள் அவரைப் போலவே நாமும் முயன்றால் அத் தகைய இன்பத்தைப் பெறலாம் என்னும் நம்பிக்கையை ஊட்டும்.

துக்கம் இல்லாதவனும் துக்கப்படுபவனோடு சேர்ந்து அழுதால் துக்கப்படுபவனுடைய துக்கம் சமனமாகும் என்பர். இறந்த வீட்டில் எத்தனை வெளியார்கள் வந்து வீட்டுக்காரர் களோடு அழுகிறார்கள்! துன்பத்தில் உழன்று அழுது கொண்டிருக் கிறவர்கள் நாம். நம்முடைய துன்பத்தைக் குறைக்க அருணகிரி நாத சுவாமிகள் நம்மோடு சேர்ந்து கொண்டு அழுகிறார். நம்மைப் போலவே வெறும் அழுகையோடு அவர் நின்று விட்டால் அதனால் நமக்கு பயன் இல்லை. துன்பத்தை நீக்கிக் கொள்ள நமக்கு வழியும் வேண்டும்; இன்பத்தைத் துய்க்கலாம் என்று நம்பிக்கை வளர வழி வேண்டும். ஆகவே இடை யிடையே தம் அநுபவத்தைப் பற்றிப் பேசுகிறார்.

'நமக்காக அவர் அழவேண்டாமே. அவருடைய அநுபவத்தை மாத்திரம் கச்சிதமாக ஒரு பத்துப் பாடல்களில் சொல்லிவிட்டுப் போகக் கூடாதா?' என்று கேட்கிற பேர்வழிகளும் இருப்பார்கள். பச்சிலைக்கு விலை இல்லை; மதிப்பு இல்லை தான். பெரிய மாலை கட்டவேண்டுமென்றால் பூக்களை மட்டும் கொண்டு

கட்டுவதில்லை. கட்டினாலும் கவர்ச்சி இராது. இடையிடையே மதிப்பில்லாத பச்சிலைகளையும் சேர்த்துப் பூக்களையும் வைத்துக் காட்டினால்தான் மாலை நன்றாக இருக்கும்.

தம்முடைய அநுபவத்தை மாத்திரம் சொன்னால், ''அடேயப்பா! இதற்கும் நமக்கும் வெகுதூரம்'' என்று நாம் பயந்து போய் விடுவோம். ''கோயிலுக்குப் போகவில்லையே! இறைவனைத் தொழவில்லையே! அர்ச்சனை செய்யவில்லையே! வாழ்த்த வில்லையே!'' என்று அவர் அழும்போது நாமும் அப்படிப் பண்ணாதவர்களாகையால், இவரும் நம்மைப் போன்றவர் என்கிற நினைப்பில், கூட உறவாடுகிறோம். அருணகிரியார், நாமும் தம்மைப் போல ஆக வேண்டும் என்ற கருணையுடையவர். ஆதலாலே, ''இப்படி எல்லாம் இருந்த எனக்கு வேலனுடைய கருணையினால் எப்படிப்பட்ட ஞானம் உண்டாயிற்று, தெரியுமா?'' என்று அதையும் சொல்லி ஆசையை மூட்டுகிறார்.

போன பாட்டிலே, ''கோயிலுக்குப் போகவில்லையே! ஆண்டவனைக் கும்பிடவில்லையே! அவனை வாழ்த்தவில்லையே! பொய்யை நிந்தித்து, மெய்யைக் கைக்கொள்ள வில்லையே!'' என்று நமக்காக அழுதார். நாம் அந்த மாதிரியான சாதன வகை களை மேற்கொண்டோமானால் உண்டாகும் பயனை விளக்க, ''எனக்கு எத்தகைய இன்பம் உண்டாகும்படி வேலவன் செய் தான் தெரியுமா?'' என்று இந்தப் பாட்டில் தம் அநுபவத்தைச் சொல்லி, முயன்றால் நாமும் அவ்வாறே அடையலாம் என்கிற நம்பிக்கையை ஊட்டுகிறார்.

## குருவின் பெருமை

உலகத்தில் இறைவன் திருவருளை நம்மால் நேரடியாகப் பெற முடியாது; குருநாதர் மூலமாகத்தான் பெற வேண்டும். திருமூலர் இதற்கு நல்ல உதாரணம் சொல்கிறார். பள்ளிக் கூடங்களில் பூதக் கண்ணாடியைக் கொண்டு பஞ்சை எரித்துக் காட்டுவார்கள். சூரியனுக்குமுன் பூதக்கண்ணாடியைப் பிடித்துக் கொண்டு அதன் வழியே கிரணங்கள் போய்ச் சேருமிடத்தில் பஞ்சை வைத்தால் பஞ்சு எரியும். பூதக் கண்ணாடிதான் பஞ்சை எரிக்கக் காரணம் என்று நாம் நினைக்கலாம். வேறிடத்தில் அது

பஞ்சை எரிக்காது. சூரியன் முன்னால் காட்டும்போதுதான் அது பஞ்சை எரிக்கும்.

இறைவன் அருளால்தான் ஆன்மாக்கள் மும்மலங்களிலிருந்து விடுபடவேண்டும்; என்றாலும் இறைவன் அருள் நேரே பாயாது. இறைவன் அருள் பூதக்கண்ணாடி போன்றது. மலத்தைச் சுட்டெரிக்க வேண்டுமானால் சூரியனுடைய கிரணங்களைப் போலக் குருவின் அருள் வேண்டும். குருநாதனாகிய சூரியன் தோற்றும்போது ஆன்மாக்களின் மலங்கள் இறைவன் அருளால் எரிந்து போகின்றன.

> "சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
> சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
> சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
> ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே"

என்கிறார் திருமூலர்.

பல பல காலங்களில் இறைவனே நேரே வந்து குரு நாதனாகச் சிலருக்கு உபதேசம் செய்திருக்கிறான். சனகாதி முனிவர்களுக்குப் பரமேசுவரன் தட்சிணாமூர்த்தியாக அமர்ந்து சின் முத்திரையினால் ஞானோபதேசம் செய்தான். சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட் கொள்ளக் குருநாதனாக அவனே எழுந்தருளினான். மாணிக்கவாசகப் பெருமானை மதுரையிலிருந்து திருப் பெருந்துறைக்கு வரச் செய்து ஆட்கொண்டான். ஞானகுருவாக வருகிறவர்கள் அனைவருமே இறைவனுடைய அம்சமேயாவார்கள்.

> "அருபரத் தொருவன் அவனியில் வந்து
> குருபர னாகிய கொள்கையைச்
> சிறுமையென் றிகழாதே"

என்பது மணிவாசகர் வாக்கு.

## முருகனே குரு

பெரிய அவதார புருஷர்களுக்கு, இறைவனது அம்சம் பெற்ற மகான்களுக்கு, இறைவனே நேராக உபதேசம் செய்தமையினால் அவர்கள் மிகுதியான ஞானத்தைப் பெற்றவர்களாக விளங்கினார்கள். அவர்கள் இறைவனிடத்திலிருந்து நேரே குரு

உபதேசம் பெற்றவர்களாகையால், பிறருக்கு உபதேசம் செய்கிற பெருமை உடைய குருக்களாக இலங்கினார்கள். அந்த அவதார புருஷர்களுடைய கூட்டத்தைச் சேர்ந்தவர் அருணகிரிநாதப் பெருமான். அவருக்கு, நம்மைப் போல வாய் வயிற்றோடு பிறந்து வந்த மனிதர் யாரும் குருவாக வரவில்லை. ஆண்டவனே அவருக்கு உபதேசம் பண்ணினான். அவனே குருநாதனாக எழுந்தருளி அவருக்கு ஜபமாலை தந்து உபதேசித்தான். இதற்குச் சாட்சி மூன்றாவது பேர்வழி யாரும் வேண்டாம். அவரே சாட்சி; நேர்முகமான சாட்சி. அவருடைய வாக்கே பிரமாணம்.

"செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவினன்குடிப் பெருமாளே"

என்று திருப்புகழில் சொல்கிறார். பழனியில் இருக்கிற எம் பெருமானிடத்தில் ஈடுபட்டுத் தோத்திரம் செய்கிறார். "நீ உப தேசம் செய்தாயே! ஜபமாலை தந்து, குருநாதனாக வந்தாயே!" என்று இறைவனைப் பார்த்துச் சொல்கிறார்.

"முகம் ஆறுடைய தேசிகனே; சண்முகநாதனே!

ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத்து உச்சியின்மேல்
அளியில் விளைந்தது ஓர் ஆனந்தத் தேனை, அநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியைத்

தெளிய எனக்கு உபதேசம் செய்தாயே" என்று மிகப் பெருமிதத் தோடு கந்தர் அலங்காரத்திலும் பேசியதைப் பார்த்தோம்.

முருகன் குருநாதனாக எழுந்தருளிச் செய்த உபதேசங்கள், வழங்கிய இன்பம் ஆகியவை, நம்மிடையே வாழ்ந்த அருணகிரி நாதரின் வாக்கில் சந்தப்பாட்டுக்களாக, கட்டளைக் கலித்துறைப் பாட்டுக்களாக, கலிவிருத்தங்களாக வெள்ளம் வெள்ளமாகப் பொங்கி வந்திருக்கின்றன. அப்படி அவர் தாம் பெற்ற உயர்ந்த ஞானத்தை, இன்பத்தை, நமக்கு எடுத்துச் சொல்லும் பாடல் களில் ஒன்றே இப்பொழுது நாம் பார்க்கப் போகிற பாட்டு.

## *வியப்பு*

வரையற்று அவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித்தவா!

*''போதித்தவாறு என்னே! உபதேசம் செய்தவாறு என்னே!'' என்கிறார். எங்கே ஆச்சரியக் குறியைப் போடுகிறாரோ அங்கே தான் உண்மையான அருணகிரியார் பேசுகிறார். கந்தர் அலங்காரத் தின் முதல் பாட்டிலேயே,*

''பேற்றைத் தவம் சற்றுமில்லாத என்னை ப்ரபஞ்சம் என்னும்
சேற்றைக் கழிய வழிவிட்ட வா!''

*''பிரபஞ்சச் சேற்றைக் கழிக்கும்படியாக வழிவிட்டவாறு என்னே!'' என்று ஆச்சரியப்பட்டுப் பேசினார். வேலவன் அருளினால் இன்பத்தை உண்ட அவருக்கு அதை நினைக்கும் போதெல்லாம் இத்தகைய ஏப்பம் வெளிவருவதைக் கண்டுதான், ''நம்மைப்போல் அழுதாலும் அவர் அழுமை நமக்காகத்தான்'' என்கிற உண்மை தெரிந்து விடுகிறது.*

வரையற்று அவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித்தவா!

*இங்கே, ''எல்லை இல்லாத, கணக்கில்லாத அசுரர்கள் சிரம் அற்றுப்போகும்படியாகவும், சூரபன்மனுக்கு ஒளிய இடம் கொடுத்த வாரிதி – கடல் – சுவறிப்போகும் படியாகவும் குற்ற மற்ற வேலை விடுத்த வேலாயுதன் எனக்குப் போதித்தவாறு என்னே!'' என்று ஆச்சரியப்பட்டுக் கொட்டாவிவிட்டு நிற்கிறார் அருணகிரியார். வேலவன் என்ன போதித்தான்?*

## *அற்றது லாபமா?*

பஞ்ச பூதமும் அற்று
உரைஅற்று உணர்வு அற்று உடல் அற்று
உயிர் அற்றுஉபாயம் அற்றுக்
கரையற்று இருள்அற்று எனதுஅற்று
இருக்கும் அக் காட்சியதே!

*காட்சி – ஞானம். குருநாதன் ஞானத்தைப் போதித்தான். அந்த ஞானம் எப்படி விளைந்ததென்று சொல்ல வருகிறார். லாபம் வந்தால், 'எனக்கு இது வந்தது, அது வந்தது' என்று சொல் வோம். ''எனக்கு மனையாட்டி வந்தாள். எனக்கு அவளோடு ஒரு வைரமோதிரம் வந்தது, ஒரு வீடு வந்தது, மஞ்சள் காணி நாலு ஏக்கர் நிலமும் வந்தது'' என்று வரக்கூடியவற்றை வரிசையாக*

ஒருவன் அடுக்கினால் அவனுக்கு வந்தது லாபம் என்று தெரிகிறது. ஆனால் அருணகிரியார் இங்கே,

பஞ்ச பூதமும் அற்று
உரையற்று உணர்வு அற்று உடல் அற்று
உயிர் அற்று;உபாயம் அற்றுக்
கரையற்று இருள்அற்று எனதுஅற்று

என்று வரிசையாக 'அற்று அற்று' என்று அடுக்குகிறார். இது லாபமாகுமா? நம்மிடம் இருப்பது நம்மை விட்டுப் போனால் நஷ்டம் அல்லவா? 'அற்று அற்று' என்று சொல்வதே அமங்கலமல்லவா? – இவ்வாறு தோன்றலாம்.

ஒருவனுக்குத் தீராத நோய். கண் எரிச்சல், காது வலி, வயிற்று வலி, பல்லில் இரத்தம் என்று எல்லாவிதமான நோய்களும் உண்டு. அவன் வயிற்று வலி தாங்கவில்லை என்று ஒரு டாக்டரிடம் போனால் அவர் வயிற்று வலிக்கு மருந்து கொடுக்கிறார். காது வலி என்றால் அவர், " 'இ.என்.டி.' நிபுணரிடம் போங்கள்" என்று வேறு ஒருவரிடம் போகச் சொல்கிறார். அங்கே போய்க் காது வலிக்கு மருந்து போட்டுக் கொள்கிறான். அவரிடம், "பல்லில் இரத்தம் வருகிறது. தாடை கடுக்கிறது" என்று சொன்னால் அவர் பல் வைத்தியரிடம் போகச் சொல்கிறார். தினமும் அவன் வயிற்றுவலி டாக்டரிடம் போக வேண்டும்; பல் வைத்தியரிடம் போக வேண்டும்; கண், காது, மூக்கு வைத்தியரிடம் போக வேண்டும். அவன் என்ன செய்வான்! ஒரு நாள், "ஏன் அப்பா இப்படிக் கஷ்டப்படுகிறாய்? டாக்டர் சண்முகத்திடம் போ. எல்லாவற்றுக்கும் அவரே தக்க வைத்தியம் பண்ணுவார்" என்று சொல்லிப் போனார், ஒரு பெரியவர்.

டாக்டர் சண்முகத்திடம் அவன் சென்று சிகிச்சை பெற்றான். ஒரு மாதம் கழித்து அந்தப் பெரியவர் வந்தார். "சுவாமி! அந்த டாக்டர் எனக்கு எத்தகைய வைத்தியம் செய்தார் தெரியுமா? என்னுடைய கண் எரிச்சல் போயிற்று; காது வலி போயிற்று; பல்லில் இரத்தம் வடிவது போயிற்று; வயிற்றுவலி போயிற்று" என்று அவன் போயிற்று, போயிற்று என்று சொன்னால் அது அமங்கலமாகுமா? நஷ்டமாகுமா? இல்லை. அவனுக்குத் துன்பம் அளித்து வந்த நோய்கள் எல்லாம் போனது அவனுக்கு இன்பம்; லாபம்.

''போதித்தவாறு என்னே! உபதேசம் செய்தவாறு என்னே!'' என்கிறார். எங்கே ஆச்சரியக் குறியைப் போடுகிறாரோ அங்கே தான் உண்மையான அருணகிரியார் பேசுகிறார். கந்தர் அலங்காரத் தின் முதல் பாட்டிலேயே,

> ''பேற்றைத் தவம் சற்றுமில்லாத என்னை ப்ரபஞ்சம் என்னும்
> சேற்றைக் கழிய வழிவிட்ட வா!''

''பிரபஞ்சச் சேற்றைக் கழிக்கும்படியாக வழிவிட்டவாறு என்னே!'' என்று ஆச்சரியப்பட்டுப் பேசினார். வேலவன் அருளினால் இன்பத்தை உண்ட அவருக்கு அதை நினைக்கும் போதெல்லாம் இத்தகைய ஏப்பம் வெளிவருவதைக் கண்டுதான், ''நம்மைப்போல் அழுதாலும் அவர் அழுமை நமக்காகத்தான்'' என்கிற உண்மை தெரிந்து விடுகிறது.

> வரையற்று அவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
> புரையற்ற வேலவன் போதித்தவா!

இங்கே, ''எல்லை இல்லாத, கணக்கில்லாத அசுரர்கள் சிரம் அற்றுப்போகும்படியாகவும், சூரபன்மனுக்கு ஒளிய இடம் கொடுத்த வாரிதி - கடல் - சுவறிப்போகும் படியாகவும் குற்ற மற்ற வேலை விடுத்த வேலாயுதன் எனக்குப் போதித்தவாறு என்னே!'' என்று ஆச்சரியப்பட்டுக் கொட்டாவிவிட்டு நிற்கிறார் அருணகிரியார். வேலவன் என்ன போதித்தான்?

## அற்றது லாபமா?

> பஞ்ச பூதமும் அற்று
> உரைஅற்று உணர்வு அற்று உடல் அற்று
> உயிர் அற்றுஉபாயம் அற்றுக்
> கரையற்று இருள்அற்று எனதுஅற்று
> இருக்கும் அக் காட்சியதே!

காட்சி - ஞானம். குருநாதன் ஞானத்தைப் போதித்தான். அந்த ஞானம் எப்படி விளைந்ததென்று சொல்ல வருகிறார். லாபம் வந்தால், 'எனக்கு இது வந்தது, அது வந்தது' என்று சொல் வோம். ''எனக்கு மனையாட்டி வந்தாள். எனக்கு அவளோடு ஒரு வைரமோதிரம் வந்தது, ஒரு வீடு வந்தது, மஞ்சள் காணி நாலு ஏக்கர் நிலமும் வந்தது'' என்று வரக்கூடியவற்றை வரிசையாக

ஒருவன் அடுக்கினால் அவனுக்கு வந்தது லாபம் என்று தெரி கிறது. ஆனால் அருணகிரியார் இங்கே,

பஞ்ச பூதமும் அற்று
உரையற்று உணர்வு அற்று உடல் அற்று
உயிர் அற்று;உபாயம் அற்றுக்
கரையற்று இருள்அற்று எனதுஅற்று

என்று வரிசையாக 'அற்று அற்று' என்று அடுக்குகிறார். இது லாபமாகுமா? நம்மிடம் இருப்பது நம்மை விட்டுப் போனால் நஷ்டம் அல்லவா? 'அற்று அற்று' என்று சொல்வதே அமங்கல மல்லவா? – இவ்வாறு தோன்றலாம்.

ஒருவனுக்குத் தீராத நோய். கண் எரிச்சல், காது வலி, வயிற்று வலி, பல்லில் இரத்தம் என்று எல்லாவிதமான நோய்களும் உண்டு. அவன் வயிற்று வலி தாங்கவில்லை என்று ஒரு டாக்டரிடம் போனால் அவர் வயிற்று வலிக்கு மருந்து கொடுக்கிறார். காது வலி என்றால் அவர், '' 'இ.என்.டி.' நிபுண ரிடம் போங்கள்'' என்று வேறு ஒருவரிடம் போகச் சொல்கிறார். அங்கே போய்க் காது வலிக்கு மருந்து போட்டுக் கொள்கிறான். அவரிடம், ''பல்லில் இரத்தம் வருகிறது. தாடை கடுக்கிறது'' என்று சொன்னால் அவர் பல் வைத்தியரிடம் போகச் சொல் கிறார். தினமும் அவன் வயிற்றுவலி டாக்டரிடம் போக வேண் டும்; பல் வைத்தியரிடம் போக வேண்டும்; கண், காது, மூக்கு வைத்தியரிடம் போக வேண்டும். அவன் என்ன செய்வான்! ஒரு நாள், ''ஏன் அப்பா இப்படிக் கஷ்டப்படுகிறாய்? டாக்டர் சண்முகத் தினிடம் போ. எல்லாவற்றுக்கும் அவரே தக்க வைத்தியம் பண்ணுவார்'' என்று சொல்லிப் போனார், ஒரு பெரியவர்.

டாக்டர் சண்முகத்திடம் அவன் சென்று சிகிச்சை பெற்றான். ஒரு மாதம் கழித்து அந்தப் பெரியவர் வந்தார். ''சுவாமி! அந்த டாக்டர் எனக்கு எத்தகைய வைத்தியம் செய்தார் தெரியுமா? என்னுடைய கண் எரிச்சல் போயிற்று; காது வலி போயிற்று; பல்லில் இரத்தம் வடிவது போயிற்று; வயிற்றுவலி போயிற்று'' என்று அவன் போயிற்று, போயிற்று என்று சொன்னால் அது அமங்கலமாகுமா? நஷ்டமாகுமா? இல்லை. அவனுக்குத் துன்பம் அளித்து வந்த நோய்கள் எல்லாம் போனது அவனுக்கு இன்பம்; லாபம்.

"பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்."

அவ்வளவுதான். நாமம், வண்ணம், ஊர் இவற்றைக் கேட்டு அறிந்தவுடஅன அவனிடத்தில் அவளுக்குத் தீராக் காதல் மூண்டது. உள்ளம் கிளர்ந்து பொங்கும் காதலினால் அவன் நினைவாகவே அவள் பிச்சியாக, பைத்தியமாக ஆகி விட்டாள்.

"பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்."

இதுவரைக்கும் அம்மா, அப்பா என்று பயந்து வாழ்ந்து கொண்டிருந்தாள்; உலகத்தார் ஆசாரப்படி அடங்கி, ஒடுங்கி வீட்டை விட்டு வெளிக் கிளம்பாமல் வாழ்ந்து வந்தாள். "பெயர் கெட்டுவிடும்; ஊர் தூற்றும்; மானம் மரியாதை வேண்டாமா?" என்று அம்மா அப்பா, பெயர், ஊர், மானம், மரியாதை ஆகிய எல்லாவற்றையும் விரும்பி வாழ்ந்தாள். ஆனால் ஆரூர்ப் பெரு மானின் நாமம் கேட்டு, வண்ணம் கேட்டு, அவன் உறைவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு, அவன் நினைவாகவே, அவன் வயமாகவே பைத்தியம் கொண்ட பிறகோ?

"அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்."

அன்றைக்கே அம்மா அப்பா எல்லாரையும் விட்டு விட்டாள்.

"அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை."

உலகத்தார் ஆசாரம் எல்லாம் போய்விட்டன. 'ஆறு மணிக்குக் காவிரி போகவேண்டுமே; எட்டு மணிக்கு உலை வைக்க வேண்டுமே; பன்னிரண்டு மணிக்குச் சாப்பிட வேண்டுமே; இரவு ஒன்பது மணிக்கு உறங்கப் போக வேண்டுமே!' என்கிற நினைப்புக்கள் யாவும் போய்விட்டன. ஊணை மறந்தாள்; உடலை வெறுத்தாள். கடைசியில்,

"தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே."

தன்னையே மறந்துவிட்டாள். பேர் கெட்டுப் போயிற்று. பேர் கெடுவதாவது என்ன? ஜீவபோதம் கழன்றுவிட்டது. "நான் நான்" என்கிற நினைவு அற்றுப் போய்விட்டது. 'நான் வேறு, தலைவன் வேறு' என்கிற நிலை போய், தன் தலைவன் தாளோடு நங்கை சேர்ந்துவிட்டாள்.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"

என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார்.

## பைத்தியத்தின் இயல்பு

ஆனால் நமக்கு 'நான் நான்' என்கிற நினைவு போகாத காரணத்தினாலே 'எனது எனது' என்று பல பொருள்களை எல்லாம் சேர்த்துக் கொண்டே இருக்கிறோம். தெருவில் கிடக்கும் காகிதங்களை, கிழிசல் துணிகளைச் சிலர் பொறுக்கிக் கொண்டு போகிறார்கள்; துருப்பிடித்த தகரங்களைப் பொறுக்குகிறார்கள். அறிவுடைய மக்களால் ஒதுக்கப்பட்ட பொருள்களை அவர்கள் சேகரித்துக் கொண்டிருப்பதனாலே அவர்களைப் புத்தி கலங்கியவர்கள், பைத்தியங்கள் என்று பேசுகிறோம்.

ஆனால், நாம் எப்படி இருக்கிறோம்? நம்மைக் காட்டிலும் அறிவுடையவர்கள் என்று பாராட்டிப் பூசிக்கும் அருணகிரியார், ஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், பட்டினத்து அடிகள் முதலிய அறிவுடைய அருட்பெருமக்களால் ஒதுக்கப்பட்ட பொருள்களை, "எனக்கு எனக்கு" என்று போட்டி போட்டுக் கொண்டு, பேயாகப் பறந்து சேர்த்துக் கொண்டிருக்கிறோம். "பெண் வேண்டாம், பொருள் வேண்டாம், மண் வேண்டாம்" என்று அவர்களால் எந்த எந்தப் பொருள்கள் வெறுத்து ஒதுக்கப் பட்டனவோ அவற்றையே பெரும்செல்வம் என்று எண்ணி மயங்கிச் சேர்த்துக்கொண்டிருக்கிறோம். நமக்குச் சம்பந்தம் இல்லாத பொருள்களைச் சேர்த்துக் கொள்வதைவிட அதிகமான கெடுதல் என்ன? நமக்குத் துன்பத்தைத் தருகிற பொருளைச் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். அவற்றைச் சேர்த்துக் கொள்வது தகாது என்று நமக்கு எப்படித் தெரியும்? நம்மைவிட அறிவுடைய மக்கள், அருளுடைய மக்கள் அவற்றை வேண்டாம் என்று தூக்கி எறிந்து விட்டார்கள்.

"புள்ளியதோ லாடை புனைந்தரவப் பூணணிந்த
வெள்ளிய செங்கண் விடையா னடிக்கமலம்
உள்ளிய மெய்யன் புடையா ரருவருத்துத்
தள்ளிய செல்வம்"

என்கிற நினைப்பு நமக்கு இல்லை.

அவற்றை நாம் பொறுக்கி மூட்டை கட்டுகிறோம். நாமும் ஒருவகைப் பைத்தியம் என்றுதானே சொல்ல வேண்டும்? இந்த உலகத்தில் பொருளைச் சேர்க்கும் பைத்தியம் பிடித்துத் துன்பப் பட்டு உழன்று கொண்டிருக்கும் நமக்குச் சுகம் விளைய வேண்டு மென்றால், துன்பம் அளிப்பவை எல்லாம் ஒவ்வொன்றாகப் போகவேண்டும்.

## உலகமும் உடம்பும்

உயிர் வாழ உடம்பு வந்திருக்கிறது. உடம்பு வாழ உலகம் வந்திருக்கிறது. உலகம் பஞ்சபூதக் கோட்டை. அதில் உள்ள பஞ்சபூதக்கூடு உடம்பு.

ஒரு பெரிய மாளிகை. அந்த மாளிகையில் நமக்காக ஓர் அறை வைத்திருக்கிறோம். மாளிகையில் நமக்கு வேண்டியவர்கள் நடமாடுகிற இடத்தில் நாமும் போவோம். ஆனால் நமக்காகத் தொழில்படும்போது நமது அறையில் இருப்போம். அம்மா சமையல் அறையில் இருப்பாள். அப்பா தம் அறையில் இருப்பார். இதுபோல நாம் நம்முடைய படிப்பு அறையில் இருப்போம். இப்படியே நாம் ஒவ்வொருவரும் பெரிய மாளிகையாகிய உலகத் தில் சிறிய சிறிய அறைகளாகிய உடம்புகளில் இருக்கிறோம்.

பிரபஞ்சம் என்பது மண் கோட்டை. நம்மைப் போல உடம்பு எடுத்த பிராணிகள் நடமாடிக் கொண்டிருக்கிற இடம் பிரபஞ்சம். பிரபஞ்சம், உடம்பு ஆகிய இரண்டுமே பஞ்சபூதங் களால் ஆனவைகளே. பஞ்ச பூதங்களின் சேர்க்கையினால் பெரிய அளவில் கட்டப்பட்ட கோட்டை பிரபஞ்சம். சின்ன அளவில் கட்டப்பட்ட வீடு உடம்பு. பெரிய கோட்டையினுள், சின்ன வீட்டில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

## பூதங்கள் அற்றன

ஒரு பெரிய கோட்டைக்குள் இருக்கும் சின்ன அறை ஒன்றில் உள்ள ஒருவனை விடுவிக்க வேண்டுமென்றால் அதே கோட்டைக்குள் மற்றோர் அறையில் இருப்பவனால் முடியாது. அறைக்கு அப்பால், கோட்டைக்கும் அப்பால் உள்ள ஒருவன் தான் முதலில் வெளியில் இருக்கும் கோட்டை மதில்களை உடைத்துவிட்டு உள்ளே வந்து, அவன் அடைபட்டுக் கிடக்கும் சிறையையும் இடித்துத் தள்ளி அவனை விடுவிக்க முடியும். அப்படி உயிருக்குப் பஞ்சபூத வாசனை போகவேண்டுமென்றால், பஞ்ச பூதங்களுக்கு அப்பாற்பட்டவனாக இருக்கிற இறைவனின் துணை வேண்டும்.

"ஆண்டவனே! நீ எனக்குச் செய்த பேருபகாரத்தை நான் மறந்து விடுவேனா? பிரபஞ்ச வாசனை, பஞ்ச பூதங்களின் வாசனை என்னை விட்டுக் கழியும்படியாகச் செய்தாயே! பிரபஞ்சச் சேற்றைக் கழிய வழிவிட்டவாறு என்ன!" என்று கந்தர் அலங்காரத்தின் முதல் பாட்டிலேயே பிள்ளையார் சுழியாக, இதைத்தான் போட்டார் அருணகிரியார். சண்முகநாதனின் அருளால் அவருக்குப் பஞ்ச பூதங்களின் வாசனை அற்றுப்போய்விட்டது.

சித்திரை மாதத்து வெயில் பொறி பறக்கும்படியாக எரித்துக் கொண்டிருந்தாலும் செருப்புப் போட்டுக் கொண்டு போவானுக்குக் காலில் சூடு உறைக்காது. அப்படியே அகண்டம் முழுவதும் பஞ்ச பூதங்களின் வாசனை இருந்தாலும் இறைவன் ஞானம் போதித்ததனால் அருணகிரியார் அளவில் பஞ்ச பூதங்களில் வாசனை அற்றுப் போய்விட்டது.

"பஞ்ச பூதமும் அற்று"

பஞ்ச பூதங்களின் வாசனை – சேறு – அற்றுப்போய் விட்டது. அடுத்தாற்போல இருப்பது உடம்பு.

## உரை அறுதல்

உள்ளே அரவம் கேட்டால் யாரோ ஆசாமி இருக்கிறான் என்பது தெரிகிறது. கை, கால்கள் எல்லாம் இருந்தாலும் உடம்பு எடுத்திருக்கும் பிராணிகளுக்கு இல்லாத ஒன்று மனிதனுக்கு இருக்கிறது. அதுதான் உரை;பேச்சு, பேச்சுச்சத்தம் வருவதி

லிருந்தே உடம்பு இருப்பதை அறிந்து கொள்ளலாம். காக்கை கரைகிறது, மாடு கத்துகிறது, நாய் குரைக்கிறது என்றாலும் உடம்புடைய உயிர் இனங்கள் எல்லாவற்றையும்விட வாயாடி மனிதன் தான். அவற்றுக்குத் தம் கருத்தைச் சொல்லாக மாற்றக் கூடிய ஆற்றல் இல்லை. அந்த ஆற்றல் படைத்த மனிதன்தான் பேசுவதற்கு வாயை நன்றாகப் பயன்படுத்திக் கொள்கிறான். ''அதிகமாகப் பேசாதே. பேச்சைக் குறைத்துக் கொள்'' என்று எத்தனை நாள் பெரியவர்கள் சொன்னாலும் கேட்காமல் தோன்றியபடி எல்லாம் பேசித் துன்பத்தை அநுபவிக்கிறான்.

மனிதனுக்குத் துன்பம் தருகிற கருவிகளில் எதை அடக்கி னாலும் அடக்காவிட்டாலும் நாக்கை அடக்க வேண்டும். இல்லா விட்டால் சொல் இழுக்குப்பட்டுத் துன்புறுவான்.

''யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு''

என்கிறார் திருவள்ளுவர்.

நாக்கை அடக்கிக் கொள்ளத் தெரியாமல் வாய்கிழிய, தொண்டை கிழிய உலகம் முழுவதும் கேட்கவேண்டும் என்று பேசுகிறான் மனிதன். பேச்சின் ஒலியை அதிகப்படுத்தும் கருவியை வேறு உபயோகித்துக் கொண்டு பேசுகிறான்.

பேசினாலும் பேசாவிட்டாலும் அவன் கருத்தை உள்ளே இருக்கிற ஆண்டவன் கேட்பான். அவனுக்கு ஒலிபெருக்கியில் பேசினால்தான் கேட்கும் என்பது இல்லை. கோபம் வரும்போது இரைந்து பேசுகிறோம். அன்பு விளையும்போது மெல்லப் பேசு கிறோம். மனையாட்டியிடத்தில் மனிதன் கொண்டுள்ள அன்பு நுட்பமானது. அந்த அன்பின் வெளியீடாகிய உரையும் அவ ளோடு பேசும் போது மெல்ல, பிறர் காதில் விழாமல் வெளிப் படுகிறது.

மந்திரங்களையும் பிறர் காது கேட்க உச்சரிப்பது இல்லை.

''நாவியல் மருங்கில் நவிலப்பாடி''

என்பர். நாக்கின் அசைவினாலே மந்திரத்தை உச்சரிக்க வேண்டுமே தவிர, பிறர் காதில் விழும்படியாகச் சொல்லக் கூடாது. மனையாட்டியிடத்தில் காதல் மீதூர்ந்து பேசுகையில்

எப்படி இரகசியமாகப் பேச்சு அமைகிறதோ, அப்படியே இறைவனிடத்தில் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுகின்ற பஞ்சாட்சர மந்திரமும் பிறர் காதுபட யாரும் ஜபிக்க மாட்டார்கள்.

வற்றிய ஓலைதான் கலகலக்கும். பச்சோலை சத்தம் உண்டாக்காது. பேச்சு அதிகமாக இருந்தால் உள்ளே பண்டம் இல்லாத ஆசாமி என்று கண்டு கொண்டு விடுவார்கள். பேசாமல் இருப்பதைவிட மனிதனுக்கு அரியது வேறு ஒன்றும் இல்லை. மூன்று கரணங்களில் ஒன்றாகிய வாக்கு முதலில் அடங்கினால் தான் பிற கரணங்களுடைய செயல் அடங்கும்.

''மோன மென்பது ஞான வரம்பு''

என்று சொல்வர்.

இறைவன் சந்நிதானத்திற்குப் போகும் இடத்திலுள்ள தலைவாசல் ஞானம். அந்த ஞானத் தலைவாசலுக்குள் புகுந்து விட்டால் பேச்சுக்கு இடமில்லை; பேச்சு அற்றுப்போன, உரை இல்லாத நிலை வந்துவிடும். ''வேலவன் எனக்கு எத்தகைய ஞானத்தைப் போதித்தான்! முதலில் பஞ்சபூதங்கள் அற்றுப் போயின. அடுத்தபடி உரையும் அற்றது'' என்கிறார் அருணகிரியார்.

''உரை அற்று''

## உணர்வு அறுதல்

உரை அற்றுப் போதல் எளிய காரியம் அன்று. அதைச் சாதிக்கவே வாரத்திற்கு ஒரு நாளாவது மௌனமாக இருந்து பழகுவது பழைய காலத்தில் வழக்கம். பல பல எண்ணங்களை நினைந்து நினைந்து பேசுகின்ற மனிதனுக்குப் பேச்சு அடங்க வேண்டுமானால் எண்ணுகிற எண்ணங்கள் அடங்கவேண்டும். எண்ணங்களை அடக்குவதற்குப் பெரியவர்கள் ஒரு சுலபமான வழியைச் சொல்லிக் கொடுத்தார்கள். ''சிந்தனை அதிகமாக ஓடாமல் அடக்க, நாம் எங்கே பழகுகிறோமோ அங்கே உள்ளவற்றை மட்டும் சிந்திக்க வேண்டும். அதற்குமேலே போனால் கொஞ்சம் சிந்தனைக்கு லகான் போடு'' என்றார்கள்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்; சாப்பாட்டைப் பற்றி மட்டும் நன்றாகப் பேசலாம்; சிந்திக்கலாம். அதற்கு மேலே

எண்ணம் ஓடினால் அதை நிறுத்திக் கொள்ள முதலில் பழக வேண்டும். அப்புறம் படிப்படியாக எந்த இடத்தில் இருக்கி றோமோ அந்த இடத்துச் சிந்தனையும் அற்று விடும்; உரையும் அற்று விடும்.

''எனக்கு வேலவனே குருநாதனாக இருந்து நல்லுபதேசம் செய்தான். பஞ்சபூதம் அற்றன; உரை அற்றது. அதற்கு அடுத்தாற்போல உணர்வும் அற்றது'' என்கிறார் அருணகிரியார்.

''உணர்வு அற்று.''

'வாக்கு மௌனம் வந்தது. மனோ மௌனம் வந்தது. உடம்பு மரத்துப் போய்விட்டது.' நாம் கொஞ்ச நேரம் சம்மணம் போட்டுக் கொண்டு உட்கார்ந்தால் கால் திமிர்த்துக் கொள்கிறது. நம் கால் நமக்குச் சொந்தம் இல்லை போலத் தோன்றுகிறது. அப்படிப்பட்ட நிலை அல்ல இது; இது சரீர வாசனை அற்றுப் போதல். அதற்கு ஏற்படுகிற இன்ப துன்பங்களை மனம் உணர் வது இல்லை. மனம் இன்ப துன்பங்களைச் சாட்சியாக இருந்து அநுபவிக்கும்.

''செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும்
நெஞ்சோர்ந் தோடா நிலை''

என்று பழைய காலத்து நூலில் வருகிறது; எது நடந்தாலும் மனத்திலே சகஜமான நிலை இருக்கும். வானமே இடிந்து விழுந்தாலும் அவர்களுடைய மனத்திலே எவ்விதமான அதிர்ச்சி யும் இராது. பாம்பு இல்லாவிட்டாலும் பாம்பு என்றால் நம் நெஞ்சம் பகீர் என்கிறது. இந்த நிலை அவர்களுக்கு இராது.

முதலில் வாங்மௌனம் வந்தது; அடுத்து மனோ மௌனம் வந்தது.

உணர்வு அற்று.

## உடலும் உயிரும் அறுதல்

பின்பு காஷ்ட மௌனம் ஏற்பட்டது; உடலாலே செயல் ஒன்றும் செய்யாது இருக்கிற நிலை வந்தது. உடலினால் உண்டாகிற இன்ப துன்பங்களைச் சாட்சியாகப் பார்க்கிற நிலை வந்தது. உடல் அற்றது; அப்புறம் உயிர் அற்றது.

## உடல் அற்று உயிர் அற்று.

உடல் போய்விட்டது, உயிர் போய்விட்டது என்றால் பிராணன் போய்விட்டது என்று பொருள் அன்று. மூன்று வித மௌனமும் வந்த பிறகு மற்றொன்று வர வேண்டும்; ஜீவ போதம் கழியவேண்டும். ''இந்த உலகத்தில் நான் வாழ்கிறேன். இவை எல்லாம் எனக்கு உரிய பொருள்கள். நான் நினைத்தால் எந்த இன்பத்தையும் அநுபவிக்கலாம்'' என்று வரும் 'நான் நான்' என்ற நினைப்பே ஜீவபோதம். வாக்குப் போய், மனம் போன பிறகு, சரீரவாசனை கழன்றது. அப்பால், 'நான் நான்' என்கிற அகங்கார உணர்ச்சி, ஜீவபோதமாகிய உயிர் போய்விட்டது.

## உபாயம் அறுதல்

இதுவரையிலும் ''நான் நான்'' என்கிற அகங்காரம் போகாமையினால் தனக்கு என்ன என்ன வகையில் கருவிகரணங்களால் இன்பங்களை உண்டாக்கலாம் என்று பலவித உபாயங்களை மேற்கொண்டு வந்தான். ஜீவபோதம் போகாத வரையில் மற்றவர்கள் தேடுகிற மாதிரி உலகில் பலவித முயற்சிகளைச் செய்தான். ஜீவபோதம் கழன்ற பிறகு -

### உபாயம் அற்று

அதற்கப்பால் தன் முயற்சி என்று என்ன இருக்கிறது? ஆணி அடிக்கச் சுத்தியின் உதவியைத் தேடுகிறான். ஆணி அடித்த பிறகு சுத்தியலைத் தூக்கி எறியத்தானே வேண்டும்? ஒருவன் கருவியினால் பெறும் பயனை அடைந்த பிறகு அக்கருவியை எறிந்துவிடாமல் என்ன செய்வான்? சாதனங்களால் சாத்தியத்தை அடைந்துவிட்ட பிறகு உபாயத்திற்கு, சாதனத்துக்கு வேலை என்ன? ஒன்றும் இல்லை.

### உபாயம் அற்று.

உபாயம் - சாதனவகை, சாதனவகை அற்றுவிட்டது. சமையல் ஆகிற வரைக்கும் அஞ்சறைப்பெட்டிக்கு வேலை உண்டு; அடுப்புக்கு வேலை உண்டு; அரிவாள் மனைக்கு வேலை உண்டு. சமையல் ஆனபிறகு அவற்றை எல்லாம் எடுத்து அப்பால் வைத்துவிட்டுச் சாப்பிட வேண்டுமே தவிர அவற்றை வைத்துக் கொண்டே உட்கார்ந்திருப்பார்களா?

## சாதனமும் சாத்தியமும்

பிரபஞ்ச வாசனை போன பிறகு, உரை போய், உணர்வு போய், உடலும் போய், உயிரும் போன பிறகு, ஜீவபோதம் கழன்ற பிறகு, சாதனத்திற்கு வேலை இல்லாமல் போய்விட்டது. சாதகன் திருப்புகழ் படிக்கிறான். ஆறுபடை வீடுகள் எல்லாம் தரிசனம் செய்து வருகிறான்; தினமும் காலையில் குளித்து விட்டுப் பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு வந்து, 'முருகா முருகா' என்று வாழ்த்துகிறான்; தண்டைச் சிற்றடியை வந்திக் கிறான்; தியானம் செய்கிறான்; இத்தகைய சாதன வகைகளினால் முடிந்த முடிபாகிய சாத்தியத்தை அடைந்த பிறகு இவற்றுக்கு வேலை என்ன?

சென்னையில் இருக்கும்போது ஒருவர் எப்போது பார்த்தா லும் கையில் விசிறியோடு இருப்பார். குற்றாலத்துக்கு அவர் போகிறார். ஒரே தென்றல் காற்று. சிலுசிலு என்று மழை பெய்து கொண்டே இருக்கிறது. அங்குமா அவர் கையில் விசிறியை வைத்துக் கொண்டிருப்பார்? தென்றல் அடிக்கும் வரையில்தான் அது வேண்டும். தென்றல் காற்று வீச ஆரம்பித்தவுடன் விசிறிக்குத் தேவை இல்லை. சாதன வகைகளினாலே முடிந்த முடிவாகிய இன்பத்தைப் பெற்றவர்களுக்கு உபாயங்கள், சாதனங்கள் தேவை இல்லை என்று ரமண மகரிஷி சொல்கிறார்.

குளிர் தேசத்தில் இருக்கும்போது ஒருவன் கம்பளிச் சட்டை, கம்பளிக் குல்லா, கம்பளி மப்ளர் முதலியன அணிந்து கொண் டிருந்தான். வெப்பப் பிரதேசத்திற்கு வந்த பிறகு அவற்றுக்கு என்ன வேலை? எல்லாவற்றையும் கழற்றி எறிந்துவிட்டான். எல்லா விதமான கம்பளிப் போர்வைகளும் அற்றுப் போய்விட்டன.

அப்படி, "எங்கள் ஆண்டவன் ஞானாக்கினி தந்தான். குளிர் போயிற்று. பிரபஞ்ச வாசனை அற்றது. வாங்மௌனம் உண்டா யிற்று. மனோ மௌனம் உண்டாயிற்று. காஷ்ட மௌனமும் உண் டாயிற்று. இதுவரைக்கும் உபாயம் தேவைப்பட்டது. ஜீவபோதம் கழன்ற பிறகு எனக்கு உபாயமும் அற்றுப்போய்விட்டது; தேவை இல்லாமல் போய்விட்டது" என்கிறார் அருணகிரியார்.

நிலத்தைப் பயன்படுத்தி, உழுது, விதைத்து, களை எடுத்து, கதிர் அறுத்து, போரடித்து, நெல்லை வீட்டுக்குக் கொண்டு வந்து

குத்தி, அரிசியாக்கி, சோறாக்கிச் சாப்பிடுகிற வரைக்கும் கருவியும் உழைப்பும் தேவை. சாப்பிட்ட பிறகு பசி ஆறுகிறது; வேலை இல்லை; தூங்கத்தான் வேண்டும். அப்படி ஜீவபோதம் கழல்கிற வரையில் உபாயம் தேவை; முயற்சி தேவை. அவர் மேற்கொண்ட சாதன வகைகளினால், உபாயங்களோடு கூடிய முயற்சியினால், ஆண்டவன் கருணை செய்யப் பிரபஞ்ச வாசனை அற்றது; வாங்மௌனம் வந்தது; மனோமௌனம் வந்தது; காஷ்ட மௌனம் உண்டாயிற்று; ஜீவபோதம் கழன்றது. இது வரைக்கும் உபாயம் இருந்தது. ஜீவபோதம் கழன்ற பிறகு எல்லா உபாயங்களும் அற்றுப் போயின.

**உபாயம் அற்று.**

## கரையற்ற அநுபவம்

எல்லா உபாயங்களும் அற்றுப்போன பிறகு, தன் செயல் என்பது எதுவும் இல்லாதுபோன பிறகு, விளைவது என்ன? அநுபவம். அதைச் சொல்கிறார்.

**கரை அற்று.**

ஜீவபோதம் கழன்று, உபாயங்கள் எல்லாம் அற்றுப் போகிற நிலை வரைக்கும் படிப்படியாகக் கருவிகரணங்களோடு சாதன வகைகளை மேற்கொள்ள வேண்டும். இது வரைக்கும் எங்கே போனாலும் எல்லை உண்டு. இடம், காலம், முயற்சி ஆகிய எல்லாவற்றுக்குமே எல்லை உண்டு. ஒரு பானையில் சர்க்கரைப் பொங்கல் பண்ணுகிறோம். எல்லாவற்றையும் சாப்பிட முடியாது; வயிற்றுக்கு எல்லை உண்டு. நாம் அநுபவிக்கிற சுக துக்கங்களுக்கு எல்லை இருக்கிறது. எல்லைக் கல்லை எங்கே பார்த்தாலும் நட்டுக் கொண்டிருக்கிற இவ்வுலகத்தில் அங்கங்கே எல்லையைக் கட்டிக் கொண்டு சாதனம் பண்ணி வந்தவர் அருணகிரியார். இப்போது அவர் வந்திருக்கிற வெளியிலோ எல்லை இல்லை. கரை கிடையாது. என்ன கரை? காலம் ஒரு கரை. இடம் ஒரு கரை. இந்த இரண்டு கரைகளுக்கும் உட்பட்டு, எல்லைக்கு உட்பட்டு, ஒவ்வொரு சாதனத்தையும் செய்து வந்தது போக, ஆண்டவனது அருட்பிரகாச இராசதானியை அடைந்த வுடனேயே கால எல்லை, இட இல்லை எல்லாவற்றையும்

தாண்டிவிடுகிறோம். எல்லை சுட்டுகின்ற பிரபஞ்சம் அங்கே இல்லை. எல்லையைச் சுட்டும் மனமும் இல்லை. எல்லையற்ற பரவெளிக்கு, கரையற்ற பேரின்ப வெளிக்கு வந்தாகிவிட்டது.

கரை அற்று.

## இருள் அறுதல்

கரை அற்றுப் போனவுடனே, எல்லா எல்லைகளையும் கடந்து வந்த பிறகு, கால இட வரம்புக்கு அடங்காத நிரதிசய ஆனந்தம் உண்டாகிறது. அங்கே எப்படி இருக்கிறது?

இருள் அற்று.

இதுவரைக்கும் நாம் இருந்தது இருள் உலகம்; புற விளக்கு களின் உதவியை நாடுகின்ற இடம். கண்ணாடி கெட்டியாகப் போடப் போடக் கண் பார்வை குறைவு என்பது போல, விளக்கு களின் எண்ணிக்கை பெருகப் பெருக நம்முடைய புறக்கண் ஒளியும் குறைவு என்பது தெரியும். மட்டமான சரக்குகளுக்குத் தான் அதிக விளம்பரம்; அதிக விளக்குகள் அதிக இருளில் நாம் இருந்து வருவதைக் காட்டுகின்றன. பழைய காலத்தில் இரா வேளைகளில் நட்சத்திர ஒளியில் வரப்பில் நடந்து வருவார்கள். இப்போது சிமெண்ட ரோடில் மாலை வேளையில் நடப்பதற்குத் தடுமாறுகிறோம்; புறக்கண்ணை அகல அகல விரித்துப் பார்க் கிறோம். உள்ளம் இருண்டு கிடக்கிறது; அக ஒளியின்றி இருண்டு கிடக்கிறது. கண்ணைத் திறந்து கொண்டே குருடர்களாக இருக் கிற நமக்குக் கண்ணை மூடினாலா ஒளி தெரியப் போகிறது? கண்ணைத் திறந்து பார்க்கிறவர்களுக்கு ஒளி வேண்டும். கண்ணை மூடிக் கொண்டவருக்கு விளக்கு இருந்தாலும் பயன் இல்லை; இல்லாவிட்டாலும் குறை இல்லை. ஞானிகள் தங்கள் புறக்கண்களை மூடி, அகக் கண் கொண்டு இறைவனைக் கண்டார்கள். நமக்கு அகக்கண் திறக்கவில்லை யாதலாலே புறக் கண்ணை மூடாமலேயே இருக்கிறோம். அகக்கண் திறந்து விட்டவர்களுக்குப் புறக்கண்ணால் பயன் இல்லை; புற ஒளியால் பயன் இல்லை. இவ்வுலகில் நாம் காணுகின்ற ஒளி எல்லாம் வெறும் ஒளி அல்ல; இருள் படர்ந்த ஒளி.

"மா இருள் ஞாலம்"

என்று இதைச் சொல்வர். இருட்டில் இருப்பவனுக்கு ''இது இருட்டு'' என்று எப்படித் தெரியும்? ஒளிக்கு வரும் போதுதான் இருட்டுத் தெரியும். ஞானம் தோன்றும்போதுதான் அஞ்ஞானம் புலப்படும்.

## எனது அறுதல்

ஜீவபோதம் கழன்ற பிறகு அஞ்ஞான இருள் அகன்று எல்லையற்ற பேரின்ப ஞான ஒளியில் கலக்கும்போது என்ன ஆகிறது?

எனது அற்று இருக்கும் அக்காட்சியதே!

'என்னுடைய அறிவு என்னுடைய ஆத்மா' என்கிற நினைவும் கடைசியில் போய் விடுகிறது. 'எனது' என்கிற மமகாரம் போய்விட்டது. அகங்காரமாகிய நானும் போயிற்று. இதுவரையில் ஆண்டவன் வேறு நான் வேறு என்கிற தன்மை இருந்தது. இப்போது அதுவும் ஒழிந்து போய், 'நான் வேறு அவன் வேறு' எனாது இரண்டும் ஒன்றாய்ப் போய்விடுகின்றன.

''நான்வேறு எனாதிருக்க நீ வேறு எனாதிருக்க அருள்வாயே''

என்று திருப்புகழில் பிரார்த்தனை செய்தார். அது ஈடேறிவிட்டது.

அஞ்ஞான மயமாகிய உலகம் இருள் மண்டிக் கிடக்கிறது. இறைவனுடைய அருள் மயமான உலகத்தில் ஞான ஒளி வீசுகிறது. கரை இல்லாத அப்பிரதேசத்தில் இருள் இல்லை. 'எனது, நான்' என்பதற்கும் வேலை இல்லை. பிரபஞ்சவாசனை போன பிறகு, வாக்குக்கு அகப்படும் உரை போன பிறகு, ஐம்பொறிகளின் எல்லைக்கு உட்படும் உணர்வு போன பிறகு, சரீர வாசனை போன பிறகு, ஜீவபோதம் கழன்ற பிறகு, எல்லையில்லாத, கரை இல்லாத, ஞான ஒளியமான எம்பெருமானின் இராசதானியில், அருள் உலகத்தில் 'எனது, நான்' என்கிற அகங்கார மமகாரம் போய்விடுகின்றன.

''எல்லாம்அற என்னை இழந்த நலம்''

என்று இதைத்தான் அநுபூதியில் பேசினார். ''எல்லாம் அற என்னையும் இழக்கும்படியான ஞானத்தை எனக்குப் போதித்தானே; அக்காட்சியை – ஞானத்தை – அந்த ஞான மூர்த்தி

எனக்குப் போதித்தவாறு என்னே!'' என்பதாக எல்லையில்லாப் பேரின்ப மிதப்பில் பேசுகிறார் அருணகிரியார்.

அத்தகைய உயர்ந்த ஞானத்தைப் போதித்தவன் யார்?

## புரையற்ற வேலவன்

வரையற்று அவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன்

மற்றவர்கள் கரத்திலுள்ள வேல் புரையுடையது; பிறருக்குத் துன்பத்தை அளிப்பதனாலே, பிறரோடு சண்டைபோடுவதற்கு உபயோகிப்பதனாலே, மாசு உடையது. ஆனால் முருகனது திருக் கரத்திலுள்ள வேல் சமுதாயத்திற்கு வருகிற இடையூறுகளை நீக்கி, மாயையை நீக்கி, இன்ப நலங்களை விளைவிப்பதனால், குற்றம் இல்லாதது; புரையற்றது. அந்த வேல் மாயையின் பிள்ளையும் அகங்கார மயமானவனுமாகிய சூரனுக்குக் கவசமாக மமகார மயமாக விளங்கிய கிரௌஞ்ச மலையைப் பொடிப் பொடியாக்கி அழிந்து போகச் செய்தது.

வரை அற்று.

வரை – மலை; கிரௌஞ்ச கிரி. அது மாத்திரமா? அவனைச் சார்ந்திருந்த, எண்ணிக்கையில் அடங்காத அவுணர் கூட்டங்கள் எல்லாம் சிரமற்றுப் போகும்படியாகச் செய்தது.

அவுணர் சிரமற்று.

கோடிக்கணக்கான அசுரர்களின் தலை அற்றுப்போகும் படி, தலை வேறு உடல் வேறாகும்படி, சங்காரம் செய்தது.

அசுரக் கூட்டங்களைத் தனக்குத் துணையாகக் கொண்டு போரிட்டவன் சூரன். அவர்கள் அழிந்தபோது அவர்களுக்குத் தலைவனாக இருந்த அகங்கார உருவமான சூரன் பயந்து ஓடிப் போய்க் கடலுக்குள் மாமரமாக ஒளிந்து கொண்டான். சூரனுக்கு ஒளிய இடம் கொடுத்தது வாரிதி. கடலின்மேல் எம்பெருமா னுக்குக் கோபம் வந்தது. சினந்து தன் வேலை அக்கடலுக்குள் வீசினான்; கடல் நீர் சுவறிப்போய் விட்டது. கடல் நீரை வற்ற அடித்தது அந்த வேல். அதற்குள் ஒளிந்து கொண்டிருந்த சூரனையும் சங்காரம் செய்தது.

வாரிதி வற்றச் செற்ற.

*வாரிதி – கடல். கடல் வற்றும்படியாகச் செய்து, அகங்கார உருவமுள்ள சூரனைச் சங்காரம் செய்து உலகத்திற்கு இன்பத்தை உண்டாக்கியது அந்தப் புரையற்ற வேல். 'அந்த வேலை உடைய பெருமான் எனக்குப் போதித்த அக்காட்சி, அந்த ஞானம் என்ன தெரியுமோ?*

*பிரபஞ்ச வாசனை அற்றுப் போகும்படியாக, வாங் மௌனம் உண்டாகும்படியாக, மனோ மௌனம் உண்டாகும் படியாக, காஷ்ட மௌனம் உண்டாகும்படியாக, ஜீவபோதம் கழன்று போகும்படியாக, எல்லா விதமான உபாயங்களும் அற்று, எல்லையற்ற ஒளிமயமான தன் இராசதானியில், எனது என்பதும் அற்றுப்போய், நானும் கரைந்து போகும்படியாக அல்லவா ஞானோபதேசம் செய்தான்? அத்தகைய உயர்ந்த ஞானத்தை அவன் போதித்தவாறு என்னே! சூரனுக்குத் துணை யாய் நின்ற எண்ணிக்கையற்ற அவுணர் சிரமற்றுப் போகும்படி யாகச் செய்தவன், நான் என்கிற அகங்காரத்துக்குத் துணையாக அதைச் சுற்றிச் சூழ இருக்கிற எனது என்னும் மமகாரத்தை அழிந்து போகச் செய்தான். சூரனுக்கு ஒளிய இடம் கொடுத்த வாரிதி வற்றிப் போகும்படியாகச் செய்தவன், நான் என்கிற எனது அகங்காரத்துக்கு உறைவிடமான பிறவிப் பெருங்கடல் வற்றிப் போகும்படியாக உபதேசித்தான்.*

*இவ்வாறு பரவசமுற்றுப் பேசுகிறார் அருணகிரியார். நம்மைப் போல அழுதாரே என்று அவரோடு சென்ற பாட்டிலே சேர்ந்து கொண்ட நமக்கு, அவரைப் போலவே முயன்றால் இத்தகைய இன்ப நலங்கள் விளையும் என்கிற நம்பிக்கை இப்போது உண்டாகவில்லையா?*

வரைஅற்று அவுணர் சிரம்அற்று
　　வாரிதி வற்றச்செற்ற
புரைஅற்ற வேலவன் போதித்த
　　வா!பஞ்ச பூதமும் அற்று
உரைஅற்று உணர்வுஅற்று உடல்அற்று
　　உயிர் அற்று உபாயமற்றுக்
கரைஅற்று இருள்அற்று எனதுஅற்று
　　இருக்கும்அக் காட்சியதே!

*(ஐந்து பூதங்களும் அற, பேச்சு அற, பொறிகளின் உணர்ச்சி அற, சரீர உணர்வு அற, ஜீவபோதம் அற, சாதனம் அற, எல்லையற,அஞ்ஞான இருளற, மமகாரம் அற்று இருக்கும் அந்த ஞானத்தை, மலை அழியவும் அசுரர்களின் சிரங்கள் அறவும் கடல் வற்றவும் அழித்த குற்றமற்ற வேற் படையையுடைய முருகன் அடியேனுக்கு உபதேசித்தவாறு என்னே!*

*காட்சியது போதித்தவா என்று கூட்டுக.*

*அற்று என்று வந்த எச்சங்களிற் சில அற என்ற பொருளில் வந்தன.*

*அவுணர் - அசுரர். வாரிதி - சூரன் புகுந்த கடல். புரை - குற்றம். போதித்தவா: வியப்பு. உபாயம் - சாதனம். காட்சி - ஞானம் . காட்சியது: அது, பகுதிப் பொருள் விகுதி.)*

# அணிகலங்கள்

அருணகிரிநாதப் பெருமான் முருகன் புகழோடு அவர் தகப்பனார் மாமனார் ஆகிய இரண்டு பேர்களுடைய புகழையும் சேர்த்து ஒரு பாட்டில் சொல்ல வருகிறார். அவர் யாரைச் சொன்னாலும் – சிவபெருமானைச் சொன்னாலும், திருமாலைச் சொன்னாலும் – புகழ்படப் பேசுவாரேயன்றி இழிவாகச் சொல் லும் வழக்கம் அவரிடம் இல்லை. அந்த வகையில் இந்தப் பாட்டில், முருகனுக்கு அணிகலன்களாக விளங்குவதைச் சொல்ல வருபவர், அதற்கு முன் சிவபெருமானுக்கு அணிகலனாக விளங்குவதையும், திருமாலுக்கு அணிகலனாக விளங்குவதையும் சேர்த்துச் சொல்கிறார்.

## சிவபிரானுக்கு அணிகலம்

அழகுக்கு அழகு செய்கிற பொருள், அணிகலம். ஒரு நங்கைக்கு வைர ஆபரணங்களும், பொன் நகைகளும் பூட்டினால் அவளுடைய அழகைப் பின்னும் அவை அழகு படுத்துகின்றன. முருகப்பெருமானுடைய தந்தையாகிய சிவபெருமானுக்கு அழகு செய்கிற அணிகலம் எது? அவனுடைய மாமனார் திருமாலுக்கு அழகு செய்கிற அணிகலம் எது? அவனுக்கும், அவன் கை வேலுக்கும் அணிகலன்களாக விளங்குவன எவை? – இவற்றைக் கூற வருகிறார் அருணகிரியார்.

### ஆலுக்கு அணிகலம் வெண்டலை மாலை

ஆல் – ஆலமரம், இங்கே அது ஆகுபெயராய்க் கல்லால மரத் தடியில் உட்கார்ந்து சனகாதி முனிவர்களுக்கு ஞானம் போதித்த தட்சிணாமூர்த்திக்கு ஆயிற்று. 'முசிரி பாடுகிறார் என்கிறோம். முசிரி பாடுமோ? அங்கே, முசிரி என்ற ஊரில் இருந்து வந்திருப்ப வருக்கு அச்சொல் ஆயிற்று. சங்கீத வித்துவான்களில் சிலரை அவர்களுடைய ஊரினால் குறிப்பிடுவது வழக்கமாக இருக்கிறது. அந்த ஊர் அங்கே பிறந்தவருக்கு ஆயிற்று. இதை இட ஆகு

பெயர் என்பார்கள். அப்படியே இங்கே ஆலுக்கு என்றால் ஆல மரத்தடியில் இருக்கிற பெருமானுக்கு என்று பொருள்.

ஆலமரத்தடியில் அவர் தவம் செய்த காரணத்தால் ஆலமரத் திற்கே ஒரு பெருமை. பழுத்த ஆலமரம் எங்கே இருக் கிறதோ அங்கெல்லாம் பழுத்த அறிவு இருப்பதாக நினைத்தார்கள். விழுதுவிட்டுப் படர்ந்து வளர்ந்து முதிர்ந்த ஆலமரத்தைக் கண்டாலே நம் நாட்டவர்கள் கும்பிடுவார்கள். திருவாலங்காடு என்ற தலத்தில் ஆலமரமே தலவிருட்சம். அங்கேதான் காரைக் காலம்மையார் இறைவன் திருவருளைப் பெற்றார்.

## ஆலடிக் கடவுள்

முருகனுடைய அணிகலங்களைச் சொல்ல வருகிற அருண கிரியார் அவனுடைய தந்தையை நினைக்கிறார். அவருக்கு எத்தனையோ கோலங்கள் இருந்தும் ஆலமரத்தடியில் சின் முத்திரை காட்டிக் கொண்டு அப்பெருமான் உட்கார்ந்த கோலத்தை நினைப்பூட்டுகிறார். காரணம் என்ன? தட்சிணா மூர்த்தியாக அவர் மோன ஞானத்தவம் செய்த பிறகே பார்வதி கல்யாணம் நடந்தது; முருகவேள் திரு அவதாரம் செய்தான். கந்த புராணத் தின் ஆரம்பக் கதை தட்சிணாமூர்த்தியின் கதைதான். ஆகவே குமாரநாயகனின் தகப்பனாரைப் பற்றி நினைக்கும்போது குமாரனைத் தோற்றுவிப்பதற்காக அவர் மேற்கொண்ட தவக் கோலம் காட்சி தருகிறது.

## அவர் தியானிப்பது யாரை?

சிவபெருமான் யாரை நினைந்து கல்லால மரத்தடியிலிருந்து தவம் செய்தார்? எல்லாரும் தம் தவம் நிறைவேறத் தம் உபாசனா மூர்த்தியின் திருவுருவத்தை மனக்கிழியில் எழுதிக் கொள்வார்கள். எத்தனையோ தவமுனிவர்கள் சிவபெருமானைத் தங்கள் உள்ளக் கிழியில் எழுதிக் கொண்டு தவம் செய்கிறார்கள். அந்தச் சிவ பெருமான் யாரைத் தம்முடைய உள்ளக் கிழியில் எழுதிக் கொண்டு தவம் செய்தார்? குமரகுருபரர் இதை அழகாகச் சொல்கிறார்.

"எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவியமே"

என்று மீனாட்சியம்மையைப் பாடுகிறார். புவனம் கடந்து நின்ற பரமசிவம், பஞ்சபூதங்களுக்கு அப்பாற்பட்டவராக இருப்பவர். எம்பெருமாட்டியை உயிருள்ள சித்திரமாகத் தம் உள்ளக் கிழியில் அழகு ஒழுக எழுதிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்; பராசக்தியைத் தம்முடைய தியான மூர்த்தியாக உள்ளத்தில் பிரதிஷ்டை பண்ணிக் கொண்டு தவம் செய்கிறாராம்.

நாம் மோட்சத்தை விரும்பி, அதனை அளிக்கும் இறைவனை நினைத்துத் தவம் செய்கிறோம். நமக்கு முத்தியை வழங்குகிற பொருளே எம்பெருமாட்டியை நினைந்து, தனக்கு முத்தி வேண்டுமென்று தவம்செய்கிறதா? அவர் தவத்தைச் செய்வது எதற்காக?

ஒரு பணக்காரனிடத்தில் சென்று ஏவலாளன் ஒருவன் நின்றால் பண உதவியை விரும்பியே நிற்பான். அல்லது வேறு ஏதாவது லட்சிய சித்தியை நாடித்தான் போவான். எல்லாராலும் வணங்குவதற்குரிய பொருள், எல்லாராலும் நினைந்து தவம் செய்வதற்குரிய பொருள், பராசக்தியை நினைந்து, அவளது பச்சை மரகத மேனியின் அழகு உள்ளத்தில் ஒழுக எழுதிப் பார்த்துக் கொண்டு தியானம் செய்யக் காரணம் என்ன? அவர் தமக்காக வேண்டக் கூடிய பொருள் ஒன்றுமே இல்லையே!

## பெரியவர் இயல்பு

எப்போதுமே பெரியவர்கள் எதை வேண்டினாலும் தங்களுக்காக வேண்டமாட்டார்கள். ஒரு தாய் தன் குழந்தையை அழைத்துக் கொண்டு வேறு ஊருக்குப் போகிறாள். சாப்பாட்டு நேரம். அவளுக்குப் பசிக்கிறது. ஒரு வீட்டில் நுழைகிறாள். சோறு வேண்டும் என்று கேட்கிறாள். தனக்காக அன்று. ''இந்தக் குழந்தைக்கு மாத்திரம் கொஞ்சம் சாதம் போடுங்கள்'' என்று வேண்டுகிறாள். தனக்கு எதையும் வேண்டாமல் தன் குழந்தைக்காக அவள் வேண்டுகிறாள். இதுதான் தாய் அன்பு. இப்படியே பெரியவர்கள் எந்த முயற்சி செய்தாலும், ஆண்டவனிடத்தில் எதை வேண்டிக் கொண்டாலும் தாம் வாழவேண்டுமென்று வேண்டிக் கொள்ள மாட்டார்கள்; உலகம் வாழவேண்டுமென்று வேண்டிக் கொள் வார்கள்.

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே"

என்று உலகம் எல்லாம் வாழவேண்டுமென விரும்பிக் கேட்கிற ஞானசம்பந்தப் பெருமான், தாம் தனியாக வாழவேண்டுமென்று சொல்லவில்லை. உலகம் எல்லாம் வாழ வேண்டுமென்று விரும்புகிற உள்ளமே பெரியவர்களுடைய உள்ளம்.

## உலகம் வாழ

சிவபிரான் தவம் பண்ணுகிறார். தாம் வாழவேண்டுமென்று தவம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அவர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார். உலகம் எல்லாம் வாழவேண்டு மென்பதற்காக அருட் சக்தியை நோக்கித் தவம் செய்கிறார். பராசக்திதான் உயிர்களுக்கெல்லாம் திருவருள் செய்ய வேண்டும். அறம் செய்கிறவள் அவள்தான். "ஐயா சம்பாதிப்பார்; ஆனால் சாவி அம்மாவிடம் இருக்கிறது" என்று பலரைப் பற்றிச் சொல்வதைக் கேட்கிறோம்.

எத்தனைதான் தாம் சம்பாதித்தாலும் செலவழிக்கின்ற முறை பெண்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதற்காக மனையாட்டி யிடத்தில் சாவி கொடுத்து வைக்கிற பெருமக்கள் பலர். இப்படிச் செய்வதற்கு அன்றைக்கே எம்பெருமான் வழிகாட்டியிருக்கிறார். இரு நாழி நெல் அம்பிகையிடம் கொடுத்தார். அதைக் கொண்டு உலகம் எல்லாம் உய்ய முப்பத்திரண்டு அறம் செய்தாள் காமாட்சி. அவளைத் தம்முடைய அருளாகிய பொருள் வைக்கிற பெட்டகமாகக் கொண்டிருக்கிறார் பரமசிவம். பராசக்தியின் மூலமாக வெளிப்படாமல் சிவபெருமானே நேராகக் கொடுக்கும் எதுவும் உலகத்திற்குப் பயன்படாது. உலகுக்கு அருள் செய்யும் பொருட்டு அந்தப் பராசக்தியைத் தட்டி எழுப்ப எம்பெருமான் தவம் பண்ணினார். கந்தப் பெருமானைத் தோற்றுவிக்கத் தவம் செய்தார். குமார ஜனனத்திற்குக் காரணம் அவர் பண்ணின தவம். சிவ பெருமான் பல பல திருவிளையாடல்களில் எத்தனையோ விதமான கோலங்களைப் பூண்டிருக்கிறார். நமக்கெல்லாம் அருள் வழங்கும் ஞான பண்டித சாமியைத் தோற்றுவிக்க அப்பெருமான்

மோன ஞானத் தவக்கோலம் புனைந்து கொண்டார். முருகனைப் பற்றிச் சொல்ல வரும்போது அவனுடைய திருவவதாரத்துக்கு முன் சிவபிரான் கொண்ட கோலத்தை நினைப்பது பொருத்த மல்லவா? ஆதலின்,

**ஆலுக்கு**

என்று ஆரம்பிக்கிறார். ஆலமரத்தடியில் இருக்கிற தட்சிணா மூர்த்திக்கு அணிகலனாக இருப்பது எது?

**ஆலுக்கு அணிகலம் வெண்தலை மாலை.**

வெண்தலை - கபாலம்; தசை இல்லாமல் வெறும் எலும் பாய் வெள்ளையாய் இருக்கிற தலை ஓடு. சிவ பெருமானுக்கு அலங்காரம் கபால மாலையாம்.

## வெண்டலை மாலை அணிகலமா?

எடுத்தவுடனேயே நாம் பயப்படும்படியாக, ''நம்முடைய சுவாமியின் அப்பாவுக்கு நகை எது தெரியுமா? ஆலமரத்தடியில் இருக்கிற அவருக்கு ஆபரணம் கபால மாலை; மண்டை ஓட்டு மாலை'' என்கிறார்.

''என்ன ஐயா! வேடிக்கை செய்கிறீரா? மண்டை ஓடு எப்படி ஆபரணமாகும்? இருக்கிற அழகை அதிகப்படுத்தி, பார்ப்பதற்குக் கவர்ச்சியையும் விருப்பத்தையும் உண்டாக்குவது அல்லவா ஆபரணம்? மண்டை ஓட்டு மாலையைக் கண்டாலே எல்லோ ரும் அஞ்சிப் போவார்களே. அதை ஒரு பெரிய ஆபரணம் என்று சொல்ல வந்துவிட்டீர்களே'' என்று நாம் அருணகிரியாரைக் கேட்கலாமா? கொழுகொழு என்று இருக்கிற குழந்தைக்குக் காலில் தண்டை கொலுசு, கையில் காப்பு மோதிரம் எல்லாம் போட்டால் மிக அழகாக இருக்கின்றன. அவை குழந்தைக்கு இருக்கிற அழகை அதிகப்படுத்துகிற அணிகலன்கள். வெண் தலை மாலை சிவபெருமானுடைய அழகை மிகுதிப்படுத்துகிறதா?

## அக அழகு

சிவபெருமானுக்கு இருக்கிற அழகு என்ன? புற அழகா? ஆள் ராஜாவைப்போல இருப்பது மாத்திரம் அழகு அன்று. அப்படிப்பட்ட உடம்புகளுக்குக் கல் நகை, பொன் நகை ஆபரணமாக இருக்கலாம். ஆனால் இவர் ஞானமூர்த்தி.

"இக்கு முல்லையுடன்
பற்றாக்கை யும்வெந்து சங்க்ராம வேளும் படவிழியாற்
செற்றார்"

ஞான மோனத் தவப் பெருமான். அவருடைய தவ ஞான ஒளியே அவருக்கு அழகு. உலகுக்கு ஆதியாகவும் அந்தமாகவும் இருப்பவர் அவர். உலகம் எல்லாம் அழிந்தாலும் தாம் மாத்திரம் அழியாத வராக, நித்தியமாக இருப்பவர். நித்திய கல்யாணியை மணந்து கொண்டு என்றைக்கும் நித்தியமாகப் பூரண ஆனந்தமயமாக விளங்குகின்ற அந்தச் சச்சிதானந்த உருவத்தினருக்கு அழகு செய்கிற அணிகலன், அந்த நித்தியத் தன்மையைக் காட்டுகிற ஆபரணமாக இருக்க வேண்டும்.

ஆபரணம் என்பது கண்ணுக்கு அழகாகவும் இருக்கலாம்; கருத்துக்கு அழகாக இருப்பதும் ஆபரணந்தான். ஒருவன் ஓர் அலுமினிய மெடல் போட்டிருக்கிறான். மற்றொருவன் நான்கு சவரனில் ஒரு மெடல் அடித்துப் போட்டுக் கொண்டிருக்கிறான். கண்ணுக்கு அலுமினிய மெடலைவிடத் தங்க மெடல் அழகாகத் தோன்றலாம்; விலை உயர்வானதாக இருக்கலாம். ஆனால் கருத்தினாலே பார்க்கும்போது அலுமினிய மெடல் அவனுக்கு எப்படிக் கிடைத்தது என்று ஆராய்ச்சி பிறக்கும். போர்க்களத்தில் அவன் காட்டிய வீரத்திற்காக வழங்கிய விருது அது. அந்த மெடல் அவன் காட்டிய வீரத்தைக் காட்டுகிறது. தங்க மெடல் அணிந்தவன் பணம் இருப்பதனால் அதை வாங்கிப் போட்டுக் கொண்டிருக்கிறான். பணம் இருந்தால் அதேமாதிரியான மெடலை எல்லோரும் வாங்கிப் போட்டுக் கொள்ளலாம். ஆனால் அலுமினிய மெடலைப் பெற வேண்டுமானால் போரில் அவன் காட்டியது போன்ற வீரத்தைக் காட்டி வெற்றி பெற்றால்தான் முடியும்; வேறு வகையில் பெற முடியாது. இப்படிக் கண்ணுக்குத் தாழ் வாகத் தோன்றும் ஒன்று, கருத்தினாலே பார்க்கும் போது உயர் வாகத் தோன்றும்.

## நித்தியப் பொருள்

உலகம் எல்லாம் நிலையாமையை உடையது, அநித்திய மானது என்பதை ஓவியத்தில் காட்ட வருகிறான் சித்திரக்காரன். ஓர் அழகான பெண்ணின் படத்தை எழுதி அதன் அடியிலேயே

ஒரு மண்டை ஓட்டையும் இரண்டு எலும்புகளையும் எழுதி வைக்கிறான். 'அழகான பெண்ணைப் பார்த்து மயங்கி நிற்கிறாயே! முடிவில் அவள் கீழே இருக்கிற எலும்பாகி விடுவாள் என்பதை மறந்துவிடாதே' என்பதை அப்படம் நமக்கு நினைவுறுத்துகிறது. ஓவியன் ஒரு பெரிய மாளிகையைப் போட்டிருப்பான்; அதன் அடியிலே ஓர் ஓட்டையும் போட்டிருப்பான். அப்படிப் போடுவதால் அதன் அழகு கெட்டுவிட்டதே என்று நினைக்கலாமா? ஒரு சொற்பொழிவின் பொருள் அதில் இருக்கிறது. மாடமாளிகையில் வாழ்ந்தாலும் ஓடு எடுக்கும் காலம் வரும் என்பதைச் சொல்லாமல் சொல்கிறது படம். இப்படி வண்ண ஓவியத்தில் கருத்துக்கு ஆபரணமாகிய பல குறிப்புக்கள் உண்டு.

அருணகிரியாரின் இந்தச் சொல் ஓவியத்தில் கருத்துக்குப் புலப்படும் குறிப்புக் கபால மாலையில் இருக்கிறது. ''சிவ பெருமான் அல்லாத பொருள் எல்லாம் செத்துப் போவன. அவர் ஒருவரே நித்தியமானவர், சத்தியமானவர்'' என்ற கருத்தைச் சாட்சியோடு சொல்கிறார்.

## மண்டை யோட்டின் குறிப்பு

**ஆலுக்கு அணிகலம் வெண் தலை மாலை**

என்கிறார்.

மண்டையோடு மனிதனது நிலையாமையைக் காட்டுகிறது. இறைவர் சாமான்ய மனிதருடைய வெண்டலை மாலையை அணிந்திருக்கவில்லை. பிரமதேவன் முதலிய தேவர்களின் கபாலங்களை அணிந்திருக்கிறார்.

உலகம் எல்லாம் அநித்தியம் என்பது கிடக்கட்டும். இந்த உலகத்தைப் படைக்கிற பிரமனே அநித்தியம் என்பதை அந்த மண்டை ஓடுகள் காட்டுகின்றன. அவை பிரம கபாலங்கள். பிரமாவே செத்துப் போகிறான் என்றால் அவன் படைத்த படைப்பு எங்கே நிலைத்து நிற்கப் போகிறது? பலபல படைப்புகளைக் கணந்தோறும் உண்டு பண்ணும் பிரமா ஒருவன் அல்ல. பிராமாவுக்கும் வயது உண்டு. அவனுக்குரிய கணக்கில் நூறு பிராயம் அவன் வாழ்வான். அவன் போல் மற்றொரு பிரமா வருவான். இப்படி வந்து போய்க்கொண்டே இருக்கிற பிரமாக்களின்

கபாலங்களே ஆண்டவனது கழுத்தில் பெரிய மாலையாகத் தொங்குகின்றன. பிரமாவினால் படைக்கப்பட்ட மக்களாகிய நாம் ஏதோ என்றைக்கும் சத்தியமாக நித்தியமாக நிலைத்து நிற்கப் போகிறவர்களைப் போல எண்ணிக் கொண்டு வாழ்ந்து வருகிறோம்; நம்மைப் படைக்கிற அப்பனாகிய பிரமாவே அநித்தியமானவன் என்று தெரிந்து கொள்வதற்காகச் சிவபெருமான் பிரமாக்களின் தலைமாலையை அணிந்து கொண்டிருக்கிறான். அந்த மாலையை நினைக்கும்போது மற்றப் பொருள்களின் நிலையாமை தெரிவதோடு அதை அணிந்திருக்கும் சிவபிரான் ஒருவரே நித்தியமானவர் என்ற உண்மையும் விளங்குகிறது. வெண்தலை மாலை அவனது நித்தியமான தத்துவத்தை விளங்க வைக்கும் மெடல். அவன் அல்லாத மற்றப் பொருள்கள் எல்லாம் அநித்தியமானது என்பதை உணர்த்தும் மெடல். வெளிப்பார்வைக்குக் கவர்ச்சி அற்றதாகத் தோற்றினாலும், கருத்தினால் பார்க்கும்போது அணிந்தவனது வீரச்சிறப்பைப் புலப்படுத்தும் அலுமினிய மெடலைப் போன்றது அது.

வீரன் ஒருவனுடைய உடம்பெல்லாம் புண்ணாய் இருக்கிறது. அந்தப் புண்கள் எப்படி ஏற்பட்டன? சொறி சிரங்கினால் புண் உண்டானால் அது அருவருக்கத் தக்கது. ஆனால் வீரன் மார்பிலே உள்ள புண் அவனது வீரச் சிறப்பைக் காட்டுகிற அடையாளம்.

## அது அவனுக்கு அழகு

"சுரதந் தனில்இளைத்த தோகை, சுகிர்த
விரதந் தனில்இளைத்த மேனி – நிரதம்
கொடுத்திளைத்த தாதா கொடுஞ்சமரிற் பட்ட
வடுத்துளைத்த கல்அபி ராமம்"

என்று ஒரு பாட்டு உண்டு. பார்வைக்கு அழகற்றனவாகத் தோன்றினாலும் உண்மையில் அழகாக இருப்பவற்றை அந்தப் பாட்டுத் தொகுத்துச் சொல்கிறது. 'கொடும்சமரில் பட்ட வடு... அபிராமம்' என்று அதில் வருகிறது. போரிலே பட்ட வடு வீரனுக்குப் பேரழகாம்.

ஒரு சோழனை, 'தொண்ணூற்றாறு புண் கொண்ட சோழன் என்று பொற்றினார்கள்.

"எண்கொண்ட தொண்ணூற்றின் மேலும் இருமூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலனும்"

என்று ஒட்டக்கூத்தர் பாடுகிறார். அவன் உடம்பிலுள்ள 96 புண் களும், அவன் 96 முறைகள் பகைவர்களோடு போரிட்டு வெற்றி கொண்ட விழுப்புண்கள்; அவை வெற்றியைக் காட்டும் பதக்கங் களாக இருந்தன.

இந்த உலகத்திற்கு முதலாக எந்தப் பெருமான் இருக்கிறாரோ? உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் அழிந்தாலும் எவர் தாம் அழியாமல் நித்தியப் பொருளாக விளங்குகிறாரோ அவர் கழுத் தில் உள்ள கபாலமாலை நமக்கு இவ்வுலகத்தின் நிலையாமை யையும், இவ்வுலகத்தைப் படைக்கின்ற பிரம்மாவின் நிலை யாமையையும் காட்டுகிறது; அவருடைய சத்திய நிலையையும் உணர்த்துகிறது. அதனால் அந்த வெண்தலை மாலை அவர் பெருமைக்குப் பட்டயமாக, அவர் அழகுக்கு அழகு செய்கிற அணிகலனாக விளங்குகிறது.

## அகிலம் உண்ட மால்

அருணகிரிநாத சுவாமிகள் பாடுவது கந்தர் அலங்காரம். கந்தர் அலங்காரக் கோயிலைச் சொல்லென்னும் கற்களைக் கொண்டு கட்டுகிறார். மூலமூர்த்தியாகிய எம்பெருமானின் அலங்காரத்தைப் பாடுவதற்கு முன்னால் அந்த வீட்டிலுள்ள மற்ற வர்களின் அலங்காரத்தையும் பாடிக் கொண்டு போகிறார். "நித்திய சத்தியமூர்த்தியாகிய பரமேசுவன்தான் அவனுடைய தந்தை" என்பதை முன் அடியில் அலங்காரமாகச் சொன்னார். பின்னர், உள்ளே படுத்திருக்கிற முருகப்பெருமானது மாமனாரை அழகுபடுத்திப் பேசுகிறார்.

அகிலம் உண்ட
மாலுக் கணிகலம் தண்ணந் துழாய்.

அருணகிரிநாத சுவாமியின் சமரச உணர்வை இங்கே பார்க்க வேண்டும். பெரியாழ்வார் கண்ணபிரானது செங்கீரைப் பருவத்தைப் பாடுகிறார். எடுத்தவுடனேயே, அந்தச் சின்னக் குழந்தை, தொட்டி லில் இருந்து விளையாட வேண்டிய குழந்தை, இந்த உலகம் உய்வதற்காக என்ன செய்தான் என்பதைச் சொல்ல வருகிறார்.

"உய்ய வுலகுபடைத் துண்ட மணிவயிறா
ஊழிதொ றூழிபல ஆலி னிலையதன்மேல்
பைய வுயோகுதுயில் கொண்ட பரம்பரனே
பங்கய நீள்நயனத் தஞ்சன மேனியனே
செய்யவள் நின்னகலம் சேம மெனக்கருதிச்
செல்வு பொலிமகரக் காது திகழ்ந்திலக
ஐய எனக்கொருகால் ஆடுக செங்கீரை
ஆயர்கள் போரேறே ஆடுக ஆடுகவே."
(பெரியாழ்வார் – செங்கீரைப் பருவம்)

*உலகம் எல்லாம் உய்யும்படியாகப் படைத்து, எல்லா வற்றையும் உண்ட மணி வயிறு உடையவனாக இருக்கிறான் அவன். தான் படைத்த உலகம் முழுவதையும், பல பல இன்னல் களுக்கும் அல்லல்களுக்கும் ஆளாகிக் களைத்து அலுத்துப் போய்க் கிடக்கிற உலகம் அத்தனையையும், ஊழிக் காலத்திலா வது சற்று அமைதி பெறட்டும் என்று தாய் தன் குழந்தையை மடியில் வைத்துக் கொள்வதுபோல், தன் மணி வயிற்றினுள் வைத்துக் கொண்டு ஆடாமல் அசையாமல் பைய ஆலின் இலை யின் மேல் உறங்குகின்றான். அது யோகத் துயில்; அறிதுயில். இனிமேல் உலகத்திலுள்ள உயிர்களுக்கு எப்படி அருள் செய்வது என்று யோசித்துக் கொண்டு தூங்குகிறான். அவன் கருக் கொண் டிருக்கிறான். உலகத்தில் உயிர்கள் பலபல பிறவி எடுத்துக் களைப்பை அடைகிறன. அதனதன் பிறப்பும் இறப்பும் ஊழ்வினை வெவ்வேறாக இருப்பதற்கு ஏற்ப அமையும். எல்லாரும் ஒருசேர அடங்குகிற நிலை ஊழிக்காலத்தில்தான். பிரளய காலத்தில் எல்லா உயிர்களும் மரிக்கின்றன. 'இந்த உயிர்கள் எல்லாம் இத்தனை நாள் துன்பப்பட்டுக் கொண்டிருந்தனவே; இப்போதா வது சற்று அமைதியாக, இன்பமாக இருக்கட்டும்' என்று அவை யாவற்றையும் உண்டு, தன் மணி வயிற்றுக்குள் வைத்துக் கொண்டு உறங்குகிறான். இப்படித் திருமாலை,*

"உய்ய வுலகுபடைத் துண்ட மணிவயிறா"

*என்று பெரியாழ்வார் பாடுகிறார். அதேபோல் அருணகிரி யார் இங்கே பாடுகிறார்;*

அகிலம் உண்ட மாலுக்கு

என்று புகழ் பேசுகிறார். அகிலம் எல்லாவற்றையும் திருமால் உண்டான். உலகம் உய்ய வேண்டும் என்பதற்காக அகிலம் யாவையும் தன் வயிற்றுக்குள் கருக்கொண்டான். கருக்கொண்ட பெண்களைப் பார்த்தால், எப்போது பார்த்தாலும் மயங்கி மயங்கி உறங்கிக் கொண்டிருப்பார்கள். அப்படி உலகம் யாவற்றையும் தன் வயிற்றுக்குள் கருக்கொண்டு பைய ஆலிலைமேல் மால் அறிதுயில் செய்கிறான். அவை உய்ய, மறுபடியும் எப்படிப் படைத்துக் காப்பது என்று யோசித்துக்கொண்டே யோக நித்திரை செய்கிறானாம். அந்த மாலுக்கு ஆபரணமாக இருப்பது எது?

அகிலம் உண்ட மாலுக்கு அணிகலம் தண்ணந் துழாய்.

## துழாயின் பெருமை

தண்ணந்துழாய் – குளிர்ந்த அழகிய துளசிமாலை. மண்ணை உயிர்க்கூட்டங்களோடு தன் திருவயிற்றில் வைத்திருக்கிற பெருமான் தண்ணந்துழாய் மாலையை அணிந்திருக்கிறான். 'அகிலம் உண்ட திருமாலுக்கு, என் சுவாமியின் மாமாவுக்கு, அலங்காரமாக இருப்பது தண்ணிய அழகான துளசிமாலை' என்பது அருணகிரியார் சொல்லும் வருணனை.

துழாய் மாலையின் பெருமையைத் திவ்யப்பிரபந்த வியாக்கியானத்தில் எழுதி இருக்கிறார்கள். மற்ற இலைகளுக்கு வாசனை இல்லை; மலர்களுக்குத்தான் வாசனை உண்டு. ஆனால் துளசி இலைக்கே வாசனை உண்டு. ஆகையால் அப்பெருமானுக்கு அவ்விலைகளிடத்தில் ஆசை. அதை அணிந்து கொண்டிருக்கிறான்.

ஆலுக் கணிகலம்வெண்டலை மாலை அகிலம்உண்ட
மாலுக் கணிகலம் தண்ணந் துழாய்

என்று அப்பா, மாமா ஆகிய இருவரைப் பற்றியும் பாதிப்பாட்டில் அலங்காரம் பண்ணினார். அடுத்து எம்பெருமானைப் பற்றிச் சொல்கிறார்.

## முருகன் காலுக்கு அணிகலம்

அவன் திருவடிக்கு அணியாக இருப்பவை என்ன?

மயில்ஏ றும்ஐயன்
காலுக்கு அணிகலம் வானோர் முடியும் கடம்பும்.

மயில் ஏறும் ஐயன் என்று சொல்கிறபோது ஓர் அழகான காட்சியை அவர் நினைக்கிறார் என்று தோன்றுகிறது. எங்கோ வேகமாகப் போக எண்ணிச் சட்டென்று தம் காரில் ஏறிக் கொள்வதைப் போல், மயில்மேல் முருகன் ஏறும்போதே எங்கோ வேகமாகப் போகப் போகிறான் என்று தெரிகிறது. அவன் மயிலில் ஏறிவிட்டான், அடியார்களுக்கு அருள் புரியும் பொருட்டு. அவன் பூவுலகத்திற்குப் போக மயில்மேல் ஏறிவிட்டதைத் தேவர்கள் பார்த்தார்கள். 'எங்கோ இருக்கிற பக்தர்கள் எங்கள் பெருமானைப் பயன்படுத்திக் கொள்ள, அவருக்கு மிக அருகில் இருந்தும் நாம் பயன்படுத்திக் கொள்ளவில்லையே!' என்னும் நினைப்பு அவர்களுக்கு உண்டாயிற்று. நல்ல தடாகத்தில் தாமரை மலர்ந்திருக்கிறது. அதே குளத்தில் வாழும் தவளைக்கு அந்தத் தாமரையின் வண்ணத்தையும், மென்மையையும் பார்த்து, அதனூடே இருக்கிற தேனை அனுபவிக்கத் தெரியவில்லை. எங்கோ காட்டினிடையிலிருந்து வருகிற வண்டு அங்கே வந்து அந்தத் தாமரைத் தேனைப் பருகி இன்னிசை பாடுகிறது.

''தண்டா மரையின் உடன்பிறந்தே
தண்டேன் உண்ணா மண்டூகம்
வண்டோ கானத் திடையிருந்து
வந்தே கமல மதுஉண்ணும்''

என்று ஒருவர் பாடுகிறார். தவளைபோல அறிவு இல்லாதவர்கள் தங்கள் பக்கத்திலேயே அறிவாளிகள் இருந்தும் பயன்படுத்திக் கொள்ள மாட்டார்கள். 'தாமரைத் தேனைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாமல் இருக்கும் மண்டூகம் போல நாம் இருக்கிறோமே! நம்மிடையே இருக்கும் குழந்தைப்பிரானை நாம் பயன்படுத்திக் கொள்ளவில்லையே. பூலோகத்தில் இருக்கும் மனிதர்கள் அவன் அருளைப் பெற்று உய்கிறார்களே. அவர்களுக்கு அருள் செய்ய எம்பெருமானும் மயில் ஏறிவிட்டானே' என்கிற உணர்ச்சி தேவர்களுக்கு வந்ததோ இல்லையோ, முப்பத்து முக்கோடி தேவர்களும் கீழே விழுந்து முருகப் பெருமானை வணங்குகிறார்கள். ''எம்பெருமானே! நீ எங்களுக்கு அருள் செய்யமாட்டாயா?'' என்று தங்கள் தலைகளை அவன் காலடியை

*ஒட்டிச் சாய்த்துப் புரட்டுகிறார்கள். எம்பெருமானின் திருவடி தேவர்களுடைய முடிகளில் எல்லாம் பட்டது. அப்பெருமானின் தண்டைச் சிற்றடிக்கு வேறு அலங்காரம் வேண்டுமா? தேவர் களுடைய சிரங்களே அலங்காரமாக விளங்குகின்றன.*

மயிலேறும்ஐயன் காலுக்கணிகலம் வானோர் முடியும்.

*பூவுலகத்திற்குச் சென்று அடியார்களுக்கு அருள் புரிவதற் காகக் கார் மயிலின் மீது ஏறிய எம்பெருமானின் திருவடிகளுக்கு வானோர் முடிகளே அலங்காரமாக விளங்குகின்றனவாம். வற் கென்ற முடிகளைத் தன் காலுக்கு அலங்காரமாக ஏற்றுக் கொண்டான் பெருமான். பூலோகத்திற்கு வந்தவுடனோ, 'எங்கள் வள்ளிமணாளன் வந்து விட்டான்! எங்கள் வள்ளி மணாளன் வந்துவிட்டான்!' என்று ஆரவாரிக்கின்ற பக்தர்கள், அவன் திரு வடிக்கு மென்மையான, மணமுள்ள கடம்ப மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்கிறார்கள். வானோர் முடி தேவ லோகத்தில் அவன் காலுக்கு அணிகலனாக விளங்கின. பூவுலகத் திலோ பக்தர்கள் தூவுகின்ற கடம்ப மலர்கள் அணிகலனாக விளங்கு கின்றன.*

மயிலேறும் ஐயன் காலுக்கு அணிகலம்
வானோர் முடியும் கடம்பும்.

*அப்பாவுக்கு வெண்தலை மாலை ஒன்றை அணிகலனாகச் சொல்லிவிட்டு, மாமாவுக்குத் தண்ணந் துழாய் மாலை ஒன்றை அணிகலனாகச் சொல்லிவிட்டு, மயில் ஏறும் பெருமான் திரு வடியைச் சொல்ல வரும்போது வானோர் முடியும், கடம்ப மலரும் ஆகிய இரண்டு அணிகலங்களை சொன்னார். அப்பால் எம்பெருமான் திருக்கரத்திலுள்ள வேலுக்கு அணிகலனைத் தனியே சொல்லும்போது மூன்று சொல்கிறார்.*

## வேலுக்கு அணிகலம்

கையில்
வேலுக்கு அணிகலம் வேலையும் சூரனும் மேருவுமே.

*சிவபெருமானைவிடப் பெருமை உடையவன் அவன் குழந்தை. திருமாலைவிடப் பெருமை உடையவன் அவன் மரு கோன். ஆகவே சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் அலங்கார*

மாக, ஒவ்வொன்று சொன்னால் முருகனுக்கு இரண்டு அலங்கார மாவது சொல்ல வேண்டாமா? பெரியவர்களைவிடக் குழந்தை களுக்கே அதிக அலங்காரம் செய்வது வழக்கம். தலை நிமிர்ந்து நின்ற தேவர்கள் எல்லாம் தலை தாழ்த்தி விழும்படியாகத் தேவ லோகத்தில் முருகன் செய்தமையினால் அங்கே வானோர் முடிகளே அவனுக்கு அலங்காரமாக விளங்கின. பூவுலகத்தில் மெத்தென்ற அன்பு மணம் கமழும் உள்ளம் படைத்த அடியார் களுடைய கூட்டத்திலோ மெத்தென்று அவர்கள் அணிகிற கடம்ப மலர் மாலைகளே அவன் காலுக்கு அணி கலனாக விளங்குகின்றன.

தேவர்களுடைய முடிகளையும் பக்தர்களுடைய கடம்ப மலர் மாலைகளையும் தன் திருவடிக்கு அணிகலங்களாக ஏற்றுக் கொண்ட பெருமான் தன் திருக்கரத்தில் ஞான சக்தியாகிய வேலை வைத்திருக்கிறான். முருகனைத் தொழாவிட்டாலும் அவன் வேலைத் தொழுதால் போதும்.

> "கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை
> மொண்டுண்டு அயர்கினும் வேல்மறவேன்"

என்று அருணகிரியார் முன்பு சொல்லியிருக்கிறார் அல்லவா? வேலனை நினைப்பது எளிதான காரியம் அல்ல; அவன் முழுத் திருவுருவத்தையும் மனத்திலே எழுதிக் கொள்ள வேண்டு மென்றால் நீண்ட நாள் தவம் செய்ய வேண்டும்; தியானம் செய்ய வேண்டும். நம்மால் அத்தகைய உயர்ந்த சாதனைகளைச் செய்து அவன் திருக்கோலத்தை ஓங்கார ஒளிவட்டத்திற்குள் கண்டு தூங்கத் தெரியாவிட்டாலும், அவன் திருக்கரத்திலுள்ள வேலை யேனும் நினைக்கக்கூடாதா? அது எளிதானது. வேலையே முருக னாக ஆவாகனம் பண்ணி வணங்கும் வழக்கமும் உண்டு. ஆறுமுகம் உடைய கடவுளைப் போலவே வேலுக்கும் ஆறுபட்டைகள் உண்டு.

சிவபெருமானைவிட எளிதில் ஆராதிக்கத் தக்கவன் முருகன். முருகனிடத்தில் நம் நெஞ்சத்தை எளிதில் ஈடுபடச் செய்யத் தக்கதாக இருக்கிறது வேல். அவன் திருக்கரத்திலுள்ள அந்த வேலுக்கு அலங்காரம் எது?

கந்தப்பெருமானின் பெருமையும் வேலின் பெருமையும் ஒன்று. வேல் வீரமுடையது. வெல்லுவது வேல். அதனால் வீர

வேல், வெற்றிவேல் என்று சொல்வார்கள். அந்த வேல் உலகத்துக்குத் துன்பம் தருகின்ற அகங்கார மமகாரங்களின் வடிவாக விளங்கிய சூரனையும், அவனைச் சார்ந்த அசுரக் கூட்டங்களையும் வென்றது.

''வேல்பட்டு அழிந்தது வேலையும் சூரனும் வெற்பும்''

என்று முன்பே சொல்லியிருக்கிறார். சூரன் தனக்குக் கவசமாகக் கிரௌஞ்ச கிரியை வைத்திருந்தான். அது பொடியானவுடன் மாமரமாகக் கடலுக்குள் போய் ஒளிந்து கொண்டான். முருகன் தன் வேலினால் கடல் நீர் சுவறிப்போகும்படி செய்து சூரனைச் சங்காரம் பண்ணினான் என்கிற கதையை முன்பே பலமுறை கேட்டிருக்கிறோம்.

## சூரன் முதலியோர் அழிவு

நாம் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறோம். காரணம்: நம்மிடத்திலும சூரன் இருக்கிறான்; மலை இருக்கிறது; கடல் இருக்கிறது. அகங்காரமே சூரன். நான் என்ற அகங்காரமாகிய சூரனைச் சுற்றி, ''எனது, எனது'' என்னும் மமகாரக் குன்று இருக்கிறது. இந்த அகங்காரச் சூரன், கண்டுபிடிக்க முடியாமல் பிறவிக் கடலுக்குள் ஒளிந்து கொண்டிருக்கிறான். பிறவிக்கடல் வற்ற வேண்டுமானால் மமகாரம் போகவேண்டும். நான் என்பது தோன்றி எனது என்னும் புறப்பற்று விரிகின்றது. யான் என்கிற அகப்பற்றும், எனது என்கிற புறப்பற்றும் போய் விட்டால் பிறவிக் கடல் இல்லை. பிறவி போக எம்பெருமானின் திருக்கரத்திலுள்ள ஞானவேல் துணை வரவேண்டும். இதையே கந்தபுராணக் கதை புலப்படுத்துகிறது.

ஆண்டவன் இருக்கும் கடல் கருணைக் கடல். சூரன் இருக்கும் கடல் பிறவிக் கடல். பிறவிக் கடல் கருணைக் கடலால் ஒழிய வேண்டும். பிறவிக் கடல் வற்றினால் சூரன் அழிந்து விடுவான்.

மாயையின் பிள்ளையாகிய சூரனையும், அவனுக்கு உறு துணையாக இருந்த மமகார மலையையும், அவன் ஒளிந்திருந்த கடலையும் வற்றச் செய்த பெருமை எம்பெருமான் திருக்கரத்திலுள்ள வேலுக்கு உண்டு. கடல், கிரௌஞ்ச கிரி, சூரன் ஆகிய

மூன்றும் அந்த வேலின் நுனியில் குத்திக் கொண்டிருக்கின்றன. இந்த மூன்று பொருளும் வேலுக்கு அலங்காரமாக உள்ளனவாம்.

ஆலுக் கணிகலம் வெண்டலை
மாலை; அகிலம்உண்ட
மாலுக் கணிகலம் தண்ணந்
துழாய்; மயில் ஏறும் ஐயன்
காலுக் கணிகலம் வானோர்
முடியும் கடம்பும்கையில்
வேலுக் கணிகலம் வேலையும்
சூரனும் மேருவுமே.

*(ஆலமரத்தினடியில் உள்ள சிவபெருமானுக்கு ஆபரணமாக இருப்பது வெள்ளிய தலை மாலை; உலகத்தை உண்ட திருமாலுக்கு ஆபரணமாக இருப்பது குளிர்ச்சியையும் அழகையும் உடைய துழாய் மாலை; மயிலின்மேல் ஏறும் முருகனுடைய திருவடிக்கு ஆபரணமாக இருப்பவை தேவர்களின் தலைகளும் கடம்ப மலர்களும்; அவன் திருக்கரத்திலுள்ள வேலாயுதத்துக்கு ஆபரணம் கடலும் சூரனும் மலையும்.*

*ஆல்; ஆகுபெயர். வெண்டலைமாலை - எலும்பாக உள்ள தலை மாலை. வேலை - கடல். மேரு என்றது பொன்மலையாகிய மேருவைக் குறிக்காமல் பொதுவகையில் பெரிய மலையைக் குறித்தது).*

# சோதனையும் சாதனையும்

அருணகிரிநாத சுவாமிகள் தமக்குக் கிடைத்த இன்ப அநுபவத்தை நினைந்து பெருமிதம் கொள்கிறார். அதை இரண்டு வகையாக இந்தப் பாட்டில் சொல்கிறார். 'எனக்கு எம்பெரு மானிடத்திலிருந்து கிடைத்த அநுபவத்தை எப்படிப் பாராட்டு வது? அவனை நினைந்து இன்புறுவதற்குரிய புத்தி எனக்கு வந்திருக்கிறதே! அது எப்படி வந்தது? என்று தாமே நினைந்து பார்க்கிறார்.

மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்து உயர்ந்த நிலைக்கு வந்தவர்கள் இறைவன் திருவருள் நினைப்பு இல்லாதவர்களாக இருந்தால், தங்களுடைய பழைய நிலையை எண்ணிப் பார்க்க மாட்டார்கள். ''இவனுக்கு வந்த வாழ்வைப் பார்த்தாயா? இன் றைக்கு என்னவோ பெரிய மனிதன் ஆகிவிட்டதாகத் தலை திரும்பி இருக்கிறானே!'' என்று பிறர் சொல்லிக் காட்டும்படியாக நடந்து கொள்வார்கள். ஆனால் நல்ல மனிதராக இருந்தால் முன்பு தாம் மிகவும் இன்னற்பட்டு வாழ்ந்ததை நினைந்து, ''எம் பெருமான் திருவருளால் அல்லவா நமக்கு இந்த நிலை கிடைத்தது?'' என்று சொல்லிக் கொண்டே இருப்பார்.

## செருக்கும் அதிசயப் பெருக்கும்

தமக்குக் கிடைத்த உயர்நிலையைப் பற்றித் தாமே இப்படி மகிழ்ச்சி அடையலாமா? அந்த மகிழ்ச்சி தம் முயற்சியை நினைந்து உண்டானால் செருக்காகும். ''உயர்ந்த நிலைக்கு வரத் தகுதி எதுவும் இல்லாதபோது, இறைவன் திருவருளினால் இத்தகைய நிலைக்கு நாம் வந்தோம்'' என்ற மகிழ்ச்சி கர்வ மாகாது; அதைத்தான் அநுபவ அதிசயப் பெருக்கு என்று பெரிய வர்கள் சொல்லுவார்கள்.

'நான் அருளநுபவத்தைப் பெறவேண்டு மென்று எண்ணி முயற்சி எதுவும் செய்யவில்லை; அதைப் பெறத் தக்க தகுதியும்

என்னிடத்தில் இல்லை. ஆனால் அத்தகைய இன்ப நலம் விளைந்ததே; அது கண்டு எனக்கே ஆச்சரியம் உண்டாகிறது. இந்த இன்பம் விளைந்ததற்குக் காரணம் வேண்டும். அந்தக் காரணம் என் தகுதி அன்று. எம் பெருமான் திருவருள்தான் காரணம்' என்ற வியப்புணர்ச்சி உண்டாகும். அத்தகைய அநுபவ அதிசயப் பெருக்கிலே அருணகிரியார் பாடுகிற பாடல்களில் ஒன்று இப்பொழுது பார்க்கப் போவது.

> பாதித் திருவுருப் பச்சென்
> றவர்க்குத்தன் பாவனையைப்
> போதித்த நாதனைப் போர்வே
> லனைச்சென்று போற்றிஉய்யச்
> சோதித்த மெய்யன்பு பொய்யோ?
> அழுது தொழுதுருகிச்
> சாதித்த புத்திவந் தெங்கே
> எனக்கிங்ஙன் சந்தித்ததே!

## மெய்யும் போலியும்

ஒரு வீட்டில் அண்ணன் தம்பி இரண்டுபேரும் பரீட்சைக்குப் படிக்கிறார்கள். எப்போது பார்த்தாலும் இரண்டு பேரும் புத்தகத்தை வைத்துக் கொண்டிருப்பதைத் தந்தை பார்க்கிறார். தம்பிக்கு நூற்றுக்கு எண்பது மார்க்கு எல்லாப் பாடங்களிலும் வருகிறது. அவன் சிறப்பாகத் தேர்ச்சி பெறுகிறான். அண்ணன் தேறவில்லை. ''நானுந்தான் எப்போது பார்த்தாலும் படித்துக் கொண் டிருந்தேன். விளையாடப் போகவில்லை. எனக்கு என்னவோ வாத்தியார் மார்க்குப் போடவில்லை'' என்று அண்ணன் குறை கூறினால் அதை அவன் தந்தை நம்புவாரா? நீ எப்போது பார்த் தாலும் புத்தகத்தை வைத்துக் கொண்டிருப்பது போலப் பாவனை செய்திருக்கிறாய். புத்தகத்திற்குள் எந்த நாவலை வைத்துப் படித்துக் கொண்டிருந்தாயோ? உண்மையாகப் படித்திருந்தால் உனக்கு ஏன் மார்க்கு வராமல் போகிறது?''என்று திட்டுவார். தம்பி உண்மையாகவே படித்திருக்கிறான். அண்ணன், தம்பியைப் போல எப்போதும் புத்தகமும் கையுமாக இருந்தாலும் படிப்ப வனைப் போல பாசாங்கு செய்திருக்கிறான். மெய்யான படிப்பு, போலியான படிப்பு இரண்டுக்கும் உள்ள வேறுபாடு பரீட்சை முடிவில் தெரிந்து போகிறது.

நாம் கோயிலுக்குப் போகிறோம். நம்முடைய துன்பங்கள் யாவும் போகவேண்டுமென்று இறைவனை வணங்கி வருகிறோம். ஆண்டவனிடத்தில் அன்பு இருந்தால் நமக்கு இவ்வுலக வாழ்வில் உடம்பைச் சார்ந்த துன்பமும் வராது; மனத்தைச் சார்ந்த துன்பமும் வாராது.

''முடியாப் பிறவிக் கடலில் புகார்முழு துங்கெடுக்கும்
மிடியால் படியில் விதனப்படார்''

என்று அருணகிரியார் சொல்கிறார். அவரைப் போன்ற அநுபூதிமான்களாகிய மற்றவர்களும் அப்படியே சொல்லி இருக்கிறார்கள். ''நானும் இறைவனை நம்பி வாழ்கிறேன். என்னுடைய துன்பம் தீருவதாய் இல்லையே! நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டல்லவா இருக்கிறது?'' என்று நாம் எப்போது பார்த்தாலும் அழுது புலம்பி நைந்து கொண்டிருக்கிறோம். இதனால் சிலருக்கு, அருணகிரியாரைப் போன்றவர்கள் பொய்யாக அப்படிச் சொல்லிச் சென்றார்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது. ஒருசமயம் இல்லாவிட்டாலும் மற்றொரு சமயம் அவர்களுடைய வாக்கில் ஐயம் உண்டாகிறது. மெத்தப் படித்தவர்களுக்குக்கூட இந்த ஐயம் எழுவதுண்டு.

ஆண்டவனிடத்தில் அன்பு செய்து வாழ்பவர்களாக நாம் இருந்தாலும் நம்முடைய அன்பில் போலி அன்பும் இருக்கிறது; மெய்யான அன்பும் உண்டு. பரீட்சையில் உண்மையான படிப்பையும், பாசாங்குப் படிப்பையும் பயனைக் கொண்டு கண்டாற் போல, இறைவனைத் தொழுபவர்களுக்கு உண்டாகிற அநுபவத்தைக் கொண்டே உண்மையான அன்பையும், போலி அன்பை யும் கண்டு கொள்ளலாம்.

## மூன்று வகை அன்பு

இரவில் எல்லோரும் தூங்குகிறார்கள். பகல் எல்லாம் உழைத்துவிட்டுச் சிலர் உடல் மறந்து தூங்குகிறார்கள்; எத்தனை சத்தம் ஏற்பட்டாலும் அவர்கள் காதில் விழுவது இல்லை; தூக்கம் கலைவதும் இல்லை. சில செல்வர்கள் தூங்கிக் கொண்டே இருப்பார்கள்; பூனை ஓடினாலும் பொசுக்கென்று விழித்துக் கொள்வார்கள். சிலர் தூங்குவது போலப் பாசாங்கு செய்வார்கள்; தூங்கவே மாட்டார்கள்.

இப்படி, தூக்கங்களில் ஆழ்ந்த தூக்கம் இருக்கிறது; சிறிது சத்தம் ஏற்பட்டாலும் குலைந்துவிடுகிற கோழித் தூக்கம் இருக் கிறது; தூங்குவது போன்ற பாசாங்குத் தூக்கமும் இருக்கிறது. அன்பிலும் மூன்று வகை உண்டு. பிறர் பாராட்ட வேண்டு மென்பதற்காகத் திருநீறு அணிந்து சைவப் பழம்போலத் தினந் தோறும் ஆலயத்திற்குப் போவாரும் உண்டு. அடியார்கள் போல உருகி உருகி இவர்கள் ஆலயத்தில் சொல்கிற துதிகள் எல்லாம் ஆண்டவனிடத்தில் வைக்கிற போலிப் பக்தியின் விளைவு. இவர்கள் பொய் தூக்கம் தூங்குகிற சாதியினரைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய அன்பு பொய்யான அன்பு. சிலர் உண்மை யிலேயே இறைவனிடத்தில் பக்தி செய்து வாழ்வார்கள். ஆனால் ஏதாவது சின்னத் துன்பம் வந்துவிட்டாலும் அவர்களுடைய அன்பு தளர்ந்துவிடும். ''ஆண்டவனைத் தொழத்தொழத்தான் இந்தத் துன்பங்கள் எல்லாம் வருகின்றன. கடவுளுமாச்சு, கத்தரிக் காயுமாச்சு'' என்று காரணமின்றிச் சினந்து இறைவனிடத்தில் பக்தி செய்வதில் தளர்ந்துவிடுவார்கள். தூங்கும்போது சிறிது ஓசை கேட்டாலும் விழித்துக் கொள்கிற சாதியினரைச் சேர்ந்தவர்கள் அவர்கள். அவர்கள் ஆழமில்லாத அன்பு உடையவர்கள். எத்தனை துன்பம் வந்தாலும் இன்பம் வந்தாலும் தளர்ச்சியோ செருக்கோ அடையாமல் சிலர் ஆண்டவனிடத்தில் இடையறாத அன்பு செய்து வாழ்வார்கள். இவர்கள் தம் உடலை மறந்து தூங்கும் சாதியிரைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய அன்புதான் சோதித்த மெய்யன்பு.

## சோதனை செய்தல்

நாம் எத்தகைய பொருள் வாங்கினாலும் வாங்குவதற்கு முன்னால் அதனைச் சோதித்து வாங்குகிறோம். கார் வாங்கு வதாய் இருந்தால் அதனுடைய எல்லாப் பாகங்களும் கொஞ்ச மேனும் குலையாமல் இருக்கின்றனவா என்று நன்றாகச் சோதனை செய்து பார்த்து வாங்குகிறோம். எது எது நம்முடைய முயற்சியினால் பெறப்படுகிறதோ அதைச் சோதனை பண்ணுகிறோம்.

சோதனை பண்ணுகிற இந்த வழக்கம் பெரியவர்களுக்கு உண்டு. மகாத்மா காந்தி போன்றவர்கள் எப்போதும் ஆத்ம சோதனை பண்ணிக் கொண்டிருந்தார்கள். அவர் தம் வாழ்க்கை

யையே சத்திய சோதனை என்று பெயரிட்டு எழுதியிருக்கிறார். ஆத்ம சோதனை செய்வது எதற்காக? தங்களுடைய அன்பை, தங்கள் நெஞ்சத்தைப் பிறருக்கு நிரூபிப்பதற்காக அல்ல. ''நாம் இந்த மனத்தை நம்பி, கருவி கரணங்களை நம்பி ஒரு காரியத்தைச் செய்யத் துணியலாமா?'' என்று அறியவே, தங்களுடைய புத்தி திடமாக இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ளவே அடிக்கடி சோதித்துக் கொள்வார்கள்.

## அடிக்கச் சொன்ன பெரியவர்

ஒரு பெரியவருக்கு எம்பெருமானிடத்தில் அன்பு வந்தது. அந்த அன்பு ஊற்றமாக இருக்கிறதா என்று சோதித்துப் பார்க்க வேண்டுமென்று அவருக்கு ஆசை. தம்முடைய மாணவனிடத்தில், ''அப்பா! நான் தூங்கும்போது திடீரென்று ஒரு குச்சியை எடுத்து என்னை அடி'' என்றார். ''ஐயோ! நான் மாட்டேன். அது மிகவும் பாவம் ஆயிற்றே சுவாமி!'' என்று அந்தப் பிள்ளை சொல்லிவிட்டான். ''இல்லை அப்பா. ஆண்டவன் திருவருள் அப்போதுதான் எனக்குக் கிடைக்கும். என்னுடைய கனவில் அப்படித்தான் எம்பெருமான் சொன்னார். 'அயர்ந்து தூங்கும் போது உன்னை யாராவது குச்சியால் அடித்தால் அப்போது நான் உனக்கு அருள் செய்ய வருவேன்' என்று சொல்லியிருக்கிறார். நீ கட்டாயம் அடிக்கத்தான் வேண்டும்'' என்று வற்புறுத்தினார்.

அந்தப் பையனும் சம்மதித்துவிட்டான். அவர் ஒரு நாள் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கும்போது அவன் ஒரு குச்சியால் ஓங்கி அடித்தான். அவர் உடனே, ''ஐயோ!'' என்று கத்திக் கொண்டு எழுந்திருந்தார். உடனே அந்தப் பிள்ளையைப் பார்த்து, ''இன்னும் என்னை அடியப்பா; இன்னும் என்னை அடி'' என்று கத்தினார்.

பையனுக்கு ஒன்றும் விளங்கவில்லை; விழித்தான். ''அப்பா! நான் எந்தக் காலமும் இறைவனை நினைந்திருந்தேன். உறங்கப் போகும்போது இறைவனை நினைப்பேன். உறங்கி விழிக்கும் போது இறைவனை நினைப்பேன். திடீரென்று எழுந்திருந்தால் இறைவனை நினைத்துக் கொண்டு அவன் நாமத்தைச் சொல்லிக் கொண்டே எழுந்திருக்கும் பக்குவம் எனக்கு வந்துவிட்டதா

என்பதைச் சோதித்துப் பார்க்கவே என்னை அடிக்கச் சொன்னேன். எனக்கு இன்னும் அந்தப் பக்குவம் வரவில்லையே! நீ என்னை அடித்தபோது ஐயோ என்று கத்திக் கொண்டல்லவா எழுந்திருந் தேன்? நெஞ்சம் திடுக்கிடும் போது இந்தப் பாவிக்கு இறைவன் நினைவு வரவில்லையே! என்னை இன்னும் நன்றாக அடியப்பா'' என்றாராம். தம்முடைய அன்பு மெய்யான அன்பா என்பதை அவரே இப்படிச் சோதித்துப் பார்த்துக் கொண்டார்.

## பஜனையும் பாம்பும்

ஒரு பஜனை மண்டபம். அங்கே திருப்புகழ் பாடிக் கொண் டிருக்கிறார்கள். தம்மை மறந்து உணர்ச்சி வசப்பட்டு எல்லாரும் பாடிக் கொண்டிருக்கும்போது யாரோ ஒருவன் பாம்பு பாம்பு என்று கத்தினான். அவ்வளவுதான். அங்கிருந்த அத்தனை பேரும் ஓட ஆரம்பித்துவிட்டார்கள். நெடுந்தூரம் ஓடின பிறகுதான், ''ஐயோ! நம்முடைய அன்பை இந்தச் சிறு பையன் பாம்பு பாம்பு என்று பொய்யாகக் கத்திச் சோதித்துவிட்டானே! பாம்பு என்ற வுடன் நாமும் பயந்து ஓடி வந்தோமே!'' என யாவரும் வெட்கப் பட்டார்களாம். அவர்களுடைய அன்பு, பய உணர்ச்சி எழுந்த போது தளர்ந்துவிட்டது.

## கூண்டோடு கைலாசம்

ஒரு பல சரக்குக் கடைச் செட்டியார்: அவர்தாம் அந்த ஊரில் இருந்த ஆலயத்தின் தர்மகர்த்தா. இரவு பத்துமணி வரைக்கும் வியாபாரம் கடையில் நடக்கும். பத்து மணிக்குமேல் கடையைப் பூட்டிக் கொண்டு யாருமே இல்லாத வேளையில் கோயிலுக்கு வருவார். தினந்தோறும் அவர் வரும் வரையிலும் குருக்கள் ஆலயத்தைத் திறந்து வைத்துக் கொண்டு இருக்க வேண்டும். அவருக்குத் தூக்கம் தூக்கமாக வரும். இருந்தாலும், 'தர்மகர்த்தா வுக்குத் தரிசனம் செய்து வைக்க வேண்டுமே' என்று கொட்டாவி விட்டுக் கொண்டு இருப்பார்.

செட்டியார் கோயிலுக்கு வந்து ஆண்டவனைத் தரிசனம் செய்வார். செய்யும்போது, ''எம்பெருமானே! என்னைக் கூண் டோடு கைலாசம் சேர்த்துக் கொள்ளமாட்டாயா?'' என்று இரு கைகளையும் சேர்த்துக் குவித்துக் கொண்டு பிரார்த்திப்பார். இதை

ஒவ்வொரு நாளும் பார்க்கும் போது குருக்களுக்குச் செட்டியார் சிறந்த பக்தராகவே தோன்றினார்.

ஒருநாள் குருக்களின் வீட்டுக்கு அவருடைய நண்பர் ஒருவர் வந்திருந்தார். ''எட்டு மணிக்கே கோயிலைப் பூட்டிக் கொண்டு வாருங்கள்; வெளியே போகலாம்'' என்று அவர் சொன்னார். ''அப்பப்பா! அதெல்லாம் முடியாது. எங்கள் ஆலயத்தின் தர்ம கர்த்தா பத்து மணிக்குமேல்தான் வருவார். அவர் மிகுந்த பக்தர். அவருக்குத் தரிசனம் செய்து வைத்தபிறகுதான் நான் வரமுடியும்'' என்று அர்ச்சகர் சொல்லி, செட்டியார் பிரார்த்தனை செய்வதையும் சொன்னார். அவருடைய நண்பருக்குச் செட்டியாரின் பக்தியைச் சோதிக்க வேண்டுமென்ற ஆசை மூண்டது. ''அப்படியா? நான் இன்றைக்கு ஒரு காரியம் செய்கிறேன் பாருங்கள்'' என்று சொன்னார்.

அன்று இரவு செட்டியார் யாரும் இல்லாத வேளையில் பத்து மணிக்குக் கோயிலுக்கு வரும்போது சுவாமி விக்கிரகத்திற்குப் பின்னால் அன்பர் ஒளிந்து கொண்டார். குருக்கள் வழக்கம் போலச் செட்டியாருக்குத் தரிசனம் செய்து வைத்துவிட்டு, வெளி மண்டபத்திற்கு வந்து விட்டார். வழக்கம்போல், ''ஆண்டவனே! உன்னை நான் என்றும் மறக்காமல் இருக்கிறேன். என்னைக் கூண்டோடு கைலாசம் சேர்த்துக் கொள்ளவேண்டும்'' என்று இறைஞ்சினார் செட்டியார். சுவாமி விக்கிரகத்திற்குப் பின் இருந்த குருக்களின் நண்பர் இதுதான் சமயம் என்று தம் இரண்டு கைகளையும் விக்கிரகத்தை அணைத்தாற்போல நீட்டிக் கொண்டு, ''பக்தா! வா..வா..வா..'' என்றார். செட்டியார் வெலவெலத்துப் போனார். திரும்பிப் பார்க்காமல் ஓட்டம் பிடித்தார். ''என்ன ஐயா! என்ன ஐயா!'' என்று வெளியில் இருந்த குருக்கள் கேட்ட தற்கு, ''பூட்டையா கதவை; உம், சீக்கிரம் பூட்டிக் கொண்டு வீட்டுக்கு ஓடு'' என்று கத்திக் கொண்டே ஓடிப் போனார். அன்றைத் தினத்திலிருந்து கோயிலில் கூட்டம் இருக்கும் போதே அவர் வந்துவிட்டுப் போவது வழக்கமாயிற்று.

கூண்டோடு கைலாசம் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆண்டவனிடம் செட்டியார் கேட்டுக் கொண்டது உண்மையாக இருக்குமானால், ''பக்தா! வா வா வா'' என்றவுடன் அதைக் கேட்டு உவகை கொண்டு, அவர் நேரே சந்நிதானத்திற்குத்தானே

போக வேண்டும்? அவருடைய அன்பு போலி அன்பு என்பதை அந்தச் சிறிய சோதனை வெளிப்படுத்திவிட்டது.

அப்படியே, கோயிலுக்கு எல்லாரும் போகிறார்கள் என்றாலும் சிலருடைய அன்பு போலி அன்பாக இருக்கிறது. சிலருடைய அன்பு மெய்யானதுதான் என்றாலும் பயம், கோபம், துக்கம் மகிழ்ச்சி முதலிய உணர்ச்சிகள் மிகும் போது தளர்ந்து போகும் அன்பாகி விடுகிறது. மிகச் சிலருடைய அன்புதான் சோதித்த மெய்யன்பாக இருக்கிறது. வாங்குகிற பழத்தைச் சோதனை பண்ணிப் பார்க்கிற நாம் ஆண்டவனிடத்தில் அன்பு கொள்ளும்போது அது மெய்யான அன்பா, தளர்ந்து விடாத அன்பா என்று சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## சுந்தரர் இயல்பு

திருவொற்றியூரை விட்டு திருவாரூருக்குக் கிளம்பியவுடன் கண்ணை இழந்துவிட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள், ''ஐயோ! கண் போய்விட்டதே!'' என்று அழவில்லை. மேடு பள்ளங்களில் தடுக்கித் தடுமாறி விழுந்தபோதும் 'ஐயோ' என்று அழவில்லை; 'நமச்சிவாயா, நமச்சிவாயா' என்று கதறினார்.

''வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்''

என்று பாடினார். அவருடைய அன்பு சோதித்த போதும் தளர்ந்துவிடாது நின்ற மெய்யன்பு.

அமைதியாக இருக்கும்போது நாம் இறைவனை நினைக்கிறோம். திருடன் வந்துவிட்டால், ''ஐயோ ஐயோ''! என்று அலறுகிறோம். கோபம் வந்துவிட்டால் இறைவன் நாமம் நமக்கு மறந்து போகிறது; கண்டபடி பேச ஆரம்பித்துவிடுகிறோம். அப்படிப் பலவகையான உணர்ச்சிகள் மீதூர்ந்து எழும்போதும், உணர்ச்சி விஞ்சும்போதும் நாம் இறைவனை மறக்காமல், நம் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் சொற்களாக 'முருகா முருகா' என்று சொல்ல ஆரம்பித்துவிட்டால் நம்முடைய பக்தி உறுதி பெற்றதென்று நம்பலாம். சோதித்த மெய்யன்பு நிலைத்து நிற்கும் போது இறைவன் திருவருளைப் பெறலாம்.

பிறனுக்காக நாம் சாப்பிடுவது இல்லை. நமக்காகத்தான் சாப்பிடுகிறோம். இறைவனிடத்தில் வைக்கிற அன்பும் பிறருக் காக அல்லாமல் நமக்காவே, நாம் உய்வு பெற வேண்டும் என்ப தற்காகவே இருக்க வேண்டும். நாம் இறைவனிடததில் செலுத்து கிற அன்பு மெய்யான அன்புதானா என்பதைச் சொல்வதற்குப் பிற சாட்சி எதுவும் வேண்டாம்.

"தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்"

என்று வள்ளுவர் பேசுகின்றார். ஒவ்வொருவருக்கும் அவரவர் களுடைய நெஞ்சே சாட்சி. உண்மையான அன்புக்கு வெளித் தோற்றம் இல்லை. மனைவி தன் கணவனிடத்தில் காட்டுகிற அன்பைப் பிறர் காண முடியுமா? அது அவள் கணவனுக்குத் தெரியும். அவளுடைய நெஞ்சுக்குத் தெரியும். உண்மையான அடியார்கள் ஆண்டவனிடத்தில் வைக்கிற மெய்யான அன்பைப் பிறர் காணமாட்டார்கள். பிறர் காண அன்பு செய்வார்களுடைய நெஞ்சம் போலி அன்புடையதாகவோ, சோதனையில் தளர்ந்து விடுவதாகவோதான் பெரும்பாலும் இருக்கிறது.

சிலர் துன்பப்படுங்கால் இறைவனை நினைப்பார்கள். இன்பம் வரும்போது தம் முயற்சியினால் விளைந்தது போன்று செம்மாந்து நானே நானே என்று இரணியன் மாதிரி ஆகி விடு கிறார்கள். இரணியம் என்றால் வடமொழியில் தங்கம் என்று பொருள். பணம் சேரச்சேரத் தம் சுற்றத்தார்களையும், உலகத்து மக்களையும் மறப்பது கிடக்கட்டும்; இறைவனையே மறந்து விடுவார்கள்.

நல்லது வந்தாலும் இறைவன் நினைப்பு உடையவர்களுக்கு அகங்காரம் விளையாது. பொல்லாதது வந்தாலும் அவர்களுக்குப் பிறர் மேல் கோபம் உண்டாகாது. போற்றுதல் கிடைத்தாலும், தூற்றுதல் கிடைத்தாலும் எல்லாம் இறைவனுக்கே உரியவை என்று நினைக்கிறவர்கள் மனம் ஒருமைப்பட்டு இறைவனிடத்தி லேயே இருக்கும். எத்தகைய சோதனைக்கும் தளராத மெய்யன்பு உடையவர்கள் அவர்கள்.

"நற்றவாஉனை நான்மறக்கிலும் சொல்லும்நா நமச்சிவாயவே"
என்கிறார் சுந்தரர்.

## சோதித்த மெய்யன்பு

"இத்தகைய சோதித்த மெய்யன்பினால் அல்லவா நீ உறைகின்ற இடங்களுக்கு எல்லாம் சென்று, உன்னைப் போற்றி உன்னால் நான் உய்வு பெற்றிருக்கிறேன்? பலவிதமான சோதனைகளுக்கு உட்பட்டும் தளராது இருக்கும் என் மெய்யன்பு பொய்யோ? அல்ல" என்று அருணகிரியார் பேசுகின்றார்.

பாதித் திருவுருப் பச்சென் றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்த நாதனைப் போர்வே லனைச்சென்று போற்றி உய்யச்
சோதித்த மெய்யன்பு பொய்யோ?

"நான் அன்புகொண்டேன்; அவன் உறைகின்ற தலங்களுக்கு எல்லாம் சென்றேன். அவன் இருக்கும் இடம்நாடிச் செல்வதற்கு அன்பு இருந்தது. அந்த அன்பு முறுக முறுக அதுவே மெய்யன்பு ஆயிற்று. மெய்யன்பு உண்டான உடனே அவன் இருக்கும் இடங்களுக்குச் சென்று அவனைப் போற்றினேன். என்னுடைய மெய்யன்பு உறுதியானதுதானா, சோதனைக் காலங்களில் நழுவாது இருக்குமா என்று சோதித்துப் பார்த்தேன். அப்படிச் சோதனை செய்ததில் என் மெய்யான அன்பு வென்றது; நான் உய்ந்தேன். சோதித்த மெய்யன்பினாலே நான் சென்று போற்றி உய்ந்தேன்."

சென்று போற்றி உய்யச்
சோதித்த மெய்யன்பு.

சென்றது முதல் முயற்சி. அதற்கு அன்பு காரணம். ஆலயத்திற்கு எல்லாரும் போகிறார்கள். என்றாலும் ஆண்டவன் சந்நிதானத்திலே நின்று அவனைப் போற்றித் தோத்திரம் செய்கிறார்கள் என்று சொல்ல முடியுமா? சினிமாக்கொட்டகையின் வாயிலில் நின்று வேடிக்கை பார்த்து விட்டு வருபவர்களைப் போல, சங்கீதக் கச்சேரிக்குச் சென்றுவிட்டு வருபவர்களைப் போல, பலர் வந்துவிடுகிறார்கள். அன்பு இருந்தால் ஆலயத்திற்குச் செல்லலாம். ஆண்டவன் சந்நிதானத்திலே மனம் ஒருமைப்பட்டு நின்று, உருகி அவன் பெருமைகளைச் சொல்லிப் போற்ற வேண்டுமானால் இறைவனிடத்தில் கொண்ட அன்பு மெய்யாக இருக்க வேண்டும். மெய்யன்பு உண்டானால்தான் ஆண்டவனுடைய சந்நிதானத்திற்குச் சென்று அவனைப் போற்ற முடியும். முதலில் ஆலயத்திற்குப் போகிற வழக்கம் உண்டாக வேண்டும். இந்தப்

பழக்கம் முறுக முறுகத்தான் அவனைக் கண்ட மாத்திரத்திலே கும்பிடுகிற வழக்கம் உண்டாகும். பின்னும் பழக்கம் அதிகமானால் சந்நிதானத்திலே நின்று துதிகளால் அவனைப் போற்ற முடியும்.

செல்வதற்கு அன்பு வேண்டும். சென்று போற்றுவதற்கு மெய்யன்பு வேண்டும். சென்று போற்றி உய்வதற்குச் சோதித்த மெய் அன்பு வேண்டும். சோதித்த மெய்யன்பினாலே ஏற்படுகிற பயன் உய்தல்.

யாரைப் போற்றினார்? முருகனை; அந்த முருகன் புகழை விரிக்கிறார்.

## முருகன் போதனை

சிவபெருமான் தம்முடைய இடப் பாகத்திலே உமா தேவியை வைத்துக் கொண்டிருக்கிறார். அவள் அருளின் வடிவம்; பச்சைப் பசேல் என்று இருக்கும் திருமேனி உடையவள். அவளைத் தம் பாகத்தில் அவர் கொண்டிருப்பதனால் அவருடைய பாதித்திரு மேனி பச்சைப் பசேல் என்று இருக்கிறது.

**பாதித் திருவுருப் பச்சென்றவர்.**

தம்முடைய பாதித் திருவுருவம் பச்சைப் பசேல் என்று இருக்கிற பெருமான், அர்த்த நாரீசுவரர்; அவருக்கு முருகன் போதித்தான்.

அவருக்கு அவன் எதைப் போதித்தான்?

**தன் பாவனையைப் போதித்த நாதனை.**

தன் பாவனையைப் போதித்தானாம். இதற்குப் பொருள். 'தான் பாவித்த பாவனையைப் போதித்தான்' என்று சொல்வதுண்டு. தன்னைப் பாவிக்கிற பாவனையைப் போதித்தான் என்று கொள்வதே நயமாக இருக்கும்.

சிவபெருமான் வேறாகவும், பெருமாட்டி வேறாகவும் இருக்கிற நிலை மாறி அவனும் அவளும் ஒரு கோலத்திலே நின்றார்கள். அந்த அர்த்தநாரீசுவரக் கோலத்தில் வலப் பாகம் பரமேசுவரராகவும், இடப்பாகம் எம்பெருமாட்டியாகவும் தோன்றின. ஒரு பாகம் செக்கச் செவேல் என்று இருக்கும்; மற்றொரு பாகம் பச்சைப் பசேல் என்று இருக்கும். ஒன்று ஞானமயம்; மன்

றொன்று அருள் மயம். ஞானம், அருள் என்ற இரண்டின் கலப்பினால் தோன்றியவன் முருகன். இரண்டு பேரும் வேறு வேறு இல்லாத ஒன்றுபட்ட தோற்றம் ஆறுமுகன். அருள் வேறு, ஞானம் வேறு என்று இல்லாமல் அருளும் ஞானமும் ஒன்றாகக் கலந்து நிற்கின்ற கோலம் முருகன். உலகத்திற்கு இவன் குருநாதனாக இருக்க வேண்டுமென்று பரமேசுவரர் நினைத்தார். உலகத்திலுள்ளவர்களிடம் சென்று, ''நீங்கள் என்னுடைய குமாரனைக் குருநாதனாகக் கொண்டு உய்வு பெறுங்கள்'' என்று சொன்னால் சிலர் கேட்பார்கள். எல்லாரும் அப்படிச் செய் வார்களா? சொல்லிக் காட்டுவதைவிடச் செய்து காட்டுவதே மிகச் சிறந்த உபதேசம் என்பர். ''அப்படி இருங்கள்; இப்படிச் செய்யுங்கள்'' என்று பிறருக்குப் பெரிய பெரிய சொற்பொழிவு களின் மூலம் பெரியவர்கள் உபதேசம் செய்யமாட்டார்கள். பிறர் எதைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறார்களோ அதைத் தங்கள் வாழ்வில் செய்தே காட்டுவார்கள்.

வேதாந்த தேசிகர் என்பவர் வைணவர்களின் குரு. அவர் ஒரு சமயம் ஓர் இடத்திற்குச் சென்றிருந்தார். வைணவர்களுக்குள் தீர்த்தம் யார் முதலில் வாங்கிக் கொள்வது, யார் அடுத்து வாங்கிக் கொள்வது என்று சண்டைகள் வரும். எப்போதும் முதல் தீர்த்தம் வேதாந்த தேசிகருக்குத்தான். ஊரில் இருந்த ஒரு பெரிய பணக்காரர், ''வேதாந்த தேசிகருக்கு அடுத்தபடியாக நான்தான் தீர்த்தம் வாங்கிக் கொள்வேன்'' என்று சொல்லிக் கொண் டிருந்தார். தேசிகரிடமும் விண்ணப்பம் செய்து கொண்டார். ''அப்படியே ஆகட்டும்'' என்றார் தேசிகர். அந்தப் பணக்காரருக்குப் புத்தி கற்பிக்க வேண்டும் என்பது அவருடைய ஆசை. அதற்காக முதலில் தமக்குத் தீர்த்தம் கொடுக்க வந்த போது, அதை வாங்கிக் கொள்ளாமல் அங்கே இருந்த எல்லாரையும் வாங்கிக் கொள்ளச் சொன்னார். யாவரும் வாங்கிக் கொண்டுவிட்டார்கள். பிறகு வேறு யாரும் இல்லை என்றவுடன், ''எனக்குத் தீர்த்தம் கொடுங்கள்'' என்று சொல்லிப் பிறகு அந்தப் பணக்காரரைப் பார்த்து, ''நீங்கள் தீர்த்தம் வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று சொன்னாராம். அவர் அந்தச் செல்வருக்குப் பணிவைத் தம் செய லாலே கற்பித்தார்.

அப்படி முருகனை எல்லோரும் குருநாதனாகக் கொண்டு வணங்கவேண்டும் என்பதை அறிவுறுத்தச் சிவபிரான் தாமே செய்து காட்டினார்.

"நாதா குமரா நம என்று அரனார்"
ஓதி வணங்கினார் என்று கந்தர் அநுபூதியில் வருகிறது.

"முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை! சத்திச் சரவண!
முத்திக்கொரு வித்துக் குருபர!
- எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும்
- அடிபேண"

என்று சண்முகநாதன் குருபரனாக இருந்த நிகழ்ச்சியை அருண கிரியார் திருப்புகழில் முதலில் சொல்கிறார்.

"முத்துப் போன்ற தோற்றத்தைத் தரும் பற்களை வரிசை யாக உடைய தேவயானையின் கணவா! ஞானவேல் ஏந்திய சரவணபவனே! முத்திக்கு வித்தாக உள்ள குருபரனே! எனத் தோத்திரம் செய்து நின்ற முக்கண் கொண்ட பரமனுக்கு வேதத் தில் முன் இருக்கும் பிரணவப் பொருளை உபதேசம் செய்த வனே" என்று பாடுகிறார்.

சிவபெருமானுக்கு அவன் பிரணவ மந்திரம் உபதேசம் பண்ணினது இருக்கட்டும். அதற்கு முன்னதாகவே தன்னுடைய பாவனையை, தன்னை எப்படிப் பாவிக்க வேண்டும் என்பதை, போதித்தான்.

## உபதேசம் செய்த வரலாறு

முருகன் கைலாசத்தில் விளையாடிச் கொண்டிருந்த போது மிகவும் விரைவாகப் பிரமன் சிவபிரானைத் தரிசிக்கப் போய்க் கொண்டிருந்தான். வழியில் விளையாடிக் கொண்டிருந்தான் அழகிய முருகன். அழகிய பொருள்களையும் அழகிய குழந்தை யையும் கண்டால் கண் உடையவர்கள் பார்ப்பார்கள். பார்க்காமல் போகிறவன் கண் இல்லாதவன்.

பிரமாவுக்குக் கண் இல்லையா? நாலு தலையும் எட்டுக் கண்களும் உண்டு. அழகான மயிலுக்குப் பக்கத்தில் அழகு வடிவாக நிற்கும் முருகனைப் பார்த்தும் பார்க்காதவன்போல,

தலை தருக்கிச் சென்றான். முருகனுக்குக் கோபம் வந்துவிட்டது. ''பிரமாவைப் பிடித்து வா'' என்றான். பிரமன் எதிரே வந்து நின்ற போது, ''நீ யார்?'' என்று கேட்டான்.

''நான் பிரமன்.''

''உன் தொழில் என்ன?''

''உலகத்தைச் சிருஷ்டி பண்ணுகிறேன்.''

''என்ன படித்திருக்கிறாய்?''

''எனக்கு வேதம் நன்றாக வரும்.''

''வேதம் தெரியுமா? எங்கே சொல் பார்ப்போம்.''

பிரமன் வேதம் சொல்வதற்கு முன், ''ஓம்'' என்று ஆரம்பித்தான்.

''நிறுத்து. ஓம் என்று சொன்னாயே; அதன் பொருள் என்ன?'' என்று கேட்டான் இளம்பூரணன்.

பிரமனுக்குச் சொல்லத் தெரியவில்லை; விழித்தான்.

''முதல் எழுத்துக்கே பொருள் தெரியவில்லையே! உனக்கு வேதம் வருமென்கிறாயே! உன் லட்சணம் இப்படி இருக்கும் போது நீ கடமையை எப்படிச் செய்யப் போகிறாய்?'' என்று அவன் தலையில் ஓங்கி ஒரு குட்டுக் குட்டிவிட்டு அவனைப் பிடித்துச் சிறையில் போட்டான். அன்று முதல் முருகனே படைக்கும் தொழிலை மேற்கொண்டான். இந்தச் செய்தி பரமேசுவரருக்குத் தெரிந்தது. அவர் தம் குழந்தையைக் கூப்பிட்டு அனுப்பினார்.

''பிரமாவைச் சிறையில் போட்டுவிட்டாயாமே குழந்தை?'' என்று கேட்டார்.

''ஆம் அப்பா! அவனுக்கு ஓம் என்பதற்குப் பொருள் தெரியவில்லை'' என்ற சொன்னான் முருகன்.

''அப்படியா? உனக்கு அதன் பொருள் தெரியுமா?'' என்று கேட்டார் பரமேசுவரர். தம்முடைய பிள்ளை என்கிற பாவனையோடு கேட்டார்.

''தெரியும்'' என்றான்.

''எங்கே, சொல் பார்க்கலாம்.''

ஞானபண்டிதன் என்ன செய்தான் தெரியுமா? '' அது மிகவும் இரகசியமானதாயிற்றே. குரு சிஷ்யனுக்கு உபதேசம் செய்ய வேண்டிய பொருள் அல்லவா அது? எனக்கு அப்பா என்கிற பாவனையோடு நீங்கள் அதைக் கேட்டால் நான் எப்படிச் சொல்வது? என்னைக் குருவாகப் பாவித்து நீங்கள் சிஷ்யனாக வந்தால் அல்லவா சொல்ல முடியும்?'' என்று தன்னைப் பாவிக்க வேண்டிய பாவனையை முதலில் போதித்தான்.

....தன் பாவனையைப்
போதித்த நாதனை.

பாவனையை என்றால் பிரணவமந்திரத்தை என்று பொருள் கொள்ளக் கூடாது. பிரணவ மந்திரத்தைப் பின்னால் போதிக்கிறான். அதைப் போதிப்பதற்குமுன், ''நான் உங்களுடைய குழந்தை என்று நீங்கள் வைத்திருக்கிற பாவனையை மாற்றி, நான் குரு நீங்கள் மாணாக்கர் என்ற பாவனையைக் கொள்ள வேண்டும்'' என்பதைப் போதித்தான். சிவபெருமான் அவனைக் குருவாகப் பாவித்து உபதேசம் கேட்டார்.

## அடையாளம்

குமர குருபரனுக்கு அடையாளம் உண்டு. அவன் ஞானத்தினால் தலைவன் ஆனான். அந்த ஞான சக்தியை அவன் எப்போதும் கையில் வைத்திருக்கிறான். என்னைக் குருவாகக் கொண்டு நாடி வருகிறவர்கள் எல்லோருக்கும் ஞானத்தைத் தருவேன் என்பதற்கு அடையாளமாக ஏந்தி இருக்கிறான்,

''வேலே விளங்குகையான்''

என்றும்,

''வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி''

என்றும் முன்பே அருணகிரியார் குறிப்பிட்டிருக்கிறார். அஞ்ஞானத்தைப் போக்கடிக்கும் ஞானவேல், அஞ்ஞான மயமாகிய பகைவர்களோடு போர் செய்து ஒறுக்கும் ஞானவேல், போர் வேல் அவன் கையில் விளங்கிக் கொண்டிருக்கிறது.

பாதித் திருவுருப் பச்சென் றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்த நாதனைப் போர்வேலனை.

''அர்த்தநாரீசுவரப் பெருமானுக்குத் தன்னைக் குழந்தையாகப் பாவிக்கும் பாவனையை மாற்றிக் குருநாதனாகப் பாவிக்கும் பாவனையைப் போதித்த நாதனை, தந்தைக்கு ஞானம் சொன்ன குருமூர்த்தி என்று உலகம் எல்லாம் தெரிந்து கொள்வதற்காக ஞான சக்தியையே, அஞ்ஞானத்தோடு சண்டையிட்டு ஒறுக்கும் போர்வேலையே, தன்னுடைய திருகரத்தில் ஏந்திக் கொண்டிருக்கும் பொருமானை நாடிச் சென்று, கையைக் குவித்து வணங்கிப் போற்றி, பிரபஞ்சச் சேற்றைக் கழித்து நான் உய்வதற்கு, சோதித்த மெய்யன்பு எனக்குத் துணை செய்ததே! அன்பு கொண்டு அங்கே சென்றேன். மெய்யான அன்பு இருந்தது; போற்றினேன். சோதித்த மெய்யன்பு இருந்தது; உய்ந்தேன். இது நான் என் அநுபவத்திலே கண்டது. இது பொய்யாகுமா? உண்மை அல்லவா?'' என்று கேட்கிறார் அருணகிரியாராகிய குருநாதர்.

துன்பம் இல்லாத வரைக்கும் முருகா என்று சொல்லத் தோன்றும். காமம் இல்லாத வரைக்கும் முருகா என்று சொல்லத் தோன்றும். ''ஞானத்திற்கு நேர்விரோதமான உணர்ச்சி எனக்கு மூண்ட காலத்திலும் முருகனை நினைக்கிறேன்'' என்று அருணகிரியார் பாடியிருக்கிறார்.

''கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை
மொண்டுண்டு அயர்கினும் வேல்மறவேன்''

என்பது அவர் வாக்கு. 'அவன் திருக்கரத்திலுள்ள வேலை நான் மறக்காதிருக்கும்படி அருள் செய்தான். என்னுடைய அன்பை நான் பலவகையிலும் சோதித்துப் பார்த்தேன். எல்லாச் சோதனைகளிலும் அது வென்றுவிட்டது. அதனால் அல்லவா நான் உய்ந்தேன்! சோதித்த என்னுடைய மெய்யன்பு பொய்யாகி விடுமா?

...போர்வேலனைச் சென்று போற்றிஉய்யச்
சோதித்த மெய்யன்பு பொய்யோ?

## அழுது தொழுது உருகுதல்

அன்பு என்பது ஓர் உணர்ச்சி; அது கண்ணுக்குப் புலனாகாது. அதற்குச் சில அடையாளங்கள் உண்டு. அன்புடையாரிடம் வெளிபாடையாக நிகழ்வன சில. வெளிக்குத் தெரியாமல் உள்ளே நிகழ்வன சில. வெளிப்படையாக ஆண்டவனுடைய சந்நிதானத்திற்குச் சென்று போற்றினால் போதுமா? அப்படிச்

சென்று போற்றுவது முதல் பாடம். அந்தப் பழக்கம் முறுக முறுகப் புத்தியில் விளைவது ஒன்று இருக்கிறது.

ஆண்டவனுடைய கோயிலுக்குச் சென்று, கையைக் குவித்துப் போற்றுவது உடம்பினால் செய்ய வேண்டிய செயல். அடுத்தப் படி புத்தி வேலை செய்கிறது.

''புத்தியை வாங்கிநின் பாதாம் புயத்தில் புகட்டி அன்பாய்''

என்று ஒரு பாட்டில் சொன்னார். உடம்பினாலே சென்று போற்றத் தெரிந்த அன்பு புத்தியில் சார்கிறது.

அழுது தொழுது உருகிச்
சாதித்த புத்தி வந்து எங்கே எனக்கு
இங்ஙன் சந்தித்ததே!

நமக்குக் கிடைக்கவேண்டிய பொருள் கிடைக்காமல் இருந் தால் அழுகிறோம். இருக்கிற பொருள் நம்மை விட்டுப் போய் விட்டால் அழுகிறோம். நமக்குக் கிடைக்கவேண்டியது ஆண்ட வனின் அருள். ஆண்டவன் நமக்கே உரியவன். நமக்குக் கிடைக்க வேண்டிய ஒன்றை நாம் இழந்து நிற்கிறோம் என்று நினைத்தால் அழுகை வரும்.

ஆத்மா இறைவனோடு ஒன்றாவிட்டால் எத்தனைதான் வேறு இன்பங்கள் இருந்தாலும் எவ்விதப் பயனும் இல்லை. 'ஆண்டவனோடு நான் இன்னும் ஒன்றாமல் இருக்கிறேனே! அவனிடத்தில் சென்று சேரவேண்டியவன் அல்லவா நான்? எனக்கே உரியவனாகிய அவன் இன்னும் என்னிடத்தில் வரவில்லையே' என்று நினைத்தால் உருக்கம் உண்டாகும்; ஆண்டவனுக்கு முன்னாலே நின்று,

''முருகன் குமரன் குகன் என்று மொழிந்து''

உருகி அழுது தொழுது கொண்டிருப்போம்.

அன்பினாலே முதலில் இந்தப் புத்தி அழச் சாதித்துக் கொண்டது. மெய்யன்பினாலே அழுது தொழச் சாதித்துக் கொண்டது. சோதித்த மெய்யன்பினாலே அழுது தொழுது உருகச் சாதித்துக் கொண்டது.

## சாதித்த புத்தி

''அப்படிச் சாதித்துக் கொண்ட புத்தி எனக்கு எப்படி வந்து சேர்ந்தது? இந்தச் சாதித்த புத்தி வருவதற்கு நான் தொண்டர்

*கூட்டத்தில் எதிலும் சேரவில்லை. எந்தவிதமான முயற்சியும் செய்யவில்லை. அன்பினாலே அழுது, மெய்யன்பினாலே அழுது தொழுது, சோதித்த மெய்யன்பினாலே அழுது தொழுது உருகி உய்வு பெறுவதற்கு ஏற்பட்ட புத்தி, சாதித்த புத்தி, வந்து எனக்கு வாய்த்திருக்கிறதே! இது எப்படி வந்து வாய்த்தது என்று தெரிய வில்லையே! அது ஆண்டவன் அருள்தான்!''*

சாதித்த புத்திவந்து எங்கே
எனக்கு இங்ஙன் சந்தித்ததே!

*என்று மிகவும் வியப்பெய்திப் பேசுகிறார் அருணகிரியார்.*

*இப்படிப் பேசுவது பெரியவர்கள் வழக்கம். அபிராம பட்டர் இப்படிப் பேசுகிறார். பராசக்தியைப் பார்த்துக் கூறுகிறார்.*

*''நான் என்ன அம்மா புண்ணியம் செய்திருக்கிறேன்? எனக்கே தெரியவில்லையே!''*

''நான்முன் செய்த புண்ணியம் ஏதென் அம்மே?''

*என்று வியப்பெய்திக் கேட்கிறார். 'இந்தப் பிறவியில் நான் உன் புகழை நினைந்து, உன் நாமங்களைக் கற்று, உன்னுடைய பாத அம்புயத்தில் பக்தி பண்ணி வாழ்ந்து, உன்னை விரும்பித் தொழு கிற அடியவர்களின் கூட்டத்தையே இரவு பகலாக விரும்பி வாழ்வது என்றால் முன்சென்மப் புண்ணியம் இல்லாமல் உண்டாகுமா? அத்தகைய பேறு எனக்குக் கிடைத்திருக்கிறதே!'*

''கண்ணியது உன்புகழ்; கற்பதுஉன் நாமம்; கசிந்துபத்தி
பண்ணியது உன்இரு பாதாம் புயத்தில்; பகல்இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து; நான்முன்செய்த
புண்ணியம் ஏதென் அம்மே புவி ஏழையும் பூத்தவளே?''

*''ஏழு உலகத்தையும் உண்டாக்கியவளே! நான் செய்த புண்ணியம் என்ன? எனக்கே தெரியவில்லையே!'' என்று அதிசயப் பெருக்கிலே கேட்கிறார்.*

*'அம்மாவும், அப்பாவுமாக ஒன்று சேர்ந்த திருவுருவம் உடைய பெருமானுக்கே, ''என்னை நீ இப்படிப் பாவிக்க வேண்டும்'' என்ற தன் பாவனையைப் போதித்த பெருமானை, ஞானசக்தியை வேலாக உடைய பெருமானை, நான் அவன் இருக்கிற இடத்திற்குச் சென்று, உள்ளத்தால் அவன் அன்பை*

*மேற்கொண்டு போற்றினேன்; பின்பு நான் உய்யும்படியாகச் சோதித்த மெய்யன்பு உண்டாயிற்று. அது பொய்யன்பு அன்று. காரணம் அந்தப் பெருமானிடத்திலே சென்றேன்; அழுதேன்; அழுது தொழுதேன்; அழுதுதொழுது உருகினேன். அழுது தொழுது உருகிச் சாதித்த புத்தி எனக்கு வந்திருக்கிறதே, அதனால் அன்பு பொய் அன்று. ஆனால் அந்தப் புத்தி எப்படி வந்தது என்று எனக்கே தெரியவில்லையே! பெரிய ஆச்சரியமாக அல்லவா இருக்கிறது? எல்லாம் அவன் திருவருள்தான்'' என்று வியப்பெய்திப் பேசுகிறார் அருணகிரியார்.*

பாதித் திருஉருப் பச்சென்
றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்த நாதனைப் போர்வே
லனைச் சென்று போற்றிஉய்யச்
சோதித்த மெய்யன்பு பொய்யோ?
அழுது தொழுதுஉருகிச்
சாதித்த புத்திவந் தெங்கே
எனக்கிங்ஙன் சந்தித்ததே!

*(தம்முடைய பாதித் திருவுருவம் அம்பிகையை உடைமையால் பச் சென்று பசுமை நிறம்பெற்ற சிவபிரானுக்குத் தன்னைப் பாவிக்கும் முறையை உபதேசித்த நாயகனை, போரில் வீரச் செயல் புரியும் வேலாயுதக்கடவுளை, சென்று வாழ்த்தி உய்தியடைவதற்காகச் சோதனை செய்துகொண்ட உண்மையான அன்பு பொய்யாகுமா? ஆகாது. அவ் வன்புக்குக் காரணமாக, அழுது அவனைத் தொழுது உருகி இந்த அன்பைச் சாதித்துக் கொண்ட நல்லறிவு எனக்கு இவ்வாறு எப்படி வந்து கூடியது? இது வியப்பாக இருக்கிறதே!*

*என் முயற்சி இன்றியே திருவருள் இத்தகைய புத்தியை எனக்கு கிடைக்கச் செய்தது என்பது குறிப்பு.*

*பச்சென்றல் – பசுமையாக இருத்தல், தன் பாவனை – தன்னைப் பாவிக்கும் திறம். சாதித்த – நினைத்ததை நிறைவேற்றிய. எங்கே – எவ்வாறு.)*

# காலனை வெல்லுதல்

சென்ற பாட்டில் இறைவனுடைய திருவருளை நம்பி அன்புசெய்து, அந்தச் சோதித்த மெய்யன்பினாலே சிறந்த நிலை அடைந்ததை நினைத்து ஆச்சரியப்பட்டார் அருணகிரியார். அந்த நிலை பெற்றதன் பயனாக அவருக்குத் தைரியம் உண்டாயிற்று. வாழ்நாளில் வருகிற பெரும் துன்பமாகிய சாவைக் கண்டும் அஞ்சாத உறுதி அவர் உள்ளத்தில் குடிகொண்டது. அதனால் அவர் காலனை அறைகூவப் புறப்பட்டார்

"தண்டா யுதமும் திரிசூல மும்விழத் தாக்கி"

என்று தொடங்கும் பாட்டு ஒன்றை நாம் முன்பு பார்த்தோம். காலனைப் பார்த்துப் பாடுகிற முறையில் அந்தப் பாட்டு அமைந்திருக்கிறது. இங்கும் அதுபோலவே காலனை விளித்துப் பாடுகிறார்.

## காமனும் காலனும்

காமனையும் காலனையும் வெல்வது பெரிய மனிதர் களுக்குக்கூட முடியாத காரியம். மனிதன் வாழ்நாளில் உரம் மிக்க போது காமன் தொந்தரவு செய்கிறான். உரம் போன பிறகு காலன் துன்பம் இழைக்க வருகிறான். இந்திரியங்கள் எத்தனைக்கு எத்தனை வளர்ச்சியும் உரமும் பெறுகின்றனவோ அத்தனைக்கு அத்தனை அவற்றுக்குப் பசி அதிகமாகிறது. மேலும் மேலும் நுகர்கிற பொருள் வேண்டுமென்று கேட்கின்றன. அவற்றுக்குத் தேவையான அத்தனையையும் கொடுத்து நிறைவு பெறலாம் என்றால், அந்த நிலை எப்பொழுதுமே மனிதனுக்கு வருவது இல்லை. இந்திரியங்களின் அநுபவத்திற்கு எல்லையே இல்லை. ஏதேனும் ஓர் எல்லையிருந்தால் இந்திரிய நுகர்ச்சி பெற்று இதோடு போதும் என்ற நினைவு உண்டாகும். ஆனால் எத்தனைக்கு எத்தனை நாம் இந்திரியங்களின் பசியைத் தணிக்க முற்படுகிறோமோ அத்தனைக்கு அத்தனை மீண்டும் மீண்டும்

அந்த நுகர்ச்சியைப் பெறவேண்டுமென்ற ஆசையே அதிக மாகிறது. ருசி கண்ட பூனை உரியை எட்டியெட்டித் தாவுவது போல, நுகர்ச்சி பெற்ற இந்திரியங்கள் மேலும் மேலும் அந்த நுகர்ச்சியினிடத்தில் ஆசை கொள்கின்றன.

ஒருமுறை ஒருவகையான இன்பத்தை அநுபவித்தால் அதனு டன் திருப்தி அடையாமல் மீட்டும் மீட்டும் அதை அதை அநுப விக்க வேண்டுமென்ற ஆசை மனத்தில் வளர்கிறது. பிறவி முழுவதும் இன்பம் அடைந்தாலும் மேலும் இன்பம் நீண்டு கொண்டே இருக்க வேண்டுமென்றும், அதற்கேற்றபடி பிறவியும் நீளவேண்டுமென்றும் ஆசைப் படுகிறோம். இத்தகைய ஆசை நிறைவேறாமையினால், 'அடுத்த பிறவியிலாவது அந்த ஆசையை இவன் பூர்த்தி செய்து கொள்ளட்டும்' என்ற கருணையினால் ஆண்டவன் மேலும் பிறவியைத் தருகிறான். அந்தப் பிறவியிலும் நம்முடைய ஆசைகள் வளருகின்றனவே யொழிய நிறைவேறும் என்று சொல்வதற்கில்லை. இப்படி இடையறாது வருகின்ற ஆசையினால் பிறவியும் இடையறாது வருகின்றது.

திருப்தி இல்லாத இந்திரியங்களை ஆண்டவனுடைய பக்கத் தில் திருப்பினால் திருப்தி உண்டாகும். சோதித்த மெய்யன்பினால் மனம் நிறைவு பெறும். இந்திரியங்களை இறைவனோடு தொடர்பு உடையனவாக்காமல் உலகியல் இன்பங்களில் ஈடுபடுத்துகிறவர் களுக்கு என்றுமே நிறைவு உண்டாவது இல்லை. உடம்பில் உரம் இருப்பதனால்தான் விரும்பி இன்பத்தை மிகுதியாகப் பெறு கிறான். அதனால் அவன் நிறைவு பெறுவது இல்லை. மேலும் மேலும் காமன் அவனிடத்தில் ஆசையைத் தோற்றுவித்துக் கொண்டே இருக்கிறான். உடம்பு தளர்ந்து, இந்திரியங்கள் உரம் அவிந்து இருக்கும்போது முதுமை உண்டாகி அதுவே காரண மாகக் காலன் நம்மை வந்து அணுகுகிறான். காமனாலும், கால னாலும் வருகின்ற துன்பத்தை நாமே நினைந்து போக்க இயலாது. இறைவனுடைய திருவருள் இருந்தால்தான் அந்த இரண்டும் நம்மிடத்தில் வராமல் நின்றுவிடும். சிவபெருமான் காலகாலனாக இருப்பவன்; காமாரியாகவும் இருக்கிறான். அவனுடைய திருவரு ளால் காமனுடைய துன்பமும், காலனுடைய துன்பமும் விலகும்.

சிவபெருமானினும் வேறு அல்லாத முருகவேளும் காமனால் வரும் துன்பத்தையும், காலனால் வரும் துன்பத்தையும் போக்கி

விடுவான். அப்படிப் போக்குவதற்குரிய கருவியாகிய வேலை அவன் தன் கையில் வைத்திருக்கிறான். வேல் ஞானத் திருவுரு ஆதலின் காமத்தை அழிக்கிறது. அதுவே கால பயத்தையும் போக்குகிறது. அவனுடைய வேலை நினைத்தால் காம ஜயமும் கால ஜயமும் பண்ணலாம் என்பதை அருணகிரி நாதர் பல இடங்களில் சொல்கிறார்.

## காலனை அறைகூவுதல்

காலனால் உண்டாகும் அச்சத்தினின்றும் நீங்கி மிக்க தைரியத்தோடு இருக்கிறேன் என்று பல பெருமக்கள் பாடியிருக்கிறார்கள். இறைவனைப் பார்த்து, ''உன்னுடைய திருவருளினால் நாங்கள் காலஜயம் பண்ணிவிட்டோம்'' என்று பெருமிதத்தோடு கூறியவர்களும் உண்டு.

''நடலையிட் டுழிதர் கின்றோம் நமன்றமர் தலைகள் மீதே''

என்கிறார் தொண்டரடிப் பொடியாழ்வார்.

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்''

என்று பாடுவார் அப்பர் சுவாமிகள். அருணகிரிநாதப் பெருமானும் அதுபோலவே இறைவனைப் பார்த்தும், பொதுவாகவும் காலனால் வரும் அச்சம் தமக்கு இல்லை என்பதைத் தெரிவித்திருக்கிறார். அவற்றோடு, காலனை நேராக அழைத்து அறைகூவுகின்ற முறையில் சில பாடல்களைப் பாடியிருக்கிறார். அப்படிப் பாடுவதற்கு மனத்தில் சிறந்த உறுதி வேண்டும்.

வெளியில் காலனைக் கண்டு அஞ்சாதவர்களைப் போலப் பேசினாலும் மனத்திற்குள் நாளைக்குச் சாவு வந்துவிடுமே என்கிற பயம் பலருக்கு இருக்கும். மரணத்திற்கு அஞ்சாமல், உயிர் என்ன வெல்லமா என்று சொல்லிக் கொண்டு இருக்கிறவன், பக்கத்து வீட்டில் குண்டுக்கல் மாதிரி இருந்தவன் இறந்து போனால் கொஞ்சம் மனம் நெகிழ்கிறான். அவனை அறியாமல் அவன் வயிற்றில் புளி கரைக்கிறது. யமனுக்குச் சிறிதும் அஞ்சாமல் அவனால் தமக்குத் துன்பம் வராது என்ற துணிவோடு இருக்கிறவர்கள் மிக அரியர். அவர்களில் மிகச் சிறந்த துணிவு கொண்டவர் அருணகிரியார்.

## மரணம் இல்லா வாழ்வு

மரணம் இல்லாமல் வாழ்கிற வாழ்வு இன்னது என்பதை முன்பு ஒருமுறை விரிவாகச் சொல்லியிருக்கிறோம். ஞானிகளும் அஞ்ஞானிகளும் உடம்பை விட்டு இறந்து போகிறார்கள். ஆனால் இருவருடைய இறப்பும் ஒரே தன்மை உடையன அல்ல. ஞானிகள் பெறுவது என்றைக்கும் மாறாத விடுதலை. அஞ் ஞானிகள் பெறுவது சிறை மாற்றம் போன்றது. எப்போதுமே இந்த உடம்போடு இருக்கலாம் என்ற நிலை யாருக்கும் கிடைக் காது. பஞ்சபூதத்தின் தொடர்புடைய உடம்பு என்றைக்கேனும் ஒரு நாள் அழியத்தான் வேண்டும்.

## ஆஞ்சநேயர்

ஆஞ்சநேயர் முதலிய பலர் சிரஞ்சீவியாக இருக்கிறார்கள் என்று சொல்வது உண்டு. எங்கெங்கே ராமனுடைய புகழ்பாடும் பஜனை நடைபெறுகிறதோ அங்கெல்லாம் ஆஞ்சநேயர் வந்து கேட்டுக் கொண்டிருப்பதாக ஒரு நம்பிக்கையும் உண்டு. அவர் வாழ்ந்த காலத்தில் எந்த உடம்போடு இருந்தாரோ அதே உடம்போடு சிரஞ்சீவியாக இருக்கிறார் என்பது உண்மையானால் ராமாயணம் நடக்கும் இடத்தில் நாம் காணும் உருவத்தோடு அவர் வர வேண்டும். அப்படி இல்லையென்றால், ஒன்று அவர் சிரஞ்சீவியாக இருப்பது பொய்யாக இருக்கவேண்டும்; அல்லது அவர் ராமாயணம் படிக்கும் இடத்தில் வருகிறார் என்பது பொய்யாக இருக்க வேண்டும். இரண்டும் பொய் இல்லாமல் இருப்பதற்கு மிகவும் நுட்பமான ஒரு கருத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். சிரஞ்சீவித் தன்மை என்பது இந்தப் பௌதிக உடம்போடு இருத்தல் என்று கொள்ளக் கூடாது. ஆஞ்சநேயர் என்ற தத்துவம் எப்போதும் பசுமையாக, சிரஞ்சீவியாக இருக் கிறது. ராமாயணம் வாசிக்கும் இடங்களில் எல்லாம் மிகப் பணிவுடன் ராமாயணத்தைக் கேட்கிற தத்துவம் ஒன்று உலவு கிறது. அது எல்லாக் காலத்தும் உலவும் என்பதே அந்தச் சிரஞ்சீவித் தன்மைக்குப் பொருள்.

## சிரஞ்சீவித் தத்துவம்

பரம்பொருளாகிய இறைவன் என்பது சத்தியமான நித்திய தத்துவம். அந்த இறைவனும் ஒருகாலத்தில் ஓர் உருவம் கொண்டு

வருகிறான். எல்லாக் காலத்தும் அந்த உருவத்தையே எடுத்துக் கொண்டு வரவேண்டுமென்பது இல்லை. யார் யார் எந்த உருவத்தை விரும்புகிறார்களோ அந்த உருவத்தில் வந்து அருள் செய்வான் என்பதுதான் நித்தியமான சிரஞ்சீவித் தத்துவம். இதற்கு நம்முடைய நூல்களில் எத்தனையோ உதாரணங்கள் உண்டு.

கங்கையில் ஓடுகிற தண்ணீர் எப்போதும் ஓடிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதை எடுத்து வைக்கிற பாத்திரம் மாத்திரம் இடம் பொருள் ஏவல் முதலியவற்றினால் வெவ்வேறாக இருக்கிறது. உருவம் வெவ்வேறாக இருந்தாலும் உள்ளே இருக்கிற தண்ணீர் ஒன்றுதான். அதுபோலவே இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்கு அன்பர்கள் பல பல துறைகளில் பல பல உருவத்தோடு அவனை வழிபடுகிறார்கள். அவன் நித்திய தத்துவமாதலால் அவனைப் பாவிக்கின்ற உருவமும் என்றைக்கும் நித்தியமானது என்று கொள்ளக் கூடாது. சிரஞ்சீவித் தன்மை அந்தத் தத்துவத்திற்கேயன்றி உருவத்திற்கு அன்று.

## வேடன் கதை

ஒரு காட்டில் ஒரு வேடன் இருந்தான். அவன் பல விலங்குகளைக் கொன்று திரிந்து வாழ்ந்து வந்தான். அப்போது ஒரு பெரியவர் அந்தக் காட்டின் வழியாகச் சென்றார். அவனைப் பார்த்து அவனிடத்தில் கருணை பூண்டு, ''அப்பா! நீ என்ன செய்கிறாய்?'' என்று கேட்டார்.

''நான் தினந்தோறும் வேட்டையாடிப் பிழைக்கிறேன்'' என்று அவன் சொன்னான்.

''எப்போதுமே கொலை பண்ணிப் பல விலங்குகளைத் துன்புறுத்தி வாழ்கிற வாழ்க்கை ஒரு வாழ்வா? நீ எப்படி முன்னேறப் போகிறாய்?'' என்று இரக்கத்துடன் கேட்டார் அவர்.

''எனக்குத்தான் தினந்தோறும் வேண்டிய உணவு கிடைக்கிறதே. காடு நிறைய விலங்கினங்கள் இருக்கும்போது எனக்கு என்ன குறைவு?''

''உன்னைப் போலவே புலி முதலிய விலங்குகள் எண்ணியிருக்கின்றன. காடு நிறைய மான் முதலிய விலங்கினங்கள் இருக்கும்போது நமக்கு என்ன குறைவு என்று அவை நினைக்கலாம்.

அவற்றுக்கு உன்னைப் பற்றிய நினைவே இருப்பது இல்லை. அத்தகைய விலங்கினங்களை நீ கொன்று விடுகிறாயே. அந்த விலங்குகள் நினைப்பது போலத்தானே நீயும் நினைத்துக் கொண் டிருக்கிறாய்?''

வேடன் சிறிதே சிந்தனை செய்தான். ''அவற்றை நான் கொல்கிறேன். அதனால் அவற்றின் உயிருக்கே இறுதி உண்டாகி விடுகிறது. அதனால் என் நினைப்பு எப்படி வீணாகும்?'' என்று அந்த வேடன் கேட்டான்.

''உன் வாழ்க்கை இப்படியே நீடித்துக் கொண்டிருக்கும் என்று நிச்சயமாக நம்புகிறாயா? உன்னுடைய பாட்டனார் எங்கே போனார்? உன் தகப்பனார் எங்கே போனார்?'' என்று பெரியவர் கேட்டார்.

''அவர்கள் எல்லாம் செத்துப் போனார்கள்'' என்று விடை வந்தது.

''அப்படியானால் நீயும் ஒரு நாள் செத்துப் போவாயே; உன் உடம்பு, உயிர் இல்லாமல் போகுமே. விலங்குகளின் உடம்பை நீ உயிர் இல்லாமல் ஆக்குவது போல உன்னை உயிர் இல்லாமல் ஆக்குவதற்கு ஒருவன் வருவானே'' என்று பெரியவர் சொன்னார்.

அதைக் கேட்டபோது வேடனுக்கு அச்சம் உண்டாயிற்று. ''என்னை உயிர்போகும்படி செய்கிற அவன் யார்?'' என்று கேட்டான்.

''அவனுக்கு யமன் என்று பெயர் அப்பா. அவன்தான் உலகிலுள்ள எல்லா உயிர்களையும் கொல்கிறான். உன் கையில் உள்ள வேலினால் நீ விலங்கைக் கொல்கிறாய்; வேல் கொல் கிறது என்று யாரும் சொல்வதில்லை; நீ கொல்கிறாய் என்றுதான் சொல்வார்கள். அதுபோல விலங்குகளை நீ கொல்வதாக நினைக் கிறாய். யமன்தான் உன் மூலமாக அவற்றைக் கொல்கிறான். அது போலவே உன்னையும் வியாதி முதலிய கருவிகளால் கொன்று விடுகிறவன் அவன்தான்.''

வேடன் இப்போது சற்று யோசனை செய்ய ஆரம்பித்தான். ''நீங்கள் சொல்வது மெய்யாகத் தோன்றுகிறது. விலங்குகளை நான் கொல்வது போல என்னை நோயும் முதுமையும் கொல்லும்

என்பதைத் தெரிந்து கொண்டேன். அதை நினைக்கும்போது பயமாகத்தான் இருக்கிறது'' என்றான்.

பெரியவர், ''நீ பயப்படவேண்டாம். அந்தப் பயத்தைப் போக்கு வதற்கு ஒரு வழி இருக்கிறது. இந்தக் காட்டின் ஒரு மூலையில் ஒரு முனிவர் இருக்கிறார். அவரிடம் போய் உபதேசம் வாங்கிக் கொள். அந்தப் பயத்தை நீக்குவதற்கு வழி கிடைக்கும்'' என்றார்.

"அவரை எனக்குப் பழக்கம் இல்லையே! உபதேசம் என்றால் என்ன? அவரை எப்படி அணுகுவது?'' என்று கேட்டான் வேடன்.

''அவர் இப்படியே வெளியில் வருவார். அப்போது அவர் காலில் விழுந்து எழுந்து நில். உபதேசம் செய்ய வேண்டுமென்று கேள். அவர் எதைச் சொல்கிறாரோ அதையே நீ மந்திரமாக வைத்து எப்போதும் சொல்லிக் கொண்டிரு. பயம் போகிற வழி கிட்டும்.''

இப்படிச் சொல்லி அவர் போய்விட்டார். மறுநாள் அந்த வேடன் அந்தக் காட்டின் மூலையில் உள்ள முனிபுங்கவரைத் தேடிக்கொண்டு போனான். அங்கேயுள்ள பர்ணசாலையில் முனிவர் இருந்தார். உள்ளே போய் அவரைப் பார்ப்பதற்கு அவனுக்குத் தைரியம் இல்லை. யமனுடைய பயத்தைப் போக்கு கின்ற உபதேசம் செய்கிறவர் மிகப் பெரியவர் ஆதலினால் அவரை எளிதில் அணுக முடியாது என்று அஞ்சி நின்றான்.

ஒருநாள் அந்த முனிபுங்கவர் அந்தக் காட்டில் காலைக்கடன் முடிப்பதற்கு மரங்கள் அடர்ந்த இடத்தில் போய் உட்கார்ந்தார். வேடன் அந்தச் சமயத்தில் அவரைப் பார்த்தான். அவருக்கும் அவனுக்கும் இடையில் மரம் இருந்தது. அவன் கிழே விழுந்து குரு குரு என்றான். அவன் குரு குரு என்றது குர் குர் என்பது போலக் கேட்டதனால் அவர், ''பன்றி, பன்றி'' என்று கத்தினார்.

அந்தப் பன்றி என்ற வார்த்தையையே உபதேசமாகக் கொண்டு வேடன் அங்கேயிருந்து வீட்டுக்கு வந்து பன்றி பன்றி என்று சொல்லிக் கொண்டு அமர்ந்துவிட்டான். உண்மையாக உயிர் போய் விடும் என்ற பயத்தில் அதற்குப் பரிகாரம் தேட முயன்றவன் ஆதலால், மற்றவற்றை மறந்து பன்றி பன்றி என்று சொல்லிக் கொண்டே உட்கார்ந்தான். நாளாக ஆக பெரிய யோகியாகி விட்டான். அவனுடைய தீவிரமான பக்தியைக் கண்டு திருமால்

வராக உருவத்தை எடுத்துக் கொண்டு அவனுக்குப் பிரத்தியட்சம் ஆனார்.

''நீ யார்?'' என்று வேடன் கேட்டான்.

''நீ என்னை ஏன் அப்பா கூப்பிட்டாய்?'' என்று திருமால் கேட்டார்.

வேடனோ, ''நீ எதற்காக வந்தாய்?'' என்று மறுபடியும் கேட்டான்.

''நீ என்னை நினைத்தாய். உனக்கு அருள் செய்ய வந்திருக் கிறேன்.''

''எனக்கு ஒன்றும் தெரியாது, உன்னிடத்தில் என்ன பேச வேண்டும் என்பதை என் குருநாதரிடத்தில் கேட்டுச் சொல் வேன். வா'' என்று சொல்லி அந்தப் பன்றியைக் கட்டி இழுத்துக் கொண்டு முனிவரிடத்தில் போனான். ''சுவாமி! நீங்கள் எனக்கு உபதேசம் பண்ணினீர்கள். இந்தப் பன்றி இப்போது தோன்று கின்றது. எனக்கு என்ன வேண்டுமென்று கேட்கிறது. நான் அதை என்ன கேட்கட்டும்?'' என்று பணிவுடன் முனிவரைக் கேட்டான்.

அந்த முனிவர் சுற்றுமுற்றும் பார்த்தார். அவர் கண்களுக்குப் பன்றி தெரியவில்லை. ''எதைப் பார்த்தப்பா அப்படிச் சொல் கிறாய்? பன்றி ஏதும் தெரியவில்லையே!'' என்று சொன்னார்.

வேடன் உடனே, ''அப்படியா?'' என்று சொல்லி அந்தப் பன்றியை நோக்கி, ''என் குருநாதர் கண்ணில் நீ தெரிய வேண்டும்'' என்று கோபமாகச் சொன்னான். அடியானுக்கு அகப்பட்டவரான திருமால் அந்த முனிவருடைய கண்களின் முன் சங்குசக்கர அடை யாளத்தோடு பன்றியாக தோன்றினார். அந்தத் தோற்றத்தைக் கண்ட முனிபுங்கவர் கண்ணில் நீர்வார வேடன் காலைக் கட்டிக் கொண்டு. ''அப்பா! நீதான் என் குருநாதன்'' என்று சொல்லிக் கதறினாராம்.

இந்தக் கதையில், இறைவன் எந்தச் சமயத்தில் எந்தப் புதிய உருவத்தை வேண்டுமானாலும் எடுப்பான் என்ற உண்மை புலனாகிறது. தன்னை நம்பினவர்களுக்கு - உறுதியாக மனத்தை ஒருமைப்படுத்திப் பிரார்த்தனை பண்ணுகிறவர்களுக்கு - அவன்

அருள் செய்வான் என்ற தத்துவம் சிரஞ்சீவித் தன்மை உடையது. இன்ன வழியில் இன்ன உருவத்தோடு வருவான் என்பது அந்த அந்தக் காலத்திற்கு ஏற்றது. ஆஞ்சநேயராக வரலாம். அம்பிகையாக வரலாம். முருகனாக வரலாம். எப்படி வந்தாலும் அன்பு உடையவருக்கு அருள் செய்வதாகிய காரியம் எந்தக் காலத்தும் தவறுவது இல்லை.

## உடம்பும் உயிரும்

ஆகவே, சிரஞ்சீவித் தன்மை என்று சொல்வது இந்த உடம்புக்கு அன்று; உயிருக்குத்தான். உயிர் இறைவனோடு ஒன்றிப் பிறப்பும் இறப்பும் இல்லாமல் இருப்பதுவே மரணமில்லாப் பெருவாழ்வாகும். இறைவனோடு ஒன்றுபட்டுச் சிரஞ்சீவியாக வாழ்கிற பெரியவர்கள் முத்தி அடைந்தவர்கள். அவர்களுடைய உடம்பு வாழ்வது இல்லை. உயிர்தான் வாழ்கிறது.

## சொந்த அநுபவம்

உடம்பு அழியும் காலத்தில் நம்முடைய உயிரைக் கொண்டு போக யமன் வருகிறான் என்று புராணம் கூறுகிறது. அந்த யமனுடைய பயத்தை மாற்றுவதற்கு இறைவனுடைய திருவருள் வேண்டுமென்று பெரியவர்கள் சொல்கிறார்கள். பலவகையில் சொல்லிப் பல பாடல்களை அருளி இருந்தும் நமக்கு எளிதில் இந்தப் பயம் போவதில்லை. அருணகிரிநாதருடைய திரு வாக்கில் மிக உயர்ந்த உறுதி புலப்படுகிறது. அதனைப் படிப்பத னால் காலனிடம் உள்ள அச்சம் ஒருவாறு போய்விடும் என்பதை என்னுடைய சொந்த அநுபவத்தில் கண்டேன்.

என்னுடைய தாய் இறந்து போகிற தருணத்தில் இருந்தாள். ஒரு மாதம் ஈளை நோயினால் துன்புற்றுக் கொண்டிருந்தாள். நிச்சயமாக இறந்து போவாள் என்று மருத்துவர்கள் சொல்லி விட்டார்கள். நாடி தளர்ந்து கொண்டு வந்தது. சம்பிரதாயத் திற்காக ஏதோ மருந்து கொடுத்தாலும் என்னுடைய மனம் அமைதி பெறவில்லை. அவளுடைய உயிருக்கு நல்ல மருந்து கொடுக்க வேண்டுமென்பது என் ஆசை. அருணகிரிநாதப் பெருமான் நமக்குத் தந்திருக்கிற அமுத சஞ்சீவினியாகிய திருப்புகழை என் னுடைய தாயின் காதில் ஓதுவது என்று தீர்மானம் செய்து

கொண்டேன். காலனுடைய பயம் இல்லையென்ற பொருளைக் கொண்ட திருப்புகழாகப் பொறுக்கி அப்படியே ஓதி வந்தேன். கந்தர் அலங்காரப் பாடல்களையும் சொன்னேன்.

என்னுடைய தாய் அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தாள். நோயினால் ஏற்பட்ட துன்பம் வரவரக் குறைந்து போயிற்று. முகத்திலும் நல்ல தெளிவு ஏற்பட்டது. ஈளை நோயினால் உண்டாகிற துன்பமும் மறைந்தது. ஆனால் நாடி தளர்ந்தே வந்தது. முருகனுடைய திருவருளால் ஒரு மாத காலம் திருப் புகழையும், அருணகிரி நாதப் பெருமானுடைய மற்ற வாக்கு களையும் தெளிவாகக் கேட்கின்ற நிலையில் இருந்தாள். ஆனால் மருத்துவர்கள் நாடி தளர்ந்து கொண்டே வருகிறதென்பதை நினைப்பூட்டிக் கொண்டிருந்தார்கள். இறந்து போய்விடுவாள் என்ற நினைப்பினால், முறையாகச் செய்கின்ற பிராயச் சித்தத்தைப் பெரியவர்களை வைத்துக் கொண்டு செய்தேன். என் தாயே எழுந்து உட்கார்ந்து அந்தணர்களுக்குத் தட்சிணை முதலியன கொடுத்தாள்.

ஒருநாள் இரவு நேரம். அப்போது என் தாய் படுத்துக் கொண் டிருக்கிற போது நினைவு தப்பினது போல இருந்தது. உடம்பு அப்படியே விறைத்துப் போய்விட்டது. மூச்சும் நின்றது. இது இறுதி அடையாளம் என்று எண்ணி அவள் உடம்பிலே திருநீறு பூசினேன். என்னுடன் கூடக் குடியிருந்த நல்ல பக்தராகிய முதிய வரிடம், ''என்ன செய்வது?'' என்று கேட்டேன்.

''இறைவன் திருநாமத்தைச் சொல்லிக் கங்கையை வாயில் விடுங்கள். இரவு நேரம்; என்ன செய்வது? இனி எல்லாம் விடிந்த பிறகே கவனிக்க வேண்டும்'' என்று சொன்னார். கங்கையை எடுத்து வாயில் விட்டுக் கொண்டே முருகா முருகா என்று சொல்லிக் கதறினேன். திருநீற்றைப் பூசினேன். இரண்டு நிமிஷம் அப்படியே இருந்த அந்த உடம்பில் மீட்டும் உயிர் வந்துவிட்டது. மறுபடியும் கண்ணை விழித்துக் கொண்டாள். மேலும் ஒருவார காலம் நல்ல தெளிவோடு இருந்தாள். நான் பின்னும் ஊக்கத் தோடு திருப்புகழ்ப் பாக்களைப் பாராயணம் பண்ணிக் கொண் டிருந்தேன்.

அப்போது அந்தப் பெரியவர் என்னைப் பார்த்து வேடிக்கை யாக ஒன்று சொன்னார். ''நீங்கள் திருப்புகழ் பாடிக் கொண்டிருக்

கிறீர்கள். காலன் இங்கே வரமாட்டான். அப்படி வருவதாக இருந்தாலும் நீங்கள் இங்கே இல்லாத நேரத்தில்தான் வருவான்'' என்று சொன்னார்.

நான்கு நாள் கழித்து நான் வீட்டு வாசலுக்கு வந்தேன். அப்போதுதான் தினசரிப் பத்திரிகையைப் பையன் கொண்டு வந்து போட்டான். ஏதோ முக்கியமான செய்தி அதில் வந்திருந்தது. அந்த வீட்டில் குடியிருந்த நண்பரோடு அதுபற்றி வாசல் திண்ணையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தேன். அப்போது உள்ளே என் தாய்க்கு ஏதோ வேதனை உண்டானதாகத் தெரிந்தது. நான் வீட்டுக்குள் போனேன். அப்போது அன்னைக்குக் கண் நிலை குத்தியது.

''நாத விந்துக லாதீ நமோநம''

என்ற திருப்புகழைப் பாடி அருகில் இருந்த முருகன் படத்திற்குக் கர்ப்பூர தீபாராதனை காட்டினேன். அந்தப் பாட்டுச் சொல்லும் போது என் அருமை அன்னை தன் இரண்டு கைகளையும் குவித்துக் கொண்டாள். அதனோடு அவருடைய மூச்சு நின்று விட்டது.

அப்போது அந்தப் பெரியவர் சொன்னார். ''நான் சொன்னது போலவே ஆகிவிட்டது பார்த்தீர்களா? திருப்புகழை ஓதுகின்ற இடத்தில் காலன் வரமாட்டான். நீங்கள் அதை நிறுத்தி வெளியில் வந்தீர்கள். அந்தச் சமயம் பார்த்து அவன் வந்துவிட்டான். இது பெரிய ஆச்சரியம்'' என்று சொன்னார்.

இந்த நிகழ்ச்சியை மற்றவர்கள் நம்பினாலும் நம்பா விட்டாலும், என் மனத்தில் இது உண்மையான நம்பிக்கையை உண்டாக்கிவிட்டது. அதற்கு முன்பு ஒருவகையில் உறுதி இருந்தது. இந்த நிகழ்ச்சிக்குப் பின்பு நிச்சயமாக இறைவனுடைய நினைவோடு அருணகிரியின் வாக்குகளை அநுசந்தானம் செய்தால் காலனால் வருகின்ற துன்பம் இல்லாமற் போய்விடும் என்ற நம்பிக்கை உண்டாயிற்று.

## பயத்தை மாற்ற வழி

ஏதேனும் ஒரு பொருளால் பயம் உண்டானால் அந்தப் பொருளால் பயம் இல்லையென்று நினைப்பதைவிட அந்தப் பொருளுக்கு மாற்றாக ஒன்று நமக்குக் கிடைத்திருக்கிறதென்று

நினைத்தால் பயம் போய்விடும். திருடன் வருவது போல மனத்தில் பயம் இருந்தால், அந்தப் பயத்தை மாற்றிக் கொள்ள போலீஸ்காரன் வருவது போலவும், அவன் திருடனைப் பிடித்து அடிப்பது போலவும் எதிர்ப்பாவனை செய்ய வேண்டும். அப்போது பயம் போய்விடும். அது மாதிரியே யமன் வருவான் என்ற பயம் வரும்போது, யமனைத் தாக்கி அழிக்கின்ற முருகப் பெருமான் வருவான் என்ற பாவனை வேண்டும். அந்தப் பாவனை முறுக முறுக நம்முடைய உள்ளத்திலுள்ள அச்சம் போய்விடும். உண்மையில் யமன் வரும்போது முருகப் பெருமானும் எழுந் தருளி நம்மைக் காப்பாற்றுவான். ''யத் பாவம் தத்பவதி'' என்று வடமொழியில் ஒரு வாக்கியம் உண்டு. காலனுடைய பயத்தைப் போக்குதற்கு ஓர் அழகான மந்திரமாக அருணகிரிநாதப் பெருமான் இந்தப் பாட்டை நமக்குத் தந்திருக்கிறார்.

பட்டிக் கடாவில் வரும்அந்த காஉனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாதுவி டேன்வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேல்பெரு மாள்திரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டாசத்தி வாள் என்றன் கையதுவே

என்று அருணகிரிநாதப் பெருமான் யமனைப் பார்த்து அறை கூவும் பாட்டு இது. யமனை அந்தகா என்று விளிக்கிறார்.

## அந்தகன்

அந்தகன் என்பது குருடனுக்குப் பெயர். உயிர்களின் நிலையை உணராமல், அவர்களுடைய தாபத்தையும் அவர்களுடைய பிரிவி னால் மற்றவர்கள் அடையும் துன்பத்தையும் சிறிதும் உணராமல், இளம் குழந்தை, இளம் பெண், முதியவன் என்ற வேறுபாடு எதுவும் பாராமல் குருடனைப் போல அவன் உயிர்களைக் கொள்ளை கொள்கிறான். அதனால் அவனுக்கு அந்தகன் என்று பெயர் வந்தது.

## எருமைக்கடா

அவன் ஏறுகின்ற எருமைக்கடாவோ பட்டிக் கடா. பட்டி என்ற சொல் யாராலும் அடக்க முடியாதது. ஒழுக்கம் இழந்தது என்பதைக் குறிக்கும்.

"நோதக்க செய்யும் சிறுபட்டி"

என்பது கலித்தொகைப் பாட்டு. யமனை யாரும் நிறுத்த முடியாது என்று சொல்வார்கள். "மாற்றரும் கூற்றம்" என்று தொல் காப்பியம் கூறும். அவனுடைய கடாவையே யாராலும் நிறுத்த முடியாது என்றால் யமனைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

எருமை என்பது தாமதத்தின் அடையாளம். கருமையும் தாமதத்தின் நிறம். கருமையான தாமதத்தின் அடையாளமாகிய எருமை கரிய காலனுக்கு வாகனம். இருள் உலகத்திற்குச் செல்கின்ற உயிருடன் போகிறவன் காலன்; அதை அங்கே கொண்டுபோகும் வேலைக்காரன் காலன். அவனுக்கு வாகன மாக இருப்பது தாமதமும் கருமையும் நிறைந்த எருமை. யமன் எருமைக் கடாவின் மேல் வரும்போது அவனைக் கண்டு அஞ்சா மல் முருகப் பெருமானுடைய திருவருள் நமக்கு இருக்கிற தென்றும், அது உறுதுணையாக இருக்குமென்றும் எண்ணுகிற பேரன்பர்களில் அருணகிரிநாதர் தலை சிறந்தவர்.

"இந்த உலகம் எல்லாம் அறியும்படியாக உன்னை வெட்டித் தோல்வியுறச் செய்துதான் மறு காரியம் பார்ப்பேன்" என்று அவர் சீறுகிறார். பார் அறிய வெட்டுவது என்பது அருணகிரிநாதப் பெருமானுடைய மனத் திண்மையை உலகம் அறிவதற்காக அல்ல; 'முருகப் பெருமானின் அன்பன் ஒருவனிடம் யமன் வாலாட்டினான். அதனால் அவன் அழிந்து ஒழிந்தான். முருகப் பெருமானுடைய அருள் மிகச் சிறந்தது' என்று பார் அறிய வேண்டும்.

## சூரசங்காரன்

இப்படிக் கடாவில் வரும் யமனைப் பார்த்து அறை கூவுவதற்கு அவர் உள்ளத்தே துணிவைக் கொடுத்த பெருமான் எத்தகையவன்? அதனை விளக்கமாகச் சொல்கிறார். அந்தப் பெருமான் தேவர்களுக்கு யமனாக இருந்த சூரனைச் சங்காரம் செய்தவன். மூன்று உலகத்திற்கும் துன்பத்தைத் தந்து, தனக்குரிய வீரமகேந்திர புரியில் ஆயிரத்தெட்டுக் கோடி அண்டங்களுக்குத் தலைவனாக வீற்றிருந்த சூரனை முருகப் பெருமான் தானே வலியச் சென்று போர் புரிந்தான். முருகனுக்குச் சூரனால் எத்தகைய

துன்பமும் இல்லை. ஆனாலும் முருகனை நம்பி வாழ்கின்ற அமரர்களுக்கும், முனிபுங்கவர்களுக்கும் சூரனால் துன்பம் உண் டாயிற்று. ''நமக்கு ஒன்றும் இல்லையே. மற்றவர்கள் எப்படிப் போனால் என்ன?'' என்று எண்ணும் மனிதனைப் போன்றவன் அல்ல முருகன். அவனை யாராலும் அழிக்க முடியாது; அசைக்க வும் முடியாது. பிறரால் அவனுக்குத் துன்பம் இல்லை. அத்தகைய முருகன் அமரர்களை வாழ்விக்க வேண்டி, முனிபுங்கவர்களுக்குச் சிறப்பு அருளவேண்டி, அவர்களை எல்லாம் துன்புறுத்திய வெய்ய குணமுடைய சூரனோடு தானே வலியச் சென்று பொரு தான். அவனோடு முட்டிப் பொருதான். ஞானமே மயமாகிய செவ்வேலைத் திருக்கையில் ஏந்திக் கொண்டு சென்றான். ''அந்தச் செவ்வேல் பெருமானுடைய சந்நிதானத்தில் நான் நிற்கிறேன்'' என்று அருணகிரிநாதர் சொல்கிறார்.

## முருகன் திருமுன்பு

அவன் சந்நிதானத்தில் நிற்கும்போது அங்கே யமனுக்கு வேலை இல்லை. ஒளி நிரம்பிய இடத்தில் இருளுக்கு வேலை இல்லை. பேரொளிக்கு முன்னால் இருள் அணு அளவும் நில்லாது. அருள் ஒளி இல்லாத இடத்தில் இருள் மயமான கடாவில் ஏறும் இருள் நிறக் காலன் வருவான். செவ்வேல் பெருமாளாகிய ஆறுமுகநாதனின் அருளொளி உலகத்தில் பட்டிக் கடாவில் வரும் அந்தகனுக்குப் புகும் வன்மை இல்லை.

''நான் செவ்வேற் பெருமாள் திருமுன்பு நின்றேன். அவன் ஆயிரம் யமனுக்குச் சமானமான சூரனை வலியச் சென்று பொருது அழித்தவன். ஆதலின் நீ இங்கே வர இயலாது. அப்படி உனக்கு என்னுடைய வன்மையைக் காணவேண்டுமென்றால் நீ விருது கட்டிப் புறப்படு. ஒரு கை பார்க்கிறேன். உலகம் எல்லாம் எம்பெருமானின் பெருமையை அறிந்து கொள்ளும்படி உன்னை வெட்டிப் புறம் கண்டு நிற்கிறேன்'' என்று சொன்னார்.

## சத்திவாள்

''அவன் கையில் பல ஆயுதங்களை வைத்திருக்கிறானே. உங்கள் கையில் என்ன ஆயுதம் இருக்கிறது?'' என்று அருண கிரியாரைக் கேட்கலாம். அவர் விடை சொல்கிறார்.

**சத்தி வாள் என்றன் கையதுவே.**

சக்தியாகிய வாள் அவர் கையில் இருக்கிறதாம். இங்கே சக்தி என்றது வேல் அன்று. முருகப் பெருமானுடைய தாயாகிய சக்தி தந்த வேல் அது; அதற்குச் சக்தி என்றே பெயர். இங்கே இறைவனுடைய சக்தியாகிய வாள் என்று பொருள். இறைவனுடைய சக்தி அருளாகும். ''அவன் எனக்குப் பாலித்த அருளாகிய சக்தி வாள் என் கையில் இருக்கிறது. இதைப் பார்க்க முடியாத அந்தகன் நீ. உன்னுடைய படைகளுடன் போரிட வா. நான் உன்னைக் கண்டு அஞ்சமாட்டேன். செவ்வேல் பெருமாள் திருமுன்பு நின்றேன். நீ வந்தால் உலகம் அறியும்படியாக வெட்டிப் புறம் காணாமல் விடமாட்டேன்'' என்று வீறு பேசுகின்றார் அருணகிரிநாதப் பெருமான்.

## பயம் போக்கும் மந்திரம்

நமக்கு அருணகிரிநாதப் பெருமானைப் போல இந்திரியங்களை அடங்கி, முருகப் பெருமானுடைய தியானத்தை இடைவிடாமல் செய்து, அவர் பெற்ற உறுதியைப் பெறுவது என்பது எளிதில் முடியும் காரியம் அன்று. ஆனால் நம்முடைய உள்ளத்தில் உள்ள அச்சத்தைப் போக்க ஒரு மாற்று வேண்டும். யமனை அறைகூவுவதாக அமைந்துள்ள இந்தப் பாட்டை அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தால் நம் மனத்தில் உறுதி உண்டாகும். மெஸ்மெரிஸம் என்னும் வித்தையில் தனக்கு ஏதேனும் ஒன்று அநுகூலமாக அமையும் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தால் அந்த நிலை வந்துவிடும் என்று சொல்வார்கள். அது போல அருணகிரிநாதப் பெருமான் திருவாய் மலர்ந்த இந்தத் திருப்பாட்டை அடுத்தடுத்து விடாமல் சொல்வதால் காலனுடைய பயம் போய்விடும்.

இந்தப் பாட்டைச் சொல்வதால் மூன்று பயன்கள் உண்டாகின்றன. ஒன்று, நமக்கு மரணம் நிச்சயமாக வரும் என்ற உணர்ச்சி. இரண்டு, அதனைத் தருகின்ற காலனை நாம் வெல்ல வேண்டுமென்ற உறுதி. மூன்று அவ்வுறுதியைத் தருவதற்குச் செவ்வேற் பெருமான் திருமுன்னர் நிற்கிறோம் என்ற தைரியம். இந்த மூன்றும் வளர வேண்டுமானால் முருகப் பெருமானுடைய அன்பை உள்ளத்தில் வளரவிட்டுக் காலன்பால் உள்ள அச்சத்தைத்

*தளரவிட்டுச் சாதனம் செய்ய வேண்டும். அதற்குரிய பெரிய மந்திரமாக இந்தப் பாட்டு நிச்சயமாக உதவும்.*

பட்டிக் கடாவில் வரும்அந்த
    கா, உனைப் பார்அறிய
வெட்டிப் புறங்கண்டு அலாது
    விடேன்; வெய்ய சூரனைப் போய்
முட்டிப் பொருதசெவ் வேல்பெரு
    மாள்திரு முன்புநின்றேன்;
கட்டிப் புறப்பட டா!சத்தி
    வாள்என்றன் கையதுவே.

*(அடக்க முடியாத எருமைக் கடாவின்மேல் ஏறி வரும் அந்தகனே, உலகத்திலுள்ளாரெல்லாம் அறியும்படியாக உன்னை வெட்டித் தோல்வி யுறச் செய்தல்லாமல் விடமாட்டேன்; வெம்மையான இயல்பையுடைய சூரனிடம் சென்று அவனை எதிர்த்துப் போரிட்ட செம்மையான வேலை ஏந்தும் பெருமாளாகிய முருகனுடைய சந்நிதானத்தில் நின்றேன்; நீ உன் ஆயுதங்களையும் போர்க்கோலத்தையும் அணிந்து புறப்படடா! அருட்சக்தி யாகிய வாள் என் கையில் இருக்கிறது.*

*பட்டி - அடக்க முடியாதது. கடா - எருமைக்கடா. புறங்கண்டு - முதுகு கண்டு; தோல்வியுறச் செய்து, பொருத - போரிட்ட, திருமுன்பு - அழகிய முன்னிலையில்; சந்நிதியில். கட்டி - கவசம் முதலியவற்றை கட்டி, ''சத்தி வாள் ஒன்றினால், சிந்தத் துணிப்பன் தணிப்பருங் கோபத்ரி சூலத்தையே'' என்று வேறோரிடத்தில் பாடுகிறார்.)*

# வேண்டுகோள்

முந்திய பாட்டில் யமனை நேரே பார்த்து அறைகூவிய அருணகிரியார் இப்போது ஆண்டவனை நோக்கி விண்ணப்பம் செய்து கொள்கிறார்.

## வீரர் செயல்

ஒரு பெரிய மன்னன் படையெடுத்துச் சென்று ஒரு நாட்டை முற்றுகையிட்டுப் போர் செய்து வெற்றி கொள்வதற்கு முன்பு, உறுதியாகப் போரில் வெற்றி கொள்வோம் என்ற எண்ணத்தினால் அந்த நாட்டைத் தன்னைச் சார்ந்த ஒருவனுக்குத் தானம் பண்ணுவது வழக்கம். ராமாயணத்தில் இத்தகைய நிகழ்ச்சி ஒன்று வருகிறது. ராமன் கடல் கடந்து சென்று ராவணனைச் சங்காரம் பண்ணுவதற்கு முன்பு விபீடணன் அவனிடம் சரணாகதி அடைந்தான். அவனை அடைக்கலமாக ஏற்றுக்கொண்ட ராமன் அவனையே இலங்கைக்கு அரசனாக முடி சூட்டினான். இலங்கை இன்னும் ராவணன் கையில்தான் இருந்தது. அதற்கு முன்னாலே விபீடணனுக்கு முடி சூட்டுவது எப்படி நியாயமாகும் என்று தோன்றும். ராமனுக்குத் தனது வெற்றியில் உள்ள உறுதிதான் அப்படிச் செய்தது. அதனைத் தொல்காப்பியம்,

''கொள்ளார் தேயம் குறித்த கொற்றம்''

என்ற துறையில் அமைத்து இலக்கணம் கூறும்.

## உறுதி

ஒருவனுடைய கையில் பணம் இல்லை. தன்னுடைய நண்பர் ஒருவரை அணுகுகிறான். ''நீ கவலைப்படாதே; நாளைக்கு ஆயிரம் ரூபாய் தருகிறேன்'' என்று அவர் சொல்கிறார். ஆனால் அப்படிச் சொல்லும்போது அவர் கையில் பத்து ரூபாய் கூட இல்லை. எப்படியாவது தம்முடைய திறமையினால் ஆயிரம்

ரூபாய் தொகுத்துவிடலாம் என்ற உறுதியான எண்ணத் தால் வாக்குக் கொடுக்கிறார். தம்முடைய நாணயத்திலே அவருக்கு அத்தனை நம்பிக்கை.

நினைத்த காரியத்தை நினைத்தபடி செய்வது மிகவும் பேராற்றல் படைத்தவர்கள் வழக்கம்.

''எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்''

என்பது குறள். இன்னவாறு நாம் மேற்கொண்ட செயல் முடியும் என்பதனை முன்னால் நிகழ்ந்த அநுபவங்களால் நன்கு உணர்ந்து, தம்முடைய ஆற்றலையும் தெரிந்து கொண்டவர்கள், இனி வருங்காலத்தில் வரும் நிகழ்ச்சிகளை வரையறை செய்து நடந்து கொள்கிறார்கள். அநேகமாக இப்போது காரியங்கள் செய்யப் புகும் மக்களால் அப்படி நிறைவேற்றிக் கொள்ள முடிவதில்லை; யாருடைய துணையையாவது எதிர்பார்த்தே செய்யவேண்டியிருக் கிறது. அதுவும் பெரிய அதிகாரிகளால் நடக்கக் கூடியவற்றை அவரைச் சார்ந்த சில்லறை அதிகாரிகளுடைய நட்பைப் பிடித்தே சாதித்துக் கொள்வது இப்போது வழக்கமாகிவிட்டது.

## பொறுப்பு

பெரிய அதிகாரியைப் போய்ச் சந்திப்பதற்கு ஒருவருக்குத் தைரியம் இல்லை. ஆனால் அந்த அதிகாரிக்கு வேண்டிய வேறு ஒருவர் இவருக்குப் பழக்கம் உள்ளவராக இருப்பார். அவரிடம் போய் எப்படியாவது இந்தக் காரியத்தைச் சாதித்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்வார். அவரோ தமக்கு மேலதிகாரி மிகவும் வேண்டியவர் என்ற நம்பிக்கையினால், ''நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? எப்படியாவது இந்தக் காரியத்தை நான் முடித்து வைக்கிறேன்'' என்று உறுதி அளிப்பார். காரியம் சாதிக்க வேண்டிய பொறுப்பு இப்போது இடையில் நின்ற அவரைச் சார்ந்து விடுகிறது.

வேண்டிக் கொண்டவர், ''என்ன, ஏதாவது செய்தீர்களா?'' என்று அடிக்கடி கேட்பார். நடுவில் நின்றவரோ தாம் வாக்குக் கொடுத்துவிட்டமையினால் தமக்கு மேலதிகாரியாகிய அந்த அன்பரிடம் சென்று நயமாகப் பேசுவார். ''உங்கள் தைரியத்தில்

நான் இதை நிறைவேற்றித் தருவதாக வாக்குத் கொடுத்துவிட்டேன். அந்த மனிதன் பொழுது விடிந்தால் பொழுது போனால் என் வாசலில் வந்து நிற்கிறான். என்னாலே அந்தக் காரியம் ஆகக் கூடியது அன்று; உங்களை நம்பித்தான் நான் அந்த வாக்கை அளித்தேன். என் மானத்தைக் காப்பாற்ற வேண்டும்'' என்று கேட்டுக் கொள்வார்.

அந்த வகையில் நிச்சயமாக இறைவன் திருவருள் கிடைக்கும் என்ற உறுதிப்பாட்டின்மேல் அருணகிரியார் பட்டிக் கடாவில் வரும் அந்தகனைப் பார்த்து,

"உனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண்டு அலாது விடேன்"

என்று சென்ற பாட்டில் அறைகூவினார். இந்தப் பாட்டில் இறை வனைப் பார்த்து, ''ஆண்டவனே! நான் இப்படி அவனிடம் சொல்லி விட்டேன். அந்தப் பாவி வந்தால் நீதான் காப்பாற்ற வேண்டும்'' என்று விண்ணப்பித்துக் கொள்வது போலச் சொல்கிறார்.

## வேண்டியது வழங்குதல்

ஆண்டவன் தன்னுடைய பக்தர்களுக்காக எந்தக் காரியத்தை யும் செய்வான். ''முன்னாலேயே நீ ஏன் சொல்லவில்லை? மரி யாதையாக நீ ஏன் கேட்கவில்லை? சம்பிரதாயங்களை எல்லாம் தெரிந்து கொள்ளவில்லையே!'' என்றெல்லாம் கேட்கிறவன் அல்லன் அவன். மற்ற உருவத்தில் அவன் இருந்தால் ஒருகால் மட்டுமரியாதை பார்பபது கூடும். ஆனால் மிக்க எளிமையும், குழந்தை உருவமும், குழந்தைத் தன்மையும் உடைய முருகன் தன்னை நச்சி வந்தவர்கள் நினைப்பதை உடனுக்குடன் நிறை வேற்றித் தருவான்.

''வேண்டிய போதடியர் வேண்டிய போகமது
வேண்ட வெறாதுதவு பெருமாளே''

என்று அருணகிரியார் பாடுகிறார்.

## நரசிங்க மூர்த்தி

பிரகலாதனுடைய வரலாற்றில் அவனுக்காகத் திருமால் என்ன காரியம் செய்தார் என்பதைச் சற்று யோசிக்க வேண்டும்.

அவனுடைய தந்தையாககிய இரணியன், ''உன்னுடைய கடவுள் எங்கே இருக்கிறான்? சொல்லடா'' என்று கேட்டான்.

அதற்குப் பிரகலாதன், ''தூணிலும் இருப்பான்; துரும்பிலும் இருப்பான்; நீ சொன்ன சொல்லிலும் இருப்பான்'' என்று சொல்லி விட்டான். அந்தக் குழந்தைக்கு நாராயணரிடம் அள விறந்த பக்தி; எப்படியாவது தனக்குத் துணையாக இருப்பார் என்ற உறுதி. அவன் நரசிங்க மூர்த்தியை முன்னாலே பார்த்தது இல்லை. அவர் எங்கும் இருப்பார் என்பதை உத்தேசமாகச் சொன்னான்.

அவன் அத்தகைய வார்த்தையைச் சொல்லிவிட்டான் என்பதற் காக அந்தப் பொறுப்பை மேற்கொண்டார் திருமால். ''நம் முடைய பக்தன் இப்படிச் சொல்லிவிட்டானே. நம்மை நம்பித் தானே சொன்னான்? அவன் வார்த்தையைக் காப்பாற்ற வேண்டி யது நம் பொறுப்பல்லவா? இந்த இரணியன் எந்த இடத்தில் நம்மை அழைப்பானோ? அங்கே தயாராக நிற்க வேண்டுமே!'' என்று மிகவும் பொறுப்புடன் நரசிங்கமூர்த்தி உலகில் உள்ள எல்லாப் பொருள்களிலும் இருந்து கொண்டிருந்தார். பக்தர்கள் எங்கே அழைத்தாலும் அங்கே வந்து சேவை சாதிக்கும் பெரு மாளாகிய அவர், இப்போது இரணியன் எங்கே அழைக்கிறானோ அங்கே வெளிப்படச் சித்தமாக இருந்தார். அதற்கு இரணியன் மேலுள்ள அன்பு காரணமன்று; பிரகலாதன் சொன்ன சொல்லை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகவே அவ்வாறு இருந்தார்.

இரணியன் எங்கே கூப்பிடுவானோ என்ற கவலை பிரகலாதனுக்கு இல்லை; நரசிங்க மூர்த்திக்குத்தான் இருந்தது. இரணியன் தினந்தோறும் தன் மார்பைத் தட்டிக் கொண்டு பேசுகிறவன்; ''நான் இருக்கும்போது வேறு தலைவன் யார்?'' என்று கேட்பவன். அவன் இப்போதும் மார்பைத் தட்டிக் கேட்டிருந்தால் அவனுடைய மார்பிலிருந்தே நரசிங்க மூர்த்தி உதயமாகியிருப்பார். மார்பும், இருதயமும் ஒன்றுதானே? அவன் புண்ணியம் செய்தவனாக இருந்தால் தன் மார்பைத் தட்டிக் கொண்டிருப்பான். அப்போது அவன் இருதய கமலத்திலிருந்து நரசிங்கப் பெருமான் தோன்றியிருப்பார். அவனும் சிறந்த பக்தனாகியிருப்பான். அவனுக்கு நல்ல ஊழ் இல்லையே! ''நான் நான்'' என்று சொல்லும்போது மாத்திரம் மார்பைத் தட்டிக்

கொள்ள வந்ததே யொழிய, நாராயணன் என்று சொல்லும் போது இருதயத்தைத் தட்டுவதற்கு அவனுக்கு வாய்ப்புக் கிடைக்க வில்லை.

'இந்தப் பாவி தன் நெஞ்சைத் தட்டிக் கொண்டு, இங்கே இருக்கிறானா என்று கேட்டால் அங்கே தோன்றி ஆட்கொள்ள வேண்டும் என்று நரசிங்க மூர்த்தியே எண்ணியிருக்கலாம். நல்ல வேளையாக அவன் அப்படிச் செய்யவில்லை. எதிரே நின்ற தூணையே அவன் தட்டினான். நரசிங்கமூர்த்தி அங்கே தோன்றி னார். பிரகலாதன் ஆகிய தன்னுடைய அடியானது வார்த்தையைக் காப்பாற்றும் பொருட்டே அம்மூர்த்தி எல்லாப் பொருள்களிலும் சித்தமாக இருந்தார் என்று ஒரு வடமொழிப் பாடல் கூறுகிறது.

## இறைவன் மேற்கொள்ளும் பொறுப்பு

இதிலிருந்து அடியார்கள் சொன்ன வார்த்தையைக் காப்பாற் றும் பொறுப்பை இறைவனே மேற்கொள்கிறான் என்ற உண்மை புலனாகிறது. ஆண்டவன் எப்படியும் வந்து தம்மைக் காப்பாற்று வான் என்ற நம்பிக்கையில் அருணகிரியார் அந்தப் பெருமானிடத் தில் இந்த விண்ணப்பத்தைச் செய்து கொள்கிறார்.

'பட்டிக் கடாவில் வரும் அந்தகா, உன்னைப் பார்அறிய
வெட்டிக் புறங்கண்டலாது விடேன்

என்று உலகறிய அறைகூவிவிட்டோமே. அவன் எப்படியும் ஒரு நாள் வந்துவிடுவானே. அதற்கு முன்னாலேயே நம்முடைய குறையை ஆண்டவனிடத்தில் சொல்லிப் பாதுகாப்புச் செய்து கொள்ள வேண்டுமே!' என்று நினைத்தவரைப் போல அந்தப் பாட்டைச் சொன்னவுடனே இந்தப் பாட்டைச் சொல்கிறார்.

வெட்டும் கடாமிசைத் தோன்றும்வெங் கூற்றன்
விடும்கயிற்றால்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டும்;
கராசலங்கள்
எட்டும் குலகிரி எட்டும் விட் டோடஎட்
டாதவெளி
மட்டும் புதைய விரிக்கும் கலாப
மயூரத்தனே!

## யமனென்னும் உருவகம்

முன் பாட்டில் பட்டிக் கடாவில் வரும் அந்தகா என்று சொன்னார். இந்தப் பாட்டில் வெட்டும் கடாமிசைத் தோன்றும் வெங்கூற்றன் என்று சொன்னார். அவன் ஏறுகின்ற கடா வெட்டு வதற்குரியதாம். அஞ்சுவதற்கு உரியது அன்று என்ற நினைப்புடன் அவ்வாறு சொன்னார். அவன் வெம் கூற்றன்; மிகவும் கொடுமை யான இயல்பு உடையவன். எருமைக் கடாவின் மேல் வந்து அவன் பாசத்தினால் நம்மைக் கட்டுவான்.

உடம்பினின்றும் உயிர் போவதற்கு முன்னாலேயே உடம்பில் பல அறிகுறிகள் உண்டாகும். நரை திரை மூப்பு என்பன மரணத் திற்கு அடையாளங்கள். திடீரென்று உயிர் போவதும் உண்டு. ஆனால் பெரும்பாலும் நோய்வாய்ப்பட்டும், முதுமை வாய்ப்பட்டும் இறப்பவர்களே மிகுதியாதலின் அவற்றை மரணத்தின் அறிகுறி களாக நாம் கொள்கிறோம். மரணம் அடைவதற்கு முன் ஒருவன் கண் நட்டுப்போகிறது; வாயிலிருந்து நுரை தள்ளுகிறது; பேச்சு வருவது இல்லை; இந்திரியங்கள் எல்லாம் வேலை செய்யாமல் நின்று விடுகின்றன. அப்போது பார்த்தால் யாரோ கயிற்றைக் கழுத்தில் முறுக்கி இழுத்தால் என்ன என்ன வேதனைகள் உண் டாகுமோ அந்த அந்த வேதனைகளைப் போலத் தோன்றுகின் றன. ஆதலால் யமன் பாசக் கயிற்றினால் கட்டி இழுக்கிறான் என்று உருவகப் படுத்திப் புராணங்கள் கூறுகின்றன.

## கடாவும் மயிலும்

"என்னை வெங்கூற்றன் வந்து கயிற்றால் கட்டும் போது நீ விடுதலை செய்ய வேண்டும்" என்று இந்தப் பாட்டில் அருண கிரியார் விண்ணப்பம் செய்து கொள்கிறார். எருமைக் கடா வாகனத்தின் மேல் வரும் கூற்றுவனுக்கு மாற்றாகக் கலாப மயூரத்தின் மேல் வரும் இறைவனை வேண்டுகிறார்.

வெட்டும் கடாமிசைத் தோன்றும்வெங் கூற்றன்

என்ற அளவில் யமனைப்பற்றிய செய்திகளைச் சொன்ன அருண கிரியார் முருகப் பெருமானின் மயிலை மிக அழகாக வருணிக் கிறார். அது தன்னுடைய கலாபத்தை விரித்து அதன் நிழலில்

அண்டங்களையெல்லாம் புதைத்துக் கொள்கிறதாம். முருகப் பெருமானின் பேரருளை வாய் விட்டுச் சொல்வது எளிது அன்று. அவனுடன் சார்ந்த பொருள்களின் பெருமையைக்கூட நம்மால் சொல்வது இயலாது. அவன் ஏறிவரும் வாகனமே இத்தனை சிறப்பு உடையது என்றால் அந்த வாகனத்தை உடைய பெருமானின் பேரருளை அளவிட முடியுமா? ஆகையால் அந்தப் பெருமானின் பிரதாபத்தை வருணிக்காமல் அவன் ஏறும் மயூரத்தின் சிறப்பை இந்தப் பாட்டில் எடுத்துச் சொல்கிறார்.

கந்தர் அநுபூதியில் இந்த இரண்டு வாகனத்தையும் ஒரு பாட்டில் நினைப்பூட்டுகிறார்.

"கார்மாமிசை காலன் வரின் கலபத்து
ஏர்மாமிசை வந்து எதிரப் படுவாய்."

முருகனுடைய வாகனமாகிய மயிலுக்கும், யமனுடைய வாகனமாகிய எருமைக்கும் எத்தனையோ வேறுபாடு உண்டு. எருமை தாமதத்தின் உருவம்; கரிய நிறம் பெற்றது; கண்ணுக்கு அவலட்சணமாக இருப்பது. இந்நாளில் கார் ஓட்டுகிறவர்களுக்கு எருமையைக் கண்டால் பயம். எத்தனைதான் ஊதுகுழலினால் ஊதினாலும் சாலையில் நிற்கும் எருமை மாடு நகருவது இல்லை; போகிற போக்குக்குத் தடையாக நின்று கொண்டிருக்கும். நம்முடைய வாழ்நாளில் போகிற போக்கில் யமனுக்கு வாகனமாக இருக்கிற எருமையும் நமக்குத் தடை செய்கிறது.

ஆண்டவனுடைய மயில் வாகனமோ சத்துவ குணம் நிரம்பியது. அடியார்களை ஆண்டவன் காப்பாற்ற நினைக்கும் போது அவனுக்கு வாகனமாக நின்று நமக்கு அநுகூலம் செய்வது; பார்க்கப் பார்க்கக் கண்கொள்ளாப் பேரழகு உடையது; கண்ணைக் குளிர வைக்கும் பசுமை நிறத்தைப் பெற்றது. மயில் போகிற இடங்களில் சுறுசுறுப்பு இருக்கும். மயக்கத்தைத் தருகிற நஞ்சைப் பெற்ற பாம்பு மயிலைக் கண்டால் ஓடி ஒளியும். மனிதனுடைய மயக்கத்திற்குக் காரணமான மாயை என்னும் நஞ்சு பிரணவ சொரூபமாகிய மயிலின் தோற்றத்தைக் கண்டாலோ ஓடிவிடும். ஆதலின் வெட்டும் கடாவை எண்ணிய அருணகிரியார் அதற்கு மாற்றாகக் கலாப மயூரத்தை எண்ணுகிறார்.

## மயிலின் இயல்பு

அந்த மயிலும் ஆண் மயில். ஆண் மயில் அழகிய தோகையை விரித்து ஆடும் தன்மையுடையது. எம்பெருமான் அதன் மேலே ஏறிக் கொண்டு வரும்போது அது மிக்க மகிழ்ச்சியினால் தன்னுடைய தோகையை விரித்துக் கொண்டு ஆடுகிறது. மேகங்கள் வானத்தில் பரந்து நிற்கும்போது மயிலும் ஆடும். இங்கே ஆண்டவனுடைய திருவருளாகிய தண்ணிய மழையைப் பொழிவதற்கு முன்னாலே, அதற்குரிய சூழ்நிலையாகிய மேகம் கப்பிக் கொண்டிருக்கும்போது, நம்முடைய ஆண்டவன் பல பக்தர்களை ஆட்கொள்ளப் போகிறான் என்ற எண்ணத்தோடு தன்னுடைய தோகையை விரித்து மயில் ஆடுகிறது.

## சூரபன்மனாகிய மயில்

சூரபன்மன் தன்னுடைய குணங்கள் எல்லாம் மாறி இறைவனுடைய ஞானவேலின் பரிசம் பெற்ற மாத்திரத்தில் அகங்காரம், மமகாரம் ஆகிய இரண்டையும் விட்டு, கோழியாகவும், மயிலாகவும் ஆனான் என்ற கதையைப் பல தடவைகள் நினைப்பூட்டியிருக்கிறேன். சூரன் உருவம் மாறிவிட்டது. அவன் ஆத்மாவை எம்பெருமான் பெருங்கருணையினால் தனக்கு வாகனமாகக் கொண்டான்.

''நம்முடைய காலத்தில் நாம் இறைவனை வணங்காமல், அவன் பேரருளுக்குப் பாத்திரமாக வேண்டுமென்று ஏங்கி நிற்காமல் எத்தனையோ தவறான காரியங்களைச் செய்தோம். அப்படி இருந்தும் எம்பெருமான் நம்மை ஆட்கொண்டான். தம்மை நச்சி நிற்பார்களுக்கு அருள் செய்கிற பிற மூர்த்திகளைப் போலல்லாமல், தன்னை எதிர்த்து வந்தாலும் தன் சந்நிதானத்தில் நிற்கிறான் என்ற ஒரே தகுதியை எண்ணி ஆட்கொள்ளும் பெருங் கருணையாளன் இவன். போர் முகத்தில் இவனை எதிரியாக வைத்து இவன் முன்னிலையில் நின்றமையினால் இவனது வாகனமாகக் கூடிய தகுதியைப் பெற்றோம்'' என்று நினைப்பது அந்த மயில்.

இவ்வாறு வேறு யாருக்கும் கிடைக்காத பெருமை, வாகனமாகும் உயர்ந்த நிலை, சூரனுக்குக் கிடைத்தது. முருகன் பேரருளை

உலகத்தில் உள்ள மக்கள் எல்லோரும் பெற வேண்டும் என்பது அந்த மயிலின் எண்ணம். ஆதலில் யாரையேனும் காப்பாற்ற வேண்டும் என்று எம்பெருமான் திருவுள்ளம் கொண்டு எழுந் தருளும்போது அவனை ஏற்றிக் கொண்டு வேகமாகச் செல்ல மயில் முன் வந்து நிற்கும்.

## மயிலின் ஆற்றல்

அதன் தோகையின் நிழல் பக்தர்களுக்கு அநுகூலம் செய்வது. அவர்களுடைய தாபம் தீரக் காற்றை வீசுவது. அது மாத்திரம் அன்று. மிகவும் பெரிய மயில் ஆதலினால் அது தோகையை விரிக்கும்போது தடையாக நிற்கிற பொருள்கள் எவையாக இருந் தாலும் அவை ஓடிவிடுகின்றன.

முருகப் பெருமானை ஏற்றிக் கொண்டு போக வேண்டு மென்று எண்ணிய மயில் தன் அழகிய தோகையை விரிக்கிறது. அது மிகப்பெரிய தோகை. அதனை விரிக்கும்போது எழும்பும் காற்று உலகம் எல்லாம் சுற்றுகிறது. அதன் வேகத்தினால் எட்டுத் திக்குகளிலும் உள்ள கராசலங்கள் ஆகிய யானைகளும், குலகிரி களாகிய மலைகளும் இருந்த இடம் விட்டுப் பெயர்கின்றன. ரெயில் வண்டி வேகமாக ஓடும்போது உண்டாகும் காற்றினால் சருகுகள் ஓடுவதைப் பார்க்கிறோம்; அப்படி இவை இடம் விட்டு நகர்கின்றன.

கராசலங்கள்

எட்டும் குலகிரி எட்டும்விட் டோட.

தன்னுடைய விரிந்த தோகையைப் பரப்பி மயில் நிற்கும் போது அந்தத் தோகையின் எல்லை புறக்கண்ணினால் காண்பதற்கு அரிதாக அமைந்திருக்கிறது. உலகம் பிருதிவி முதலிய ஐந்து பூதங்களினால் ஆனது. இந்த ஐந்து பூதங்களில் ஒன்று பெளதிக ஆகாசம். இந்த ஆகாசத்தின் எல்லையை நாம் காணவில்லை; விமானிகளும் காணவில்லை. முருகப்பெருமானின் வாகனமாகிய மயில் ஆடும் போது அதன் தோகை இந்தப் பெளதிக ஆகாசத்தைக் கடந்து செல்கிறது. எல்லாவற்றையும் கடந்து பெருவெளி மட்டும் அது எட்டுகிறது.

எட்டாதவெளி
மட்டும் புதைய விரிக்கும் கலாப மயூரத்தனே.

கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டுகிற ஆகாசம் பௌதிக ஆகாசம். அதற்கு மேலே அவற்றால் எட்ட முடியாமல் எல்லா வற்றையும் தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கிற ஆகாசம் பரமா காசம். அது அளவுக்கு அப்பாற்பட்டது. அளக்கின்ற கருவி களினால் அளவிட முடியாதது. அந்த அளவுக்கு தன்னுடைய தோகையை விரிக்கும் ஆற்றல் உடையது மயில்.

## மயிலின் தத்துவம்

அது ஏதோ உலகத்தில் உள்ள பறவை போன்றது அன்று. அது ஒரு தத்துவம். எல்லாவற்றுக்கும் ஆதி தத்துவமாகிய நாதம் படைப்பிலே முதலில் தோன்றுவது. அந்த நாதத்திற்கு முன்னாலேயே பரமாகாசத்தில் தோன்றுகின்ற ஒலி பிரணவம் அல்லது ஓங்காரம். அந்த ஓங்காரம் எல்லாத் தத்துவங்களும் கடந்து நின்ற எல்லையில் எல்லாத் தத்துவங்களையும் தனக்குள் அடக்கிக் கொண்டு ஒளியாகவும், ஒலியாகவும் நிலவுவது. ஓங்காரமே கடவுள். கடவுளே ஓங்கார உருவத்தில் இருக்கிறான். ஓங்காரத்திற்குள்ளே ஒளியாக இருக்கிறான்.

''ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருகன் உருவம் கண்டு
தூங்கார்''

என்று முன்னாலேயே அருணகிரியார் பாடியதை நாம் பார்த்திருக் கிறோம்.

ஓங்காரமாகிய மயில் தன்னுடைய தோகையை விரிக்கும் போது அது இந்தப் பிரபஞ்சங்களை எல்லாம் கடந்து, தடை களாகிய எல்லைகளையெல்லாம் கடந்து பராகாச வெளி மட்டும் எட்டுகிறது.

கராசலங்கள்
எட்டும் குலகிரி யெட்டும் விட் டோட

என்று சொன்னது ஓர் அடையாளம். இந்த உலகத்திற்கு எல்லைகள் உண்டு. எட்டு யானைகள் எட்டுத் திசைகளில் நிற்கின்றன. அப்படியே எட்டு மலைகள் எட்டுத் திசைகளில் எல்லைகளாக இருக்கின்றன. பிரபஞ்சத்தின் வாசனை அடியோடு அற்றது என்ற

*கருத்தையே, பிரபஞ்சத்தின் எல்லைகள் எல்லாம் தகர்ந்து ஓடின என்று அழகாகச் சொல்கிறார் அருணகிரியார். ஓங்கார எல்லையில் ஒளி மயமாக இருக்கிற எம்பெருமான் தோன்றும் போது பிர பஞ்சத்தின் வாசனை முற்றும் அற்றுப் பராகாச வெளியில் ஆத்மா கலந்துவிடும். பிரபஞ்சச் சேற்றைக் கழியச் செய்கின்ற பேரரு ளாளன் முருகன் என்பதை அலங்காரத்தின் முதல் பாட்டிலேயே,*

''பிரபஞ்சமென்னும் சேற்றைக் கழிய வழிவிட்டவா''

*என்று பாடினார். பிரபஞ்சம் என்ற தடையைப் போக்கி இறைவ னுடைய அருள் வெளியிலே நின்று ஆனந்த நடனம் செய்வது மயில்.*

## *அலங்காரச் சொல்*

*சொல்வதை அலங்காரமாகச் சொல்கிறார் அருணகிரியார். யமனால் துன்பம் இல்லாமல் செய்யவேண்டுமென்று வேண்டு கோள் விடுப்பது அவர் கருத்து. ஆனால் அதனைச் சமத்காரமாகச் சொல்கிறார். ''அவன் குதிரை மேல் வருவான்; எங்கள் எசமான் யானை மேல் வருவான்'' என்று இணைத்துச் சொல்வதுபோல யமனை, வெட்டும் கடாமிசை வருவான் என்று சொல்லி அடுத்து,*

கராசலங்கள்
எட்டும் குலகிரி எட்டும்விட் டோடஎட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்கும் கலாப மயூரத்தனே

*என்று சொன்னார்.*

*இந்தப் பாட்டின் ஒலியே திண்மையை நினைப்பூட்டுகிறது. அச்சம் இன்மையைக் காட்டும் வகையில் ஓசை உடையதாக இருக் கிறது. வல்லினங்கள் சேர்ந்து ஒலிப்பதனால் அந்தத் திண்மை புலனாகிறது.*

வெட்டும் கடாமிசைத் தோன்றும்

*என்று யமனை நினைக்கும்போது ஒரு வல்லினமெய்யை வைத் தார். மயிலைச் சொல்லும்போதோ,*

கராசலங்கள்
எட்டும் குலகிரி எட்டும்விட் டோடஎட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்கும் கலாப மயூரத்தனே

*என்று பல வல்லின மெய்களை வைத்து மனத்திண்மையைக் காட்டும் வலிய ஓசையை எழச் செய்கிறார்.*

*வெட்டும் கடா - அடியார்களால் வெட்டுவதற்குரிய கடா. உலகத்தில் சில தெய்வங்களுக்குப் பலியாக இங்கே உலவுகிற எருமைக் கடாக்களைச் சிலர் வெட்டுவார்கள். ஆனால் அருண கிரியார் வெட்ட நினைக்கிற கடா யமன் ஏறும் கடா. ''பக்தர் களால் வெட்டுவதற்குரிய கடாவில் தோன்றுகின்ற கூற்றன் தன் வலியை இழந்துவிடும் வண்ணம் நீ அருள் செய்ய வேண்டும்'' என்று இந்தப் பாட்டில் பிரார்த்திக்கிறார்.*

வெட்டும் கடாமிசைத் தோன்றும்வெங்
  கூற்றன் விடும்கயிற்றால்
கட்டும்பொழுது விடுவிக்க
  வேண்டும்; காரசலங்கள்
எட்டும் குலகிரி எட்டும்விட்
  டோடஎட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்கும்
  கலாப மயூரத்தனே.

*(வெட்டுவதற்குரிய ஆண் எருமையின் மேல் மரண காலத்தில் வந்து தோன்றும் வெம்மையான கூற்றுவன் வீசுகின்ற பாசத்தினால் அடியேனைக் கட்டும்பொழுது நீ அடியேனை விடுவிக்க வேண்டும்; திக்கு யானைகள் எட்டும் பெரிய மலைகள் எட்டும் இருந்த இடத்தை விட்டு ஓடும்படியாகவும், பொறிகளுக்கும் மனத்துக்கும் எட்டாத பரமாகாச வெளிவரையும் ஏனைய பொருள்களெல்லாம் மறையும் படியும் விரிக்கின்ற தோகையை உடைய மயிலை உடையவனே!*

*கராசலம் - கைம்மலை; யானை; இங்கே திக்கயங்கள். குலகிரி - சிறந்த மலைகள்; அஷ்ட குலாசலம் என்பது வழக்கு. விட்டு - தமக்குரிய இடத்தைவிட்டு. தோகையை விரிக்கும் பொழுது உண்டான காற்றினால் யானைகளும் மலைகளும் இடம் விட்டு ஓடின. எட்டாத - கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத. புதைய - மறைய. கலாபம் - தோகை. மயூரம் - மயில். மயூரத்தன் - மயிலை வாகனமாக உடையவன்.)*

---


'தமிழ் அறிஞர்'


# பி.ஸ்ரீ.

எழுதிய வேறு நூல்கள்

1. ஆறுபடை வீடுகள் (6 தொகுதிகள்)
2. ஆழ்வார்கள் வரலாறு (8 தொகுதிகள்)
3. திவ்யப் பிரபந்த ஸாரம்
4. அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாறு
5. கந்தபுராணக் கதைகள்
6. வேதப் பொருளில் பூதக் கண்ணாடி
7. நவராத்திரியின் கதைகள்
8. ராஜரிஷி விசுவாமித்திரர்
9. தசாவதாரக் கதைகள்
10. துள்ளித் திரிகின்ற காலத்திலே
11. மஹாபாரதக் கதைகள்
12. ஔவையார்
13. மூன்று தீபங்கள்
14. லக்ஷ்மி வரலாறும் வழிபாடும்
15. திருப்பாவை
16. திருவெம்பாவை
17. கண்ணன் கதை
18. காதம்பரி
19. சிவநேசச் செல்வர்கள் I & II
20. தாயுமானவர்
21. சுவையான சம்பவங்கள் 129
22. நாரதர் கதை
23. இந்து சமயக் கதைகள் I & II

இன்னும் சில





## நூற்றாண்டு வெளியீடுகள்

# 100 தலைப்புகளில் புத்தகங்கள்! 100

ஒவ்வொன்றும் நூறு தகவல்களைக் கொண்டவை! மொத்தம் பத்தாயிரம் தகவல்கள்!

**தமிழில் முதல் முறையாக வெளிவரும் என்சைக்ளோபீடியா**

எல்லாவற்றிலும் முன்னோடியாகத் திகழும் எங்கள் நிறுவனத்தின் மற்றொரு புதுமையான, முன்னோடியான வெளியீடு!

இதோ சில தலைப்புகள்:

| | | |
|---|---|---|
| 1. | நம்மவர் செய்த விந்தைகள் (நம் நாட்டவர் செய்த விந்தைகள்) | 100 |
| 2. | அவர்கள் செய்த விந்தைகள் (வெளிநாட்டவர் செய்த விந்தைகள்) | 100 |
| 3. | உலக மகா கொடுங்கோலர்கள் | 100 |
| 4. | உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவுகள் | 100 |
| 5. | விந்தை உயிரினங்கள் | 100 |
| 6. | அரண்மனை ரகசியங்கள் | 100 |
| 7. | உலகப் புகழ் பெற்ற கட்டடங்கள் | 100 |
| 8. | நம்ப முடியாத உண்மைகள் | 100 |
| 9. | வியப்பூட்டும் உண்மைகள் | 100 |
| 10. | தாவர உலகிலே! | 100 |
| 11. | விந்தைத் தாவரங்களும், மூலிகைத் தாவரங்களும் | 100 |
| 12. | யார் என்ன சொன்னார்கள் | 100 |
| 13. | நீருலகிலே! | 100 |
| 14. | பாலூட்டிகள் வரிசையிலே! | 100 |
| 15. | தமிழ் வளர்த்த பெருமக்கள் | 100 |

*இப்படி... நூறு புத்தகங்கள்*

ஆசிரியர் **என். ஸ்ரீநிவாஸன்**

*எங்கள் நூற்றாண்டு விழாவில் வெளியிடப்பட்டது.*

கி.வா.ஜ. அவர்களுக்கு சிறு வயதிலேயே தமிழ் இலக்கியங்கள் மீது பற்று ஏற்பட்டது. டாக்டர் உ.வே. சுவாமிநாதையர் அவர்களுடைய தலை மாணாக்கராக இருந்து தமிழ் பயின்று, அவர்களது அருந்தமிழ் பணிக்கும் துணை நின்று, 'கலைமகள்' மாதப் பத்திரிகையின் ஆசிரியராக ஐம்பதாண்டுகளுக்கு மேல் பணி யாற்றியுள்ளார்.

தமிழ் ஆராய்ச்சி, இலக்கியம், பக்தி இலக்கியங்கள், கவிதைகள், நாடோடிப் பாடல்கள், பழமொழிகள் என இவரே எழுதியும், தொகுத்தும் அளித்துள்ள நூல்கள் இருநூற்றுக்கும் மேற்பட்டனவாகும்.

குறிப்பாக, இலக்கணத்துக்கு விளக்கம் தருவதில் வல்லவர். சிலேடையாய்ப் பேசுவதில் இவருக்கு நிகர் இவரே.

எந்த இலக்கிய நூலிலே சந்தேகம் ஏற்படினும் உடனடியாக விளக்கம் கி.வா.ஜ. அவர்களிடமிருந்து கிடைக்கும் என்பதைத் தமிழ் அறிஞர்கள் பலரும் அறிவர்.

இவர், பல காலமாக உள்ள ஐயங்களைப் போக்குகின்ற வகையில், 'கலைமகள்' மாத இதழில் பதிலளித்து வந்தார். இவை என்றென்றும் நமக்குப் பயன் விளைக்கக் கூடும்.